# புதுக்கோட்டை

## மாவட்ட வரலாறு



டாக்டர் ஜெ. ராஜாமுகமது

# புதுக்கோட்டை மாவட்ட வரலாறு


**டாக்டர் ஜெ. ராஜா முகமது**

எம்.ஏ.(வர.), எம்.ஏ.(தொல்.), எம்.ஏ.(மானிட.), பி.ஜி.எல்., பி.எச்.டி.,

**உதவி இயக்குநர்**

அரசு அருங்காட்சியகம்

சென்னை



தொகுப்பு ……… பக்கம் ……



வெளியீடு

இயக்குநர்

அரசு அருங்காட்சியகம்

எழும்பூர், சென்னை - 600 008.

2004

முதற்பதிப்பு : பிப்ரவரி - 1992
இரண்டாம் பதிப்பு : ஜூலை - 1993
மூன்றாம் பதிப்பு : நவம்பர் - 1998
நான்காம் பதிப்பு : நவம்பர் - 2004
உரிமை : ஆசிரியருக்கே

Title of the Book : PUDUKKOTTAI MAAVATTA VARALAARU

Author : Dr. J. RAJA MOHAMAD

Language : Tamil

Edition : Fourth

Publisher : Director of Museums,
Government Museum,
Chennai - 600 008.

(First Published in 1992 by
Thirumathi Sheela Rani Chunkath, I.A.S.,
Collector, Pudukkottai and Chairman
Pudukkottai District Archives Committee).

Copy Right : Author

Paper Used : 80 gsm & 100 gsm Maplitho

Size of the Book : Demy Octovo

Type point used : 10 Point

No. of Pages : 282+24

Printer : Smart Fonts
Chennai-41

Price : Rs. 85.00

---

**அட்டைப்பட முகப்பு** : *காலாரி மூர்த்தி,* மூவர்கோயில், கொடும்பாளூர்,
**பின்பக்கம்** : மூவர்கோயில், கொடும்பாளூர்

# உள்ளடக்கம்

முன்னுரை பக்கம்

## முதல்பாகம்


| | | | |
|---|---|---|---|
| 1. | அறிமுகம் | .. | 1 |
| 2. | ஆறுகள் | .. | 3 |
| 3. | மலைகள் | .. | 4 |
| 4. | கனிவளம் | .. | 4 |
| 5. | வரலாற்றுக்கு முற்பட்ட காலம் | .. | 5 |
| 6. | பிராமிக் கல்வெட்டு | .. | 9 |
| 7. | சங்க காலம் | .. | 10 |
| 8. | புதுக்கோட்டையிலே ரோமாபுரி | .. | 13 |
| 9. | களப்பிரர் ஆட்சி (சுமார் கி.பி.300-590) | .. | 14 |
| 10. | முதல் பாண்டியப் பேரரசு | .. | 15 |
| 11. | பல்லவர் | .. | 16 |
| 12. | முத்தரையர் | .. | 17 |
| 13. | பிற்கால சோழப் பேரரசு | .. | 21 |
| 14. | கொடும்பாளூர் வேளிர் | .. | 26 |
| 15. | சாளுக்கிய சோழர் | .. | 26 |
| 16. | (அ) இரண்டாவது பாண்டியப் பேரரசு | .. | 35 |
| | (ஆ) பாண்டிய நாட்டில் உள்நாட்டுக் கலகமும் முஸ்லீம்களின் வருகையும் | .. | 40 |
| 17. | புதுக்கோட்டையிலே மாலிக்காபூர் | .. | 41 |
| 18. | பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி | .. | 48 |
| 19. | விஜயநகர ஆட்சி | .. | 49 |


## இரண்டாம் பாகம்


| | | | |
|---|---|---|---|
| 1. | புதுக்கோட்டை சமஸ்தானம் | .. | 57 |
| 2. | தொண்டைமான் மன்னர்களின் தோற்றம் | .. | 59 |
| 3. | ரகுநாதராயத் தொண்டைமான் | .. | 62 |
| 4. | புதுக்கோட்டை நகரின் தோற்றம் | .. | 64 |
| 5. | அண்டைய அரசுகள் | .. | 67 |
| 6. | விஜயரகுநாதராயத் தொண்டைமான் (1730-1769) | .. | 77 |
| 7. | ராயரகுநாதத் தொண்டைமான் (1769-1789) | .. | 88 |

8. ராஜா விஜயரகுநாதத் தொண்டைமான்
(1789-1807) .. 96
9. பாளையங்களும், பாளையப்போர்களும் .. 99
10. முதல் பாளையப்போர் .. 102
11. தொண்டைமான் கட்டபொம்மனைக் காட்டிக்
கொடுத்தாரா? .. 107
12. இரண்டாவது ப்ாளையப் போர் .. 111
13. ராஜா விஜய்ரகுநாதராயத் தொண்டைமான்
(1807-1825) .. 115
14. ராஜா ரகுநாதத் தொண்டைமான் பகதூர்
(1825-1839) .. 123
15. ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான்
பகதூர் (1839-1886) .. 125
16. சேஷய்யா சாஸ்திரி .. 134
17. மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான்
(1886-1928) .. 137
18. ராஜா ராஜகோபாலத் தொண்டைமான
(1928-1948) .. 145
19 1947-ல் புதுக்கோட்டை சமஸ்தானம் .. 152

## மூன்றாவது பாகம்

1. அம்மன் காசு .. 157
2. இலக்கியம் .. 160
3. சமணம் .. 163
4. புதுக்கோட்டை சட்டசபை .. 167
5. புதுக்கோட்டை தந்த சொல்வேந்தர்
சத்தியமூர்த்தி . 169
6. புதுக்கோட்டை தந்த நல்முத்து
டாக்டர் முத்துலட்சுமிரெட்டி .. 173
7. இந்திய சுதந்திரப் போராட்டமும்
புதுக்கோட்டையும் .. 176
8. புதுக்கோட்டை .. 184
9. திருக்கோகர்ணம் .. 188
10. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகம் .. 192
11. திருக்கட்டளை .. 195
12. பொற்பனைக்கோட்டை .. 197

| | | | |
|---|---|---|---|
| 13. | திருவரங்குளம் | .. | 198 |
| 14. | பெருங்களூர் | .. | 201 |
| 15. | காளியாப்பட்டி | .. | 201 |
| 16. | கொடும்பாளூர் | .. | 202 |
| 17. | குடுமியான்மலை | .. | 206 |
| 18. | குன்னாண்டார் கோவில் | .. | 213 |
| 19. | மலையடிப்பட்டி | .. | 215 |
| 20. | நார்த்தாமலை | .. | 216 |
| 21. | பனங்குடி | .. | 222 |
| 22. | திருவேங்கைவாசல் | .. | 223 |
| 23. | விராலிமலை | .. | 224 |
| 24. | ஆலூர் | .. | 226 |
| 25. | சித்தன்னவாசல் | .. | 228 |
| 26. | விசலூர் | .. | 233 |
| 27. | கண்ணனூர் | .. | 234 |
| 28. | பேரையூர் | .. | 235 |
| 29. | திருக்களம்பூர் | .. | 236 |
| 30. | திருமயம் | .. | 237 |
| 31. | காட்டுபாவா பள்ளிவாசல் | .. | 245 |
| 32. | பொன்னமராவதி | .. | 246 |
| 33. | கீழாநிலை | .. | 248 |
| 34. | பொன்பேத்தி | .. | 249 |
| 35. | ஆவுடையார்கோவில் | .. | 250 |
| 36. | நாட்டுப்பாடல்கள் கலைகள் | .. | 253 |
| 37. | புதுக்கோட்டை கல்வெட்டுகள் | .. | 257 |
| 38. | புதுக்கோட்டை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | .. | 265 |

மேற்கோள் நூல் பட்டியல்
சொல்லடைவு

இராம. வீரப்பன்
பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

# வாழ்த்துரை

புதுக்கோட்டை மாவட்ட அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. ஜெ. இராஜாமுகமது எழுதி அளித்துள்ள 'புதுக்கோட்டை மாவட்ட வரலாறு' எனும் நூலைக் கண்டு மகிழ்ந்தேன். வரலாறு என்பது மனித இனம் வளர்ந்த வகைகளையும், அவற்றின் கலை, பண்பாடு, நாகரிகம் பற்றிய விரிவான செய்திகளையும் தொகுத்து இனிவரும் தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு உதவும் வகையில் அளிக்கும் செயற்பாடாகும். இத்தகைய முயற்சிகளைச் சிறந்த வரலாற்று அறிஞர்கள் மட்டுமே மேற்கொள்ள முடியும். அருங்காட்சிய கத்தில் தாம் பெற்ற பட்ட அறிவாலும், வரலாற்றுச் செய்திகளைப் பல்வேறு வகைகளிலும் ஆய்ந்தறிந்து தொகுக்கவேண்டும் என்ற பெருவேட்கையினாலும், திரு. இராஜா முகமது இவ்வரிய பணியைச் சீரிய முறையில் செய்து முடித்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பற்றி இத்துணைச் செய்திகளைத் தாங்கி, இந்நூல் வந்திருப்பது நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியை அளிக்கிறது. மூன்று பாகங்களாக அமைந்திருக்கும் இந்நூலில் புதுக்கோட்டையை ஆண்ட மன்னர்களின் வரலாறு, புதுக்கோட்டையில் வாழ்ந்த சங்ககாலப் புலவர்களைப் பற்றிய செய்திகள், வெள்ளையர் ஆட்சிக்கு முன் புதுக்கோட்டை இருந்த நிலை, புதுக்கோட்டையில் வழக்கத்தில் இருந்த காசுகள், மாவட்டத்தின் ஊர்களின் சிறப்புகள் எனப் பல்வேறு கோணங்களில் செய்திகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் மிகுந்த வரலாற்று ஈடுபாடு கொண்டவர் என்பதை நூலின் ஒவ்வொரு வரியும் மெய்ப்பிக்கின்றன. ''பழங்காலப் பெருமைகளைத் தாங்கிய புதுக்கோட்டை இன்று ஏக்கப் பெருமூச்சோடு நிற்கிறது'' என்ற நூலாசிரியர் குறிப்பிடும்போது இவருடைய வரலாற்று ஈடுபாடு பளிச்சிடுகிறது. வீரபாண்டிய கட்டபொம்மனை, விஜயரகுநாத தொண்டைமான் வெள்ளையரிடம் காட்டிக் கொடுத்தார் என்ற கருத்து வரலாற்று உலகில் பரவலாக இருந்து வருகிறது. இம்முடிவை ஆய்வுச் சான்றுகளுடன் இந்நூலில் மறுத்திருக்கிறார் நூலாசிரியர். இவ்வாறு

சிறப்பான செய்திகள் பலவற்றைத் தாங்கிய இந்நூல் வரலாற்றுத் துறையில் குறிப்பிடத்தக்க இடம் பெறும் என்பதில் ஐயமில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பற்றி அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்நூல் மிகுந்த பயன் அளிக்கக் கூடியது. இத்தகைய வரலாற்று ஆய்வு நூல்கள் மிகப் பலவாகப் பெருகி வெளிவரவேண்டும் என்பது என் ஆவல்.

இச்சீரிய முயற்சியைப் பாராட்டுகிறேன். இவருடைய பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

சென்னை - 600 009. இராம. வீரப்பன்

எஸ். ரகுபதி,பி.எஸ்சி.,பி.எல்.,
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

# வாழ்த்துரை

புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத் காப்பாட்சியர் திரு.ஜெ.ராஜாமுகமது எழுதியுள்ள "புதுக்கோட்டை மாவட்ட வரலாறு" நூலினைக் கண்டு பேருவகை எய்துகிறோம்.

திரு.ஜெ. ராஜாமுகமது ஒரு சிறந்த வரலாற்று ஆய்வாளர் என்பதை நானறிவேன். தமிழக வரலாற்று ஏடுகளில் தனிச்சிறப்பு அடையவேண்டிய புதுக்கோட்டையின் வரலாறு, பண்பாடு குறித்து அறிய செய்திகளை இனிய தமிழ் நடையில் இந்நூலில் அவர் எழுதியிருக்கிறார். புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லா மல், தமிழக மக்களனைவருக்கும், பயன்படும் வண்ணம் இந்நூல் அமைந்திருப்பது நமக்கு பெருமையளிப்பதாகும்.

புதுக்கோட்டை பகுதி வணிகர்கள், ரோமாபுரி வணிகர்களுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதற்கும், புதுக் கோட்டை பகுதியின் கலை, கலாச்சார வளர்ச்சி மாற்றங்கள், சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த வரலாற்றை ஆதாரபூர்வமாக கொண்டது என்று கூறுவதும் பாராட்டத்தக்கது. தற்போதைய ஊர் பெயர்களும், அக்காலப் பெயர்களும், கல்வெட்டுக் காலம் குறித்த பட்டியல் மற்றும் ஊர் பெயருக்கு சொல்லாய்வு செய்து அவைகளுடன் தொடர்புடைய மரம், செடி, கொடிகளைக்கூட பட்டியல் செய்து காட்டியிருப்பதும், திருமயம் கோட்டை இராமநாதபுரம் கிழவன் சேதுபதி கட்டினார் என ஆதாரபூர்வமாக காட்டியிருப்பதும் பாராட்டுக்குரிய பணியாகும்.

இத்தகையதொரு நல்ல வரலாற்று நூல் வெளிவரக் காரணமாக விளங்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப., அவர்களை இம்மாவட்ட மக்களின் சார்பில் பாராட்டுகிறேன்.

புதுக்கோட்டை மாவட்ட வரலாறு குறித்து இன்னும் எழுதப்பட வேண்டியவை ஏராளம்; அவற்றையும்- தொகுத்து மேலும் பல நூல்களை இந்நூலாசிரியர் திரு.ஜெ. ராஜாமுகமது எழுத வேண்டுமென் பது எனது அவா. அவரது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

**சென்னை - 600 009** **எஸ். ரகுபதி**

**டாக்டர் ஔவை நடராசன்**
அரசுச் செயலர்,
தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை,
சென்னை - 600 009.

# பாராட்டுரை

புதுக்கோட்டை மாவட்ட அருங்காட்சியகக் காப்பாட்சியராகத் திகழும் நண்பர் செ. இராசாமுகமது எழுதிய புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று நூலைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். அருங்காட்சியகப் பவள ஆண்டு நிறைவை 1986-ல் புதுக்கோட்டையில் நல்விழாவாக அருங்காட்சியகத் துறை நடத்தியதையும் நினைவு கூர்கிறேன்.

ஒரு சமுதாய வளர்ச்சியின் வரைபடமாக வரலாற்றைக் கருதி இந்திய நாட்டு வரலாறு என்றுமட்டும் கற்றிருந்த நிலை மாறி, தென்னக வரலாறு, தமிழக வரலாறு என்றெல்லாம் வளர்ந்து இன்று மாவட்டந்தோறும் வரலாற்றுக் கருவூலங்கள் திரட்டப்படும் நிலை வரவேற்கத்தக்க விழிப்புணர்வின்பாற் பட்டதாகும்.

இத்தகைய வரலாறுகளைப் படைக்க முன்வந்து தேவைப்படும் விவரங்களைப் பாடுபட்டுத் திரட்டியும் பழைய ஆவணங்கள், சாசனச் சான்றுகள் ஆகியவற்றை ஆய்ந்தும் எழுதும் இத்தகைய நூல்களின் ஆசிரியர்கள் நமது நாட்டின் வரலாற்றுக் கல்வி வளர்ச்சிக்கு வளமூட்டுவோராவர்.

பழம்பெருமைகளைப் பெற்று, புதிய மாவட்டமாக மலர்ந்த புதுக்கோட்டையைப் பற்றிய இவ்வரலாற்று நூலை அரிய செய்திக ளோடு ஆசிரியர் வனப்புற வரைந்துள்ளார் ஒருவர் எத்துறையில் பணியாற்றினாலும் தமது துறை பற்றியும், துறைசார்ந்த இடங்களைப் பற்றியும் கண்டு கேட்ட செய்திகளைச் சிறப்பாகத் திரட்டி நூல் வரைதல் வேண்டுமென்ற கருத்தை எந்தையார் உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்கள் வலியுறுத்தினார்கள் தம் வாழ்வில் அவர் எங்கெங்குப் பணியாற்றினாரோ அவ்வூரைப்பற்றி ஒரு கட்டுரையேனும் எழுதி வந்தார் அவ்வழியில் நண்பர் இராசாமுகமது எழுதியுள்ள இந்நூலைத் தமிழுலகம் இரு கை நீட்டி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை

அருங்காட்சியகத் துறைக்கு அணிசேர்க்கும் அலுவலர்களுள் திரு செ இராசமுகமதுவுக்குத் தக்க இடமுண்டு நண்பர் இராசாமுகமது வின் ஆய்வார்வம், துடிக்கும் இளமை, துறைப்புலமை, பலரோடுப் பழகிப் பழஞ்செய்திகளைத் திரட்டும் திறமை - இந்நூலின் பக்கங்கள்தோறும் பளிச்சிடுகின்றன.

அரிய இந்நூலைப் பாராட்டி மகிழ்கிறேன்!

**சென்னை - 600 009.** **ஔவை. நடராசன்**
**4.2.92.**

*திருமதி ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப.,*
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மற்றும் தலைவர்,
புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று
ஆவணக்குழு.

# வாழ்த்துரை

புதுக்கோட்டை மாவட்டத்தின் வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். இயற்கைவளம் குறைந்த இந்த மாவட்டத்தின் கலைவளம் உலகின் கவனத்தைக் கவர்ந்ததாகும் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் திரு ஜெ.ராஜாமுகமது எழுதியுள்ள 'புதுக்கோட்டை மாவட்ட வரலாறு' என்னும் இந்த நூலினை மாவட்ட ஆவணக்குழுவின் சார்பில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லையாக விளங்கிய புதுக்கோட்டைப் பகுதி தமிழகத்தை ஆண்ட அனைத்து வம்ச மன்னர்களுக்கும் அரசியல் போர்க்களமாக விளங்கியது. போர்க்களங்கள் அழிந்துவிட்டன! ஆனால் அவை கூறும் வரலாறு நமது முன்னோர்களின் வீரத்திற்கு வித்தாக உள்ளதைக் காண்கிறோம்!

இங்கு ஆண்ட மன்னர்கள் விட்டுச் சென்றுள்ள கலைக்கூடங்கள் தமிழனின் நாகரீக வரலாற்றைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன. புதுக்கோட்டை தனியரசை ஆண்ட தொண்டைமான் மன்னர்களின் ஆட்சியாளர்களாக விளங்கிய சேஷய்யா சாஸ்திரி, அலெக்சாண்டர் டாட்டன்ஹாம் போன்ற தலைசிறந்த நிர்வாகிகள் இம்மண்ணுக்குப் பெருமை சேர்த்து வைத்துள்ளனர். புதுக்கோட்டையின் அழகான நகர அமைப்பு, தமிழகத்தின் பிற நகரங்களில் காணமுடியாத ஒன்றாகும் இங்கு காணப்படும் வானளாவிய நிர்வாக அலுவலகக் கட்டிடங்கள் இந்நகருக்கு எழிலூட்டுகின்றன. இங்கிருந்து அலெக் ஸாண்டர் டாட்டன்ஹாம் உருவாக்கிய அலுவலக நடைமுறை இன்றும் வழக்கில் இருப்பது தனிச் சிறப்பு ஆகும். மங்கையரின் மாண்பிற்கு சிகரமாய் விளங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பிறந்த ஊர் புதுக்கோட்டை எனும்போது தாய்க்குலத்தின் பெருமைக்கு சிறப்பு சேருகிறது. தலைசிறந்த பல இசைமேதைகளையும், நாடக, திரையுலக கலைஞர்களையும் நாட்டிற்கு அளித்துள்ள பெருமை புதுக்கோட்டைக்கு உண்டு. இவ்வாறாக புதுக்கோட்டை மாவட்டத்தின் வரலாறு பல்லாற்றானும் தனித்தன்மையுடன் விளங்குகிறது. இம்மாவட்டத்தின் வரலாறு தமிழக வரலாற்றின் ஒரு சுருக்கமாக இருக்கிறது, என்ற

செய்தி ஒன்றே இதன் வரலாற்று சிறப்பைக் காட்டுவதாக அமைகிறது. ஆகவே இந்த மாவட்டத்தின் வரலாறு, புதுக்கோட்டை மாவட்ட மக்கள் மட்டுமின்றி தமிழக மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெறத் தக்கதாகும். மாவட்டத்தின் பன்முக வரலாற்றுச் செய்திகளை தெரிவிக்கும் இந்த நூல் அனைவராலும் வரவேற்கப்படும் என்று கருதுகிறேன்.

மாவட்ட ஆவணக்குழு செய்திமலர் ஆசிரியராக இருக்கும் திரு ஜெ. ராஜாமுகமது, கல்வெட்டுகள், வரலாற்று ஆவணங்கள், பழைய பதிவேடுகள் ஆகியவற்றைத் திறனாய்வு செய்து மாவட்டத்தின் முழுமையான வரலாற்றை ஆதாரப் பூர்வமாக பல அரிய செய்திகளுடன் இந்த நூலை எழுதியிருக்கிறார்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் வரலாறு, கலைச் சின்னங்கள், கோயில்கள் ஆகியவை குறித்த செய்திகளை உலகறியச் செய்வதிலும், இவ்வகையில் எமக்கு உறுதுணையாக இருப்பதிலும் அவரது ஆர்வமும் முயற்சியும் பெருமைப்படத் தக்கதாகும்.

தமிழக வரலாற்று நூல் வரிசைக்கு, அருமையான தமிழ்நடையில் இத்தகையதொரு வட்டார வரலாற்று நூலை எழுதி அளித்திருக்கும் திரு.ஜெ.ராஜாமுகமது அவர்களுக்கு எனது பாராட்டுதலையும், அவரது பணி தொடர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை
18.1.1992.

**ஷீலாராணி சுங்கத்**

**ம. இராமன், இ.ஆ.ப.,**
அருங்காட்சியக இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை-600 008.

# சான்றுரை

தமிழ்நாட்டு மக்களின் நாகரீகக் கூறுகளை நாம் தெரிந்துகொள்ள புதுக்கோட்டை மாவட்ட வரலாற்றைப் படித்தாலே போதுமானது என்று சொல்லலாம். ஆம்! நாம் இங்கு காணவேண்டிய வரலாற்று வடிவங்கள் ஏராளம்!! வரலாற்றில் தனித்தன்மையுடன் விளங்கும் இம்மாவட்ட வரலாறு தமிழில் நூல் வடிவம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

''புதுக்கோட்டை மாவட்ட வரலாறு'' என்ற இந்த நூலினை புதுக்கோட்டை அருங்காட்சியக காப்பாட்சியர் திரு. ஜெ.ராஜாமுகமது, தக்க சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளார். விரிவான ஆய்வு நோக்கில் எழுதப்பட்டுள்ள ஒரு வரலாற்று நூல் என்பதை பல தலைப்புகளில் காணமுடிகிறது. புதுக்கோட்டையின் வரலாறு குறித்து ஆய்வு செய்வோருக்கு இது ஒரு வழிகாட்டி நூலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. வரலாற்று ஆர்வலர்கள் இந்த நூலினை நன்கு வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். புதுக்கோட்டைப் பகுதியின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை மக்களுக்கு விளக்கி வரும் அருங்காட்சியகத்தின் காப்பாட்சியர் இந்த நூலை எழுதி இருப்பது பொருத்தமே! இத்தகையதொரு நூல் வெளிவரக் காரணமாக இருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுக்குரியவராவார்.

பயனுள்ள இப்பணியை செவ்வனே செய்துள்ள திரு.ஜெ.ராஜா முகமது அவர்களுக்கு எனது பாராட்டுதலையும் அவரது பணி தொடர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னை - 600 008.** ம. இராமன்
**4.2.1992.**

***பத்மபூஷன் திரு.கே.ஆர்.ஸ்ரீநிவாசன்,எம்.ஏ., (முன்னாள் துணை இயக்குநர் இந்திய அரசு தொல்லியல் துறை) அவர்களின்***

# அணிந்துரை

தமிழ்நாட்டின் மையமாக அமைந்துள்ள புதுக்கோட்டையில் பிறந்து, வளர்ந்து அவ்வூரிலேயே உள்ள அருங்காட்சியகத்தின் காப்பாளராக பணியாற்றும் நல்வாய்ப்பினைப் பெற்று, பின்னர் இந்திய தொல்லியல் துறையில் Deputy Director General - ஆக பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய நான், இப்பகுதியின் வரலாறு, கலை, கல்வெட்டுகள் குறித்து ஆய்வுகள், அகழாய்வுகள் செய்து பல நூல்களும், கட்டுரைகளும் எழுதியுள்ள காரணத்தினால், இப்பகுதியின் வரலாறு குறித்து ஓரளவு நன்கு அறிந்தவன் என்ற முறையில் புதுக்கோட்டை அருங்காட்சியக காப்பாட்சியர் திரு.ஜெ.ராஜாமுகமது எழுதிள்ள இந்த நூலுக்கு அணிந்துரை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களைவிட (பழைய) புதுக்கோட்டை சமஸ்தானத்தை உள்ளடக்கியுள்ள புதுக்கோட்டை மாவட்டம் தமிழக வரலாற்றின் அரும்பொருட்காட்சிக் கூடமாக விளங்குகிறது. இம்மா வட்டத்திற்கு பல தனிச் சிறப்புகளும் உண்டு. தமிழகத்தில், பெருங்கற்கால நாகரிகம் குறித்து படித்தறிய சிறந்த இடம், அதிக எண்ணிக்கையில் குகைக்கோயில்கள் உள்ள இடம், ஆயிரத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடம், மிக அதிகமான எண்ணிக்கையில் ரோம பொன் நாணயங்கள் கிடைத்துள்ள இடம், மிக அதிகமான தொல்லியல் பழமைச் சின்னங்கள் காணப்படும் இடம், கோயில் கட்டிடக்கலை வளர்ச்சி வரலாற்றைப் படிக்க சிறந்த இடம், சரித்திரக்கால தொடக்கத்தில் வழக்கிலிருந்த தமிழ் பிராமிக் கல்வெட்டும், தொடர்ந்து நடைமுறைக்கு வந்த பழந்தமிழ்க் கல்வெட்டுக்களும் நிறைந்து தமிழ் எழுத்து வளர்ச்சி வரலாற்றைக் காட்டும் இடம், இப்படியாக இந்த பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

கி.பி.7-8ஆம் நூற்றாண்டில் தொடங்கி ஆங்கிலேயரது ஆட்சிக் காலம் இறுதியாக இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தை ஆண்ட பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள், ஆகிய அனைத்து வம்சாவளிகளின் ஆட்சியையும் கண்டது இப்பகுதி. அரசியல் போட்டிகள் மற்றும் போர்க்களங்களினூடேயும், இப்பகுதியை ஆண்ட மன்னர்கள், தங்களது கலையார்வத்தையும், ஆட்சிச்சிறப்புகளையும் இங்கு காணப்படும் கலைச் சின்னங்களிலும் கல்வெட்டுகளிலும் பதித்து வைத்துள்ளனர். தமிழ்நாட்டின் ஏனையப் பகுதிகளிலும் இதுபோன்று காணப்பட்டாலும், ஒரே இடத்தில் காலக்கிரமத் தொடர்ச்சியாக இவை காணப்படுவது இங்குதான். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சிறிதுகாலம் கண்ணனூரைத் தலைநகராகக் கொண்டு (சமயபுரம்) ஆண்டுவந்த ஹொய்சளர்

காலத்துக் கல்வெட்டுக்களும், மதுரை பாண்டியரின் வீழ்ச்சிக்குப்பின் ஒரு அரை நூற்றாண்டே மதுரையிலிருந்து ஆட்சி செலுத்திய சூரத்தான்கள் (சுல்தான்கள்) காலத்துக் கல்வெட்டுக்களும் இங்கு காணப்படுகின்றன. இவ்வகையில் தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்திய எல்லா வம்சத்தினரின் தொடர்பையும் இப்பகுதி பெற்றிருந்தது சொல்லாமல் விளங்கும்.

இக்காலங்களை அடுத்து அண்மைக்காலம் வரை சுமார் 300 ஆண்டுகள் தனியரசாக (சமஸ்தானம்) விளங்கியதும் புதுக்கோட்டை ஒன்றே!

**சுருங்கக்கூறின், புதுக்கோட்டையின் வரலாறு, தமிழக வரலாற்றின் ஒரு சுருக்கமான தொகுதி (Epitome) என்று கூறலாம்.**

60 ஆண்டுகளுக்கு முன் நான் இங்கு பணி புரியும்போது இப்பகுதியின் வரலாறு குறித்து ஆய்வுகள் செய்ய எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் போன்று, இளைய தலைமுறையைச் சேர்ந்த திரு.ஜெ.ராஜா முகமது அவர்களுக்கும் கிட்டியுள்ளது அதை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டு, ஏற்கனவே பலர் கண்டு வெளியிட்டுள்ள, இப்பகுதியின் வரலாற்றுச் செய்திகளையும், கருத்துக்களையும் மறு ஆய்வுகள் செய்து, ஆய்ந்து, ஆராய்ந்து, பல புதிய கருத்துக்களை தெளிவான முறையில் இந்த நூலில் வெளிக் கொணர்ந்திருக்கிறார். கற்காலந்தொட்டு 1948-ம் ஆண்டு வரையிலான இப்பகுதியின் வரலாறு தக்க ஆதாரங்களுடன் இந்த நூலில் எழுதப்பட்டுள்ளது.

கல்வெட்டுச் செய்திகளை ஊன்றிப்படித்துப் பல அரிய செய்திகளை ஆசிரியர் அளித்திருக்கிறார். மாவட்டத்தின் பல இடங்களிலும் காணப்படும் பழமைச் சின்னங்கள், கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியன பற்றி விரிவான குறிப்புகளை தந்திருக்கிறார். கல்வெட்டியல், கோயில் கட்டிடக்கலை, மற்றும் புராண இதிகாசங்கள் ஆகிய துறைகளில் ஆசிரியருக்குள்ள பயிற்சியை இவை காட்டுகின்றன.

நல்லதொரு வரலாற்று நூல் தமிழகத்திற்கு அறிமுகமாகிறது என்று சொல்லலாம். படித்து முடித்தபின்பே வைக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டும் வகையில் நல்ல தமிழ் நடையில் இந்த நூலை எழுதி நமக்களித்துள்ள அன்பர் திரு.ஜெ.ராஜாமுகமது அவர்களுக்கு தமிழறிந்த நன்மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன்.

படித்துப் பயன்பெற வேண்டிய நூல். ஆசிரியரின் ஆய்வுப் பணிக்கு எனது பாராட்டுக்கள். அவரது பணி மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்!

திருச்சி-8 — கே.ஆர்.ஸ்ரீநிவாசன்
25.1.1992

***புதுக்கோட்டை வரலாற்றுப் பேரவையின் தலைவர் பேராசிரியர் பே.க. வேலாயுதம்,எம்.ஏ.,பி.ஒ.எல்., பி.டி., எம்.பில்., அவர்களின்***

# ஆய்வுரை

புதுக்கோட்டை அருங்காட்சியகக் காப்பாட்சியரும் புதுக்கோட்டை வரலாற்றுப் பேரவையின் செயலருமான நண்பர் திரு.இராஜாமுகமது அவர்கள் ஆக்கியுள்ள 'புதுக்கோட்டை மாவட்ட வரலாறு' என்னும் இந்நூல் ஒரு மனோரஞ்சித மலர்.

**மோக்கின்றார் எந்த மலரை நினைத்துக் கொண்டு மோந்து** பார்க்கின்றாரோ அந்த மலரின் மணத்தை வீசுவது மனோரஞ்சிதத்தின் இயல்பு எனச் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அறிந்ததில்லை.

ஆனால், 'புதுக்கோட்டை மாவட்ட வரலாறு' என்னும் பெயருடைய இந்நூலோ அரசியல் வரலாறு என எண்ணிப் படிக்கும்பொழுது அரசியல் வரலாறாகவே காட்சியளிக்கிறது; இதனையே சமுதாய வரலாறாக எண்ணுங்கால் சமுதாய வரலாறாகவே தென்படுகிறது; கலை-இலக்கிய-பண்பாட்டு நோக்கத்தோடு பார்க்குங்கால் கலை-இலக்கிய-பண்பாட்டு வரலாறாகவே விளங்குகிறது.

அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு, பண்பாட்டு வரலாறு என வரலாற்றுப் பிரிவுகள் தோன்றிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அவற்றின் பண்புகளையெல்லாம் உள்ளடக்கி இந்நூல் அமைந்திருப்பது வியப்பிற்கும் பாராட்டிற்கும் உரியது. இத்தகைய பன்னோக்கு வரலாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைவது சிறப்பு; அமையவேண்டும்.

இந்நூல் மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது.

முதல் பாகம், ஆதிமனிதன் வாழ்க்கை தொடங்கி விஜயநகர ஆட்சி முடிவு வரை இன்றைய புதுக்கோட்டை மாவட்டப் பரப்பின் வரலாற்றை விரிவாகப் பேசுகிறது.

'அறிமுகம்-ஆறுகள்-மலைகள்-கனிவளம்-வரலாற்றுக்கு முற்பட்ட காலம்' முதலாக 19 உட்தலைப்புக்களைக் கொண்டது முதல்பாகம். இம் முதல் பாகத்தைப் படித்து முடிக்கும் ஒருவர் புதுக்கோட்டை மாவட்ட வரலாற்றை மட்டுமின்றி, சோழ பாண்டியர்களின் அரசியல் வரலாற்றையும் துல்லியமாகத் தெரிந்துகொள்வர்.

பல வரலாற்று ஆசிரியர்கள் சொல்லாத விளக்கங்களை இந்நூலாசிரியர் சொல்வது உள்ளங்கொள்ளத் தக்கதாக அமைந்துள்ளது. (எ-டு) முத்தரையர் பற்றிய விளக்கம். (பக்.18)

இரண்டாம் பாகம், புதுக்கோட்டை சமஸ்தானத்தைப் பற்றிய முழு வரலாறு. இது புதுக்கோட்டை மன்னர் மரபின் தொடக்கம் முதல் 1948-இல் இந்தியாவுடன் இணையும் வரையுள்ள வரலாற்றை மிக விரிவாக விளக்குகிறது.

'புதுக்கோட்டை சமஸ்தானம்-தொண்டைமான் மன்னர்களின் தோற்றம்-ரகுநாதராய தொண்டைமான்-புதுக்கோட்டை நகரின் தோற்றம் முதலாய 19 உட்தலைப்புக்களைக் கொண்டுள்ள இவ்விரண்டாம் பாகம் முழுவதும் புதுக்கோட்டை மன்னர் ஆட்சியையும் அவர்கள் ஆட்சிக்குத் துணை நின்ற அலுவலர்களையும் அவர்கள் ஆட்சியில் மக்கள் பெற்ற நன்மைகளையுமே பேசுகின்றது. இப்பாகத்திலுள்ள வரலாறு சான்றுகளோடும் தருக்க நெறிகளோடும் அமைந்துள்ளது சிறப்பு.

மூன்றாம் பாகம், பெரும்பான்மை கருதிப் 'புதுக்கோட்டை மாவட்ட ஊர்களின் வரலாறு' எனலாம். இப்பாகத்தில் 38 உட்தலைப்புக்கள் உள்ளன.

பல நூல்களிலுள்ள செய்திகளைத் திரட்டித் தருவதே வரலாறு எனக் கருதும் இக்காலத்தில், இராஜாமுகமது அவர்கள் பல புதிய செய்திகளை-அதுவும் பழங் கொள்கைகளைத் தகர்க்கும் புதிய செய்திகளைக் கூறுவது பெரிதும் பாராட்டிற்குரியது. எடுத்துக் காட்டாக, சித்தன்னவாசல் குகைக்கோயில், அங்குள்ள ஓவியங்கள் ஆகியவையும், குடுமியான்மலை இசைக் கல்வெட்டும் மகேந்திரவர்மன் படைப்புக்களே என்று உலகம் நினைக்கிறது. அவை அவனுடையவை அல்ல என்பதற்கு நூலாசிரியர் காட்டும் காரணங்கள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை (பக்.15, 16, 209-211). திருமெய்யம் கோட்டைக்கும் ஊமைத்துரைக்கும் தொடர்பே இல்லை என இவர் வாதிடும்போது நாம் ஊமையாகிவிடுகின்றோம். (பக்.240-244) புதுக்கோட்டையில் மாலிக்காபூர் (பக்.41-47), தொண்டைமான் கட்டபொம்மனை காட்டிக் கொடுத்தாரா? (பக்.107-111) என்னுந் தலைப்புக்கள் வரலாற்றுலகின் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியவை.

வரலாற்று ஆசிரியனும் இலக்கிய ஆசிரியனும் எப்படி வேறுபடுகிறார்கள்?

வரலாற்று ஆசிரியன் தான் கண்ட உண்மைகளை அப்படியே மாற்றமின்றி எழுதியாக வேண்டும். அது அவனது கடமை; வரலாற்று நெறி, உண்மைகள் தெரியாபோது உலகியலோடு ஒட்டிய ஊகம் வரலாற்றில் இடம் பெறலாம். சுருங்கச் சொல்லின், உணர்ச்சி ஒதுக்கப்படவேண்டிய-துல்லியத்தை நாடவேண்டிய-ஓர் அறிவியல் துறையே வரலாறு. அங்கு இன்னார் இனியார் என்ற உணர்ச்சிக்கு இடமில்லை, இருக்கவும் கூடாது.

இலக்கிய ஆசிரியனோ தன் விழுமிய நோக்கத்திற்காக வரலாற்றிலேயே சிலவற்றை மாற்றவும் மறைக்கவும் உரிமை பெற்றுள்ளான்.

நாட்டு மக்களிடத்தே உரிமை வேட்கையை ஊட்டுவதற்காகக் கட்டபொம்மனின் சில செயல்களை மறைத்தும் சிலவற்றைப் பெரிதுபடுத்தியும் சித்தரித்தது, இலக்கிய நோக்கில் சரியே. வரலாற்று நோக்கில் உண்மை என்ன என்பதை உலகம் அறியச் செய்ய வேண்டாமா? வரலாறு என்பது எந்த ஓர் உண்மையையும் மறைக்காமல் அப்பட்டமாகக் கூறவேண்டும். இதனையே இந்நூலாசிரி யர் செய்ய முன்வந்துள்ளார்.

தொடக்கநிலை அறிவினரும் எளிதில் புரிந்துகொள்ளும்படியாக இந்நூலை அமைத்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டது என்பதைக் கூறவந்த நூலாசிரியர், ''விஜயநகரப் பேரரசு ஹரிஹரர், புக்கர் என்னும் சகோதரர்களால் கி.பி.1336-ல் நிறுவப்பட்டது. அவ்வரசு துங்கபத்திரை ஆற்றங்கரை யில் விஜயநகரம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு அமைந்திருந்தது. இவ்வரசின் முக்கிய நோக்கம், தென்னிந்தியாவில் முஸ்லீம்களின் ஆதிக்கத்தால் இந்து மதமும் இந்து அரசுகளும் அழியா வண்ணம் காப்பது என்பதே'' (பக்.49)

விஜயநகரப் பேரரசின் 'தோற்றம், காலம், இடம், நோக்கம் ஆகியவற்றைத் தெளிவுபடுத்தி மேற்செல்வது நூலாசிரியரின் சமயப் பொறையையும் நடுநிலை உள்ளத்தையும் வரலாற்று நெறியையும் காட்டுகிறது.

கலைகளை-கலைவளர்ச்சியை-விளக்கவரும் நூலாசிரியர் கலை நுட்பத்தையும் விளக்கிச் செல்வது பாராட்டிற்குரியது. (எ-டு) உலோகச் சிலைகள் செய்யும் முறை பற்றிய விளக்கம் (பக்.194). மற்றும் கோயில்கள் சிற்பங்கள் குறித்த செய்திகள்.

இவ்வரலாற்று நூலைப் படிக்கும்போது வரலாற்றைப் படிக்கும் உணர்வே இல்லை. மாறாக, ஒரு புதினத்தை-ஒரு காவியத்தைச் சுவைக்கும் உணர்ச்சியே விஞ்சி நிற்கிறது. வரலாறு உணர்ச்சியோடு வெளிப்படும்போது காவியமாகி விடுவது இயல்புதானே.

....பசுமையான இலைகளுடன் தாமரையும் அல்லியும் இந்தத் தடாகத்தில் பூத்துக் குலுங்குகின்றன. பலவிதமான மீன்கள் அங்குமிங் கும் ஓடி விளையாடுகின்றன. யானைகள் நீரைக் கலக்கிக் களித்திருக்கின்றன. சுற்றுச் சூழலை மறந்து அசைபோட்டு இறுமாந்தி ருக்கும் எருமை மாடுகளின் தோற்றம் இயல்பாக உள்ளது. துள்ளிக் குதிக்கும் மீன்கள் மீனலோசனி மீனாட்சியின் கண்களோடு போட்டியிடு கின்றன. அன்னம், சிறகி, வாத்து போன்ற பறவைகள் தங்கள்

பெடைகளுடனம் குஞ்சுகளுடனும் குலாவிக் கொண்டிருக்கின்றன. மருட்சியுடன் விழித்துக் கொண்டு "யார் எனது குஞ்சுகளை மிரட்டுவது?" என்று கேட்கும் பாவனையில் தனது குஞ்சுகளுக்கு அடைக்கல மளிக்கப் பறந்தோடிச் செல்லும் ஒரு சிறகியின் ஓவியத் தோற்றம் தாயன்பு எவ்வுயிர்க்கும் பொதுவானது என்பதை உணர்த்து கிறது. தாமரையும் அல்லியும்கூட மொட்டாகவும் இதழ் விரித்தும் இயற்கையின் விதியை நம் கண்முன் கொண்டு வருகின்றன. பவ்யர்கள் என்னும் கந்தர்வ புருஷர்கள் நீராடி வழிபாட்டிற்குப் பூக்களைப் பறித்துக் கொண்டிருக்கின்றனர். இப்படியாகத் தடாகம் முழுவதும் எங்கு நோக்கினும் உயிரோட்டம் நிறைந்த கண்கொள்ளாக் காட்சி இங்குக் காணப்படும் அனைத்துமே சுறுசுறுப்புடன் இயங்குவதுபோல நமக்குத் தோற்றமளிக்கின்றன..."

என்பது கந்தர்வ உலகிலுள்ள தாமரைத் தடாகத்தை வருணிக்கும் காவியப் பகுதியா? இல்லை! இல்லவே இல்லை! கீழே படியுங்கள்!

"மனதிற்கினிய இந்த ஓவியங்களை எப்படித்தான் வரைந்திருப் பார்களோ என்று எண்ணும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது" என்னும்படி அமைந்த சித்திரமாடம் எது? அச்சித்திர மாடத்தில் மலைத்து நிற்கும் ஓவியக் காதலன் யார்? வேறு யாருமில்லை. நம் இராஜாமுகமதுதான். சித்திரமாடம் வேறு எதுவுமில்லை. நம் சித்தன்னவாசலே! அதன் கூரை ஓவியமே இங்கு பாராட்டப்பட்டது. (பக்.231)

கூரை ஓவியத்தைக் கண்டு சுவைத்துவரும் இவ்வருணனையைப் படித்தபின் அவ்வோவியத்தைக் காண்பாராயின் அச்சுவை தனி இன்பம் நல்கும் என்பது திண்ணம். ஓவியத்தைச் சுவைக்கவும் தனிக் கண்கள் வேண்டும்போலும்.

இவ்வாறாக பல்வாற்றானும் நிறைவான ஒரு நூல். நூலேயன்றி நூலாசிரியரும் நமது பாராட்டிற்கும் வாழ்த்திற்கும் உரியவர். இது ஒரு முன்னோடி நூல். மற்ற மாவட்டங்களுக்கும் முன்னோடியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

*எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு.*

**பே.க.வேலாயுதம்**

முதுநிலை விரிவுரையாளர் (தமிழ்)
பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி,
திருச்சி-600 201
25.1.1992.

# புகுமுகம்

புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, 1987-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தனியார் வசமுள்ள வரலாற்று ஆவணங் கள் குறித்த விவரங்களைத் தொகுத்து தேசிய அளவில் ஆய்வாளர்க ளுக்கு அளிப்பதே இக்குழுவின் நோக்கமாகும்.. இப்பணியோடு மாவட்டத்தின் வரலாற்று செய்திகளையும் தொகுத்து மக்களுக்குத் தெரிவித்து அவர்களிடையே வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ''புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழு செய்திமலர்'' என்னும் காலாண்டு மலர் வெளியிடும் பணியும் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகிறது. செய்தி மலரின் ஆசிரியராக இருக்கும் வாய்ப்பினை ஆவணக்குழு எனக்கு அளித்தது. 1988-ம் ஆண்டு தீரர் சத்தியமூர்த்தியின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டங்க ளின்போது ஆவணக்குழுவின் சார்பில் ***''புதுக்கோட்டை தந்த சொல்வேந்தர் சத்தியமூர்த்தி''*** என்ற நூல் என்னால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. ஆவணக்குழுவின் இப்பணிக்கும் எனக்கும் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர்களான திரு.இல.பழமலை, இ.ஆ.ப., திரு.க.இளங்கோவன், இ.ஆ.ப., திரு.ப.செல்வம், இ.ஆ.ப., திரு.ம.குற்றாலிங்கம்,இ.ஆ.ப., ஆகியோர் ஊக்கமளித்து வந்ததை நன்றியுடன் நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் வரலாறு குறித்து இதுவரை சில நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. பல்கலைக் கழகங்களின் மூலம் சில ஆய்வுத்தொகுப்புகளும் (Ph.D.Thesis) எழுதப்பட்டுள் ளன. இருப்பினும் புதுக்கோட்டை மாவட்டத்தின் நிறைவான வரலாற்றை உள்ளடக்கியதொரு நூல் தமிழில் இல்லாதது ஒரு குறையாகவே இருந்து வந்தது. ஆகவே அனைத்துத் தரப்பினரும் எளிதில் படித்துப் பயன்பெறும் வண்ணம் மாவட்டத்தின் வரலாற்றை தமிழில் எழுதி வெளியிட ஆவணக்குழு விரும்பியது. 1990-ல் குழுவின் தலைவராக இருந்த திரு.ம.குற்றாலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் இந்த நூல் எழுதும் நல்வாய்ப்பினை எனக்கு அளித்தார்கள். அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்தார்கள். அவர்களை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

புத்தகம் எழுதும் பணி மேற்கொள்ளப்பட்டு நடந்து வரும்போது திருமதி ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள் நான் எழுதிவந்த மாவட்ட வரலாற்று நூல் குறித்து அறிந்து, அந்த நூலை மிகவும் நல்ல முறையில் அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பதில் அவர்கள்

பெரிதும் ஆர்வம் காட்டி எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தார்கள். அவர்களது பெருமுயற்சியால் இந்த நூல் இன்று வெளியிடப்படுகிறது. வரலாற்றை வடிவமாக்க அவர்கள் காட்டிய அக்கறை போற்றுதற்கு உரியது. அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை காணிக்கையாக்குகிறேன்.

பொதுவாக நமது நாட்டில் வட்டார வரலாறு சரியாகவும் கோர்வையாகவும் எழுதப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்று மாக வரும் செய்திகளும் ஆதாரபூர்வமான செய்திகளைத் தெரிவிக்காமல் மேலெழுந்தவாரியான கருத்துக்களையும், வழக்காறுகளையும் மட்டுமே தெரிவிப்பதாக உள்ளன. இந்த நிலையிலிருந்து மாறுபட்டு, இம்மாவட் டத்தின் 2000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட வரலாற்றில் தொடங்கி, 1948ம் ஆண்டு வரையிலான வரலாற்றினை தக்க சான்றாவணங்களின் துணை கொண்டு இந்த நூலை எழுதியுள்ளேன். நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்குகளில் நான் வாசித்தளித்த ஆய்வுக் கட்டுரைகளையும், திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பான எனது உரைகளுள் சிலவற்றையும் இதில் சேர்த்துள்ளேன்.

ஏறத்தாழ இருபது ஆண்டுகாலமாக இடையறாது, புதுக்கோட்டை வரலாறு குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறேன். முற்கால வரலாற்றிற்கு இங்குள்ள பழமைச் சின்னங்களும், கல்வெட்டுக்களும் சான்றாக உள்ளன. சமஸ்தானத்தின் வரலாறு குறித்த ஆவணங்கள் புதுக்கோட்டை சார்நிலை ஆட்சியர் அலுவலகத்திலும், சென்னை மற்றும் டெல்லி ஆவணக் காப்பகங்களிலும் பாதுகாத்து வைக்கப்பட் டுள்ளன. இவற்றின் துணைகொண்டும், இதுவரை வெளிவந்துள்ள பல நூல்களின் துணைகொண்டும் இந்த நூலை எழுதியிருக்கிறேன். எனக்குக் கிடைத்த சான்றுகளை ஆராய்ந்து எனது கருத்துக்களை இங்கு எழுதியுள்ளேன். ஆனால் இவையே முடிவான கருத்து என்று சொல்லிவிடுவதற்கிற்கில்லை. இனிவரும் ஆய்வுகளில் புதிய சான்று கள் கிடைக்கும்போது புதிய கருத்துக்களும் ஏற்பட வாய்ப்புண்டு. புதிய கண்டுபிடிப்புகளினால் வரலாறும் மாறக்கூடியதே.

இந்த மாவட்டத்தின் வரலாற்றை ஆதாரபூர்வமாக எழுத வேண்டுமென்ற கடமை உணர்வின் காரணமாக இதுவரை சரியாக சித்தரிக்கப்படாமல் மேலெழுந்தவாரியாக எழுதப்பட்டுள்ள சில செய்திகளையும், சொல்லப்பட்டு வரும் நாட்டு வழக்குகளையும் விரிவாக ஆய்வுசெய்து, எனது ஆய்வின் முடிவினை இங்கு எழுதியுள்ளேன். எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திற்கும் தக்கச் சான்றுகளை ஆங்காங்கே காட்டியுள்ளேன். சரியான வரலாறு எதிர்வரும் தலைமுறைக்கு சென்றடைய வேண்டுமென்ற விழுமிய நோக்கத்துடன் இவையெல்லாம் எழுதப்பட்டனவேயன்றி, யாரையும்

புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல. மாற்றுக் கருத்துக் கொள்ளும் வாசகர்கள் இதை மனதில் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன். இந்த நூல் எனது முதல் முயற்சியே ஆகும். ஆகவே; குறைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

புதுக்கோட்டையின் வரலாறு குறித்து இன்னும் எழுதப்பட வேண்டியவை நிறைய உள்ளன. இவற்றையெல்லாம் இன்னும் பல தொகுதிகளாக வெளியிட ஆவணக்குழு முயற்சி செய்யும்.

எனது முயற்சிக்கு ஊக்கமளித்த புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நூல் வெளியிடத் தேவையான உதவிகளைப் பெற்றுத் தந்த புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவர், அறந்தாங்கி சார்நிலை ஆட்சியர், புதுக்கோட்டை கோட்ட வளர்ச்சி அலுவர், அறந்தாங்கி கோட்ட வளர்ச்சி அலுவலர் மற்றுமவர்களின் துறை சார்ந்த அலுவலர்கள், பொருளுதவி செய்த பெருமக்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது ஆய்விற்குத் தேவையான பதிவேடுகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கிய புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவர் சென்னை ஆவணக் காப்பகத்தினர், என்து அலுவலகப் பணியினூடே இப்பணியையும் மேற்கொள்ள ஊக்கமளித்த அருங்காட்சியக இயக்கு நர், பழமைச் சின்னங்களை புகைப்படம் எடுத்து வெளியிட்டுக் கொள்ள அனுமதி வழங்கிய இந்திய தொல்லியல் துறையினர், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையினர் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

எனது பணியில் எனக்கு உறுதுணையாக விளங்கிய எனது அலுவலக தட்டச்சர் திருமதி வே.வஞ்சளா, உதவிக் காப்பாட்சியர் திரு.ந.சௌந்தரபாண்டியன், உதவியாளர் திரு.மு.முத்துசீனிவாசன் ஆகியோருக்கும், பிழைதிருத்தங்கள் செய்ய உதவி செய்த புதுக் கோட்டை மாவட்ட நூலக அலுவலர் திரு.மு.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நன்றி. சிறந்த முறையில் புகைப்படங்கள் தயாரித்துக் கொடுத்த தாசன் ஸ்டூடியோ ரெங்கசாமி குமார், முகப்போவியம் அழகுடன் அமைத்துக் கொடுத்த ஓவியர் ராஜா, கம்ப்யூட்டர் ஆப் செட் முறையில் சிறந்த முறையில் இந்நூலை உருவாக்கிக் கொடுத்த சென்னை நியூ வீனஸ் பிரிண்டர்ஸ் நிறுவனம் ஆகியோருக்கும் எனது நன்றி!

நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள முதுபெரும் ஆய்வறிஞர் பத்மபூஷன் திரு.கே.ஆர்.ஸ்ரீநிவாசன் அவர்களுக்கும், ஆய்வுரை வழங்கியுள்ள புதுக்கோட்டை வரலாற்றுப் பேரவைத் தலைவர் பேராசிரியர் பே.க.வேலாயுதம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கி

உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீலா ராணி சுங்கத். இ.ஆ.ப., அவர்களுக்கும் அருங்காட்சியக இயக்குநர் திரு. ம. இராமன். இ.ஆ.ப., அவர்களுக்கும் பாராட்டுரை வழங்கியுள்ள தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களது ஓய்வில்லாத பணிகளுக்கிடையேயும், எனது நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

இன்னும் இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக! எனது பணிதொடர உங்களது அன்பான வாழ்த்துக்களை வேண்டுகிறேன்.

**புதுக்கோட்டை** **ஜெ. ராஜாமுகமது**
**25.1.1992.**

நான்காம் பதிப்பு :

எனது பணிக்காலத்தின் நிறைவுக் கட்டத்தில் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகங்களின் உதவி இயக்குநராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது. வரலாற்று ஆர்வலரான, அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. எம்.ஏ. சித்திக், இ.ஆ.ப, அவர்களிடம் "புதுக்கோட்டை மாவட்ட வரலாறு" புத்தகத்தினை அருங்காட்சியகத்துறையின் மூலமாக மறு பதிப்பு செய்து வெளியிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட போது அவர்கள் மனமுவந்து இதற்கு ஏற்பளித்தார்கள். அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகிறேன். மறு பதிப்பினை பல கூடுதல் செய்திகளுடன் வெளியிட வேண்டுமென்ற எண்ணமிருந்த போதிலும் தற்போதைய எனது பணிக்கால சூழலில் அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. ஏற்கனவே பதிப்பித்திருந்தபடியே நான்காவது பதிப்பாக வெளிவருகிறது. இந்நூலினை சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த சென்னை ஸ்மார்ட் ஃபாண்ட்ஸ் நிறுவனத்திற்கு எனது நன்றி.

சென்னை **ஜெ. ராஜாமுகமது**
2.11.2004.

**எம். ஏ. சித்திக்,** இ.ஆ.ப.
இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம்,
எழும்பூர், சென்னை - 600 008.

தொலைபேசி : 044-2819 3778
ஃபேக்ஸ் : 044-2819 3035
இமெயில் : govtmuse@md4.vsnl.net.in

# வாழ்த்துரை

தமிழ்நாடு அருங்காட்சியகத்துறை ஆய்வு நூல்கள் பலவற்றை வெளியிட்டு வருகிறது. இத்தகைய நூல்கள் வரலாற்று மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் தொடர்ந்து கிடைக்கும் வண்ணம் பழைய நூல்கள் பலவற்றை மறு பதிப்பு செய்து வெளியிட்டு வருகிறது. புதுக்கோட்டை கல்வெட்டுத் தொகுதி, புதுக்கோட்டை மேனுவல் போன்ற பழைய நூல்கள் பல மறு பதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. அருங்காட்சியக உதவி இயக்குநர் முனைவர் ஜெ. ராஜாமுகமது அவர்கள் எழுதியுள்ள "புதுக்கோட்டை மாவட்ட வரலாறு" வரலாற்று ஆய்வாளர்களுக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூலை அருங்காட்சியகத்துறையின் மூலம் மறு பதிப்பு செய்து வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொறியியலில் உயர் கல்வி பயின்ற எனக்கு தமிழக வரலாறு பண்பாடு குறித்த நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு. "புதுக்கோட்டை மாவட்ட வரலாறு" புத்தகத்தின் மூலம் இந்த மாவட்டத்தின் பன்முகமாட்சியினைத் தெரிந்து கொள்ள முடிகிறது. எல்லா மாவட்டங்களுக்கும் இத்தகைய நூல் வெளிவர வேண்டும். முனைவர் ஜெ. ராஜாமுகமது அவர்களின் பணி தொடர வாழ்த்துகிறேன்.

சென்னை
2.11.2004.

**எம்.ஏ. சித்திக்**

# புதுக்கோட்டை மாவட்ட வரலாறு

## முதல் பாகம்

## 1. அறிமுகம்

புதுக்கோட்டை 1974-ம் ஆண்டு சனவரி மாதம், 14-ம் நாள் மாவட்டமாக மலர்ந்தது. இதற்கு முன்பு திருச்சி மாவட்டத்தில் ஒரு வருவாய் கோட்டமாக இருந்தது. தொண்டைமான் மன்னர்களின் முடியாட்சியில் இருந்த புதுக்கோட்டைத் தனியரசு (சமஸ்தானம்) 3.3.1948-ல் ஒன்றுபட்ட இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

தமிழகத்தின் 15-வது மாவட்டமாக புதுக்கோட்டை உருவானபோது, புதுக்கோட்டை வருவாய் கோட்டத்துடன், தஞ்சாவூர், மாவட்டத்திலிருந்து கந்தர்வகோட்டை, அறந்தாங்கி, கீரமங்கலம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டு இந்த மாவட்டம் உருவானது. தற்போது புதுக்கோட்டை, அறந்தாங்கி என இரண்டு வருவாய் கோட்டங்களும், ஆலங்குடி, குளத்தூர், புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை, திருமயம், அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் (திருப்பெருந்துறை) ஆகிய ஏழு வட்டங்களும் உள்ளன. மாவட்டத்தின் பரப்பளவு 4600 சதுர கிலோ மீட்டர், மொத்தம் 775 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. மக்கள் தொகை 13,22,494(1991). இம் மாவட்டத்தில் புஞ்சை நிலமே அதிகம். விவசாயத்திற்கு பெரும்பாலும் மழையையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. மாவட்டத்தில் சுமார் 6000 கண்மாய்கள் உள்ளன. இந்த கண்மாய்கள் விவசாயத்திற்கு பெரிதும் துணை புரிகின்றன.

தமிழகத்தின் நிலப்பகுதிகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வழங்குவது தொன்றுதொட்ட வழக்கமாகும். இந்த மாவட்ட நிலப்பகுதிகளையும் இந்த அடிப்படையில் பிரிக்கலாம். குறிஞ்சி, முல்லை, நிலப்பிரிவுகள் குளத்தூர் மற்றும் திருமயம் வட்டங்களிலும்,

மருதநிலப்பிரிவு, ஆலங்குடி வட்டத்திலும், அறந்தாங்கி கடற்கரைப் பகுதி நெய்தல் நிலமாகவும் இருக்கக் காண்கிறோம். ஆனால் வறட்சி நிறைந்த இப்பகுதிகள் பெரும்பாலான ஆண்டுகளில் பாலையாகக் காட்சியளிக்கும்.

ம்ாவட்டத்தின் சராசரி அதிக அள்வு வெப்பம் 37 டிகிரி செல்சியஸ். குறைந்த அளவு 26 டிகிரி செல்சியஸ். தென்மேற்குப் பருவக்காற்றினால் ஜூன் - செப்டம்பர் மாதங்களிலும், வடகிழக்குப் பருவக்காற்றினால் அக்டோபர் - டிசம்பர் மாதங்களிலும் மாவட்டப் பகுதிகளில் மழை பெய்கிறது. ஆண்டு சராசரி மழை 921.8 மி.மீ. ஆகும்.

அதிகப்படியான மழை காரணமாக சில நேரங்களில் வெள்ளச் சேதமும் ஏற்பட்ட செய்திகள் தெரியவருகின்றன. 1709-ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பெரும் சேதம் ஏற்பட்டதற்கான குறிப்புகள் காணக்கிடக்கின்றன. 1809, 1827, 1877, 1884, 1888, 1890, 1893, 1919, 1920, 1921, 1930 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் பற்றிய குறிப்புகள் சமஸ்தான நிர்வாக அறிக்கைகளில் காணப்படுகின்றன.

புதுக்கோட்டை எப்போதுமே வறட்சியின் பிடியிலேயே இருந்து வந்துள்ளது. இதனால் இம்மாவட்டத்தின், பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கி.பி.15-ம் நூற்றாண்டில் நிலவிய கடுமையான வறட்சி, பஞ்சம் குறித்து, பொன்னமராவதி, மேலூர், இரும்பநாடு ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. (பு.க.793, 801) 1708-9-ம் ஆண்டுகளில் நிலவிய கொடிய பஞ்சம் குறித்து ஆவூர் மிஷன் பதிவுகள் தெரிவிக்கின்றன. 1733, 1837, 1866, 1868 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியினால் தொற்றுநோய்கள் பரவி உயிர்ச்சேதம் நிறைய ஏற்பட்டது. 1879, 1884, 1889, 1893, 1895, 1898 ஆகிய ஆண்டுகளிலும் வறட்சி ஏற்பட்டது. மேலே குறிப்பிட்ட முதல் நான்கு ஆண்டுகளில் சேஷய்யா சாஸ்திரி சமஸ்தான திவானாக இருந்தார். வறட்சி நிவாரணப் பணியாக புதுக்கோட்டை நகரிலுள்ள புதுக்குளத்தையும், பல்லவன் குளத்தையும் ஆழப்படுத்தி சீர்செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. புதுக்குளம் 115 மில்லியன் காலன் தண்ணீர் பிடிக்கும் அளவிற்கு ஆழப்படுத்தப்பட்டு, நகரின் குடிநீர் தேவைக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டது. 1904-05, 1907, 1909, 1921, 1925, 1926-30, 1945, 1969, 1974-75 ஆகிய ஆண்டுகளும் மாவட்டத்தில் வறட்சியை ஏற்படுத்திய ஆண்டுகளாகும்.

## 2. ஆறுகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாறு, குண்டாறு, பாம்பாறு, அஞ்ஞான விமோச்சனியாறு, உய்யக்கொண்டான், அம்புலியாறு, கோரையாறு, சூறையாறு முதலிய காட்டாறுகள் ஓடுகின்றன. பெரும் மழைக்காலங்களில் மட்டுமே, இவற்றில் தண்ணீர் ஓடும்.

**வெள்ளாறு:** மருங்காபுரிக்கு அருகிலுள்ள வேழமலையில் தொடங்கி, குளத்தூர் வட்டம் மீனவேலி கண்மாயில் பாய்ந்து, குடுமியான்மலை, பேரையூர், கடையக்குடி, வளநாடு, கோவில்கோட்டை, வழியாகப் பாய்ந்து, மணமேல்குடிக்கு அருகில் வங்கக்கடலில் கலக்கிறது. இந்த ஆற்றின் நீளம் 85 மைல் ஆகும். இதில் 25 மைல் திருச்சி மாவட்டத்திலும், 60 மைல் புதுக்கோட்டை மாவட்டத்திலும் உள்ளன. தமிழகத்து மூவேந்தர்கள் கோலோச்சிய காலத்தில், வெள்ளாறு, சோழநாட்டிற்கும், பாண்டியநாட்டிற்கும் எல்லையாக விளங்கியது. ஆற்றின் தெற்கே பாண்டிய நாடு, வடக்கே சோழ நாடு. வெள்ளாற்றின் குறுக்கே பல இடங்களில் சிறிய அணைகள் கட்டப்பட்டு அருகிலுள்ள கண்மாய்களில் நீர் தேக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படுகிறது. திருப்பெருந்துறை புராணத்தில் இந்த ஆற்றின் புராணக் கதை பேசப்படுகிறது.

**பாம்பாறு:** திருமயத்திற்கு அருகிலுள்ள பெருந்துறை கண்மாயிலிருந்து ஆரம்பமாகி, கீழாநிலைப் பகுதி வழியாகப் பாய்ந்து, அறந்தாங்கிக்கு அருகில் வெள்ளாற்றுடன் இணைந்து மீண்டும் திருப்புனவாசல் அருகில் 5 கிளைகளாகப் பிரிந்து வங்கக் கடலில் கலக்கிறது.

**பெருங்களூர் ஆறு:** அக்னி ஆறு என்றழைக்கபப்படும் அஞ்ஞான விமோச்சனியாறு (அறியாமையிலிருந்து விடுவிக்கும் நதி) குளத்தூர் கண்மாயிலிருந்து ஆரம்பமாகி பெருங்களூர், மழையூர், கறம்பக்குடி வழியாகப் பாய்ந்து அதிராம்பட்டினம் அருகில் வங்கக் கடலில் கலக்கிறது.

**குண்டாறு:** (சந்திர நதி) கவிர் நாட்டுக் கண்மாயில் தொடங்கி 5 கல் தொலைவு பாய்ந்து, கடையக்குடி அருகில் வெள்ளாற்றில் கலக்கிறது. **கோரையாறு:** தென்னம்பாடி கண்மாயிலிருந்து தொடங்கி, குளத்தூர் வட்டத்திலுள்ள சில ஊர்களின் வழியாகப் பாய்ந்து சென்று (திருச்சி) உய்யக்கொண்டான் ஆற்றில் கலக்கிறது. **கொளவனாறு** அறந்தாங்கி வட்டத்திலும், **நரசிங்க காவேரி (ஆறு)** ஆலங்குடி வட்டத்திலும் ஓடுகின்றன.

இத்தனை ஆறுகளின் பெயர்களையும் படிக்கும் வாசகர்கள் புதுக்கோட்டையின் நீர்வளத்தினைப் பற்றி மிகையாகக் கற்பனை செய்து விட வேண்டாம். இம்மாவட்டத்தில் ஓடும் ஆறுகளை மழைக்காலத்தில் மிகுந்து ஓடிவரும் தண்ணீர் செல்லும் ஓடைகள் அல்லது சிற்றாறுகள் எனக் குறிப்பிடுவது பொருந்தும்.

## 3. மலைகள்

மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள கருங்கல் குன்றுகள் 'மலைகள்' என்று அழைக்கப்படுகின்றன. பல ஊர்கள் மலை என்ற அடைமொழியுடன் விளங்குகின்றன - குடுமியான்மலை, நார்த்தாமலை, விராலிமலை, தேனிமலை, பிரான்மலை. இந்த குன்றுகளில் தாவரவளம் மிகவும் குறைவு. மாவட்டத்தில் மிக உயரமான குன்று பிரான்மலையில் உள்ளதாகும். நார்த்தாமலையில் பரந்து காணப்படும் குன்றுகளில் நல்ல வகைக் கருங்கல் கிடைக்கிறது. செவலூர், அம்மாசத்திரம், குன்னத்தூர்மலை, செம்பாட்டூர், விராலிமலை, நெடுங்குடி, குடுமியான்மலை, திருக்கோகர்ணம், வையாபுரி, குமரமலை, குன்னாண்டார்கோவில், மலையடிப்பட்டி, அரிமளம், திருமயம், சித்தன்னவாசல் ஆகிய இடங்களிலும் சிறிய கருங்கல் குன்றுகள் உள்ளன. நார்த்தாமலையில் உள்ள சிறு குன்றுகளில் பலவகையான மூலிகைச் செடிகள் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## 4. கனிவளம்

மாவட்டத்திலுள்ள குன்றுகளில், கட்டிடங்களுக்குத் தேவையான கருங்கல் வெட்டியெடுப்பது முக்கிய தொழிலாக உள்ளது. கருங்கல் வெட்டியெடுக்கும் தொழில், மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. திருக்கோகர்ணம், புத்தாம்பூர், திருமயம், லம்பலக்குடி, கோனாப்பட்டு, மலையக்கோவில், பேரையூர், விராலிமலை, குடுமியான்மலை, பனங்குடி ஆகியன கருங்கல் வெட்டியெடுக்கப்படும் இடங்களில் சிலவாகும். கீழாநிலைப் பகுதியில் செம்புரைக் கற்கள் நிறைய கிடைக்கிறது. மஞ்சள் மற்றும் சிகப்பு காவிக்கல் செங்கிரை (அரிமளம்) பகுதியில் கிடைக்கிறது. குளத்தூர் வட்டம் மல்லம்பட்டி கிராமப் பகுதியில் இரும்புத்தாது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (மிகப் பழங்காலத்திலிருந்தே இரும்பு தயாரிக்கும் தொழிற்கூடங்கள் இப்பகுதியில் இருந்ததை கல்வெட்டுகளின் மூலம் தெரிந்து கொள்கிறோம்) 1900-ம் ஆண்டிலிருந்தே இங்கு கிடைக்கும் இரும்புத் தாதுவை பயன்படுத்தித் தொழிற்சாலை ஏற்படுத்துவது குறித்து ஆய்வுகள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் இங்கு கிடைக்கும் இரும்புத்தாதுப்படிவு, குறைந்த பரப்பளவிலேயே

காணப்படுவதாலும், தரமும் உயர்வாக இல்லாததாலும், தொழிற்சாலை அமைக்கும் அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை.

மாவட்டத்தில் 540 வகை தாவர இனங்களும், 25 வகை பாம்புகளும், 45 வகை பறவைகளும் காணப்படுகின்றன.

## 5. வரலாற்றுக்கு முற்பட்டக் காலம் (Pre-Historic Period)

ஆதிமனிதன் புதுக்கோட்டை மாவட்டத்தில் வாழ்ந்ததற்கான அறிகுறிகள் கிடைத்துள்ளன. பழைய கற்கால கல்லாயுதம் ஒன்று திருமயம் வட்டம் குருவிக்கொண்டான் பட்டியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[1] இது சுமார் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள இயற்கைக் குகைகளும் பாறை இருக்கைகளும் மனிதன் தோன்றுதொட்டு இப்பகுதியில் வாழ்ந்து வந்திருக்க வேண்டுமென்பதற்கு மேலும் சான்று பகர்கின்றன. மேற்சொன்ன பழைய கற்கால கல்லாயுதம் ஒன்றைத் தவிர வேறு ஆயுதங்கள் கிடைக்கவில்லை. மேலும் புதிய கற்கால நாகரீகத் தடயங்களும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் உலோகக்கால நாகரிகச் சுவடுகள் நிறைய கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தின் பிற்பகுதியான இரும்பு காலத்தில் நிலவிய பெருங்கற்காலத்தில் (Magalithic Period) உபயோகத்திலிருந்த செம்பு, இரும்பு ஆயுதங்கள், மட்பாண்டங்கள், மணிகள், அணிகலன்கள் இறந்தோரைப் புதைத்த புதை குழிகள், இறந்தோரின் நினைவுச் சின்னங்களாக பயன்படுத்தப்பட்ட கல்லறைகள் (Megaliths) புதைகுழித் தாழிகள் ஆகியன (Burial urns) நிறைய கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பெருங்கற்கால நாகரிக (Magalithic Culture) கூறுபாடுகளை தெரிந்து கொள்ளுவதற்கு சிறந்த இடம் புதுக்கோட்டை என தொல்பொருளாய்வு அறிஞர்கள் கூறுகின்றனர். புதுக்கோட்டைப் பகுதியில் கி.மு. 800க்கும் கி.பி. 100க்கும் இடைப்பட்ட காலத்தில் பெருங்கற்கால நாகரிகம் தழைத்திருந்தது, எனக் கருதப்படுகிறது.

தென்னிந்திய நாகரிக வளர்ச்சியில் பெருங்கற்காலம் ஒரு முக்கியக் கட்டமாகும். இக்கால மக்கள் தொழிலுக்கும், தற்காப்பிற்கும் தேவையான கருவிகளை இரும்பினால் செய்யலாயினர். மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாக முன்னேறி இருந்தது. பாசனத்திற்கு நீரைத் தேக்கிப் பயிரிடும் முறை பின்பற்றப்பட்டது. உலோக வேலைகள், மட்பாண்டங்கள் செய்தல், ஆடை நெய்தல் போன்ற தொழில்களும் பரவ ஆரம்பித்தன. மக்கள் ஒன்று சேர்ந்த சமுதாய அமைப்பாக வாழ்ந்து வந்தனர். இறந்தோரை அடக்கம் செய்ய மேற்கொண்ட முறையில்

இக்கூட்டுச் செயல் நன்கு தெரிகிறது. இறந்தவர்களுக்கு பெருங்கல் சின்னங்கள் அமைக்கும் பழக்கம் பரவலாக ஏற்பட்டது. இதுபோன்ற சின்னங்களை ஊருக்கு வெளியிலும், மலைச் சரிவுகளிலும் அமைத்தனர். இவ்வித பெருங்கற் சின்னங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் காணபபடுகின்றன. சித்தன்னவாசல, தாயினிப்பட்டி, கலசக்காடு (திருக்கட்டளை), புல்வயல், மெர்ட்டமலை, அன்னவாசல், ஒலியமங்கலம், அம்மாச்சத்திரம் போன்ற இடங்களில் காணப்படுபவை குறிப்பிடத் தகுந்தனவாகும்.

சிஸ்ட் (Cist) எனப்படும் கருங்கல்லினால் ஆன கல்லறைகள், சுற்றுவட்ட கல்லரைகள் (Cairn Circles) முதுமக்கள் தாழிகள், இறந்தோரின் நினைவுச் சின்னங்களான கற்கிடைகள் ஆகியன மேற்கண்ட ஊர்களில் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கருங்கல் பலகையினால் அமைக்கப்பட்டுள்ள கல்லறைகள் 1.65 x 1.50 x 2.45 மீட்டர் அளவில் அமைந்தவை. இக்கல்லறைகள் (பூமிக்கு அடியில்) கிழக்கு மேற்கு திசையில் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்குப் பகுதியில் மற்றொரு சிறிய சதுரமான அறையும் காணப்படுகிறது. கல்லறையின் உட்பகுதி இரண்டு பகுதியாகத் தடுக்கப்பட்டுள்ளது. மேல் பகுதி ஒரே கருங்கல் பலகையால் மூடப்பட்டுள்ளது. கல்லறையின் இருப்பைக் குறிக்கும் வண்ணம் அதைச் சுற்றிலும் செம்புறைக் கற்கள் சுற்றுவட்டமாக வைக்கப்பட்டுள்ளன. சில கல்லறைகளில் சுற்று வட்டத்தினுள் நடுகல் போன்ற உயரமான கற்பலகை ஒன்றும் நட்டு வைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற கல்லறைகளை சித்தன்னவாசலில் காணலாம்.

இறந்தோரைப் புதைக்கும் முதுமக்கள் தாழிகளும் பூமியில் புதைந்து காணப்படுகின்றன. இவற்றின் வாய்ப்பகுதி ஒரு மூடியால் மூடப்பட்டிருக்கும். சில இடங்களில் கல்லறைகளின் உள்ளும் இதுபோன்ற தாழிகள் காணப்படுகின்றன. தாழி புதைக்கப்பட்டிருப்பதைக் குறிக்கவும் சுற்றுவட்டமாக கற்கள் நடப்பட்டுள்ளன.

இன்னும் சில இடங்களில் இறந்தோரின் நினைவுச் சின்னத்தை குறிக்கும் வகையில் செம்புறைக் கற்கள் போர் போன்று குவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (கலசக்காடு).

புதுக்கோட்டை பெருங்கற்சின்னங்களை அகழ்வாய்வு செய்ததில் கிடைத்த சில சிறப்புச் செய்திகள் வருமாறு:

1. இறந்தோர் உபயோகித்த மட்பாண்டங்கள், ஆயுதங்கள், ஆபரணங்கள் ஆகியன (ஈமப்பொருட்கள்) கல்லறைகள் மற்றும் முதுமக்கள் தாழிகளின் உட்பகுதியிலேயே காணப்படுகின்றன. 2. கல்லறைகளினுள் முதுமக்கள் தாழிகள் ஒற்றையாகவோ, இரட்டையாகவோ, கிழக்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற

தாழிகளின் உட்பகுதியில் ஈமப்பொருட்கள் காணப்படவில்லை. 3. அறைகளாக பிரிக்கப்பட்டுள்ள கல்லறைகள் புதுக்கோட்டைக்கே உரியதாகும். 4. பெருங்கற்கால புதைகுழிகளில் வண்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்கள் (painted) காணப்படுகின்றன. தமிழகத்தில் இதுபோன்று வேறு எங்கும் காணப்படவில்லை. 5. புதை குழிகளில் காணப்படும் கருப்பு-சிவப்பு, கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் வடிவமைப்பிலும், தொழில் நுட்பத்திலும் தனித்தன்மை வாய்ந்தவை. 6. கல்லறைகளிலும், புதைகுழிகளிலும் முதுமக்கட் தாழிகளிலும், மனித எலும்பின் எச்சங்கள் காணப்படவில்லை. புல்வயலில் தோண்டியெடுக்கப்பட்ட ஒரு தாழியில் மட்டும் மனித எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் சில இடங்களில் உள்ள கல்லறைகளில் எரிந்துபோன எலும்புத் துண்டுகளை ஒத்த பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 7. கல்லறைகளிலும், தாழிகளிலும் எலும்புகள் காணப்படாமையும், இறந்தோர் உபயோகித்த பொருட்கள் மட்டும் புதைக்கப்பட்டிருப்பதும், இங்கு அப்போது வாழ்ந்த மக்கள், ஆன்மீகத் தத்துவ நடைமுறைகளை விடுத்து வைதீகச் சடங்குகளைக் கைக்கொண்டதை காட்டுகிறது. அக்காலத்தில் புதுக்கோட்டையில் வேகமாகப் பரவி வந்த சமண மதத்தின் கோட்பாடுகளினால் இந்த மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும்.

இரும்புக்கால-பெருங்கற்கால-நாகரிகத்தின் ஆரம்ப காலம் கி.மு.600 வரை போகக்கூடும் என்று கருதப்படுகிறது. இந்த பண்பாடு சங்க காலத்திலும் ஆங்காங்கு நடைமுறையிலிருந்ததாக அக்கால இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. குறிப்பாக இறந்தோரை தாழியிலிட்டு புதைக்கும் முறை சங்க காலத்தில் பழக்கத்தில் இருந்த செய்தியை புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை போன்ற நூல்களிலிருந்து அறிகிறோம். இது முதுமக்கள் தாழி, ஈமத்தாழி முதுமக்கள் சாடி என குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்தோர் நினைவாக பள்ளிப்படை அமைத்த செய்தியும் காணப்படுகின்றது.

''மாயிரும் தாழி கவிப்பத்
தாவின்று கழிக வெற்கொல்லாக் கூற்றே''

என நற்றிணையும் (271)

''மன்னர் மறைத்த தாழி
வன்னி மரத்து விளங்கிய காடே''

எனப் பதிற்றுப்பத்தும் (44)

''கொடி நுடங்கு யானை நெடுமாவளவன்
தேவர் உலகம் எய்தினன் ஆதலின்
அன்னோற் கவிக்கும் கண் அகன்தாழி''

எனப் புறநானூறும் (228) கூறுவதைக் காண்க.

மணிமேகலை ஐந்து வகை ஈம முறைகளைக் குறிக்கிறது.

''சுடுவோர், இடுவோர், தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயினடைப்போர் தாழியிற் கவிப்போர்'' (6-11-66-67)

சுடுதல் (எரித்தல்) இடுதல் (இறந்தோரை விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் இறையாகத் தூக்கி எரிதல், இப்பழக்கம் இன்றும் பாரசீகர்களிடம் (Parsis) நடைமுறையில் இருப்பதைக் காணலாம்) தொடுகுழிப் படுத்தல் (பூமியில் குழிதோண்டிப் புதைத்தல்) தாழ்வயினடைத்தல் (கல்லறைகளில் புதைத்தல்) தாழியில் கவிழ்த்தல் (தாழியில் புதைத்தல்) இந்த ஐந்து முறைகளுமே அக்காலத்தில் புதுக்கோட்டையில் நடைமுறையிலிருந்திருக்க வேண்டும்.

புதைகுழித் தாழிகள் இன்றும் மதமதக்காத் தாழி, முதுமக்கள் தாழி என்றே வழங்கப்படுகிறது. கல்லறைகள், குரங்குப்பட்டரை என்றும் (ராமருடன் சென்ற குரங்குப்படை இதுபோன்று கற்களை குவித்து வைத்ததாக உள்ள கர்ணபரம்பரைக் கதை) பாண்டவக்குழி என்றும் (பஞ்சபாண்டவர்கள் ஒளிந்து வாழ்ந்த இடம்) நாட்டு வழக்கில் பேசப்படுகிறது. உண்மையில் குரங்குப்பட்டரை என்பது குரக்குப்படை என்பதின் திரிபேயாகும். நார்த்தாமலையிலுள்ள 13ம் நூற்றாண்டு கல்வெட்டு தாயினிப்பட்டியில் குரக்குப்படை நிறைந்த இடுகாடு பற்றித் தெரிவிக்கிறது. குரக்குப்படை என்பது புதைக்கப்பட்டக் கல்படுக்கை அல்லது கல்லறையைக் குறிக்கும் (ஒப்புநோக்குக-பள்ளிப்படை) பாண்டவக்குழி என்பது மாண்டவர் குழி என்பதன் திரிபு ஆகும்.

பெருங்கற்கால புதை குழிகளிலும், கல்லறைகளிலும் முதுமக்கள் தாழிகளிலும் மனித எலும்புக்கூடுகள் காணப்படாததற்கு காரணம் என்னவாக இருக்கும்? இறந்தோரின் சடலங்களை இவற்றில் புதைக்கும் பழக்கம் நாளடைவில் மாறி வேறு இடங்களில் எரித்தோ அல்லது புதைத்தோ (அல்லது இடுதல் முறையிலோ) அவ்விடங்களிலிருந்து ஒரு சில எலும்புத் துண்டுகளைச் சேகரித்து கல்லறைகளிலும் தாழிகளிலும் வைத்து (அவற்றுடன் இறந்தோர் உபயோகித்த பொருட்களையும் வைத்து) இறந்தோரின் நினைவுச் சின்னங்களாக மட்டும் இவை எழுப்பப்பட்டிருக்கக்கூடும் என்ற கருத்து வலுப்படுகிறது. அக்காலத்தில் நிலவிவந்த மதச் சடங்கு முறைகளையும் கூட, இதற்கு காரணமாகச் சொல்லலாம். சித்தன்னவாசல், தாயினிப்பட்டி, கலசக்காடு போன்ற இடங்களில் மிக அதிகமான எண்ணிக்கையில் இவ்வகை நினைவுச் சின்னங்கள் காணப்படுவது கவனிக்கத்தக்கது. இது அக்கால சமுதாய கூட்டு அமைப்பைக் காட்டுவதாகவும் அமையும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் பெருங்கற்கால புதைகுழிகளில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த

ஆய்வுகளில் கிடைத்த தாழிகள், மட்பாண்டங்கள், இரும்பு ஆயுதங்கள், கல்லாயுதங்கள், ஆபரணங்கள், மணி வகைகள், வளையல்கள் ஆகியன புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (மிகவும் வயதாகி எழுந்து நடமாட முடியாமல் உள்ளவர்களை முதுமக்கள் தாழிகளினுள் வைத்து அவர்கள் உண்பதற்குத் தேவையான உணவு வகைகளையும் வைத்து விடுவார்கள் என்றும், பின்னர், அவர்கள் அந்த பானைக்குள்ளேயே இருந்து இறந்து போவார்கள் என்றும் **இறந்ததும் அப்படியே புதைத்துவிடுவார்கள் என்றும் பலர் என்னிடம் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது** - ஆசிரியர் குறிப்பு)

மேலே கூறியவற்றிலிருந்து புதுக்கோட்டைப் பகுதியில் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களான பழைய கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம் போன்ற கால கட்டங்களில் நாகரிகம் படிப்படியாக உயர்ந்து அவ்வப்போது தென்னிந்தியாவின் பிற பகுதிகளில் பரவியிருந்த நாகரிக வாழ்க்கையுடனும் தொடர்பு கொண்டிருந்தது என்பதும் தெரிகிறது. இரும்புக் காலத்திற்குப் பிறகு நாகரிகம் துரிதமாக வளம்பெற்று கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னும் பின்னும் உள்ள நூற்றாண்டுகளில் செம்மையான வரலாறு துவங்குகிறது. கி.மு.3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகருடைய கல்வெட்டு சேர சோழ பாண்டியரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அதுவே தென்னிந்திய வரலாற்றுப் பாதையில் ஒரு முக்கிய காலகட்டமாகும். அதனைத் தொடர்ந்து பாண்டி நாட்டில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுகள் வரலாற்றுத் தொடக்க காலத்தின் அறுதியான சான்றாகத் திகழ்கின்றன.

## 6. பிராமிக் கல்வெட்டு

பிராமி (தமிழ்) கல்வெட்டு (எழுத்துக்கள்) சுமார் கி.மு.200 முதல் கி.பி.200 வரை வழக்கிலிருந்ததாக கல்வெட்டு வல்லுநர்கள் கருதுகின்றனர். தமிழ்மொழியை எழுதுவதற்கு பாமர மக்களிடம் இவ்வெழுத்துப் பரவலாக வழக்கத்திலிருந்தது. இக்கல்வெட்டுகளில் தூய தமிழ்ச் சொற்களும், பிராகிருத மொழிச் சொற்கள் சிலவும் காணப்படுகின்றன. சித்தன்னவாசல் ஏழடிப்பட்டம் என்னும் குகையில் பிராமி எழுத்துக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. கல்வெட்டு இந்த குகையின் தரையில் காணப்படும் வழவழப்பான ஒரு படுக்கையின் விளிம்பில் பொறிக்கப்பட்டுள்ளது.

> **''எருமியூர் நாடு குமுழூர் பிறந்த கவுடி இடன்கு**
> **சிறுபாவில் இளையர் செய்த அதிட்டானம்''.**

என்று இக்கல்வெட்டு படிக்கப்பட்டுள்ளது. அதாவது, எருமையூர் நாட்டில் குமுழூர் என்னும் ஊரில் பிறந்த கவுடிகன் என்னும் முனிவருக்கு சிறுபாவில் (அக்காலத்தில் சித்தன்னவாசல் சித்துப்போசில் என

அழைக்கப்பட்டது என்றும் இதுவே பின்னர் சிறுபாவில் என மருவியதாகவும் சிலர் கருதுகின்றனர்) என்னும் ஊரைச் சேர்ந்த இளையர் என்பான் செய்து அர்ப்பணித்த (கல்) படுக்கை (அதிட்டானம்) என்று பொருள்படும். 'நாடு' என்னும் பிரிவு அக்காலத்திலேயே வழக்கிலிருந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. உலக வாழ்க்கையை விடுத்து கடுந்தவம் மேற்கொண்ட சமண முனிவர்கள் இதுபோன்ற குகைகளைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்து வந்தனர். ஆகவே இந்தக் கல்வெட்டும் ஒரு சமண முனிவரையும் அவர்பால் அன்புகொண்ட ஒருவரையும் குறிப்பதாகும். சமண மதம் அக்காலத்திலிருந்தே புதுக்கோட்டைப் பகுதியில் தழைத்தோங்கி இருந்ததற்கான சான்று இதன்மூலம் நமக்கு கிடைக்கிறது. இக்காலத்திலும், பிற்காலத்திலும் எடுக்கப்பட்ட பல சமண சின்னங்களும், சிற்பங்களும் இடிந்துபோன சமணப்பள்ளிகளும் இங்கு நிறையக் காணப்படுகின்றன.

## 7. சங்ககாலம்

சங்ககால இலக்கியங்களில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பல ஊர்ப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களின் காலம் சர்ச்சைக்குறியதென்றாலும், இவை குறிப்பிடும் வரலாறு கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குரியது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும் இந்த இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளிலிருந்து இந்த மாவட்டத்தின் கோர்வையான வரலாற்றைத் தொகுப்பது கடினம் எனினும் சங்க காலத்தில் சிறப்பு பெற்றிருந்த பகுதிகளில் ஒன்றாகப் புதுக்கோட்டை திகழ்ந்தது என்பது விளங்கும்.

''தென்பாண்டிக்குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றியருவா வதன் வடக்கு நன்றாய
சீதமலாடு புனநாடு செந்தமிழ்ச்சேர்
ஏதமில் பன்னிரு நாட்டென்''

என்ற பழம்பாடலில் கூறப்பட்டுள்ள பன்றிநாடே சங்காலத்தில் புதுக்கோட்டைப் பகுதிக்குப் பெயராக இருந்தது. தமிழ்நாட்டின் பன்னிரு பகுதிகளுள் இதுவும் ஒன்று. பாண்டி நாட்டிற்கு வடக்குப் பகுதியாகவும், புனல் நாடு எனப்பட்ட சோழ நாட்டிற்கு தெற்குப் பகுதியாகவும் பன்றிநாடு அமைந்திருந்தது. ''ராஜராஜ வளநாட்டு பன்றியூர் அழும்பில்'' என்னும் பிற்காலச் சோழர் காலக் கல்வெட்டு இதனை உறுதிப்படுத்துகிறது. பன்றிநாடானது கோனாடு கானாடு என இரு பெரும் பிரிவுகளாக விளங்கியது. இது உறையூர் கூற்றம், ஒல்லையூர் கூற்றம், உறத்தூர் கூற்றம், மிழலைக் கூற்றம், கானக்கூற்றம் என ஐந்து கூற்றங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் கோனாடு நான்கு கூற்றங்களை உள்ளடக்கிக் கொண்டிருந்தது. வெள்ளாற்றிற்கு வடக்கே

இருந்த பகுதி வடகோனாடு என்றும், தெற்குப் பகுதி தென்கோனாடு என்றும் வழங்கியது. தென்கோனாட்டில் ஒல்லையூர் கூற்றம் அமைந்திருந்தது. ஒல்லையூர் கூற்றத்தில் ஒலியமங்கலம், மறவாமதுரை, காரையூர், கூடலூர், பனையூர் குளமங்கலம் ஆகிய ஊர்கள் அடங்கியிருந்தன. கானாட்டில் மிழலைக்கூற்றத்தின் ஒருபகுதியும் அதளையூர் கூற்றமும் உடையதாக விளங்கியது. கானாடு விரையாச்சிலையிலிருந்து தொடங்கி தெற்கே தேவகோட்டை திருவாடானை வரை பரவி இருந்ததாகத் தெரிகிறது. பிற்காலத்தில் இது முதலாம் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயரான விருதுராஜ பயங்கரநாடு என வழங்கப்பட்டது.

ஒல்லையூரை வெற்றிகொண்ட ஒல்லையூர் தந்த பூதபாண்டியன் என்னும் பாண்டிய மன்னனின் சிறப்பு புறநானூறு 71-வது பாடலில் கூறப்படுகிறது. அகநானூற்றில் 25-வது பாடல் இவன் பாடியதாகும். இவனது மனைவி பெருங்கோப்பெண்டு சிறந்த கற்பினள். பாண்டியன் இறந்த பிறகு இவள் தீயில் வீழ்ந்து மாண்டாள். புறநானூறு 246, 247 வது பாடல் இவள் பாடியதாகும். ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் (புறம் 242) இருங்கோள் ஒல்லையாயன் செங்கண்ணனார் (அகம் 279) ஆகியோரும் ஒல்லையூரைச் சேர்ந்தவர்களே. இப்பெருமைகளைப் பெற்றிருந்த ஒல்லையூர் இன்று திருமயம் வட்டத்தில் ஒலியமங்கலம் என்ற பெயரோடு தனது சீரையும் சிறப்பையும் இழந்து சிற்றூராக நிற்கிறது.

புறநானூறு 283-வது பாடலிலும், அகநானூறு 44-வது பாடலிலும் குறிப்பிடப்படும் ''அழும்பில்'' ஆலங்குடி வட்டத்தில் ''அம்புக்கோவில்'' என்ற பெயரோடு விளங்குகிறது.

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் என்னும் பெரும்புலவர் புறநானூறு 54, 61, 167, 180, 197, 394 ஆகிய பாடல்களைப் பாடியவர். மதுரைக் குமரனாரின் ஊரான எறிச்சிலூரே தற்போது அறந்தாங்கி வட்டத்திலுள்ள ''எறிச்சி'' என்ற ஊராகும்.

ஆவூர்கிழான் (புறநானூறு 322) ஆவூர் மூலங்கிழார் (புறநானூறு 38, 40, 166, 177, 178, 196, 261, 301 அகநானூறு 24, 81, 143) ஆவூர்கிழான் மகன் கண்ணனன் (அநானூறு 202) ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருஞ்சாத்தன் (அகநானூறு 13, 224) ஆகியோர் குளத்தூர் வட்டத்திலுள்ள ஆவூரைச் சேர்ந்தவர்கள்.

புறநானூறு 87 முதல் 103 முதலான 33 பாடல்களையும் அகநானூறு 11, 147, 273, 303 ஆகிய பாடல்களையும் பாடிய அவ்வையார் இருந்த இடம் குளத்தூர் வட்டத்திலுள்ள அவ்வையாப்பட்டி ஆகும்.

கடற்கரையைச் சார்ந்த நாடாக புறநானூறு 24-வது பாடலில் கூறப்படுவது மிழலைக் கூற்றம். இக்கூற்றத்தினுள் அடங்கியிருந்த மணமேல்குடி, பொன்பற்றி முதலான ஊர்கள் அறந்தாங்கி வட்டத்திலும், பராந்தக நல்லூர், வாளவர் மாணிக்கம் முதலான ஊர்கள் திருமயம் வட்டத்திலும் உள்ளன.

சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவரும், நெல்வேலிவென்ற சீர் நெடுமானார்க்கு அமைச்சருமான குலச்சிறை நாயனாரது ஊர் மணமேல்குடி. வீரசோழித்தின் ஆசிரியர், புத்தமித்திரன் ஆண்ட ஊர் பொன்பற்றி. (பொன்பேத்தி)

பண்டைக் காலத்திலும், பிற்கால சோழர்காலத்திலும், கோட்டைக் கொத்தளங்களுடன் சிறந்து விளங்கிய கொடும்பாளூர், தற்போது ஒரு சிற்றூராய் ஏக்கப் பெருமூச்சுடன் காட்சியளிக்கிறது. இந்நகரின் சிறப்பு சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிறது. கோவலனுக்கு மதுரைக்குரிய வழியை கூறப்போந்த மாங்காட்டு மறையோன், அவ்வழியிடை வருவதும் அதனின்று மதுரைக்குச் செல்வதற்கு பிரிகின்ற வழிகளைக் கொண்டதுமான கொடும்பாளூரை இப்படிக் குறிப்பிடுகிறான்.

''கொடும்பை நெடுங்குளக்கோட்டகம் புக்காற்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய் சூலத்து அருநெறி கவர்க்கும்''

(மதுரைக்காண்டம் - காடுகாண்காதை, 71-73) சிலப்பதிகாரக் காலத்தில் உறையூர் மதுரை நெடுஞ்சாலையில் கொடும்பாளூர் இருந்தது என்றும் இங்கிருந்துதான் மதுரைக்கு மூன்று வழிகள் பிரிந்து சென்றன என்றும் அறிகிறோம்.

சங்க காலத்தில் இம்மாவட்டத்தின் தென்பகுதி சங்க பாண்டியப் பேரரசிலும், வடபகுதி உறையூர்-சோழப் பேரரசிலும் உட்பட்டிருந்தன. பல ஊர்கள் இன்றும் கிள்ளி, வளவன் போன்ற அடைமொழிகளுடன் விளங்குகின்றன. (கிள்ளுக்கோட்டை, கிள்ளனூர், வளவமங்கலம்) சங்க இலக்கியங்களில் காணப்படும் ஊர்ப் பெயர்களை இம்மாவட்டத்திலுள்ள ஊர்களோடு தொடர்பு படுத்திக் காட்டுவதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கவே செய்கிறது. இருப்பினும் மாவட்டத்தின் நிலவியல் அமைப்பு, அரசியல் வரலாறு மற்றும் இதர கலாச்சாரச் சான்றுகளைத் தொடர்பு படுத்தி நோக்கும்போது மேலே குறிப்பிட்டுள்ள ஊர்ப் பெயர்கள் இம்மாவட்டத்திற்கு தொடர்புடையன என்றே சொல்லலாம்.

சங்க காலத்தில் நடந்துவந்த கடல் கடந்த வாணிபத்தில் புதுக்கோட்டைப் பகுதி வணிகர்களும் ஈடுபட்டிருந்தனர். மேற்கு கடற்கரைப் பகுதியிலிருந்து கிழக்குக் கடற்கரை பட்டிணங்களுக்கு, ஏற்றுமதிப் பொருட்கள் புதுக்கோட்டைப் பகுதி வழியாகக் கொண்டு செல்லப்பட்டன என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[3]

# 8. புதுக்கோட்டையிலே ரோமாபுரி

திரைகடலோடி திரவியம் தேடிய பண்டைய தமிழர்களின் வரிசையில் புதுக்கோட்டை வணிகர்களும் இடம் பெறுகின்றனர். யவனம், புட்பகம், சாவகம், சீனம் முதலான நாடுகளுடன் தமிழன் வணிக, கலை கலாசாரத் தொடர்பு கொண்டிருந்ததை சங்கால இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட டாலமி, பிலினி போன்ற மேல்நாட்டவரின் குறிப்புகள் தமிழனின் கடல் கடந்த வணிகக் சிறப்பினையும், தமிழகத்து துறைமுகங்களைப் பற்றிய செய்திகளையும் குறிப்பிடுகின்றன. மிளகு, முத்து, மணிவகைகள், பருத்தி, பட்டுத்துணி வகைகள். மற்றும் பல பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

புதுக்கோட்டைப் பகுதியிலிருந்து பருத்தியும், பட்டு மென்துகிலும், நல்லெண்ணையும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தெரிகிறது. புதுக்கோட்டை வணிகர்கள் ரோமாபுரி வணிகர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக ஆலங்குடிக்கு அருகிலுள்ள கருக்காக்குறிச்சியில் ரோம பொன் நாணயங்கள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[1]

இந்த நாணயங்கள் கி.மு.29-க்கும் கி.பி.79-க்கும் இடைப்பட்ட காலத்தவை. ரோம் நாட்டு வரலாற்றில் புகழ்பெற்ற பல மன்னர்களின் நாணயங்கள் இவற்றுள் அடங்கியுள்ளன. இந்த நாணயங்கள் தமிழகத்தில் செலாவணியில் இல்லாவிட்டாலும் தங்கத்தின் மதிப்பிற்காக பாதுகாக்கப்பட்டு வந்தது. (செலாவணியில் இருந்ததாக எட்கார் தர்ஸ்டன் குறிப்பிடுகிறார்).

கருக்காக்குறிச்சியில் 1898-ல் ஒரு கிணறு வெட்டும்போது 501 ரோம பொன் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றைப் புதைத்து வைத்தது, ஒரு பெரு வணிகனாக இருந்திருக்கக்கூடும். இந்த நாணயங்களில் பெரும்பாலானவை உருக்குலைந்த நிலையிலிருந்தன. செலாவணிக்கு தகுதி இல்லாத நிலையிலோ, அல்லது தங்கத்தின் மதிப்பிற்காகவோ இவை பாதுகாப்பாக புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம். இந்த நாணயங்களில் காணப்படும் ரோம நாட்டு மன்னர்களின் விவரம் வருமாறு.

1. அகஸ்டஸ் சீசர் (கி.மு.29-கி.பி.14) 2.டைபீரியஸ் சீசர் (கி.பி.14-37) 3. நீரோ ட்ருசஸ் (கி.மு.38-கி.பி.9) 4. அந்தோனியா (ட்ருசஸ் மனைவி) 5. ஜெர்மானிக்கஸ் 6. அக்ரிபின்னா (ஜெர்மானிக்கஸ் மனைவி) 7. காலிகுலா (கி.பி.37-41) 8.டைபிரியஸ் க்ளாடியஸ் (கி.பி.41-54) 9. நீரோ (கி.பி.54-68) 10. வெஸ்பாசியானஸ்

(கி.பி.69-79). நல்ல நிலையிலிருந்த நாணயங்கள் பெரும்பாலானவை தற்போது இங்கிலாந்து நாட்டு அருங்காட்சியகங்களில் உள்ளன. மீதமுள்ளவை சென்னை, புதுக்கோட்டை அருங்காட்சியகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டைப் பகுதி வணிகர்கள் ரோம்நாட்டு வணிகர்களுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டுமென்பதையும் அக்கால செல்வச் சிறப்பையும், நாகரிகத்தின் வளர்ச்சியையும் இந்த நாணயங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

## 9. களப்பிரர் ஆட்சி (சுமார் கி.பி.300-590)

சங்ககாலத்தின் இறுதியில் தமிழக வரலாற்றில் ஒருவித இருள் சூழ்ந்து கொண்டது. தொன்றுதொட்டு தமிழகத்தில் ஆட்சி செலுத்திய சேர, சோழ, பாண்டியரை களப்பிரர் என்ற ஒரு கூட்டத்தினர் வென்று தங்களது ஆட்சியினை நிலை நிறுத்தினர். தமிழகத்தில் பெரும் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. ஏறத்தாழ 300 ஆண்டுகள் தமிழகத்தை தடுமாறச் செய்த களப்பிரர் யார் என்பதுபற்றி அறிஞர்களிடையே வண்டி வண்டியாக கருத்து வேற்றுமை உண்டு. ஆனால் அண்மைக்கால ஆய்வுகளின்படி இவர்கள் கன்னட நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது. பெரியபுராணம், கல்லாடம், தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்கலம் போன்ற தமிழ் இலக்கியச் சான்றுகளும், கன்னட நாட்டில் சிரவணபெலகோலா போன்ற பகுதிகளில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் மேற்சொன்ன கருத்திற்கு வலுவூட்டுகின்றன. களப்பிரருடைய ஆட்சி தமிழக அரசியலில் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தியதோடல்லாமல் சமயம், சமுதாயம், கலாச்சாரத் துறைகளிலும் சில புரட்சிகரமான மாறுதல்களைத் தோற்றுவித்தது. களப்பிரர் வைதீக மதங்களுக்கு எதிராகவும், பௌத்தம், சமணம் ஆகிய மதங்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டதன் காரணமாக தொன்றுதொட்டு வந்த பல சமயக் கோட்பாடுகள் பாதிக்கப்பட்டன. பாண்டிய நாட்டில் சமணத்தின் செல்வாக்கு அதிகரித்தது.[4] களப்பிரரைப் பற்றியோ அவர்களது ஆட்சிபற்றியோ முழுமையான விவரங்கள் கிடைக்காத காரணத்தால் தமிழக வரலாற்றில் இக்காலத்தை ஒரு இருண்ட காலமாகவே கருதுகின்றனர்.

பாண்டியரின் ஆளுகைக்குட்பட்டிருந்த புதுக்கோட்டைப் பகுதியும் களப்பிரரின் ஆளுகைக்குட்பட்டு, தமிழகத்தின் பிற பகுதிகளைப் போன்றே வரலாற்று இருளில் சிக்கிக் கொண்டது. புதுக்கோட்டைப் பகுதியும் களப்பிரரின் ஆட்சியில் இருந்ததென்பதற்கு ஆதாரமாக, தமிழ்நாடு தொல்பொருளாய்வுத் துறையினர், புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதிக்கு அருகிலுள்ள

பூலாங்குறிச்சியில், இவர்களது (களப்பிரர்களது) கல்வெட்டுகளைக் கண்டுபிடித்துள்ளனர். இக்கல்வெட்டின் காலம் கி.பி.442 எனக் கருதப்படுகிறது.[5] கோச்சேந்தன் கூற்றன் என்னும் மன்னனது பெயரில் இக்கல்வெட்டு உள்ளது. ஒல்லையூர் கூற்றம் (திருமயம் வட்டம், ஒலியமங்கலம் பகுதி) முத்தூற்றுக் கூற்றம் (அறந்தாங்கி, திருவாடனை பகுதி) ஆகிய பகுதிகள் அவனது ஆளுகைக்குட்பட்டிருந்ததாக இக்கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது. களப்பிரரைப் பற்றி சில செய்திகளை ஆதாரபூர்வமாக தெரிந்து கொள்வதற்கு துணைபுரியும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு புதுக்கோட்டைக்கு அருகிலிருப்பதும் இப்பகுதியின் சில ஊர்ப் பெயர்களை குறிப்பிடுவதும் தமிழக வரலாற்று ஆய்வுகளுக்கு பேருதவியாக இருக்கிறது.

## 10. முதல் பாண்டியப் பேரரசு

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டுவரை தமிழகப்பகுதி, களப்பிரரின் ஆளுகையிலிருந்தது. அவர்களிடமிருந்து பாண்டியன் கடுங்கோன் பாண்டி நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றினான். பாண்டியன் நெடுஞ்சடையனின் வேள்விக்குடி செப்பேடு இதைப்பற்றிக் குறிப்பிடுகிறது. கடுங்கோன் கி.பி.590 முதல் 620 வரை ஆட்சி செய்தான். இவனது ஆட்சி புற்றிய மற்ற செய்திகளைத் தெரிந்து கொள்ள இயலவில்லை. இவனது காலத்தில் பாண்டியர் சிற்றரசர்களாக இருந்து வந்திருக்க வேண்டும். வேள்விக்குடி செப்பேடு, கடுங்கோன் களப்பிரரை துரத்தியடித்த செய்தியைத் தவிர அவனது மற்ற முன் வரலாறு பற்றி எதுவும் கூறவில்லை. தளவாய்புரச் செப்பேடுகளும் இதை உறுதி செய்கின்றன.

ஏறத்தாழ இதே சமகாலத்தில் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு (கி.பி.575-600) தொண்டைமண்டலத்தில் களப்பிரரை வென்று அங்கு பல்லவர் ஆட்சியை ஏற்படுத்தினான்.

புதுக்கோட்டை பகுதி பாண்டியன் கடுங்கோனின் ஆளுகைக்குட்பட்டது. அவனது மேலாண்மைக்குட்பட்டு முத்தரையர் போன்ற குறுநில மன்னர்கள் இப்பகுதியை ஆண்டிருக்க வேண்டும். கடுங்கோன் மற்றும் அவனைத் தொடர்ந்து ஆண்ட மன்னர்களைப் பற்றிய குறிப்புகளை இங்கு காணமுடியவில்லை. ஆனால் கி.பி.8ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இப்பகுதியில் பாண்டியர் காலத்து கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

கோச்சடையன் ரணதீரன் (கி.பி.710-740) காலத்துக் கல்வெட்டு குடுமியான்மலை மேலைக்கோயிலில் காணப்படுகிறது.[6] இதற்கு அடுத்து, மாறன் சடையன் காலத்துக் (கி.பி.765-815) கல்வெட்டு திருக்கோகர்ணத்திலும்[7] குடுமியான்மலையிலும்[8] நீர்ப்பழனியிலும்[9] கவிநாட்டுக் கண்மாயிலும் காணப்படுகின்றன. மாறன் சடையனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் காலத்தில் தான்

(கி.பி.815-862) சித்தன்னவாசல் ஓவியங்கள் தீட்டப்பட்டன. இதன்பின் வரகுணவர்மன் கி.பி.862 முதல் 880 வரை ஆண்டுவந்தான். இவனது காலத்தில் சோழர் மற்றும் பல்லவர் கை ஓங்கியிருந்தது. சோழ-பல்லவ படையிடம் இவன் திருப்புரம்பியம் போரில் தோற்றுப் போனான். இவனுக்குப்பின் பராந்தக வீர நாராயணனும் (கி.பி.880-900) அதன்பின் இரண்டாம் மாறவர்மன் ராஜசிம்மனும்* (கி.பி.900-920) ஆட்சி செய்தனர். இவர்களது காலத்தில் பாண்டியப் பேரரசு மெள்ள மெள்ள சோழர்களின் ஆதிக்கத்திற்கு வந்தது. முதல் பாண்டியப் பேரரசின் கடைசி மன்னன் வீரபாண்டியன் ஆவான். (கி.பி.946-966) இறுதியாக இவன் இரண்டாம் ஆதித்த சோழனால் முறியடிக்கப்பட்டான். இத்துடன் முதலாம் பாண்டியப் பேரரசும் முடிவுக்கு வந்தது. இதன்பின் பாண்டியகுலத்தைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கே சிற்றரசர்களாக இருந்திருக்க வேண்டும்.

## 11. பல்லவர்

தொண்டை மண்டலத்தில் கி.பி.575 வாக்கில் (களப்பிரரை வென்று) பல்லவரின் ஆட்சியை நிறுவிய சிம்மவிஷ்ணுவின் பரம்பரையினருக்கும், முதலாம் பாண்டியப் பேரரசைச் சேர்ந்த பாண்டியர்களுக்கும் அரசுரிமை குறித்த ஆதிக்கப் போர்கள் நடந்து கொண்டேயிருந்தன. கி.பி.7-ம் நூற்றாண்டின் முடிவில் காவிரிக் கரையின் வடக்குப் பகுதிவரை பல்லவப் பேரரசின் ஆளுகைக்குட்பட்டது. ஆனால் புதுக்கோட்டைப் பகுதியில் கி.பி.8ம் நூற்றாண்டில் ஆட்சி செய்து வந்த பல்லவ மன்னர்களின் கல்வெட்டுகள் மட்டுமே கிடைக்கின்றன. இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் (கி.பி.710-765) மூன்றாவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று குன்னாண்டார்கோவிலிலும்[10] மற்றொன்று ராசாளிப்பட்டியிலும்[11], காணப்படுகிறது. இக்காலத்திலேயே முதன் முதலில் பல்லவராட்சி இப்பகுதியில் ஏற்பட்டிருக்க வேண்டும். தந்திவர்மன் காலத்து (கி.பி.775-826) கல்வெட்டுகள் குன்னாண்டார்கோவிலிலும்[12], மலையடிப்பட்டியிலும்[13], நிருபதுங்கவர்மன் காலத்து (கி.பி.849-875) கல்வெட்டு நார்த்தாமலையிலும்[14] காணப்படுகின்றன. மேற்சொன்ன கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டும், வேள்விக்குடி, சின்னமனூர் செப்பேட்டுச் செய்திகளைக் கொணடும் புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகளில் பல்லவர் ஆட்சி பரவியிருந்ததையும், மேலும் பல்லவராட்சியிலும் பாண்டியராட்சியிலும் மாறிமாறி இருந்தவந்த செய்தியையும் தெரிந்து கொள்ள முடிகிறது. தமிழகத்தை ஆண்ட மன்னர்களின் ஆட்சி நிலையை நிர்ணயித்த போர்க்களங்கள் புதுக்கோட்டையில் நிறைய உண்டு.

பல்லவ மன்னர்களின் மேலாண்மைக்குட்பட்டு புதுக்கோட்டை பகுதியை முத்தரையர் என்னும் குறுநில மன்னர்கள் ஆண்டு வந்துள்ளனர். முத்தரையரின் ஆட்சி, நிவந்தங்கள், பொதுப்பணிகள்

ஆகியன குறித்த செய்திகள் இங்கு நிறைய காணப்படுகின்றன. இவர்களால் கட்டப்பட்ட பல கோயில்களும் காணப்படுகின்றன.

கி.பி.7-ம் நூற்றாண்டிலிருந்து 9-ம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் இப்பகுதி பாண்டியர் மற்றும் பல்லவராட்சிக்குட்பட்டிருந்த செய்தியைக் கண்டோம். இப்பகுதியில், அம்மன்னர்கள் தங்களது அரசியல் திறனை மட்டும் காட்டவில்லை. தங்களது கலை வண்ணத்தைக் காட்டுவதில் போட்டியிட்டுக் கொண்டு பல புதிய பாணிகளை உள்ளடக்கிய கலைச்சின்னங்களை உருவாக்கியிருக்கின்றனர். அழியும் பொருட்களில் கோயில் கட்டுவதை விடுத்து பாறையைக் குடைந்து கோயில் எடுக்கும் பழக்கத்தை முதன் முதலில் மகேந்திர வர்ம பல்லவன் தமிழகத்தில் அறிமுகம் செய்தான். புதுக்கோட்டை மாவட்டத்தில் 15 குகைகோவில்கள் உள்ளன. இவையனைத்தும் பல்லவ மன்னர்களாலும், பாண்டிய மன்னர்களாலும், அவர்களது மேலாண்மைக்குட்பட்டு ஆண்டுவந்த குறுநில மன்னர்களாலும் குடைவிக்கப்பட்டவை. சித்தன்னவாசல் ஓவியங்களும் இக்காலத்தைச் சேர்ந்ததே. இந்த ஓவியங்கள் பாண்டியரின் படைப்பு. (பல்லவ மகேந்திரவர்மன் காலத்தது அல்ல)

ஏறத்தாழ இதே காலத்தில் குகைகோவில் பாணியை அடுத்து ஓரடுக்குக் விமானம் கொண்ட சிறிய கோபுரங்களை (கல்லினால்) கட்டும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டது.[1] இதுபோன்ற, கலைப்பாணியில் காலத்தால் முந்திய சிறிய ஓரடுக்குக் விமானம் கொண்ட கோயில்கள் காளியாப்பட்டி, திருப்பூர், ஏனாதி, ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் இக்காலத்தைச் சேர்ந்த கலைச் சின்னங்கள் (கோயில்கள், சிற்பங்கள்) தமிழக கோயில்கட்டிடக்கலை வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தைப் பெறுகின்றன.

## 12. முத்தரையர்

தமிழகத்து வரலாற்றுக் கதாபாத்திரங்களில் முத்தரையர் குறிப்பிடத்தக்கவராவர். புதுக்கோட்டைப் பகுதியில் பல்லவராட்சி நிலைக்க உறுதுணையாக நின்றவர்கள் இவர்களே. தமிழகத்தின் தொன்மைக் கலைக்கு புத்துயிரூட்டிய இவர்களது புகழுக்கு புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள இவர்கள் காலத்துக் கோயில்களும், கலைச் சின்னங்களும் முத்தாய்ப்பாய் விளங்குகின்றன.[15]

முற்காலத்தில் பெருநிலக் கிழார்களாக வாழ்ந்து வந்த முத்தரையர்[16] தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை பகுதிகளில் பல்லவ மன்னர்களின் மேலாண்மைக்குட்பட்ட குறுநில மன்னர்களாக ஆளத் தலைப்பட்டனர். தஞ்சாவூர்-திருக்காட்டுப்பள்ளிக்கு அருகே உள்ள நியமம் என்ற கிராமம், அக்காலத்தில் சந்திரலேகை சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில்

முத்தரையரது ஆட்சியின் முக்கிய நகரமாக இருந்து வந்தது. இவர்களது வம்சாவளி பற்றிக் கூறும் கல்வெட்டுகள் அங்கே காணப்படுகின்றன. கல்வெட்டுகளில் காணப்படும் காலத்தால் முந்திய முத்தரைய மன்னன், குவாவன் மாறன் பெரும்பிடுகு முத்தரையன் என்பவனாவான். கிடைத்துள்ள கல்வெட்டுக்களைக் கொண்டு இவர்களது தொடர்ச்சியான வம்சாவளி பற்றித் தெரிந்து கொள்ள இயலாவிட்டாலும், மன்னர்களாக விளங்கிய பலரது பெயர்களையும் அவர்களது துணைவியர் மற்றும் மக்கள் பற்றிய செய்திகளையும் அவர்கள் அளித்த கொடைகள் குறித்த விவரங்களையும் அறிந்து கொள்கிறோம்.

முத்தரையரின் தோற்றுவாய் பற்றி அறிஞர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடு உண்டு. முத்தரையர் களப்பிரர்களின் கிளைக்குடியினர் என டாக்டர் எஸ்.கே. அய்யங்கார் போன்ற பல அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் களப்பிரர் என்ற சொல்லிலிருந்து முத்தரையர் என்ற சொல் எப்படி வந்தது என்பது விளங்கவில்லை. தமிழகத்தின் கலை, கலாச்சாரம், சமய சடங்குகள், பண்பாடு அனைத்தையும் நிலைகுலையச் செய்த களப்பிரரையும் கலைக் காவலர்களாக காட்சியளிக்கும் முத்தரையரையும் தொடர்பு படுத்துவது பொருத்தமுடையதா? முத்தரையர் என்போர் பல்லவரே என வேங்கடசாமி நாட்டாரும், கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என ராகவ அய்யங்காரும் கூறுகின்றனர்.

முத்தரையர் ஆரம்ப காலத்தில் பாண்டிநாட்டு முத்துக்குளிக்கும் துறைமுகப் பகுதிகளில் ஆட்சி செய்திருக்க வேண்டும். முத்து + அரையர் = முத்தரையர். (அரையர் என்றால் நாடாள்வோர் என்று பொருள், அரையனா யமருளகமாள்வதற்கு - தேவாரம் -648-4) முத்தரையர், மாறன், மீனவன், தென்னவன் போன்ற பாண்டியரின் குடிப் பெயர்களைப் பெற்றிருந்த செய்தியை புதுக்கோட்டை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. செந்தலைக் கல்வெட்டில் முத்தரையரின் கொடிச் சின்னம் 'கயல்' எனக் காணப்படகிறது. (பொருகயல் சேர் வெல் கொடியோன்) கயல் (மீன்) பாண்டியரின் சின்னம். மேற்கண்ட கருத்துக்களை கூர்ந்து ஆய்வு செய்யும்போது முத்தரையர் பாண்டியரின் கிளைக்குடியினராக இருந்திருக்க வேண்டும் எனற கருத்து மேலோங்கி நிற்கிறது. இவர்கள் கொடும்பாளூர் வேளிருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களாகவும் இருக்க வேண்டும். ஏனெனில் இவ்விரு மரபினரும் மண உறவுகள் கொண்டிருந்த செய்தியினை குடுமியான்மலை கல்வெட்டு தெரிவிக்கிறது.[17]

முத்தரையர் பாண்டியரின் கிளைக்குடியினர் ஆயினும், இவர்கள் பல்லவர் ஆட்சிக்கு பக்கபலமாக இருந்து பாண்டியரை எதிர்த்து போரிட்டிருக்கின்றனர். தங்கள் அரசியல் மேலாண்மையாளர்களான

பல்லவரின் பட்டப் பெயர்களான விடேல் விடுகு, பெரும்பிடுகு, மார்ப்பிடுகு, பகாப்பிடுகு (பிடுகு = இடி) போன்ற பட்டங்களை தங்களது பெயர்களுடன் சேர்த்து வைத்துக் கொண்டனர்.

முத்தரையர் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள பிற இடங்களைவிட - நிறைந்த அளவு கல்வெட்டுகளும், கோயில்களும் புதுக்கோட்டை மாவட்டத்தில் காணப்படுகின்றன. இன்றும் அவர்கள் புகழ் பாடிக் கொண்டிருக்கும் கோயில்கள் பற்றிய சில செய்திகளை இங்கு காண்போம்.

**திருமயம் - சத்தியமூர்த்தி கோவில் :** இது ஒரு குகைக்கோவில். இங்கு விஷ்ணு யோக சயனமூர்த்தியாக காட்சியளிக்கிறார். முத்தரைய மன்னன் சாத்தன்மாறனின் தாயார் பெரும்பிடுகு பெருந்தேவி-எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்த குகைக் கோயிலைப் புதுப்பித்து அதன் பராமரிப்பிற்கு நன்கொடைகள் வழங்கிய செய்தியை இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.[18]

**மலையடிப்பட்டி: வாகீஸ்வரர் கோயில் :** குளத்தூர் வட்டம் மலையடிப்பட்டியில் குவாவன் சாத்தன் என்னும் விடேல்விடுகு முத்தரையன், பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் வாகீஸ்வரருக்கு (சிவன்) குகைக்கோயில் எடுப்பித்து, நன்கொடைகள் வழங்கிய செய்தி தெரியவருகிறது.[19]

**நார்த்தாமலை:** இங்குள்ள மேல மலையில் உள்ள பழியிலி ஈச்சுரம் என்னும் குகைக் கோயிலும், விஜயாலய சோழீச்சுரம் என்னும் கட்டுமானக் கோயிலும் முத்தரையரது படைப்பாகும். பல்லவ மன்னன் நிருபதுங்கவருமன் இப்பகுதியில் ஆட்சி செலுத்தியபோது விடேல் விடுகு முத்தரையனின் மகன் சாத்தம்பழியிலி என்பான் ஒரு சிறிய குகைக்கோவிலை எடுப்பித்தான். அவனது பெயரால் இது பழியிலி ஈச்சுரம் என அழைக்கப்படுகிறது. சாத்தம்பழியிலியின் மகளும் மல்லன் அனந்தனின் மனைவியுமான சிறிய நங்கை இக்கோயிலுக்கு முகமண்டபம், நந்தி மண்டபம், பலிபீடம் ஆகியவைகளைச் சேர்த்தாள் என இங்குள்ள கல்வெட்டினால் அறிய முடிகிறது.[20]

தமிழகக் கோயில் கட்டிடக்கலை வரலாற்றில் தனியொரு இடத்தைப் பெறும் விஜயாலய சோழீச்சுரம் சாத்தம்பூதி என்னும் முத்தரைய மன்னனால் எடுக்கப் பெற்றதென்பதையும் பின்னர் இக்கோயில் மழையால் அழிந்துபோக, மல்லன் விதுமன் என்னும் தென்னவன் தமிழதிரையன் புதுப்பித்தான் என்பதையும் இக்கோயில் துவாரபாலகர் சிற்பத்தின் அடியில் உள்ள கல்வெட்டால் தெரிந்து கொள்கிறோம். இதில் குறிப்பிடப்படும் மல்லன் விதுமன்(அனந்தன்) பழியிலி ஈச்சுரத்தை எடுப்பித்த சாத்தன் பழியிலியின் உறவினனாக இருக்க வேண்டும்.

மேலமலைக்குச் செல்லும் வழியிலுள்ள அனிமத ஏரிக்கு தமிழதிரையன் என்னும் மல்லன் விதுமன் (விஜயாலய சோழீச்சுரத்தை புதுப்பித்தவன், அணை(கரை) கட்டுவித்தான் என்று இங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. அனிமத ஏரி என்பது தற்போது அருமைக்குளம் என்று வழங்கப்படுகிறது.

**பூவாலைக்குடி:** புஷ்பவனேஸ்வரர் கோயில் என்றழைக்கப்படும் இக்கோயிலின் ஆதிகாலப் பெயர் பரமேஸ்வரர் கோயில் என இங்குள்ள பரகேசரி வர்மன் (சோழர்) காலத்துக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[21] இக்கோயிலை பூதிகளரி என்னும் அமருன்றி முத்தரையன் எடுப்பித்தான். இவன் நார்த்தாமலை விஜயாலய சோழீச்சுரத்தை எடுப்பித்த சாத்தன் பூதியின் மகனாக இருக்கலாம் என்றுக் கருதப்படுகிறது. ஆனால் சாத்தன் பூதியும், பூதிகளரியும் ஒருவரே என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

கீரனூரிலும், மேலத்தாணயத்திலும் உத்தமதானீஸ்வரர் என்னும் பெயரில் சிவன் கோயில்கள் உள்ளன. (இவற்றுள் கீரனூரில் உள்ள கோயில் உத்தமநாதேஸ்வரர் கோயில் என்று தற்போது வழங்கப்படுகிறது). உத்தமதானி என்பது இளங்கோ முத்தரையன் என்பானது பட்டப் பெயராகும். மேற்சொன்ன இரண்டு கோயில்களையும் எடுப்பித்தவன் இம் முத்தரைய மன்னனாவான். இவன் முதலாம் ஆதித்த சோழனது (கி.பி.871-898) சமகாலத்தவனரவான். இக்கோயில்களின் கட்டக்கலைப் பாணியை காளியாப்பட்டி, ஏனாதி, திருப்பூர், விசலூர், விராலூர், பனங்குடி ஆகிய இடங்களிலுள்ள கோயில்களின் அமைப்புடன் ஒத்து நோக்கும்போது இப்பகுதியின் கோயில் கட்டிடக்கலை வளர்ச்சி வரலாற்றினைத் தெரிந்து கொள்ள இயலும்.

முத்தரையர் ஆரம்பத்தில் சமண மதத்தை ஆதரித்திருக்கின்றனர். திகம்பர தரிசனம் என்னும் சமண நூல், முத்தரையர், பாண்டிய நாட்டை ஆண்டுவந்த போது, மதுரையில் சமண சங்கம் ஒன்று கூடியதாக குறிப்பிடுகிறது. ஆனால் பிற்காலத்தில் வைதீக மதத்தை பின்பற்றி இருக்கின்றனர். சைவ, வைணவ கோயில்கள் பல எடுப்பித்துள்ளதும், அவற்றிற்குப் பெரும் கொடைகள் அளித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

முத்தரையர் தமிழ் இலக்கியப் பற்றுடையவர்களாகவே காட்சியளிக்கின்றனர். நாலடியாரில் இரண்டு பாடல்களில் (200, 296) முத்தரையர் குறிப்பிடப்பட்டுள்ளனர். தமிழ் முத்தரையர் கோவை என்ற ஒரு நூல் இருந்ததாக யாப்பெருங்கல விருத்தி உரை கூறுகிறது.

விசயாலய சோழன் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சோழப் பேரரசை நிலைநிறுத்தியபோது, தஞ்சாவூர் பகுதிகளைப் பெரும்பிடுகு முத்ரையன் என்பானிடமிருந்து கைப்பற்றியதாகத் திருவாலங்காடுச் செப்பேடு குறிப்பிடுகிறது.

இக்காலத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் முத்தரையரின் ஆளுகைக்குட்பட்டதாக இருந்து, பின்னர் சோழர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. இக்காலத்திற்குப் பின் முத்தரையர் சோழ மன்னர்களுடனும், கொடும்பாளூர் வேளிர்களுடனும் இணக்கமாய் இருந்து குறுநில மன்னர்களாகவும், படைத் தலைவர்களாகவும், ஆட்சியாளர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர். இதுபற்றிய கல்வெட்டு ஆதாரங்கள் புதுக்கோட்டையில் நிறைய காணப்படுகின்றன.

## 13. பிற்காலச் சோழப் பேரரசு

சங்க காலத்திற்குப் பிறகு, முடியுடைய மூவேந்தர்களில் ஒருவரான சோழர், மீண்டும் ஆட்சிப் பொறுப்பை பெற்றனர். இடைப்பட்டக் காலத்தில் சோழவம்சத்தினர் ஆதிக்கம் குன்றி இருந்தனரே தவிர அவர்களது குலம் அழிந்துவிடவில்லை. கி.பி.9-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சோழர் ஆட்சிக்கு புத்துயிர் அளித்தவன் விஜயாலயன் ஆவான். (கி.பி.850-871) இவன் பழையாறையில் சிற்றரசு புரிந்து வந்தான். தஞ்சையை ஆண்ட சிற்றரசரான முத்தரையரை வென்று தனது தலைநகரைத் தஞ்சைக்கு மாற்றி பரகேசரி என்னும் பட்டத்தைப் பூண்டு பல்லவ அரசுக்கும் பாண்டிய அரசுக்கும் இடையே ஒரு வலுவான சோழ அரசை நிறுவினான். புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளிலும் விஜயாலய சோழனின் ஆட்சி பரவியிருந்தது.

கடல்கடந்த வாணிபத்தில் ஈடுபட்ட தென்னிந்திய வர்த்தகக் குழுவினரான நானாதேச திசையாயிரத்து ஐநூற்றவர் பற்றிய கல்வெட்டு ஒன்று திருமயம் வட்டம் முனசந்தையில் இவனது 20-வது ஆட்சியாண்டு குறிக்கப்பட்டு காணப்படுகிறது.

நார்த்தாமலையிலுள்ள விஜயாலய சோழீச்சுரம் கோயில் முத்தரையர்களால் கட்டப்பட்டதாயினும் - இவனது காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதால் இக்கோயில் இவன் நினைவாகவே விஜயாலய சோழீச்சுரம் என்று வழங்கப்படுவதாகக் கொள்ளப்படுகிறது.

விஜயாலயனுக்குப்பின் அவனது மகன் **முதலாம் ஆதித்தன் (கி.பி.871-907)** ஆட்சிக்கு வந்தான். இவன் பாண்டியரையும், பல்லவரையும் வென்று தனது நாட்டை விரிவுபடுத்தினான். காளஹஸ்தியிலிருந்து, புதுக்கோட்டை வரை இவனது ஆட்சி பரவியிருந்தது. இவன் ராஜகேசரி என்னும் பட்டம் புனைந்தான். சோழ வம்சத்தின் அடுத்தடுத்த அரசர்கள் பரகேசரி, ராஜகேசரி என்னும் பட்டங்களை மாறிமாறி புனைதல் ஒரு மரபாயிற்று. இவனது ஆட்சியாண்டுகளைக் குறிப்பிட்ட கல்வெட்டுகள் ஆறு இங்கு

காணப்படுகின்றன.[23] இவை இவனது கால கல்வெட்டுகள் என்பதை உறுதிபடுத்த ராஜகேசரி என்னும் பட்டம் பெரிதும் துணைபுரிகிறது. திருக்கட்டளையிலுள்ள கார்குறிச்சி கற்றளி எனப்படும் சுந்தரேஸ்வரர் கோயில் இவனது கால கலைப் படைப்பாகும்.

முதலாம் ஆதித்தனுக்குப்பின் அவனது மகன் முதலாம் பராந்தகன் (கி.பி.907-955) அரசு எய்தினான். கொடும்பாளூரை ஆண்ட வேளிர்குல சிற்றரசர்கள் சோழமன்னர்களுக்கு ஆதரவாக பல போர்களில் கலந்து கொண்டனர். பராந்தகன் தன் மகன் அரிகுல கேசரிக்கு கொடும்பாளூர் இளவரசி பூதி ஆதிச்ச பிடாரியை மணம் முடித்து வைத்தான். இவனது ஆட்சியின் சிறப்பு இம்மாவட்டத்தில் காணப்படும் பல கல்வெட்டுகளாலும் அவனதுக் கால கோயில்களாலும் உணரக் கிடக்கிறது. திருமயம் வட்டம் சித்தூரிலுள்ள வாகீஸ்வரர் கோயிலும், நீர்ப்பழனியிலுள்ள சிவன் கோவிலும், குடுமியான்மலை சீகநாதசாமி மூலக்கோயிலும், மடத்துக் கோவிலிலுள்ள சிவன் கோயிலும் இவனது காலத்துப் படைப்புகளாகும்.

பராந்தகன் பரகேசரி என்னும் பட்டம் பெற்றவன். இவனது கால கல்வெட்டுகள் சுமார் 22 ம் மாவட்டத்தின் பல இடங்களிலும் காணப்படுகின்றன.[24] இவனது இரண்டாவது ஆட்சியாண்டிலிருந்து 38-வது ஆட்சியாண்டுவரை உள்ள பல வரலாற்றுச் செய்திகளை இந்த கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவற்றுள் குடுமியான்மலையில் மட்டும் சுமார் 15 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

பராந்தகனுக்குப்பின் ராஜகேசரி கண்டராதித்தன் (கி.பி.949-957) ஆட்சிக்கு வந்தான். பல கோயில்களுக்கு ஏராளமான கொடைகளை அளித்துள்ள செம்பியன் மாதேவி இவனது அரசியாவாள். இவனது ஆட்சிக்கால கல்வெட்டுகள் மூன்று இங்கு காணப்படுகின்றன.[25]

கண்டராதித்தனுக்குப் பிறகு பரகேசரி அரிஞ்சயன் (கி.பி.957-958), ராஜகேசரி இரண்டாம் பராந்தகன் சுந்தரசோழன் (கி.பி.958-973) பரகேசரி இரண்டாம் ஆதித்தன் (கி.பி.957-969) பரகேசரி உத்தமசோழன் (கி.பி.970-985) ஆகியோர் ஆட்சி செலுத்தியுள்ளனர். இவர்களது ஆட்சி விவரங்களை கல்வெட்டுகள் விரிவாகப் பேசுகின்றன. ஆனால் அரசாள மன்னன் இருக்கும்போதே, இளவரசனுக்கும் பட்டம் சூட்டி உடனாளச் செய்யும் பழக்கத்தைக் காண முடிகிறது. ஆகவே இந்நால்வரது ஆட்சியிலும் குழப்பமான பல காரியங்கள் நிகழ்ந்திருக்கின்றன எனத் தெரிகிறது. இந்த இருபது ஆண்டுகளில் சோழர்களுக்கும், கொடும்பாளூர் வேளிருக்கும், சோழருக்கும் முத்தரையருக்கும், முத்தரையருக்கும் வேளிருக்கும் இடையே நெருங்கிய அரசியல் மண உறவுகள் இருந்தன என்பதைப் பல கல்வெட்டுகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. இந்த நான்கு

மன்னர்கள் காலத்துக்குட்பட்ட கல்வெட்டுகள், கொடும்பாளூர், குடுமியான்மலை, வெள்ளனூர், திருவேங்கைவாசல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளின் மூலம் சோழரது அரசியல் வரலாறு குறித்த பல முக்கிய செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

தமிழகக் கோயில் கட்டிடக் கலையில் உன்னத இடத்தைப் பெறும் கொடும்பாளூர் மூவர்கோயில் சுந்தரசோழன் (இரண்டாம்) பராந்தகன் காலத்தில் (கி.பி.950-க்கும் 970க்கும் இடையில்) கொடும்பாளூர் வேளிர் குல மன்னன் பூதி விக்ரமகேசரி என்பவனால் கட்டப்பட்டது. வெள்ளனூரில் உள்ள அகஸ்தீஸ்வரம் கோயிலும், புவாளைக்குடியிலுள்ள புஷ்பவனேஸ்வரர் கோயிலும், திருவேங்கைவாசலிலுள்ள வியாகபுரீஸ்வரர் கோயிலும் இக்காலத்தைச் சேர்ந்தவை.

முதலாம் ராஜராஜன் (கி.பி.985-1014) உத்தமசோழனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தான். இவனது காலத்தில் சோழப் பேரரசு மிக உயிரிய நிலையை அடைந்தது. இவனது காலக் கல்வெட்டுகளில் 'திருமகள் போல' எனத் தொடங்கும் இவனது மெய்கீர்த்திகள் இன்றும் இவன் புகழ் பாடி நிற்கின்றன. ராஜராஜன் காலத்தில் புதுக்கோட்டைப் பகுதி முழுவதும் அவனது ஆளுகைக்குட்பட்டிருந்தது. மேலத்தாணயத்தில் உள்ள கல்வெட்டொன்று[26] துங்கபத்திரை நதிப்பகுதியில் இவன் பெற்ற வெற்றியைக் குறிப்பிடுகின்றது. இச்செய்தி வேறெந்த கல்வெட்டிலும் குறிப்பிடப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.

ராஜராஜன் மேலைச்சாளுக்கியர்களையும், கீழைச்சாளுக்கியர் களையும் வென்றான். மேலும் கீழைச் சாளுக்கிய இளவரசன் விமலாதித்தனுக்கு தனது மகள் குந்தவையை மணம் முடித்து வைத்தான். இவ்வரசியல் திருமணத்தின் வழிவந்தவர்கள் பிற்காலத்தில் சாளுக்கிய சோழர் என்று அழைக்கப்பட்டனர். இந்த மரபினரே பின்பு முதலாம் குலோத்துங்கன் முதலாக சோழப் பேரரசை ஆளத் தொடங்கினர்.

ராஜராஜசோழனின் மேலாண்மைக்குட்பட்டு புதுக்கோட்டைப் பகுதியை வேளிரும், முத்தரையரும் ஆட்சி செய்து வந்துள்ளனர். இக்குறுநில மன்னர்களின் உறவினர்கள் சோழப் பேரரசின் படைத் தலைவர்களாகவும், உயர் அலுவலர்களாகவும் இருந்திருக்கின்றனர். அவர்களது பெயர்கள் பல கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இக்காலத்தில் இப்பகுதியிலிருந்த நிலங்கள் முழுதும் அளக்கப்பட்டு பிரிக்கப்பட்டன. ஆட்சி அமைப்பு, ஊர்ச்சபை அமைப்பு அரசியல் அமைப்பு போன்ற பல செய்திகள் கொண்ட கல்வெட்டுகள் சுமார் 20 புதுக்கோட்டை மாவட்டத்தில் காணப்படுகின்றன. இவையனைத்தும் ராஜராஜனது 4-வது ஆட்சியாண்டிலிருந்து 28வது ஆட்சியாண்டுவரை உள்ள காலத்ததாகும்.[27] புதுக்கோட்டைப் பகுதியில் இவனது

ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் ராஜராஜ வளநாடு, கேரளாந்தக வளநாடு, இரட்டபாடி கொண்ட வளநாடு, பாண்டிகுலசனிவளநாடு என்ற நாட்டமைப்பினுள் அடங்கியிருந்தன. கல்வெட்டுகளில் காணப்படும் இடங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட ஊர்கள் இந்த நாட்டமைப்பினுள் (வளநாடு) அமைந்திருந்தன.

**ராஜராஜ வளநாடு:** திருமணஞ்சேரி, மழையூர், கோவிலூர், திருவிடையாப்பட்டி, அம்புக்கோவில், பழங்கரை, திருவப்பூர், திருக்கோகர்ணம், கலசமங்கலம். (புதுக்கோட்டை நகருக்கு கிழக்கே உள்ள பகுதி)

**கேரளாந்தக வளநாடு:** இதில் அடங்கும் தற்போதைய புதுக்கோட்டைப் பகுதி உறத்தூர் கூற்றம், அன்னல் வாயில் கூற்றம், ஒல்லையூர் கூற்றம், எனப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் கொடும்பாளூர், மடத்துக்கோயில், நீர்ப்பழனி, மண்டையூர், இரும்பாளி, ஆரியூர், அன்னவாசல், காரையூர், பூவாளைக்குடி, மேலத்தாணயம், கீழத்தாணயம், மரவாமதுரை, ஒலியமங்கலம், குடுமியான்மலை, பரம்பூர், கூடலூர் மற்றும் இவற்றைச் சுற்றியிருந்த ஊர்கள் அடங்கியிருந்தன.

**பாண்டியகுலசனிவளநாடு:** மலையடிப்பட்டி, விசலூர், வளமங்கலம், கீரனூர், திருப்பூர், வெள்ளனூர், குன்னாண்டார் கோயில், வாராப்பூர், செல்லுகுடி, சிருஞ்சுனை, பெருமநாடு, திருவேங்கைவாசல், சேந்தமங்கலம், தென்னங்குடி, செம்பாட்டூர், புத்தாம்பூர் ஆகிய ஊர்கள் இதில் அடங்கியிருந்தன. நார்த்தாமலை ராஜராஜன் காலத்தில் தெலுங்கு குலகாலபுரம் என்று அழைக்கப்பட்டது.

மேலத்தாணயம், கீழத்தாணயம், திருவிலங்குடி, நார்த்தாமலை, (கடம்பர் மலை) ஆகிய இடங்களிலுள்ள சிவன் கோயில்களும், செம்பாட்டூர் செட்டிப்பட்டி ஆகிய இடங்களில் இடிபாடுகளுடன் காணபப்டும் சமண கோயில்களும் ராஜராஜ சோழன் காலத்தவையாகும்.

**பரகேசரி ராஜேந்திர சோழன்: (கி.பி.1012-1044)** ராஜராஜ சோழனின் ஆட்சியின் இறுதி ஆண்டுகளிலிருந்தே தந்தையுடன் இருந்து பல போர்களிலும், நிர்வாகத்திலும் கலந்து கொண்டான். தந்தை விட்டுச் சென்ற பணியை இவன் திறம்பட செய்து முடித்த விவரங்களை புதுக்கோட்டை கல்வெட்டுகளின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. இவனது காலத்தில் சோழப் பேரரசு வட இந்தியாவிலும், கடல்கடந்த நாடுகளிலும் பரவிஇருந்தது. எந்த தமிழ் அரசும் இதற்கு முன்னும் பின்னும் இவ்வளவு கீர்த்தியுடன் விளங்கவில்லை. கங்கைகொண்ட சோழபுரத்தில் புதிய தலைநகரை நிர்மாணித்து, அங்கு தஞ்சை பெருவுடையார் கோயில் போன்றதொரு கோயிலையும் எடுப்பித்தான்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ராஜேந்திர சோழன்காலத்துக் கல்வெட்டுகள் சுமார் 10 காணப்படுகின்றன.[28] இவற்றுள் நான்கு கல்வெட்டுகள் அவனது மெய்கீர்த்தியை முழுமையாகக் கொண்டுள்ளன.

பரம்பூரிலுள்ள சோழீச்சுரம் கோயிலும் பேரையூரிலுள்ள நாகநாதசாமி கோயிலும், இவனது காலத்தில் கட்டப்பட்டதாகும். திருவேங்கைவாசல் கோயிலில் அம்மனுக்கு என தனியாக ஒரு கோயில் எடுப்பிக்கப்பட்ட செய்தியை அங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கின்றது.[29] கி.பி.9-10ம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால கோயில்களில் அம்மனுக்கென தனிக்கோயில் இல்லை; இந்தபாணி ராஜேந்திர சோழன் காலத்திலிருந்து தொடங்கப்பட்டதாகும். மடத்துக்கோயிலில் நாட்டிய மண்டபம் ஒன்று இவனது காலத்தில் கட்டப்பட்டது. ஆனால் இது தற்போது இடிந்து அழிந்து விட்டது. பெருந்துறை கோயிலும் இவனது காலத்தில் கட்டப்பட்டதாகும். ஆனால் இக்கோயிலில் சடயவர்மன் சுந்தர சோழப்பாண்டியனின் (கி.பி.1031-32) கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.[30] இது சில முக்கிய வரலாற்று செய்திகளை நமக்கு அளிக்கிறது. இக்கோயிலில் குடிகொண்டுள்ள இறைவன், இக்கல்வெட்டில், சுந்தரசோழ பாண்டிய ஈச்சுரமுடையார் எனக் குறிக்கப்படுகிறார். கி.பி.1018 வாக்கில் ராஜேந்திர சோழன் தனது ஆளுகைக்குட்பட்ட பாண்டிய நாட்டின் ஆட்சிப் பிரதிநிதியாக தனது மக்களில் ஒருவனை நியமித்து அவனுக்கு சடயவர்மன் சுந்தரசோழ பாண்டியன் எனப் பெயரிட்டிருந்தான். இச் செய்தி இக்கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

ராஜேந்திர சோழனை அடுத்து அவனது புதல்வர் மூவரும் ஒருவர் பின் ஒருவராக பேரரசை ஆண்டனர். முதலாம் ராஜாதிராஜன், இரண்டாம் ராஜேந்திரன், வீர ராஜேந்திரன் என்னும் முறையில் அவர்கள் ஆண்டு வந்தார்கள். ராஜாதிராஜன் 1 (கி.பி.10[illegible]-1054) தன் தந்தையோடு சேர்ந்து ஆண்டுவந்திருக்கிறான். இவன் சாளுக்கியருடன் பல போர்களை நடத்த வேண்டியிருந்தது. மேலைச் சாளுக்கியரோடு நடந்த போரில் இவன் இறந்துபட்டான். இவனது காலக் கல்வெட்டுகள் நான்கு இங்கு காணப்படுகின்றன.[31] தென்னங்குடியிலுள்ள கோயில் இவனது காலத்தில் கட்டப்பட்டதாகும்.

பரகேசரி (இரண்டாம்) ராஜேந்திரன் (கி.பி.1052-1064) கொப்பம் போர்க்களத்தில் முடிசூட்டிக் கொண்டான். இம்மன்னன் காலத்து கல்வெட்டுகள் சுமார் ஆறு இங்கு காணப்படுகின்றன.[32] இக்கல்வெட்டுகள் இவனது மெய்கீர்த்தியைப் பேசுகின்றன. கலிங்கத்துப்பரணியும், விக்ரமசோழன் உலாவும் இவனது பராக்கிரமத்தை பாராட்டுகின்றன. சித்தூர், நார்த்தாமலை, பூவாலைக்குடி ஆகிய இடங்களில் காணப்படும் இவனது கல்வெட்டுகள் சோழர்கால வரலாற்று ஆய்வுக்குப் பல நல்ல செய்திகளைக் கொண்டுள்ளன.

ராஜகேசரி வீர ராஜேந்திரன் (கி.பி.1063-1069) (முதலாம்) ராஜேந்திர சோழனின் மூன்றாவது மகனாவான். இவன் சில ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செலுத்தியபோதும் இவனது ஆட்சிக்காலம் சோழர்

வரலாற்றில் புகழ்பெற விளங்குகிறது. இவனது ஆட்சிக்கால கல்வெட்டு ஒன்று மட்டும் வெள்ளனூர் அகஸ்தீஸ்வரம் கோயிலில் காணப்படுகிறது.[35] இவன் காலத்தில்தான் புத்தமித்திரர் வீரசோழியம் என்னும் தமிழிலக்கண நூலை இயற்றினார். இவனுக்குப்பின் இவனது மகன் ஆதி ராஜேந்திரன் (கி.பி.1068-1071) ஆட்சிக்கு வந்தான். ஆதிராஜேந்திரன் தான் விஜயாலயசோழன் ஏற்படுத்திய சோழர் மரபின் கடைசி மன்னனாவான். இவனுக்குப்பின் ஆண்டவர்கள் சோழ-சாளுக்கியக் குலத்தைச் சேர்ந்தவர்கள்.

விஜயாலய சோழனால் நிறுவப்பட்ட சோழப் பேரரசு வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும். இந்தப் பேரரசில் உட்பட்டிருந்த புதுக்கோட்டை மாவட்டப் பகுதி அதன் வளர்ச்சிக்குப் பெறும் துணைபுரிந்துள்ளது. சோழ சாம்ராஜ்யத்திற்கு படைவீரர்களையும், படைத்தலைவர்களையும் திறமையான ஆட்சியாளர்களையும் அளித்திருக்கிறது. நகரங்களும், கிராமங்களும் தத்தமது உள்ளாட்சி அமைப்புகளால் ஆளப்பட்டன. புதுக்கோட்டை வணிகர் குழுக்கள் கடல் கடந்த நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இவற்றைப் பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள இக்கால கல்வெட்டுகள் இங்கு ஏராளம்! கோயில் கட்டிடக் கலையிலும், நல்ல வளர்ச்சி ஏற்பட்டது. இக்காலத்தில் புதுக்கோட்டையிலும் கலையழகு மிக்க கோயில்கள் பல கட்டப்பட்டுள்ளன. இவையெல்லாம் சோழரது புகழ்பாடிக் கொண்டிருக்கின்றன.

## 14. கொடும்பாளூர் வேளிர்

கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு, கோநாட்டுப் பகுதிகளை இருக்கு வேளிர் என்னும் வேளிர்குல மன்னர்கள் ஆண்டுவந்தனர்.[34] கொடும்பாளூர் தனது இறந்தகால வரலாற்றை யெல்லாம் சோகத்துடன் உள்ளடக்கிக் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமமாக தற்போது காட்சியளிக்கிறது. கோயம்புத்தூர், பெரியார், சேலம், தர்மபுரி, மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகள் இக்காலத்தில் கொங்குநாடு என்று வழங்கப்பட்டது. கி.பி.10ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இது சோழரின் வெற்றிக்கு இலக்காகி, சோழப் பேரரசின் கீழ் வந்தது. சோழரின் மேலாண்மைக்குட்பட்டு கொங்கு நாட்டை ஆண்ட சிற்றரசர்கள் ''கொங்கு சோழர்'' என்று அழைக்கப்பட்டனர். கொங்கு சோழர் கோநாட்டு சிற்றரசர்களான வேளிரின் வழித்தோன்றல்களாவர்.

தென்னிந்திய அரசியல் வரலாற்றில் கொடும்பாளூர் வேளிர் குறிப்பிடத்தக்கவராவர். பாண்டிய நாட்டிற்கும், சோழநாட்டிற்குமான எல்லைப்பகுதியை இவர்கள் ஆண்டுவந்ததால் இவர்கள் அரசியல்

ஆதரவை காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அக்கால அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிலகாலம் பாண்டிருக்கு ஆதரவாகவும், பாண்டியர் ஆதிக்கம் வீழ்ந்தபோது பல்லவர் பக்கமும், பல்லவர் வீழ்ச்சியுற்றபோது சோழர்களுக்கு ஆதரவாகவும் ஆட்சி செய்து வந்துள்ளனர். பல்லவரின் கீழ் குறுநில மன்னர்களாகவும், சிற்றரசர்களாகவும், பின்பு விஜயாலயச் சோழனால் நிறுவப்பட்ட சோழப் பேரரசின் ஆட்சியாளர்களாகவும், அரசனின் ஆட்சிப் **பிரதிநிதிகளாகவும், படைத் தலைவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.** பல்லவரின் கீழ் ஆளும்போது அவர்களது பட்டங்களையும் (மார்ப்பிடுகு இளங்கோ வேளார், விடேல் விடுகு இளங்கோவேள்) சோழரின் மேலாண்மைக்குட்பட்டிருந்தபோது அவர்களது பட்டங்களையும் சூடிக் கொண்டனர். (பராந்தகன் சிறிய வேளார்).

முதலாம் பராந்தக சோழன் காலத்திலிருந்து வேளிருக்கும், சோழருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சோழப் பேரரசின் நிர்மாணத்திலும், நிர்வாகத்திலும் வேளிர் தலையாய அங்கம் வகித்தனர். சோழர் வெற்றி கொண்ட பகுதிகளில் ஆட்சியை கவனித்துக் கொள்ள அரசு பிரதிநிதிகளாகவும், படைத் தலைவர்களாகவும் இவர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கெல்லாம் நிறைய கல்வெட்டு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சோழமன்னர் குடும்பத்தினருக்கும் இவர்களது குடும்பத்தினருக்கும் திருமண உறவுகள் ஏற்பட்டன. வேளிர்குலப் பெண்களை சோழமன்னர்கள் மணந்து கொண்டனர். இப்படி ஏற்பட்டத் தொடர்பு அதன்பின் மூன்று நான்கு நூற்றாண்டுகள் வலுவாக இருந்தது.

வேளிர் துவாரசமுத்திரத்திலிருந்து வந்த யாதவர் குடியைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர். இவர்களை ''யதுகுலத் திலகர்கள்'' எனக் கல்வெட்டுகள் அழைக்கின்றன.[35]

வேளிர்குலத்தினரது கர்ணபரம்பரைக்கதை புறநானூறு 201-வது பாடலில் காணப்படுகிறது. சங்ககாலத்திலிருந்தே வேளிர் புதுக்கோட்டையுடன் தொடர்புடையவர்கள். வேள்எவ்வி என்பான் புதுக்கோட்டைப் பகுதியை உள்ளடக்கிய மிழலைக்கூற்றம், முத்தூற்றுக்கூற்றம் ஆகிய பகுதிகளை ஆண்டுவந்தான். இவனை தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் வென்ற வரலாறு சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. கடைஏழு வள்ளல்களில் ஒருவனான வேள் பாரி என்னும் பாரி வள்ளல் ஆட்சிப் பரப்பினுள் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பிரான்மலைப் பகுதிகளும் உட்பட்டிருந்தன. இங்குள்ள கோவில் பாரிச்சுரம் என கல்வெட்டுகளில் அழைக்கப்படுகிறது.[36] ஆனால் பிற்காலத்தில கொடும்பாளுரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வேளிர் பற்றிய செய்திகள் நமக்கு நிறைய கிடைக்கின்றன. கொடும்பாளூர் மூவர் கோயில் கல்வெட்டு

ஒன்று[37] வேளிர்களின் வம்சாவளி பற்றிய விவரமான செய்திகளைக் குறிப்பிடுகிறது. சோழ மன்னர்களுக்கும், வேளிருக்கும் இடையே நிலவிய அரசியல் மற்றும் குடும்ப உறவுகள் பற்றிய செய்திகள் புதுக்கோட்டை கல்வெட்டுகளில் நிறைய காணப்படுகின்றன.

ஆதித்த சோழனுக்கும் பராந்தக சோழனுக்கும் சமகாலத்தவனான மதுராந்த இருக்கவேள் மகள் ஆதிச்சபிடாரி, பராந்தக சோழன் மகன் அரிகுலகேசரியை மணந்துகொண்ட செய்தியை குடுமியான்மலை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[38] மகிமாலய இருக்கவேள் என்பான் கண்டராதித்த சோழனின் சமகாலத்தவன். இவனைப் பற்றிய செய்திகள் பல கல்வெட்டுகளில் காணப்படகின்றன.[39] இரண்டாம் பராந்தக சோழனின் சம காலத்தவனான பூதிவிக்கிரமகேசரி வேளிருள் கீர்த்தி மிக்கவனாவான். இவனது மகன் பராந்தகன் சிறிய வேளார், சுந்தரசோழனின் படைத்தலைவனாக விளங்கினான். பூதி பராந்தகன் என்னும் செம்பியன் இருக்கவேள் உத்தம சோழனின் சம காலத்தவன். இவனது மனைவி வரகுணாட்டி குடுமியான்மலை குகைக்கோயிலுக்கு கொடைகள் அளித்துள்ளாள். வேளிரும், முத்தரையரும் மண உறவுகள் கொண்டிருந்த செய்திகளும் கிடைக்கின்றன.

கொடும்பாளூர் வேளிர் பற்றிய செய்திகள் ராஜேந்திர சோழன் காலத்திற்குப்பின் அதிகம் இப்பகுதியில் காணப்படவில்லை. இக்காலத்திற்குப் பின் அவர்கள் சிற்றரசர் நிலையிலிருந்து நிலைகுலைந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. கொடும்பாளூர் மூவர்கோயில், வேளிர், தமிழக கோயில் கட்டிடக் கலைக்கு வழங்கிச் சென்றுள்ள மிகப் பெரும் கலைச் செல்வமாகும்.

வேளிரின் தலைநகரமாக இருந்த கொடும்பாளூர் சங்ககாலந் தொட்டே புகழ்மிக்க நகராகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே கோட்டைக் கொத்தளங்களுடனும், செல்வச் சிறப்புடனும் வீரம் விளைவித்த நகராக இருந்தது. சோழரின் தலைநகரான உறையூருக்கும், பாண்டியரின் தலைநகரான மதுரைக்கும் இடையில் இருந்துவந்த கொடும்பாளூர் பெருநகரத்தின் தோற்றம் சிலம்பொலிக்கும் சிலப்பதிகாரத்தில் போற்றப்படுகிறது. மேலும் இந்நகரம், கொடும்பை, இருக்கவேளூர் என்ற பெயர்களையும் பெற்றிருந்தது. கொடும்பாளூரை "கோநாட்டுக்கொடி நகரம்" என பெரிய புராணம் கூறும்.

63 நாயன்மார்களில் ஒருவரான இடங்கழி நாயனார் வேளிர் குலத்தில் உதித்த மன்னராவார். அவர் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ததையும், அவரது முன்னோர் பற்றிய கர்ணபரம்பரைக் கதையையும், சிதம்பரத்தின் கனகசபைக்கு பொன்னோடு வேய கொங்கு நாட்டிலிருந்து தங்கம் கொண்டுவந்த ஆதித்தன் அவரது குலவழித் தோன்றல் என்ற செய்தியினையும் பெரிய புராணம்

"கோநாட்டுக் கொடிநகரம் கொடும்பாளூர்
அந்நகரத்திலிருக்கும் வேளிர் குலந்தரசரித்து
மன்னிய பொன்னம்பலத்து மணி முகட்டில் பாக்கொங்கின்
பன்னுதலை பசும்பொன்னாற் பயில்பிழம்பாம்-பிசையனிந்த
பொன்னெடுந்தோன் ஆதித்தன் - புகழ் மரபிற் குடிமுதலோர்
இடங்கழியார் எனவுலகில் ஏது பெருநாமத்தார்".[40]

சோழன் முதலாம் ஆதித்தனுக்கும் (கி.பி.871-907) பாண்டியன் பராந்தக வீரநாராயணனுக்கும் (கி.பி.860-905) நடைபெற்ற போரில், சோழர் வெற்றிவாகை சூடி கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதையும் இப்போரில் கொடும்பாளூர் வேளிர் சோழர் பக்கமிருந்து சண்டையிட்டதையும், கரந்தை தமிழ்ச் சங்க செப்பேடுகளும் (எண்.57, 58) சின்னமனூர் செப்பேடுகளும் கூறுகின்றன. ஆதித்தன் காலத்தில் கொங்குநாடு சோழராட்சிக்குட்பட்ட போதிலும், அவனது மகன் முதலாம் பராந்தகனே (கி.பி.907-955) அப்பகுதியின் நிர்வாகத்தை சீரமைத்தான்.[41] கொங்குநாட்டு வெற்றிக்கு உறுதுணையாக இருந்த வேளிர் குலத்தினரை கொங்குநாட்டு ஆட்சியாளர்களாகவும் தங்களது ஆட்சிப்பிரதிநிதிகளாகவும் சோழர் நியமித்தனர். இவர்களே பின்னர் கொங்கு சோழர் என அழைக்கப்பட்டனர்.

பெரிய புராணப் பாடல் குறிப்பிடும் ஆதித்தன் முதலாம் ஆதித்த சோழனே எனக் கருதப்பட்டது.[42] பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியும் இக்கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார். ஆனால் கே.வி. சுப்பிரமணிய அய்யர் இந்தக் கருத்தை மறுக்கிறார்.[43] இடங்கழிநாயனார் கொடும்பாளூர் வேளிர் மரபைச் சேர்ந்தவர் என்பது உறுதிப்படுவதாலும், பெரியபுராணப் பாடல் குறிப்பிடும் ஆதித்தன் இடங்கழிநாயனாரின் வழித்தோன்றல் எனக் கூறப்படுவதாலும் இந்த ஆதித்தனும் வேளிர் குலத்தைச் சேர்ந்தவனாகவே இருக்க வேண்டும். சோழன் ஆதித்தன் என தவறாகவே கருதப்படுகிறது. சிதம்பரம் நடராசர் கோவிலுக்கு பொன்னோடு போத்தியது, முதலாம் பராந்தக சோழன் என திருவேலங்காடு செப்பேடு கூறுகிறது. இதற்குத் தேவையான தங்கத்தை கொங்கு நாட்டிலிருந்து கொண்டுவர வேளிர் குலத்தைச் சேர்ந்த சிற்றரசன் ஆதித்தன் என்பவனை பராந்தக சோழன் அனுப்பியிருக்கக் கூடும் என எண்ணத் தோன்றுகிறது. இவன், (ஆதித்தன்) முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில், கொடும்பாளூரை ஆண்டுவந்த பூதிவிக்கிரம கேசரியின் மகன் செம்பியன் இளங்கோவேள் என்னும் பூதி ஆதித்தப்பட்டாரன் ஆவான் என திரு.எம்.எஸ். கோவிந்தசாமி கூறுகிறார்.[44]

கொங்குநாட்டை ஆண்ட கலிமூர்க்க விக்ரமசோழனின் கல்வெட்டு, அவனை 'கோனாட்டான்' என அடைமொழியிட்டு

அழைக்கிறது.[45] ஆகவே இம்மரபைச் சேர்ந்தவர்கள் வேளிர் குலத்தினராக இருக்க வேண்டும். கலிமூர்க்க விக்ரம சோழனுக்கு முன்பு, வீரசோழ பெருமானடிகள், வீர சோழ கலிமூர்க்கன் என்னும் இரண்டு சிற்றரசர்கள் கொங்குநாட்டுப் பகுதிகளை ஆண்டு வந்துள்ளனர். இவர்களுள் முதலாமவனான வீரசோழ பெருமானடிகளின் காலம் ஏறத்தாழ கி.பி.942-980 எனக் கணக்கிடப்படுவதால் இந்த வீரசோழன் முதலாம் ஆதித்தனின் சமகாலத்தவனாவான். முதலாம் பராந்தக சோழன் வீரசோழன் என்ற பட்டத்தினையும் பெற்றிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.[46]

இதே காலத்தில் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு வீரசோழ இளங்கோவேள் என்பான் (கி.பி.930-937) ஆண்டுவந்தான். இவன் பராந்தகன் குஞ்சர மல்லன், மகிமாலய இருக்கவேள் என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டான். கொடும்பாளூரிலுள்ள முசுகுந்தேஸ்வரம் (முதுகுன்றம்) கோவிலைக் கட்டியவன் இவனே என இக்கோவில் கல்வெட்டு கூறுகிறது. ஆகவே கொடும்பாளூர் வீரசோழ இளங்கோவேளும், முன்பு குறிப்பிட்ட கொங்கு வீர சோழ பெருமானடிகளும் வெவ்வேறு சிற்றரசர்கள் என்பதில் ஐயமில்லை. இவர்கள் இருவரும் கோனாட்டையும், கொங்குநாட்டையும் ஆண்டுவந்த சமகாலத்தவர் ஆவர்.

பெரியபுராணப் பாடல் கூறும் ஆதித்தன், இளங்கோவேள் என்னும் பூதி ஆதித்த பட்டாரன் ஆவான் என முன்பு கண்டோம். இவனே பின்பு வீரசோழ பெருமானடிகள் எனப் பெயர் பெற்றான் எனக் கொள்ளலாமா? முதலாம் பராந்தகன் காலத்தில் கொங்கிலிருந்து பொன் கொண்டுவந்த இந்த வேளிர் குல ஆதித்தனே பின்பு கொங்கு நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டான் என்பதும், அவன் பின்பு வீரசோழன், பெருமானடிகள் என்னும் முதலாம் பராந்தகனின் பட்டங்களையும் சூட்டிக் கொண்டான் என்பதும் பொருத்தமானதே! (எம்.எஸ். கோவிந்தசாமி) கோநாட்டு வேளிர்குலத் தோன்றலான இந்த வீரசோழனும், அவனுக்குப்பின் வந்தோரும் கி.பி.14ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை கொங்குநாட்டை கொங்குசோழர் என்ற பெயருடன் ஆண்டுவந்துள்ளனர்.

வேளிர் கொங்குநாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது கோனாட்டு குடிமக்கள் சிலரையும் அங்கு குடியமர்த்தினர். அவ்வாறு குடிபெயர்ந்தவர்களுள் கோனாட்டு வேளாளர்கள் என்னும் விவசாயப் பெருங்குடி மக்கள் குறிப்பிடத் தக்கவர்கள். பண்டைக்காலந்தொட்டே காடுகளைத் திருத்தி விவசாயம் செய்வதில் வல்லவர்களான இவர்கள் கார்காத்த வேளாளர், காரான வேளாளர், என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கோநாட்டுப் பகுதிகளில் நிறைய வாழ்ந்து

வந்தனர். கொங்குநாட்டை ஆளச் சென்றோருடன் இவர்களும் கொங்குநாடு சென்று குடியமர்ந்து, விவசாயத்தைப் பெருக்கி அப்பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரிதும் பாடுபட்டனர். பிற்காலத்தில் இவர்கள் கொங்குநாட்டில் வெள்ளாளக் கவுண்டர் எனப் பெயர் பெற்றனர். கொங்குநாட்டில் வழங்கும் கள்ளழர் அம்மானை, குன்றுடையக் கவுண்டன்கதை, காணிப்பாடல் ஆகியவற்றின் மூலம் இச்செய்திகளை அறிய முடிகிறது.

கொங்குநாட்டில் வழங்கும் சில நாட்டுப்படால்களின் தலைவர்கள் கோனாட்டைச் சேர்ந்தவர்கள் எனப் பாடப்பட்டுள்ளனர். ஏந்தலார் குறவஞ்சியின் தலைவன் பெரிய பெருமாளும்,[48] அன்னமார்சாமி கதைத் தலைவர்கள் பொன்னர், சங்கர் ஆகியோரும் கோனாட்டைச் சேர்ந்தவர்கள் என இப்பாடல்கள் கூறுகின்றன.[49]

கொங்குநாட்டில் பூர்வ குடிகள் வேட்டுவ குலப் பெருமக்கள் ஆவர். வடபரிசார நாட்டு அவையில் வெள்ளாள நாட்டாரும் பூர்வ நாட்டாரும் இருந்ததாக சேலூர் வெங்கடேசரமணசாமி கோவில் கல்வெட்டு கூறும் (தெ.இ.கோ,க.211) பூர்வாநட்டார் என இக்கல்வெட்டு கூறுவது வேட்டுவர் குலத்தினர் ஆவர்.[50]

கோனாட்டிலிருந்து வந்து குடியமர்ந்த வேளாளர்கள் கொங்கு நாட்டு மக்களுடன் சமுதாய உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். தற்போது வெள்ளாள கவுண்டர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இப்பழங்குடியினர் தற்போது வேளார், காராளர், கார்காத்த வேளாளர் எனப் பெயர் பெற்று விளங்குகின்றனர். மக்களின் இடப் பெயர்ச்சி காரணமாக சமுதாய, கலாசார பழக்கங்கள், ஒரு பகுதியிலிருந்து மற்ற பகுதிகளிலும் வாழும் மக்களால் பின்பற்றப்படுவது இயற்கையே. இவ்வின மக்கள் குறித்த விரிவான ஆய்வுகள் பல சுவையான செய்திகளைத் தரக்கூடும்.

சைவமதத்தின் காளமுகப் பிரிவினர் கன்னட நாட்டிலிருந்து கொங்கு நாட்டிற்கு வந்தனர். காளமுக சைவமதப் பிரிவுத் தலைவன் மல்லிகார்ஜுனனுக்கு கொடும்பாளுரில் ஒரு மடமும் பதினோரு கிராமங்களும் கொடும்பாளுரை ஆண்ட பூதி விக்ரமகேசரி நிவந்தமாக அளித்த செய்தியை மூவர்கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது.[51] கொடும்பாளுர் முசுகுந்தேஸ்வரர் கோயிலுக்கருகில் காணப்படும் சிதைந்துபோன 'கன்னட எழுத்துக் கல்வெட்டும் காளமுகர் பற்றிய சில செய்திகளை தெரிவிக்கிறது. கொடும்பாளுருக்கும் கொங்கு நாட்டிற்கும் ஏற்பட்ட கலாச்சாரத் தொடர்பால் காளமுகப் பிரிவினர் இங்கு வந்திருக்கக் கூடும். ஏனெனில் மல்லிகார்ஜுனனின் குரு வித்தியாராசி பற்றிய செய்திகள் கொங்கு நாட்டுத் தகடூர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

கோவில் கட்டிடக் கலையிலும் இருபகுதிகளின் தொடர்பால் நல்ல சிற்பங்களும் கோவில்களும் உருவாயின. கொடும்பாளூர் சிற்பங்களில் காணப்படும் சில சிறப்பு அம்சங்கள் இங்கு நோக்கத்தக்கது. ஈரோட்டில் மகிமாலேஸ்வரம் என்னும் சிவன்கோவில் ஒன்று உள்ளது. இது முற்கால சோழர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கோயிலில் கொடும்பாளூர் கோவில் கலைப்பாணியின் சாயலைக் காணலாம்.

கொடும்பாளூர், நார்த்தாமலை ஆகிய நகரங்களில் வாழ்ந்த வணிகர் குழுவினர் தென்னகத்தின் பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ள கொங்குநாடு ஒரு மையமாக விளங்கியது. இதன்மூலம் இரு பகுதிகளுக்கு இடையே நல்ல வணிகத் தொடர்பு ஏற்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு வாணிபம் ஓங்கியது. கொடும்பாளூர் மணிக்கிராமத்தைச் சேர்ந்த வணிகன் மஞ்சன் மணியத்தண்டன் சேலத்தில் உள்ள சுகவனேஸ்வரர் கோவிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான்.[53] ஈரோட்டிற்கருகிலுள்ள சிகார் பாளையம் கல்வெட்டொன்று கொடும்பாளூர் மணிக்கிராமத்து ஐய்நூற்றவர் வணிகக் குழவைச் சேர்ந்த வணிகர் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது. இதே கல்வெட்டு தெலுங்கு குலகாலபுரம் என்னும் குலோத்துங்க சோழ பட்டணத்து (தற்போதைய நார்த்தாமலை) வணிகன் ஒருவனையும் குறிப்பிடுகிறது.[54]

கொடும்பாளூர் வேளிர்குலத்தில் தோன்றியவர்களே கொங்கு நாட்டை ஆண்ட கொங்குசோழர் என்பதையும் அவர்களது தொடர்பால் கொங்கு நாட்டிற்கும், கோனாட்டிற்கும் அரசியல் சமுதாய கலாச்சார தொடர்புகள் ஏற்பட்டு ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் நிலைத்திருந்தது என்பதும் தெரியவருகிறது.

## 15. சாளுக்கிய சோழர்

விஜயாலய சோழன் பரம்பரையில் கடைசியாக ஆண்ட ஆதிராஜேந்திரனுக்குப் பிறகு முதலாம் குலோத்துங்கன், கீழைச் சாளுக்கியர்-சோழர் ஆகிய இரு நாட்டிற்கும் பொதுவான பேரரசுப் பதவியை எய்தினான். இவன் முதலாம் ராஜேந்திரனுடைய பேரனும், கீழைச்சாளுக்கிய ராஜராஜேந்திரனின் மகனும் ஆன இரண்டாம் ராஜேந்திரன் எனப்படுவான். சோழப் பேரரசை எய்தியபோது குலோத்துங்கன் எனப் பட்டபெயர் புனைந்து கொண்டான். இவன் கி.பி.1071 முதல் 1122 வரை ஆட்சி செலுத்தினான். இவனது காலத்தில் தூரக் கிழக்கு நாடுகளுடன் கடல்கடந்த வாணிபம் பெருகியது. புதுக்கோட்டையிலிருந்து திசையாயிரத்து ஐநூற்றுவர் என்னும் வணிகர் குழு கடல் கடந்து வாணிபத்தில் ஈடுபட்டிருந்தது.[55] புதுக்கோட்டைப் பகுதியை இவனது ஆட்சிப் பிரதிநிதியாக இருந்து முத்தரையர் ஆட்சி செய்து வந்தனர்.[56] இவனது ஆட்சிக்கால கல்வெட்டுகள் சுமார் பதினொன்று புதுக்கோட்டையில் காணப்படுகின்றன.[57] இம்மன்ன னுக்குப் பின் இவனது மகன் பரகேசரி விக்ரம சோழன்

**(கி.பி.118-1135)** ஆட்சிக்கு வந்தான். இவன் பழையாறையிலிருந்தும் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்தும் ஆட்சி செலுத்தினான். இவன் காலத்தில் பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. புதுக்கோட்டையில் இவனது கல்வெட்டு ஒன்று மட்டும்[58] திருவேங்கை வாசலில் காணப்படுகிறது. விக்ரம சோழனுக்குப்பின் அவனது மகன் **இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133-50)** சோழப் பேரரசனானான். இவனது ஆட்சிக்காலம் மிகவும் அமைதியாக இருந்தது. சைவ, சமயமும், தமிழ் இலக்கியமும் தழைத்தோங்கின. ஒட்டக்கூத்தர், கம்பர், சேக்கிழார் ஆகியோர் இவனது அவைக்கள புலவர்கள். இவனது காலத்தில்தான் பெரிய புராணம் இயற்றப்பட்டது. பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இருவர் புதுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவனது ஆட்சிப் பிரதிநிதிகளாக புதுக்கோட்டைப் பகுதியை பல்லவரையர்களும்[59] முத்தரையர்களும்[60] ஆண்டு வந்தனர். இவனது ஆட்சிக்கால கல்வெட்டுகள் ஐந்து இங்கு காணப்படுகின்றன.

இரண்டாம் குலோத்துங்கனுக்குப்பின் அவனது மகன் **இரண்டாம் ராஜராஜன் (கி.பி.1146-1173)** ஆட்சிப் பொறுப்பேற்றான். இவனது ஆட்சிக்காலமும் அமைதியாக இருந்தது. முத்தமிழ் வளர்ந்தது. இம்மன்னன் முத்தமிழுக்குத் தலைவன் என அழைக்கப்பட்டான். இவனது ஆட்சிக் காலத்தில் சிற்றரசர்களின் ஆதிக்கம் ஓங்கியது. புதுக்கோட்டைப் பகுதியில் பல்லவரையர்கள் ஆட்சி செய்தனர்.[61] இவனது ஆட்சிக்கால கல்வெட்டுக்கள் சுமார் பதினைந்து இங்கு காணப்படுகின்றன.[62]

**ராஜாதி ராஜன் - II** (கி.பி.1173-1178), இரண்டாம் ராஜ ராஜனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தான். இவனது காலத்தில் பாண்டிநாட்டில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. குலசேகரப் பாண்டியனுக்கும் பராக்கிரமப் பாண்டியனுக்கும் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் ராஜாதி ராஜன் பங்குகொண்டு, குலசேகரப் பாண்டியனுக்காக பொன்னமராவதியிலும், கீழாநிலையிலும் போர் நிகழ்த்திய செய்திகளை (இலங்கை) மகாவம்சமும், இக்கால கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. இவனது காலத்திலும் இப்பகுதியில் பல்லவரையர் பலம் பெற்று விளங்கினர். இவனது கால கல்வெட்டுகள் ஐந்து காணப்படுகின்றன.

**குலோத்துங்கன்- III**(கி.பி.1178-1217) ராஜாதிராஜனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தான். இவனதுகாலத்தில் சோழப் பேரரசு மிகவும் பலமிழந்தது. சிற்றரசர்கள் வெளிப்படையாக அரசனுக்கு அடங்காத நிலையைக் காண முடிகிறது. பாண்டிய நாட்டுக் குழப்பங்கள் தொடர்பாக நடந்த போர்களில் இவன் கலந்து கொண்டான். புதுக்கோட்டை கல்வெட்டுகள் இரண்டு இவனது மெய்கீர்த்திகளை கூறுகின்றன.[64] இவனது ஆட்சியின் இறுதியாண்டுகளில் பாண்டியர் பலம் பெற்று

இம்மன்னனை நிலை குலையச் செய்தனர். சோழன் பாண்டியனுக்கு அடங்கிய சிற்றரசனாக இருக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியது. ஹோய்சளர்களின் தலையீட்டால் சோழர்கள் ஆட்சி தொடர்ந்தது. இவனது ஆட்சிக்காலத்தில் புதுக்கோட்டைப் பகுதியை பல்லவரையர், முத்தரையர், வானாதரையர் முதலானோர் ஆண்டு வந்தனர்.

இவனது ஆட்சிக்கால கல்வெட்டுக்கள் சுமார் 40 இங்கு காணப்படுகின்றன.[65] இவனது காலத்தில் இப்பகுதியில் பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

• **ராஜராஜன்-111 (கி.பி.1216-1257)** மூன்றாம் குலோத்துங் கனுக்குப்பின் ஆட்சிக்கு வந்தான். இவனது காலத்தில் பாண்டியரும் ஹோய்சளரும் பலம் பெற்று விளங்கினர். சோழப் பேரரசு தனது செல்வாக்கை இழந்து சிதைய ஆரம்பித்தது. நெல்லூர்ப் பகுதியை சோழர் கிளை மரபினரான தெலுங்கு சோழர்களும், தென்னார்க்காடு மாவட்டத்தில் சம்புவராயர்களும் தன்னிச்சையாக ஆளத் தொடங்கினர். புதுக்கோட்டைப் பகுதியில் அரையர்கள் குறுநில மன்னர்களாக ஆட்சி செய்து வந்தனர். இவனது ஆட்சிக்கால கல்வெட்டுகள் சுமார் எட்டு காணப்படுகின்றன.[66]

**ராஜேந்திரன்-111 (கி.பி.1246-1279)** சோழ வம்சத்தில் ஆண்ட கடைசி மன்னனாவான். இவன் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து ஆட்சி செய்தான். இவனது ஆட்சிக் காலக் கல்வெட்டு ஒன்று மட்டும் இங்கு காணப்படுகிறது. பாண்டியரின் கை ஓங்கத் தொடங்கிய காலம் அது. சோழரும், ஹோய்சளரும் சடையவர்மன் சுந்தரபாண்டியனால் தோற்கடிக்கப்பட்டனர். இதன்பிறகு, சோழ நாடு பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக அமைந்துவிட்டது. இம்மன்னனுக்குப் பிறகு சோழ மன்னராக ஆட்சிச் செயதவர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் கிடைக்கவில்லை. இவ்வாறு கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலயனால் நிறுவப்பட்ட சோழர் ஆட்சி, ராஜராஜன், ராஜேந்திரன் காலத்தில் பேரரசாகி இறுதியாக மூன்றாம் ராஜேந்திரன் காலத்தோடு முடிவுற்றது.

சாளுக்கிய சோழர் காலத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல கேயில்கள் கட்டப்பட்டன. இரும்ப நாட்டிலுள்ள சிவன் மற்றும் விஷ்ணு கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். பொன்னமராவதியிலுள்ள ராஜேந்திர சோழீச்சரம், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டதாகும். பின்னங்குடி, புங்கவனேஸ்வரர் கோயில், கீரனூர் உத்தமநாதசாமி கோயில், சாத்தனூர் உமாபதீஸ்வரர் கோயில், கோட்டையூர் சிவன் மற்றும் விஷ்ணு கோயில், திருமணஞ்சேரி சிவன் கோயில், இரும்பாளி சிவன் கோயில், குளத்தூர்

சுந்தர சோழீச்சுரம், சேந்தமங்கலம் பெருமாள் கோயில், அன்னவாசல் விருதபுரீஸ்வரர் கோயில், வயலோகம் விஸ்வநாதசாமி கோயில், திருக்களம்பூர் கதலிவனேஸ்வரர் கோயில், சுந்தரம் சுயம்பிரகாச மூர்த்தி கோயில், காரையூர் திருமங்களீஸ்வரர் கோயில், பெருமாநாடு, பழங்கரை, மீனவேலி, திருவிடையாப்பட்டி, பிலிவலம், வாளரமாணிக்கம் ஆகிய ஊர்களிலுள்ள சிவன்கோயில்கள், மற்றும் திருவப்பூர் ராஜராஜேச்சுரம் ஆகியன சோழ சாளுக்கியக் கலைச் சின்னங்களாகும். இக்காலத்தில் பொன்னமராவதியிலும், குடுமியான்மலையிலும் அம்மனுக்கெனத் தனிக்கோயில்கள் கட்டப்பட்டன. சேரனூர், ஆதனக்கோட்டை, பெருங்களூர், வைத்தூர், ஆகிய இடங்களிலுள்ள சிவன் கோயில்கள் குலோத்துங்க சோழீச்சுரம் என்று அழைக்கப்படுகின்றன. இரண்டாம் ராஜராஜன் காலத்தில் (கி.பி.1146-1163) திருவரங்குளம் கோயில் கட்டப்பட்டது. நார்த்தாமலை மேல மலையிலுள்ள சமணர்குடகு என்னும் சமணர் குகைக்கோயில், விஷ்ணு கோயிலாக மாற்றப்பட்டது.

விஜயாலயனால் நிறுவப்பட்டு பெருமையடைந்த சோழப் பேரரசு கி.பி.13ம் நூற்றாண்டில் தன் புகழை இழந்து அழிய ஆரம்பித்தது. சிற்றரசர்கள் தன்னிச்சையாக ஆளத் தொடங்கினர். அதே சமயத்தில் பாண்டியர்களும் பலம் பெற்று சோழர் ஆதிக்கத்தைத் தகர்த்தனர். சுமார் 400 ஆண்டுகள் சீரும் சிறப்போடும் விளங்கிய சோழப் பேரரசு, இரண்டாவது பாண்டியப் பேரரசுக்கு இடங்கொடுத்து வரலாற்றிலிருந்து மறையத் தொடங்கியது. 13-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புதுக்கோட்டைப் பகுதி முழுவதும் பாண்டியர்களின் ஆளுகைக்குட் பட்டது.

## 16. இரண்டாவது பாண்டியப் பேரரசு

சோழர் வீழ்ச்சிக்குப்பின் பாண்டியரே ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்தினர். பாண்டியரின் முன்னேற்றமே சோழரின் அழிவுக்குக் காரணம் என்று சொல்லலாம். பாண்டியரின் எழுச்சிக்கு அன்று நிலவிய அரசியல் சூழ்நிலைகள் சாதகமாக அமைந்தன. மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு (கி.பி.1217) சோழர் மரபில் வலிமைமிக்க அரசர் யாரும் தோன்றவில்லை. சிற்றரசர்கள் பலர் வலிமை பெற்று ஆங்காங்கே தங்களது செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ளத் தொடங்கினர். இதன் காரணமாக சோழப் பேரரசு நிலைகுலைய ஆரம்பித்தது. பாண்டிய மன்னர்கள் இச்சூழலை நன்கு பயன்படுத்திக் கொண்டு தங்களது ஆதிக்கத்தை நிலை நிறுத்த வழிசெய்து கொண்டனர். இக்கால பாண்டிய மன்னர்களின் ஆட்சியை இரண்டாம் பாண்டியப் பேரரசு எனக் கொள்ளுகிறோம். புதுக்கோட்டைப் பகுதியும் இரண்டாவது பாண்டியப் பேரரசில் அடங்கியிருந்தது. இக்காலத்தில் ஆண்ட அரசர்கள் பற்றியும், அக்கால அரசியல் சமுதாயம், பொருளாதாரம் ஆகியன குறித்த செய்திகளைத் தெரிந்து கொள்ள இவர்களது ஆட்சிக்கால கல்வெட்டுகள் இங்கு நிறைய காணப்படுகின்றன.

**முதலாம் சடையவர்மன் குலசேகரப் பாண்டியன் (கி.பி.1190-1217)** அரியனை ஏறியதிலிருந்த இரண்டாம் பாண்டியப் பேரரசின் தொடக்கம் எனக் கொள்ளலாம். வெள்ளாற்றிற்கு தென்மேற்குப் பகுதிகள் இவனது ஆட்சிக்குட்பட்டன. இவனது கால கல்வெட்டுகள் சுமார் எட்டு இங்கு காணப்படுகின்றன.[67] இக்கல்வெட்டுக்கள் இவனது மெய்கீர்த்திகளான பூவின் கிழத்தி, பூதல மடந்தை, பூதலவனிதை ஆகியவற்றைத் தெரிவிக்கின்றன.

**முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1216-1239)** குலசேகரனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தான். இவன் சோழ நாட்டை வெற்றி கொண்டு நெல்லூர் வரை பாண்டியரின் புகழ் பரப்பினான். இவனது கல்வெட்டுகள் இவனை சோனாடு கொண்டருளிய தேவர் எனக் கூறுகிறது. இவனது ஆட்சிக் காலத்தில் புதுக்கோட்டை பகுதி முழுவதும் பாண்டியராட்சிக்குட்பட்டதை இதன் மூலம் அறிகிறோம். இவனது ஆட்சிக்காலத்தில் பொன்னமராவதி புகழுடன் விளங்கியது. இங்கிருந்துதான் இவன், தோல்வியுற்ற, சோழ அரசன் குலோத்துங்கனுக்கு மீண்டும் முடிவழங்கி சோனாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியத் தேவர் என்னும் சிறப்புப் பெயர் பூண்டான். இவனது ஆட்சிக்குட்பட்டு, இப்பகுதியை கங்கையரையர் என்னும் சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். கங்கையரையர் புதுக்கோட்டைப் பகுதியில் கி.பி.16-ம் நூற்றாண்டு வரை செல்வாக்குப் பெற்று விளங்கினர். இவனது காலக் கல்வெட்டுகள் சுமார் எண்பத்து ஆறு புதுக்கோட்டையில் காணப்படுகின்றன.[68] இப்பகுதியின் வரலாறு மற்றும் கலாசாரம் பற்றிய பல அறிய செய்திகளை இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின் **இரண்டாம் சடையவர்மன் குலசேகரன்** ஆட்சிக்கு வந்தான். இவன் ஒரு சில மாதங்களே ஆண்டதாகவும் அவனது கல்வெட்டோ மற்ற செய்திகளோ கிடைக்கவில்லை என டாக்டர் கே.வி.இராமன் கூறுகிறார்.[69] இது தொடர்பான சில கருத்துக்களை இங்கு ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. இக்காலத்தில் ஒரே சமயத்தில் பல பாண்டிய மன்னர்கள் ஆட்சி செலுத்தியிருப்பதைக் காண முடிகிறது. குறிப்பிட்ட பாண்டிய மன்னன் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுவது பெரும் குழப்பமாக உள்ளது. ஒவ்வொரு மன்னனுக்கும் தனித்தனியே மெய்கீர்த்திகள் உண்டு. இதைக் கொண்டு இம்மன்னர்கள் யார் என்பது தெரிய வருகிறது. ஆனால் மெய்கீர்த்திச் சொற்களே இல்லாத கல்வெட்டுக்கள் யாருடையது என்பதை நிர்ணயிப்பதில் பெரும் இடர்பாடுகள் உள்ளன. அறுதியான முடிவுக்கு வர பிற துணைச் சான்றுகளை ஆராய வேண்டியுள்ளது.

இரண்டாம் சடையவர்மன் குலசேகரன் பட்டத்திற்குரியவன் என்ற வகையில் முதலாம் சுந்தரபாண்டியனுடன் இணைந்து ஆட்சி செய்திருக்க வேண்டும். இவன் பாண்டியப் பேரரசின் (ஒரு பகுதிக்கு) ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது கி.பி 1237 ஆகும்.[70] ஆனால் இவனது ஆட்சியின் இறுதி ஆண்டு குறித்து வரலாற்று ஆய்வாளர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடு நிலவுகிறது. இம்மன்னன் இரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆண்டதாக சில வரலாற்று ஆசிரியர்களும் இருபத்தாறு ஆண்டுகள் வரை ஆண்டதாக வேறு சிலரும் சுட்டிக் காட்டுகின்றனர். இவனது மெய்கீர்த்தி 'பூதல வனிதை' என்று தொடங்குவதாகவும், இவனுக்கு முன் ஆண்ட முதலாம் குலசேகரனது (1190-1217) மெய்கீர்த்தி 'பூவின் கிழத்தி' என்று தொடங்குவதாகவும் திரு.என்.சேதுராமன் கருதுகிறார். ஆனால் இந்த இரண்டு மெய்கீர்த்திகளும் சடையவர்மன் முதலாம் குலசேகரனையே குறிப்பதாக டாக்டர் கே.வி.இராமன் கருதுகிறார்.

இரண்டாம் சடையவர்மன் குலசேகரன் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள புதுக்கோட்டை கல்வெட்டுகள் பெரிதும் துணைபுரிவதைக் காணலாம். இவனது காலத்துக் கல்வெட்டுகள் பத்து புதுக்கோட்டையில் காணப்படுகின்றன.[71] இவற்றுள் முதல் மூன்று கல்வெட்டுகள் மட்டும் சடையப்பன்மர் (சடையவர்மன்) குலசேகரத் தேவர் என்று மட்டும் குறிக்கின்றன. மேலும் இவற்றுள் பூதல வனிதை என்னும் மெய்கீர்த்தி வாசகங்களும் இல்லை. இம்மூன்று கல்வெட்டுகளும் அவனது இரண்டாவது ஆட்சியாண்டிலிருந்து எட்டாவது ஆண்டுவரை உள்ளவையாகும். மீதமுள்ள ஏழு கல்வெட்டுகளிலும் 'குலசேகரன்' என்று மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டுக்கள் இரண்டாம் குலசேகரனைக் குறிப்பதாக கொள்ளப் பிற ஆதாரங்களைத் தேட வேண்டியுள்ளது. முந்தைய அரசனான முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து புதுக்கோட்டை கல்வெட்டில்[72] குறிப்பிடப்படும் சுந்தன் ஆளுடையான் என்னும் அரசு உயர் அதிகாரி ஒருவன் இரண்டாம் குலசேகரன் காலத்து புதுக்கோட்டைக் கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்படுகிறான். இதைக் கொண்டு புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் 328-337ல் குறிப்பிடப்படும் பாண்டிய மன்னன் இரண்டாம் குலசேகரன் என்பதை உறுதி செய்து கொள்ள முடிகிறது. சேலம் மாவட்டத்தில் கிடைத்துள்ள சில கல்வெட்டுகளின் அடிப்படையில் சடையவர்மன் இரண்டாம் குலசேகரன் கி.பி.1259 வரை வாழ்ந்திருக்க வேண்டுமென டாக்டர் எ.ஜே.தினகரன் கருதுகிறார்.[73] மேலும் இவனது ஆட்சிக்காலம் குறித்து கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, எல்.டி.சுவாமிக்கண்ணுப்பிள்ளை, சதாசிவப் பண்டாரத்தார் போன்றவர்கள் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இருப்பினும் கீழ்க்கண்ட கருத்துக்கள் கவனிக்கத்தக்கன.

1. மாறவர்மன் இரண்டாம் குலசேகரன் அரியணை ஏறிய ஆண்டு கி.பி.1237 எனக் கொண்டால், இவன், இவனுக்கு முன்னால் ஆட்சி செலுத்திய முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலும் (கி.பி.1216-1239) அதற்குப்பின் ஆண்ட இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்திலும் (கி.பி.1238-1251) பாண்டியப் பேரரசில் இணைந்து ஆட்சி நடத்தியிருக்கிறான் எனக் கொள்ள வேண்டும்.

2. புதுக்கோட்டை கல்வெட்டுகளில் இவனது அதிகபட்ச ஆட்சியாண்டு இருபத்து ஆறு எனக் குறிப்பிடப்படுவதால் (அதாவது கி.பி.1263 வரை) இம்மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்திலும் (கி.பி.1251-1271) இவனுடன் இணையாக ஆண்ட சடையவர்மன் வீரபாண்டியன் காலத்திலும் (கி.பி.1253-1274) இணையாக ஆண்டு வந்திருக்கவேண்டும்.

3. சடையவர்மன் இரண்டாம் குலசேகரனின் கல்வெட்டுகள் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சிறிய எல்லைக்குள்ளேயே காணப்படுகின்றன. இவை இவனது இரண்டாவது ஆட்சியாண்டிலிருந்து இருபத்து ஆறாவது ஆண்டுவரை உள்ளவை என முன்பே கண்டோம். இவனுக்கு இணையாக ஆண்ட மேலே குறிப்பிட்ட வலிமைமிக்க மன்னர்கள் (இரண்டாம் குலசேகரன் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டு இருந்தான் என்ற கருத்தும் உண்டு) பரந்த நிலப்பரப்பை ஆண்டு கொண்டிருக்கையில், இம்மன்னன் புதுக்கோட்டைப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட சிறிய பகுதியை எவ்வித ஆரவாரமுமின்றி ஏறத்தாழ இருபத்து ஆறு ஆண்டுகள் (கி.பி.1263-வரை) ஆண்டு வந்திருப்பான் எனக் கொள்ளலாம்.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1238-1251) பாண்டிய நாட்டை (வேறு சில மன்னர்களுடன் இணையாக) ஆண்டான். இவனதுகாலத்தில் ஹோய்சளரின் செல்வாக்கு பாண்டிய மண்டலத்தில் ஓங்கியிருந்தது. இக்கால ஹோய்சள மன்னன் 'பாண்டிய குல சம்ரட்சகன்' என்று புகழப்படுகிறான். இப்பாண்டிய மன்னன் காலத்து கல்வெட்டுகள் ஏழு இங்கு காணப்படுகின்றன.[74] திருமயத்தில் சைவ சமயத்தவருக்கும் வைணவ சமயத்தவருக்கும் இடையே இருந்த சர்ச்சையை ஹோய்சள நாட்டு தளபதி அப்பன்னா தீர்த்து வைத்ததாக இவன் காலத்துக் கல்வெட்டுகள் (எண்:340,341) தெரிவிக்கின்றன.

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251-1271) இரண்டாம் பாண்டியப் பேரரசின் தலை சிறந்த அரசனாவான். இவனது தலைமையில் பாண்டியர் ஆதிக்கம் தமிழகமெங்கும் பரவியதோடு மட்டுமின்றி நெல்லூர், கடப்பை, மலைநாடு, கொங்குநாடு, ஆகியவற்றிலும் பரவியிருந்தது. இவனதுகாலத்தில் சோழ வம்சத்து மன்னர்கள் வரலாற்று மேடையிலிருந்து மறைந்தனர் எனக் கூறலாம்.

இவனது காலத்து கல்வெட்டுகள் சுமார் பதினைந்து புதுக்கோட்டையில் காணப்படுகின்றன.[75] பாண்டியரது மேலாண்மைக்குட்பட்டு புதுக்கோட்டைப் பகுதியை கங்கையரையர்கள் ஆண்டு வந்தனர் என ஏற்கனவே கண்டோம். இவனதுகாலத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல கோயில்களுக்கு கொடை அளிக்கப்பட்ட செய்திகள் மேற்கண்டக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனது ஆட்சியின்போது அவனுக்கு உறுதுணையாக இருந்தவர்களுள் சடையவர்மன் வீரபாண்டியன் குறிப்பிடத்தக்கவன் இவனது ஆட்சிக்காலம் கி.பி.1253-1274 ஆகும். இவன் சுந்தரபாண்டியனுடன் சேர்ந்து ஆட்சி நடத்தியதாகவும் கருதப்படுகிறது. பாண்டியப் பேரரசு கடல் கடந்த நாடுகளிலும் பரவியிருந்த செய்தியை குடுமியான்மலைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இவனது ஆட்சிக்காலத்து கல்வெட்டுகள் சுமார் இருபத்துநான்கு இங்கு காணப்படுகின்றன.[76] அவற்றுள் இப்பகுதியை ஆண்டுவந்த கங்கையரையர், வாணாதிரையர் ஆகியோர் பற்றிய செய்திகளும், பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு கொடைகள் அளிக்கப்பட்டச் செய்திகளும், இன்னும் பல முக்கிய வரலாற்றுக் குறிப்புகளும் காணப்படுகின்றன.

முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 1268 - 1311) சுந்தரபாண்டியன் மற்றும் விக்ரம பாண்டியன் (கி.பி.1283-1296) ஆகியோருடன் சேர்ந்து ஆட்சி புரிந்தான். சுந்தரபாண்டியன் ஆட்சி முடிந்த பிறகு சுமார் 40 ஆண்டுகள் இவன் அரசாண்டான். 'கலேஸ்தேவர்' என முஸ்லீம் வரலாற்று ஆசிரியர்களும், 'அஷார்' என்று மார்கோபோலோவும் குறிப்பிடுவது இவனே. இவன் காலத்தில் பாண்டிய நாடு, அரசர் ஐவரால் ஆளப்பட்டதாகவும் அவர்களுள் மூத்தவனும், தலை சிறந்தவனும் இவனே ஆவான் என மார்க்கோபோலோ குறித்துள்ளார். ஒரே சமயத்தில் பாண்டிய சகோதரர்கள் பலர் ஆண்டு வந்ததை முஸ்லீம் வரலாற்று ஆசிரியர் வசாப் குறிப்பும், இலங்கை வரலாற்று நூலான மகாவம்சமும் தெரிவிக்கின்றன. இதை உறுதிப்படுத்தும் வண்ணம் 13ம் நூற்றாண்டு பிற்பகுதி கல்வெட்டுகள், பல்வேறு பாண்டிய அரசர்களின் பெயரில் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுள் மாறவர்மன் விக்ரமபாண்டியன், சடையவர்மன் சுந்தரன், சடையவர்மன் வீரபாண்டியன் மாறவர்மன் ஸ்ரீவல்லபன் போன்றோரின் பெயரிலேயே கல்வெட்டுகள் ஆங்காங்கு கிடைத்துள்ளன. பாண்டியநாட்டு ஆட்சிப் பகுதிகளை நன்கு இணைக்கும் பொருட்டு சகோதர்கள் பலர் ஒன்றாக சேர்ந்து ஒவ்வொருவரும் ஒரு பகுதியை ஆண்டிருக்கக்கூடும். இவர்களுள் இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனும் (கி.பி. 1296-97) மூன்றாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனும் (1303) (இருவரும் சகோதர்கள்) குலசேகரபாண்டியனின் ஆட்சி இறுதி ஆண்டுகளில் அவனுடன் சேர்ந்து ஆண்டுவந்தனர். இவர்கள் இருவருக்கும் பாண்டிநாட்டு அரசுரிமை குறித்து உள்நாட்டுக்

கலகம் மூண்டது. இந்த சந்தர்ப்பத்தில்தான் மதுரையின் மீது மாலிக்காபூர் படையெடுப்பு நிகழ்ந்தது. குலசேகரன் காலத்தில் பாண்டியநாடு தென்னிந்தியா முழுவதும் பரவி இருந்தது. இக்காலப் பாண்டிய நாட்டின் செல்வச் சிறப்பினை மார்க்கோபோலோ வியந்து பாராட்டியுள்ளார். குலசேகரனின் காலத்தில் புதுக்கோட்டைப பகுதியாகிய கோனாட்டை குலசேகர மாபலிவாணாதிரையன் என்பான் சிற்றரசனாக இருந்து ஆண்டு வந்தான். இக்காலத்தில் ஆண்ட பாண்டிய மன்னர்கள் பலரது கல்வெட்டுகளும் இங்கு கிடைத்துள்ளன:- முதலாம் மாறவர்மன் குலசேகரன்[77] இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்[78] சடையவர்மன் வீரபாண்டியன்[79] மூன்றாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்[80] ஆகியோரது கல்வெட்டுகள் அவை.

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் பாண்டியப் பேரரசின் அழிவுக்கு அடிகோலத் தொடங்கியது எனலாம். புதுக்கோட்டைப் பகுதியை இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் கி.பி.1346 வரை ஆண்டு வந்தான் என்பதற்கு ஆதாரமாக இவனது காலக் கல்வெட்டுகள் சில இங்கு கிடைத்துள்ளன.[81] இவனது காலத்தில் கடம்பராயர் என்னும் சிற்றரசர்கள் இப்பகுதியை ஆண்டு வந்தனர். இதன்பிறகு ஆண்ட முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் பெயரால் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[82] இவன் கி.பி.1315-ல் ஆட்சிக்கு வந்து முன்சொன்ன மன்னனுடன் சேர்ந்து ஆட்சி செய்திருக்க வேண்டும்.

## 16. பாண்டிய நாட்டில் உள்நாட்டுக் கலக்மும், முஸ்லீம்களின் வருகையும்

மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268-1311) பாண்டிய நாட்டை திறமையுடன் ஆண்டு வந்தபோதிலும் இவனது இறுதிக்காலம் மிகவும் துன்பகரமாக முடிந்தது. குலசேகரனுக்கு சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் என்ற இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களுள் சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் மகன் என்றும், வீரபாண்டியன் வேறு மனைவியின் மகன் என்றும் வசாப் குறிப்பிட்டுள்ளார். (இதுபற்றி மாறுபட்டக் கருத்துக்களும் உண்டு) இருவரும் தம் தந்தையுடன் சேர்ந்து இளவரசராக ஆட்சி செய்ததை முன்பே கண்டோம். வீரபாண்டியன் 1296-97ல் ஆண்டிலும், சுந்தரபாண்டியன் சுமார் 1303ம் ஆண்டிலும் பட்டத்து இளவரசராயினர். இவ்விருவருக்கும் ஏற்பட்ட பொறாமையும், பகையும் பாண்டிய நாட்டையே பெரும் குழப்பத்தில் ஆழ்த்தி அதன் அழிவுக்கு வித்திட்டது. தனக்குப்பின் வீரபாண்டியனே அரசனாக வேண்டுமென குலசேகரன் விரும்பினான். இதை அறிந்த சுந்தரபாண்டியன் தன் தந்தையையே கொலை செய்து மதுரையில் முடிசூட்டிக் கொண்டான். வீரபாண்டியன் சுந்தரபாண்டியனோடு போர் தொடுத்தான். இதைத் தொடர்ந்து மக்களும், படையினரும் பெரும் குழப்பமடைந்தனர்.

பாண்டிய நாட்டில் அரசுரிமைக் குறித்து போர் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவன் மாலிக்காபூர் ஹோய்சள நாட்டின் தலைநகரான துவார சமுத்திரத்தை வெற்றி கொண்டபின் தமிழகத்தின் செல்வ வளத்தைக் கேள்வியுற்று தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தான். இத்தருணத்தில் பாண்டிய நாட்டில் நிலவிய குழப்பம் அவனை மேலும் ஊக்குவித்திருக்க வேண்டும். மாலிக்காபூரின் படையெடுப்புக்கு இது ஒரு முக்கிய காரணம்.

தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த மாலிக்காபூரின் உதவியை சுந்தரபாண்டியன் நாடினான் எனச் சொல்லப்படுகிறது. மாலிக்காபூருக்கு சுந்தரபாண்டியன் மீது தனிப்பற்றோ வீரபாண்டியன் மீது பகையோ கிடையாது: அவனது பற்றெல்லாம் தென்னாட்டிலிருந்த பொன் மற்றும் விலையுயர்ந்த பொருள்களின் மீதுதான்! ஆகையால் அவன் மதுரையை நோக்கி வேகமாக முன்னேறினான். இது நடந்தது ஹிஜ்ரி 710-அதாவது கி.பி.1310-11. இவ்வாண்டு பாண்டிய நாட்டில், ஏன், தமிழக வரலாற்றிலேயே ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

மாலிக்காபூரின் பாண்டிய நாட்டு படையெடுப்பைப் பற்றிய விவரங்கள் அமீர்குஸ்ரு, ஜியாவுதீன் பர்னி, இசாமி, பெரிஸ்தா ஆகியோரின் குறிப்புகளிருந்துக் கிடைக்கின்றன. அவற்றுள் சில ஊர்களின் பெயர்களும் மற்ற சில விவரங்களும் தெளிவு பெறவில்லை. இதுபற்றி அறிஞர்களிடையே நிறைய கருத்து மோதல்கள் இருந்தே வருகிறது. இருப்பினும் டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் ''தென்னிந்தியாவும் முஸ்லிம்களின் படையெடுப்பும்'' என்ற தனது நூலில், அந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொகுத்து அளித்துள்ளார். பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இவர் கூறியுள்ள கருத்துக்களை பின்பற்றியே தங்கள் கருத்தை எழுதியுள்ளனர்.

## 17. புதுக்கோட்டையிலே மாலிக்காபூர்

மதுரையை நோக்கிச் சென்ற மாலிக்காபூரும் அவனது படையும் புதுக்கோட்டைப் பகுதி வழியாகச் சென்றனர் என்றும், அப்போது நார்த்தாமலை, குடுமியான்மலை, கொடும்பாளூர் ஆகிய இடங்களில் இருந்த கோயில்களும், சேதப்படுத்தப்பட்டன என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[83] புதுக்கோட்டை வழியாக மாலிக்காபூர் சென்ற வழித்தடங்கள், அது தொடர்பான நிகழ்வுகள் ஆகியன குறித்து இதுவரை வரலாற்று ஆசிரியர்கள் தெரிவித்துள்ள செய்திகளை விரிவாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

மாலிக்காபூர் புதுக்கோட்டை வழியாக மதுரைக்குச் சென்ற வழித்தடம் பற்றிய விவரங்களை டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் தனது நூல்[84] பக்கம் 104-108ல் கூறியிருப்பதாவது:-

1. கண்ணனூரிலிருந்த (சமயபுரம்) புறப்பட்ட மாலிக்காபூர் மூன்று வழிகளில் மதுரையை அடைந்திருக்க வாய்ப்புண்டு. முதலாவதாக திருச்சி, திண்டுக்கல், பழனி, வத்தலகுண்டு, பெரியகுளம் வழியாக; இரண்டாவதாக திருச்சி, விராலிமலை, கோயில்பட்டி, துவரங்குறிச்சி, அழகர் மலை வழியாக (தற்போதைய திருச்சி-மதுரை பேருந்து சாலைத் தடம்); மூன்றாவதாக திருச்சி, கீரனூர், புதுக்கோட்டை வழியாக.

2. சங்க காலத்திலிருந்தே உறையூரிலிருந்து மதுரைக்கு பெருவழித் தடம் இருந்ததாக சிலப்பதிகாரம் கூறுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

3. ஆனால் கண்ணனூரிலிருந்து புறப்பட்ட மாலிக்காபூர் 'காம்' (kham) என்ற இடத்தில் முகாமிட்டு தங்கி பின்னர் ஐந்து நாள் பயணத்திற்குப் பின் மதுரையை அடைந்ததாக அமீர்குஸ்ருவின் குறிப்பு தெரிவிக்கிறது.

4. அக்காலத்தில் மதுரையிலிருந்து பொன்னமராவதிக்குச் சாலை இருந்தது. அதே போன்று பொன்னமராவதியிலிருந்து திருச்சிக்கு, புதுக்கோட்டை வழியாகவோ, அல்லது புதுக்கோட்டைக்கு சற்றுத் தள்ளியோ ஒரு சாலை இருந்திருக்கவேண்டும். இதுதான் சிலப்பதிகாரம் கூறும் உறையூர்-திருச்சி பெருவழியாகும். ஆனால் தற்போது திருச்சியிலிருந்து, புதுக்கோட்டை, திருமயம், திருப்பத்தூர் வழியாக-பொன்னமராவதிக்குச் செல்லாமல்-மதுரை வழித்தடம் செல்லுகிறது.

5. கொடும்பாளூர் - புதுக்கோட்டை சாலையில் குடுமியான் மலைக்குச் சற்றுத் தள்ளி தென்திசையில் பொன்னமராவதிக்கு (காரையூர் வழியாக) ஒரு சாலை பிரிந்து செல்லுகிறது. இந்தச் சாலையிலிருந்து வடதிசையில் சென்றோமானால் குடுமியான்மலை, அன்னவாசல், சித்தன்னவாசல் வழியாக நார்த்தாமலையை அடையலாம். நார்த்தாமலையிலிருந்து எளிதில் திருச்சி செல்ல முடியும். இந்த வழியாகத்தான் மாலிக்காபூர் மதுரைக்குச் சென்றிருக்கவேண்டும் எனக் கொள்ளலாம்.

6. அமீர்குஸ்ரு 'காம்' என்றுக் குறிப்பிடுவது 'கடம்பவனம்' என்பதன் திரிபாகும். இவ்விடம் நார்த்தாமலை ஆகும். நார்த்தாமலையில் உள்ள கடம்பர் மலை அடிவாரத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானுக்கு கடம்பவனேஸ்வரர் என்று பெயர். நார்த்தாமலை அக்காலத்தில் கோட்டை கொத்தளங்களுடன் விளங்கிய இடமாகும். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (கி.பி.1216-1239) இங்குள்ள கடம்பர் கோயில் கட்டப்பட்டு, கடம்பவனம் (கடம்பவனம் மதுரையின் மற்றொரு பெயர்) என்னும் (ஒரு எல்லை) நகரை உருவாக்கியிருக்கவேண்டும். இந்தக் கடம்பவனத்திலிருந்து மதுரை 75 மைல் தொலைவு இருக்கும். இந்த தூரத்தை ஐந்து நாட்களில் கடந்து செல்லமுடியும். ஆகவே அமீர்குஸ்ரு, 'காம்' என்றுக் குறிப்பிடுவது நார்த்தாமலைதான்.

7. மேற்கண்ட முடிவுக்கு ஆதாரமாக திருப்பத்தூர் அருகிலுள்ள திருக்காளக்குடி கோயிலில் ஹஜிரி 761ம் (கி.பி.1359-60) ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றினைக் குறிப்பிடலாம். சூரைக்குடி சிற்றரசர்களை அடக்குவதற்கு சென்ற முஸ்லிம் படைத்தலைவர்கள் சிலர் மாத்தூர்குளம் என்னும் ஊரில் தங்கியிருந்தபோது, விரையாச்சிலை, கோட்டையூர் ஆகிய ஊர் மக்களுக்கிடையே இருந்த சில வழக்குகளை விசாரித்து முடித்துவைத்தன» என்று இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இதிலிருந்து மாத்தூர்குளம் என்னும் ஊர் பொன்னமராவதியிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் இருந்தது என்பது விளங்கும். இந்தக் கல்வெட்டு குறிப்பிடும் மாத்தூர்குளம் என்பது தற்போது திருச்சி-புதுக்கோட்டை சாலையில் உள்ள 'மாததூர்' ஆகும். மாததூர், 'காம்' எனப்படும் கடம்பவனத்திற்கு (நார்த்தாமலை) அருகில் உள்ளது.

8. ஆகவே கணணனூரிலிருந்து புறப்பட்ட மாலிக்காபூர் படையினர் திருச்சி, மாத்தூர், நார்த்தாமலை, சித்தன்னவாசல், அன்னவாசல், குடுமியான்மலை, பொன்னமராவதி (காரையூர் வழியாக) கண்டவராயன்பட்டி, திருப்பத்தூர் வழியாக மதுரையை அடைந்திருக்கவேண்டும்.

பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் (இனி அய்யங்கார் எனக் குறிப்பிடுவோம்) அவர்களின் கூற்றை சற்று ஆழமாக ஆராய்ந்தால் அதிலுள்ள குழப்பங்களும் தெளிவின்மையும் நமக்குப் புலப்படும். அனுமானங்களின் அடிப்படையிலேயே அவர் இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும், புதுக்கோட்டை பகுதி வழியாக சென்றிருக்க வேண்டுமென வலிந்து பொருள் கொண்டுள்ளதாகவும் எண்ணத் தோன்றுகிறது. தற்காலத்தில் உள்ள சாலைகளின் அமைப்புகளைக் கொண்டு அவர் இந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அவர் குறிப்பிடும் இந்த வழிகூட மிகவும் சுற்று வட்டமானது. மாலிக்காபூர் சென்ற வழியிலிருந்த ஊர்களின் பெயர்களாக அமிர்குஸ்ரு குறிப்பிடும் பெயர்களெல்லாம் இன்னும் அறிஞர்களிடையே சர்ச்சைக்குறியதாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக மர்ஹட்புரி என அமீர்குஸ்ரு குறிப்பிடும் இடம் சிதம்பரம், ஸ்ரீரங்கம், ராமேஸ்வரம், என பலவாறாகச் சொல்லப்படுகிறது. கங்கை கொண்ட சோழபுரம், சிதம்பரம் ஆகிய இடங்களுக்கெல்லாம் மாலிக்காபூர் சென்றதாக கூறப்படுவதற்கு இன்னும் ஆதாரங்கள் தேடப்பட்டே வருகின்றன. 'இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சில ஊர்களின் வழியாகவே மாலிக்காபூர் சென்றதாக கூறப்படும் கருத்து ஏற்புடையதா? இதுகுறித்து அய்யங்கார் கூறியுள்ள முடிவான கருத்துக்கள் ஒவ்வொன்றையும் ஆராய்வோம்!

1. மாலிக்காபூரின் பயணத் தொடக்கமே இப்படியிருக்கலாம் அல்லது அப்படியிருக்கலாம் என்று தனது அனுமானத்தையே பேராசிரியர் கூறியுள்ளார். வலுவான ஆதாரங்கள் எதையும் சுட்டிக் காட்டவில்லை.

2. அமீர்குஸ்ருவின் 'காம்' என்ற நார்த்தாமலையில், மேலமலை, மண்மலை, ஆளுருட்டி மலை, போன்ற பல கருங்கல் குன்றுகள் உள்ளன. இவற்றுள் கடம்பர் மலையும் ஒன்று. இந்த மலையின் அடிவாரத்தின் கடம்பர் கோயில் என்றதொரு கோயில் உள்ளது. நார்த்தாமலையிலுள்ள மாறவர்மன் முதலாம் சுந்தரபாண்டியன் காலத்து கல்வெட்டு இவ்வூரை குலோத்துங்க சோழப்பட்டணம் என்று அழைக்கிறது.[85] 'கடம்பவனம்' என்ற பெயர் இந்தக் கல்வெட்டுகளில் இல்லை. மேலும் கடம்பர்மலை அடிவாரத்திலுள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை திருக்கடம்பூர் உடைய நாயனார் என்றே இங்குள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அய்யங்கார் குறிப்பிடுவதுபோல் கடம்பவனேஸ்வரர் என்று அல்ல. மேலும் அவர் கூறுவதுபோல் கடம்பர் கோயிலில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்டதும் அல்ல. அதற்கு முன்பே சோழர் காலத்தில் எடுப்பிக்கப்பட்டதாகும். ஏனெனில் ராஜராஜ சோழன் காலத்து - 22வது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று (கி.பி.1007) இக்கோயிலில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.[86] முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட கோயில், கடம்பர் கோயிலுக்கு அருகிலுள்ள நகரீச்சுரம் எனனும் சிவன் கோயிலாகும்.[87] அய்யங்கார் குறிப்பிடுவதுபோல் கடம்பர் கோயில் அல்ல. கடம்பவனம் என்பது மதுரையின் மற்றொரு பெயர் என்பதும் அப்பெயர் நார்த்தாமலைக்கு எந்தக் காலத்திலும் வழங்கப்பட்டதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லையென்றும் ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. ஆகவே 'காம்' எனப்படுவது நார்த்தாமலைதான் எனக் கொள்ள, தக்கச் சான்றுகள் இல்லை.

3. நார்த்தாமலை வழியாக மாலிக்காபூர் சென்றதாக கூறுவதற்கு ஆதாரமாக திருப்பத்தூர் அருகிலுள்ள திருக்காளக்குடிக் கல்வெட்டில் மாத்தூர்குளம் என்ற ஊர்ப்பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், இவ்வூர் திருச்சிக்கும், கீரனூருக்கும் இடையில் உள்ள மாத்தூர் என்றும் அய்யங்கார் குறிப்பிடுகிறார். இக்கல்வெட்டு கூறும் செய்திகளை முன்பே கண்டோம். மாலிக்காபூர் படையெடுப்புக்கும் இந்தக் கல்வெட்டுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இக்கல்வெட்டு அக்காலத்தைச் சேர்ந்ததும் அல்ல. இக்கல்வெட்டின் காலம் ஹிஜிரி-761 (கி.மு.1359-60) மதுரையில் டெல்லி சுல்தான்களின் ஆட்சி நடந்துகொண்டிருந்த காலம் அது. மாலிக்காபூர் 'காம்' என்ற இடத்தில் முகாமிட்டது ஹிஜிரி710-ஜுல்ஹதா 17ம் நாள் (8.4.1311). மதுரையை ஆண்ட சுல்தானின்

படைத்தலைவர்கள் சூரைக்குடி சிற்றரசர்களை அடக்கச் சென்றபோது மாத்தூர் குளத்தில் முகாமிட்டு விரையாச்சிலை, கோட்டையூர் ஆகிய ஊர் மக்களிடையே இருந்த வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்தாக திருக்காளக்குடி கல்வெட்டு குறிப்பிடுகிறது. அய்யங்கார் குறிப்பிடுவது போல் மாத்தூர்குளம் என்பது திருச்சி-புதுக்கோட்டை சாலையிலுள்ள மாத்தூர் என்று கொண்டால், விரையாச்சிலை, கோட்டையூர் ஆகிய ஊர்கள் மாத்தூரிலிருந்து ஏறத்தாழ 75 கி.மீ. தூரத்தில் உள்ளன. இவ்வளவு தூரத்திற்கு சில கிராமத்து பொதுமக்களை அழைத்து வழக்குகளை விசாரித்ததாகக் கொள்வது பொருத்தமாகவும், ஏற்புடையதாகவும் இல்லை. சூரைக்குடி, விரையாச்சிலை, கோட்டையூர், திருக்காளக்குடி ஆகிய ஊர்கள் அனைத்துமே அருகருகே உள்ளவை. இவ்வூர்கள் அனைத்துமே காரைக்குடிக்கு அருகில் உள்ளன. காரைக்குடிக்கு அருகில், மாத்தூர் என்றொரு ஊர் உள்ளது. இவ்வூரில் ஒரு பெரிய ஊரணியும் (குளம்) உள்ளது. இவ்வூர்ப் பகுதி சூரைக்குடி சிற்றரசர்களின் ஆளுகையில் இருந்தது. ஆகவே மேற்படி கல்வெட்டு குறிப்பிடும் மாத்தூர்குளம் என்பது (காரைக்குடிக்கு அருகிலுள்ள) மாத்தூர் எனக் கொள்ளலாம். திருச்சி புதுக்கோட்டை சாலையிலுள்ள மாத்தூர் என அய்யங்கார் குறிப்பிடுவது சற்றும் ஏற்புடையதாகவும் பொருத்தமாகவும் இல்லை. நவீன பொதுப் போக்குவரத்து வாகனங்கள், நடைமுறைக்கு வருமுன் புதுக்கோட்டையிலிருந்து, திருச்சிக்கும், தஞ்சாவூருக்கும், (வாடகை) குதிரை வண்டிகளில் (ஜட்கா) செல்லலாம். இந்தக் குதிரை வ்ண்டிகள் சமஸ்தானத்தின் எல்லை வரை செல்லும், திருச்சிக்கு செல்லுபவர்கள் தற்போதைய மாத்தூரில் இறங்கி அங்கிருந்து வேறு ஊர்களுக்குச் செல்லவேண்டும். ஆகவே இந்த ஊருக்கு மாத்தூர் (மாற்று+ஊர்) என்று பெயர் ஏற்பட்டது. திருச்சியையும், பொன்னமராவதியையும் இணைத்துக் காட்டுவதற்கு அய்யங்கார் சுட்டிய இச்சான்று பொருத்தமின்றி வலுவற்றதாகி விடுகிறது.

4. சங்க காலத்தலிருந்தே உறையூரிலிருந்து மதுரைக்கு மூன்று பெருவழிகள் இருந்திருக்கின்றன என்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது. இப்பெருவழிகள் மாலிக்காபூர் படையெடுப்பின்போதும் இருந்திருக்க வேண்டுமல்லவா? எளிதாகச் செல்லத்தக்கதாக்வும் ஒருபெருவழி இருக்க, சுற்றுவட்டமாக நார்த்தாமலை, குடுமியான்மலை, பொன்னமராவதி வழியாக மாலிக்காபூர் சென்றதாகக் கொள்வதும், சிலம்பு குறிப்பிடும் உறையூர்-மதுரை பெருவழியும் இதுவே என அய்யங்கார் குறிப்பிடுவதும் சற்றும் ஏற்புடையதாகத் தெரியவில்லை. இவ்விடங்களின் செழிப்பு கருதி இப்பகுதி வழியாகச் சென்றிருக்கக்கூடும் எனக் கொண்டால், மாலிக்காபூர் எதிர்பார்த்த அளவிற்கு இப்பகுதி ஒன்றும் செல்வச் செழிப்பு மிக்கதும் அல்ல.

ஆகவே, மாலிக்காபூர், எளிதில் செல்லும் வண்ணம் இருந்த உறையூர் மதுரைப் பெருவழியையே (விராலிமலை, மருங்காபுரி, துவரங்குறிச்சி, அழகர்மலை வழியாகச் செல்லத்தக்கதாக இருந்த சாலை) பயன்படுத்தியிருக்க வேண்டுமென்பது பொருத்தமானதல்லவா?

மேலே சொன்ன காரணங்களால் அய்யங்கார் கண்டுபிடித்துள்ள, மாலிக்காபூர் கண்ணனூரிலிருந்து மதுரை சென்ற வழித்தடம் பற்றிய கருத்து ஏற்புடையதுதானா?

5. மாலிக்காபூர் மதுரைக்குச் சென்ற வழி குறித்து இன்னும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறும் கருத்துக்களையும் காண்போம்:-

'கண்ணனூரிலிருந்து மதுரைக்குப் புறப்பட்ட மாலிக்காபூர் கொடும்பாளூர் பொன்னமராவதி வழியாகச் சென்றதாகக் கூறப்படுகிறது.'[88] பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் கூறும் 'காம்', மாத்தூர்குளம் ஆகிய வழித்தடம் இவ்வழித் தடத்திலிருந்து முற்றிலும் மாறுபடுகிறது. மேலும் மாலிக்காபூர் படையெடுப்புடன் பொன்னமராவதியை தொடர்புபடுத்த இப்பகுதியிலுள்ள ஹிஜிரி ஆண்டு குறிப்பிட்டுள்ள இரண்டு கல்வெட்டுக்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் ஒன்று ராங்கியத்திலும், மற்றொன்று மேலப்பனையூரிலும் காணப்படுகின்றன ராங்கியம் கல்வெட்டு ஹிஜிரி 732ம் (கி.பி.1332) ஆண்டையும், பனையூர் கல்வெட்டு ஹிஜிரி 734ம் (கி.பி.1334) ஆண்டையும் சேர்ந்தவை. இக்காலத்தில் டெல்லி சுல்தான் முகமதுபின் துக்ளக்கின் பிரதிநிதியாக மதுரையில் ஜலாலுதீன் அசன்ஷா ஆண்டு வந்தது நோக்கத்தக்கது. ஆகவே இக்கல்வெட்டுகளுக்கும் மாலிக்காபூருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. மேலும் கொடும்பாளூரில் மதுரை சுல்தான்களின் காலத்து நாணயங்கள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்ட செய்தியை மாலிக்காபூர் படையெடுப்புத் தொடர்பாக நினைவு கூர்கிறார் முதுபெரும் ஆராய்ச்சி அறிஞர் கே.ஆர்.சீனிவாசன்.[89] ஆனால் இந்த நாணயங்களும் ஜலாலுதீன் அசன்ஷா காலத்தைச் சேர்ந்தவை. மாலிக்காபூர் கொடும்பாளூர் வந்திருந்தால் திருச்சி, விராலிமலை வழியாக வந்திருக்கவேண்டும். அப்படியானால் அய்யங்கார் கூறும் வழித்தடம் இங்கு முற்றிலும் பொருளற்றதாகிவிடுவதைக் காண்கிறோம்.

6. 'மாலிக்காபூர் பெரியகுளம், வத்தலகுண்டு வழியாக மதுரை சென்றடைந்தான்' என்று ராமநாதபுரம் கெசட்டியர் கூறுகிறது.[90]

7. அய்யங்கார் கூறுவது போல், மாலிக்காபூர், நார்த்தாமலை, குடுமியான்மலை, பொன்னமராவதி வழியாக மதுரை சென்றிருக்கவேண்டும். மதுரை செல்லும்போதோ அல்லது திரும்பி வரும்போது கொடும்பாளூர் வழியாக வந்திருக்கலாம் என புதுக்கோட்டை மேனுவலில் கே.ஆர்.வெங்கடராமன் கூறுகிறார்.[91]

ஆகவே மாலிக்காபூர் மதுரைக்குச் சென்ற வழித்தடம் பற்றி வரலாற்று ஆசிரியர்களிடையே ஒருமித்த கருத்தில்லை என்பதும் விளங்கும். இந்நிலையில் அய்யங்கார் காட்டும் வழித்தடத்தை ஏற்க முடியுமா?

8. கொடும்பாளூர் கோயில், நார்த்தாமலையிலிருந்த சமணப் பள்ளிகள், குடுமியான்மலைக் கோயில் சிற்பங்கள், மற்றும் மாவட்டத்தில் பல இடங்களில் இருந்த கோயில்கள் மாலிக்காபூர் படையெடுப்பின்போது இடிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன என்று புதுக்கோட்டை மேனுவல் ஆசிரியர் திரு.கே.ஆர்.வெங்கடராமன் கூறுகிறார். ஆனால் மாலிக்காபூர் முகாமிட்டிருந்த 'காம்' கடம்பவனம் அதாவது நார்த்தாமலையிலுள்ள கடம்பர்கோயில், நகரீச்சுரம் ஆகிய கோயில்கள் இன்றும் நல்ல நிலையில் இருப்பதைக் காண்கிறோம். நார்த்தாமலையிலிருந்த ஏனைய கோயில்களின் கதி இவற்றிற்கும் ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா? பொதுவாக கோயில்களின் இடிபாடுகளுக்கு முஸ்லிம் படையெடுப்புகளைத் தொடர்புப்படுத்திக் காட்டுவது, சில வரலாற்று ஆசிரியர்கள் மிகைப்படுத்திக் கூறும் கருத்துக்களேயாகும்! கோயில்களில் இடிபாட்டிற்கெல்லாம் முஸ்லிம்களின் படையெடுப்பே காரணம் என்று கூறிவிட முடியுமா? மதுரைக் கோயிலை மாலிக்காபூர் இடித்துத் தள்ளியதாக அமிர்குஸ்ரு கூற, அக்கோயிலில் குடிகொண்டுள்ள இறைவனின் மகிமையைக் கண்டு (கல் யானை கரும்பு தின்றது போன்றவை) கோவிலுக்கு எவ்விதத் தீங்கும் செய்யாமல் பின்வாங்கினான் என மதுரைக் கோயில் புராணங்கள் கூறுகின்றன. முஸ்லீம் வரலாற்று ஆசிரியர்களும் கூட இதுபோன்ற செய்திகளை மிகைப்படுத்தியே எழுதியிருக்கிறார்கள் என்பது விளங்கும். டெல்லியிலிருந்த தமது எஜமானர்களைத் திருப்திபடுத்தவே இதுபோன்று அவர்கள் எழுதியிருப்பதாகவும் ஒரு அறிஞர் கருதுகிறார்[92]

ஆகவே டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் கூறியுள்ளபடி கண்ணனூரிலிருந்து புறப்பட்ட மாலிக்காபூர் மாத்தூர், நார்த்தாமலை, சித்தன்னவாசல், அன்னவாசல், குடுமியான்மலை, பொன்னமராவதி, திருப்பத்தூர் வழியாக மதுரைக்கு சென்றதாக சொல்லப்படுவதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதுமில்லை என்பது மேலே சொல்லப்பட்ட ஆய்வுகளின்படி உறுதியாவதால் மாலிக்காபூர் புதுக்கோட்டைப் பகுதி வழியாகச் செல்லவில்லை என்று கொள்ளலாம்.

மாலிக்காபூரின் படையெடுப்பினால் பாண்டிய நாட்டில் எப்பகுதியையும் முஸ்லிம்கள் கைப்பற்றவில்லை எனினும், நாட்டு மக்களிடையே பெரும் அமைதியின்மையும் அரசியல் குழப்பமும் உண்டாயின. தமிழகத்திலிருந்த பெரும் செல்வம் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.[93] இந்நிகழ்ச்சிகள் பாண்டிய பேரரசின் பலவீனத்தையும், அதன் வீழ்ச்சியின் தொடக்கத்தையும் காட்டுகின்றன.

# 18. பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி

பாண்டிய அரசு குடும்பத்தினரிடையே ஏற்பட்ட அரசுரிமைப் போர்களினாலும் சிற்றரசர்கள் சுயேட்சையாக செயல்படத் தொடங்கியதாலும், முஸ்லிம்களின் படையெடுப்பால் ஏற்பட்டக் குழப்பத்தினாலும் இரண்டாம் பாண்டியப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. மாலிக்காபூர் சென்றபிறகு சுந்தர பாண்டியனும் வீரபாண்டியனும் போட்டிப் போட்டுக் கொண்டு சிலகாலம் ஆண்டதாகத் தெரிகிறது. அதன்பின் டெல்லி சுல்தான்களின் பிரதிநிதிகள் மதுரையில் ஆட்சி செய்தது பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

கி.பி.1334-35ல் மதுரையில் சுல்தான்களின் ஆட்சி நிறுவப்பட்டது. அப்போது பாண்டிநாடு 'மாபார்' என அழைக்கப்பட்டது. ஏறத்தாழ 50 ஆண்டுகள் மதுரையில் டெல்லி சுல்தான்களின் ஆட்சி நீடித்தது.

கி.பி.1334-35ல் ஜலாலுதீன் அசன்ஷா மதுரை சுல்தானாக முடிசூட்டிக் கொண்டான். இவன் தனது பெயரிலேயே நாணயங்களை வெளியிடத் தொடங்கினான். இவனுடைய காலத்து இரண்டு நாணயங்கள் கொடும்பாளூரில் கிடைத்துள்ளன. இவனது ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று ராங்கியத்திலும், மற்றொன்று மேலப் பனையூரிலும் காணப்படுவதை ஏற்கெனவே குறிப்பிட்டு உவளோம்.

குழப்பமான இக்காலத்தில் புதுக்கோட்டைப் பகுதியும், மதுரை சுல்தான்களின் ஆளுகையில் இருந்ததை அறிகிறோம். ஆனால் இக்காலத்தில் பாண்டிய மனனர்கள் சிலரும் ஆண்டு வந்திருக்கின்றனர் என்பதை புதுக்கோட்டை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதலாம் மாறவர்மன் வீரபாண்டியன்[94] (கி.பி.1334) மாறவர்மன் ஸ்ரீவல்லபன் (கி.பி.1350)[95] இரண்டாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் (கி.பி.1357)[96] ஆகிய மன்னர்களின் பெயர்கள் இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

கி.பி.12ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுச்சிபெற்ற பாண்டியப் பேரரசு உள்நாட்டு கலவரங்களாலும், முஸ்லிம்களின் படையெடுப்பாலும், கி.பி.14ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சியடைய நேர்ந்தது. இரண்டாம் பாண்டியப் பேரரசு காலத்திற்குட்பட்ட பாண்டிய மன்னர்கள், சிற்றரசர்கள், படைத்தலைவர், அக்காலத்தில் இப்பகுதி அரசியல், சமுதாய, பொருளாதார வரலாறு குறித்து புதுக்கோட்டை கல்வெட்டுச் செய்திகள் தரும் சான்று தமிழக வரலாற்றிற்கு பெருந்துணை புரிவதாக அமைகின்றன.

# 19. விஜயநகர ஆட்சி

தமிழக அரசியல் களத்தில் கி.பி.1330லிருந்து 1370 வரை இடைப்பட்ட 40 ஆண்டு காலத்தில் மதுரை சுல்தான்களின் ஆட்சியே வலுவுள்ளதாக இருந்தது எனச் சொல்லலாம். ஏனெனில் சேரர் திருவனந்தபுரத்தையும் அதன் சுற்றுப் பகுதியை மட்டும் ஆண்டு வந்தனர். சோழரும், பல்லவரும் வரலாற்றிலிருந்து மறைந்து போயினர். ஆகவே இக்கால கட்டத்தில் மதுரை சுல்தானியம் ஒன்றுதான் அரசு என்று சொல்லக்கூடியதாக இருந்தது. கி.பி.1371ல் விஜயநகர இளவரசன் குமார கம்பணன் மதுரை சுல்தானியத்தை அழித்த பிறகு தமிழ்நாட்டில் தனித்தனியங்கக்கூடிய அரசு யாதொன்றும் இல்லாமல் போயிற்று.

விஜயநகரப் பேரரசு ஹரிஹரர், புக்கர் என்னும் சகோதரர்களால் கி.பி.1336ல் நிறுவப்பட்டது. அவ்வரசு துங்கபத்திரை ஆற்றங்கரையில் விஜயநகரம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு அமைந்திருந்தது. இவ்வரசின் முக்கிய நோக்கம், தென்னிந்தியாவில் முஸ்லீம்களின் ஆதிக்கத்தால் இந்து மதமும் இந்து அரசுகளும் அழியா வண்ணம் காப்பது என்பதே. இவ்வரசுக்கு இந்து சமயத் தலைவர்களின் ஆசி இருந்தது. கி.பி.1336ல் தொடங்கி கி.பி.1565 வரை தென்னாட்டில் தன்னிகரில்லாத வல்லரசாக விளங்கியது. அக்காலத்தில் தமிழகம் முழுவதும் விஜயநகரப் பேரரசுக்குட்பட்டிருந்தது. கி.பி.1565க்குப் பின்னரும் தமிழகத்தை ஆண்டவர்கள், விஜயநகரப் பேரரசின் படைத்தலைவர்களாகவும், அரசப் பிரதிநிதிகளாகவும் இருந்தவர்களே ஆவார்கள். இவர்கள் நாயக்க மன்னர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் தெலுங்கு மொழி பேசுவோர். ஆந்திர நாட்டிலிருந்து படைத்தலைவர்களாக இங்கு வந்தவர்கள். தஞ்சை, மதுரை, செஞ்சி, வேலூர் ஆகிய இடங்களில் ஆண்ட மன்னர்கள் இத்தகைய நாயக்கர்கள் ஆவார்கள்.

விஜயநகரப் பேரரசர்கள் தமிழகத்தை தங்கள் பேரரசின் ஒரு பகுதியாகக் கருதி, ராணுவ அதிகாரம் படைத்த அரசப் பிரதிநிதிகள் மூலம் ஆண்டு வந்தனர். இக்காலத்தில் தமிழகத்திற்கே உரித்தான கிராம சுயாட்சி நிறுவனங்கள் புறக்கணிக்கப்பட்டு ராணுவப் பேரரசு ஆட்சி நிலைத்தது. தமிழ் இலக்கிய மரபு மங்கி, தெலுங்கும், வடமொழியும் மிகுந்த ஆதரவு பெற்றன. ஆனால் தமிழகத்து கோயில் கட்டிடக் கலை அழகு பெற்றது.

விஜயநகரப் பேரரசை நிறுவிய ஹரிஹரர் - புக்கர், சங்கம வம்சத்தைச் சேர்ந்தவர்கள், ஆகவே இவர்களது ஆட்சி சங்கம வம்ச ஆட்சி என வழங்கப்பட்டது. இவ்வம்ச ஆட்சி கி.பி.1336ம்

ஆண்டிலிருந்து கி.பி.1485ம் ஆண்டு வரை நீடித்திருந்தது. இக்காலத்தில் சுமார் பத்து மன்னர்கள் ஆண்டுள்ளனர். இம்மன்னர்களின் சார்பில் நாட்டின் பல பகுதிகளையும், இளவரசர்களும் அரசப் பிரதிநிதிகளும் ஆட்சி செய்து வந்துள்ளனர்.

புதுக்கோட்டைப் பகுதியில், சங்கம வம்ச மன்னர்களின் பிரதிநிதிகள் பலரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஹரிஹரர் - புக்கர் ஆகியோரின் சகோதரர் கம்பணனின் பெயரிட்ட கி.பி.1374ம் ஆண்டு கல்வெட்டு திருவேங்கைவாசலிலும்[97] கி.பி.1376ம் ஆண்டு கல்வெட்டு குடுமியான்மலையிலும்[98] காணப்படுகின்றன. முதலாம் விருபாட்சன் காலத்து கி.பி.(1404-05) கல்வெட்டுகள் ஒன்பதும்,[99] இரண்டாம் புக்கர் (கி.பி.1405-06) காலத்தில் அவனது மகன் பூபதி உடையார் என்பானது பெயரிட்ட கல்வெட்டுகள் இரண்டும்[100] மற்ற இடங்களில் காணப்படுகின்றன.

சங்கம வம்சத்தைச் சேர்ந்த விஜயநகரப் பேரரசு கால புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில்[101] இப்பகுதியை ஆண்ட சிற்றரசர்களான, சூரைக்குடி, பேராம்பூர், சேந்தமங்கலம் சிற்றரசர்கள், வாணாதரையர், கங்கையரையர், பெருங்களூர் பல்லவராயர், அறந்தாங்கி தொண்டைமான் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் விஜயநகர மன்னர்களின் மேலாண்மைக்குட்பட்டு இப்பகுதியில் ஆண்டு வந்ததாகக் கொள்ளலாம். பல கோயில்களுக்கு புதிய மண்டபங்கள் கட்டிய செய்திகளும், கடவுளின் திருவுருவங்கள் நிறுவப்பட்ட செய்திகளும், கோவில்களின் பராமரிப்புக்கு கொடையளித்த செய்திகளும் இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஒரு கிராமத்தை வெளியாரின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்த பகுதியை ஆண்ட சிற்றரசர் அல்லது அரசப் பிரதிநிதியின் கடமையாகும். இதற்கு பாடிக்காவல் முறை என்று பெயர். ஆனால் இந்தப் பாடிக்காவல் உரிமை சில கிராமங்களில் அடிக்கடி மாறி வந்திருப்பதை மேற்கண்ட புதுக்கோட்டை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இது, அக்கால அரசியல் அமைதியின்மையைக் காட்டுவதாக அமையும்.

சங்கம வம்ச ஆட்சிக்குப்பின் விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்கு வந்தவர்கள் சாளுவ வம்சத்தைச் சேர்ந்தவர்கள். சாளுவ முதலாம் நரசிம்மன் (கி.பி. 1486-1497) இவ்வம்சத்தின் முதல் மன்னனாவான். இவனுக்குப்பின் இவனது மகன் இம்மாடி நரசிம்மன் ஆட்சிக்கு வந்தான். இவன் சிறிதுகாலம் இவனது தந்தையோடு இணைந்து ஆண்டிருக்கவேண்டும். ஆனால், இம்மாடி நரசிம்மன் பெயரளவிலேயே மன்னனாக இருக்க, அரசு அதிகாரம் முழுவதும், நரசநாயக்கர் என்னும் படைத்தலைவன் வசமிருந்தது. நரசநாயக்கர் கி.பி.1499ல் விஜயநகரப்

பேரரசின் ஆட்சியை முழுமையாக கைப்பற்றிக் கொண்டான். இவனே பின்னர் ஆட்சிக்கு வந்த துளுவ வம்ச முதல் மன்னனாவான். இம்மாடி நரசிம்மன் காலத்துக் கல்வெட்டுகள் இரண்டு இங்கு காணப்படுகின்றன.[102]

விஜயநகர துளுவ வம்ச ஆட்சியை ஏற்படுத்திய நரச நாயக்கர் என்னும் முதலாம் வீர நரசிம்மன் (கி.பி.1497-1503) புதுக்கோட்டை வழியாக மதுரையை நோக்கி படையெடுத்துச் சென்றபோது இப்பகுதியிலிருந்த கோயில்களுக்குக் கொடையளித்த செய்திகளை திருக்களம்பூர், செவலூர், திருமயம் ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[103] இம்மன்னரைத் தொடர்ந்து இரண்டாம் வீர நரசிம்மன் (கி.பி.1504-1509) ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சிக் கால கல்வெட்டுகள் நான்கு இங்கு காணப்படுகின்றன.[104] ஆனால் இவையனைத்தும் இவனது ஆட்சியாளர்கள் மற்றும் சிற்றரசர் பெயரால் உள்ளவை. வைத்தூர் பல்லவராயர் தலைவன் ஒருவன் தன்னை நரசிங்க நாயக்க பல்லவராயன் என அழைத்துக் கொண்டதை ஒரு கல்வெட்டு (726) குறிப்பிடுகிறது.

கிருஷ்ணதேவராயர் 1509ம் ஆண்டில் (கி.பி.1509-1530) ஆட்சிக்கு வந்தார். இவர் விஜயநகரப் பேரரசர்களில் மிகவும் புகழ் வாய்ந்தவர் ஆவார். தென்னகம் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து, அருங்கலைகளுக்கு ஊக்கமளித்து, பல கோயில்களுக்கு புதிய பாணி மண்டபங்கள் எடுப்பித்து தென்னிந்திய வரலாற்றில் அழியாத இடத்தைப் பெறுபவர் கிருஷ்ணதேவராயர். இவரது ஆட்சிக்கால கல்வெட்டுகள் சுமார் பதினான்கு இங்கு காணப்படுகின்றன.[105] கிருஷ்ணதேவராயர் தனது தென்திசை திக்விஜயத்தின்போது திருக்கோகர்ணத்தில் எழுந்தருளியிருக்கும் கோகர்ணேசர்-பிரகதாம்பாளை வணங்கி பல கொடைகளும் அளித்துச் சென்றதாக 'கிருஷ்ண ராஜ விஜயமு' மற்றும் 'ராயவாசகமு' ஆகிய தெலுங்கு நூல்கள் தெரிவிக்கின்றன.

கிருஷ்ணதேவராயருக்குப் பின் அவரது சகோதரர் அச்சுதராயர் ஆட்சிக்கு வந்தார். (கி.பி.1530-1542) அச்சுதராயர் காலத்து கல்வெட்டுகள் சுமார் பத்து[106] இங்கு காணப்படுகின்றன. அச்சுதராயர் இறந்தபின், கிருஷ்ணதேவராயரின் மருமகன் ராமராஜா, சதாசிவராயரை அரசனென்று அறிவித்து, தானே முழு அதிகாரத்தையும் வைத்துக் கொண்டார். உறவினர்களிடையே ஏற்பட்ட அரசுரிமைப் போட்டியில், எதிரிகளாக் கருதப்பட்ட முஸ்லிம் சுல்தான்கள் உதவிக்கு அழைக்கப்பட்டனர். இறுதியில் சுல்தான்களின் படைகள் இணைந்து 1565ல் நடைபெற்ற தளிக்கோட்டைப் போரில் விஜயநகர சாம்ராஜ்யத்தைச் சிதறடித்தனர். தளிக்கோட்டைப் போருக்குப்பின்

சதாசிவராயரை அரசுரிமையிலிருந்து நீக்கி, திருமலை ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சியிலிருந்து அரவீடு வம்ச ஆட்சி தொடங்குகிறது. அச்சுதராயர் காலத்து கல்வெட்டுகள் நான்கு இங்கு காணப்படுகின்றன.[107]

அரவீடு வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் கி.பி.1570-முதல் 1776 வரை ஆண்டனர். ஆனால் இவர்கள் பெயரளவிலேயே பேரரசர்களாக இருந்தனர். படைத்தலைவர்களும் அரசப் பிரதிநிதிகளும் தங்கள் வசமிருந்த பகுதியை சுயமாக ஆள ஆரம்பித்தனர். இவ்வம்சத்தைச் சேர்ந்த வெங்கடபதி என்னும் மன்னர் வேலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தபோதுதான் சென்னைப் பட்டணம் ஆங்கிலேயருக்கு விற்கப்பட்டது. அரவீடு வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களின் கல்வெட்டுகளும், புதுக்கோட்டையில் காணப்படுகின்றன.

கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்தே விஜயநகரப் பேரரசு நாயக்கப்பட்டிணங்கள் என்றழைக்கப்பட்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை நாயக்கர் எனப்படும் அரசப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இப்படி ஏற்பட்ட நாயக்கர் ஆட்சி தஞ்சாவூர், மதுரை, செஞ்சி ஆகிய இடங்களில் மிகவும் வலுவுடன் விளங்கின. 1640ல் புதுக்கோட்டையில் தொண்டைமான்களின் ஆட்சி நிறுவப்படும்வரை புதுக்கோட்டை மாவட்டத்தின் தென்பகுதி, மதுரை நாயக்கர்களின் கீழும், கிழக்குப் பகுதி தஞ்சை நாயக்கர்களின் ஆளுகையிலும் இருந்து வந்தன. நாயக்கர்களின் மேலாண்மைக்குட்பட்டு இப்பகுதிகளை அறந்தாங்கித் தொண்டைமான்கள், பல்லவராயர்கள், நகரம், வாராப்பூர், பேராம்பூர், கத்தலூர், இலுப்பூர், குமாரவடி, மருங்காபுரி, சூரைக்குடி ஆகிய இடங்களில் இவ்வூர் பெயர்களைக் கொண்ட சிற்றரசர்களும் ஆண்டு வந்தனர். இவர்களைப் பற்றிய செய்திகள் புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில் நிறையக் காணப்படுகின்றன. இக்காலத்தில் இதேபோன்ற சிற்றரசர் நிலையில் புதுக்கோட்டை தொண்டைமான் வம்சத்தை 1640ம் ஆண்டில் கறம்பக்குடியில் ரகுநாதராய தொண்டைமான் நிறுவினார். 1640ல் ஏற்பட்ட தொண்டைமான்களின் ஆட்சி, 1948ம் ஆண்டுவரை புதுக்கோட்டை மாவட்டத்தில், ஆலங்குடி, புதுக்கோட்டை, திருமயம், குளத்தூர் ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய புதுக்கோட்டை சமஸ்தானம் என்ற பெயரில் நிலவிவந்தது. நவீனகால புதுக்கோட்டையின் சிற்பிகள் தொண்டைமான் மன்னர்களே ஆவர். இவர்களைப் பற்றிய செய்திகளை அடுத்த பகுதியில் காண்போம்.

## அடிக்குறிப்புகள்

1) Pudukkottai District, Gazetteer - 1983 - pp109

2) புதுக்கோட்டை கல்வெட்டுகள் (Inscriptions of pudukkottai state) எண் 325 (இனிபு.க.எனக் குறிக்கப்படும்)

3) Raja Mohamad J. - Pudukkottai Roman Coins A Relook - Paper presented in the Tamilnadu Numismatics Society at Madras April 1988.

4) டாக்டர் கே.வி.ராமன் பாண்டியர் வரலாறு 1977 - பக் 58-59

5) நடன காசிநாதன் - தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை தொல்லியல் கருத்தரங்கு 1983 - பூலாங்குறிச்சிக் கல்வெட்டு - பக்கம் 157-164.

6) பு.க.238

7) பு.க.239

8) பு.க.240

9) பு.க.241

10) பு.க.15

11) பு.க.16

12) பு.க.17

13) பு.க.18

14) பு.க.19

15) ஜெ.ராஜா முகமது, முத்தரையர் புகழ்பாடும் புதுகை முத்தரையர் முரசு - ஏப்ரல் 1973.

16) நாலடியார் - 200, 296

17) பு.க.45

18) பு.க.13

19) பு.க.18

20) பு.க.63

21) பு.க.48

22) பு.க.61 (தற்போது புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில்)

23) பு.க.21, 31-35

24) பு.க.36, 42, 48-51, 53, 56, 63, 67-75, 78-81.

25) பு.க.24, 30

26) பு.க.84
27) பு.க.28, 36, 83-89
28) பு.க.95-104
29) பு.க.100
30) பு.க.242
31) பு.க.105-108
32) பு.க.109-114
33) பு.க.115
34) அருங்காட்சியகத் துறையின் ஈரோடு அருங்காட்சியகத் திறப்பு விழா கருத்தரங்கில் இந்நூல் ஆசிரியர் வாசித்த "கொங்கு சோழரும், கொடும்பாளூர் வேளிரும்" என்ற கட்டுரையிலிருந்து - ஈரோடு 7.10.1987.
35. இரா.நாகசாமி - கல்லும் சொல்லும் - பக்.67
36. பு.க.435
37. பு.க.14
38. பு.க.63, 65
39. பு.க.24,29,30 275
40. பெரிய புராணம் - இடங்கழி நாயனாரப் புராணம் - பாடல் 2-4
41. Epi.Ind.Vol XV P.66
42. Epi.Ind.Vol.XXX No.41. P.243
43. Ibid. Vol. XXX No.19 P.95-111
44. M.S.Govindasamy - The feudatories in later chola History - Annamalai Nagar 1975 - p.20.
45. ARE.187 of 1920
46. Epi - Indi - Vol XXX No.41,P.243. See also Domilica Vol I Pt.II, P.23 and ARE 204 of 1920.
47. K.A.Nilakanta Sastri - Cholas P.26.
48. வி.ராமமூர்த்தி - கொங்கு நாட்டு கவுண்டர்கள் - 1977, பக்.180
49. அன்னமார்சாமி கதை பக்.133-34.
50. செ.ராசு.கல்வெட்டின் மூலம் கொங்கு நாட்டு வரலாற்றில் சில புதிய கருத்துக்கள் - கல்வெட்டுக் கருத்தரங்கம் 1968.
51. பு.க.14.
52. Epi-Ind. X- P.64

53. S.I.I. Vol IV No.147
54. V.Manickam - Agriculture and Trade in Kongu Country (unpublished Ph.D. Thesis, University of Madras, 1983)
55. பு.க.122
56. பு.க.118, 119, 121, 124,
57. பு.க.117-119, 121, 122, 124-137.
58. பு.க.128.
59. பு.க.129, 211
60. பு.க.123, 147
61. பு.க.135, 181, 188.
62. பு.க.131-137,181, 182, 184, 186, 188, 190.
63. பு.க.138-141, 208
64. பு.க.163, 166
65. பு.க.130, 143-146, 148-180, 220
66. பு.க.183, 185, 193-196, 198, 199
67. பு.க.244-246, 333-337.
68. பு.க.247-327, 467, 468, 506, 518, 520.
69. கே.வி.ராமன் - பாண்டியர் வரலாறு பக்.111
70. என்.சேதுராமன் - சடையவர்மன் குலசேகரன் II- South Indian History Congress - Madras Feb.1980.
71. பு.க.328, 337
72. பு.க.252, 253
73. J.Thinakaran - Second Pandya Empire AD.1190 - 1312. - 1987-P.76
74. பு.க.338-343, 472
75. பு.க.344-358
76. பு.க.359-382
77. பு.க.383, 420, 443, 547, 566
78. பு.க.426
79. பு.க.438-440
80. பு.க.441, 442
81. பு.க.444, 445, 556, 565, 573, 579, 562& 586

82. பு.க.446-449
83. K.R.Venkataraman - A Manual of Pudukkottai State Vol.II Part-I. P.632.
84. S.Krishnasamy Iyengar - South India and her Mohamadan invaders.
85. பு.க.281, 283
86. பு.க.86
87. பு.க.283
88. Gazetteer of Pudukkottai op.cit. P.144
89. K.R.Srinivasan-Pudukkottai Archaeology - A panorama - Paper presented in the Pudukkottai Museum platinum Jubilee Seminar 1986.
90. District Gazetteer - Ramanathapuram - P.75.
91. Pudukkottai Manual op cit.
92. Thinakaran opt.cit. p.150.
93. Elliot and Dowson - History of India as told by her own historians - Vol.III P.204
94. பு.க.450-454
95. பு.க.435, 458
96. பு.க.459, 460
97. பு.க.689
98. பு.க.960, 961
99. பு.க.684-692
100. பு.க.696, 719
101. பு.க.680-719, 778-821
102. பு.க.722, 723
103. பு.க.722, 723, 767
104. பு.க.724-727
105. பு.க.728-741
106. பு.க.742-752
107. பு.க.754-757

# இரண்டாம் பாகம்

## 1. புதுக்கோட்டை சமஸ்தானம்

புதுக்கோட்டையை ஆண்ட தொண்டைமான் மன்னர்கள் தொன்மையானதொரு பரம்பரையினர் ஆவார்கள். ஆயினும் தோன்றுதொட்டு வந்த அரச மரபினர் அல்ல. தமது வீரத்தாலும் தீரத்தாலும் நாடோள்வோராக உயர்ந்தவர்கள். இவர்கள் பழங்காலத்தில் தமிழகத்தின் வட எல்லையான வேங்கடம் எனப்படும் திருப்பதிமலைப் பகுதியில் வாழ்ந்து வந்த கள்ளர் மரபினரின் வழி வந்தவர்கள். யானைப் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதில் சிறந்து விளங்கியவர்கள்.

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் வரலாற்றுப் பின்னணியிலிருந்து மறைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட விஜயநகர மன்னர்களின் ஆதிக்கம், அவர்களின் மேலாண்மைக்குட்பட்ட நாயக்கர் ஆட்சி முறை, இவற்றால் ஏற்பட்ட புதிய சூழ்நிலைகள், ஆகியவற்றின் காரணமாக வட தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த தமிழ் மற்றும் தெலுங்கு பேசும் மக்கள் (கி.பி.15-ம் நூற்றாண்டிலிருந்து) தென் தமிழ் நாட்டுப் பகுதிகளுக்கு அதிக அளவில் குடிபெயரத் தொடங்கினர். அவ்வாறு இவர்கள் குடியேறிய இடங்களுள் திருச்சிக்கு அருகிலுள்ள அன்பில் கிராமம் மிகவும் முக்கியமானதாகும். இங்கிருந்த ஒரு பிரிவினர் குடிபெயர்ந்து புதுக்கோட்டையில் தற்போது ஆலங்குடியைச் சுற்றியுள்ள பிலாவிடுதி, வடக்கலூர், கல்லாக்கோட்டை, கறம்பக்குடி, நெல்வேலி, நரங்கியம்பட்டு, அம்மணிப்பட்டு, பந்துவாக்கோட்டை, மங்கள வெள்ளாளவிடுதி ஆகிய ஊர்களில் குடியேறினர். இவர்களுள் கறம்பக்குடியில் குடியேறிய கள்ளர் வகுப்பினர், வீரத்திலும், கடின உழைப்பாலும் சிறந்து விளங்கினர். மேலும் இவர்கள் யானை பழக்குதல் போன்ற வீரசாகசங்களில் சிறப்புப் பெற்றிருந்ததாலும், இப்பகுதியை ஆண்ட நாயக்க மன்னர்களின் அரசப்பிரதிநிதிகளின் படையில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்று செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கினர் எனத் தெரிகிறது. இவர்கள் விவசாயத் தொழிலிலும் கண்ணும் கருத்துமாக இருந்தாலும் சமுதாய கூட்டமைப்பு முறைகளில் ஆர்வம் கொண்டவர்களாக விளங்கியதாலும், அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இந்தப் பிரிவினரிலிருந்து தோன்றி புகழுடன் விளங்கியவர்களே நமது தொண்டைமான் பரம்பரையினர் ஆவர். இவர்கள் கறம்பக்குடிப் பகுதியில் நாடாள்வோராக இருந்து, படிப்படியாக தங்கள் ஆட்சிப்பகுதியை விரிவாக்கி, தற்போது புதுக்கோட்டை, ஆலங்குடி, திருமயம், குளத்தூர், கந்தர்வக்கோட்டை

ஆகிய வட்டங்களை உள்ளடக்கியப் பகுதிகளை, புதுக்கோட்டையை தலைநகராகக் கொண்டு ஆளத் தொடங்கினர். அப்போது பல்லவராயன் சீமை என்று வழங்கப்பட்ட நாட்டமைப்பில் அடங்கியிருந்த இப்பகுதிகள் பின்னர் புதுக்கோட்டை தொண்டைமான்களது தனியரசு ''புதுக்கோட்டை சமஸ்தானம்'' (Pudukottai State) என்று அழைக்கப்பட்டது. சமஸ்தானம் என்றால் ராச்சியம் என்றும் ஆங்கிலத்தில் kingdom அல்லது Dominion என்றும் பொருள்படும். தொண்டைமான் ராச்சியத்தை-தனியரசை-புதுக்கோட்டை சமஸ்தானம் என்றே பழைய பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டு வழக்கிலும் 'சமஸ்தானம்' என்னும் சொல்லே வழங்கப்படுகிறது. ஆகவே புதுக்கோட்டை சமஸ்தானம் என்றே நாமும் குறிப்பிடலாம். புதுக்கோட்டை தொண்டைமான்களின் ஆட்சி 1640-ல் தொடங்கி 1948-ம் ஆண்டில் முடிவடைந்தது.

கி.பி. 1750-ம் ஆண்டுவாக்கில் புதுக்கோட்டை சமஸ்தான அரசவைக் கவிஞராக இருந்த வெங்கண்ணா என்பவர் இயற்றியுள்ள தொண்டைமான் வம்சாவளி என்கிற தெலுங்கு காவியம், தொண்டைமான் மன்னர்கள் இந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றொரு கர்ணபரம்பரைக் கதையைக் கூறுகிறது. இந்திரன் பூலோகத்தைச் சுற்றி வரும்போது அங்கு கண்ட ஒரு அழகிய பெண்ணை கந்தர்வ மணம் புரிந்து, அவர்களுக்குப் பிறந்த மக்களே புதுக்கோட்டை தொண்டைமான்களின் வம்சத்தினர் என்கிறது அக்கதை. இது கவிஞனின் மிகைப்படுத்தப்பட்டக் கூற்று எனக் கொள்வோம். மேலும் அக்காவியம் தொண்டைமான்களின் முன்னோர் பதினைந்து பேர்களை குறிப்பிடுகிறது. இதில் பதினைந்தாவது வழித்தோன்றலான ஆவுடைராயத் தொண்டைமான், தனது வீரத்தால் காலப்போக்கில் இப்பரம்பரையினருக்கு அரச அந்தஸ்த்தைப் பெற்றுத்தர வித்திட்டார் எனத் தெரியவருகிறது. தொண்டைமான் பரம்பரையினர் திருமங்கையாழ்வாரின் வழிவந்தவர்கள் என 1728-ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று (879) கூறுகிறது. இது பிற்கால புகழுரையாக இருக்கலாம். மேலும் தொண்டைமான் மன்னர்கள் இந்திரவம்சம், காசியப கோத்திரம் (பு.க.எண்.763) எனவும் இவர்களது மாலை ''வாகை மாலை'' எனவும் செப்பேடுகளிலிருந்து அறிகிறோம்.

கி.பி.1639-ம் ஆண்டு வாக்கில் விஜயநகரப் பேரரசரான மூன்றாம் வெங்கிடராயர் (1630-1642) தமது பரிவாரங்களுடன் ராமேஸ்வரம் யாத்திரை மேற்கொண்டு, கறம்பக்குடி வாழியாகச் சென்றபோது அவரது யானைகளுள் ஒன்றுக்கு மதம் பிடித்து யாராலும் அடக்க முடியாததாகிவிட்டது. ஆவுடைராய தொண்டைமான் விரைந்து சென்று அந்த யானையை அடக்கி அரசர் முன் நிறுத்தினார். தொண்டைமானின் வீரத்தை மெச்சிய விஜயநகர மன்னர், அவருக்கு

'ராய ராகூத்த ராய வச்ரிடு, ராய மன்னிடு ராய'' என்ற பட்டத்தை அளித்ததோடு, அரசர்களுக்கே உரித்தான அம்பாரி யானை, முரசுயானை, சிங்கமுகப் பல்லக்கு ஆகியவற்றை வைத்துக் கொள்ளவும் அனுமதி அளித்தா். அவரது அந்தஸ்த்தை உயர்த்தும் வகையில் உலாவரும்போது கட்டியங்காரர்களை வைத்துக் கொள்ளவும், சிற்றரசர்களுக்குரிய கண்ட பேருண்ட கருவியை முழங்கிடவும் உரிமையளிக்கப்பட்டது. மேலும் கறம்பக்குடி பகுதியிலிருந்த நிலங்களும் அளிக்கப்பட்டன. இப்படியாக அரசு கிடைப்பதற்கு முன்பே ஆவுடைராய தொண்டைமானுக்கு ராஜமரியாதை கிடைத்துவிட்டது. மேற்கண்ட செயதிகள் தொண்டைமான் வம்சாவளி, ராயதொண்டைமான் அனுக்ரக மாலை, ராயத்தொண்டைமான் இரட்டை மணிமாலை ஆகிய பாடல்களிலும் மற்றும் புதுக்கோட்டை செப்பேடுகளிலும் காணப்படுகின்றன. ஆவுடைராய தொண்டைமான் ஒரு சிற்றரசர் அல்லது பாளையக்காரர் போன்று தனக்குக் கிடைத்த பகுதியில் ஆட்சி செய்திருக்க வேண்டும். இவர் கி.பி.1661-ம் ஆண்டுவரை ஆட்சி செய்ததாக அறிகிறோம். இவர்தான் தொண்டைமான் மன்னர் பரம்பரையின் தோற்றுவாய் (Progenetor) எனக் கருதப்படுகிறார்

## 2. தொண்டைமான் மன்னர்களின் தோற்றம்

தொண்டைமான் மன்னர்களின் தோற்றம் (Origin) குறித்த ஆய்வாளர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடுகள் உண்டு.

கி.பி.12-13ம் நூற்றாண்டிலிருந்து உள்ள புதுக்கோட்டை கல்வெட்டுகள் சிலவற்றில் தொண்டைமான் என்ற அடைமொழியுடன் காணப்படும் சில பெயர்களைக் கொண்டு புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்ட தொண்டைமான் மரபு காலத்தால் முற்பட்டது என சிலர் குறிப்பிடுகின்றனர். (பு.க.எண்.547, 683, 823, 830, 879, 920, 934, 995) தொண்டைமான் இளந்திரையன், புராணங்களிலும் இலக்கியங்களிலும் இலக்கியப் பாடல்களிலும் வரும் தொண்டைமான் எனவரும் பெயர்கள் ஆகியனவற்றையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அக்காலத் தமிழகத்தில் வாழ்ந்த கள்ளர் குல மக்களின் அடைமொழிகளுடன் (பட்டப் பெயர் அல்லது கோத்திரப் பெயர்) 'தொண்டைமான்' என்பதும் ஒன்றாகும். இவர்களுள், படைத் தலைவர்களாகவும், நாடாள்வோராகவும் இருந்தவர்களையே மேற்குறிப்பிட்ட கல்வெட்டுகள் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

முன்னர் குறிப்பிட்டவாறு வேங்கடப் பகுதியிலிருந்து இப்பகுதியில் குடியமர்ந்த தொண்டைமான் என பட்டப் பெயர் கொண்ட கள்ளர் இனத்தவரின் ஒரு கிளைவழி மரபினரின் வழித்தோன்றல்களே

புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்டவர்களாதல் வேண்டும் எனக் கருத இடமுள்ளது. ஏனெனில் வெவ்வேறு காலக்கட்டங்களில் தொண்டைமான் என்ற பெயருடன் பல கிளை மரபினர் குறித்த செய்திகள் காணக்கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக, புதுக்கோட்டை (சமஸ்தான) தொண்டைமான் மரபினரின் ஆட்சி அமைவதற்கு முன்பே அறந்தாங்கியில் தொண்டைமான் என்ற பட்டப் பெயருடன் குறுநில மன்னர்கள் சிலர் ஆட்சி செய்து வந்துள்ளனர். புதுக்கோட்டைக்கு அருகே உள்ளதொரு நிலப்பரப்பை ஆண்டுவந்த இவர்களைக்கூட புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் பரம்பரையினருடன் தொடர்பு படுத்திக் காட்ட போதிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆகவே தொண்டைமான் என்ற பெயர் காரணம்கொண்டே (இவர்கள்) அனைவரையும் ஒரே தொகுதியினுள் அடக்கிவிடுவது ஏற்புடையதாக அமையவில்லை. புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் இந்திர குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க, இப்பகுதியின் ஏனைய கள்ளர் மரபினர் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

புதுக்கோட்டை சமஸ்தான தொடக்ககால மன்னர்களின் ஆட்சியில் தெலுங்கு மொழிக்கு இருந்த செலவாக்கினைக் கொண்டு இவர்களது தோற்றுவாய் குறித்த சில செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. (இலக்கியம் என்ற தலைப்பில் காண்க)

1. தொண்டைமான் பரம்பரையின் முதல் மன்னர் விஜயநகர மன்னர்களின் பட்டமாகிய 'ராய' என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். அதன்பிறகு ஆட்சிக்கு வந்த மன்னர்களும் இப்பட்டத்தை சூட்டிக் கொண்டனர்.

2. தெலுங்கு மொழிப்புலவர்கள் பலர் அரசவைக் கவிஞர்களாக இருந்துள்ளனர். புதுக்கோட்டை தெலுங்கு மொழியின் தென் மையமாகத் திகழ்ந்தது. தெலுங்கு இலக்கியங்கள் பல உருவாயின. அரசவைப் புரோகிதர்களாக தெலுங்கு புரோகிதர்களே இருந்தனர். தெலுங்கு நாட்டுப் படைவீரர்களின் குடியிருப்புகளும் இங்கு இருந்தன.

3. மன்னர் குடும்பத்தின் பயிற்று மொழி தெலுங்கு மொழியாகவே இருந்தது.

4. தொடக்க கால தொண்டைமான்கள் தெலுங்கு மொழியிலேயே கையொப்பமிட்டனர். அவர்களது வீரச் செயல்களும், வம்சாவளியும் தெலுங்கு மொழியிலேயே எழுதப்பட்டன.

5. தெலுங்கு மொழி கல்வெட்டுகள் 3 இங்கு காணப்படுகின்றன. (பு.க.எண்.890, 891, 1903)

6. இங்கு செலாவணியிலிருந்த அம்மன்காசில் 1948-ம் ஆண்டுவரை தெலுங்கு மொழி எழுத்துக்களே பொறிக்கப்பட்டு வந்தது.

7. தொண்டைமான் மன்னர்களின் அரசு சின்னத்திலும் அரசு முத்திரையிலும் 'ஸ்ரீ பிரகதாம்பாள் சகாயமு' என்ற தெலுங்கு எழுத்துக்களே காணப்படுகின்றன.

தொண்டைமான் மன்னர்களுக்கும் தெலுங்கு மொழி பேசிய அவர்களது முன்னோர்களுக்குமிருந்த தொடர்புகளைக் காட்டுவதாகவே மேற்கண்ட செய்திகள் அமைகின்றன. விஜயநகர மன்னர்களின் படையெடுப்பை ஒட்டி, வேங்கடத்திலிருந்து இப்பகுதியில் குடியமர்ந்தவர்கள், தெலுங்கு மொழியை வழக்கு மொழியாகக் கொண்ட அரச பரம்பரையினர் அல்லது அரசபிரதிநிதிகளாக ஆண்டவர்களின் பாரம்பரியத்துடன் நெருங்கிய உறவு கொண்டவர்களாதல் வேண்டும். புதுக்கோட்டையில் அவர்களது ஆட்சி மலர்ந்தபோது, தங்களது முன்னோர்களின் வழக்கு மொழியாகத் திகழ்ந்த தெலுங்கு மொழியை முன்னுரிமைப்படுத்துவது, அப்போதிருந்த அரசியல் சூழலில் தங்களது மேலாண்மையைக் குறிப்பதாக அமையும் என்பதாலும் தெலுங்குமொழி வழக்கைப் பின்பற்றியிருக்கலாம்.

விஜயநகர மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினாலேயே தெலுங்குமொழி தொண்டைமான் மன்னர்களால் போற்றப்பட்டு வந்தது எனவும், மேலும் தொடக்கக் கால தொண்டைமான் மன்னர்கள் தங்களது தனி விருப்பத்தின் பேராலேயே தெலுங்கு மொழிப் புலமை பெற்று அம்மொழி இலக்கியங்களை வளர்த்திருக்கலாம் எனவும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தொண்டைமான் மன்னர்களின் ஆட்சி மலர்ந்த கி.பி.17-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 'விஜயநகரப் பேரரசு' என்று ஒன்று இல்லை என்றே சொல்லலாம். விஜயநகர மன்னர்களின் மேலாண்மையை பெயரளவில் ஏற்றுக் கொண்டு, தன்னிச்சையாக, மதுரை நாயக்கரும், தஞ்சாவூர் நாயக்கரும் தமிழகத்தை ஆண்டுவந்த காலம் அது. மேலும் புதுக்கோட்டை தொண்டைமான் பரம்பரையின் முதல் மன்னரான ராய ரகுநாத தொண்டைமான் விஜயநகர மன்னர்களின் மேலாதிக்கத்திற்கு கட்டுப்பட்டு ஆண்டுவந்தார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதும் தென்படவில்லை. தங்களது ஆர்வத்தின் காரணமாக தெலுங்கு மொழியினை ஆதரிக்க எத்தனித்திருந்தால் தெலுங்கு மொழி இலக்கியத்தின் தென் மையமாக புதுக்கோட்டை திகழ்ந்திருக்குமா என்பது ஆராயப்பட வேண்டியதாகும். தொடக்கக்கால மன்னர்களின் தெலுங்கு மொழிப்புலமை, இங்கு அக்காலத்தில் தெலுங்கு மொழியின் வளர்ச்சி ஆகியவற்றைக் காணும்போது அம்மொழியுடன் நீண்ட காலமாக அவர்கள் கொண்டிருந்த தொடர்பையே காட்டுவதாக அமைகிறது.

கி.பி.17-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் புதுக்கோட்டையை ஆளத்தொடங்கிய தொண்டைமான் மன்னர்களிடையே காலப்போக்கில்

இப்பகுதி மக்களின் தொடர்புகளினால் ஏற்பட்ட அரசியல், மண உறவுகளின் காரணமாக தெலுங்கு மொழியின் செல்வாக்கும் உபயோகமும் குறைந்திருக்க வேண்டும். ஆனால் தெலுங்குமொழி அரச குடும்பத்தில் சில காரியங்களுக்கு தொடர்ந்து பயன்படுத்துவது வழக்கத்திலிருந்தது.

தொண்டைமான் மன்னர்கள் இப்பகுதியில் வாழ்ந்த பல்லவராயர் போன்றோருடன் மண உறவு கொண்டனர். இதன் பயனாக இப்பகுதியில் வாழ்ந்த பிற மக்களோடு இவர்களது தொடர்புகள் வலுப்பட்டன. எடுத்துக் காட்டாக, ராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பல்லவராயர் இனத்தைச் சேர்ந்தவர். ஆனால் இவரும் தொண்டைமான் என்றே அழைக்கப்படுகிறார்.

மேற்கண்ட கருத்துக்களை சீர்தூக்கிப் பார்க்கும்போது, புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் (கல்வெட்டுகளிலே குறிப்பிடப்பட்டவர்களிலிருந்து) வேறுபட்ட தனியானதொரு கிளை மரபினர் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

## 3. ரகுநாதராயத் தொண்டைமான்

ரகுநாதராயத் தொண்டைமான் 1661-ல் தனது தந்தை வசமிருந்த கறம்பக்குடி, பிலாவிடுதி பகுதிகளின் பொறுப்பை ஏற்றார். அப்போது தஞ்சாவூரை அச்சுத விஜயராகவ நாயக்கரும், மதுரையை சொக்கநாத நாயக்கரும் ஆண்டுவந்தனர். ராமநாதபுரம் ரகுநாதத் தேவர் என்றழைக்கப்படும் திருமலை சேதுபதியின் பொறுப்பில் இருந்தது. தஞ்சையும், மதுரையும விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்டதாக (பெயரளவில்) இருக்க, ராமநாதபுரம் மதுரைக்கு உட்பட்டிருந்தது. விஜயநகரப் பேரரசு குன்றியிருந்த நிலையில், பீஜப்பூர், கோல்கொண்டா, சுல்தான்களும் தமிழகத்தில் தங்களது செல்வாக்கை நிலைநிறுத்த முயற்சித்துக் கொண்டிருந்தனர். மராட்டியர் தங்களது ஆளுகைக்குத் தகுந்த பகுதியை இங்கு தேடிக் கொண்டிருந்தனர். குழப்பமும் கலவரங்களும் நிறைந்த இந்த சூழ்நிலையில்தான் தொண்டைமான்களின் ஆட்சி அரும்ப ஆரம்பித்தது. இந்த சூழ்நிலையிலும் தனது செல்வாக்கை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்பிய ரகுநாதராயத் தொண்டைமான், தஞ்சை அச்சுத விஜயராகவ நாயக்கரின் படையுடன் சேர்ந்து பல போர்களில் கலந்துகொண்டு தனது வீரத்தை வெளிக் கொணர்ந்தார். தொண்டைமானின் வீரத்தையும், திறமையையும் பாராட்டிய தஞ்சை நாயக்கர், 'பெரிய ராமபாணம்' என்னும் விருதுவாளும், விலையுயர்ந்த வைரமாலை ஒன்றும் அவருக்கு அளித்தார். இவை இன்றும் மன்னர் குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1673-ம் ஆண்டு வாக்கில் தஞ்சை நாயக்கர் படைப்

பொறுப்பிலிருந்து விலகி தனது சொந்த ஊரான கரம்பக்குடிக்குத் திரும்பினார். தொண்டைமான் மன்னர்கள் தங்கள் பெயருடன் சேர்த்துக் கொண்டுள்ள 'விஜய' என்ற பெயர் தஞ்சை நாயக்கர்களால் வழங்கப்பட்டதாகும்.

இக்காலத்தில் மதுரை சொக்கநாத நாயக்கருக்கும், தஞ்சை அச்சுத விஜயராகவ நாயக்கருக்கும் நடைபெற்றப் போரில் தஞ்சை நாயக்கர் இறந்துபட, மதுரை நாயக்கர் அரசவையில் குழப்பங்கள் குடிகொள்ள, நாயக்கரின் சகோதரர் முத்து அழகாத்திரி 1678-ல் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். திறமை குன்றியிருந்த முத்து அழகாத்திரிக்கு மக்களிடம் ஆதரவு இல்லை. மதுரை, சேனையில் குதிரைப்படைத் தலைவனாக இருந்த ருஸ்தம்கான் இச்சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு மதுரை அரசை கைப்பற்றிக் கொண்டு தன்னைத்தானே மன்னனென பிரகடனப்படுத்திக் கொண்டான்.

ருஸ்தம்கானிடமிருந்து மதுரையை மீட்க விரும்பிய ராணி மங்கம்மாள் (சொக்கநாத நாயக்கரின் அரசி) ராமநாதபுரம் மன்னன் கிழவன் சேதுபதி, மற்றும் சில பாளையக்காரர்களின் துணையை நாடினார். இதன் விளைவாக ருஸ்தம்கானிடமிருந்து மதுரை கைப்பற்றப்பட்டது. இந்த முயற்சியில் ரகுநாதராயத் தொண்டைமானும் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார். இந்த உதவிக்கு நன்றியாக 12 கள்ளர் குடிகளுக்குத் தலைமையாக இருக்கும் உரிமையும், திருச்சியில் அரசு காவலராக இருக்கும் உரிமையும் ரகுநாதராயத் தொண்டைமானுக்குக் கிடைத்தது.

ரகுநாதராயத் தொண்டைமானின் செயல்திறனை கேள்வியுற்ற ராமநாதபுரம் கிழவன் சேதுபதி, தொண்டைமானையும் அவரது சகோதரரையும் ராமநாதபுரத்து படைப்பிரிவுகளுக்குத் தலைவராக்கினார். அவர்களுடைய தலைமை, ராமநாதபுரத்துக்கு பல வெற்றிகளைத் தேடித் தந்தது. மேலும் தொண்டைமானின் சகோதரி கதலியை (காத்தாயி ஆயி என்பது சரியான பெயராக இருக்கலாம்) கிழவன் சேதுபதி திருமணம் செய்து கொண்டார். இத்திருமணத்தினால் இவர்களிடையே நெருங்கிய உறவு ஏற்பட்டதைத் தொடர்ந்து தமது மைத்துனர்களைத் தம்மைப்போல் ஒரு அரசிற்கு உரிய தலைவர்களாக ஆக்கிவிட வேண்டுமென கிழவன் சேதுபதி விரும்பினார்.

அச்சமயத்தில், இப்போதைய புதுக்கோட்டை மாவட்டத்தின் குளத்தூர், திருமயம் ஆகிய பகுதிகளை பல்லவராயர் மரபினர் ஆண்டு வந்தனர். சேதுபதி மரபினரைவிட பல்லவராயர் பழமை மிக்கவராயினும் இக்காலத்தில் சேதுபதியின் ஆட்சிக்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். புதுக்கோட்டைப் பகுதியை சிவந்தெழுந்த பல்லவராயர் என்பவர் ஆண்டுவந்தார். பல்லவராயர் சேதுபதியின் ஆட்சியிலிருந்து விலகி,

சுயேட்சையாக ஆளவிரும்பி தஞ்சை மராட்டிய மன்னர் எக்கோஜியின் உதவியை நாடிய செய்தியை அறிந்த சேதுபதி, பல்லவராயரின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்து, அவர்களது ஆட்சிப் பகுதியின் பொறுப்பை ரகுநாதராயத் தொண்டைமானுக்கு அளித்து, அவரை 1686-ல் மன்னர் அந்தஸ்திற்கு உயர்த்தினார். அப்பேது புதுக்கோட்டைப் பகுதி பல்லவராயன் சீமை என்று அழைக்கப்பட்டது.

ரகுநாதராயத் தொண்டைமான் அனைவரும் பாராட்டும்படி புதுக்கோட்டைப் பகுதியை ஆண்டுவந்தார். மதுரை நாயக்க மன்னர்களுடன் சுமுகமான உறவு வைத்துக் கொண்டு தனது பலத்தை பெருக்கிக் கொண்டார். 1723-ல் ராமநாதபுரம் சேதுபதி பரம்பரையில் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் பங்கு கொண்டு சேதுபதிகளிடமிருந்து திருமயம் கோட்டையையும், கீழாநிலைப் பகுதியையும் பெற்று தனது ஆட்சிப் பகுதிகளை விரிவாக்கி கொண்டார். பொன்னமராவதி, விராலிமலை ஆகிய பகுதிகளும் தொண்டைமானின் ஆளுகைக்குட்பட்டது. இப்படியாக தொண்டைமான் பரம்பரையில் முதல் மன்னரான ரகுநாதராயத் தொண்டைமான் பலம் பொருந்திய ஒரு அரசை உறுதியாக நிலைபெறச் செய்தார் எனலாம். இவர் 1730-ம் ஆண்டுவரை ஆட்சி செய்தார்.

## 4. புதுக்கோட்டை நகரின் தோற்றம்

புதுக்கோட்டை என்னும் பெயர், இங்கே புதிய கோட்டை கட்டப்பட்ட பின் ஏற்பட்டதாக இருக்கலாம். இதேபோன்று இங்கிலாந்தில், நியூகேசல் (New Castle) ரஷ்யாவில், நோவோகார்டு (Novogorodo) ஆகிய ஊர்கள் புதுக்கோட்டை எனப் பெயர் வரும்படி புதிய கோட்டைகளைப் பெற்றுள்ளதை இன்றும் காணலாம். தொண்டைமானின் ஆட்சியில் (1686-க்குமுன்) திருமயம், கீழாநிலை, மிரட்டுநிலை, பிரான்மலை, பொற்பனைக்கோட்டை ஆகிய இடங்களில் பழைய கோட்டைகள் இருந்கதால் (திருமயம் தவிர ஏனைய இடங்களில் இருந்த கோட்டைகள் அழிந்து விட்டன) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோட்டை புதுக்கோட்டை எனப் பெயர் பெற்று, அந்தப் பெயரே ஊருக்கும் வழங்கப்பட்டதாகக் கொள்ளலாம். 1686-ல் ரகுநாதராய தொண்டைமான் இப்பகுதியின் மன்னரானபோது புதுக்கோட்டையில் கோட்டை எதுவும் இருக்கவில்லை. தொண்டைமான் பதவிக்கு வந்தபின் தற்போதைய புதுக்கோட்டை நகரம் உருவாக்கப்பட்டதாக தொண்டைமான் வம்சாவளி என்னும் தெலுங்குக் காவியம் தெரிவிக்கிறது.

தற்போதைய புதுக்கோட்டை நகரின் கிழக்குப் பகுதி கலசமங்கலம் என்றும் மேற்குப் பகுதி சிங்கமங்கலம் என்றும்

வழங்கப்பட்டது எனவும் இவ்விரண்டு பகுதிகளும் இணைந்தே புதுக்கோட்டை உருவானதாகவும் புதுக்கோட்டை மானுவல் கூறுகிறது. கலசமங்கலம் என்ற பெயரை தற்போதைய கலசக்காட்டில் (திருக்கட்டளை அருகில்) உள்ள ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஆனால் சிங்கமங்கலம் என்பது குறித்து எந்தவித சான்றுகளும் கிடைக்கவில்லை. ஆகவே எப்பகுதி சிங்கமங்கலம் என அழைக்கப்பட்டது என சரியாகத் தெரியவில்லை. இவ்விரண்டு பெயர்களும் இணைந்து எப்படி புதுக்கோட்டை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பது பற்றியும் காலத்தால் முற்பட்ட சான்றுகள் கிடைக்கவில்லை.

ஆவூரில் தங்கியிருந்த பாதிரியார் வெனான்சியஸ் புச்செட், 1700-ல் தயாரித்த நில வரைபடத்தில் (மேப்) புதுக்கோட்டை என்னும் பெயரைக் குறித்துள்ளார். ஆகவே ரகுநாதராய தொண்டைமான் ஆட்சிக்கு வந்த பத்து ஆண்டுகாலத்திற்குள் (1686+10) புதிய கோட்டை கட்டி புதுக்கோட்டை எனப் பெயரிட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். ஆனால் 1754-ல் புதுக்கோட்டை நகரில் கோட்டை கொத்தளங்கள் ஏதும் இல்லையென ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் பதிவுகள் தெரிவிக்கின்றன. ஆகவே ரகுநாதராய தொண்டைமானால் கட்டப்பட்ட கோட்டை 1732-1734-ல் சந்தாசாஹிப் மற்றும் தஞ்சை மராட்டிய தளபதி ஆனந்தராவ் ஆகியோரின் படையெடுப்பின்போது அழிந்துபட்டிருக்க வேண்டும். அப்படி இடிந்துபோன இந்தக் கோட்டை தற்போது அடப்பன் குளம் என்று வழங்கப்படும் குளத்திற்கு வடகிழக்குப்பகுதியில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இன்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்புவரை இப்பகுதியில் இடிந்துபோன சுவர்களின் எச்சங்களும், அகழி போன்ற அமைப்புகளும் காணப்பட்டன. தற்போது இப்பகுதிகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதியாக உள்ளன. கோட்டை இடிக்கப்பட்ட உடன் அதன் அருகிலிருந்த சிவஞானபுரம் என்னும் இடத்தில் தொண்டைமான் ஒரு சிறிய அரண்மனையை கட்டிக் கொண்டதாகத் தர்பார் பதிவேட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிவஞானபுரம் என்னுமிடம் முன்சொன்ன கோட்டை அமைப்பிடத்திற்கு தென்கிழக்கில் உள்ள பகுதியாகும்.

1813-ல் எழுதப்பட்ட புதுக்கோட்டை கணக்காய்வுக் குறிப்பு (Statistical Account of Pudukkottai) புதுக்கோட்டை நகரில் கோட்டை இருந்ததையும், $2^1/_2$ மைல் சுற்றளவிற்கு, சுற்றுமதில்களும் இந்த சுற்றுமதில்களின் நான்கு திசைகளிலும் காவல் வாயில்கள் இருந்ததாகவும் தெரிவிக்கிறது. இந்த காவல் வாயில்கள் 'வாடி' என்று அழைக்கப்பட்டன (மச்சுவாடி, அம்மன்வாடி) புதுக்கோட்டை பழையபேருந்து நிலையம் அருகே இடிபாடுகளுடன் கூடிய மேடு ஒன்றை இன்றும் காணலாம். இது ஒரு காவல் வாயிலாக (Commanding Station) இருந்தது. இதற்குப்

பக்கத்தில ஒரு அனுமார் கோயில் உள்ளது. இது கோட்டை அனுமார் என்று அழைக்கப்படுகிறது. அனுமார் கோட்டைக் காவல் தெய்வம் என கோட்டைகள் குறித்த சாத்திர நூல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு அருகிலுள்ள குளம் கும்மந்தான் குளம் என்று வழங்கப்படுகிறது. Commander Tank என்பது கும்மந்தான் குளம் என மருவி வழங்குகிறது.

1813-ல் புதுக்கோட்டை கணக்காய்வுக் குறிப்பு குறிப்பிடும் மேற்குறிப்பிட்டக் கோட்டை தற்போது நகரின் மத்தியிலுள்ள பழைய அரண்மனையாக இருக்க வேண்டும். இதனைச் சுற்றி அகன்ற அகழியும் இருந்ததற்கான அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஏனெனில், 1754-ல் கோட்டை ஏதும் இல்லை என்ற குறிப்பையும், 1813-ல் கோட்டை பற்றிய குறிப்பையும் காணும்போது மேற்கண்ட ஆண்டுகளுக்குட்பட்ட காலத்தில் பழைய அரண்மனை கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது விளங்கும். இதுகுறித்து மேலும் ஆய்வுகள் தொடர்கின்றன. பழைய அரண்மனையின் வானுயர்ந்த மதில்கள் சில ஆண்டுகளுக்கு முன் இடிக்கப்பட்டும் சில இடங்களில் புதிய கட்டிடங்கள் எழுப்பப்பட்டும் இவ்வூரின் பழமையின் சுவடு தெரியாமல் மறைந்து கொண்டு இருப்பது வரலாற்று ஏடுகளுக்கு பெருத்த இழப்பாகும். ஆகவே தற்போது கோட்டை ஏதும் இல்லாத ஊராக விளங்குகிறது புதுக்கோட்டை.

18-19-ம் நூற்றாண்டு பதிவுகளில் புதுக்கோட்டை என்னும் சொல் அரிதாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. புதுக்கோட்டை சமஸ்தானம் தொண்டைமான் சீமை (Thondaiman Country) என்றே குறிக்கப்படுகிறது. மேலும் புதுக்கோட்டை என்று குறிக்கப்படும் போதெல்லாம் தொண்டைமான் புதுக்கோட்டை என்றே குறிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் மானாமதுரைக்குப் பக்கத்தில் இருந்த புதுக்கோட்டை மறவன் புதுக்கோட்டை எனக் குறிப்பிடப்படுகிறது. இன்றும்கூட தென் மாவட்டங்களில் நமது புதுக்கோட்டையை தொண்டைமான் புதுக்கோட்டை என்று அழைப்பதைக் காண்கிறோம்.

ரகுநாதராயத் தொண்டைமான் 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறார். இக்காலத்தில் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. இயற்கையின் சீற்றமும் நிறைய உண்டு. 1708-ம் ஆண்டு பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து கடும் பஞ்சமும் வறட்சியும் ஏற்பட்டது. பெற்றோர் பிள்ளைகளேயே விற்கும் அளவிற்கு கடுமையான பஞ்சம்! மீண்டும் 1709-ம் ஆண்டில் பெரும் வெள்ளத்தினால் மிகுந்த சேதம் ஏற்பட்டது. 1722-23-ல் பெரிய அம்மைநோய் பரவி மக்களை வெகுவாக பலிகொண்டது. இவற்றினூடே ஆனந்தராவ் போன்ற பலமான எதிரிகளையும் சமாளிக்க வேண்டியிருந்தது. இத்தனை சோதனைகளுக்கிடையேயும் நிலையானதொரு சிறு அரசை நிறுவிய பெருமை ரகுநாதராயத் தொண்டைமானைச் சாரும்.

ரகுநாதராயத் தொண்டைமான் 1730-ல் இறக்கும்போது அவருக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லை. ஆகவே இவருக்குப்பின் இவரது பேரன் விஜயரகுநாதராயத் தொண்டைமான் ஆட்சிக்கு வந்தார்.

ரகுநாதராயத் தொண்டைமான் சிறந்த சைவ பக்தர். ஆனால் பிற மதத்தினரையும் இவர் அன்புடன் நடத்தி வந்திருக்கிறார். ஆவூரில் வந்து தங்கிய கிருத்துவ பாதிரிமார்களுக்குப் பல உதவிகள் செய்துள்ளதைப் பாராட்டி கிருத்துவ பாதிரியார்கள் பல குறிப்புகள் எழுதி வைத்துள்ளனர். இக்குறிப்புகள் (Madurai Mission Records) புதுக்கோட்டைப் பகுதியின் அக்கால வரலாற்றை தெரிந்து கொள்ள பெரிதும் துணை புறிகின்றன.

## 5. அண்டைய அரசுகள்

புதுக்கோட்டை தொண்டைமான் பரம்பரையினரின் ஆட்சி உருவானபோது புதுக்கோட்டையைச் சுற்றியிருந்த அண்டைய நாடுகளை ஆண்டுவந்த அரையர்கள், சிற்றரசர்கள், மன்னர்கள் ஆகியோர் குறித்த சில செய்திகளை தெரிந்து கொண்டால்தான் அக்கால அரசியல் சூழல் நமக்குத் தெரியவரும்.

**பல்லவராயர்:** பல்லவராயர் கி.பி. 12-ம் நூற்றாண்டிலிருந்து பல்லவரையர் என்ற பெயரில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளை ஆண்டு வந்துள்ளனர் எனவும் சோழர், பாண்டியர், ராமநாதபுரம் சேதுபதிகள் ஆகியோரின் மேலாண்மைக்கு உட்பட்டு ஆண்டுவந்த அரையர்கள் இவர்கள் எனவும் சிலர் கருதுகின்றனர். வாணாதரையர், கிடாரத்தரையர், சோழத்தரையர், வல்லத்தரையர், கங்கையரையர் போன்று பல்லவரையர் என்று அழைக்கப்பெற்று பின்பு பல்லவராயர் என அழைக்கப்படலாயினர். கி.பி. 14-ம் நூற்றாண்டில் இவர்கள் முழு அதிகாரம் பெற்ற மன்னர்கள் போன்று விளங்கியபோது விஜயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்திலிருந்து 'பல்லவராயர்' என அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. ராயர் என்பது விஜயநகர மன்னர்களின் பட்டப் பெயர். ராயலு என்ற தெலுங்கு மொழிச் சொல் 'ராயர்' என்று மருவியதாகக் கொள்ளலாம். ராஜன் என்ற சொல்லிலிருந்தும் 'ராயர்' என்ற சொல் வந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. பல்லவராயர், பல்லவ மன்னர்களின் வழித் தோன்றல்கள் என்றதொரு கருத்தும் நிலவுகிறது.

கி.பி. 1378-ம் ஆண்டைச் சேர்ந்த விரையாச்சிலை கட்வெட்டொன்று இப்பகுதியில் பல்லவராயர் ஆட்சிபற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறது. இவர்கள் பெருங்களூர், ஆதனக்கோட்டை, பொன்னமராவதி, கலசமங்கலம், திருக்கட்டளை, திருவரங்குளம்,

இரும்பாளி, குளத்தூர், கீரனூர் ஆகிய பகுதிகளில் ஆட்சி செலுத்தியமைக்கு அடையாளமாக இவ்விடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் பல்லவராயர்கள் பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இச் செய்திகளைக் கொண்டு இவர்கள் 14-ம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து இப்புகுதியில் ஆட்சி செலுத்தி வந்தனர் என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் பல்லவராயர் குறித்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. விஜயநகர மன்னர்கள் காலத்தில் இவர்கள் நிலை மிகவும் உயர்ந்திருந்தது. குன்னாண்டார்கோயில் (பு.க. 353) ஆதனூர் (பு.க. 354-355) நெய்வாசல் (பு.க. 424) ஒலியமங்கலம் (பு.க. 587) திருக்கட்டளை (பு.க. 711) புதுக்கோட்டை (பொது அலுவலகக் கட்டிட வளாகத்தில் (பு.க. 713) குடுமியான்மலை (பு.க. 726) விரையாச்சிலை (பு.க. 745) ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகளில் பல்லவராயர் சிற்றரசர்களா கவும், படைத்தலைவர்களாகவும், அரசு அலுவலர்களாகவும் குறிக்கப்படுகின்றனர்.

திருவங்குளம் கோயிலில், கி.பி. 1579-ம் ஆண்டு கல்வெட்டில் சிவந்தெழுந்தான் திருமலைராச பல்லவராயர் என்பவன் வழுத்தூர் அரசனாகக் குறிக்கப்படுகிறான். (பு.க. 752). இக்கோயிலில் 'பல்லவராயன் சந்தி' என்றதொரு வழிபாடு ஏற்படுத்தி அதற்குக் கொடுத்த தானங்களை அக்கல்வெட்டு கூறுகிறது. மேலும் இக்கல்வெட்டில் அவனது பட்டப் பெயர்கள் பலவும் குறிக்கப்படுகின்றன. அடைக்கலங்காத்தான் பல்லவராயர் மணவாளன், பூவைக்குமாரன் மணவாளன், பாண்டியன் முடிகாத்தான், பதினெட்டு வன்னியர் கண்டான், பட்டமானங்காத்தான் என்பன அவை. பல்லவராயர் பரம்பரையில் சிவந்தெழுந்தான் பல்லவராயர் என முதலில் பெயர் கொண்டவன் இவனேயாவான். மேலும் தென்னங்குடி (பு.க. 860) புல்வயல் (பு.க. 864) ஆகிய இடங்களிலும் பல்லவராயர் பற்றிய கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட கல்வெட்டுச் செய்திகளிலிருந்து பல்லவராயர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெருங்கோளியூர், விரையாச்சிலை, பேராம்பூர், வழுத்தூர், கலசமங்கலம் ஆகிய இடங்களின் அரசுத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள் என அறிகிறோம்.

பல்லவராயர்களைப் பற்றி மேலும் பலவரலாற்றுச் செய்திகளைத் தெரிந்து கொள்ள சிவந்தெழுந்த பல்லவராயர் ''உலா'' என்னும் பாடல் பெரிதும் துணைபுரிகிறது. இந்தப் பாடல் (உலா) அடங்கிய ஓலைச்சுவடி சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ளது. இவ்வுலாவின்

தலைவன் சிவந்தெழுந்த பல்லவராயன் என்பவனாவான். இவனது கொடி 'புலிக்கொடி'. சிறந்த சிவபக்தன். குடுமிமலைநாதர், கோகர்னேசர், பேரையூர் தேவர், திருமெய்யம் மெய்யர், காஞ்சிநாதர் ஆகிய தெய்வங்களிடம் அன்பு பூண்டவன். இவனும் இவனது முன்னோரும் பல கோயில்களுக்கு திருப்பணி செய்துள்ளனர். சிவந்தெழுந்த பல்லவராயர் திருக்கோகர்ணம் கடவுளுக்கு பொற்கிரீடம் அளித்துள்ளான். சிவந்தெழுந்த பல்லவராயர் உலா பாடிய புலவர் **மல்லையூர் சிற்றம்பலக் கவிராயர்** ஆவார். இவரது காலம் **கி.பி.1647-எனக்** கணக்கிடப்படுகிறது. ஏனைய வரலாற்றுச் செய்திகளோடு தொடர்புப் படுத்திப் பார்க்கும்போது இதுவே சிவந்தெழுந்த பல்லவராயரின் காலம் என்று தெரியவருகிறது. இவன் மதுரை திருமலை நாயக்கர், ராமநாதபுரம் விஜயரகுநாத சேதுபதி ஆகியோரின் சமகாலத்தவன், இந்த சிவந்தெழுந்த பல்லவராயரிடமிருந்துதான் புதுக்கோட்டைப் பகுதிகள் விஜயரகுநாத சேதுபதி மன்னரால் பெறப்பட்டு, புதுக்கோட்டை தொண்டைமானுக்கு வழங்கி, தொண்டைமான் ஆட்சி மலர ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்கள் புதுக்கோட்டைப் பகுதியை ஆண்டதன் நினைவாக, புதுக்கோட்டை நகரிலுள்ள பல்லவன் குளமும், இதேபெயரில், பேரையூர் விளாத்துப்பட்டி (கீரனூர் அருகில்) ஆகிய இடங்களிலும் குளங்கள் உள்ளன. தொண்டைமான்களின் ஆட்சிக்காலத்தில் 'பல்லவன் படி' என்ற படியும் (அளவை) புழக்கத்திலிருந்தது.

புதுக்கோட்டை கல்வெட்டுகள், சிவந்தெழுந்த பல்லவராயர் உலா ஆகியவற்றின் மேலாய்வுகள் இவர்களைக் குறித்த மேலும் பல வரலாற்றுச் செய்திகளை நமக்கு அளிக்கும்.

**மதுரை நாயக்கர்:-** மதுரை நாயக்க அரசு 1559-ம் ஆண்டு விஸ்வநாத நாயக்கர் என்பவரால் தொடங்கப்பட்டது. விஜயநகர மன்னரின் பிரதிநிதியாக மதுரைக்கு வந்த இவர் தன்னைத்தானே மன்னராகப் பிரகடனப் படுத்திக் கொண்டு ஆளத்தொடங்கினார். இவரது காலத்தில்தான் பாளையககாரமுறை தொடங்கப் பெற்றது. திருச்சிராப்பள்ளியும் மதுரை நாயக்கராட்சியில் உட்பட்டிருந்தது. மருங்காபுரி, இலுப்பூர், குமாரவாடி ஆகிய இடங்களில் இக்காலத்தில் ஆண்ட சிற்றரசர்களும் விஸ்வநாத நாயக்கருடன் மதுரையிலிருந்து வந்தவர்கள் எனத் தெரிகிறது. திருமலை நாயக்கர், ராணிமங்கம்மாள் ஆகியோர் மதுரை நாயக்கர்களுள் புகழ்பெற்றவர்கள் ஆவார்கள். விஜயரங்க சொக்கநாதரின் மனைவி மீனாட்சி இப்பரம்பரையில் கடைசியாக ஆண்டவர் ஆவார். இவரது ஆட்சி 1736-ம் ஆண்டில் முடிவுற்றது. இவ்வாண்டில் சந்தாசாகிப் மதுரை அரசின் அதிபதியாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு 1740-ம் ஆண்டுவரை ஆண்டு வந்தார். பின்னர் மராத்தியர் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி 1743-ம்

ஆண்டுவரை ஆண்டனர். இதே ஆண்டில் (1743) மொகலாயர்களின் தென்னகப் பிரதிநிதியான ஹைதராபாத் நிஜாம் மராத்தியர்களிடமிருந்து திருச்சியைக் கைப்பற்றினார். 1744-ம் ஆண்டில் நிஜாமின் பிரதிநிதியாக அன்வாருதீன், ஆற்காடு நவாபாக நியமிக்கப்பட்டார். மதுரை நாயக்கர் ஆட்சிக்குட்பட்டிருந்த அனைத்துப் பகுதிகளும் ஆற்காடு நவாபின் ஆளுகைக்கு உட்பட்டது.

**தஞ்சாவூர் நாயக்கர்:-** மதுரையை ஆண்ட மதுரை நாயக்கர்கள் **போன்று, கி.பி.1549-ம் ஆண்டு முதல் 1674-ம் ஆண்டுவரை,** விஜயநகர அரசுப் பிரதிநிதிகளாக தஞ்சாவூரை ஆண்டுவந்த நாயக்கர்கள், தங்களை தன்னாட்சி மன்னர்களாகப் பிரகடனப் படுத்திக் கொண்டு 'தஞ்சாவூர் நாயக்கர்', என்ற பெயரில் ஆண்டு வந்தனர். 1674-ம் ஆண்டில் மதுரை சொக்கநாத நாயக்கர் தஞ்சாவூர் விஜயராகவ நாயக்கரை தோற்கடித்தார். சொக்கநாத நாயக்கர், தனது உறவினர் அழகிரி நாயக்கர் என்பவரது பொறுப்பில் தஞ்சாவூரை விட்டுச் சென்றார்.

தஞ்சாவூர் விஜயராகவ நாயக்கரின் மகன் செங்கமலதாஸ் மராட்டியர்களின் உதவியைக் கோரினார். இவருக்கு உதவி செய்ய எக்கோஜி எனப்படும் வெங்கோஜி தலைமையில் மராட்டியப் படை ஒன்று தஞ்சாவூருக்கு அனுப்பப்பட்டது. அழகிரி நாயக்கர்படை தோற்கடிக்கப்பட்டது. ஆனால் 1674-ம் ஆண்டில் எக்கோஜி தானே தஞ்சாவூரின் மன்னர் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இவரே தஞ்சாவூர் மராட்டியருள் முதல் மன்னராவார். தஞ்சாவூரில் 1873-ம் ஆண்டுவரை மராட்டியரின் ஆட்சி நடைபெற்றது. கடைசியாக ஆண்ட சரபோஜி மன்னர் (1758-1833) 1799-ம் ஆண்டிலேயே ஓய்வூதியம் பெறுபவராக ஆக்கப்பட்டு, தஞ்சாவூர் பகுதியின் நிர்வாகம் முழுவதும் ஆங்கிலேயரின் நேரடி பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**ராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள்:-** ராமாயணக் காலத்தில், ராமேஸ்வரத்திற்கும், இலங்கைக்கும் அமைக்கப்பட்டப் பாலத்தை சேதுபதிகள் பாதுகாத்ததால் சேதுபதிகள்-சேது அணைக்காவலர்கள் - என ராமபிரானால் பெயரிடப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. ஆனால் 17-ம் நூற்றாண்டில்தான் இவர்களது அரசியல் வரலாறு தொடங்குகிறது. மதுரையை ஆண்ட முத்துக்கிருஷ்ண வீரப்ப நாயக்கர், ராமநாதபுரம், ராமேஸ்வரம் பகுதியில் நிர்வாகம், சட்டம் ஒழுங்கை சீர்படுத்த 1604-ல் சடயக்கதேவர் என்பவரை சேதுபதியாக நியமித்தார். சேதுபதி மன்னர்களுக்கும், தஞ்சாவூர் மன்னர்களுக்கும் அடிக்கடி போர் நடந்துகொண்டே இருந்தது. மன்னார்குடி, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகள் சிலகாலம் ராமநாதபுரம் ஆட்சியின் கீழும் சில காலம் தஞ்சாவூரின் ஆட்சியிலும் மாறிமாறி இருக்கக்

காண்கிறோம். தற்போதைய புதுக்கோட்டை மாவட்டத்தின் தென்பகுதி சேதுபதி மன்னர்களின் ஆளுகையில் இருந்தது. திருமயம் கோட்டை சேதுபதிகளால் கட்டப்பட்டது. ரகுநாததேவர் என்னும் கிழவன் சேதுபதியின் காலத்தில் (1673-1708) தொண்டைமான் பரம்பரையின் ஆட்சி ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது. 1801-ம் ஆண்டில் சேதுபதிகளின் ஆட்சியை ஆங்கிலேயர் முடிவுக்குக் கொண்டுவந்தனர். 1801-1803 வரை ஆங்கிலேயரின் நேரடிப் பொறுப்பில் இருந்தது. பின்பு இவர்களது பரம்பரையினர் ஆங்கிலேயருக்கு கட்டுப்பட்ட ஜமீன்தார்களாக ஆட்சி செய்துவந்தனர்.

**சிவகங்கைச் சீமை:-** சிவகங்கைச் சீமையின் தோற்றம் 1730-ம் ஆண்டு தொடங்குகிறது. பவானிசங்கரசேதுபதிக்கும் (1724-1728) கட்டயத்தேவர் என்னும் முத்துவிஜயரகுநாத சேதுபதிக்கும் ஏற்பட்ட அரசுரிமைப் போரில், நாலுக்கோட்டை சசிவர்ணபெரிய உடையத்தேவர், கட்டயத் தேவருக்கு உதவி செய்ததன் காரணமாக வெற்றியடைந்த கட்டயத்தேவர், ராமநாதபுரம் ஆட்சிப்பகுதியிலிருந்து சிவகங்கைப் பகுதியைப் பிரித்துக் கொடுத்து சசிவர்ணத்தேவரை சிவகங்கையின் மன்னராக ஆக்கினார். இவரே சிவகங்கையின் முதல் மன்னராவார். (1730-1750). இவருக்குப் பிறகு இவரது மகன் முத்துவடுகநாதபெரிய உடையார் (1750-1772) ஆட்சி செய்தார். 1772 முதல் 1780-ம் ஆண்டுவரை, சிவகங்கை, ஆற்காடு நவாபின் நேரடிப் பொறுப்பில் இருந்தது. 1780-ல் முத்துவடுகநாதனின் மனைவி வேலுநாச்சியார் அரசுப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். தொடர்ந்து இவரது மகள் வெள்ளாச்சி (1790-1793) ஆகியோர் ஆட்சிப் பொறுப்பிலிருந்தனர். ஆனால் இம்மூவரது காலத்திலும் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெயரளவில் இருக்க, ஆட்சியும் அதிகாரமும் மருது சகோதரர்கள் வசமிருந்தது. மருதுசகோதரர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு சிவகங்கைச் சீமை, ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்ட இஸ்திமிரா ஜமீன்தாரியாக மாறியது.

**பேராம்பூர்-கத்தலூர் சிற்றரசர்கள்:-**

பேராம்பூர்-கத்தலூர் சிற்றரசர்கள் குளத்தூர் வட்டத்தின் சில பகுதிகளை ஆண்டுவந்தனர். இவர்களைப் பற்றிய செய்தி கி.பி.1391-ம் ஆண்டு கல்வெட்டுகளிலேயே காணப்படுகிறது. (பு.க.எண்.687, 695) விராலிமலை இவர்களது ஆளுகைக்குட் பட்டிருந்ததாக விராளூர் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. இவ்வழிவந்த அழகிய மணவாளத் தேவன் விராலிமலை சுப்ரமணியர் கோயிலின் சில பகுதிகளைக் கட்டினார் விராலிமலைக்கோயிலில் இவர் இன்றும் பாராட்டி பாடப்படுகிறார். திருமலை நாயக்கர் காலத்தில் மதுரையைக் காத்த 72 பாளையங்களுள் இதுவும் ஒன்று. கத்தோலிக்க கிருத்துவ

பாதிரிமார்கள் இவர்களது பகுதிக்கு வந்தபோது, அவர்கள், ஆவூரில் தங்குவதற்குத் தேவையான உதவிகள் செய்துள்ளனர் என ஓலைச்சுவடி செய்தி ஒன்று தெரிவிக்கிறது. காலப்போக்கில் இந்த சிற்றரசு (பாளையம்) குமாரவாடி லக்கய்ய நாயக்கர் கைக்கு மாறியது. பின்னர் திருச்சியை ஆண்ட நாயக்கர்கள் 1708-ல் இப்பாளையப் பகுதியை புதுக்கோட்டை தொண்டைமானுக்கு அளித்தனர்.

**வாராப்பூர் சிற்றரசுத் தலைவர்கள்:-** தஞ்சாவூர் மன்னர்கள், சில அந்தனர்களுக்கு அளித்த, வாராப்பூர் பகுதியை அவர்கள் கி.பி.18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு தனி சிற்றரசாக (பாளையமாக) ஆளத் தொடங்கினர். ஜெகன்நாத அய்யங்கார் என்பவர் முதல் சிற்றரசர் ஆவார். இப்பகுதி விஜயரகுநாதராயத் தொண்டைமான் காலத்தில் (கி.பி.1735) புதுக்கோட்டையுடன் இணைக்கப்பட்டது. வாராப்பூரில் ஒரு மண்கோட்டை இருந்து அழிந்துபட்டதாகத் தெரிகிறது.

**இலுப்பூர் சிற்றரசுத் தலைவர்கள்:-** இலுப்பூரை ஆண்ட சிற்றரசுத் தலைவர்கள் தொட்டிய நாயக்கர் அல்லது காமாட்சி நாயக்கர் என்று அழைக்கப்பட்டனர். இலுப்பூர் பாளையக்காரர்கள், திருமலை நாயக்கர் (1629-1659) காலத்தில் மதுரைக் கோட்டையை பாதுகாத்து நின்றதாக தெரிகிறது. ஆகவே அதற்கு முன்பே இந்த பாளையம் நிறுவப்பட்டிருந்திருக்க வேண்டும். விஜயரகுநாத ராய தொண்டைமான் காலத்தில் (1730-69) புதுக்கோட்டையுடன் இணைக்கப்பட்டது. ஆனால் தொண்டைமான் இந்த பாளையத்தை ஆற்காடு நவாப் முகமது அலி மனைவியின் சில்லரை செலவினங்களுக்காக அன்பளிப்பாக அளித்தார்.

**குமாரவாடி பாளையக்காரர்கள்:-** திருமலை நாயக்க மன்னர் காலத்தில் இருந்த 72 பாளையங்களுள் இதுவும் ஒன்று. இப்பாளையக்காரர்கள் லக்கி நாயக்கர் என அழைக்கப்பட்டனர். இவர்களது பாளையப்பட்டு மருங்காபுரிக்கும் இலுப்பூருக்கும் இடையே இருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் விராலிமலையை, பேராம்பூர் சிற்றரசுத் தலைவர்களிடமிருந்து கைப்பற்றியதால் சிறிது காலம் இவர்களது ஆளுகைக்குட்பட்டிருந்தது. விராலிமலை சுப்ரமணியர் கோயிலின் ஒரு பகுதியை இவர்கள் கட்டியுள்ளனர். தொண்டைமான் மன்னர்களுக்கும், இவர்களுக்கும் நாட்டு எல்லைக்குறித்து அடிக்கடி சர்ச்சைகள் மூண்டன. 1804-ல் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனி இதுகுறித்து விசாரித்து தொண்டைமானுக்குக் சாதகமாகச் சில பகுதிகளை அளித்து ராசாளிப்பட்டியில் எல்லைக்கற்கள் அமைத்தனர். (பு.க.எண்.884, 885)

**மருங்காபுரி பாளையக்காரர்கள்:-** மதுரையைச் சேர்ந்த 72 பாளையங்களுள் மருங்காபுரி பரப்பளவில் பெரியதாகும். 1620-ம் ஆண்டைச் சேர்ந்த அம்மன் குறிச்சிக் கல்வெட்டு, இப்பாளையத்தின்

வீரபூச்சி நாயக்கர் என்பவரைக் குறிப்பிடுகிறது. (பு.க.எண்.760) அம்மன் குறிச்சி இவர்களது தலைநகராக விளங்கியது. அம்மன் குறிச்சியிலுள்ள கோயில் இவர்களால் கட்டப்பட்டதாகும். விரையாச்சிலை, குடுமியான்மலை ஆகிய பகுதிகள் இவர்களது ஆளுகையில் இருந்து, பின்பு ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி இப்பகுதிகளைப் பெற்று புதுக்கோட்டை தொண்டைமானுக்கு வழங்கியது.

மருங்காபுரி **பாளையக்காரர்களுடன் உறவுமுறையுள்ள** பொம்மநாயக்கர் பரம்பரையினர். தனியாகப் பிரிந்து கரிசல்பட்டி-வாராப்பூர் என்னும் தனிப் பாளையத்தை அமைதது்க் கொண்டனர். கிழவன் சேதுபதி பொன்னமராவதியை இவர்களிடமிருந்து கைப்பற்றி பிறகு தொண்டைமான் மன்னர்களிடம் ஒப்படைத்ததாகத் தெரிகிறது.

**பாலையவனம் ஜமீன்தார்கள்:-** பாலையவனம் புதுக்கோட்டை அறந்தாங்கிச் சாலையில் உள்ளது. இவர்கள் அறந்தாங்கி தொண்டைமான் பரம்பரையில் வந்தவர்கள் எனக்கருதப்படுகிறது.

**அறந்தாங்கி தொண்டைமான் மன்னர்கள்:-**

அறந்தாங்கியை ஆண்ட தொண்டைமான் மன்னர்கள் பற்றிய குறிப்பு கி.பி.1426-ம் ஆண்டில் முதன்முதலில் கிடைக்கிறது. தொடக்கத்தில் பாலையூர் பகுதியில் தங்கள் ஆட்சியைத் தொடங்கி காலப்போக்கில் ஆலங்குடி வட்டத்தின் தென் பகுதிகளையும், திருமயம் வட்டத்தின் கிழக்குப் பகுதிகளையும் அறந்தாங்கியைத் தலைநகராகக் கொண்டு ஆளத் தொடங்கினர். இது சுந்தரபாண்டிய வளநாட்டு இளங்கோநாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. திருப்பெருந்துரை ஆவுடையார் இவர்களது குலதெய்வம். செப்பேடுகளில் இவர்கள் அறந்தாங்கி அரசு எனகுறிக்கப்படுகின்றனர். முதல் மன்னர் பிச்சார் தொண்டைமான் 1426-ம் ஆண்டுவரை ஆண்டதாகத் தெரிகிறது. இவருக்குப்பின் ஆட்சி செய்த குலசேகர தொண்டைமான் (1426-53) அழகிய மணவாளப் பெருமான் தொண்டைமான் (1453-1488) பெருமாள் தொண்டைமான் (1488-1499) பொன்னம்பலநாத தொண்டைமான் (1499-1527) ஆகியோர் குறித்த செய்திகள் புதுக்கோட்டை கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. (பு.க.எண். 728, 750, 784, 794, 823, 830, 832). இவர்களுள் பொன்னம்பலநாதத் தொண்டைமான் திருவரங்குளம் கோயிலுக்கு கொடை அளித்துள்ளார். இவரது பெயரால் நடைபெற்ற வழிபாடு அலைவில் அஞ்சாதான் சந்தி என்றுக் குறிப்பிடப்படுகிறது. மேலும் இவர் பேரையூர் நாகநாதசாமி

கோயிலுக்கும், தென்கோனாட்டு குளமங்கலம் கோயிலுக்கும், பொன்னமராவதி பெருமாள் கோயிலுக்கும் கொடையளித்துள்ளார்.

**குளத்தூர் தொண்டைமான் மன்னர்கள்:-** ரகுநாராயத் தொண்டைமான் (1686-1730) புதுக்கோட்டை - சிற்றரசை - தனியரசாக உருவாக்கிவந்த காலத்தில், இவரது சகோதரர் நமண தொண்டைமான் குளத்தூர் பாளையத்தின் பாளையக்காரராக நியமிக்கப்பட்டார். மதுரை நாயக்கர் ரங்க கிருஷ்ண முத்து வீரப்பனின் காலத்தில் (1682-89) நமணத்தொண்டைமான் திருநெல்வேலி பாளையக்காரர்களுக்கு எதிராக படை நடத்திச் சென்று அவர்களை அடக்கினார். அதற்கு சன்மானமாக குளத்தூர் பகுதி-பாளையம்-அவருக்கு அளிக்கப்பட்டது. அவர், மதுரை நாயக்கருக்குப் பங்குபணம் (கப்பம்) ஏதும் கட்டத் தேவையில்லை என்றும் சலுகை வழங்கப்பட்டது. மேலும் பல அரசு மரியாதைகளையும் வைத்துக்கொள்ளும் உரிமையும் வழங்கப்பட்டது. நாயக்கரின் மேலான்மையை ஏற்றுக் கொண்ட நமணத் தொண்டைமான், தன்னை ரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நமணத் தொண்டைமான் என்று அழைத்துக் கொண்டார். 1690-ம் ஆண்டு வாக்கில் புதுக்கோட்டையை ரகுநாதராய தொண்டைமானும், குளத்தூரை நமணத் தொண்டைமானும் ஆண்டுவந்தனர். முன்னவரை 'தொண்டைமான்' எனவும், பின்னவரை ''சின்ன தொண்டைமான்'' எனவும் ஆலூர் மிஷன் பதிவுகள் குறிப்பிடுகின்றன. குளத்தூர், 1750-ம் ஆண்டுவரை தனி பாளையமாக இருந்து வந்தது.

நமணத் தொண்டைமான், பேராம்பூர் - கத்தாலூர், பாளையத்தையும், குமாரவாடி பாளையத்திலிருந்து விராலிமலைப் பகுதிகளையும், மருங்காபுரி பாளையத்திலிருந்து அம்மன் குறிச்சியையும், தனது குளத்தூர் பாளையத்துடன் சேர்த்துக் கொண்டார். இவ்வாறாக குளத்தூர் வட்டம் முழுவதும் இவரது ஆளுகையின் கீழ் வந்தது. மேலும் இவர் நாயக்க அரச கன்னி ஒருத்தியையும் மணந்து கொண்டார்.

நமணத் தொடண்டைமான் பெரும் கொடையாளியாக விளங்கினார். குளத்தூரில் சிவன் திருமால் கோயில்களைக் கட்டினார். பேராம்பூர் கணேசர் கோயிலுக்கு கொடையளித்த செய்தியினை 1713-ம் ஆண்டைச் சேர்ந்த அங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது. விராலூர் பெருமாள்கோயிலில் விளக்கெரிப்பதற்காக அப்பகுதியில் இயங்கும் ஒவ்வொரு செக்கும் $^{1}/_{4}$ படி எண்ணெய் (ஒவ்வொரு முறையும்) வழங்கவேண்டுமென உத்தரவிடப் பட்டதாக இங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இவர் குளத்தூர் பெரிய குளத்திற்கு கலிங்கு கட்டியுள்ளார். அந்தணர்கள் பலருக்கு சர்வமான்யமாக நிலங்கள் அளித்த செய்தியினை பல செப்பேடுகள் கூறுகின்றன.

நமணத் தொண்டைமான் 1713-வரை ஆண்டதாகத் தெரிகிறது. இவருக்குப் பின் இவரது மகன் ராமசாமித் தொண்டைமான் குளத்தூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவரும், நாயக்கர்களின் மேலான்மையை குறிக்கும் வண்ணம், தன்னை விஜயரங்க சொக்கநாத ராமசாமி தொண்டைமான் என அழைத்துக் கொண்டார். இவர், ராணி மங்கம்மாவின் வளர்ப்பு மகள் முத்தழகம்மாளை மணந்து கொண்டு பல கிராமங்களை சீதனமாகப் பெற்றார்.

**ராமசாமி தொண்டைமான் போர்கள் ஏதுமின்றி அமைதியாக** ஆட்சி செய்துவந்தார். இவரது தந்தையைப் போன்று இவரும் கொடைகள் பல அளித்த செய்திகள் காணப்படுகின்றன.

புதுக்கோட்டையை ஆண்டுவந்த ரகுநாதராய தொண்டைமான் 1730-ல் இறந்தவுடன் புதுக்கோட்டை அரசை தனது நெருங்கிய உறவினர் பச்சைத் தொண்டைமானுக்கு கைப்பற்றிக் கொடுக்க ராமசாமித் தொண்டைமான் முயற்சி செய்தார். ஆனால் இந்த முயற்சி தோல்வியடைந்தது.

ராமசாமி தொண்டைமான் ஆவூரில் தங்கியிருந்த கிருத்துவ சமய பாதிரியார்களிடத்தில் மிகுந்த அன்புகொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்துவந்ததாக மதுரை மிஷன் பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

ராமேஸ்வரம் செல்லும் பயணிகளின் வசதிக்காக இவர் 1728-ல் களமாவூரில் ஒரு சத்திரம் கட்டி அதன் பராமரிப்பிற்கு கொடையளித்துள்ளார். இவரது அரசி முத்தழகம்மாள் பெயரில் அம்மாசத்திரத்தில் ஒரு சத்திரம் கட்டப்பட்டது. நல்லூரிலும் ஒரு சத்திரம் கட்டப்பட்டது.

ராமசாமி தொண்டைமானுக்குப் பிறகு இவரது மகன் நமணத் தொண்டைமான் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் புதுக்கோட்டை அரசு வலுவாக இருந்தது. ராமசாமித் தொண்டைமான் காலத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களை பயன்படுத்திக் கொண்டு, புதுக்கோட்டைத் தொண்டைமான் விஜயரகுநாதா, குளத்தூர் பாளையத்தை 1750-ல் புதுக்கோட்டையுடன் இணைத்துக் கொண்டபோது, குளத்தூர் தொண்டைமான் பரம்பரை முடிவிற்கு வந்ததாகக் கொள்ளலாம்.

# 6. விஜயரகுநாதராயத் தொண்டைமான் (1730-1769)

தொண்டைமான் அரச பரம்பரையின் இரண்டாவது மன்னர் விஜயரகுநாதராயத் தொண்டைமான். இவரது முடிசூட்டு விழா திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் கோயிலில் நடைபெற்றது. இவரது சகோதர்களுக்காக மேல அரண்மனை என்றும் கீழ அரண்மனை என்ற இரண்டு ஜாகிர்கள் ஏற்படுத்தப்பட்டன. இவரது காலத்தில், குளத்தூரில் தனித்து இயங்கிவந்த குளத்தூர் தொண்டைமான் பரம்பரையினரின் ஆளுகையில் இருந்த பகுதிகளும் புதுக்கோட்டையுடன் இணைக்கப் பட்டன.

விஜயரகுநாதராயத் தொண்டைமான் அரசுக்கட்டில் ஏறிய சமயம் தென்னகத்தின் அரசியல் மிகவும் குழப்பமான நிலையிலிருந்தது. 19-ம் நூற்றாண்டு தொடக்கம் வரை, புதுக்கோட்டை தொண்டைமான்களின் வரலாறு தொடர்பான நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது அவையே அக்கால தமிழகத்தின் வரலாற்றுச் சுருக்கமாகவும் இருப்பதைக் காணலாம். ஆகவே அந்நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் சற்று விரிவாகவே இங்கு தரப்பட்டுள்ளன. அகில இந்திய அளவில் முகலாயர் இந்திய பேரரசர்களாக விளங்கினர். தமிழகத்தில் கொடிகட்டிப் பறந்த மதுரை அரசும், தஞ்சை அரசும், முகலாய ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டன. முகலாய அரசின் தென்னக பிரதிநிதியாக ஹைதராபாத் நிஜாம் நியமிகப்பட்டார். தமிழகத்தில் திறை (கப்பம்) வசூலிக்கும் பொறுப்பை ஹைதராபாத் நிஜாம் ஆற்காடு நவாபிடம் ஒப்படைத்திருந்தார். தமிழகத்தின் பகுதிகள் கர்னாடகம் என்று அப்போது அழைக்கப்பட்டது. தனது அதிகாரபலத்தால், தமிழகத்து சிற்றரசர்களின் கருவூலங்களை ஆற்காடு நவாபுகள் சுரண்டிக் கொண்டிருந்தனர். இந்த சூழ்நிலையில் ஆற்காடு நவாப் பதவிக்கு முகமது அலிக்கும், சந்தாசாகிபுக்கும் இடையே பலத்த போட்டி ஏற்பட்டது. அவர்களது சுயநல போட்டியில் தமிழகம் தன்னை இழந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் இடையே புகுந்து தங்கள் கைவரிசையைக் காட்டினர். ஆங்கிலேயர்கள் முகமதலிக்கும், பிரஞ்சுக்காரர்கள் சந்தாசாகிப்புக்கும் பக்கபலமாக இருக்க சம்மதித்து ஒப்பந்தங்கள் உருவாயின. தமிழக சிற்றரசர்களும், மன்னர்களும் பாளையக்காரர்களும் பிளவுபட்டு இரண்டு கட்சியாக நின்றனர். தங்களுக்குள் இருந்த பகையை தீர்த்துக் கொள்ள நல்ல தருணம் என்று அவர்கள் கருதியிருக்கக்கூடும். இந்த எண்ணத்தில், அன்னிய நாட்டினரின் தலைமையில் இரு பிரிவாக அணி திரள்வதில்

முனைப்புடன் இருந்தனர் நமது நாட்டினர். ஆனால் இவர்கள் தமக்குள் இருந்த பகைமையை மறந்து ஒன்றுபட்டு போராடியிருந்தால் தமிழகத்தின், ஏன் இந்தியாவின் வரலாறே மாறுபட்டதாக இருந்திருக்கும்.

மதுரை மன்னனாக இருந்த விஜயரங்க சொக்கநாதருக்குப்பின் 1731-ல் அவனது பட்டத்தரசி மீனாட்சி அரசி பதவியை ஏற்றிருந்தாள். அரசுரிமை குறித்து மீனாட்சிக்கும் பங்காரு திருமலை என்பானுக்கும் போட்டி ஏற்பட்டது. இதன் காரணமாக மதுரையில் உள்நாட்டுக் கலவரம் ஏற்படவே ராணி மீனாட்சி திருச்சி கோட்டைக்குத் தப்பிச்செல்ல நேரிட்டது. புதுக்கோட்டை தொண்டைமானும் இன்னும் பல பாளையக்காரர்களும் பங்காரு திருமலைக்கு ஆதரவாக இருந்தனர்.

இந்த சூழ்நிலையில் 1732-ல் ஆற்காடு நவாப் தோஸ்த் அலி, தஞ்சை, மதுரை, திருவாங்கூர் ஆகிய அரசுகளிடமிருந்து திறை வசூலித்து வருமாறு தனது மகன் சப்தார் அலிகான், மருமகன் சந்தாசாகிப் ஆகியோர் தலைமையில் படைகளை அனுப்பி வைத்தார். திருவாங்கூரில் திறை வசூலித்துக் கொண்டு மதுரைக்கு வந்த சப்தார் அலிகான், மதுரை அரசு விவகாரத்தில் தலையிட்டு பங்காரு திருமலைக்கு உதவி செய்வதாக ஒரு ரகசிய உடன்பாட்டைச் செய்து கொண்டார். பங்காரு திருமலையும் அதற்கென ஒரு பெரும் தொகையை சப்தார் அலிகானுக்குக் கொடுப்பதாகவும் வாக்களித்திருந்தா..

இதே சமயம் சந்தாசாகிப், திருச்சி கோட்டையை முற்றுகையிட்டார். ராணி மீனாட்சி, சந்தாசாகிபை ரகசியமாக சந்தித்து, பங்காரு திருமலையை எதிர்க்க தனக்குத் துணையாக இருக்க வேண்டுமென்றும் அதற்கு கைமாறாக ஒரு கோடி ரூபாய் தனிப்பட்ட சன்மானமாக (சந்தாசாகிபுக்கு) தருவதாகவும் வாக்களித்து ஒரு உடன்படிக்கை செய்துகொண்டாள். இதன்காரணமாக பங்காரு திருமலைக்கு ஆதரவாக இருந்த தொண்டைமான் நாட்டை சந்தாசாகிபின் படைகள் தாக்கின.

சந்தாசாகிபின் படைகள், திருக்கோகர்ணத்திற்கு அருகிலுள்ள கவினாடு கண்மாய் கரையில் முகாமிட்டு, புதுக்கோட்டையின் மீது திடீர் தாக்குதல் நடத்தி தொண்டைமானின் படைகளை முறியடித்தன. நகரில் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது. விஜயரகுநாதராயத் தொண்டைமான் புதுக்கோட்டை நகருக்கு கிழக்காக இருந்த மணிப்பள்ளம் காட்டிற்குச் சென்று மறைந்து கொண்டார்.

சந்தாசாகிப் புதுக்கோட்டையை விட்டகன்றதும், அதனைத் தொடர்ந்தே தஞ்சை மன்னராகிய துக்கோஜி, மதுரை அரசி மீனாட்சியின்

துணையுடன், தனது தளபதி ஆனந்தராவின் தலைமையில் பெரும்படை ஒன்றை புதுக்கோட்டையை தாக்குவதற்கு அனுப்பிவைத்தார். சந்தாசாகிபின் தாக்குதலால் நிலைகுலைந்திருந்த ரகுநாதராயத் தொண்டைமான், தஞ்சாவூர் படையை எதிர்த்து திறம்பட போரிட்டார் இப்போர் விபரங்களைக் கூறும் 'வளந்தான் பாட்டு' என்னும் பாடல்

**''கனத்த புகழ் படைத்த காளிக்குடிக்கோட்டையில்**
**அனந்தராயரை அதிரவெட்டுந் தொண்டைமான்''**

எனப் புகழுரைத்துக் கூறுகிறது. தீரமுடன் போரிட்டும், எதிரிகளை தாக்குப்பிடிக்க முடியாத தொண்டைமான் திருமயம் கோட்டைக்குள் புகுந்து தங்கி ஆனந்தராவின் தாக்குதலிலிருந்து தப்பினார். திருமயம் கோட்டையை பதினைந்து மாதங்கள் முற்றுகையிட்டும், கோட்டையைத் தகர்க்க முடியாமல் முற்றுகையைக் கைவிட்டு தன்படையுடன் தஞ்சாவூருக்குத் திரும்பினான் ஆனந்தராவ்.

ராணி மீனாட்சிக்கு உதவுவதுபோல் போக்குக்காட்டிய சந்தாசாகிப் சூழ்நிலையை நன்கு அறிந்து கொண்டு, தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டு, ராணியை சிறையிலடைத்தார். மணமுடைந்த மீனாட்சி தற்கொலை செய்து கொண்டாள். மதுரை அரசுக்கு தானே மன்னன் என பிரகடனப் படுத்திக் கொண்ட சந்தாசாகிப், தனது சகோதரர்களாகிய பூதாசாகிப், சதக்சாகிப் இருவரையும் முறையே மதுரையிலும், திண்டுக்கல்லிலும் பாதுகாப்புப் பணியில் அமர்த்திவிட்டு, திருச்சியிலிருந்தபடி ஆளத்துவங்கினார்.

சந்தாசாகிபின் இந்த செயல், ஆற்காடு நவாபிற்கு வெறுப்பையும், ஹைதராபாத் நிஜாமுக்கு, ஆற்காடு நவாபின் மீது கோபத்தையும் விளைவித்தன. நவாபை தண்டிக்க விரும்பினார் நிஜாம். இந்த சமயத்தில் 1739-ல், மகாராஷ்டிரத்திலிருந்த மராட்டியர்கள், முன்னாள் நிஜாம், உசேன் அலியுடன் (1720-ல்) செய்து கொண்ட பழைய ஒப்பந்தப்படி, தங்களுக்கு சேரவேண்டிய திறைப்பணத்தை வசூலிப்பதற்காக படைகளை அனுப்பினர். அப்படை முதல் கட்டமாக ஆற்காடு மீது தாக்குதல் தொடுத்தது. போரில், நவாப் தோஸ்த் அலிகான் கொல்லப்பட்டார். அவரது மகனான சப்தார் அலி மராட்டிய படைக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்ட ஈடாக கொடுக்க ஒப்புக் கொண்டதன்பேரில் ஆற்காடு நவாபாக இருந்துவரும் உரிமையை தக்கவைத்துக் கொண்டார். மேலும், மராட்டியர் சந்தாசாகிபை வென்றால் அவர் வசமுள்ள திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளை அவர்களே (மராட்டியர்களே) வைத்துக் கொள்ளவும் சப்தர் அலி ஒப்புக் கொண்டார். இந்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து மராட்டியப் படை 1741-ல் திருச்சியை முற்றுகையிட்டு சந்தாசாகிபை சிறைபிடித்தது.

மராட்டியப் படை திருச்சியைத் தாக்கிய பொழுது விஜயரகுநாத ராயத் தொண்டைமான் (மராட்டியர்) பக்கமிருந்து பெரிதும் உதவி செய்துள்ளார். இவரது வீரத்தை பாராட்டிய மராட்டியர் 'வஜ்ஜிருடு' (வீரம் செறிந்த வீரர்) என்னும் பட்டத்தை அளித்தனர்.

1741-ல் மராட்டியர் திருச்சியில் தாம் வென்ற பகுதிகளை முராரி ராவ் என்னும் தளபதியின் பொறுப்பில் விட்டுவிட்டு, சிறைபிடிக்கப்பட்ட சந்தாசாகிபையும் தம்மோடு கொண்டு சென்று சதாராவில் சிறையிலடைத்தனர். சந்தாசாகிப் அங்கு ஏழு ஆண்டுகள் சிறையிலிருக்க நேர்ந்தது.

தென்னிந்தியாவில் தனது நிலையான மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்ள எண்ணிய நிஜாம் 1743-ல் பெரும்படையை தமிழகத்திற்கு அனுப்பினார். இப்படை திருச்சியையும், மதுரையையும் மராட்டியரிடமிருந்து கைப்பற்றியது. ஆற்காடு நவாபாக அன்வாருதீன் நியமிக்கப்பட்டார். அன்வாருதீன் தனது மகன் முகமதலி வசம் ஆற்காட்டையும், மகபூஸ்கான் என்பான் வசம் திருச்சியையும் ஒப்படைத்தார். நிஜாமின் இந்த படையெடுப்பின்போது, தொண்டைமான் நிஜாமுக்கு பெரிதும் பக்கபலமாக நின்றார்.

புதுக்கோட்டை தொண்டைமானின் அரசியல் கொள்கைகள் குறித்து இங்கு சில ஐயங்கள் எழக்கூடும். அதாவது, சந்தாசாகிபுக்கு எதிராக மராட்டியர் படையெடுத்தபோது, மராட்டியருக்கு துணைநின்ற தொண்டைமான், மராட்டியரை எதிர்த்து நிஜாம் போர் தொடுத்தபோது நிஜாம் பக்கம் நின்றது நேர்மையான செயலாகுமா என எண்ணத் தோன்றும்.

இது ஆராயத்தக்கதொரு விஷயமாகும். அப்போது தமிழகத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைக் கவனிக்க வேண்டும். விருப்புவெறுப்பின்றி பார்ப்போமானால் உண்மை விளங்கும். மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை போன்ற அரசுகள், அவ்வப்போது நிலைத்து நிற்கும் ஒரு பேரரசுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசாகவே இருந்து வந்திருக்கின்றன. நிஜாமானாலும், நவாப் ஆனாலும், மராட்டியர் ஆனாலும் எவர் தமிழகத்தில் மேலாண்மை வகிக்கிறார்களோ, அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இச்சிற்றரசர்கள் இருக்கவேண்டிய ஒரு துரபாக்கியமான அரசியல் சூழ்நிலைதான் அப்போது இருந்தது. இந்த சூழ்நிலையில் தம் அரசை நிலைநிறுத்திக் கொள்ள இதுபோன்று செயல்படுவதே விவேகமாகும். எந்த பேரரசின் கை ஓங்கியிருக்கிறதோ அவர்கள் பக்கமிருந்தால்தான் அவ்வரசு பிழைக்கும். இதுதான் அக்கால தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை. மேலும் சந்தாசாகிப் ஏற்கனவே புதுக்கோட்டைக்கு நாசம் விளைவித்தமைக்கு பழிவாங்கும் வண்ணம்,

மராட்டியருக்கு உதவி செய்ததாகவும் கொள்ளலாம். இந்திய அளவில் மொகலாயர் பலம் பெற்றிருந்ததால் தென்னாட்டு அரசுகள், சிற்றரசுகள், பாளையங்கள் அனைத்தும் பலமிழந்து நின்ற நிலையில், மொகலாயரின் தென்னகப் பிரதிநிதியான நிஜாமின் கை ஓங்கியிருந்தது. தமது செல்வாக்கை இந்தியாவில் நிலைநிறுத்திக் கொள்ள ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் கடும் ஆதிக்கப்போட்டியில் ஈடுபட்டிருந்த நேரம் அது. ஆங்கிலேயர், நிஜாமுக்கு ஆதரவாக இருந்தனர். ஆங்கிலேயர் மற்றவர்களைவிட பலம் பொருந்தியர்வகளாக விளங்கியதாலும் அவர்கள் நிஜாமுக்கு ஆதரவாக இருந்ததாலும் இவற்றையெல்லாம் உற்று ஆராய்ந்த பின்பே-நிஜாமுக்கு ஆதரவளிப்பதுத் தொண்டைமானுக்கு தவிர்கக முடியாததாகிவிட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

திருச்சி படையெடுப்பில் புதுக்கோட்டை மன்னர் அளித்த ஆதரவுக்காக அவரை பெரிதும் பாராட்டிய நிஜாம், இலுப்பூர் பகுதியை புதுக்கோட்டையுடன் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்ததோடு, பல விருதுகளை உபயோகித்துக் கொள்ளும் சலுகையையும் அளித்தார். இவ்வாறான அரசியல் பின்னணியில் ஆண்டுவந்த தொண்டைமான் தனது தாத்தாவிடமிருந்து கைநழுவிப்போன கீழாநிலைக் கோட்டையையும், தஞ்சாவூர் மராட்டியரிடமிருந்து 1749-ல் பெற்று தனது நாட்டை விரிவு படுத்திக் கொண்டார். மேலும் குளத்தூரை ஆண்ட தொண்டைமான் திறமையற்றவராக இருந்ததால் அவரை பதவியிலிருந்து நீக்கி 1750-ல் குளத்தூர் பகுதியையும் தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டார்.

தனது ஆளுகைப் பகுதியை கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்தி அமைதியுடன் ஆள நினைத்தார் தொண்டைமான். ஆனால், ஆங்கிலேயர் பிரஞ்சுக்காரர் ஆதிக்கப்போட்டிகள், தென்னாட்டு சிற்றரசர் மற்றும் தமிழக பாளையக்காரர்களிடையே ஒற்றுமையின்மை ஆகியன தமிழக வரலாற்றை திசை திருப்பிக் கொண்டிருந்தன. இந்த நிகழ்ச்சிகளுள் புதுக்கோட்டையும் சிக்கிக் கொண்டது.

ஹைதராபாத் நிஜாம், நிஜாமுல் முல்க் இறந்ததும், நிஜாம் பதவிக்கு, நிஜாமின் மகன் நசீர்ஜங், பேரன் முசாபர் ஜங், இருவரும் போட்டியிட்டுக் கொண்டனர். ஆற்காடு நவாப் பதவிக்கு சந்தாசாகிப் போட்டியாக இருந்ததை முன்பே கண்டோம். நசீர் ஜங்கை ஆங்கிலேயர் ஆதரித்தனர். பிரஞ்சு கவர்னர் டூப்ளே, முசாபர் ஜங்கை ஆதரித்தார். மேலும் டூப்ளே, மராத்தியருக்கு 7 லட்ச ரூபாய் கொடுத்து சந்தாசாகிபுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து ஆற்காட்டின் அரசியல் களத்தில் இறக்கிவிட்டார். முசாபர்ஜங், சந்தாசாகிப், அவரது மகன் ராஜாசாகிப் ஆகியோர் டூப்ளேயின் உதவியுடன் ஆற்காடு மீது படையெடுத்து நவாப்

அன்வாருதீனை கொன்றனர். சந்தாசாகிப் ஆற்காடு நவாபாக பிரகடனப் படுத்தப்பட்டார். ஆற்காட்டில் ஆண்டு கொண்டிருந்த முகமதலி திருச்சிக்கு தப்பிச் சென்று தானே நவாப் என பிரகடனப் படுத்திக் கொண்டார். இந்நிகழ்ச்சிகள் தொடர்பாக ஏற்பட்ட போர்கள் கர்நாடகப் போர்கள் (Carnatic Wars) என அழைக்கப்படுகின்றன.

முகமதலி வசமிருந்த திருச்சி கோட்டையை சந்தாசாகிப் முற்றுகையிட்டார். முகமதலி ஆங்கிலேயரின் உதவியை நாடினார். தமக்கு உதவி அளித்தால் ஆங்கிலேயருக்கு சென்னைக்கு அருகே பெரும்நிலப்பரப்பையும், படையெடுப்புச் செலவுக்கு பெரும் தொகையையும் தருவதாக ஒப்புக் கொண்டார் முகமதலி. ஒப்பந்தத்தின்படி, 1751-ல் கேப்டன் கோப், கேப்டன் கிஞ்சன் ஆகியோரின் தலைமையில் ஆங்கியேப் படை ஒன்று திருச்சி நோக்கி சென்றது. சந்தாசாகிப்புக்கு உதவியாக பிரஞ்சுப்படை சென்றது. தனக்கு உதவியளிக்கும்படி புதுக்கோட்டை தொண்டைமானுக்கு தூது அனுப்பினார், சந்தாசாகிப். ஆனால் தொண்டைமான் இதற்கு இசையவில்லை. ஆங்கிலேயர் பக்கமிருந்து உதவி செய்வதாக முடிவு செய்தார் தொண்டைமான். ஆகவே ஆற்காடு நவாப்; புதுக்கோட்டை தொண்டைமான், தஞ்சாவூர் மராட்டிய மன்னர் ஆகியோர் ஆங்கிலேயர் பக்கமிருந்தனர். முகமதலி மைசூர் தளபதியுடன் செய்து கொண்ட ரகசிய உடன்படிக்கைக் காரணமாக மைசூர் படையும் இவர்களது அணியுடன் களத்திலிருந்தது.

முகமதலிக்கு உதவியாக 400 குதிரைகளையும் 3000 போர் வீரர்களையும் திருச்சிக்கு அனுப்பி வைத்தார் தொண்டைமான். இது ஆங்கிலேயரின் படை பலத்தைக் கூட்டியது. 1752-ல் மேஜர் லாரன்ஸ், கேப்டன் கிளைவ் ஆகியோரின் தலைமையில் மீண்டுமொரு ஆங்கிலேய படை திருச்சிக்கு வந்து சேர்ந்தது. சந்தாசாகிப்-பிரஞ்சு கூட்டணி தோற்கடிக்கப்பட்டது. தஞ்சாவூர் தளபதி மனோஜி சந்தாசாகிபின் தலையைத் துண்டித்து முகமதலிக்கு அனுப்பிவைத்தான். (சந்தாசாகிபின் தலை திருச்சி கோட்டைவாயிலில் பார்வைக்குத் தொங்கவிடப்பட்டது. தலையில்லா உடல் மட்டும் திருச்சி நத்தர்வலி தர்கா வளாகத்தில் புதைக்கப்பட்டது - இன்றும் அந்த கல்லறையை அங்கு காணலாம்).

சந்தாசாகிபு திருச்சியை முற்றுகையிட்டிருந்தபோது மைசூருடன் ஒரு ரகசிய உடன்படிக்கை செய்திருந்தார் முகமதலி. அதன்படி போரில் உதவி செய்தால் திருச்சியை அவர்களுக்கு தருவதாக ஒப்புக் கொண்டிருந்தார். போர் முடிந்த பின் ஒப்பந்தப்படி திருச்சியின் பொறுப்பை தங்களிடம் ஒப்படைக்க மைசூர் கேட்டுக் கொண்டது. ஆனால் ஆங்கிலேயரின் வலையில் சிக்கிக் கொண்ட நவாப்

தன்னிச்சையாக எதுவும் செய்யமுடியவில்லை. நவாப், ஒப்பந்தப்படி நடக்காத காரணத்தால் மைசூர் படை பிரஞ்சுப்படையுடன் சேர்ந்து திருச்சியை மீண்டும் முற்றுகையிட்டது.

1753-ல் ஏற்பட்ட இந்த முற்றுகையின்போதும் தொண்டைமான் ஆங்கிலேயருக்குப் பக்க பலமாக விளங்கினார். கோட்டையினுள்ளே இருந்த வீரர்களுக்குப் போர்க்கருவிகளையும் உணவுப்பொருட்களையும் சேகரித்து கோட்டைக்குள் தொண்டைமான் அனுப்பி வைத்தார். மைசூர் தளபதி மஞ்சுராவ் தொண்டைமானை அச்சுறுத்திப் பார்த்தான். ஆனால் தொண்டைமான் அஞ்சாது ஆங்கிலேயருக்கு உதவிகள் செய்துவந்தார். இதற்கிடையில் பிரஞ்சுபடையுடன் மராத்தியர் படையும் சேர்ந்து கொண்டது. ஆகவே தஞ்சாவூர் ஆங்கிலேயருக்கு உதவுவதிலிருந்து சற்றே விலகி நின்றது. இந்நிலையில் புதுக்கோட்டை மட்டுமே தொடர்ந்து ஆங்கிலேயர் பக்கமிருந்து உதவிகள் செய்துவந்தது. தொண்டைமான் மீது கோபமடைந்த எதிரியின் படைகள், அவரைப் பழிவாங்க புதுக்கோட்டைப் பகுதிகளைத் தாக்கி பெருத்த சேதம் விளைவித்தன. 1754-ல் மைசூர் மற்றும் மராட்டிய படைகள் திருச்சி முற்றுகையிலிருந்து பின்வாங்கின. போரின் முடிவில், ஆங்கிலேயரின் ஆதரவுடன் முகமதலியை ஆற்காடு நவாபாக நியமித்தார், ஹைதராபாத் நிஜாம்.

இந்தப் போரின்பேரது ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய அரசுகள் சந்தாசாகிபுக்கு ஆதரவாக செயல்பட்டன.

தமிழகத்தின் அரசியல் எஜமானர்களாக ஆங்கிலேயர் ஒரு பக்கமும் பிரெஞ்சுக்காரர்கள் ஒரு பக்கமும் செயல்பட்டுக் கொண்டிருந்ததை இந்த நிகழ்ச்சிகள் தெரிவிக்கின்றன. அப்போதிருந்த அரசியல் சூழ்நிலையில், நமது நாட்டவர்கள் இவ்விரண்டு அந்நிய நாட்டினர்களுள் யாரோ ஒருவருடன் இணக்கமாக இருக்க வேண்டிய கட்டாயம் அப்போதிருந்தது எனலாம். ஆகவே தமிழகத்து சிற்றரசர்களும், பாளையக்காரர்களும் இரண்டுபட்டு நின்றதைக் காண்கிறோம். இதில் தொண்டைமான் ஆங்கிலேயர் பக்கமிருந்தார்.

தொண்டைமான் முகமதலிக்கும், ஆங்கிலேயருக்கும் செய்த உதவிகள் வெகுவாகப் பாராட்டப்பட்டன.

திருச்சி வெற்றிக்குப் பிறகு, தமிழகத்தின் தெற்குப் பகுதிகளையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து திறை வசூலிக்க எண்ணங் கொண்டு மதுரை திருநெல்வேலி ஆகிய பகுதிகளின்மீது படையெடுத்தார் முகமதலி. மேலும் அங்கெல்லாம் ஆண்டு கொண்டிருந்தவர்கள் திருச்சி போரின்போது சந்தா சாகிபுக்கு ஆதரவாக செயல்பட்டனர் என்பதும் ஒரு காரணம். முகமதலி ஆங்கிலேயரின்

துணையை நாடினார். அதன்படி கர்னல் ஹெரான் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டது. தொண்டைமானும் தனது படையை உதவிக்கு அனுப்பி வைத்தார். இப்படை மதுரையை நோக்கி முன்னேறியது.

இதுவரை நவாபுக்கு எதிராக செயல்பட்டு வந்த ராமநாதபுரம் சேதுபதி, 1755-ல் மதுரை, திருநெல்வேலிக்கு எதிராக நடைபெற்றப் போரில் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் துணையாக இருப்பதாகவும், இந்த நட்புக்கு அடையாளமாக தமது எல்லைக்குட்பட்ட இரண்டு துறைமுகப் பட்டிணங்களை ஆங்கிலேயருக்கு அளிப்பதாகவும், கர்னல் ஹெரானுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக தொண்டைமானும் தஞ்சாவூர் மன்னரும் தங்கள் கருத்துக்களை ஆங்கிலேயருக்கும், நவாபுக்கும் தெரிவித்ததன்பேரில் மேற்படி ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

கர்னல் ஹெரான் பெருமளவு கையூட்டு பெற்றுக் கொண்டு, முகமதலியின் சகோதரர் மாபூஸ்கானை மதுரை, திருநெல்வேலி பகுதிக்குத் வரிவசூல் அதிகாரியாக (Rentor) அறிவித்தார். ஹெரானின் இச்செய்கையால் அதிருப்தி அடைந்த கும்பெனியார் அவரை பதவி நீக்கம் செய்தனர்.

இச்சமயத்தில் தஞ்சாவூருக்கும், புதுக்கோட்டைக்கும், திருமயம் கீழாநிலைக் கோட்டைகளின் உரிமை குறித்து சச்சரவு ஏற்பட்டது. திருமயம் மற்றும் கீழாநிலைக்கோட்டை தனக்கே சொந்தமென தஞ்சாவூா மன்னர் உரிமை கொண்டாடினார். புதுக்கோட்டை இதை ஏற்காத காரணத்தால் புதுக்கோட்டையின் சில பகுதிகளை தஞ்சாவூர் படை கைப்பற்றியதோடு, திருமயம் மற்றும் கீழாநிலைக் கோட்டைகளை இடித்துத் தள்ள, தளபதி மனோஜியின் தலைமையில் படை ஒன்றும் அனுப்பப்பட்டது. தங்களது நண்பர்களான இருவரையும் சமாதானமாகப் போகும்படி ஆங்கிலேயர் ஆலோசனைக் கூறினர். தஞ்சாவூர் மன்னர் பிடிவாதமாக இருக்கவே ஆங்கிலேயர் திருச்சியிலிருந்து ஒரு படையை தஞ்சாவூருக்கு எதிராக அனுப்புவதுபோல் ஒரு சலசலப்பை ஏற்படுத்தினர். தஞ்சாவூர் படை பின் வாங்கியது. தஞ்சாவூர் மன்னரைவிட, தொண்டைமானுக்கு ஆங்கிலேயரிடம் இருந்த செல்வாக்கை இது காட்டுகிறது.

சுமார் 1755-ஆம் ஆண்டுவாக்கில் (தமிழ்நாடு முழுவதுமுள்ள பாளையக்காரர்களிடமும், சிற்றரசர்களிடமும் திறை வசூலித்ததுபோல்) தொண்டைமானிடம் மட்டும் திறை ஏதும் வசூலிக்காமல் விலக்களித்திருந்தார் நவாப். இதற்கு ஆங்கிலேயரின் ஒப்புதலும் இருந்ததாக அறிகிறோம்.

திறை செலுத்தவேண்டிய அவசியமில்லாத காரணத்தால் அந்த தொகை, வேறு பல நல்ல பணிகளுக்குச் செலவிடும் வாய்ப்பு

தொண்டைமானுக்கு கிட்டியது. பல பாளையங்களும், சிற்றரசுகளும் இருந்த இடம் தெரியாமல் குன்றியிருக்க, புதுக்கோட்டை மட்டும் ஒரு தனியரசாக - சமஸ்தானமாக உருவாவதற்கு இதுவும் ஒரு காரணம். மேலும் எந்த பாளையமும் சிற்றரசும் நவாபுக்கு சரியாக திறை செலுத்தவில்லை. நிலுவையை வசூல் செய்ய நவாபுக்கு உதவியாக ஆங்கிலேய வீரர்கள் ஆங்காங்கே அனுப்பப்பட்டனர். திறை செலுத்தாவிடில் அந்தப் பகுதி முழுவதும் நவாபினால் பறித்துக் கொள்ளப் பட்டது. இது மக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியது. மேலும் ஆங்கிலேயரின் கை மிகவும் ஓங்கி வருவதையும் கண்டு அஞ்சும் நிலை ஏற்பட்டது. இந்நிலைகளிலிருந்து புதுக்கோட்டை தப்பித்துக் கொண்டது எனலாம். நவாப் அளித்திருந்த வரிவிலக்குச் சலுகை பிற்காலத்தில் ஆங்கிலேயராலும் பின்பற்றப்பட்டது.

தொண்டைமானுடன் ஏற்பட்ட தொடர்பினை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் முகத்தான் அப்போது சென்னையில் கவர்னராக இருந்த ஜார்ஜ் பிகாட் 28.9.1755-ல் தொண்டைமானுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். பார்சி மொழியில் உள்ள அந்தக் கடிதத்தில் கண்டிருப்பதாவது:

1. புதுக்கோட்டை தொண்டைமான் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் நேசமான நண்பர். 2. தற்போதும், இனிவரும் காலங்களிலும் தொண்டைமானின் பாதுகாப்புக்கு ஆங்கிலேயர் உதவி செய்வர்கள். அதுபோல் தேவைப்படும்போது தொண்டைமானும் ஆங்கிலேயருக்கு உதவி செய்ய வேண்டும். 3. தொண்டைமானின் அந்தஸ்திற்கு ஏற்ப அவருக்குரிய மரியாதையையும் கௌரவத்தையும் ஆங்கிலேய அரசு அளித்துவரும்.
(Ref. N.B.No.6. Political. 5.7.1803 and also Military Country correspondence for 1770 - letter No.190) தொண்டைமானுக்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட ஒரு அரசியல் ஒப்பந்தமாக இதைக் கருதலாம். கர்னல் ஹெரானுக்கு பெருமளவு கையூட்டு கொடுத்து மதுரை திருநெல்வேலி பகுதிகளுக்கு வரிவசூல் அதிகாரியாக (Rentor)யாக நியமனம் பெற்றிருந்த மாபூஸ்கானுடைய முறைகேடான நிர்வாகத்தில் எல்லா பாளையக்காரர்களும் (பாஞ்சாலங்குறிச்சி, எட்டயபுரம் தவிர) கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். எனவே மாபூஸ்கானுக்கு உதவியாக யூசுப்கான் தலைமையில் ஒரு படையை ஆங்கிலேயர்கள் அனுப்பி வைத்தனர். (இந்த யூசுப்கான்தான் பின்னர் வரலாற்றில் இடம் பெற்ற கான்சாகிப் கம்மந்தான் ஆவார்.) இப்படைக்கு உதவியாக தொண்டைமானும் படையொன்றை அனுப்பி வைத்தார். பெரும்பாலான பாளையக்காரர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

1756-ல் மதுரை, திருநெல்வேலி பகுதிகளின் வரிவசூல் செய்யும் உரிமையை ஆற்காடு நவாபிடமிருந்து ஆங்கிலேயரே பெற்றுக் கொண்டனர். கர்னல் ஹெரானால் நியமிக்கப்பட்ட கிஸ்தி வசூல் அதிகாரியான மாபூஸ்கான் நீக்கப்பட்டார். பின்னர் அப்பொறுப்பு யூசுப்கானிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் மாபூஸ்கான் ஆங்கிலேயருக்கும், ஆற்காடு நவாபுக்கும் எதிராக செயல்படத் தொடங்கினார். ஏற்கனவே அதிருப்தியிலிருந்த பாளையக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு திண்டுக்கல்லில் தங்கியிருந்த மைசூர் தளபதி ஹைதர் அலியுடன் ஆங்கிலேயருக்கு எதிராக ஒப்பந்தம் செய்துகொள்ளவும் துணிந்தார். இதை முறியடிக்க கேப்டன் கைலாட் தலைமையில் படையொன்று அனுப்பப்பட்டது. இப்படையுடன் புதுக்கோட்டைக் குதிரைப்படையும் சென்றது. ஆனால் இப்படையெடுப்பு தீவிரப்படுத்தப்படும் முன்பே-சென்னையை பிரெஞ்சுக்காரர்கள் முற்றுகையிட்ட காரணத்தால் - கைலாட் சென்னைக்குத் திரும்ப நேர்ந்தது.

1758-ல் பிரெஞ்சு கேப்டன் லாலி தஞ்சையை முற்றுகையிட்டார். தஞ்சாவூர் மன்னருக்கு உதவும்படி ஆங்கிலேயர் தொண்டைமானைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் திருமயம், கீழாநிலைக்கோட்டை உரிமை குறித்த சச்சரவினால் ஏற்பட்ட கசப்பு தொண்டைமானைத் தயங்க வைத்தது. இருப்பினும் பிரெஞ்சுக்காரர் கை ஓங்கி ஆங்கிலேயரின் நலன் பாதிக்கப்படுமானால் தமது அரசுக்கும் ஆபத்தாக முடியும் என்பதை உணர்ந்த தொண்டைமான், தனது படையைத் தஞ்சாவூருக்கு அனுப்பி வைத்தார். பிரெஞ்சுக்காரர்களின் முற்றுகை முறியடிக்கப்பட்டது.

தோல்வியடைந்த பிரெஞ்சு தளபதி லாலி ஆங்கிலேயர் வசமிருந்த சென்னையை கைப்பற்ற முயற்சித்தார். முதற்கட்டமாக ஆற்காட்டை தாக்கிக் கைப்பற்றிக் கொண்டு அங்கிருந்து சென்னையை தாக்கும் முயற்சிக்கு தயார்படுத்திக் கொண்டிருந்தார். சென்னைக் கோட்டைக்கு வேண்டிய தளவாடங்களையும் உணவுப் பொருட்களையும் தந்து கொண்டிருந்த செங்கல்பட்டை பாதுக்காக்க வேண்டியது ஆங்கிலேயருக்கு அவசியமாயிற்று. இப்பணி நிமித்தம் விஜயரகுநாதராயத் தொண்டைமான் 200 குதிரைகள், 1500 படையாட்கள், 250 பணியாளர்கள் அடங்கிய படை ஒன்றை அனுப்பி வைத்தார். பிரெஞ்சுப்படை 1759-பிப்ரவரியில் தோல்வி கண்டது.

1759-60ல் மீண்டும் தஞ்சாவூருக்கும், புதுக்கோட்டைக்கும் எல்லைகள் குறித்து சண்டை ஏற்பட்டது. தஞ்சாவூர் படைகள் அத்துமீறி தொண்டைமான் சீமையில் புகுந்து பல இடங்களைக் கொள்ளையிட்டன. தமது நட்பு நாடுகள் இரண்டும் சண்டையிட்டுக் கொள்வதை விரும்பாத ஆங்கிலேயர் பௌர்சியர் என்பவரை அனுப்பி சமாதானம் செய்து வைத்தனர்.

மதுரை, திருநெல்வேலி பகுதிகளின் வரிவசூல் அதிகாரியாக இருந்து ஆங்கிலேயரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட மாபூஸ்கான் மனவருத்தமடைந்து புரட்சிப் பாளையக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு கலகம் விளைவித்தார். குறிப்பாக பூலுத்தேவனுடன் இணைந்து யூசுப்கானுக்கு எதிராக செயல்படவும் செய்தார். மாபூஸ்கானை எப்படியும் சமாதானப்படுத்த வேண்டுமென விரும்பிய ஆங்கிலேயர் அந்தப் பொறுப்பை தொண்டைமானிடம் ஒப்படைத்தனர். தொண்டைமானும் மாபூஸ்கானுடன் பேசி அவரை ஆங்கிலேயருடனும், நவாபுடனும் இணக்கமுடன் போக வழி செய்தார். இது ஆங்கிலேயருக்கும், யூசுப்கானுக்கும் நிம்மதியளித்தது எனச் சொல்லலாம்.

மாபூஸ்கானுக்குப் பிறகு மதுரையின், கிஸ்தி வசூல் உரிமையை ஆங்கிலேயர் யூசுப்கான் வசம் ஒப்படைத்தனர். வசூல் பணத்தைக் கொண்டு தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்ற யூசுப்கான், ஆங்கிலேயருக்கு கிஸ்தி பணத்தை செலுத்தவில்லை. யூசுப்கானுடைய போக்கை உன்னிப்பாக கவனித்து வந்த ஆங்கிலேயர், அவரது மனநிலையில் மாற்றம் ஏற்படும் வண்ணம் எச்சரிக்கை செய்தனர். ஆனால் அவர் பிரெஞ்சுக்காரர்களோடும், நாகப்பட்டிணத்தில் இருந்த டச்சுக்காரர்களோடும் தரங்கம்பாடியில் இருந்த டேனிஷ்காரர் களோடும் ரகசியமாக தொடர்புக் கொண்டு தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கினார். அதிர்ச்சியடைந்த ஆங்கிலேயர் 1763ல் யூசுப்கானை புரட்சிக்காரன் என அறிவித்து, அவரை தண்டிக்க மேஜர் பிரிஸ்டன் தலைமையில் ஒரு படையை அனுப்பியது. அப்படைக்கு உதவியாக தொண்டைமானும் தனது படையை அனுப்பி வைத்தார். மதுரைக் கோட்டைக்குள்ளிலிருந்து துணிவுடன் முற்றுகையை சமாளித்து வந்த யூசுப்கான் தனது படையிலிருந்த தளபதி மார்ச்சந்த் என்னும் பிரஞ்சுக்காரன் செய்த துரோகத்தால், பிடிக்கப்பட்டு 15.10.1764-ல் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார். புதுக்கோட்டை படை ஆங்கிலப்படைக்கு துணையாக சிலகாலம் மதுரையில் தங்கியிருந்த பின்பே திரும்பியது.

உடையார்பாளையம், அரியலூர், பாளையக்காரர்கள் நீண்ட நாட்களாக திறைப்பணம் செலுத்தவில்லை. மேலும் யூசுப்கானுடன் சண்டை மூண்ட போதும் இவர்கள் துணைக்கு வரவில்லை. ஆகவே இவர்களை தண்டிக்க விரும்பிய நவாப், கும்பெனியாரை, நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி 1765-ல் கர்னல் சார்லஸ் கேம்பெல் தலைமையில் ஆங்கிலேயப் படையும், நவாபின் மகன் உம்தத்துல் உம்ரா தலைமையில் நவாபின் படையும் இணைந்து மேற்கண்ட பாளையங்களைத் தாக்க புறப்பட்டன. இவர்களுக்கு உதவியாக தொண்டைமானும் குதிரைப்படையும், காலாட்படையும்

அனுப்பி வைத்தார். இத்தாக்குதலில் தோல்வியுற்ற அரியலூர், உடையார்பாளையம் பாளையக்காரர்கள் தப்பியோடி மைசூரில் தஞ்சம்புகுந்தனர்.

1769-ல் திருச்சி, தஞ்சாவூர் மீது படையெடுத்து வந்த ஹைதரலி சேனையுடன் எதிர்த்து போராடிய ஆங்கிலேய படைக்குத் தேவையான படை உதவிகளையும் தொண்டைமான் செய்தார். இதனால் ஆத்திரமுற்ற ஹைதரலியின் படை, புதுக்கோட்டை மீது தாக்குதல் தொடுத்து பெருத்த சேதம் உண்டாக்கியது.

புதுக்கோட்டை மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் தஞ்சாவூருடன் அடிக்கடி போர் தொடுப்பதிலும், ஆங்கிலேயருக்கு உதவியாய் படைதிரட்டி அனுப்புவதிலும் தமது ஆட்சிக் காலத்தின் பெரும்பகுதியை செலவிட்டார் தொண்டைமான். இக்கால கட்டத்தில் ஆங்கிலேயர் நடத்திய போர்கள், அனைத்திலுமே தொண்டைமான் படை அவர்களுக்கு ஆதரவாக பங்குகொண்டிருக்கிறது. ரகுநாதராயத் தொண்டைமான் துவக்கிவைத்த தொண்டைமான் பரம்பரை ஆட்சியை கட்டிக்காத்து, விரிவுபடுத்தி பிற்காலத்தில் ஒரு சமஸ்தானமாக நிலைநிறுத்திய பெருமை விஜயரகுநாதராயத் தொண்டைமானைச் சாரும்.

விஜயரகுநாதராய தொண்டைமான் இடைவிடாது பல போர்களில் ஈடுபட்டிருந்தபோதிலும், அவர் அறப்பணிகளையும், ஆன்மீகப் பணிகளையும் மறந்துவிடவில்லை. இக்காலத்தில் வாழ்ந்த பெரும் ஞானியான சதாசிவபிரமேந்திரரின் நல்லுபதேசம் பெறும் வாய்ப்பைப் பெற்றவர் தொண்டைமான். மௌன முனிவரான சதாசிவபிரமேந்திரர் தட்சிணாமூர்த்தி மந்திரத்தை மணலில் எழுதிக் கொடுத்ததை தொண்டைமான் பரம்பரையினர் இன்றும் பாதுகாத்து வருகின்றனர்.

சதாசிவபிரமேந்திரரின் வாக்கின்படி மகாபாஷ்யம் கோபால கிருஷ்ண சாஸ்திரி ராஜ குருவாக நியமிக்கப்பட்டார். ராஜகுருவின் ஆலோசனைப்படி நாட்டில் மங்கலம் பொங்கிட நவராத்திரி (தசரா) திருவிழா கொண்டாடும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. இக்காலத்தில்தான் முதன்முதலாக அம்மன்காசும் வெளியிடப்பட்டது. தொண்டைமானும் அவரது ராணியரும் பல சத்திரங்களைக் கட்டியுள்ளனர். தொண்டைமானுக்கு ஆறு மனைவியர் இருந்தனர். இவர்களுள் மூன்றாவது மனைவியான ரெங்கம்மா ஆயிக்குப் பிறந்த ராயரகுநாதத் தொண்டைமான் 1769-ல் புதுக்கோட்டையின் மூன்றாவது மன்னராக ஆட்சிக்கு வந்தார்.

# 7. ராய ரகுநாதத் தொண்டைமான் (1769-1789)

ராய ரகுநாதத் தொண்டைமான் தனது தந்தை விட்டுச்சென்ற நிலையானதொரு அரசின் பொறுப்பை ஏற்று சுமார் 20 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவரது ஆட்சியின்போது, முத்துக்குமரப்பிள்ளை, வெங்கப்ப அய்யர் ஆகியோர் திறமைவாய்ந்த அமைச்சர்களாக இருந்தனர். (வெங்கப்ப அய்யர் நினைவாக-புதிய அரண்மனை-பால்பண்ணைக்கு எதிரே உள்ள குளம்-வெங்கப்ப அய்யர் ஊத்து என இன்றும் அழைக்கப்படுகிறது).

ராய ரகுநாதத் தொண்டைமான் பதவியேற்ற முதல் ஓரிரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சிகள் ஏதும் இல்லை. அதன்பின், அவரது தந்தைக்கால அரசியல் போர் நிலைகளையே இவரும் எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஆங்கிலேயர் நடத்திய போர்கள் அனைத்திற்கும் படை உதவி அளித்த தனது தந்தையின் நிர்பந்த நிலைக்கே இத் தொண்டைமானும் உள்ளானார்.

1771-ல் தஞ்சாவூர் மன்னர் துல்ஸாஜி ராமநாதபுரத்தின்மீது படையெடுத்தார். ராமநாதபுரத்தின் மன்னர் முத்துராமலிங்கம் குழந்தையாக இருந்ததால் அரசுக் காரியங்களை அவனது தாயார் ராணி முத்துத் திருநாச்சி ஆச்சி கவனித்து வந்தார். தஞ்சாவூர் படையெடுப்பை சமாளிக்க, ராணி திருநாச்சி, நவாபையும், தொண்டைமானையும் துணைக்கு அழைத்தார். தஞ்சாவூர் ராமநாதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டால், அடுத்து தமது நாட்டையும் கைப்பற்றிக்கொள்ள முயலக்கூடும் என்பதை உணர்ந்த தொண்டைமான், ராமநாதபுரத்திற்கு உதவி செய்து தஞ்சாவூர் படையை முறியடிப்பது உசிதமெனக் கருதினார். ஆகவே நவாபின் படைகளும் ராமநாதபுரத்திற்கு ஆதரவாக களத்தில் இறங்கவேண்டுமெனக் தொண்டைமான் கேட்டுக்கொண்டார். ஆனால், நவாப் படையேதும் அனுப்பவில்லை. தொண்டைமானும் வாளாவிருக்க வேண்டியதாயிற்று. ஆகவே தஞ்சாவூர் படை ராமநாதபுரம் பகுதிகளை வெகு எளிதாகக் கைப்பற்றிக்கொண்டது. ராணி முத்துத் திருநாச்சி தஞ்சாவூருக்கு பெரும்தொகை கொடுத்துச் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

ராமநாதபுரத்திற்கு ஆதரவாக நவாப் படை அனுப்பாததற்கு காரணம் புலப்படத் தொடங்கியது. நவாப் தஞ்சாவூர் மீது படையெடுக்கத் திட்டமிட்டார். ஹைதர் அலி படையெடுத்து வந்தபோது தனக்கு உதவாதிருந்தது, தன் முன் அனுமதி இன்றி இராமநாதபுரத்தின் மீது படையெடுத்தது, திறை பாக்கியை சரிவர செலுத்தாதது போன்ற

காரணங்களை சுட்டிக்காட்டி, தஞ்சாவூர் மீது தான் படையெடுக்க விரும்புவதாகவும், அதற்கு தக்க உதவிகள் செய்யுமாறும் நவாப், ஆங்கிலேயரிடம் விண்ணப்பித்துக்கொண்டார். ஆங்கிலேயரும் சம்மதித்தனர் நவாபின் மகன் உம்தத்துல் உம்ரா, ஜெனரல் ஜான் ஜோசப் ஆகியோரின் கூட்டுப்படை தஞ்சாவூரை தாக்கப் புறப்பட்டன. ஆங்கிலேயரின் வேண்டுகோளின்படி புதுக்கோட்டையும் 200 குதிரைகள், 4,000 போர் வீரர்கள் அடங்கிய படை ஒன்றை சர்தார் பாபுராவ், சர்தார் ராமசாமி சேர்வைக்கரர் ஆகியோரின் தலைமையில் அனுப்பி வைத்தது.

1771-அக்டோபர் 27ம் தேதி தஞ்சாவூர், நவாபிடம் சரணடைந்து, சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டது. நவாபின் நண்பர்களோடு நண்பராகவும், அவரது விரோதிகளுக்கு விரோதிகளாகவும் இருக்க தஞ்சாவூர் சம்மதித்தது. படையெடுப்பு செலவு, மற்றும் திறை பாக்கிக்காக நவாபிற்கு 48 லட்சம் ரொக்கம் தரவேண்டியதாயிற்று, மேலும் ராமநாதபுரம் பகுதிகளும் ராணி முத்துத் திருநாச்சி ஆச்சியிடம் திரும்பவும் ஒப்படைக்கப்பட்டன. கொடுப்பதுபோல் கொடுத்து ராமநாதபுரத்தையும் அடக்கி ஒடுக்கித் தனக்குள் வைத்துக்கொள்ளத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார் நவாப்.

ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை சீமைகளில், ஆங்கிலேயரின் செல்வாக்கைக் குறைக்கும் நடவடிக்கைகளில் அம்மன்னர்கள் ஈடுபடுவதாகவும், டச்சுக்காரர்கள் ராமநாதபுரம் கடற்கரைப் பகுதிகளை உபயோகப்படுத்திக் கொள்ளவும், வணிக மையங்களை அமைத்துக்கொள்ளவும் ராமநாதபுரம் அனுமதி அளித்திருப்பதையும் கூறி அவர்கள் மீது படையெடுக்க வேண்டுமென ஆங்கிலேயரைக் கேட்டுக்கொண்டார், நவாப். ஆங்கிலேயரும் சம்மதிக்க, தஞ்சையைத் தாக்கிய நவாப்-ஆங்கிலேய படை ராமநாதபுரத்தை 1772-ல் (மார்ச் மாதத்தில்) தாக்கியது. இந்த படையெடுப்பிலும் புதுக்கோட்டை கலந்துகொண்டது. சதாசிவராயர், அண்ணாவையன், அன்னையன், ஆதிநாராயணன் ஆகிய படைத் தலைவர்களின் தலைமையில் பெரும்படை ஒன்று ராமநாதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த திடீர் தாக்குதலை ராமநாதபுரம் எப்படி சமாளிக்க முடியும்! ஒன்பது வயது மன்னரான முத்துராமலிங்கம், அவரது சகோதரி, தாயார் ராணிமுத்துத் திருநாச்சி ஆகியோர் பிடிக்கப்பட்டு திருச்சியில் சிறையிலடைக்கப்பட்டனர்.

ராமநாதபுரத்தை வெற்றிகொண்ட நவாப் படை, சிவகங்கையை நோக்கிச் சென்றது. இப்படையெடுப்பிற்கு புதுக்கோட்டை படையேதும் அனுப்பவில்லை. தொண்டைமானின் இந்த நடவடிக்கை தனக்கு அதிர்ச்சி அளிப்பதாகவும் உடனே படைகளை சிவகங்கைக்கு அனுப்பிவைக்கும்

படியும் நவாப் தொண்டைமானை கேட்டுக்கொண்டார். அதன்படி, சர்தார் கிருஷ்ணன் தலைமையில் 5000 பேர் கொண்ட படை ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. இப்போரில் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் வீர மரணமடைந்தார். அவரது மனைவி வேலு நாச்சியாரும் மருது சகோதரர்களும் தப்பித்துச்சென்று திண்டுக்கல்லிலிருந்த ஹைதரலியின் பாதுகாப்பில் தங்கினர். இப்படியாக ராமநாதபுரமும், சிவகங்கையும் நவாபினால் கைப்பற்றப்பட்டு, வரிவசூல் உரிமைக்கு குத்தகைக்காரர்கள் நியமிக்கப்பட்டனர்.

நவாப் முகமதலியின் பேராசை வளர்ந்துகொண்டே வந்தது. தஞ்சாவூரை முழுமையாகக் கைப்பற்றிக்கொள்ள எண்ணி, பொய்யான பல காரணங்களைச்சொல்லி, தஞ்சாவூர் மீது படையெடுக்க உதவும்படி நவாப் ஆங்கிலேயரிடம் வேண்டினார். அப்படி உதவி செய்தால் சன்மானமாக பத்துலட்சம் பகோடா அளிப்பதாகவும் உறுதியளித்தார். ஆங்கிலேயரும் சம்மதித்தனர். 1773-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஆங்கிலேயரின் படை தஞ்சாவூரை நோக்கி தயார் நிலையில் நின்றது. வழக்கம்போல் புதுக்கோட்டையும் படை அனுப்பக் கோரப்பட்டது. தஞ்சாவூர் மன்னரை தனது தீராத பகையாளியாகக் கருதிய தொண்டைமான், 400 குதிரைகளையம், 7000 வீரர்களையும் தனது சித்தப்பா ராஜகோபாலத் தொண்டைமான், சர்தார் சதாசிவராயர் ஆகியோரின் தலைமையில் அனுப்பி வைத்தார். தஞ்சாவூர் 1773-செப்டம்பர் 17ம் நாள் வீழ்ந்தது. தஞ்சாவூர் மன்னன் துல்ஸாஜி, தளபதி மனோஜி, அரசகுடும்பப் பெண்மணிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் சிறை பிடிக்கப்பட்டனர். துல்ஸாஜியின் மன்னர் பதவி பறிக்கப்பட்டது. தஞ்சாவூர் நவாபின், கைக்கு மாறியது.

1770-லிருந்து 1773வரை தொண்டைமான் அளித்த படை உதவிக்காக புதுக்கோட்டை படைவீரர்களின் செலவினை ஏற்றுக்கொள்ள ஒப்புக் கொண்டிருந்த நவாப், அப்பணத்தைக்கொடுக்க முடியாமல், ஈடாக, பட்டுக்கோட்டையின் ஒரு பகுதியைத் தொண்டைமானுக்கு அளித்தார். 142 கிராமங்களை உள்ளடக்கிய இப்பகுதியிலிருந்து 53,000 சக்கரம் (இது அக்காலத்தைய செலவாணி பணம்) வருமானம் கிடைத்தது. இதுவரை ஏற்பட்ட படைச் செலவுக்காவும், இனிவரும் காலங்களில் படை உதவி அளிப்பதற்காகவும் இப்பகுதி அளிக்கப்பட்டதாக ஒப்பந்தம் உருவானது. 1773 முதல் 1776 வரை இப்பகுதி புதுக்கோட்டை வசமிருந்தது. 1776-ல் ஆங்கிலேய கம்பெனி துல்ஸாஜியை தஞ்சாவூர் மன்னராக மீண்டும் அமர்த்தியபோது தொண்டைமான் தஞ்சாவூருக்கு இப்பகுதியை அளிக்க நேரிட்டது.

இந்த சமயத்தில் நாகப்பட்டினம் வந்து சேர்ந்த டச்சுக்காரர்கள், பதினாறு லட்சம் ரூபாய் கொடுத்து நாகப்பட்டணம், நாகூர் ஆகிய

துறைமுகப்பகுதிகளை தஞ்சாவூர் மன்னரிடமிருந்து விலைக்கு வாங்கி இருந்தனர். டச்சுக்காரர்களின் இச்செயலை அங்கீகரிக்கமுடியாது என்றும், தனது அனுமதியின்றி நடைபெற்ற இந்த விற்பனை ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என்றும், அப்பகுதிகளை தானே கைப்பற்றிக் கொள்ள தனக்கு உதவும்படி நவாப் ஆங்கிலேயரிடம் வேண்டிக்கொண்டார். அதன்படி நவாபின் படையும், ஆங்கிலேயப் படையும் நாகப்பட்டினம் நோக்கிச் சென்றன. புதுக்கோட்டையும் 200 குதிரைகள், 400 வீரர்கள் அடங்கிய படை ஒன்றை, சதாசிவராயர், அண்ணாவையன், ஆதிநாராயணய்யர் ஆகியோர் தலைமையில் அனுப்பிவைத்தது. சண்டையில் ஈடுபட விரும்பாத டச்சுக்காரர்கள் தஞ்சாவூருக்கு அளித்திருந்த பதினாறு லட்சரூபாயை நவாபிடமிருந்து பெற்றுக கொண்டு, நாகப்பட்டினம், நாகூர் பகுதிகளை விட்டுக்கொடுத்தனர்.

1776-ல் தஞ்சாவூர் மன்னராக மீண்டும் அமர்த்தப்பட்ட துல்ஸாஜி புதுக்கோட்டை மீது காழ்ப்பு கொண்டு, அடிக்கடி ஆங்கிலேயரிபம் தொண்டைமானை எதிர்த்து புகார் கொடுத்துக் கொண்டிருந்தார். இது குறித்த சர்ச்சைகள் 1778 வாக்கில் சற்று ஓய்ந்திருந்தது.

ஆங்கிலேயருடன் கடும்பகை கொண்டிருந்த ஹைதர் அலி, அவர்களுக்கு எதிரான ஒரு கூட்டணியை 1780-ல் உருவாக்கினார். இதில் மராட்டியரும், பிரெஞ்சுக்காரரும் அங்கம் வகித்தனர். மராட்டியர் பம்பாய், கல்கத்தா ஆகிய பகுதிகளையும், ஹைதரலி கர்நாடகப் (தமிழக) பகுதிகளையும் தாக்கினர். பல கோட்டைகள் பிடிபட்டன. பொருள்களுக்கும் மக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. உடையார்பாளையம், அரியலூர் பாளையக்காரர்களுக்கும் சிவகங்கை வேலு நாச்சியாருக்கும் படை உதவியளித்து அப்பகுதிகளுக்கு அவர்களை அனுப்பிவைத்து, அங்கும் ஆங்கிலேயருக்கு எதிரான கலகங்களை ஏற்படுத்தச்செய்தார் ஹைதரலி. நவாபினால் நியமிக்கப்பட்ட குத்தகைக்காரர்களின் அநியாயமான வரி வசூலைக் கண்டு கொதித்திருந்த இப்பகுதி மக்கள், இந்த வீரர்களை உற்சாகத்துடன் வரவேற்று ஆதரவளித்தனர். ராமநாதபுரம் சேதுபதி முத்துராமலிங்கம் அப்போது திருச்சியில் சிறைவைக்கப்பட்டிருந்தார். அவரை விடுவித்து மன்னராக்கும்படி ராமநாதபுரம் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். திருநெல்வேலி பாளையக்காரர்களும் கிளர்ந்தெழுந்தனர். இக்காலக்கட்டத்தில் தஞ்சாவூர் மைசூர் பக்கம் சேர ரகசிய ஆயத்தம் செய்துகொண்டிருந்தது. நத்தம், லிங்கம நாயக்கரும், மருங்காபுரி பூச்சிநாயக்கரும், ஹைதர் அலிக்கு ஆதரவளிக்க சம்மதிருந்தனர். ஹைதர் அலியும், திப்புவும், புதுக்கோட்டையையும் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள முயற்சிசெய்தனர். ஆனால் அம்முயற்சி பலனளிக்கவில்லை. புதுக்கோட்டை தொடர்ந்து ஆங்கிலேயருக்கு

ஆதரவாக இருக்க உறுதிகொண்டு செயல்பட்டது. 1781-மே மாதத்தில் கொள்ளிடத்தைக் கடந்து தஞ்சாவூரை அடைந்த ஹைதர் அலியின்படை தஞ்சாவூர் கோட்டையைத் தவிர ஏனைய பகுதிகளை கைப்பற்றிக் கொண்டது.

தங்கள் பக்கம் சேரமறுத்த புதுக்கோட்டையின் மீது ஆத்திரம் கொண்ட ஹைதர் அலி தஞ்சாவூர் வெற்றிக்குப் பின், புதுக்கோட்டை மீது தாக்குதல் தொடுத்தார். ஹைதர் அலியின் படையினர் இரு பிரிவாகப் பிரிந்து திருச்சி பகுதியிலிருந்தும், தஞ்சாவூர் பகுதியிலிருந்தும் இருமுனைத்தாக்குதலைத் தொடுத்தனர். தஞ்சாவூரிலிருந்து வந்த ஹைதர் படையை, சர்தார்மண்ணவேளார் தலைமையிலான தொண்டைமான் படை ஆதனக்கோட்டை அருகே எதிர்கொண்டு சோத்துப்பாளை அருகில் தோற்கடித்தது. திருச்சியிலிருந்து வந்த மற்றொரு படைப்பிரிவு மலம்பட்டியில் தொண்டைமனால் தோற்கடிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி களைக் கூறும் வெங்கண்ண சேர்வைக்காரர் வளந்தான் என்னும் நாட்டுப்பாடல்

> ''மல்லம்பட்டி வாடியிலே வந்த - அய்தர் சேனையை
> தலையோடவெட்டிச் சமர்பொருதும் தொண்டைமான்''

என தொண்டைமான் வீரத்தை புகழ்ந்து கூறுகிறது.

இந்நிகழ்ச்சிக்குப்பிறகு ஹைதரின் படை திருச்சியை முற்றுகையிட்ட நேரத்தில் சாக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கிய ஹைதரின் படைகளை தொண்டைமான் படை தோல்வியடையச்செய்தது. தொண்டைமானின் செயல் திறன் ஆங்கிலேயரால் வெகுவாக பாராட்டப்பட்டது. மேலும் ஆங்கிலேய தளபதிகள் சர் அயர்கூட், கர்னல் பிரைத் ஒயிட் மற்றும் நவாபின் திருச்சி பிரதிநிதி ஆகியோரின் சம்மதத்துடன் தஞ்சாவூரில் ஹைதர் அலி பிடித்திருந்த பகுதிகளை ஆங்கிலேயருக்கு மீட்டுத்தர எண்ணிய தொண்டைமான் சர்தார் ராமசாமி சேர்வைக்காரர், சர்தார் சுப்பிரமணிய முதலியார் ஆகியோர் தலைமையில் தஞ்சாவூர் பகுதிக்கு ஒரு படையை அனுப்பிவைத்தார். மேலும் ஹைதர் அலியுடன் அணிவகுத்து நின்ற சேதுபதியின் உறவினர் மாப்பிள்ளைத்தேவனை ஒடுக்க மற்றொரு படையை அனுப்பிவைத்தார். இருபடைகளுமே வெற்றியைத் தழுவின. மாப்பிள்ளைத் தேவன் சிறைபிடிக்கப்பட்டான். பட்டுக்கோட்டை அறந்தாங்கி, கீழாநிலைப் பகுதிகள் தொண்டைமானால் கைப்பற்றப் பட்டன.

மேற்கண்ட பகுதிகளை மீட்பதற்கான படைச்செலவினை திருப்பித் தருகிறவரை இப்பகுதிகளின் பொறுப்பை தொண்டைமான் வைத்துக்கொள்ள ஆங்கிலேயர் அனுமதி அளித்தனர். மேலும்

தொண்டைமானின் சேவையைப் பாராட்டி, இரண்டு துப்பாக்கிகள், 300 வெடிகுண்டுகள், மற்றும் வெடிமருந்துகள் ஆகியவற்றையும் ஆங்கிலேயர் அளித்தனர்.

1782-பிப்ரவரி மாதத்தில் திப்புசுல்தானின் படைகள் திடீரென தஞ்சாவூரைத் தாக்கியது. வலிமையானதொரு பிரெஞ்சு ப்டையும் அதனுடன் சேர்ந்து கொண்டது. இவை மன்னார்குடி, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளைத் தாக்கின. இப்படையெடுப்பை ஆங்கிலேயரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஆகவே இப் பகுதியிலிருந்த பாளையக்காரர்களின் உதவியை நாடினர். உடையார்பாளையம், அரியலூர் ஆகியவற்றின் பாளையக்காரர்களை நண்பர்களாக்கிக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சூழ்நிலையில் புதுக்கோட்டை தொண்டைமான்-ஆங்கிலேயர் உறவைத் துண்டிக்க எண்ணம் கொண்ட திப்பு, தொண்டைமானை தன் பக்கம் இழுத்துக் கொள்ள பெரும் முயற்சிகள் மேற்கொண்டார். ஆங்கிலேயருடன் தொடர்பை துண்டித்துக்கொண்டு தம்முடன் இணைந்துகொண்டால் தஞ்சாவூர், ராமநாதபுரம் அரவக்குறிச்சி ஆகிய பகுதிகளை தொண்டைமானுக்கு வழங்குவதாகவும் ஆசை காட்டினார். பலமுறை வற்புறுத்தியும் இது பயனற்றதாக ஆகிவிட்டது. தொண்டைமான் ஆங்கிலேயர் பக்கமிருக்கவே உறுதியாக முடிவு செய்தார். தொண்டைமானின் செயல் ஆங்கிலேயருக்கு, மகிழ்ச்சியையும் நிம்மதியையும் ஏற்படுத்தியது.

1782- டிசம்பர் மாதத்தில் ஹைதர் அலி மரணமடைந்ததும், திப்பு மைசூர் அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1783-மார்ச் மாத வாக்கில், திப்புவின் தலைநகரான ஸ்ரீரங்கப்பட்டிணத்தின்மீது படையெடுக்க ஆங்கிலேயர் ஆயத்தங்கள் மேற்கொண்டனர். பம்பாயிலிருந்து ஒரு படை மங்களூரைத் தாக்கவும், கரூர், திண்டுக்கல், கோயம்புத்தூர் பகுதிகளை மற்றொருபடை தாக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி கர்னல் லாங் தலைமையில் அனுப்பப்பட்ட படைக்கு உதவியாக, தொண்டைமானும், உமனையா, வக்கீல் கோட்டையாச்சாரி ஆகியோர் தலைமையில், பெரும்படை, ஒன்றை அனுப்பிவைத்தார். இப்படை கரூர், அரவாக்குறிச்சி, திண்டுக்கல், தாராபுரம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியது. கர்னல் புல்லர்ட்டன் தலைமையிலான ஆங்கிலேயர் - தொண்டைமான் படைகள் கோயம்புத்தூர் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, கடலூருக்கு (தென் ஆற்காடு மாவட்டம்) பிரெஞ்சுக்காரர்களால் ஏற்பட்ட ஆபத்தை சமாளிக்க அப்படை கடலூருக்கு திருப்பிவிடப்பட்டது. இக்காலக்கட்டத்தில், திப்புவும் ஆங்கிலேயருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள முயற்சி மேற்கொண்டிருந்தார். மேலும் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் - ஐரோப்பாவில் நடைபெற்ற

நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இருதரப்பாரும் நேசத்துடன் நடந்துகொள்ள முடிவு செய்திருந்தனர். இதனால் கர்னல் புல்லர்ட்டன், படை கடலூரிலிருந்து புறப்பட்டுச்சென்று, திருநெல்வேலி, பாலக்காடு, கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளை கைப்பற்றியது. பின்னர் இப்படை சிவகங்கை நோக்கிச் சென்று நவாபிற்கு சேரவேண்டிய பாக்கி குத்தகைப் பணத்தை வசூல் செய்யும் முயற்சியில் ஈடுபட்டது. சிவகங்கை மருது சகோதரர்கள் நவாப் நிர்ணயித்த ஆண்டு கிஸ்திப் பணம் ஒரு லட்ச ரூபாய் செலுத்த ஒப்புக்கொண்டு முதல் கட்டமாக 40,000 ரூபாயை உடனே செலுத்தினர்.

ஆங்கிலேயருக்கு ஈடுகொடுக்க முடியாத திப்பு, 1784-ல் ஆங்கிலேயருடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி, திப்புவிடமிருந்து கைப்பற்றப்பட்ட கோயம்புத்தூர் பாலக்காடு பகுதிகளை திப்புவின் அலுவலர்கள் வசமே ஒட்டடைத்துவிட்டு, கர்னல் புல்லர்ட்டன் - தொண்டைமான் படை திருச்சிக்கு திரும்பியது.

இப்படையெடுப்பின்போது புதுக்கோட்டைப் படையின் தீரத்தை மெச்சுகின்ற வகையில் கர்னல் புல்லர்ட்டன் தொண்டைமானுக்கு எழுதியுள்ள பல கடிதங்கள் பதிவேடுகளில் காணப்படுகின்றன. ராய ரகுநாதத் தொண்டைமானுக்குப் பல பரிசுகளும் அனுப்பிவைக்கப் பட்டன.

1781- முதல் தஞ்சாவூருடன் நடந்துவந்த எல்லைத் தகராறுகள் தொடர்கதையாக இருந்து வந்தன. இருதரப்பாரும் 1785-ல் ஆங்கிலேயரின் உதவியுடன் இவற்றிற்கு தீர்வு கண்டனர்.

சிவகங்கை சீமையில் வேலு நாச்சியார், பெயரளவில் ராணியாக இருக்க, ஆட்சிப்பொறுப்பு மருது சகோதரர்களிடம் இருந்தது. சின்ன மருதுவின் திறமையால் சிவகங்கை பொலிவுபெற்றது. சிவகங்கையின் வளர்ச்சி நவாபிற்கு எரிச்சலூட்டியது. சிவகங்கை மீது படையெடுக்கும்படி ஆங்கிலேயரைத் தூண்டினார். இக்காலக்கட்டத்தில் மருது சகோதரர்களுக்கும் வேலு நாச்சியாருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது வேலுநாச்சியார், மருதுபாண்டியரை ஒடுக்கும்படி நவாபிடம் வேண்டிக்கொண்டிருந்தார். தயங்கிக்கொண்டிருந்த ஆங்கிலேயரை இது ஊக்குவித்தது. கர்னல் ஸ்டுவர்டின் தலைமையில் படையொன்று சிவகங்கை நோக்கிச் சென்றது. கர்னல் ஸ்டுவர்டு 21.1.1789-ல் தொண்டைமானுக்கு கடிதம் எழுதி, கேப்டன் நிக்சன் தலைமையில் புதுக்கோட்டை வழியாக வரும் படைக்குத் தேவையான உதவிகளை செய்யக்கோரியிருந்தார். அதன்படி, தொண்டைமான், நிக்சன் படைக்குத் தேவையான பொருட்களை சேகரித்துக்கொடுத்தார். மேலும் தேவைப்படும்போது பயன்படுத்திக்கொள்ளும் வண்ணம் திருமயத்தில், தொண்டைமானின் படை ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டது. 1789-ஜூன் மாதத்தில் கொல்லங்குடியும், அதனைத் தொடர்ந்து காளையார் கோவிலும் கர்னல் ஸ்டுவர்டால் கைப்பற்றப்பட்டன.

மருது சகோதரர்கள் தப்பித்துச்சென்று காட்டில் ஒளிந்து கொண்டனர். பிறகு வெகுவிரைவில் மருதுசகோதரர்கள் சிவகங்கையை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர்.

இப்படியாக ஆங்கிலேயரும், ஆற்காடு நவாபும் தங்களது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள மேற்கொண்ட போர்கள் அனைத்திலும் புதுக்கோட்டை தொண்டைமான் பங்குகொண்டதையும், பிரெஞ்சுக்காரர், ஹைதர் அலி ஆகியோரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் தனது நாட்டின் நலன் கருதி ஆங்கிலேயர் பக்கம் உறுதியாக இருந்ததையும் காண்கிறோம்.

30.12.1789-ல் ராயர்குநாதத் தொண்டைமான் இயற்கை எய்தினார்.

''மாவீரன் ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் ஆங்கிலேயரை எதிர்த்து படையெடுப்புகளை நடத்தியபோது ரகுநாதராயத் தொண்டைமானும் அவர்கள் கூட்டணியில் இணைந்து ஒன்றுபட்டு போரிட்டிருந்தால் தமிழ்நாட்டின் வரலாறே வேறுவிதமாக இருந்திருக்குமே என்ற கேள்வி எழக்கூடும். ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் இந்தியாவில் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டிருந்த காலம் அது. அப்போதைய அரசியல் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து விரட்டப்பட்டிருந்தாலும் அவ்விடத்தை பிரெஞ்சுக்காரர்கள் பிடித்துக் கொண்டிருப்பார்கள். ஹைதர் அலியின் பெரும் துணையாக பிரஞ்சுக்காரர்கள் இருந்தனர். லண்டனுக்கு இணையானதாக பாரீஸ் விளங்கியது. ஆகவே எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லக் கொள்ளி என்று தொண்டைமான் ஆராய்ந்திருக்கக் கூடும். தெரியாத மோகினியைவிட தெரிந்த பிசாசே மேல் என்று ஆங்கிலேயரை ஆதரித்ததாகக் கொள்ளலாம். ஆங்கிலேயரை தொண்டைமான் ஆதரித்ததும் தமது நாட்டு மக்களின் நன்மை கருதியே என்பதை நாம் மறுப்பதற்கில்லை. அப்போதிருந்த அரசியல் சூழலில் ஆங்கிலேயரின் ஆதரவே சிறந்தது எனத் தொண்டைமான் முடிவு செய்திருக்கவேண்டுமெனக் கொள்வதே பொருத்தமுடையதாகும். (புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு – சிரஞ்சீவி 1980 - பக்கம் 93-94).

ராயரகுநாதத் தொண்டைமான் காலத்தில் வாராப்பூர், கல்லாக்கோட்டை, ஓனாண்குடி, சின்னையா சத்திரம் ஆகிய இடங்களில் சத்திரங்கள் கட்டப்பட்டன. லக்கம்பட்டி மருதிக்கு மானியங்கள் வழங்கப்பட்டன.

ராயரகுநாதத் தொண்டைமானுக்கு ஆண்வாரிசுகள் இல்லை. ஒரே ஒரு பெண் மட்டும் இருந்தார். அவரது பெயர் பெருந்தேவி அம்மாள் ஆயி. எனவே அடுத்த வாரிசாக ராயரகுநாதத் தொண்டைமானின் சித்தப்பாவின் மூத்த மகன் விஜயரகுநாதத் தொண்டைமான் பட்டம் ஏற்க ஏற்பாடாயிற்று.

# 8. ராஜா விஜய ரகுநாதத் தொண்டைமான் (1789-1807)

ராஜா விஜயரகுநாத தொண்டைமான் தனது 30வது வயதில் புதுக்கோட்டையின் மன்னராக பொறுப்பேற்றார்.

அக்கால அரசியல் நடைமுறைப்படி புதிய மன்னரின் பதவியேற்பு மேலாண்மை வகிக்கும் நவாபினால் அங்கீகரிக்கப்படவேண்டும். இவ்வாறு அங்கீகாரம் பெறுவதற்கு சிற்றரசர்கள் பேரரசருக்குக் காணிக்கை செலுத்தவேண்டும். இது முகலாய ஆட்சியின் பழக்கம். இக்காணிக்கைக்கு ''நஸார்'' என்று பெயர். இதற்கு முன் ஆண்ட மன்னர்களான விஜயரகுநாதத் தொண்டைமானும், ராய ரகுநாதத் தொண்டைமானும் இந்த வழக்கப்படி ஒரு லட்ச ரூபாய் செலுத்தியே அரசுரிமைப் பெற்றனர். புதிய மன்னரும் இவ்வழக்கப்படி ஒரு லட்ச ரூபாய் செலுத்த முன் வந்தார். ஆனால் நவாப் சம்மதிக்கவில்லை. ஒரு லட்சம் பகோடா கேட்டார். (பகோடா என்பது 8 கிராம் அளவுள்ள தங்கக்காசு) இறுதியாக 75,000 பகோடா இரண்டு தவணையாக கொடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. 17.3.1790ல் நவாப், தனது மகன் உசேனுல் முல்க் மூலம் விஜயரகுநாதத் தொண்டைமானுக்கு அரசுரிமைப் பத்திரத்தை அனுப்பிவைத்தார். அத்தோடு ஒரு குதிரையும், கில்லாத்தும் (அரசருக்குரிய அலங்கார ஆடை ) பரிசாக அனுப்பி வைக்கப்பட்டது.

விஜயரகுநாதத் தொண்டைமான் பதவியேற்றுக் கொண்ட ஒரு வருடத்திற்குள்ளாக ஆங்கிலேயர் திப்புசுல்தான் மீது படையெடுக்க ஆயத்தமாயினர். 1790-மே மாதவாக்கில், திருவாங்கூர் எல்லைப் பகுதியில் சில இடங்களை திப்புசுல்தான் கைப்பற்றியதை சுட்டிக்காட்டி ஆங்கிலேயர் போர் தொடுத்தனர். ஜெனரல் மெடோஸ் தலைமையில் படையொன்று அனுப்பப்பட்டது. இப்படைக்குத் தேவையான உணவுப் பொருட்களையும், படை ஒன்றையும் மகாலிங்க முதலியார் என்பவரது தலைமையில் தொண்டைமான் அனுப்பிவைத்தார். ஸ்ரீரங்கம் வரை படையெடுத்து வந்த திப்புவை எதிர்ப்பதற்கு இப்படை பெரிதும் உதவியாக இருந்தது.

1795 அக்டோபர் மாதத்தில் ஆற்காடு நவாப் முகமதலி காலமானார். அவரது மகன் உம்தத்துல் உம்ரா ஆற்காடு நவாபாக நியமிக்கப்பட்டார். நவாப் முகமதுஅலி இறப்பதற்கு முன்பாக தொண்டைமானுக்கு ''ராஜ பகதூர்'' என்ற பட்டத்தை அளித்தார். இதன் பிறகு தொண்டைமான் மன்னர்கள் ''புதுக்கோட்டை ராஜா'' (Raja of Pudukkottai) என்று அழைக்கப்படும் பெயர் பெற்றனர். மேலும் 'மன்சப்தார்' என்னும் ராணுவப் பட்டமும் அளிக்கப்பட்டது. அதன்படி 1500 குதிரைகள் கொண்ட படை வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. மரியாதை நிமித்தமாக கொடி, நகரா (பறை),

தலைப்பாகை, அதில் அணிய ஜகா எனப்படும் அலங்கார நகைகள், ஒரு யானை, கில்லாத் ஆகியனவும் நவாபினால் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்பட்டன.

புதிய பட்டங்கள் அளித்து தம்மை சிறப்பு செய்தமைக்காக தொண்டைமான் 25,000 பகோடா நஸாராக புதிய நவாபுக்கு அனுப்பி வைத்தார்.

உடையார்பாளையம் மற்றும் அரியலூர் பாளைக்காரர்கள் சரிவர குத்தகைப்பணம் செலுத்தாத காரணத்தால் அவர்களைப் பிடித்துவந்து திருச்சியில் சிறையிலடைத்தார் நவாப். அப்பகுதி கள்ளர்களும், உடையார்களும் திருச்சி சிறைச்சாலையைத் தாக்கி அவர்களை (பாளையக்காரர்களை) விடுவித்தனர். சிறையிலிருந்து விடுபட்ட இப்பாளையக்காரர்கள் ஆங்கிலேயருடன் நடத்தியப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறாமையால், நவாபுக்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். எனவே அவர்களை அடக்க நவாப் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். அதன்படி 1796 டிசம்பரில் மேஜர் குப்பேஜ் தலைமையில் உடையார்பாளையத்திற்கு படை ஒன்று அனுப்பப்பட்டது. தொண்டைமானின் உதவியும் கோரப்பட்டது. 96 குதிரைகளும் 2203 படை வீரர்களும் சர்தார் அவதூதரால் தலைமையில் அனுப்பி வைக்கப்பட்டது. இப்படை மீர்சப்தர்கான் தலைமையிலான நவாபின் படையுடன் சேர்ந்து அரியலூரைத் தாக்கியது. போர் நிகழும்போது மேலும் படைகள் தேவைப்பட்டதால் நவாபின் வேண்டுகோளின்படி தொண்டைமான் மேலும் 200 குதிரைப் படை வீரர்களையும், 5,000 காலாட்படை வீரர்களையும் அனுப்பிவைத்தார். கர்நாடகப் பகுதி முழுவதும் ஆங்கிலேயருடைய நேரடிப் பொறுப்பின் கீழ் வந்த பின்பே இந்தப் பாளையங்களின் அரசியல் நிலவரம் தெளிவானது. அதன்படி இந்தப் பாளையக்காரர்கள் 1801 முதல் ஆங்கிலேயரின் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட ஜமீன்தார்களாக (இஸ்திமிரா ஜமீன்தார்) நியமிக்கப்பட்டனர். அதன்பின் இப்பகுதியில் அமைதி நிலவியது என்று சொல்லலாம்.

இந்தப் போரில் உதவி செய்தமைக்காக தொண்டைமானுக்கு, நவாப் யானை ஒன்றைப் பரிசாக அளித்தார்.

திப்புசுல்தான் பிரெஞ்சுக்காரர்களுடன் மீண்டும் நட்பு பாராட்டுவதாக கருதிய ஆங்கிலேயர் திப்பு மீது மேலும் ஆத்திரம் கொண்டனர். ஆகவே 1799 பிப்ரவரி மாதவாக்கில் திப்பு மீது ஆங்கிலேயர் மிகக் கடுமையாகப் போர்த் தொடுத்தனர். இப்போரிலும் புதுக்கோட்டையும் படையனுப்பி உதவியது. சர்தார்கள் அய்யாசாமியய்யா, ஆனந்தைய்யா, முத்தம்பலக்கார சேர்வை ஆகியோர் படையை நடத்திச் சென்றனர். இப்படை கர்னல் ப்ரவுன் தலைமையிலான படையுடன் சேர்ந்து ஸ்ரீரங்கப்பட்டினத்தைத் தாக்கியது. மூன்றுமாத காலம் திறமையாக ஆங்கிலேயப் படையை எதிர்கொண்ட

திப்பு, இறுதியாக 1799 மே மாதம் நான்காம் நாள் கொல்லப்பட்டார். மைசூர் ஆங்கிலேயர் வசமானது.

ஆங்கிலேயருக்கு வெற்றிகரமான இந்தப் போரில் புதுக்கோட்டைப் படையின் சிறந்த பணியினைப் பாராட்டி அவர்களுக்கு பல பரிசுகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீரங்கப்பட்டினத்தின் வீழ்ச்சிக்குப்பின் ஆற்காடு நவாபுகளைப் பற்றி அதிர்ச்சிதரும் செய்தியொன்று ஆங்கிலேயருக்குத் தெரிய வந்தது. நவாப் முகமது அலியும், அவரது மகன் உம்தத்துல் உம்ராவும் திப்புவுக்கு எழுதிய சில கடிதங்கள் ஆங்கிலேயரின் கவனத்திற்கு வந்தன. இதைப்பற்றி விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதையே ஒரு குற்றச்சாட்டாக வைத்து நவாபை ஒழித்துக் கட்ட ஆங்கிலேயர் திட்டமிட்டனர். (குழுவின் விசாரணையில் திப்புவுக்கும் நவாபுக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களில் ஆங்கிலேயருக்கு எதிரான ரகசிய உடன்படிக்கைகள் ஏதுமில்லை என்பது தெரிய வந்ததாகவும் ஆனால் ஆங்கிலேயர் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லையென்றும், ஆகவே நவாப் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்). ஆங்கிலேயரின் ஆட்சி தென்னிந்தியாவில், ஏன், இந்தியாவில் நிலைத்து நிற்க, அவர்களைத் தங்களது உற்ற நண்பர்களாகக் கருதி பல்லாற்றானும் உதவி செய்த ஆற்காடு நவாப் பரம்பரைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆங்கிலேயர் எத்தனித்தனர். இதனால் வேதனையும் விரக்தியுமடைந்த நவாப் உம்தத்துல் உம்ரா மரணமடைந்தார். நவாபின் மூத்த மகன் அலி ஹுசைன் கான் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இல்லை என்ற காரணத்தால், அவரது ஒன்றுவிட்ட சகோதரர் அஜுமுத்தவ்லாவை நவாபாக ஆங்கிலேயர் அறிவித்தனர். இந்த பொம்மை நவாபுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கர்நாடகப் பகுதியின் (தமிழக) ஆண்டு வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கை நவாபுக்குக் கொடுத்து (சுமார் 12,000 பகோடா) அவரை ஓய்வூதியம் பெறுபவராக ஆக்கினர். 31.7.1801 முதல் கர்நாடகப் பகுதி (தமிழகம்) முழுவதும் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் ஏகபோக சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, 25.4.1799 முதல் தஞ்சாவூர் மன்னருக்கு, ஒரு லட்சம் ரூபாய் ஓய்வூதியமும், தஞ்சாவூர் பகுதியின் ஆண்டு வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கையும் தருவதாக ஆங்கிலேயரால் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஆகவே 1801 ஆகஸ்டு மாதம் முதல் ஆற்காடு நவாபுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளும், மற்றும் அவரது மேலாண்மைக்குட்பட்டிருந்த பகுதிகளும், தஞ்சாவூரும் ஆங்கிலேயரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தன. ஆனால் புதுக்கோட்டை ஆங்கிலேயரின் மேலாதிக்கத்திற்குட்பட்ட தனி நாடாக இருக்க அனுமதிக்கப்பட்டது.

# 9. பாளையங்களும், பாளையப் போர்களும்

மதுரையில் ஆட்சி செலுத்திய விஸ்வநாத நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் (1524-1564) பாளையப்பட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. இப்பணியை செவ்வனே செய்ய உதவியவர், நாயக்கரது தளவாய் அரியநாதர் ஆவார். மதுரையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியை 72 பாளையங்களாகப் பிரித்து, அவற்றின் நிர்வாகப் பொறுப்பு அவ்வப்பகுதியில் செல்வாக்கு மிகுந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பாளையத்தின் தலைவர் பாளையக்காரர் என்று அழைக்கப்பட்டார்.

பாளையக்காரர்கள் தங்கள் பாளையத்திலிருந்து வரும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கினை தங்களது பாளையத்தின் ஆட்சிச் செலவிற்கும், மற்றொரு பங்கினை, படை நிர்வகிக்கும் செலவிற்கும், எஞ்சிய பிரிதொரு பங்கினை பாளையக்காரர்கள் தங்கள் செலவிற்கும் வைத்துக் கொண்டனர். நாயக்க மன்னர்கள் கேட்கும்போது பாளையக்காரர்கள் படைகொடுத்து உதவவேண்டும். இதனால் மன்னருக்கு படைச் செலவு குறைந்தது. மேலும் குறுகிய காலத்தில் பாளையக்காரர்களிடமிருந்து தேவையான படைகளையும் ஒன்று திரட்ட முடிந்தது. பாளையக்காரர்கள் அந்தந்த வட்டாரத் தலைவர்களாக இருந்ததால் அப்பகுதிகளில் ஒழுங்கு நிலை நிறுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் பாளையப்பட்டு முறை நல்ல விளைவுகளையே தந்தது எனலாம். நாயக்க மன்னர்களுக்குப் பாளையக்காரர்கள் ஒத்துழைப்பு நல்கினர். உள்நாட்டு அமைதியை நிலைநிறுத்தவும், வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்துக் காத்துக் கொள்ளவும் இம்முறை பயனுடையதாகவே இருந்தது. பாளையக்காரர்கள் தங்களது பாளையங்களின் நலன் நாடுபவர்களாகவும், நீதி வழங்குபவர்களாகவும் விளங்கினர். காடுகளைத் திருத்தி கழனியாக்கினர். கண்மாய்களை வெட்டினர். விவசாயம் செழித்தோங்க ஆரம்பித்தது.

ஆனால் பாளையங்கள் பரப்பளவில் வெகுவாக வேறுபட்டன. சில சிறியனவாகவும் சில மிகப் பெரியதாகவும் இருந்தன. இதனால் பாளையங்களுக்குள் போட்டியும், பொறாமையும் நிலவியது. கோயில் நிலங்கள், தனியார் நிலங்கள், பொது நிலங்கள் ஆகியன பாளையத்தில் அடங்கியிருந்தன. ஆனால் நல்ல விளை • நிலங்கள் பாளையக்காரர்களுக்குச் சொந்தமாக இருந்தன.

விஸ்வநாத நாயக்கர் காலத்தில் இருந்த 72 பாளையங்களின் எண்ணிக்கை நாளடைவில் கூடியது. பெரும்பாலான பாளையக்காரர்கள் தெலுங்கர்களாகவே (வடுகர்) இருந்தனர். மேலும், தமிழகத்தின் பிற பகுதிகளிலும், இம்முறை ஏற்பட்டது.

காலப்போக்கில் பாளையக்காரர்கள் தன்னிச்சையாகச் செயல்பட ஆரம்பித்தனர். இதனால் மத்திய அரசாக விளங்கிய நாயக்க

மன்னர்களின் ஆட்சி பலமிழக்கும் நிலை ஏற்பட்டது. விஜயநகரப் பேரரசின் மேலாண்மைக்குட்பட்டிருந்த நாயக்க மன்னர்கள், விஜயநகரப் பேரரசு வலிமை குன்றியபோது, சுதந்திரமாக ஆட்சி நடத்த நினைத்தது போன்று, பாளையக்காரர்களும் செயல்படத் தொடங்கினர். சில பாளையக்காரர்கள் நாயக்க மன்னரையே எதிர்க்கும் நிலை இருந்தது. மேலும் பாளையக்காரர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு ஒற்றுமையற்றிருந்தனர். பாளையப்பட்டு முறையானது சரியான முறையில் அமைக்கப்பட்டும், பாளையங்கள் நாயக்கர்களுக்குக் கட்டுப்பட்டும் ஆட்சி நடத்தியிருந்தால் நாயக்க அரசுக்கு ஏற்பட்ட பல சிக்கல்கள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்று மறைதிரு ஹீராஸ் குறிப்பிடுகிறார்.

பாளையக்காரர்களின் முக்கிய வருவாய் நிலவரியாகும். வரி வசூலில் திட்டவட்டமான நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை. வரிச்சுமை அளவிற்கு அதிகமாக இருந்தது. பெரும்பாலான பாளையங்களில் மக்களின் வாழ்க்கை அவலம் நிறைந்ததாக இருந்தது. பெரும்பாலும் கொள்ளையடிப்பது போன்றே வரிவசூல் இருந்தது எனக் கூறலாம். எனவே பாளையப்பட்டு முறை, ஒரு அரசியல் பொருளாதார ராணுவ ஆட்சி முறையாக இருந்ததாகச் சொல்லலாம். இதனால் பாளையக்காரர்கள் மீது மக்கள் மிகுந்த வெறுப்பு கொண்டிருந்தனர். எனவேதான் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியார் சென்னை மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ளும்போது மக்கள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அதை வரவேற்கவே செய்தனர். (அ.கணபதி-தமிழக வரலாறு 1565-1985-மதுரை, 1986 பக்கம் 79).

பாளையக்காரர்கள் தங்கள் பகுதிப் பாதுகாப்பிற்கு மண்கோட்டைகள் கட்டியிருந்தனர். போரில் வில், அம்பு, கத்தி, ஈட்டி, எரிபந்தம், கவண்கல், குத்துவாள், வளைதடி (Boomerang) ஆகியன உபயோகப்படுத்தப்பட்டன. பாளையப் படைகள் மறைந்திருந்துத் தாக்கும் கொரில்லாப் போர் முறையில் வல்லவர்களாக விளங்கினர். நாயக்கர்களின் ஆட்சி முழுமையாக வீழ்ந்தும்கூட பாளையங்களின் நிர்வாகப் பொறுப்பை பழையப் பாளையக்காரர்களே தக்க வைத்துக் கொண்டிருந்தனர்.

இக்காலத்தில்தான் இந்திய அளவில் முகலாயர்களின் கை ஓங்க ஆரம்பித்திருந்தது. முகலாயரின் தென்னிந்திய பிரதிநிதியாக ஹைதராபாத் நிஜாமும், நிஜாமின் தமிழக (கர்நாடக) பிரதிநிதியாக ஆற்காடு நவாபும் விளங்கினர். அப்போது ஆற்காட்டை நவாப் முகமது அலி ஆண்டுவந்தார். இக்காலத்தில் நவாபிற்கும் ஆங்கிலேயருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஆற்காடு நவாப் குடும்பத்தில் ஏற்பட்ட வாரிசுரிமைப் குழப்பங்களில் ஆங்கிலேயர் முகமது அலியை ஆதரித்தனர். அவருக்குத் தேவையான படை மற்றும் பண உதவிகளைக் கொடுத்து, அவரது நவாப் பதவியை அவருக்கு பாதுகாத்துக்

கொடுத்தனர். இதனால் ஆற்காடு நவாப் ஆங்கிலேயர் உறவு மேலும் வலுவடைந்தது. ஒருவாறாக நவாப் ஆங்கிலேயரின் பிடியில் சிக்கிக் கொண்டார். ஆங்கிலேயருக்குப் பெரும் கடனாளியாகவும் ஆனார்.

பெருகி வரும் செலவினை ஈடுகட்ட ஆற்காடு நவாப் பாளையக்காரர்களிடமிருந்து அதிகமாக வரிப்பங்கை எதிர்பார்த்தார். ஆங்கிலேயரும் இதில் கலந்து கொண்டனர். பாளையக்காரர்களுள் பலர் நவாபுடன் ஒத்துச் சென்றனர். சிலர் ஆவேசமடைந்தனர். இந்நிலையில் 1792ம் ஆண்டில் ஆங்கிலேயருக்கும், ஆற்காடு நவாபிற்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கர்நாடகத்தின் வரிவசூல் உரிமைய நவாபிடமிருந்து ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியார் பெற்றனர்.

நாயக்க மன்னர்களின் மேலாதிக்கத்தை எடுத்தெறிந்து, தன்னிச்சையாகவும் எதேச்சாதிகாரத்துடனும், பாளையங்களை நடத்திச் சென்ற பாளையக்காரர்களுக்கு, ஆங்கிலேயரின் தலையீடு பெரும் சவாலாக விளங்கியது. வழக்கமான வரிப்பணத்தோடு வெகுமதிகளாகவும், பெரும் தொகையை நவாபுக்கும், ஆங்கிலேயருக்கும் பாளையக்காரர்கள் அளிக்க வேண்டியிருந்தது. நாயக்கர் ஆட்சியில் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்கள் நவாபாலும், ஆங்கிலேயராலும் தட்டிப் பறிக்கப்பட்டபோது பாளையக்காரர்கள் எரிச்சலடைந்தது இயற்கையே. இதனால் பாளையக்காரர்களுள் சிலர் நவாப்-ஆங்கிலேயர் கூட்டுக்கு எதிர்குரல் கொடுத்தனர். பாளையக்காரர்கள் தன்னிச்சையாக செயல்பட்டபோது அவர்களை நாயக்க மன்னர்களால் அடக்க இயலவில்லை. ஆனால் நவாபும், ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியும் தங்களுடன் ஒத்துப் போகாத பாளையக்காரர்களை அடக்கி ஒடுக்க ஆவன செய்தனர். 1792ம் ஆண்டிற்குப் பிறகு தங்களது அதிகாரமும் செல்வாக்கும் ஆங்கிலேயரின் தலையீட்டால் பாதிக்கப்பட்டு தங்களது பாளையப் பொறுப்பு தங்களுக்குப் பயனற்றதாக ஆகிவிட்டதைக் கண்ட இப்பாளையக்காரர்கள் மேலும் ஆத்திரமடைந்தனர். இதனால் ஆங்கிலேயருக்கும், பாளையக்காரர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டது. மேலும் தங்களது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள இப்பாளையக்காரர்கள் பலர் ஒரு குழுவாக இணைந்து (பேரரசு நிலையில் விளங்கிய) ஆங்கிலேயரை எதிர்க்கத் திட்டமிட்டுச் செயல்படத் தொடங்கினர். இதன் காரணமாக ஏற்பட்ட போர்கள் பாளையப் போர்கள் என்று அழைக்கப்படுகின்றன.

பாளையப்பட்டு முறை தங்களது மேலாதிக்கத்திற்குத் தடையாக இருப்பதாக கருதிய ஆங்கிலேயர் 1799ம் ஆண்டில் அம்முறையை ஒழித்தனர். தங்களது பிரதிநிதிகள் மூலம் ஆங்கிலேயரே நேரடியாக வரிவசூல் செய்ய ஆரம்பித்தனர்.

# 10. முதல் பாளையப்போர்

1799ம் ஆண்டு நடைபெற்ற முதல் பாளையப்போர் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு எதிராக நடைபெற்றதாகும். இப்போரின் முடிவிலேயே வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப் பட்டார். இப்போர் பற்றியும், இதில் புதுக்கோட்டை தொண்டைமான் பங்கு பற்றியும் இங்கு விரிவாகக் காண்போம்.

திருநெல்வேலி பகுதியில் தங்கள் காவல் (பாளையப்பட்டு) உரிமையை பறிகொடுத்திருந்த நாகலாபுரம், மன்னார்க்கோட்டை, கோலார்பட்டி, சென்னால்குடி, பாளையக்காரர்கள் தங்களது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டணி அமைத்தனர். இக்கூட்டணியின் தலைவராக கட்டபொம்மன் தேர்ந்தெடுக்கப்பட்டார். (Lord Clive in Council 8.11.1799, Vol.98, P.2771). பிறகு மேலும் சில பாளையக்காரர்களும் இக்கூட்டணியில் சேர்ந்தனர். இக்கூட்டணிக்கு கள்ளர்களின் ஆதரவும் கிட்டியது. இவர்கள் ஆங்கிலேயரின் ராணுவ ரகசியங்களையும் உளவறிய ஆவன செய்தனர். (Pate, Tinnelveli Gazetteer P.79, Lord Clive in Council, 6-12-1799, Vol.98 & 99).

கட்டபொம்மன் அருகிலிருந்த ஏனைய பாளையக்காரர்களின் ஆதரவைத் தேடினாரே ஒழிய, பொதுமக்களின் ஆதரவைத் தேடவில்லை. மாறாக அவர்களைக் கசக்கி வரிப்பணம் வசூலிப்பதிலேயே குறியாக இருந்தார். (அ.கணபதி தமிழக வரலாறு 1565-1985, பக்கம் 141).

சிவகங்கை சகோதரர்களின் செயல்களால் கிடைத்த உத்வேகத்தால், கட்டபொம்மன் இக்கூட்டணியில் ஊக்கம் காட்டினார் என்று சொல்லலாம். இதுவே 1798ல் பாளையக்காரர் கிளர்ச்சிக்கு வித்திட்டது.

தெலுங்கு கம்பளத்து நாயக்கர் (கெட்டிபொம்மு) பரம்பரையில் 1761ல் பிறந்த வீரபாண்டியக் கட்டபொம்மன் தனது 30வது வயதில் 1791ல் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரர் ஆனார். ஆரம்பத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக எத்தகைய விரோத எண்ணத்தையும் அவர் கொண்டிருக்கவில்லை. அவர் அமைதியான பண்பு கொண்டவர் என ஆங்கிலேயர்களே எழுதியுள்ளனர். 1798ல் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தின் கப்பத்தொகை பாக்கி விழுந்தது.

அப்போது மதுரைக் கலெக்டராக இருந்த ஜாக்சன், இருமாப்புக் கொண்ட பண்போடு, வீரபாண்டிய கட்டபொம்மனை அவமதிக்க

எண்ணினார். தொடர்புடைய ஆவணங்களைப் படிக்கும்போது, கலெக்டர் ஜாக்சன் மட்டும் சற்று சாதுர்யமாக நடந்திருந்தால் கட்டபொம்மனும் ஏனையப் பாளையக்காரர்களைப் போன்று ஆங்கிலேயருடன் ஒத்துப் போயிருக்கக்கூடுமோ என்றே எண்ணத் தோன்றுகிறது!

31.5.1798வரை ரூ.16,550/- கப்பத்தொகை பாக்கியிருப்பதாகவும் அத்தொகையை உடனடியாகக் கட்டும்படியும் ஜாக்சன், கட்டபொம்மனுக்கு ஒரு எச்சரிக்கைக் கடிதத்தை அனுப்பிவைத்தார். (Lord Clive in council 27-09-1798, Vol.88). ஆனால், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணம் பெறப்படாததால் ஜாக்சன் பாஞ்சாலங்குறிச்சிமீது படையெடுக்க விரும்பினார். ஆங்கிலேயப் படைகள் அப்போது திப்புவுடன் போர் புரிவதில் ஈடுபட்டிருந்ததால் ஆங்கிலேயக் கம்பெனி இதற்கு உடன்படவில்லை. மாறாக கட்டபொம்மனை ராமநாதபுரத்திற்கு அழைத்துப் பேசுமாறு கலெக்டரைப் பணித்தது. இதன்படி தன்னை ராமநாதபுரத்தில் சந்திக்கும்படி 18.8.1798ல் கட்டபொம்மனுக்கு ஜாக்சன் கடிதம் எழுதினார். இந்தக் கட்டளையை அனுப்பிய பிறகு, ஜாக்சன், திருநெல்வேலி பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள, ராமநாதபுரத்திலிருந்து புறப்பட்டிருந்தார். கட்டபொம்மன் தனது பரிவாரங்களுடன் கலெக்டர் ஜாக்சனை சந்திக்கச் சென்றார். 27.8.1798ல் ஜாக்சன் குற்றாலத்தை அடைந்தபோது, கட்டபொம்மனும் அவரது பரிவாரங்களும் அவருக்காகக் காத்திருந்தனர். ஜாக்சன் கட்டபொம்மனை அங்கு சந்திக்க மறுத்துவிட்டார். பின்பு சொக்கம்பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற இடங்களிலும் சந்திக்க முயன்று, தோற்று, பயணம் தொடங்கி 23 நாள் கழித்து, 400 மைல்கள் அலைந்து, 19.9.1798ல் ராமநாதபுரத்தில், கட்டபொம்மன் ஜாக்சனை சந்தித்தார். கிஸ்தி கணக்கை சரிபார்த்தபோது பாக்கி ரூபாய் 5090/- (1080 பகோடா) மட்டுமே கட்டபொம்மன் கட்டவேண்டியிருந்ததைக் கண்டுகொண்டார் ஜாக்சன். ஆகவே 31.5.1798க்கும் 31.8.1798க்கும் இடைப்பட்ட 3 மாத காலத்தில் கட்டபொம்மன், ரூ.11,000/-கிஸ்திப்பண பாக்கியை கட்டிவிட்டதாக அறிகிறோம்.

அகந்தை கொண்ட ஜாக்சன் மேற்படி சந்திப்பின்போது கட்டபொம்மனையும், அவரது அமைச்சரையும் மூன்று மணிநேரம் நிற்கவைத்தே விசாரணை செய்தார். சந்திப்பின் இறுதியில், ராமநாதபுரம் கோட்டையிலேயே அவர்கள் தங்கியிருக்க வேண்டுமென்ற ஜாக்சனின் உத்தரவைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில், கட்டபொம்மன் தப்பிக்கும் முயற்சியில், லெப்டினன்ட் கிளார்க் என்பவர் கொல்லப்பட்டார். கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்ரமணியப் பிள்ளை (தானாபதி) கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் தப்பித்துக்கொண்டார். (Lord clive in council 27-9-1798 vol.88

P.3113) பாஞ்சாலஞ்குறிச்சிக்கு செல்லும் வழியில் கட்டபொம்மனின் படைவீரர்கள் ராமநாதபுரம் கடைவீதிகளை கொள்ளையடித்து பெரும் கொள்ளைப்பொருட்களை கொண்டு சென்றனர். (கே. ராஜய்யன்-தமிழக வரலாறு 1565-1967-பக்கம் 163-174 மற்றும் Rev. J.F. Keerns, panchalaınkurichy poligars and the State of Tinnelveli - Palayamkottai Church mission press.1873),

23 நாட்கள் தன்னை ஜாக்சன் அலைக்கழித்த ஆத்திரமும், ராமநாதபுரம் சந்திப்பின்போது தனக்கு ஏற்பட்ட அவமானமும், கட்டபொம்மனின் மனக்குமுறலை அதிகரித்தது. இந்த நிகழ்ச்சிக்கள் அவரது மெல்லிய மனித உணர்வுகளைத் தூண்டிவிட, அவர் ஆங்கிலேயரது எதிர்ப்பு இயக்கத்தில் மேலும் தீவிரம் காட்ட இதுவே பிரதான காரணமாக அமைந்துவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்நிகழ்ச்சிக்குப்பின், கட்டபொம்மன் சென்னை கவர்னருக்கு அனுப்பிய மேல்முறையீட்டுக் கடிதத்தில், தான், கலெக்டரின் கட்டளைக்கு மதிப்பளித்து அவரை சந்திக்கவும், பாக்கியிருந்த முழு கிஸ்தியையும் கட்டுவதற்கான பணத்துடனும் ராமநாதபுரத்திற்குச் சென்றதாகவும் - (அப்பணம் ராமநாதபுரத்தில் நடந்த சண்டையில் தொலைந்துவிட்டதாக, பின்பு கலெக்டர் லூசிங்டனுக்கு எழுதிய கடித்தில் குறிப்பிடுகிறார்) அங்கு ஏற்பட்ட கைகலப்பிற்கு ஜாக்சனின் நடவடிக்கைகளே காரணம் எனவும் குறிப்பிட்டிருந்தார். இதன்பேரில், கவர்னர் கிளைவ், ஜாக்சனை தற்காலிகமாக பதவி நீக்கம் செய்தும், சிவசுப்ரமணியப் பிள்ளையை விடுதலை செய்தும் ஆணை பிறப்பித்தார். (Lord Clive in council-13-10-1798 Vol.89. P.3219-20) மேலும் ராமநாதபுரம் நிகழ்ச்சிகள் குறித்து விசாரணை, நடத்த, வில்லியம் பிரவுன், வில்லியம் ஆரம், ஜான் காஸாமேஜர் ஆகியோர் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் முன்பு 15.12.1798ல் ராமநாதபுரத்தில், கட்டபொம்மனும் சாட்சியளித்தார். (Lord Clive in Council 21.12.1798 Vol.12 P.5416-17) கட்டபொம்மனை ஜாக்சன் நடத்திய விதம் ஏளனத்திற்குரியதென்று விசாரணையில் தெரியவந்தது. விசாரணைக்குழுவின் முடிவு ஏற்கப்பட்டு ஜாக்சன் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவரது இடத்தில் லூசிங்டன் கலெக்டராக நியமிக்கப்பட்டார். கேப்டன் கிளார்க்கின் கொலைக்காக நட்டஈடு தரவேண்டும் என்பதை. கட்டபொம்மன் ஒப்புக்கொண்டார்.

இவ்வாறாக, ஆங்கிலேயர், கட்டபொம்மனின் மனக்குறைக்கு தீர்வு கண்டனர். ஆங்கிலேயரின் தீர்ப்பு நியாயமானதாகவும், சமாதானத்திற்கு உரியதாகவும் இருந்தது எனினும், கட்டபொம்மன் அடைந்திருந்த அவமானத்தின் உறுத்தலும், மருதுபாண்டியரின் செல்வாக்கும் அவரை

மீண்டும் கிளர்ச்சிப் பாதைக்குத் தள்ளின. மருதுபாண்டியரையும் இதர புரட்சிப் பாளையக்காரர்களையும் கலெக்டர் லூசிங்டனின் ஆணையையும் மீறி கட்டபொம்மன் அடிக்கடி சந்திக்கத் தொடங்கினார். (Board of Revenue consultations Vol.229-10-6-1799 p.4853-91) கிளர்ச்சியாளர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டணியாக செயல்படத் தொடங்கினர். இவர்கள் (கூட்டணி அங்கத்தினர்) ஆங்கிலேயருக்குச் சொந்தமான பகுதிகளில் வரிவசூல் செய்தனர். அதன் வாணிப சாவடிகளை சூறையாடினர். (Lord Clive in council 8.11.1799 Vol.98. P.2771) இத்தகைய பாளையக்காரர்களை ஒடுக்க ஆங்கிலேய கம்பெனி வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தது. 1799 மே மாதத்தில் திப்பு முறியடிக்கப்பட்டபின், புரட்சிப் பாளையக்காரர்களின் ராணுவ அரசியல் பலத்தை ஒழிக்க ஆங்கிலேயப் படை ஆயத்தமானது. இந்த நேரத்தில் கட்டபொம்மன் சிவகிரி பாளையத்தின் மீது படையெடுத்தார். ஆங்கிலேயரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டிருந்த சிவகிரி பாளையக்காரர், உதவிகோரி ஆங்கிலேயருக்கு விண்ணப்பித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியையே, ஆதிக்கப்போருக்கு ஒரு காரணமாக எடுத்துக்கொண்டு, பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்க ஆங்கிலேயர் தீர்மானித்தனர். அதன்படி 1799 ஆகஸ்டு மாதத்தில் பாஞ்சாலக்குறிச்சி நோக்கி ஆங்கிலேயப்படை புறப்பட்டது. திருநெல்வேலியில் முகாமிட்ட மேஜர் பானர்மேன் செப்டம்பர் 4-ம் நாள் தன்னை வந்து காணுமாறு கட்டபொம்மனுக்கு கடிதம் எழுதினார். நாள் சரியில்லை என்றும் வேறொரு நாளில் சந்திப்பதாகவும் கட்டபொம்மன் பதில் அனுப்பினார். (Kattabomman, 2-9-1799 letter to Major Bonnerman vol.98 p.2706) ஆனால் 5.9.1799-ல் ஆங்கிலேயப்படை பாஞ்சாலங்குறிச்சியை அடைந்து தாக்குதல் தொடுக்கத் தயாராக இருந்தது. திருவாங்கூர் படைகளும் ஆங்கிலேயப் படையின் உதவிக்குச் சேர்ந்துகொண்டன. அன்று காலையில் சில மணி நேரத்திற்குள் பானர்மேனை சந்திப்பதாக கட்டபொம்மன் ஆள் அனுப்பினார். பானர்மேன், குறிப்பிட்ட நேரம்வரை காத்திருந்துவிட்டு, மேலும் தாமதியாது, பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மீது தாக்குதலைத் தொடங்கினார். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை இடித்துத் தள்ளப்பட்டது. கட்டபொம்மனும் அவரது தம்பியரும் தப்பியோடினர். கட்டபொம்மனின் மனைவி உட்பட உறவினர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். அவரது சொந்த நகைகள் கைப்பற்றப்பட்டுச் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

கட்டபொம்மனும் அவரது சகாக்களும் தப்பியோடி புதுக்கோட்டை காட்டுப் பகுதிகளில் இருப்பதாகச் செய்திகள் கிடைத்திருப்பதாகவும், அவர்களை கண்டுபிடித்துக் கொடுக்குமாறும் கலெக்டர் லூசிங்டன் 8.9.1799-அன்று தொண்டைமானுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதன்படி

கட்டபொம்மனை கண்டுபிடிப்பதற்கு எல்லா திக்குகளுக்கும் ஆட்களை அனுப்பி இருப்பதாகவும், விழிப்புடன் கண்காணித்து வருவதாகவும் 14.9.1799 அன்று தொண்டைமான் கலெக்டருக்கு பதில் அனுப்பினார். பின்னர், கட்டபொம்மனும், அவரது தம்பி ஊமத்துரையும் மற்றும் அவரது மைத்துனர்கள் இருவரும் உறவினர்கள் மூன்று பேரும் (ஆக மொத்தம் ஏழு பேர்) (திருமயம் வட்டம்) திருக்களம்பூருக்கு அருகிலுள்ள காளியாப்பூர் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், பிடிபட்டதும் கட்டபொம்மன் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும், இருப்பினும், அவர்களை பாதுகாப்போடு வைத்திருப்பதாகவும், மேல் நடவடிக்கை எடுக்க, கலெக்டரது பதிலை எதிர்பார்ப்பதாகவும், 24.9.1799-ல் தொண்டைமான் மீண்டும் கலெக்டர் லூசிங்டனுக்கு கடிதம் எழுதினார். (Lord Clive in council Vol.98)

கட்டபொம்மன் பிடிக்கப்பட்டது தமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர்களை மதுரையிலுள்ள ஆங்கிலேய படைத் தளபதி கேப்டன் ஸ்மித் வசம் உடனடியாக ஒப்படைக்கும்படி கலெக்டர் லூசிங்டன் தொண்டைமானுக்கு பதில் எழுதினார். அதன்படி கட்டபொம்மனும் மற்றோரும் மதுரைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். கட்டபொம்மன், ஊமத்துரை, மற்றும் அவரது உறவினர், பணியாளர்கள் - ஆகமொத்தம் ஏழுபேர்-6.10.1799 அன்று மதுரை வந்தடைந்ததாக கேப்டன் ஸ்மித் தொண்டைமானுக்கு தெரிவித்துள்ளார். (Lord Clive in council. Vol.98)

கட்டபொம்மன் பின்பு திருநெல்வேலிக்கு அருகிலுள்ள கயத்தாற்றிற்கு கொண்டு செல்லப்பட்டு - 16.10.1799 அன்று - அங்கு கூடியிருந்த பாளையக்காரர்கள் முன்னிலையில், மேஜர் பானர்மேனால், விசாரணை செய்யப்பட்டார். விசாரணையின் முடிவில் பானர்மேன், வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மரணதண்டனை விதித்தார். அதன்படி 17.10.1799 அன்று கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகே கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். ஊமத்துரை பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். (Lord Clive in council 8.11.1799. Vol. 98, P.2877-2884) ஏனைய புரட்சிப் பாளையங்காரர்களிடம் இருந்து காவல் மற்றும் ராணுவ உரிமைகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் அனைவரும் (ஆங்கிலேயருக்கு வரி செலுத்தும்) வெறும் ஜமீன்தார்களாக ஆக்கப்பட்டனர்.

காளியாப்பூரில் கட்டபொம்மனை கண்டுபிடித்த சர்தார் முத்துவைரவ அம்பலக்காரன், இப்பகுதி கும்மிப்பாடல்களில் பாராட்டிப் பாடப்பட்டுள்ளான். (முத்துவைரவன் சேர்வை கும்மி)

# 11. தொண்டைமான் கட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்தாரா?

கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தப்பி புதுக்கோட்டைக்கு வந்து தங்கி இருந்ததாகவும், அவரை ராஜா விஜயரகுநாதத் தொண்டைமான் நயவஞ்சகமாக ஆங்கிலேயரிடம் காட்டிக்கொடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது.

புதுக்கோட்டை ''காட்டிக்கொடுத்த ஊர்'' என்று பாமர மக்கள் பேசுவதைக் கேட்கிறோம். நாடகங்களிலும், கதைகளிலும் பள்ளிப் பாடப்புத்தகங்களிலும் ''காட்டிகொடுத்தான் தொண்டைமான்'' என்று பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருவதைக் காண்கிறோம்.

'காட்டிக்கொடுத்தான்' என்னும் சொல் வரலாற்று ஏடுகளில் சமீபகாலத்தில் திணிக்கப்பட்ட ஒரு சொல்லாகும்! கட்டபொம்மன் பிடிபட்டது புதுக்கோட்டையில்தான் என்பதையும் அவரை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்த விபரங்களையும் எள்ளவும் மறுப்பதற்கில்லை. ஆனால் கட்டபொம்மனை தொண்டைமான் - காட்டிக் கொடுத்தார்-என்று சொல்வது சரிதானா?.

காட்டிக்கொடுத்தல் என்னும் சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல் 'Betrayal' என்பதாகும். இச்சொல்லுக்கு ஆங்கில அகராதி கீழ்க்கண்டவாறு பொருள் தருகிறது. "To deliver into the hands of an enemy by treachery in violation of trust" அதாவது ''அடைக்கலம் என்று அண்டிவந்தவரை, தனது லாப நோக்கம் கருதி நயவஞ்சகமாக அவரது எதிரியிடம் ஒப்படைக்கும் செயல்'' எனப்பொருள் கொள்ளலாம். கட்டபொம்மன் தொண்டைமானிடம் அடைக்கலம் கேட்டுவரவில்லை! அப்படி நிகழ்ந்ததாக எந்த வரலாற்றுக் குறிப்பும் இல்லை. அப்படி நடந்திருக்கவும் வாய்ப்பில்லை. தொண்டைமான் ஆங்கிலேயரின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்ட அவர்களின் ஆதரவாளர் என்பது அப்போது நாடறிந்த செய்தி. இது கட்டபொம்மனுக்கும் தெரிந்திருக்குமல்லவா? இந்நிலையில் அவர் எப்படித் தொண்டைமானின் பாதுகாப்பை நாடியிருக்க முடியும்? தொண்டைமானிடம் கட்டபொம்மன் அடைக்கலம் கேட்டுவந்தார் என்று சிலர் எழுதியிருப்பது அவர்களுடைய கற்பனைக் கதை!.

கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு எதிரி. ஆங்கிலேயர் தொண்டைமானுக்கு நண்பர்கள். எதிரிக்கு எதிரி நண்பன், நண்பனுக்கு எதிரி தனக்கும் எதிரி, என்பது காலம் காலமாக நாம் கண்டுவரும் அரசியல் ராஜதந்திர சித்தாந்தம் அல்லவா? முடியுடைய மூவேந்தர் காலந்தொட்டு இன்றைய நாள் அரசியல் வரை, அரசியல்-பதவிப் போட்டிகள் காரணமாக தந்தையும் மகனும், சகோதரனும் சகோதரனும்,

உறவினரும் உறவினரும் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு ஒருவரையொருவர் அழித்துக்கொண்ட நிகழ்ச்சிகள் ஏராளமாக உண்டல்லவா?. இவற்றிற்கெல்லாம் அரசியல் ரீதியான அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொண்டைமான் ஆங்கிலேயரின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டவர். கட்டபொம்மன் புதுக்கோட்டை எல்லையில் ஒளிந்திருப்பது, கலெக்டர் லூசிங்கடன் கடிதம் எழுதிய பிறகே தொண்டைமானுக்குத் தெரியவருகிறது. (ஆங்கிலேயரின் கடிதங்கள் கூட கட்டபொம்மன் தொண்டைமானிடம் அடைக்கலம் புகுந்திருந்தார் என்று குறிப்பிடவில்லை என்பதும் இங்கு நோக்கத்தக்கது) மேலாண்மை வகிப்பவருக்கு கட்டுப்பட்டு கட்டபொம்மனைக் கண்டுபிடித்து (ஆங்கிலேயரிடம்) ஒப்படைத்தது எப்படி காட்டிக் கொடுத்ததாகும்? ஏனெனில் இது போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் அப்போதைய அரசியலில் சர்வ சாதாரணமானவை!

இதற்குப் பிறகும் ஒரு கேள்வி எழக்கூடும்! கோரிக்கை விடுத்தவன் அந்நிய நாட்டான். நம்மவனை - கட்டபொம்மனைத் தொண்டைமான் பிடித்துக் கொடுக்கலாமா?

இதுபற்றி விருப்பு வெறுப்பின்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகும்! அக்கால அரசியல் சூழ்நிலை, வரலாற்றுப் பின்னணி, தமிழகத்தை ஆண்டுவந்த சிற்றரசர்கள் மற்றும் பாளையக்காரர்களின் அரசியல் நடவடிக்கைகள், அவர்களுக்குள் இருந்த உறவு, மக்களுக்கும் இதுபோன்ற ஆட்சியாளர்களுக்கும் இருந்த உறவு, ஆகிய அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தபின்பே இந்தச் செயலின் தனமையை எடை போட முடியும்.

புதுக்கோட்டை ஒரு சுதந்திரமான அரசு அல்ல. ஆங்கிலேயரின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த ஒரு சிற்றரசு, மேலாண்மைக்கு கட்டுண்டு கிடப்பதுதானே அரசியல் சித்தாந்தம்! ராஜா விஜயரகுநாதத் தொண்டைமானின் அப்போதைய நிலையும், அவர் வாழ்ந்த காலத்தின் அரசியல் சூழ்நிலையயும் பார்க்கிறபோது கட்டபொம்மன் விஷயத்தில் அவர் செயல்பட்டவிதத்தில் எவ்விதத் தவறும் இருப்பதாகக் கூற முடியாது என ஒரு ஆய்வாளர் கூறுகிறார். (சிரஞ்சீவி - புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு 1980, பக்கம் 105).

தற்போதைய அரசியல் விழிப்புணர்ச்சிகளை வைத்து இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை ஒப்பிட்டு கூறுவது ஏற்புடையதாகாது. சுதந்திரம், தேசியம், நம்நாடு, நம்மவர் போன்ற உணர்வுகளெல்லாம் அறியாத காலம் அது. கட்டபொம்மன் காலத்தில்-ராஜா விஜயரகுநாத தொண்டைமான் காலத்தில் - தென்னாட்டில் இருந்த பெரும்பாலான சுதேச மன்னர்களும், பாளையக்காரர்களும் ஆங்கிலேயரின் நன்மதிப்பைப்பெற எதுவும்

செய்யத் தயாராக இருந்தனர். ஆங்கிலேயரைப் பிடிக்கவில்லை என்றால் டச்சுக்காரரையோ, பிரெஞ்சுக்காரரையோ அண்டி உதவி கோரவேண்டிய பரிதாபமான சூழ்நிலையைத்தான், அக்கால சுதேசமன்னர்களிடமும் பாளையக்காரர்களிடமும் காண்கிறோம். ஆகவே ஐரோப்பிய நாட்டினரின் தலைமையின் கீழேயே நமது நாட்டு மன்னர்களும் சிற்றரசர்களும் அணி திரண்டு நிற்கவேண்டிய கட்டாய சூழ்நிலை இருந்தது. ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனும் பூலுத்தேவரும் கூட ஆங்கிலேயரை எதிர்க்க டச்சுகிகாரர்களின் உதவியை நாடினர் என வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன, (yusufhkhan letter to Madras Council 15.6.1760 MCC. Vol.8. P 194-195, 205-218) பேயை விரட்ட பிசாசை துணைக்கு அழைத்த கதையல்லவா இது? இருப்பினும் இது போன்ற அரசியல் சூழல் அப்போது தவிர்க்க முடியாததாக இருந்தது என்பதையும் நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

சில உண்மை நிகழ்ச்சிகளையும் நாம் இங்கு கவனத்தில்கொள்ள வேண்டும். இதே காலகட்டத்தில் புதுக்கோட்டையை அடுத்துள்ள தஞ்சாவூரை ஆண்ட மராட்டிய மன்னர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் நிலவிய அரசியல் மேலாண்மைத் தொடர்பை சற்று காண்போம். கட்டபொம்மன் பிடிபட்டபிறகு, கட்டபொம்மனின் சகோதரர் சிவத்தையா தஞ்சாவூர் மன்னர் சரபோஜிக்கு கடிதம் எழுதி தமக்கு ஆதரவளிக்கும்படி கோருகிறார். சிவத்தையாவின் கடிதத்தைக் கொண்டுவந்த தூதுவன் அந்த கடிதத்தை சரபோஜியின் மந்திரியான தத்தாஜியிடம் கொடுக்க, தத்தாஜி கடிதம் கொண்டு வந்தவனை சிறையில் தள்ளிவிட்டு, அக்கடிதத்தை ஆங்கிலேயருக்கு அனுப்பி வைக்கிறார். ''ஆங்கிலேயருடன் தஞ்சாவூர் மராட்டிய மன்னர்கள் பல ஒப்பந்தங்களை செய்துகெண்டனர். ஒவ்வொரு ஒப்பந்தத்தாலும் மராட்டிய மன்னர்கள் தங்கள் சுய உரிமையை இழத்தல், படைக்குறைப்பு, ஆங்கிலேயப் படைகளை தஞ்சையில் இருக்கச்செய்து அவற்றின் பராமரிப்புக்குப் பெருந்தொகை அளித்தல், நவாபுடன் தொடர்புகொள்ளுங்கால் ஆங்கிலேயரின் வழியே தொடர்பு கொள்ளுதல், வெளிநாட்டுக் கொள்கையை ஆங்கிலேயரின் சொற்படியே அமைத்துக்கொள்ளுதல் ஆங்கிலேயரின் நண்பர்க்கும், பகைவர்கட்கும், இவர்களும் நண்பரும், பகைவருமாதல் ஆகிய கட்டுப்பாடுகளுக்கு இடையே அகப்படலாயினர். நேரிடையாகவோ மறைமுகமாகவோ, இங்ஙனம் ஆங்கிலேயருக்கு அடங்கி அவர் வழி ஒழுகவேண்டி வந்தது,'' (கே.எம். வெங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும், சமுதய வாழ்க்கையும் - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-1984 - பக்கம்-59). இப்படி ஆங்கிலேயரின் நன்மதிப்பைப்பெற சுதேச மன்னர்கள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டு செயல்பட்ட நிகழ்ச்சிகள் பலவாகும்.

மருது சகோதரர்கள் ஆங்கிலேயரை முழு மூச்சாக எதிர்ப்பதாகக் கூறி திருச்சி பேரறிக்கையை (16.6.1801) வெளியிட்டபின்பும் (Revenue Sundries Vol.26/16.6.1801.pp 441-70) 24.7.1801-ல் கவர்வர் கிளைவுக்கு அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் (Revenue Consultation Vol.110 p.1861-69) தாங்கள் ஆங்கிலேயருக்கு கட்டுப்பட்டு கிஸ்தி செலுத்திவந்த வரலாற்றையெல்லாம் நினைவுகூர்ந்து, ஆங்கிலேயரின் நட்பை நாடும் பாணியில் எழுதி இருப்பதோடு பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்களையும் குறைகூறி எழுதியுள்ளனர். அவர்களது ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கத்தில் ஏன் இந்த முரண்பாடு என்பதை ஆராய வேண்டாமா?

பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து தப்பிய கட்டபொம்மனைப் பிடிக்க எட்டயபுரம் பாளையக்காரரின், படைகள் பின்தொடர்ந்து சென்றதாகவும் முதலில் கட்டபொம்மன் சிவகங்கைக்குச் சென்றதாகவும், பின்பு அங்கிருந்து புதுக்கோட்டை காட்டுப் பகுதிக்கு வந்ததாகவும், தெரியவருகிறது. (Radhakrishna Iyer. S. - A General History of Pudukkottai State-p.304) இச்செய்தி ஆராயப்படவேண்டியதாகும். புரட்சிப் பாளையக் காரர்களின் கூட்டணியில் கட்டபொம்மனும் இருந்தார். ஆகவே அவர் மருது சகோதரர்களின் ஆதரவைத் தேடி சிவகங்கை சென்றிருக்க வாய்ப்புண்டு. ஆனால் முதலில் சிவகங்கை சென்று பின் அங்கிருந்து புதுக்கோட்டைக் காட்டுப் பகுதிக்கு வந்து ஏன் ஒளிந்து கொள்ளவேண்டும். அப்படியானால் அவருக்கு அங்கு (சிவகங்கையில்) ஆதரவு கிடைக்கவில்லையா?

அக்கால இந்திய அரசியலில் ஐரோப்பிய நாட்டினரின் ஆதிக்கப் போட்டிகளில் ஆங்கிலேயர் தங்களது சக்தியை நிலைநாட்டி, நாட்டையே தங்களது ஏகபோக சொத்தாக பிரகடனப் படுத்திக்கொண்ட நிலையில், நமது நாட்டு (சுதேச) மன்னர்களும், சிற்றரசர்களும் பாளைக்காரர்களும் தங்களது பாதுகாப்பிற்கும் தங்களது குடிகளின் நலன் பாதுகாக்கப்படவும் நிலையானதொரு நேச சக்தியை நாடுவது இயற்கையே. இந்த வகையில் புதுக்கோட்டை, ஆங்கிலேயரை தனது நட்புக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தது.

இங்கு ஒன்றை நன்றாக நினைவில் கொள்ளவேண்டும். தொண்டைமான் மன்னர்களுக்கும் ஆங்கிலேயருக்கும், கட்டபொம்மன் தொடர்பான நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில் (1799) தொடர்பு ஏற்படவில்லை என்பதும், அதற்கு முன்பே அதாவது 1755-லேயே இவர்களுக்கிடையே ஒரு அரசியல் உடன்படிக்கை அடிப்படையில் உறவு ஏற்பட்டுவிட்டது என்பதுதான் அது. கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுப்பதற்காக, புதிதாக ஆங்கிலேயருடன் உறவு வைத்துக் கொள்ளவில்லை. கட்டபொம்மனை பிடித்துக்கொடுத்ததினாலேயே தொண்டைமானுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன என்று கூறுவது வரலாற்றை சரியாக படிக்காதவர்களின் கூற்றாக அமைகிறது. இதற்கு முன்பே இந்தியாவில் வேறெந்த சமஸ்தானங்களுக்கும், சிற்றரசுகளுக்கும்

இல்லாத பல சலுகைகள் தொண்டைமானுக்கு வழங்கப்பட்டிருந்தன. 1755-ம் ஆண்டுக்கு முன்பே ஆற்காடு நவாபின் மேலாண்மைய ஏற்று ஆட்சி செலுத்திய தொண்டைமான் மன்னர்கள், ஆற்காடு நவாப் ஆங்கிலேயரின் பக்கம் சேர்ந்து கொண்டபோது, தொண்டைமானும் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்தார் என்பது தெரியவருகிறது. இந்நிலையில், (அக்கால அரசியல் சூழ்நிலையில்) மேலாதிக்கம் வகித்த ஆங்கிலேயரின் வேண்டுகோளுக்கு இணங்க கட்டபொம்மனை பிடித்துக் கொடுத்தது அரசியல் ரீதியாக ஏற்புடையதுதான் என்பது விளங்கும்.

ஆகவே புதுக்கோட்டை தொண்டைமான்-கட்டபொம்மன் வரலாற்று நிகழ்வுகளை, அக்காலச் சூழலையும், அரசியல் ஆதிக்க போராட்டங்களையும் கருத்தில்கொண்டு ஆராய்ந்தால், 'காட்டிக்கொடுத்தான்' தொண்டைமான் என்பது வரலாற்றுச் சான்றுகளுக்கு முரணானது என்பதும் அரசியல் சித்தாந்தங்களுக்கு ஒவ்வாதது என்பதும் விளங்கும். கட்டபொம்மனை மிகைப்பட உயர்த்திக் காட்டுவதற்காக கதை, நாடகங்கள் எழுதப்போந்த சில புத்தக ஆசிரியர்கள் அரைகுறைச் செய்திகளின் அடிப்படையில் ''தொண்டைமான் காட்டிக்கொடுத்தான்'' என்றும் புதுக்கோட்டையைக் ''காட்டிக் கொடுத்த ஊர்'' என்றும் எழுதிவருவது நல்ல வரலாற்றுச் செய்தியாகுமா? இதுபோன்ற ஆதாரமற்ற வாசகங்கள் வரலாற்று ஏடுகளிலிருந்து எடுக்கப்பட வேண்டும் என்பதே நடுநிலை வரலாற்று ஆய்வாளர்களின் எண்ணமாக இருக்க முடியும். (ஆசிரியர்).

## 12. இரண்டாவது பாளையப்போர்

பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஊமைத் துரையும் அவரது தோழர்களும் 2.2.1801-ல் பாளையங்கோட்டை சிறையிலிருந்து தப்பித்து, பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்து, இடிந்துபோன கோட்டையை கட்டி முடித்தனர். அங்கிருந்து கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்கத் தலைப்பட்டனர்.. ஆனால் ஆங்கிலேயரை எதிர்த்து அவர்களால் நீண்ட நாள் தாக்குப்பிடிக்க முடியவில்லை. பாஞ்சாலங்குறிச்சி மீண்டும் 24.5.1801ல் வீழ்ந்தது. தோல்வியுற்ற ஊமைத்துரை சிவகங்கை சென்று அங்கு மருது சகோதரர்களின் விருந்தினராக தங்கினார். மருது சகோதரர்களின் வளர்ச்சியை சந்தேகத்துடன் கவனித்துவந்த ஆங்கிலேயர், ஊமைத்துரைக்கு அவர்கள் அளித்த ஆதரவே, சிவகங்கையை உடனடியாக ஒடுக்கவேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில் கர்னல் அக்னுயு சிவகங்கை சென்று ஊமைத்துரையைத் தங்களிடம் ஒப்படைக்கும்படிக் கோரினார். மருது சகோதரர்கள் அதற்கு இசையாமலிருக்கவே சிவகங்கை மீது ஆங்கிலேயர் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். ஆங்கிலேயரின் பெரும்படையால்கூட மருது சகோதரர்களை வீழ்த்த முடியவில்லை. சிவகங்கை காடுகள் அரணாக விளங்கியதும் அக்காடுகளில்

மறைந்திருந்து கொரில்லா போர் முறையில் எதிரிகளைத்தாக்கியதுமே இதற்கு காரணம் ஆகும்.

ஆங்கிலேயருக்கு மேலும் படை பலம் தேவைப்பட்டது. புதுக்கோட்டை திருவாங்கூர் போன்ற சிற்றரசுகளிடம் படைகள் கோரப்பட்டன. புதுக்கோட்டையிலிருந்து சர்தார் முத்துக்குமாரப் பிள்ளையின் தலைமையில் 3667 போர்வீரர்களை, நத்தம் பகுதியிலிருந்த ஆங்கிலேய படைக்கு உதவியாகவும், சர்தார் அண்ணாவைய்யர், ரகுநாரராவ், முருகப்பசேர்வை ஆகியோரின் தலைமையின் கீழ் சுமார் 2000 வீரர்கள் கொண்ட படையை சிவகங்கைக்கும், அறந்தாங்கியில் தங்கியிருந்த கேப்டன் ப்ளாக்பர்னுக்கு உதவியாக 13 குதிரைகளும் 1000 போர் வீரர்களையும் ராஜா விஜயரகுநாத தொண்டைமான் அனுப்பிவைத்தார். மேலும் காளையார்கோவில் முற்றுகைக்கு உதவியாக, காடுகளை அழிப்பதற்கு கைதேர்ந்த வீரர்களையும் அனுப்பிவைத்தார். திருமயம் கோட்டையை ஆயுதக்கிடங்காக பயன்படுத்திக்கொள்ள ஆங்கிலேய தளபதிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வளவு படைபலம் இருந்தும் ஆங்கிலேயர் பிரித்தாளும் சூழ்ச்சியையும் மேற்கொண்டனர். அது அவர்களுக்கு கைவந்த கலையல்லவா?

மருதுபாண்டியரின் செல்வாக்கைக் குறைக்கும் சூழ்ச்சியின் ஒரு கட்டமாக நாலுகோட்டை பெரிய உடையத்தேவரின் பேரன், படைமாத்தூர் ஒய்யாத்தேவர் என்ற கௌரி வல்லபத்தேவரை, சிவகங்கையின் வாரிசு எனக்கொண்டு, அவரை சிவகங்கையின் மன்னராக ஆங்கிலேயர் பிரகடனப்படுத்தினர்.

இந்த (பொம்மை) ராஜாவுக்கு 12.9.1801-ல் பட்டம் சூட்டி வைத்தனர். இந்த ராஜாவின் மெய்க்காவலுக்கு ஆங்கிலேயரின் வேண்டுகோளின்படி புதுக்கோட்டையிலிருந்து படைகள் அனுப்பப் பட்டன. கௌரி வல்லபத்தேவர் தன்னை ஆங்கிலேயரின் பிள்ளை என அழைத்துக்கொண்டார்.

இத்தனைக்குப் பிறகும் மருது சகோதரர்களை ஆங்கிலேயரால் தோற்கடிக்க இயலவில்லை. மீண்டும் படைபலத்தை பெருக்கிக்கொண்டு பலமுறைத் தாக்குதல்களை தொடுத்து காளையார்கோயிலை ஆங்கிலேயர் கைப்பற்றினர். 19.10.1801ல் சின்னமருது ஆங்கிலேயரிடம் பிடிப்பட்டார். மருது சகோதரர்கள் 24.10.1801ல் திருப்பதூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். இத்துடன் இரண்டாவது பாளையப்போர் முடிவுக்கு வந்தது. தென்பாண்டி நாட்டு மக்கள் அனைவரும் நிராயுதபாணிகளாக்கப்பட்டனர். பாளையப்பட்டு முறையும் ஒழிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் ஆங்கிலேயரின் நேரடி ஆட்சியின்கீழ் வந்தது. ஆற்காடு நவாபை பென்ஷனராக்கிய கதையை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் ஆங்கிலேயருக்கு இத்தருணத்தில் செய்த உதவிகளுக்காக பெரிதும் பாராட்டப்பட்டார். பல பரிசுகளும் அளிக்கப்பட்டன. தொண்டைமானும் அவரது சந்ததியினரும் சிறப்பான இடத்தை வகிக்கும் வண்ணம் தங்கத்தினால் ஆன இரண்டு சோப்தார் தடிகள் (இது அரசருக்குரிய மரியாதைச் சின்னம். இந்த தடி 5 அடி உயரத்தில் தங்கத்தகடு போர்த்தப்பட்டது) ஆங்கிலேயரால் அளிக்கப்பட்டன. ஆனால் தொண்டைமான், 'மகாராஜா' என்ற பட்டத்தையும், வெண்கொற்றக் குடையையும் வைத்துக்கொள்ள அனுமதிகோரியிருந்தார். 'மகாராஜா' என்ற பட்டமும் வழங்கப்படவில்லை, வெண்கொற்றக்குடை' தன்னிச்சையாகச் செயல்படும் அரசருக்கு உரியதாகையால் அதுவும் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே தொண்டைமானின் அந்தஸ்த்தை உயர்த்தும் வண்ணம் (அப்போது மொகலாய அரச பரம்பரையில் இருந்த நடைமுறை வழியில்) இரண்டு தங்கத் தடிகள் மட்டும் வழங்கப்பட்டன.

தஞ்சாவூருக்கும், புதுக்கோட்டைக்கும் இடையே கீழாநிலைக்கோட்டை விஷயமாய் இருந்துவந்த தகராறும் ஆங்கிலேயரால் தீர்த்துவைக்கப்பட்டது. கீழாநிலைக்கோட்டையை, தொண்டைமானுக்கு உரிமையாக்கி ஆங்கிலேயர் 8.7.1803ல் பிரகடனப்படுத்தினர். ஆனால் இதற்கு பதிலாக ஆண்டு ஒன்றுக்கு ஒரு யானையை ஆங்கிலேயருக்கு பரிசளிக்கவேண்டு மென நிபந்தனை விதிக்கப்பட்டது. தொண்டைமான் இதற்கு உடன்படாததால் பின்பு இந்த நிபந்தனை வற்புறுத்தப்படவில்லை.

புதுக்கோட்டை சிற்றரசின் எல்லைகளை நிர்ணயித்துக் கொடுக்க ஆங்கிலேயர் தேவையான முயற்சிகளையும் மேற்கொண்டனர். புதுக்கோட்டையின் எல்லைகள் குறித்து தெளிவில்லாமலிருந்ததால், அக்கம்பக்கத்திலிருந்த பகுதிகளுடன் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. ஆகவே இப்பகுதி முழுவதும் நில அளவை செய்யப்பட்டு 5.6.1804-ல் எல்லைக் கற்கள் நடப்பட்டன. இதனால் அருகிலிருந்த மருங்காபுரி, மணப்பாறை, குமாரவாடி ஆகியவற்றுடனான எல்லைத் தகராறுகள் தீர்த்துவைக்கப்பட்டன. புதுக்கோட்டை தனியரசின் (சமஸ்தான) எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டன.

**போஜராஜா:** புதுக்கோட்டை மன்னர்களுள் மிகவும் சிறந்து விளங்கியவர், இந்த தொண்டைமான். இவர் போஜராஜா என்று அழைக்கப்பட்டார். இவரது காலத்தில் இலக்கியப் பணிகள் மேன்மையுற்றன. பல புதிய படைப்புகள் தோன்றின.

பல கவிராயர்களும், கவிஞர்களும் மன்னரால் ஆதரிக்கப்பட்டுள்ளனர். திருக்கோகர்ணம் கணபதி கவிராயர், மிதிலைப்பட்டி கவிராயர், காரைச்சூரன்பட்டி கவிராயர் ஆகியோர் இவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

இம்மன்னரது காலத்தில் பல சத்திரங்கள் கட்டப்பட்டன. 1797-ல் செல்லுகுடிக்கு அருகில் ஒரு சத்திரம், கட்டப்பட்டது. தொண்டைமானின் சிறிய தாயார் கட்டக்குறிச்சி ஆயி குளவாய்ப்பட்டியில் ஒரு சத்திரம் கட்டினார். 1799-ல் மேல அரண்மனை ஜாகிர்தார் விஜயரகுநாதத் தொண்டைமானின் மனைவி அம்மனி ஆயி ஒனான்குடியில் ஒரு சத்திரம் கட்டினார். சின்ன அரண்மனை ஜாகிர்தார் முள்ளூரில் ஒரு சத்திரம் கட்டினார். திருக்கோகர்ணத்திலும் ஒரு சத்திரம் கட்டப்பட்டது. காசியிலும் ஒரு சத்திரம் கட்டப்பட்டது.

ராஜா விஜயரகுநாதத் தொண்டைமான் காலத்தில் ராமேஸ்வரம், மதுரை பழநி, சிதம்பரம், திருப்பதி போன்ற கோயில்களில் தொண்டைமான் பெயரில் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் பல கோயில்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. திருக்கோகர்ணம், திருமயம் கோயில்கள் திருச்சி தாயுமானவர்கோயில் ஆகியவற்றிற்கு அளித்துள்ள மானியங்கள் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன. திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலுக்கும் பல நகைகளை தொண்டைமான் அன்பளிப்பாக அளித்துள்ளார்.

ராஜா விஜயராகுநாதத் தொண்டைமான் 1807 பிப்ரவரி முதல் நாள் இயற்கை எய்தினார். இவருக்கு முத்தம்மா ஆயி, சுப்பம்மா ஆயி, ஆயி அம்மா ஆயி என்று மூன்று மனைவியர் இருந்தனர். இவர்களுள் ஆயி அம்மா ஆயி (பிருகன்னாயகி ஆயி) மூலம் விஜயரகுநாதத் தொண்டைமான், ரகுநாதராயத் தொண்டைமான் என இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். இந்த இருவருமே ஒருவர் பின் ஒருவராக புதுக்கோட்டை மன்னராக அரியணை ஏறினர்.

மன்னர் இறந்ததும் அவரது மனைவி ஆயி அம்மா ஆயி (பிருகன்னாயகி ஆயி) உடன்கட்டை ஏறினார். தொண்டைமான் குடும்பத்தினரின் இடுகாடாக விளங்கிய காரைத்தோப்பில் இந்த உடன்கட்டை ஏறும் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. (இந்த இடம் தற்போது புதுக்கோட்டையின் நகரின் தெற்கு எல்லையில் (திருமயம் ரோடு) மாலையீடு என்று அழைக்கப்படுகிறது) இவ்விடத்தில் அந்த கற்புக்கரசிக்கு ஒரு கோயில் எடுப்பிக்கப்பட்டு, அவரது திரு உருவச்சிலையும் வைக்கப்பட்டு மாலைகள் இட்டு பூசித்து வரப்பட்டது. ஆகவே இவ்விடம் காலப்போக்கில் மாலையீடு என அழைக்கப்படலாயிற்று. இக்கோயில் இன்றும் அங்கு இடிந்த நிலையில் காணப்படுகின்றது. வழிபாடுகள் எதுவும் நடைபெறுவதில்லை.

விஜயரகுநாதத் தொண்டைமான் இறக்கும்போது 60,400/- பகோடா கடன் சுமையை அரசுக்கு விட்டுச்சென்றார். இதில் பெரும்பகுதி ஆங்கிலேயருக்கு படை உதவி அளிப்பதில் செலவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் கற்றோரைப் போற்றுவதற்கும், கவிஞர்களையும், புலவர்களையும் ஆதரிப்பதற்கும் பெரும் தொகையை செலவிட்டுள்ள விபரங்கள் தெரியவருகின்றன.

இவரது ஆட்ச்சிக்காலம் முழுவதும் போர்மேகம் சூழ்ந்து இருந்தபோதிலும் புதுக்கோட்டை சமஸ்தான மக்கள் மன நிறைவுடன் வாழ்ந்ததாகவும் அவர்கள் தொண்டைமானால் அன்புடன் நடத்தப்பட்டதாகவும் ஆங்கிலேயரது குறிப்புகள் தெரிவிக்கின்றன. பிற்காலத்தில் இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாற்றை எழுதப்போந்த வரலாற்று ஆசிரியர்களிடையேயும், பாமர மக்களுக்கு கதை எழுதியவர்கள் மத்தியிலும், ராஜா விஜயரகுநாதத் தொண்டைமான் சர்ச்சைக் குரியவராக, பழித்துக் கூறப்படுவதை காண்கிறோம். வீரபாண்டிய கட்டபொம்மன்,மருது சகோதரர்கள் ஆகியோர் குறித்த வரலாற்று நூல்களில், ஆதாரமற்ற முறைகளில் இவர் மிகவும் சாடப்படுகிறார். இதுபற்றியெல்லாம் விருப்பு வெறுப்பற்ற ஒரு வரலாற்று கண்ணோட்டம் தேவை. ஒருவரை புகழ்ந்துரைக்க வேண்டும் என்பதற்காக, மற்றவரை இகழ்ந்து கூறுவது வரலாறாகிவிட முடியாது. இதற்கெல்லாம் விடையாக, நாம் முன்பே குறிப்பிட்டுள்ளது போல் அக்கால அரசியல் சூழ்நிலைகளை நடுநிலைகொண்டு ஆராய வேண்டுமென்பதே! அந்நிய நாட்டினரின் ஆதிக்கத்தில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்த இந்தியாவின் வரலாற்றை, அக்கால மன்னர்களின் நிலையை, 1503-ம் ஆண்டு போர்துக்கீசியர் கேரள மாநிலம் கொச்சிக்கு அருகில், எடப்பள்ளி ஆற்றங்கரையில், முதல் கோட்டையை எழுப்பி அந்நிய ஆதிக்கத்திற்கு வித்தூன்றிய காலத்திலிருந்து, விருப்பு வெறுப்பின்றி ஆராய வேண்டியது மிக மிக அவசியமாகும். (ஆசிரியர்).

## 13. ராஜா விஜயரகுநாதராயத் தொண்டைமான் (1807-1825)

விஜயரகுநாத ராய தொண்டைமான் 10 வயதாக இருக்கும் போது புதுக்கோட்டையின் மன்னரானார். அரசு காரியங்களை மேல் அரண்மனை ஜாகிர்தார் (மன்னரது சித்தப்பா) விஜயரகுநாதத் தொண்டைமான் கவனித்து வந்தார்.

மன்னர் இளம் பிராயத்தினராக இருந்ததால் புதுக்கோட்டை அரசின் நிர்வாகத்தையும், நலன்களையும், கவனித்துக் கொள்ள தஞ்சாவூர் ரெசிடெண்ட் ஆக இருந்த (ஆட்சியாளர்) மேஜர் வில்லியம் பிளாக்பர்ன் ஆங்கிலேயே அரசால் நியமிக்கப்பட்டார். அதன்படி 1807 பிப்ரவரி முதல் புதுக்கோட்டையின் ரெசிடெண்டாக பிளாக்பர்ன் பொறுப்பேற்றார்.

மேஜர் பிளாக்பர்ன் புதுக்கோட்டை அரச குடும்பத்தினருக்கு நன்கு அறிமுகமானவர். பாளையக்காரப் போரின்போது அவர் புதுக்கோட்டைக்கு பலமுறை வந்திருக்கிறார். எனவே அவர் சமஸ்தானத்தின் நிர்வாக பொறுப்புகளை கவனித்துக் கொள்ள நியமிக்கப்பட்டதில் அரச குடும்பத்தினரும், மக்களும், மகிழ்ச்சி அடைந்தனர்.

இளம் பிராயத்தில் இருந்த மன்னர் மற்றும் அவரது சகோதரர் இருவரும் ரெசிடெண்டாக இருந்த பிளாக்பர்னிடம் ஆழ்ந்த பாச பிணைப்பு கொண்டனர். மன்னருக்கு சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு,தமிழ், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் கல்வியும், சண்டை மற்றும், இதர பயிற்சிகளும், அளிக்க ரெசிடெண்ட் ஏற்பாடு செய்தார். மன்னரும், அவரது சகோதரரும் அவரை ''அப்பா'' என்று அழைக்கும் அளவுக்கு அவர்களது உறவு இருந்தது. பிளாக்பர்ன் சமஸ்தான நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார்.

முன்னாள் மன்னர் இறந்த பிறகு அரண்மனை நிர்வாகம் மிகவும் சீர்குலைந்திருந்தது. அரசு நிர்வாக நடவடிக்கைகளை கவனிக்க இரண்டு மேனேஜர்கள் நியமிக்கப்பட்டனர். அப்பதவிகளில் காலம் சென்ற மன்னரின் உறவினர்களான, மாப்பிளை பல்லவராயர் மற்றும் திருமலைத் தொண்டைமான், ஆகியோர் நியமிக்கப்பட்டனர். சிர்க்கிள் என்ற ஒரு பதவியும் ஏற்படுத்தப்பட்டது. (இப்பதவியை முதல் அமைச்சர் பதவிக்கு சமமாகக் கொள்ளலாம்). ரெசிடெண்ட், சிர்க்கிள் மூலம் அனுப்பும் குறிப்பு மற்றும் ஆணைகளுக்கு ஏற்ப மேனேஜர்கள் அரசு நிர்வாகத்தை கவனித்து வந்தனர். ஆனால் மேனேஜர்கள் இருவரும் தங்களுக்குள் சண்டை இட்டுக்கொண்டு நிர்வாகத்தை சரிவர கவனிக்கவில்லை. சென்னை கவர்னர் இதுகுறித்து நடவடிக்கை மேற்கொண்டு சமஸ்தான நிர்வாக காரியங்களை கவனிப்பதற்கு ஆனந்தய்யா என்பவரை நியமித்தார். இவர் ரெசிடெண்டின் கீழ் மன்னரின் நிர்வாக கடமைகளை செய்துவர ஏற்பாடு செய்யப்பட்டது.

மேஜர் பிளாக்பர்ன் தஞ்சாவூர்க்கும், புதுக்கோட்டைக்கும், ரெசிடெண்டாக இருந்ததால் அவர் தஞ்சாவூரிலேயே தங்க வேண்டி இருந்தது. புதுக்கோட்டையில் நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகளை எழுதி அனுப்ப தானாப்பிள்ளை என்னும் கணக்குப்பிள்ளை ஒருவர் நியமிக்கப்பட்டார்.

அரசு காரியஸ்தரான ஆனந்தய்யா தனது அதிகார வரம்பை மீறி நடந்து கொண்டதை அடுத்து 1814ல் அரசு நிர்வாகக் காரியங்களை கவனித்துக் கொள்ள மூவர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு பின்பு ''கவுன்சில்'' என்றும், அதன் உறுப்பினர்கள் ''கவுன்சிலர்கள்'' என்றும் அழைக்கப்பட்டனர்.

சமஸ்தானத்தில் இருந்த விளைநிலங்கள் இனாம், அயன் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அயன் நிலங்கள் வாரப்பட்டு எனவும் தீர்வைப்பட்டு எனவும் பிரிக்கப்பட்டிருந்தன. வாரப்பட்டு நிலங்களுக்கு விளைபொருளில் குறிப்பிட்ட பங்கு அரசுக்கு பெறப்பட்டது. தீர்வைப்பட்டு நிலங்களுக்கு தீர்வை பணமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வாரப்பட்டு நிலம், அமானி, சுவாமிபோகம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அமானி, நிலங்கள் அரசின் நேரடிப் பொறுப்பிலும், சுவாமிபோக நிலங்கள் நிலக்கிழார்களின்

பொறுப்பிலும் இருந்து வந்தன. அமானி நிலங்கள் குத்தகைக்கு (வராம்) விடப்பட்டன.

அமானி நிலங்களின் வரி வசூல் அமானி என்று அழைக்கப்பட்டது. அமானி நிலங்களுக்கு (வாரம்) அரசின் பங்குத் தொகை எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமானி நிலங்களே அதிகம் இருந்ததோடு அரசு வருமானத்தின் பெரும்பகுதி இதன் மூலமே கிடைத்தது. அமானி முறையிலும், அண்டையிலிருந்த ஜமீன்தாரிகளில் இருந்ததுபோன்று விளைபொருளில் அரசின் பங்கு களத்துமேட்டிலேயே பெறப்பட்டது. ஆனால் அமானி முறை ரயத்துவாரி முறையிலிருந்து மாறுபட்டிருந்தது. ரயத்துவாரி முறையில் விவசாயிக்கு நிலம் சொந்தமாக இருக்க, அமானி நிலங்கள் அரசுக்குச் சொந்தமானதாக இருந்தன. விவசாயிகள் வெறும் குத்தகைக்காரராகவே இருந்தனர்.

அமானி நிலங்களிலிருந்து அரசின் பங்கு உசிதம்போல் வசூலிக்கப்பட்டு வந்தது. மனுதர்ம சாத்திரப்படி, அரசின் பங்கு விளைச்சலில் ஆறில் ஒன்று என்றிருந்தபோதும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஒரு காலத்தில் அரசின் பங்கு, (மேல்வாரம்), நஞ்சை நிலத்திற்கு மூன்றில், ஒரு பங்காகவும், புஞ்சைக்கு சரிபாதியாகவும் பெறப்பட்டது. 1808ல் குடிவாரம் (விவசாயியின் பங்கு) நஞ்சைக்கு 25 முதல் 40 சதவீதமாகவும், புஞ்சைக்கு 50 சதவிகிதமாகவும் இருந்தது. மொத்த விளைச்சலில் 10ல் ஒரு பங்கு, கிராமக் கோயில்கள், காவலர்கள், தச்சர், கொல்லர், சலவையாளர், நாவிதர், குயவர், தண்டல்காரர் ஆகியோருக்கு வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 9 பங்கு மேற்கண்ட விகிதத்தில் பிரித்துக் கொள்ளப்பட்டது.

சில சமயங்களில் அரசே விவசாயிக்கு விதைகளை வழங்கியது. பயிர் செய்யும் செலவு முழுவதும் விவசாயியைச் சேர்ந்தது. அறுவடைக்குத் தயாராக இருக்கும்போது உள்ளூர் மிராஸ்தாரரும், அரசின் உயர் அதிகாரி ஒருவரும் சேர்ந்து, நிலத்தை பார்வையிட்டு அரசின் பங்குத் தொகையை நிர்ணயம் செய்வார்கள். நிலங்களை கிராமக் காவலர்கள் காத்து வருவார்கள். அரசு அலுவலர் ஒருவர் முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டு, அரசின் பங்கு பெறப்படும். இப்படிப் பெறப்படும் அரசின் பங்கான விளைபொருள் விவசாயியின் பொறுப்பிலோ அல்லது அரசுக்குச் சொந்தமான நெற்களஞ்சியங்களிலோ வைக்கப்படும். நெற்களஞ்சியங்கள் கிராமத்தின் மிராஸ்தார் மற்றும் கிரம காவலர் பொறுப்பில் இருக்கும். சாதகமான விலை கிடைக்கும்போது இவை விற்கப்படும்.

அமானி முறையினால் பருவக் கோளாறுகளின் காரணமாக விளைச்சல் குறையும்போது விவசாயிக்கு பாதிப்பு ஏற்படுவதில்லை. அதேபோன்று விளைச்சல் அதிகமாகும்போது அரசுக்கு கூடுதல்

வருமானம் கிடைத்தது. ஆனால் இம்முறையில் பல குறைபாடுகள் இருந்தன. குடிவாரம் ஒரே சீராக இருக்கவில்லை. காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் மாறுபட்டது. விவசாயிகளுக்குள் ஏற்றத்தாழ்வும் சாதகங்களும் பாதகங்களும் நிலவியது. சில சமயங்களில் அரசின் பங்கு சரியாக அரசுக்கு வந்து சேராத நிலையும் இருந்தது.

அமானி முறையில் இருந்த குறைபாடுகளைக் களையும் வண்ணம், விளைபொருளில் ஒரேசீராக அரசின் பங்கை நிர்ணயம் செய்து ப்ளாக்பர்ன் ஆணை பிறப்பித்தார்.

நிர்வாக வசதிக்காக புதுக்கோட்டை சமஸ்தானம், ஆலங்குடி கீழாநிலை, குளத்தூர், கவிநாடு, பெருமாநாடு என ஐந்து தாலுகாக்களாக பிரிக்கப்பட்டது. (புதுக்கோட்டை சமஸ்தானம் புதுக்கோட்டை சீமை எனப் பெயர் பெற்றிருந்ததாகவும், அது ஐந்து தாலுகாக்களாகவும், தாலுகா பல மாகாணங்களாகவும், மாகாணம் பல கசுப்பாக்களாகவும், கசுப்பா பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன என 1813ல் எழுதப்பட்ட புதுக்கோட்டை கணக்காய்வுக் குறிப்பு என்னும் ஓலைச்சுவடி தெரிவிக்கிறது.) இந்த ஓலைச்சுவடி தற்போது புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

கிராமங்களுக்குச் செல்லும் அரசு அலுவலர்கள், தங்கி இருந்து தங்கள் பணியை கவனிக்கும் வண்ணம் பல சாவடிகள் (கச்சேரி) கட்டப்பட்டன. அரசு பணிகள் அனைத்தும் இந்த கச்சேரியில் இருந்து நடத்தப்பட வேண்டும் என நடைமுறைப்படுத்தப் பட்டது. ஒவ்வொரு தாலுகா கச்சேரிக்கும், போதுமான அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். கிராமத்தின் கணக்குகளை கவனிக்க ஒவ்வொரு கிராமத்திற்கும், கர்ணம் எனப்படும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். ஆண்டின் இறுதியில் கிராமக் கணக்குகளும், அதன் தொடர்பான அறிக்கைகளும், புதுக்கோட்டையில் உள்ள சிர்க்கிள் தலைமையிலான பதிவு அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசு வரி வசூல் தொகை அனைத்தும் சிர்க்கிள் அலுவலகத்திலேயே செலுத்தப்பட வேண்டும் என்ற நடைமுறையும் ஏற்படுத்தப்பட்டது. தலைமையகத்தில் அரசு காரியங்கள் அனைத்தும் பொதுக்கட்டிடங்களில் நடைபெற வேண்டும் என்றும் அரசுக்குச் சொந்தமான பணம் முழுவதும், அரசு கருவூலத்தில் வைக்கப்பட வேண்டும் என்றும், தேவையான பொழுது மட்டுமே அந்தப் பணம் எடுக்கப்பட வேண்டும் எனவும், நடைமுறைப் படுத்தப்பட்டது. அரசு செலவுகளைக் குறைக்க பல சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1812ல் நீதி நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. புதுக்கோட்டை நகரில் சட்டம், ஒழுங்கை பராமரிக்க, 'கொத்தவால்' என்னும் அலுவலர் நியமிக்கப்பட்டார். அவரது அலுவலகம் கொத்தவால் சாவடி என்றழைக்கப்பட்டது. மக்களிடையே ஏற்படும் வழக்குளை விசாரிக்க, புதுக்கோட்டை நகரில் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் வேத

சாஸ்திரங்கள் படித்த சாஸ்திரி ஒருவரும் இடம் பெற்றார். இது நியாய சபை என வழங்கப்பட்டது. இக்குழு தினந்தோறும், கூடி மக்கள் அளிக்கும் நீதி முறையீட்டு மனுக்களை பெற்று, அது தொடர்பாக, விசாரணை செய்து தங்களது கருத்துக்களை எழுதி வைக்கும். இக்குழுவிற்கு மேலாக உச்ச நீதி மன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. மன்னரும், அவரது முக்கிய உயர் அலுவலர்கள் நால்வரும், முன்பு சொன்ன நீதிக்குழு உறுப்பினர்கள் ஐந்துபேர் ஆகியோர் அடங்கிய இந்த பெரிய குழுவே உச்ச நீதிமன்றமாக செயல்பட்டது. இறுதி முடிவை இந்த உச்சநீதி மன்றமே பிறப்பிக்கும். அதன்படி நியாய சபையின் கருத்துக்கள், வாதி, பிரதிவாதி, முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டது. வாரத்தில் கடைசி நாளில் இந்த உச்சநீதி மன்றம் கூடும்.

1814ல் இந்த நீதி முறை அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை விசாரிக்க, தனித்தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. சிவில் வழக்குகளை விசாரிக்கும் மன்றம் 'நியாய சபை' என்றும், கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் மன்றம் 'தண்ட சபை' என்றும் வழங்கப்பட்டது. மிக சாதாரணமான உரிமையியல், வழக்குகளை 'முத்திர சபை' எனப்படும் மன்றம் விசாரித்தது. இந்த சிவில், கிரிமினல் நீதி மன்றங்களுக்கு தலைமையாக ஒரு தலைமை நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. இதற்கு ஒரு தலைமை நீதிபதியும் நியமிக்கப்பட்டார். முதல் தலைமை நீதிபதியாக, அக்காலத்தில் தஞ்சாவூரில் பிரபல சட்ட நிபுணராக விளங்கிய சக்கரவர்த்தி அய்யங்கார் நியமிக்கப்பட்டார். (இவரது பெயரால் புதுக்கோட்டை நகரில் - சக்கரவர்த்தி அய்யங்கார் சந்து-என்ற பெயரில் ஒரு தெரு விளங்குகிறது.) தலைமை நீதிபதி மன்னரின் ஒப்புதலோடு தீர்ப்புகளை எழுதி அதில் தலைமை நீதிபதியும், மன்னரும், கையொப்பமிட்டு, முத்திரையிட்டனர். மன்னரின் முத்திரை பிரகதாம்பாள் பெயரில் இருந்தது.

விக்னேஸ்வரியா, ஸ்மிருதி சந்திரிகா, ஆகிய இரண்டு நீதி நூல்கள் மேற்கண்ட நீதி மன்றங்களின் நடவடிக்கைகளுக்கு ஆதார நூல்களாக விளங்கின. தீர்ப்பு தமிழில் எழுதப்பட்டது. தீர்ப்பின் பேரில் தொடர் நடவடிக்கையும், முறையாக மேற்கொள்ளப்பட்டது. நீதி வழுவும் நீதிபதிகள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர் என ரெசிடெண்ட் பிளாக்பர்னின் குறிப்புகள் தெரிவிக்கின்றன. கையூட்டுப் பெற்ற நீதிபதி அப்படி பெற்ற தொகையை விட ஓர் மடங்கு அதிகமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும் எனவும் மேலும் அவரை மாட்டின் மீது ஏற்றி, தாரை, தம்பட்டங்களுடன் ஊர்வலமாக புதுக்கோட்டை நகருக்குள் அழைத்துச் சென்று மீண்டும் புதுக்கோட்டைக்குள் வர தடை விதித்து உத்தரவிடப்பட்டது.

1812ம் ஆண்டில் புதுக்கோட்டை நகரில் பெரும் தீ விபத்து ஏற்பட்டு நகரில் பெருத்த சேதம் ஏற்பட்டது. இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு புதிய முறையில் நகரை சீர்படுத்தி அமைக்க

பிளாக்பர்ன் திட்டமிட்டார். இதன்படி அகலமான நேரான, சாலைகளும், கூரை வீடுகளுக்கு பதிலாக ஓட்டு வீடுகளும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டது. வசதி படைத்தவர்கள் தாமாகவே தங்கள் வீடுகளை புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஏழைகளுக்கு தேவையான பண உதவி செய்யப்பட்டது. அரண்மனைக்கும், புதிய கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக புதிய புதுக்கோட்டை நகரம் உருவாகியது. தற்போதைய பழைய அரண்மனையை மையமாக வைத்து கிழக்கு மேற்காக எட்டு வீதிகளும், வடக்கு தெற்காக எட்டு வீதிகளும், நேர் நேராக அமைக்கப்பட்டன.

பிரான்மலையை அடுத்து உள்ள சில இடங்களின் உரிமை குறித்து சிவகங்கைக்கும், புதுகோட்டைக்கும் சர்ச்சை இருந்து வந்தது. பிளாக்பர்ன் இதில் தலையிட்டு அப்பகுதியை இரண்டாகப் பிரித்து இருதரப்பாருக்கும் அளித்தார்.

முந்தைய மன்னர் ராஜா விஜயரகுநாதத் தொண்டைமான் காலத்தில் நடைபெற்ற நாலாவது மைசூர் போரில் புதுக்கோட்டை படைவீரர்கள் காட்டிய வீரத்தைப் பாராட்டி, அப்போர் வீரர்களுக்கு பரிசாக 4452 ஸ்டார் பகோடாவை ஆங்கிலேய அரசு அளித்து இருந்தது. இதை மன்னருக்கு அனுப்பப்பட்ட 'நசார்' என அப்போது நிர்வாகத்தில் இருந்த மாப்பிள்ளை பல்லவராயரும், திருமலை தொண்டைமானும், முடக்கி வைத்துவிட்டனர். பிளாக்பர்னின் முயற்சியால் இத்தொகை போரில் பங்கு பெற்ற போர் வீரர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

இக்காலத்தில் நாடெங்கும் அம்மை நோய் பரவி பலரை பலிகொண்டிருந்த நேரம். தங்களது நம்பிக்கைகளுக்கு எதிராக அம்மை குத்திக் கொள்ள மக்கள் மறுத்துக் கொண்டிருந்த காலம். இந்நிலையில் 1812ல் அம்மை தடுப்பு ஊசி குத்திக் கொள்ளும் பழக்கத்தை புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஏற்படுத்த ஆங்கிலேய அரசு விரும்பியது. முதன் முதலில் மன்னரும் அவரது சகோதரரும் அம்மை தடுப்பு ஊசி குத்திக் கொண்டனர். இதனால், பின்பு மக்களும் அம்மை தடுப்பு ஊசி குத்திக் கொள்ள முன்வந்தனர். 1812ல் மன்னருக்கும் அவரது சகோதரருக்கும் திருமணம் நடைபெற்றது.

புதுக்கோட்டையில் சில இடங்களில் இருந்து கிடைக்கும் நிலத்தடி நீரில் இருந்து உப்பு காய்ச்சி எடுக்கப்பட்டு வந்தது. இந்த உப்புக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. ஆகவே இந்த உப்பு அருகில் உள்ள மாவட்டங்களுக்குக் கடத்தி செல்லப்படும் நிலையும் இருந்தது. இந்த உப்புக் காய்ச்சும் தொழிலை தடை செய்யுமாறு 1813ல் தஞ்சாவூர் கலெக்டர் ஆணை பிறப்பித்தார். இது புதுக்கோட்டையின் பொருளாதாரத்தை வெகுவாக பாதிக்கும் என்றும், ஆங்கிலேய அரசின் மீது மக்கள் கொண்டுள்ள அபிமானத்திற்கும் தீங்கு ஏற்படும் என்றும் ஆங்கிலேய அரசுடன் வாதாடி இந்த ஆணையை ரத்து செய்ய பிளாக்பர்ன் ஆவன செய்தார்.

சமஸ்தானம் முழுவதும் இருந்த நிலங்கள் தரம் பிரிக்கப்பட்டன. முறையாக அளவை செய்யப்பட்டன. இந்த அடிப்படையில் ஒரு நில அளவு புள்ளியியல் கணக்கும் தயாரிக்கப்பட்டது. இதில் சமஸ்தான பகுதிகளில் உள்ள மலைகள், மரம், செடி, கொடிகள், நிலங்கள், அவற்றின் தன்மை அவற்றில விளையும் பொருள்கள், குளங்கள், கோயில்கள், செய்தொழில்கள், ஏற்றுமதி, இறக்குமதி, வியாபாரம் போன்ற பல விவரங்களும் குறித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்கள் அடங்கிய ஓலைச்சுவடியே புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் இருப்பதாகும்.

மக்கள் அறியாமையில் இருந்து விடுபட பல இடங்களில் இலவச பள்ளிகள், அமைக்கப்பட்டு கல்விப் புகட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களுக்கு இலவசமாக ஓலைச்சுவடி புத்தகங்களும் வழங்கப்பட்டன. இவ்வாறாக கல்வி அறிவூட்டும் இயக்கம் சமஸ்தானத்தில் தொடங்கப்புட்டது.

வானம் பார்த்து விவசாயம் செய்து வந்த புதுக்கோட்டையில் தொழிற்சாலைகள் ஏற்படுத்த பிளாக்பர்ன் விரும்பினார். அதன்படி அப்போது இருந்த சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து கறம்பக்குடியில் தனியார் துறையில் ஒரு நீல சாய (இண்டிகோ) தொழிற்சாலை ஏற்படுத்தத் திட்டமிடார். பிளாக்பர்னின் சகோதரர் ஜான் பிளாக்பர்னும், புதுக்கோட்டை மன்னரும், கூட்டாகச் சேர்ந்து இந்த சாய தொழிற்சாலையை ஆரம்பித்தனர். இது 1814-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அவுரி எனப்படும் செடியில் இருந்து எடுக்கப்பட்ட இந்த நீல நிற சாயத்திற்கு இங்கிலாந்தில் நல்ல விலை கிடைத்தது. சில ஆண்டுகள் கழித்து புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள காரைத்தோப்பிலும், இது போன்றதொரு தொழிற்சாலை அமைக்கப் பட்டது. இந்த தொழிற்சாலைகள் 1841-ம் ஆண்டுவரை நடைபெற்று வந்திருக்கிறது. இந்த தொழிற்சாலைகள் இருந்ததற்கான அடையாளங்களை இன்றும் கறம்பக்குடியில் காணலாம்.

1816ல் இலங்கையில் இருந்து சில அரசியல் கைதிகள் ஆங்கிலேய அரசால் புதுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் கண்டியை ஆண்ட கடைசி மன்னர் விக்கிரம ராஜ சிங்காவின் உறவினர்கள். (விக்ரம ராஜ சிங்காவும் கைதியாக இங்கு அனுப்பப்பட்டதாகவும் ஒரு செய்தி உண்டு.) இவர்கள் திருமயம் வட்டத்தில் பல இடங்களில் குடியமர்ந்தனர். இவர்களது சந்ததியினர் பின்பு 'கண்டி ராஜாக்கள்' என்று அழைக்கப்பட்டனர். புதுக்கோட்டை சமஸ்தான அரசு இவர்களுக்கு அரசு மரியாதைகள் அளித்து வந்தது என்று புதுக்கோட்டை தர்பா பதிவுகள் தெரிவிக்கின்றன. கண்டி ராஜாக்கள் என்றழைக்கப்படும் வடுக மரபினர், பூலாம்பட்டி, பனையூர்

ஆகிய இடங்களில் இன்றும் உள்ளனர். விக்ரம ராஜ சிங்கா என்னும் கண்ணுச்சாமி, புதுக்கோட்டை - பூலாம்பட்டியில் பிறந்தவர் என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

1817ல் விஜய ரகுநாதராயத் தொண்டைமான் அரசருக்கான முழு அதிகாரங்களையும் தானே ஏற்றுக் கொண்டு, அரசாளத் தொடங்கினார்.

1822ல், தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் புதுக்கோட்டை தொண்டைமான் ஒரு ஜமீன்தார் நிலையிலேயே இருப்பதாகவும், ஆகவே அவர், சிர்க்கிள் போன்ற பதவிகளை வைத்துக் கொள்ளத் தகுதி இல்லை என்றும் ஆங்கிலேயே அரசுக்குத் தெரிவித்திருந்தார். இந்த தவறான அணுகுமுறையை தவிர்க்க எண்ணிய பிளாக்பர்ன் தஞ்சாவூர் மன்னருக்கு 31.12.1822ல் எழுதிய கடிதத்தில், புதுக்கோட்டை மன்னர் ஆங்கிலேய அரசின் ஆதரவுடன் ஆட்சி நடத்தும் ஒரு சுதேச மன்னர் என்றும் அவரது உள்நாட்டு நீதி, நிதி, இதர நிர்வாக விஷயங்களில் அவருக்கு பூரண உரிமை உண்டு எனவும் அவரை ஒரு ஜமீன்தார் என்று சொல்லலாகாது எனவும் தஞ்சாவூர் மன்னர் அவருக்கு உரிய மரியாதைகளை அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். இப்படி புதுக்கோட்டை மன்னர்களின் உரிமைகளையும், அந்தஸ்தையும், உயர்த்த பிளாக்பர்ன் பெரும் முயற்சி மேற்கொண்டார் என்பதை அறிகிறோம்.

இம்மன்னரது காலத்தில் விராலிமலையிலும், ஆதனக் கோட்டையிலும் விருந்தினர் இல்லங்கள் கட்டப்பட்டன.

1823ல் பிளாக்பர்ன் தனது பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இங்கிலாந்துக்கு பயணமானார். தொண்டைமானின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அவர் இங்கிலாந்து செல்லும் முன், புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகத்தில் திறமை வாய்ந்த அலுவலர்களையும், ஆலோசகர்களையும், நியமித்து விட்டுச் சென்றார். அவரது சகோதரரும், அவருடன் செல்ல வேண்டி இருந்ததால், சாய தொழிற்சாலைகளின் முழு பொறுப்பும் மன்னரிடமே ஒப்படைக்கப்பட்டன.

1825ல் விஜய ரகுநாதராயத் தொண்டைமான் தன்னுடைய 28வது வயதில் இயற்கை எய்தினார். அவருக்குப் பிறகு அரசு பொறுப்பு ஏற்க அவருக்கு பிள்ளைகள், (வாரிசு) யாரும் இல்லை. ஆகவே அவரது தம்பி ரகுநாதத் தொண்டைமான் பகதூர் அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

விஜயரகுநாத ராயத் தொண்டைமான் இறந்ததும் அவரது மனைவியர் அவருடன் உடன்கட்டை ஏற விரும்பினர். ஆனால் ரகுநாதத் தொண்டைமானின் முயற்சியால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. இச்செயலுக்காக ஆங்கிலேய அரசு ரகுநாதத் தொண்டைமானை வெகுவாகப் பாராட்டி உள்ளது.

# 14. ராஜா ரகுநாதத் தொண்டைமான் பகதூர் (1825 - 1839)

1825-ஜூலை மாதம் 20ம் நாள் ராஜா ரகுநாதத் தொண்டைமான் பகதூர் புதுக்கோட்டையின் மன்னராக நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் நல்ல புலமை மிக்கவர். இவர் பொறுப்பேற்றுக் கொண்டதும் தனது சகோதரரின் நினைவாக புதுக்கோட்டை நகருக்குக் கிழக்கே நான்கு மைல் தொலைவில் இருபது வீடுகள் கொண்ட அக்ரஹாரம் ஒன்றை ஏற்படுத்தினார். இது விஜய ரகுநாத புரம் என்று அழைக்கப்பட்டது. அதை அடுத்து தனது தந்தையின் நினைவாக மற்றொரு அக்ரஹாரத்தை ஏற்படுத்தி அதற்கு பிரசன்ன ரகுநாதபுரம் என்று பெயரிட்டார். இப்பெயர்கள் இன்றும் இவ்விடங்களுக்கு வழங்குகின்றன.

நாட்டில் அப்பொழுது இருந்த கொடிய வறட்சி நிலையிலும் அக்ரகாரங்கள் கட்டுதல், தீர்த்த யாத்திரைகள் செல்லுதல், போன்ற செலவினங்களால் நாட்டின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இது குறித்து ஆங்கிலேய அரசும் தனது கவலையை தெரிவித்திருந்தது. இங்கிலாந்து சென்றும், புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தின் மீது கொண்டிருந்த அபிமானத்தினால், பிளாக்பர்ன், அவ்வப்போது கடிதத் தொடர்பு கொள்ளும்போதெல்லாம் இதுபோன்ற செலவுகளை தவிர்க்குமாறு மன்னருக்கு அறிவுரை வழங்கி வந்தார்.

1826ல் சென்னை கவர்னர் தாமஸ் மன்றோவை தொண்டைமான் சந்தித்து உரையாடினார். இந்த சந்திப்பு விராலிமலையில் நடைபெற்றது. மன்னரின் ஆங்கில மொழிப் புலமையைக் குறித்து கவர்னர் புகழ்ந்துரைத்துள்ளார். 1829ல் மன்னருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இவரது காலத்தில் உள்நாட்டு நீதி நிர்வாகத்தில் மன்னருக்கு உள்ள அதிகாரம் குறித்து ஆங்கிலேய அரசு மட்டத்தில் ஒரு சர்ச்சை எழுந்தது. இறுதியாக அப்போது இருந்த நீதி நிர்வாகத்தில் மன்னரின் பூரண உரிமைகளில் எந்தவித மாற்றமும் செய்ய ஆங்கிலேய அரசு விரும்பவில்லை.

1833ல் ரகுநாத தொண்டைமானுக்கு ''ஹிஸ் எக்ஸலன்ஸி'' (His Excellency) என்ற விருது ஆங்கிலேய அரசால் வழங்கப்பட்டது. தொண்டைமானின் செல்வாக்கை இது உயர்த்திக் காட்டியது. இந்த விருது கிடைப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பிளாக்பர்ன் ஆவார். சென்னையில் கவர்னராக இருந்த லூஸிங்டன் தொண்டைமானின் தந்தை காலத்தில் மதுரை கலெக்டராக இருந்தவர். அப்போது கவர்னர் ஜெனரல்

ஆக இருந்த வில்லியம் பெண்டிங் சென்னை கவர்னர் ஆக இருந்தவர். ஆகவே இவர்கள் அனைவரும் இணைந்து ஆலோசித்து இந்த உயரிய விருதை தொண்டைமானுக்கு அளித்தனர் என்று சொல்லலாம்.

இம்மன்னரது காலத்தில், நாட்டில் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு கொண்டு செல்லப்படும் பொருள்கள் மீது சுங்கம் வசூலிப்பது வழக்கமாக இருந்தது. இதற்கு ''சாயர் வரி'' என்று பெயர். சோழர் காலத்தில் இது 'வழி ஆயம்' என்று அழைக்கப்பட்டது. ஆற்காடு நவாபும் தொண்டைமானும் தங்கள் ஆட்சிப்பகுதிகளில் இவ்வரிகளை வசூலித்து வந்தனர். கர்நாடகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேயர் எடுத்துக் கொண்டதும் இந்த வரிகள் அவர்களது வியாபாரத்திற்கு தொல்லையாக இருப்பதை உணர்ந்தார்கள். எனவே ஆங்கிலேயரின் வேண்டுகோளின்படி புதுக்கோட்டையிலும் இந்த வரி மாற்றி அமைக்கப்பட்டது.

ரகுநாத தொண்டைமான் பகதூர் காலத்தில் போர் எதுவும் நிகழாமல் அமைதியாக இருந்தது. ஆகவே இசை, நாட்டியம், இலக்கியம், ஆகியன நன்கு வளர்ச்சியுற்றன. பல கவிஞர்களும், இசை மேதைகளும், அரச சபையை அலங்கரித்தனர். வீணை கிருஷ்ண அய்யர், வீணை சுப்புக்குட்டி அய்யர், மாத்ருபூதம் அய்யர், ராமு சாஸ்திரி, திருகோகர்ணம் சுப்புராம அய்யர் ஆகியோர் இசைமேதைகளுள் சிலர் ஆவர்கள். வயலின், டோலக், சுரபத் ஆகிய இந்துஸ்தானி இசைக் கருவிகளில் தேர்ச்சி பெற்ற பல முஸ்லீம் கலைஞர்களும் இருந்தனர்.

பிளாக்பர்ன், தஞ்சாவூரில் இருந்து சைரோப் நாயக் போன்ற மராத்திய அதிகாரிகளை சமஸ்தானத்தில் நியமித்ததால் அரசு கணக்குகள் அனைத்தும் மராத்தி மொழியில் எழுதப்பட்டு வந்தது:

1838ல் காவேரியில் இருந்து தண்ணீர் கொண்டுவர புதுக்கோட்டைக்கு ஒரு கால்வாய் வெட்டத் திட்டமிடப்பட்டது. இதற்காகும் செலவைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை ஆங்கிலேய அரசு ஒத்திவைத்தது. இந்த ஆண்டில் புதுக்கோட்டையில் முதல் தபால் நிலையம் தொடங்கப்பட்டது. இந்த தபால் நிலையம் வெளியூர்களில் இருந்து வரும் தபால்களையும், பார்சல்களையும் மற்றுமே பட்டுவாடா செய்து வந்தது.

ராஜா ரகுநாத தொண்டைமான் பகதூர் 1839 ஜூலை 13ல் இயற்கை எய்தினார். இவரது நற்பண்புகளை ஆங்கிலேய அலுவலர்கள் பலர் பாராட்டிக் குறிப்புகள் எழுதியுள்ளனர். இவரை அடுத்து இவரது மூத்த புதல்வர் ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் மன்னரானார்.

# 15. ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் பகதூர் (1839 - 1886)

ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் பகதூர் பட்டத்திற்கு வரும்போது 9 வயதே நிரம்பியிருந்தது. ஆகவே அரசு நிர்வாகத்தை கவனிக்க ஆங்கிலேய அரசு ஒரு குழுவை நியமித்தது. காலம் சென்ற மன்னரின் விருப்பப்படி இக்குழுவில் சிர்க்கிள் சைரோப் நாயக், பவுஸ்தார் அப்பா அய்யர், ராணி கட்டக்குறிச்சி ஆயி (கமலாம்பாள் ராணி சாகிபா) ஆகியோர் இருந்தனர். சைரோப் நாயக்கும், அப்பா அய்யரும் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாக இருந்தனர். இவர்களது உறவினர்கள் பலர் அரசின் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர். அரசு நிர்வாகம் சில ஆண்டுகள் திருப்திகரமாகவே செயல்பட்டு வந்தது.

அரசு நிர்வாகத்தின் உறுப்பினரான பவுஸ்தார் அப்பா அய்யர் மீது சில குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு புகார் மனுக்கள் சென்னை கவர்னருக்கு அனுப்பப்பட்டன. புகார் செய்தவர்களில் காலம் சென்ற மன்னரின் மாப்பிள்ளைகளும், ராணியின் உறவினர்களும் இருந்தனர். இந்த புகார்களின் காரணமாக தஞ்சாவூரின் ரெசிடெண்ட் புதுக்கோட்டையில் அதிக நாட்கள் தங்கி இருந்து அரசு காரியங்களை கவனித்து வரவேண்டும் என ஆங்கிலேய அரசு உத்தரவிட்டது. மேலும் அப்போது ரெசிடெண்டாக இருந்த பெயிலி, அரசு நிர்வாகத்தை கவனிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து சில புதிய விதிகளையும் நடைமுறைப்படுத்தினார். அதன்படி அரசில் நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும், ஆங்கிலேய அரசின் முன் அனுமதியின்றி யாருக்கும் விருதுகளோ, பரிசுகளோ, (100 ரூபாய்க்கு அதிகமாக) வழங்கக் கூடாது எனவும், யாருக்கும் நிலபுலன்கள் இனாம் அளிக்கக்கூடாது எனவும், அரசு அலுவலர்களின் சம்பளத்தை கூட்டவோ, குறைக்கவோ கூடாது எனவும், புது வரிகள் விதிக்கக்கூடாது எனவும் நடைமுறை வகுக்கப்பட்டது.

1844ல் மன்னர் பூரணமாக ஆட்சிப் பொறுப்பை தானே ஏற்றுக் கொண்டார். 1845ல் மன்னருக்கும் அவரது சகோதரருக்கும் திருமணம் நடைபெற்றது. கல்லாக்கோட்டை ஜமீன்தாரின் இரு பெண்களையும், இவர்கள் மணந்து கொண்டனர். இத் திருமணத்திற்கு ஆங்கிலேய அரசு தமது பொலிட்டிக்கல் ஏஜண்டை அனுப்பி மன்னருக்கு இரண்டு வெண்சாமரங்கள் பரிசளித்தனர். இத் திருமணத்திற்கு பிறகு 1848ல் மன்னர் நெடுவாசல் ஜமீன்தார் மகளையும் திருமணம் செய்து கொண்டார்.

1847வரை புதுக்கோட்டையின் ரெசிடெண்ட் பொறுப்பு தஞ்சாவூர் கலெக்டர் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1848ல் அதில் மேலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டு மதுரை கலெக்டர் வசம்

ஒப்படைக்கப்பட்டது. மதுரை கலெக்டர் தொண்டைமான் அரசுக்கும், ஆங்கிலேய அரசுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக விளங்கினார். புதுக்கோட்டையின் அரசியல், பொருளாதார, விஷயங்கள் குறித்து கலெக்டர்கள் பெரிதும் அக்கறை காட்டினர். பின்பு ரெசிடெண்ட் என்பதற்கு பதிலாக இவர்கள் பொலிட்டிக்கல் ஏஜண்ட் (Political Agent) என்று அழைக்கப்பட்டனர். அப்போது மதுரை கலெக்டராக இருந்தவர் ஜான் பிளாக்பர்ன் என்பவர் ஆவார். இவர் புதுக்கோட்டையின் அரசு நிர்வாகம் திறம்பட நடைபெற பல முயற்சிகளை மேற்கொண்டார். இவர் மன்னரிடத்திலும் மிகவும் அன்புடன் பழகினார். மன்னர் இவரை 'சித்தப்பா' என்று அழைத்தார். 1851ல் புதுக்கோட்டையில் பொது மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டது. இதற்கு ஜான் பிளாக்பர்னின் பெயர் சூட்டப்பட்டது. தற்போதைய பொது மருத்துவமனையில் உள்ள பெயர்க்கல்லில், இன்றும், இவரது பெயரோடு (uncle) என உள்ளதைக் காணலாம்.

1848ல் அப்பா அய்யரின் மகன் அன்னாசாமி அய்யர், பவுஸ்தாராக நியமிக்கப்பட்டார். 1851ல் சைரோப் நாயக்கின் மகன் கோபால் நாயக் உதவி சிர்க்கிளாக நியமிக்கப்பட்டார். பின்பு 1854ல் அன்னாசாமி அய்யர் சிர்க்கிளாக நியமிக்கப்பட்டார். ஆங்கிலேய கணக்குமுறையை புதுக்கோட்டையில் அமுல்படுத்த ராமசாமி அய்யர் என்பவர் நியமிக்கப்பட்டார்.

1854ல் மன்னருக்கு எதிராக புதுக்கோட்டையில் ஒரு கிளர்ச்சி எழுந்தது. இதுபோன்ற பொது மக்களின் கிளர்ச்சி இங்கு நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். மன்னர் சிலரது தவறான ஆலோசனைகளை கேட்டு நிர்வாகத்தை நடத்த, நிர்வாகம் வேறு திசையில் சென்றுக் கொண்டிருந்தது. ஆங்கிலேய அரசின் பிரதிநிதியான (பொலிட்டிக்கல் ஏஜண்ட்) பலமுறை எச்சரித்தும் பலன் இல்லாமல் போய்விட்டது. மன்னர் நிறைய கடன் வாங்கி தொல்லைக்கு உள்ளாகி இருந்தார். இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் குழப்பம் ஏற்பட்டது. இந்த சூழ்நிலையில்தான் பொது மக்களின் கிளர்ச்சியும் எழுந்தது. இந்த கிளர்ச்சியை முன் நின்று நடத்தியவர் வெங்கண்ண சேர்வைக்காரர் என்பவர் ஆவார். மேலும் மன்னரின் நெருங்கிய உறவினர்களான கட்டக்குறிச்சி கிருஷ்ணசாமி பன்றிக்கொண்டார், முத்துசாமி பன்றிக்கொண்டார், போன்றோரும் இந்த கிளர்ச்சிக்கு ஆதரவாக இருந்தனர். முந்தைய மன்னர் ரகுநாத ராயத் தொண்டைமான் பகதூர் காலத்தில் அரசு பணியில் இருந்த வெங்கண்ண சேர்வைக்காரர், அவரது ஒழுங்கீன நடவடிக்கைக்காக அரசுப் பணியில் இருந்து நீக்கப்பட்டவர். அவர் சில ராணுவப் பணியாளர்களையும் (அமரக்காரர்) பொதுமக்களையும், தம்முடன் சேர்த்துக் கொண்டு கிளர்ச்சியில் இறங்கினார். ராணுவத்தினர் தங்களது சேவையை செய்ய வேண்டாம் எனவும், அரசுக்குச் சேரவேண்டிய வரிகளை செலுத்த வேண்டாம்

எனவும் அரசு நிலத்தில் பயிரிடும் விவசாயிகள் அரசின் பங்கை செலுத்த வேண்டாம் எனவும் கிளர்ச்சியாளர்கள் பொதுமக்களை கேட்டுக் கொண்டனர். இக்கிளர்ச்சிக்கு ஓரளவு ஆதரவு இருந்தது என்றே சொல்ல வேண்டும்.

நாளுக்கு நாள் வலுவடைந்து வந்த இந்த கிளர்ச்சி ஓராண்டுக்காலம் நடைபெற்றதாக தெரிய வருகிறது. நிலமையை கட்டுக்குள் கொண்டு வரவும், கலகக்காரர்களை அடக்கவும், ஆங்கிலேய ராணுவம் வரவேண்டி இருந்தது. கிளர்ச்சி அடக்கப்பட்டதும் மன்னருக்கு நெருங்கிய உறவினரான கட்டக்குறிச்சி கிருஷ்ணசாமி பன்றிக் கொண்டாருக்கு, அளிக்கப்பட்டிருந்த ஜீவித நிலம் பறிக்கப்பட்டு, அவர் மதுரைக்கு அனுப்பப்பட்டார். மன்னரின் மைத்துனர் முத்துசாமி பன்றிக்கொண்டாருக்கு அளிக்கப்பட்டிருந்த உதவிப் பணம் நிறுத்தப்பட்டது. ஜீவித நிலம் வைத்திருந்த கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து அவை பறிக்கபட்டன. மற்றும் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த கிளர்ச்சிக்கு சரியான காரணம் என்னவென்று காண இயலவில்லை. மன்னரது அடக்குமுறைகள் தான் காரணம் என்று பொதுவாக பேசப்பட்டது. ஆனால் மன்னரது உறவினர்கள் இந்தக் கிளர்ச்சியை முன்னின்று நடத்தியிருப்பதில் இருந்து இது அவர்களது குடும்பத்தினுள் ஏற்பட்ட (ஆதிக்கப் போட்டி) குழப்பத்தின் விளைவாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இருப்பினும், கிளர்ச்சியின் காரணங்களை கண்டறிந்து அறிக்கை அளிக்குமாறு பொலிடிக்கல் ஏஜண்ட், பார்க்கர், கேட்டுக்கொள்ளப்பட்டார்.

பார்க்கர், 1854 செப்டம்பர் மாதம் 1ம் தேதியிட்ட தனது அறிக்கையில் (No.122 political) மன்னர் மீது சொல்லப்பட்ட அடக்குமுறை குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்றும், ஆனால் மன்னரது சில கடுமையான பொருத்தமற்ற நடவடிக்கைகள் கிளர்ச்சிக்கு காரணமாக அமைந்தன என்றும், குறிப்பிட்டு இருந்தார். மேலும் அரசு நிதியை மன்னர் நேரடியாகக் கையாள அனுமதிக்கக்கூடாது என்றும் தெரிவித்திருந்தார். இதன்படி மன்னரின் அதிகாரம் குறைக்கப்பட்டது. அவரது செலவுக்குக் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டது. பொலிடிக்கல் ஏஜண்டுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டு, நிர்வாகத்தில் பங்கு அளிக்கப்பட்டது. இவரது கட்டுப்பாட்டின் கீழ் மன்னர் செயல்பட்டார் என்று சொல்வது பொருந்தும். ஆனால் நீதி நிர்வாகத்தில் மட்டும் மன்னருக்கு இருந்த அதிகாரம் தொடர அனுமதிக்கப்பட்டிருந்தது.

கேப்டன் வில்லியம் பிளாக்பர்ன் புதுக்கோட்டை ரெசிடெண்டாக இருந்தபோது, தஞ்சாவூரில் இருந்து மராத்திய அலுவலர்கள் பலரை புதுக்கோட்டை சமஸ்தானத்தின் முக்கிய பதவிகளில் அமர்த்தியிருந்தார். இதன் காரணமாக அரசின் ஆவணங்கள், கடிதப் போக்குவரத்து, கணக்குகள், ஆகிய அனைத்தும் மராத்திய மொழியிலேயே எழுதப்பட்டு வந்தன. இதற்கு ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்பு இருந்து வந்தது.

ஆகவே 1858ல் மராத்திய மொழி அரசு நிர்வாகத்தில் பயன்படுத்தப் படுவதை நிறுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் 1864 முதல் தான் இந்த ஆணையை செயல்படுத்த முடிந்தது. 1875 வரை மராத்திய அதிகாரிகளின் செல்வாக்கு புதுக்கோட்டையின் நிர்வாகத்தில் தலைதூக்கி நின்றதாக ஆங்கிலேயரின் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

1855 மற்றும் 1857ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அரசு தொழில் மற்றும் வர்த்தக் கண்காட்சிகளில் புதுக்கோட்டையும் பங்கு பெற்று, பல பரிசுகளைப் பெற்றது.

1858ல் மன்னரின் இளைய ராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் அக்குழந்தை 1864ல் அம்மை நோய்க்கு பலியானது.

1857ம் ஆண்டில் புதுக்கோட்டை மன்னருக்கு அளிக்கப்பட்டு இருந்த ''ஹிஸ் எக்ஸலன்சி'' விருது திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டது. மன்னர் மிக அதிகமாக செலவுகள் செய்து கடனில் மூழ்கி இருப்பதால், அப்படிப்பட்டவர் இத்தகையதொரு விருதை வகிக்க தகுதியில்லை என்று ஆங்கிலேய அரசு தெரிவித்திருந்தது.

1824ல் கவர்னர் ஜெனரல், தொண்டைமானுக்கு ஒரு சன்னது அனுப்பி வைத்தார். அதன்படி மன்னருக்கு வாரிசு இல்லாத பொழுது சுவீகாரம் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இம்மன்னரது காலத்தில் வரிச்சுமை சற்று அதிகமாக இருந்ததாக அறிகிறோம். 1854ல் பல வரிகள் நீக்கப்பட்டன. அப்போது நடைபெற்ற கிளர்ச்சிகள் இதற்கு காரணமாக இருக்கலாம். காட்டுவரி, ஏற்றவரி, செக்குவரி, வளையல்வரி, சாயவரி, எண்ணெய் வரி, சுண்ணாம்புவரி, பொடிவரி, பயன்தராத மரங்களுக்கான வரி, ஆகியன நீக்கப்பட்ட வரிகளுள் சிலவாகும். 1862ல் வரி விதிப்பு முறை மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டது. புதிதாக கொண்டு வரப்பெற்ற வரி விதிப்பு முறைக்கு மொஹ்தர்பா என்று பெயர். இதன்படி புதுக்கோட்டையில் உள்ள ஒரு தார்சு வீட்டிற்கு ஒரு ரூபாயும், ஓட்டு வில்லை வீட்டிற்கு எட்டு அணாவும், கூரை வீட்டிற்கு நான்கு அணாவும் வரியாக விதிக்கப்பட்டது. இந்த வரி விதிப்பிற்கும், மக்களிடையே கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. சில ஏழை, எளிய மக்கள் தங்களது குடிசைகளை விட்டு வெளியேறி, சிர்க்கிளின் வீட்டிற்கு அருகில் பலநாட்கள் தங்கியிருந்து ஒரு போராட்டத்தை நடத்தினர். தற்காலிகமாக இவ்வரிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. ஆனால் 1874ல் மீண்டும் இவ்வரிகள் விதிக்கப்பட்டன.

1854ல் சிர்க்கிளாக பொறுப்பேற்றுக் கொண்ட அண்ணாசாமி அய்யர், மன்னரின் கோபத்துக்கு உள்ளானார். இதன் காரணமாக சிர்க்கிளின் ஆலோசனை இன்றியே, கர்பார், ஜம்புநாயக் போன்றோரின் ஆலோசனையின்படி, மன்னர் தம்போக்கில் நிர்வாகத்தை நடத்தி வந்தார். இந்த நடைமுறை சரியில்லை என்று பொலிட்டிக்கல் ஏஜண்ட் சுட்டிக் காட்டியும், மன்னர் கேட்பதாக இல்லை. 1863ல் மன்னர்-சிர்க்கிள்

சர்ச்சை முற்றியது. மன்னரது அனுமதி இன்றி சிர்க்கிள் புதுக்கோட்டையை விட்டு செல்லக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும் அவர் மீது முறையான குற்றச் சாட்டுகளும் தொடுக்கப்பட்டன. இந்நிலையில் அன்னாசாமி அய்யர் தனது சிர்க்கிள் பதவியை ராஜிநாமா செய்ததால் அவர் மீதான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. மேலும் அவர் வைத்திருந்த ஏராளமான சொத்துக்களையும், அரசு நிலங்களையும், அவரே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. பல முக்கிய உயர் பதவிகளுள் இருந்த அவரது உறவினர்களும், அப்பதவிகளில் தொடர அனுமதிக்கப்பட்டனர். 1863ல் பவானி சங்கரராவ் என்பவர் சிர்க்கிளாக நியமிக்கப்பட்டார்.

மன்னரின் நெருங்கிய உறவினர்கள் (மொகலாய ஆட்சி பாணியில்) ஜாகிர்தார்களாக நியமிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. குறிப்பிட்ட நிலங்கள், இவர்களது பொறுப்பில் விடப்பட்டன. அதிலிருந்துக் கிடைக்கும் வருமானம் முழுவதும் அவர்களைச் சாரும். அந்த நிலங்களை அவர்கள் விற்கவும் கூடும். மேலும் இவர்கள் அரச மரியாதையோடு நடத்தப்பட்டனர். புதுக்கோட்டையில் சின்ன அரண்மனை ஜாகிர், மேல அரண்மனை ஜாகிர் என இரண்டு ஜாகிர்கள் இருந்தன. இம்மன்னரது காலத்தில் இவற்றில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஜாகிர்தார் தன்வசம் உள்ள நிலங்களின் வருமானத்தை மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்றும், மேற்படி நிலங்களை விற்கக் கூடாது என்றும், அந்த நிலங்களுக்கு பொறுப்பு வரி, என்ற வரி செலுத்த வேண்டும் என்றும், (இது புல்வரி என்றும் அழைக்கப்பட்டது) நடைமுறைப்படுத்தப்பட்டது.

சின்ன அரண்மனை ஜாகிரின் பொறுப்பு மன்னரின் சகோதரர் திருமலைத் தொண்டைமான் வசம் இருந்தது. ஆனால் 1864ல் மன்னரே இதன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். திருமலைத் தொண்டைமானுக்கு மீண்டும் அந்த ஜாகிரை வழங்க ஆங்கிலேய அரசு தலையிட வேண்டியிருந்தது. ஜாகிர்தார்களின் வசம் ஒப்படைக்கப்பட்ட காடுகள் அனைத்தும் அரசுக்கு சொந்தமென அறிவிக்கப்பட்டது. மேலும் சின்ன அரண்மனை, மேல அரண்மனை ஜாகிர்களின் நடைமுறையில் இருந்து வந்த சிறப்பு அந்தஸ்துப் பழக்கங்கள், சிலவற்றை நீக்கி உத்தரவிடப்பட்டது. சின்ன அரண்மனை ஜாகிர்தார் திருமலை தொண்டைமானது ஊழியர்கள், அதிகார உரிமையைக் குறிக்கும் கச்சை (பெல்ட்) அணிந்துகொள்ள தடை விதிக்கப்பட்டது. இதே போன்று மேல அரண்மனை ஜாகிர்தார் ராதாகிருஷ்ணத் தொண்டைமான், அரசு அந்தஸ்த்தைக் குறிக்கும், நகரா, நவுபத் போன்ற வாத்தியங்களை உபயோகித்துக் கொள்ள தடை விதிக்கப்பட்டது. இப்படியாக மன்னர் தனது உறவினர்களின் மனக் கசப்பிற்கு, ஆளாகிக் கொண்டிருந்தார்.

இக்காலத்தில் புதுக்கோட்டையின் பொலிட்டிக்கல் ஏஜண்ட்டின் பொறுப்பு தஞ்சாவூர், கலெக்டரிடமும், மதுரை கலெக்டரிடமும், மாறி

மாறி ஒப்படைக்கப்பட்டு வந்தது. 1865 செப்டம்பர் முதல் இந்த பொறுப்பு தஞ்சாவூர் கலெக்டரிடம் விடப்பட்டது.

அப்போது கலெக்டராக இருந்தவர் ஜி. லீமோரிஸ் என்பவராவார். புதுக்கோட்டை சென்று அங்கு உள்ள நிலைமைகளை கண்டறிந்து அறிக்கை அனுப்பும்படி சென்னை கவர்னர் தெரிவித்ததின் பேரில் அவர் புதுக்கோட்டைக்கு வந்து, நிலமைகளை ஆராய்ந்து அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பி வைத்தார். அதில், ராணியின் மூன்று சகோதரர்களையும் உடனடியாக புதுக்கோட்டையை விட்டு வெளியேற்ற வேணடும் எனவும் அவர்கள் இங்கு இருக்கும்வரை அமைதியான, சீரான, நிர்வாகம் நடைபெறாது எனவும் தெரிவித்திருந்தார். இதன்படியே ஆங்கிலேய அரசு ஆணை ஒன்றும் பிறப்பித்தது.

தஞ்சாவூர் கலெக்டரும் புதுக்கோட்டை பொலிட்டிக்கல் ஏஜண்டுமான லீமோரிஸ் அளித்த அறிக்கையின் அடிப்படையில் புதுக்கோட்டையின் நிர்வாக எந்திரத்தை மாற்றி அமைத்து 1867 ஆகஸ்ட் மாதம் ஆங்கிலேய அரசு ஒரு ஆணை நிறப்பித்தது. இதற்கு முன் புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகத்தில் கீழ்கண்ட துறைகளும், அலுவலகங்களும் இருந்தன. 1. சிர்க்கிள் அலுவலகம், 2. வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், 3. கிராம வருவாய் அலுவலர் அலுவலகம், 4. நகரக் காவல், 5. சிறை, 6. அரண்மனைப் பராமரிப்புத் துறை, 7. பொதுப்பணித்துறை, 8. ஆயத்தீர்வை, 9. காடுப் பாதுகாப்பு, 10. நீதித்துறை.

மேற்கண்ட அலுவலகங்களுக்கு குறைந்த சம்பளத்தில் நிறைய ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். லீமோரிஸ் இத்துறைகளில் கீழ்கண்ட சீர்திருத்தங்களை கொண்டு வந்தார். 1. ஐந்து வட்டங்களாக இருந்த சமஸ்தானம் மூன்று வட்டங்களாக மாற்றப்பட்டது. (ஆலங்குடி, கீழாநிலை, குளத்தூர்) 2. அரசு அலுவலர்களின் எண்ணிக்கையும், ஊதியமும் முறைப்படுத்தப்பட்டன. 3. துணைக் கர்பார் பதவியின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது. அவர் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாகவும், ஆயர்தீர்வை உப்பு, இதர வரிகள், தேவஸ்தானம் பொதுப்பணித்துறை, சிறை, ஆகியவற்றின் நிர்வாகங்களையும் கவனிக்க ஏற்பாடு ஆயிற்று. 4. கர்பார் பதவி (மாவட்ட வருவாய் அலுவலர் பதவி போன்றது) முதன்மை மாஜிஸ்ட்ரேட்டாகவும் வருவாய்த்துறையின் மேற்பார்வையாளராகவும் இருந்து வரத் திட்டமிடப்பட்டது. 5. ஒவ்வொரு வட்டத்திலும் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் என்று அழைக்கப்பட்ட, தாசில்தார்களும், புதுக்கோட்டை நகருக்கு துணை மாஜிஸ்ட்ரேட் பதவியில் ஒருவரும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் நீதி நிர்வாகத்தையும் கவனித்து வந்தனர். ஆயத்தீர்வை மற்றும் இதர வரிகள் வசூல் செய்யும் பணியும் தாசில்தார் வசம் ஒப்படைக்கப்பட்டது. 6. புதுக்கோட்டை திருமயம், குளத்தூர் ஆகிய இடங்களில் முன்சீப் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. சிறிய சிவில் வழக்குகளை விசாரிக்க

புதுக்கோட்டை நகரில் ஒரு சிறு வழக்கு நீதி மன்றமும் ஏற்படுத்தப்பட்டது. 7. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு வருவாய் ஆய்வாளர் நியமிக்கப்பட்டார். 8. பவுஸ்தார் பதவி ஒழிக்கப்பட்டது.

லீமோரிசின் மேற்கண்ட சீர்திருத்தங்கள் 1868 முதல் அமுலுக்கு வந்தன. அரசு அலுவலர்களுக்கு போதுமான ஊதியம் அளித்து திறமை வாய்ந்தவர்களை அரசு நிர்வாகத்தில் அமர்த்தியதும் வருவாய் மற்றும் நீதித்துறைகளை, ஆங்கிலேயே ஆட்சிப் பகுதிகளில் உள்ளது போன்று மாற்றி அமைத்ததும் இவரது திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

ராஜா ராமச்சந்திர தொண்டைமான் தாறுமாறாக செலவழித்து $5^1/_2$ லட்சம் ரூபாய்க்கு கடனாளியாக இருந்ததைக் காரணம் காட்டி மன்னருக்கு அளிக்கப்பட்டிருந்த 'ஹிஸ் எக்சலன்சி' விருது பறிக்கப்பட்டது. 1870ல் எடின்பரோ கோமகனின் சென்னை வருகையை முன்னிட்டு பறித்துக் கொள்ளப்பட்ட ''ஹிஸ் எக்ஸலன்சி'' விருது மீண்டும் அளிக்கப்பட்டது. மேலும் திருச்சியிலும், சென்னையிலும் மன்னருக்கு 13 குண்டுகள் முழங்கி மரியாதை வழங்கவும், ஆணை பிறப்பிக்கப்பட்டது. எடின்பரோ கோமகனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் பொருட்டு மன்னரை சென்னைக்கு வரும்படி ஆங்கிலேய அரசு கேட்டுக் கொண்டது. அதற்கான செலவினங்களுக்கு ரூபாய் 20,000/-மும் ஒப்பளிப்பு செய்தது. அதன்படி ராமச்சந்திரத் தொண்டைமான் எடின்பரோ கோமகனை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். 1870ல் வழங்கப்பட்ட 13 குண்டுகள் முழங்கி மரியாதை அளிக்கும் பழக்கம் 1873ல் ரத்து செய்யப்பட்டது.

தொண்டைமான் மன்னர்கள் ஆங்கிலேயருக்கும், அவர்களது ஆட்சி இந்தியாவில் நிலைபெறுவதற்கும் எவ்வளவோ உதவிகள் செய்துள்ளனர். இதன் காரணமாகவே ஆங்கிலேயே அரசில் அவர்களுக்கு மிகுந்த செல்வாக்கும், மரியாதையும் இருந்தது. தொண்டைமான் மன்னர்களது பணி மிக மகத்தானது என ஆங்கிலேயரின் பதிவுகள் பலவாறு பாராட்டினாலும், ஏதோ காரணம் காட்டி 'ஹிஸ் எக்சலன்சி' விருது பறிக்கப்பட்டது. மன்னர் கடனாளியாக இருந்தார் என்பது மட்டும் இதற்குக் காரணமாக இருக்க முடியாது. 1857ல் நடைபெற்ற சிப்பாய் கலகத்தைத் தொடர்ந்து சுதேச சமஸ்தான மன்னர்களையும் அடக்கி ஒடுக்கி வைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே (ஒட்டு மொத்தமாக அனைத்து சுதேச சமஸ்தான மன்னர்களும் நடத்தப்பட்டது போன்று) புதுக்கோட்டை மன்னரையும், இவ்வாறு நடத்தியிருக்க வேண்டும். இதுபோன்ற நடவடிக்கையின் ஒரு பகுதிதான் விருது பறிக்கப்பட்ட நிகழ்ச்சி.

1874 முதல் தஞ்சாவூர் கலெக்டரிடம் இருந்து வந்த புதுக்கோட்டை பொலிட்டிக்கல் ஏஜண்ட் பொறுப்பு திருச்சிராப்பள்ளி கலெக்டருக்கு மாற்றப்பட்டது. அப்போது பென்னிங்டன் என்பவர் திருச்சி கலெக்டராக இருந்தார். புதுக்கோட்டையின் . நிர்வாக

குறைபாடுகளை கண்டறிய இரண்டு மூன்று மாதங்கள் புதுக்கோட்டையிலேயே தங்கி இருந்து அறிக்கை அனுப்புமாறு ஆங்கிலேய அரசு ஆணையிட்டது. (No.448-3.11.1874) 1875ல் பென்னிங்டன் ஆங்கிலேயே அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்தார்.

பென்னிங்டன், 25.4.1875 நாளிட்ட தனது அறிக்கையில் மன்னர் கடனில் மூழ்கி இருப்பது குறித்து அதிகமாக விமர்சனம் செய்து எழுதியிருந்தார். இவ்வறிக்கையை பரிசீலித்தபின், மன்னருடைய செலவுக்கு குறிப்பிட்ட தொகை மட்டும் மானியம் வழங்கப்படும் என அரசு முடிவு செய்துள்ளதால் (No.138 - 4.4.1875) இதுபற்றி அதிகம் கவலைகொள்ளத் தேவையில்லை என்றும், மன்னரது கடன்களை சமஸ்தான அரசின் உபரி நிதியிலிருந்து கொடுப்பது இதுவே கடைசி முறையாகும் எனவும் ஆங்கிலேயே அரசு அறிவித்தது. (No.703-15.12.1875) மேலும் மன்னர் நீதி நிர்வாகத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும், பென்னிங்டன் கருத்து தெரிவித்திருந்தார். ஆனால் இதற்கு ஆங்கிலேய அரசு இசைவு தெரிவிக்கவில்லை.

1857ல் புதுக்கோட்டை நகரில் ஒரு இலவச ஆங்கில, தமிழ்ப் பள்ளி தொடங்கப்பட்டது. 1872ல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முதன்முறையாக எடுக்கப்பட்டது. அம்மை தடுப்பு ஊசி குத்துவதற்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு பணிக்கு வருபவர்கள் அம்மை தடுப்பு ஊசி குத்தியிருக்க வேண்டும் என்று 1875ல் விதி இயற்றப்பட்டது. ஆயுள் தண்டனைக் கைதிகள் 30 ஆண்டுகளுக்கு மேல் சிறையிலிருந்தனர். இவர்களை விடுதலை செய்யும் திட்டத்திற்கு ஆங்கிலேய அரசு அனுமதி வழங்கவில்லை.

1875 நவம்பர் மாதத்தில் புதுக்கோட்டையில் பத்திரப்பதிவு முறை கொண்டு வரப்பட்டது. அதே ஆண்டில் நார்த்தாமலை, கொன்னையூர் ஆகிய இடங்களில் உள்ள மாரியம்மன் கோவில்களில் வேண்டுதல் நிமித்தம் பக்தர்கள் ஊக்குகளிலிருந்து தொங்கவிடப்படுவது (hook swinging) தடை செய்யப்பட்டது. ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்த அண்டை மாவட்டங்களில் உள்ளதுபோன்று காவல்துறை திருத்தியமைக்கப்பட்டது. சமஸ்தானம் முழுவதும் 16 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன.

1876 முதல் 1878 வரை புதுக்கோட்டையில் பெரும் வறட்சியும், பஞ்சமும் நிலவியது. அரசு பலவகையான நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. தஞ்சாவூரில் இருந்து அரிசி, மொத்தமாக வாங்கப்பட்டு, அடக்க விலைக்கே மக்களுக்கு விற்கப்பட்டது. கஞ்சி தொட்டிகளும் திறக்கப்பட்டன. 8 ரூபாய்க்கு குறைவாக ஊதியம் பெற்று வந்த அரசு ஊழியர்களுக்கு 1 ரூபாய் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது.

1875 டிசம்பர் 10ம் நாள் வேல்ஸ் இளவரசர், மதுரைக்கு விஜயம் செய்திருந்தபோது மன்னர் அவரை சந்தித்து உரையாடினார். இளவரசரின் வருகையின் நினைவாக மன்னருக்கு மெடல் ஒன்று பரிசளிக்கப்பட்டது. இங்கிலாந்தின் பேரரசியான விக்டோரியா ராணி "மகாராணி" என்ற விருதை சூட்டிக்கொள்ள இருந்ததை கொண்டாடும் வகையில், புதுக்கோட்டையில் 1877ல் ஒரு சிறப்பு தர்பார் கோலாகலமாக நடத்தப்பட்டது. ஆயுள் கைதிகள் பலர் விடுவிக்கப் பட்டனர்.

ராஜா ராமச்சந்திரத் தொண்டைமானுக்கு ஆண் குழந்தை பிறந்து இறந்து விட்டது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆகவே வாரிசாக ஒருவரை சுவீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் மன்னருக்கு ஏற்பட்டது.

மன்னரின் சகோதரர் திருமலைத் தொண்டைமானுக்கு பாலசுப்பிரமணிய ரகுநாதத் தொண்டைமான் என்ற குமாரர் இருந்தார். மன்னர் அவரை வாரிசாக எடுத்துக் கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மன்னர் தனது மூத்த மகளின் மகனை சுவீகாரம் எடுத்துக் கொள்ள முடிவு செய்தார்.

வாரிசு இல்லாதபோது சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் சிறப்பு உரிமையைத் தொண்டைமான் மன்னர்களுக்கு, ஆங்கிலேயே அரசு வழங்கி இருந்தது. அதன்படி சுவீகாரம் எடுத்துக் கொண்ட விவரத்தை ஆங்கிலேய அரசுக்கு தெரிவித்து அரசின் அங்கீகாரம் பெற வேண்டும். இந்த நடைமுறைப்படி, தனது மூத்த மகள் பிரகதாம்பாள் அம்மணியின் (கணவர் பெயர் குழந்தைசாமி பல்லவராயர்) மூன்றாவது மகன் மார்த்தாண்ட பைரவ பல்லவராயரை 1877ல் தனது வாரிசாக சுவீகாரம் எடுத்துக் கொண்டதை, பொலிட்டிக்கல் ஏஜண்ட் மூலம் ஆங்கிலேய அரசுக்குத் தெரிவித்து, அரசின் அங்கீகாரம் வேண்டப்பட்டது. 1878 ஜனவரி மாதம் 15ம் நாள் இந்தியாவின் கவர்னர் ஜெனரல், மார்த்தாண்ட பைரவப் பல்லவராயரை புதுக்கோட்டை மன்னர் சுவீகாரம் எடுத்துக் கொண்டதை அங்கீகரித்து ஆணை பிறப்பித்தார். மேலும் மன்னரது சகோதரர் மகனுடைய வாரிசு உரிமை வேண்டுகோளும் மறுக்கப்பட்டது. பட்டத்து இளவரசராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மார்த்தாண்ட பைரவ பல்லவராயர், பின்பு மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் என்றே அழைக்கப்பட்டார்.

ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் கலைகளிலும் இலக்கியங்களிலும், மிகுந்த ஆர்வம் உடையவராக இருந்தார். பல மொழிகளில், சரளமாகப் பேசும் திறமை வாய்ந்தவர். கலைஞர்களையும், கற்றோரையும், ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். ஆனால் அப்போது இருந்த அரசின் நிதி நிலைமை இதற்கெல்லாம் சாதகமாக இல்லை. மன்னரது சொந்த செலவுக்காக ஒரு குறிப்பிட்ட தொகைமட்டுமே அரசின் வருமானத்திலிருந்து வழங்கப்பட்டதால்

மேற்கொண்டு ஆகும் செலவினங்களுக்கு இவர் கடன் வாங்கும் நிலைமை ஏற்பட்டது. மன்னரது கையெழுத்து இட்ட பத்திரங்களுக்கு, பெருந்தனக்காரர்கள், தாராளமாக பணம் கொடுத்து வந்தனர். மன்னர் கையெழுத்திட்டப் பத்திரங்களை அவர்கள் சமஸ்தானத்தின் வெளியே இருந்த பெருந்தனக்காரர்களிடம் ஒப்படை செய்துவிட்டு தங்களுக்கு சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டிருந்தனர். பொதுமக்களிடையே இதன் காரணமாக ஒரு தொய்வு இருந்து வந்தது. மன்னருக்கு வெகு ஜன ஆதரவு இல்லாத சூழ்நிலை என்றே சொல்லலாம். இந்நிலையில் புதுக்கோட்டைக்கு திறமை வாய்ந்த ஒரு நிர்வாகி தேவைப்பட்டார். திருவாங்கூர் சமஸ்தான திவானாக இருந்து ஓய்வு பெற்ற சேஷய்யா சாஸ்திரி இதற்கு பொருத்தமானவா என்று பலரும் கருதினர். அதன்படி சேஷய்யா சாஸ்திரி 1878ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எட்டாம் நாள் புதுக்கோட்டையின் சிர்க்கிளாகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

தொண்டைமான் மன்னர் பரம்பரையின் உயர்வுக்கும், புதுக்கோட்டை மக்களின் நல்வாழ்விற்கும், வில்லியம் பிளாக்பர்ன் எந்த அளவு சிறப்பான சேவைகள் செய்து உள்ளார் என்பதை முன்பு கண்டோம், அதற்கு ஈடாக சேஷய்யா சாஸ்திரியும் செயலாற்றி புதுக்கோட்டையின் வரலாற்றில் நிலையான ஒரு இடத்தைப் பெறுகிறார்.

## 16. சேஷய்யா சாஸ்திரி

சேஷய்யா சாஸ்திரி தஞ்சாவூர் மாவட்டம், அமராவதி என்னும் கிராமத்தில் பிறந்தவர். சென்னையில் பள்ளிப் படிப்பை முடித்த 1848ல் சென்னை வருவாய் வாரியத்தில் பணியில் சேர்ந்தார். தனது திறமையினால் படிப்படியாக உயர்ந்து 1868ல் சென்னை வருவாய் வாரியத்தின் தலைமை சிரஸ்தாராக பதவி உயர்வு பெற்றார். இது ஒரு இந்தியக் குடிமகனுக்குக் கிடைத்த மிகப் பெரிய பதவியாகும். பின்னர் 1872ல் திருவாங்கூர் சமஸ்தான திவானாக நியமிக்கப்பட்டார். 1877ல் அப்பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றபின் ஓய்ந்து இருந்துவிடாமல் பல பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். இந்த சமயத்தில்தான் அப்போது பரோடா சமஸ்தான திவானாக இருந்த சர்.மாதவராவின் முயற்சியால் புதுக்கோட்டையின் சிர்க்கிளாக பதவியேற்றார்.

16 வருடங்கள் புதுக்கோட்டையின் நிர்வாகப் பொறுப்பை வகித்துவந்த சேஷய்யா சாஸ்திரி புதுக்கோட்டை பல வகைகளிலும் முன்னேற்றம் காண பெரும் முயற்சி மேற்கொண்டார், தற்போதைய புதுக்கோட்டை நகரின் புது அமைப்பிற்கும், தற்போது நாம் காணும் நேர்த்தியான எழில்மிகு கட்டிட அமைப்புகளுக்கும், நகரின் சுகாதாரத் திட்டங்களுக்கும் இவரே காரணமாவார். இவரை புதிய புதுக்கோட்டையின் சிற்பி என்று சொல்வது பொருந்தும்.

1885ம் ஆண்டு முதல் சிர்க்கிள் என்னும் பதவிப் பெயர் திவான் என்றும், கர்பார் பதவி, பேஷ்கார் என்றும், உதவி கர்பார் பதவி, உதவி பேஷ்கார் என்றும், மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி சேஷய்யா சாஸ்திரி திவான் என்று அழைக்கப்பட்டார்.

சேஷய்யா சாஸ்திரி பதவி ஏற்றுக் கொண்டபோது சமஸ்தான நிர்வாகம், மிகவும் நிலைகுலைந்திருந்தது. அரசுக் கருவூலம் காலியாக இருந்தது. எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை சேஷய்யா சாஸ்திரி உணர்ந்தார். வில்லியம் ப்ளாக்பர்ன் நிலவரி வசூலில் கொண்டுவந்த சீர்திருத்தங்களின் அடிப்படையில் நிலவரி வசூல் வழக்கத்தில் இருந்த அமானி முறை ஒழிக்கப்படத் திட்டமிடப்பட்ட போதும் அது முழுமை அடையவில்லை. இம்முறையிலிருந்த குறைபாடுகளைக் கண்ட சாஸ்திரியார் அமானி நிலவரி வசூல் முறையில் சீர்த்திருத்தங்கள் கொண்டு வருவது குறித்து ஆராய்ந்தார். இம்முறையின்படி, அரசுக்கு வந்து சேரவேண்டிய (விளைச்சலின்) பங்கு ஒழுங்காக பெறப்படாமலும், பெறப்பட்ட தானியங்கள் சரியாக பராமரிக்கப்படாமலும் இருந்து வந்தது. மேலும் அரசு அலுவலர்களை இத்திட்டம் ஊழல் பேர்வழிகளாக ஆக்குகிறது என்று கருதிய சாஸ்திரியார் இம்முறையை முழுவதுமாக ஒழித்து நிலவரி வசூலில் 'ரயத்துவாரி' முறையைக் கொண்டு வந்தார். அடுத்ததாக தேவஸ்தான நிர்வாகத் துறை ஒழிக்கப்பட்டு, கோயில்களும், அவற்றின் நிர்வாக நடைமுறைகளும், தாசில்தார்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மேலும், கோயில் நடைமுறை விழாக்களைக் கவனிக்க இரண்டு உயர் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

மேல அரண்மனை ஜாகிரின், நிலத்தில் இருந்து கிடைத்த வருமானம் கடன்காரர்களுக்கு வட்டிக் கொடுப்பதற்கே சரியாக இருந்தது. ஆகவே மேல அரண்மனை ஜாகிர், 1881ல், அரசால் ஏற்கப்பட்டது. இதற்கு ஈடாக ஜாகிர் குடும்பத்தினருக்கு ஆண்டுக்கு 15 ஆயிரம் ரூபாய் தருவது எனவும் ஏற்பாடாயிற்று. இந்த நடவடிக்கையினால் சமஸ்தானத்திற்குக் கணிசமான கூடுதல் வருமானம் கிடைத்தது.

1883-84ம் ஆண்டுகளில் புதுக்கோட்டையில் இருந்த குளங்கள் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டன. தற்போது நகரின் மத்தியில் உள்ள பல்லவன் குளமும், தூர் எடுக்கப்பட்டு, அழகு படுத்தப்பட்டது. அக்குளத்திற்கு 'சிவகங்கை' என்ற சேஷய்யா சாஸ்திரி பெயர் சூட்டினார். ஆனால் இன்றளவும் இது பல்லவன் குளம் என்றே அழைக்கப்படுகிறது.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் நிர்வாகம் சேஷய்யா சாஸ்திரியின் சீர்திருத்தங்களின் பலனாக புதுப்பொலிவுப் பெற்றது. சமஸ்தானத்தின் நிதி பெருகி இருப்பதையும், நிர்வாகம் மேம்பட்டு இருப்பதைம் சுட்டிக்காட்டி, புதுக்கோட்டை தொண்டைமான் மன்னரின்

அந்தஸ்து மேலும் உயர்த்தப்படவேண்டும் என்று சாஸ்திரி ஆங்கிலேய அரசுடன் வாதாடினார். மிக உயரிய விருது மன்னருக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இவரது கோரிக்கையை பரிசீலித்த ஆங்கிலேயே அரசு சமஸ்தானத்தின் நிர்வாகத்தில், ஏற்பட்டிருந்த முன்னேற்றங்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து, தொண்டைமான் மன்னருக்கு 11 குண்டுகள் முழங்கி கவுரவிக்கும் அந்தஸ்து அளித்தது. ஏற்கனவே 'ஹிஸ் எக்சலன்சி' என்ற விருது வழங்கப்பட்டு, பின்பு திரும்ப பெறப்பட்ட செய்தியை முன்பே கண்டோம். தற்போது அதற்கும் உயர்வான மதிப்புடைய ஹிஸ் ஹைனெஸ் (His Highness) என்ற விருதும் மன்னருக்கு வழங்கப்பட்டது. இவை சேஷய்யா சாஸ்திரியாரின் நிர்வாகத் திறமைக்கு கிடைத்தப் பரிசுகள் என்று சொல்லலாம்.

திருக்கோகர்ணத்தில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ பிரகதாம்பாள், தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வமாகக் கருதப்பட்டுவந்தது. பிரகதாம்பாளின் பெயரைத் தங்களது பெயருக்குமுன் அடைமொழியாக சேர்த்துக்கொள்ளும் பழக்கத்தை ராமச்சந்திரத் தொண்டைமான் தொடங்கி வைத்தார். இதற்கு ஆங்கிலேயே அரசின் அங்கீகாரமும் கிடைத்தது. இவருக்குப் பின் வந்த மன்னர்களும் ஸ்ரீ பிரகதாம்பா தாஸ் (பிரகதாம்பாளின் பணியாளர்) என்ற அடை மொழியையும் தங்களது பெயருடன் சேர்த்து வைத்துக் கொண்டனர்.

1884ல் புதுக்கோட்டையில் சுமார் 100 தெரு விளக்குகள் போடப்பட்டன. விவசாயிகளுக்கு பல வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டன. 1883ல் பெண்களுக்கென ஒரு உயர்நிலைப்பள்ளி, தொடங்கப்பட்டது. (தற்போதைய ராணியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி) 1884ல் பிரிட்டிஷ்-இந்திய தபால் தந்தி நிலையம் புதுக்கோட்டையில் தொடங்கப்பட்டது. இதன்மூலம் கடிதப் போக்கு வரத்து, மணியாடர், வி.பி.பி. போன்ற வசதிகளும் செய்து தரப்பட்டன. புதுக்குளம், நவீனப்படுத்தப்பட்டு, நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வில்லியம் பிளாக்பர்ன் ரெசிடெண்டாக இருந்த காலத்தில் தொடங்கி வைக்கப்பட்ட நகரை அழகுபடுத்தும் பணியை சேஷய்யா சாஸ்திரி தொடர்ந்தார். புதிதாக தோன்றிய தெருக்கள் நேர் நேராக அமைக்கப்பட்டு நல்ல வடிகால் வசதியும், ஏற்பாடு செய்யப்பட்டன. நடைபாதைக் கோயில்கள் பல அகற்றப்பட்டன.

அரச குடும்பத்தின் ஆடம்பரச் செலவுகளை சேஷய்யா சாஸ்திரி குறைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டார். இதனால் அரச குடும்பத்தினரின் கோபத்திற்கு உள்ளானார். ஒருமுறை, இளையராணி, இவரை எதிர்த்து 'நல்ல பாம்பு' யாகம் ஒன்று செய்து இருக்கிறார். நூறு நல்ல பாம்புகளை தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டு மந்திரங்களின் முழக்கத்துடன் அதன்கீழ் தீக்குண்டம் வளர்க்கப்பட்டது. (2.4.1892 நாளிட்ட சாஸ்திரியாரின் கடிதம்).

1883-84ம் ஆண்டில் அரசின் வருமானம் மிகவும் பெருகியது. இதன் காரணமாக அரசின் வருமானமாக வசூலாகும் பணத்தை கருவூலத்தில் வைக்க இடவசதி இல்லை என்னும் அளவுக்கு சமஸ்தானத்தின் பொருளாதாரத்தை சேஷய்யா சாஸ்திரி வளர்ந்திருந்தார். 1886ல் சென்னை கவர்னர் மவுண்ட்ஸ்டுவார்டு கிராண்ட் டர்ப், புதுக்கோட்டைக்கு வருகை தந்தார். புதுக்கோட்டைக்கு வருகை தந்த முதல் ஆங்கிலேயே கவர்னர் இவர்தான். அவருக்கு நகரில் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. புதுக்கோட்டையில் ஏற்பட்டிருந்த முன்னேற்றங்களைக்கண்டு தமது மகிழ்ச்சியை தெரிவித்து, கவர்னர், குறிப்புகள் எழுதியுள்ளார்.

ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் 1886 ஏப்ரல் 15ம் நாள் தனது 57வது வயதில் இயற்கை எய்தினார். பட்டத்து இளவரசராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் இவருக்கு அடுத்து மன்னர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் இருந்து வந்த சுமுகமான உறவு ராமச்சந்திர தொண்டைமான் காலத்தில் பல ஏற்ற தாழ்வுகளை கண்டது. தொண்டைமான் மன்னர்களிலேயே ஆங்கிலேய ஆட்சியாளரின் அதிருப்திக்கு மிகவும் ஆளானவர் இம்மன்னரே ஆவார். பிற்காலத்தில் புதுக்கோட்டைக்கு நல்ல பெயர் கிட்டியதும் இவரது காலத்தில்தான். இவரது காலத்தில், புதுக்கோட்டை பல துறைகளிலும் முன்னேற்றங்களைக் கண்டது.

## 17. மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர் (1886-1928)

பட்டத்து இளவரசராக நியமிக்கப்பட்டிருந்த மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானுக்கு முடிசூட்டப்பட்டப்போது அவருக்கு வயது 11. 1886 மே மாதம் 2-ம் நாள் வைதீக முறைப்படி திருக்கோகர்ணம் பிரகதம்பாள் சன்னதியில் பட்டாபிசேஷக நிகழ்ச்சிகள் நடந்தன. 1886 ஜூலை மாதம் 8ம் நாள் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பட்டத்திற்கு வந்ததை ஆங்கிலேய அரசும் அங்கீகரித்தது.

மன்னர் சிறு வயதாக இருந்ததால் அரசின் காரியங்களை நடத்திச் செல்லும் பொறுப்பையும், மன்னரைக் காத்து வரும் பொறுப்பையும், திவான் சேஷய்யா சாஸ்திரி வசம் ஆங்கிலேய அரசு ஒப்படைத்தது. சிர்க்கிளாக பதவி ஏற்று, திவானாக விளங்கிய சேஷய்யா சாஸ்திரி, தற்போது திவான் ரீஜண்ட் என்று அழைக்கப்பட்டார். ஆனால் இளைஞரான மன்னருக்கும், திவான் ரீஜண்ட்டுக்கும் இடையே (முன்பு குறிப்பிட்டது போல்) பிளாக்பர்னுக்கும் முன்னாள் மன்னர் ரகுநாத ராய தொண்டைமானுக்கும், இடையே ஏற்பட்ட பாச பிணைப்புகள் காணப்படவில்லை.

மன்னருக்கு, திறமை வாய்ந்தவர்களைக் கொண்டு தகுந்த பயிற்சிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரஞ்சு, ஆகிய மொழிகளில் மன்னர் நல்ல புலமை பெற்றார். மன்னர் ஓவியம் வரைவதிலும், வேட்டையாடுவதிலும், கிரிகெட், டேபிள் டென்னிஸ், போன்ற விளையாட்டுகளிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். சுற்றுப் பயணம் மேற்கொள்வது எதிர்காலத்தில் நாட்டை ஆளவிருக்கும் மன்னருக்கு அனுபவ அறிவைப் பெருக்கும் என்பதால் அவரது இளமைக் காலத்தில் பல சுற்றுப் பயணங்கள் ஏற்பாடு செய்து தரப்பட்டன. 1889ல் அவரது பதினைந்தாவது வயதில் சென்னைக்குச் சென்று இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார். திரும்பி வரும் வழியில் பாண்டிச்சேரியில் பிரெஞ்சு கவர்னரின் விருந்தினராக தங்கி இருந்து விட்டு, புதுக்கோட்டை திரும்பினார். அடுத்த ஆண்டு சென்னை சென்ற போது அவருக்கு திருவாங்கூர் மகாராஜாவின் நட்பு கிடைத்தது. பிறகு சென்னையிலிருந்து மைசூருக்கும் சென்று வந்தார்.

உலக அனுபவம் பெறும் பொறுட்டு இதுபோன்ற பயணங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் இது மன்னரது உள்ளத்தில் ஒரு மாறுபட்ட நடைமுறையை தோற்றுவித்து விட்டதாகத் தெரிகிறது. இந்த பயணங்களுக்குப் பின் தொடர்ந்து பல பயணங்கள் மேற்கொண்டு வெளியூர்களில் தங்கி காலம் கழிப்பது மன்னருக்கு வழக்கமாகி விட்டது. 1891லிருந்து திருச்சியில் இருந்த புதுக்கோட்டை அரண்மனையிலேயே தங்கி இருப்பதையே மன்னர் விரும்பினார். அங்கு, அவருக்கு, அவரது விருப்பத்திற்கு ஏற்ப, பல ஆங்கிலேயர்களின் தொடர்பு கிடைத்ததும் ஒரு காரணமாகும். 1893ல் வடஇந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பம்பாய், அலகாபாத், காசி, கல்கத்தா, ஆக்ரா, டெல்லி, பரோடா, ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தார்.

மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானுக்கு 1894 நவம்பர் 26ம் நாள் 19 வயது நிறைவு அடையவே அரசின் முழு நிர்வாக பொறுப்புகளையும் மன்னர் ஏற்றுக்கொண்டார். அப்போதைய சென்னை கவர்னர் லார்ட் வென்லாக், புதுக்கோட்டைக்கு வருகைதந்து மன்னரை பொறுப்பில அமர்த்தினார். அரசு, தலைமை குரு பட்டத்து வாளை மன்னருக்கு அளித்தார். அப்போது, ஒரு சிறப்பு தர்பாரும் நடைபெற்றது.

திவான் ரீஜண்டாக இருந்த சேஷய்யா சாஸ்திரி நிர்வாகத்தில் மேலும் பல மாற்றங்களை செய்தார். வருவாய்துறை, அருகிலிருந்த ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளில் இருந்ததைப் போல் மாற்றி அமைக்கப்பட்டது. பாசன கண்மாய்கள் பழுது பார்க்கப்பட்டன. திருச்சி, தஞ்சாவூர், மதுரை செல்லும் சாலைகள் செப்பனிடப்பட்டன. அரசுப் பணியாளர்களின் திறமை உயர்ந்தது. குற்றங்கள் குறைந்தன. நன்கு படித்தவர்களுக்கு அரசு வேலைகள் தரப்பட்டன. புதுக்கோட்டையில் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது. (தற்போதைய மன்னர் கல்லூரி)

இன்று நாம் காணும் கம்பீரமான பொது அலுவலக கட்டிடவளாகம் இவர் காலத்தில் முழுமைப்பெற்றது. புதுக்கோட்டை நகரில் தற்போது ஆர்ச் இருக்குமிடம் அப்போது ஒரு சேரியாக இருந்தது. நகரை அழகு படுத்தும் முகத்தான் இந்த சேரியை, கிழக்கு பகுதிக்கு மாற்றி நகருக்கு மேலும் அழகூட்ட ஆவண செய்தார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் சுமார் 175 இடங்களில் மண் உப்பு காய்ச்சும் பழக்கம் இருந்தது. இதற்கு மண்உப்பு (Earth Salt) என்று பெயர். இது கடல்நீர் உப்பை விட வெளுப்பாக இருக்கும். விலையும் குறைவு. (1881ல் ஒரு கலம் விலை 12 அணா) இதனால் அருகில் இருந்த ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளுக்குள் இந்த உப்பு கடத்தப்பட்டது. இதன் காரணமாக ஆங்கிலேய அரசின் வருமானம் பாதிக்கப்பட்டது. (ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளில் அப்போது உப்புத் தொழில் ஆங்கிலேயரின் ஏகபோக உரிமையாக இருந்தது) ஆகவே மண்உப்பு தயாரிப்பதை நிறுத்தும்படி 1817ம் ஆண்டிலிருந்தே ஆங்கிலேய அரசிடம் இருந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. பல காரணங்களினால் இது நிறைவேறவில்லை. ஆனால் ராமச்சந்திரத் தொண்டைமான் காலத்தில் இந்தக் கோரிக்கை வலுவடைந்தது. இதுபற்றி நடந்த பேச்சு வார்த்தைகளில் புதுக்கோட்டையில் மண்உப்பு காய்ச்சுவதை தடைசெய்வது என்றும், இதனால் ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்ய ஆங்கிலேய அரசு நஷ்ட ஈடு தருவது என்றும், தடைவிதிக்கப்பட்ட பின் கள்ளத்தனமாக உப்பு காய்ச்சுவதை கண்காணிக்க ஒரு ஆங்கிலேய அதிகாரியை நியமிப்பது என்றும் ஏற்பட்டாகியது.

இதற்கான உடன்படிக்கை1887ல் உருவாகியது. அதன்படி புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுகட்ட ரூ.38,000/- நட்டஈடாக கொடுக்க ஆங்கிலேய அரசு சம்மதித்து மண் உப்பு காய்ச்சுவது தடைசெய்யப்பட்டது. இதன்பின் ஆங்கிலேய ஆட்சிப் பகுதியில் இருந்து கடல் உப்பு கொண்டு வரப்பட்டு இங்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் விலை அதிகமாக இருந்தது.

கைவினைஞர்களுக்கும், கோவில்களில் ஊழியம் செய்வோருக்கும், கோயில் திருப்பணிகளுக்கும், உற்சவ காரியங்களுக்கும், ராணுவசேவை புரிந்தோருக்கும், ஜீவிதம் என்று அழைக்கப்பட்ட நிலங்கள் அளிக்கப்பட்டிருந்தன. இந்த நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

கோவில் திருப்பணிகளுக்காகவும், உற்சவ காரியங்களுக்காகவும், அளிக்கப்பட்டிருந்த, நிலங்களை சிலர் குறிப்பிட்ட காரியங்களுக்குப் பயன்படுத்தாது, தங்களது சொந்த காரியங்களுக்குப் பயன்படுத்தி வந்தனர். இத்தகைய நிலங்கள் மீண்டும் அரசுக்கு கையகப்படுத்தப்பட்டன. 1880ல் தேவைப்பட்ட ராணுவ சேவை தற்போது (1887) தேவைப்படாததாலும், ராணுவ சேவை புரிந்தோருக்கு

அளிக்கப்பட்டிருந்த நிலங்களுக்கு அமரம் என்ற நிலவரி விதிக்கப்பட்டது. இதன்மூலம் அரசுக்கு ஒரு லட்சம் ரூபாய் உபரி வருமானம் கிடைத்தது. இதுபோன்ற சீர்திருத்தங்கள் செய்யப்பட்டபோது அதற்கு கடுமையான எதிர்ப்புகள் இருந்த போதிலும் அவற்றை பொருட்படுத்தாது சீர்திருத்த திட்டங்களை தீவிரமாக சேஷய்யா சாஸ்திரி செயல்படுத்தினார்.

புதுக்கோட்டையின் பன்முக முன்னேற்றத்திற்கு பலவாறும் உழைத்த திவான் சேஷய்யா சாஸ்திரி 1894ல் ஓய்வு பெற்றார். உதவி திவானாக இருந்த வேதாந்தாச்சாரியார் திவானாக நியமிக்கப்பட்டார்.

மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் இந்தியாவின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்திருந்தார். இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளையும் கண்டுவர விருப்பம் கொண்டார். அதன்படி 1898ல் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். தாம் சுற்றுப் பயணத்தில் இருக்கும்போது, நாட்டின் நிர்வாகத்தை கவனித்துக் கொள்ள இருவர் கொண்ட ஆட்சிக்குழு ஒன்றை ஏற்படுத்தினார். இக்குழுவில் சமஸ்தான திவானும், மன்னரால் நியமிக்கப்பட்ட கவுன்சிலர் என்று அழைக்கப்பட்ட ஒருவரும் இருந்தனர். கவுன்சிலராக மன்னரின் மூத்த சகோதரர் விஜயரகுநாத துரைராஜா நியமிக்கப்பட்டார்.

1898 ஏப்ரல் மாதத்தில் ஐரோப்பா பயணம் மேற்கொண்ட மன்னர், நேப்பில்ஸ், பிளாரன்ஸ், ரோம் ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்து சென்றார். அங்கு ஏழாம் எட்வர்ட் மன்னரான வேல்ஸ் இளவரசரையும், விக்டோரியா மகாராணியையும் சந்தித்தார். சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அவ்வாண்டு இறுதியில் புதுக்கோட்டைக்குத் திரும்பினார். மக்கள் அவருக்கு அன்பான ஒரு வரவேற்பு அளித்தனர். மன்னர், விக்டோரியா மகாராணியையும், ஏழாம் எட்வர்டு மன்னரையும், சந்தித்து வந்ததன் நினைவாக இங்கு ஒரு பொது மண்டபம் கட்டப்பட்டது. (இதுவே தற்போதைய புதுக்கோட்டை நகரின் டவுன்ஹால் ஆகும்.)

**பிரதிநிதி சபை:** முடியாட்சியின் கீழ் உள்ள மக்களுக்கு ஓரளவு மக்களாட்சி முறை உரிமைகளை அளிக்கும்முகத்தான் 1902ம் ஆண்டு புதுக்கோட்டையில் மக்கள் பிரதிநிதி சபை (Assembly of Nominated Representatives) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன்மூலம் சமஸ்தான மக்களை மக்களாட்சி முறைக்கு கொண்டுவர ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இச்சபையில் முதலில் முப்பது அங்கத்தினர்கள் இருந்தனர். அரசின் துறைத்தலைவர்களால் பரிந்துரைச் செய்யப் பட்டவர்களிலிருந்தும், நகரில் இருந்த பொது அமைப்புகளில் இருந்தும் இதற்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர். இந்தச் சபை ஆண்டுக்கு ஒருமுறை கூட்டப்பட்டது. இச்சபையின் முன்பு, அரசின் சாதனைகளும், அரசு சாதிக்க திட்டமிட்டுள்ளவைகளும், எடுத்துக்

கூறப்பட்டன. இதுபற்றி சபை உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதன்மூலம் மக்கள் கருத்தை அறிந்து செயல்பட அரசுக்கும், ஒரு வாய்ப்பு ஏற்பட்டது.

1907ம் ஆண்டில் பிரதிநிதி சபையின் உறுப்பினர்கள் 18 பேர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன்மூலம் புதுக்கோட்டையின் வரலாற்றில் முதன் முறையாக மக்களாட்சி அமைப்பு தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மன்னர் தனது முதல் ஐரோப்பிய பயணத்திற்குப் பிறகு பலமுறை மற்ற மேலைநாடுகளுக்கும் சென்று வந்தார். சமஸ்தான நிர்வாகத்தை ஆட்சிக்குழுவே கவனித்து வந்தது. இக்காலத்தில் நிதி நிர்வாகத்தில் பல மாற்றங்கள் நிர்வாகக்குழுவால் செய்யப்பட்டது. அதன்படி அரசு செலவுகள் குறைக்கப்பட்டன. தேவையற்ற அரசு துறைகள் மூடப்பட்டன. நகர எல்லைகளில் சுங்கச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டன. 1905ம் ஆண்டு முதல் முத்திரைத் தாள் (பத்திரம், ஸ்டாம்புகள்) ஏற்படுத்தப்பட்டன. இதனால் அரசுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்தது. விவசாயிகளுக்குத் தேவையான நவீன வசதிகள் செய்து தரப்பட்டன. புதிய நெல் வகைகளும், தானியங்களும், பயிரிட ஊக்கம் அளிக்கப்பட்டது. நீதி நிர்வாகம் மீண்டும் சீரமைக்கப்பட்டது. மிகக் கடுமையான குற்றங்களுக்குக்கூட தூக்கு தண்டனை வழங்கப்படவில்லை. ஆயுள் தண்டனையே வழங்கப்பட்டது. 1908ம் ஆண்டு முதல், ஆயுள் தண்டனை கைதிகள், அந்தமானுக்கு அனுப்பப்பட்டனர். எல்லா கிராம மக்களுக்கும் ஆரம்பக் கல்வி அளிக்கும் பொருட்டு, மேலும் பல கிராமங்களில் ஆரம்பக் கல்விக்கூடங்கள் துவக்கப்பட்டன. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பள்ளி ஒன்று துவக்கப்பட்டது. நகரில் இருந்த கல்வி நிலையங்களில் புதிய கல்வித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1902ம் ஆண்டு மகளிர் மற்றும் குழந்தைகளுக்காக ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டது. (இதுவே தற்போதைய ராணியார் அரசினர் மருத்துவமனை.)

1909ம் ஆண்டில் சமஸதான ஆட்சிக்குழு மூவர் கொண்டதாக மாற்றி அமைக்கப்பட்டது. விஜய ரகுநாத துரை ராஜா, திவானாக நியமிக்கப்பட்டார். ஆங்கிலேய உயர் அலுவலர் ஒருவரும் (கண்காணிப்பாளர்), சமஸ்தான தலைமை நீதிபதியும், திவானும் இக்குழுவின் உறுப்பினர்களாக இருந்தனர். முதல் ஆங்கிலேய அதிகாரியாக ஜி.டி. ஹெச் பிரேக்கன், நியமிக்கப்பட்டார்.

1911ம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடி சூட்டு விழாவிற்கு மன்னர் லண்டன் சென்று வந்தார். 1911 டிசம்பர் 12ம் நாள் ஜார்ஜ் மன்னர் டில்லி விஜயத்தின்போது தொண்டைமான் அவரை டெல்லியில் சந்தித்தார். ஜார்ஜ் மன்னரின் இந்திய விஜயத்தின் நினைவாக மக்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டன. கிராம செஸ் வரி ரூ.20,000 அளவிற்கு

தள்ளுபடி செய்யப்பட்டது. கைத்தறிகளுக்கு வரி அறவே நீக்கப்பட்டது. ஆரம்பக்கல்வி சமஸ்தானம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. அடித்தள அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும் ஊதியம் உயர்த்தப்பட்டது.

1913ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் நாள் மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானுக்கு இங்கிலாந்து மன்னர், G.C.I.E. (Grand Commandar of Indian Empir-e) என்ற பட்டத்தை அளித்தார். ஒரு சுதேச சமஸ்தான மன்னருக்கு அளிக்கப்பட்ட மிகச் சிறந்த விருதாகும் இது.

1913ம் ஆண்டில் மன்னர் தனது 25வது ஆட்சி ஆண்டைக் கொண்டாடினார். இந்த விழா நினைவாக மக்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டன. கணக்கு வரி எனப்படும் தீர்வை மூன்றாண்டுகளுக்கு நிறுத்தப்பட்டது. நகராட்சியின் வீட்டு வரி வசூல் மூன்றாண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. வளையல் வரி, சலவைத் தொழில் வரி போன்ற வரிகள் நிரந்தரமாக நீக்கப்பட்டன. முழுவதும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு புதிய லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் (Legislative Council) ஏற்படுத்தப்பட்டது. நகராட்சி மன்றத்திற்கு இரண்டு உறுப்பினர்களை மக்களே தேர்ந்தெடுக்க வகை செய்யப்பட்டது. நகரில் ஒரு விவசாயப்பள்ளி ஏற்படுத்தப்பட்டது. பல கிராமங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கப்பட்டது.

25ம் ஆண்டு விழாவன்று, அம்பாரியுடன் அலங்கரிக்கப்பட்ட யானை மீது மன்னர் ஊர்வலமாக நகரின் தெருக்களின் வழியாக அழைத்துவரப் பெற்றார். நகரெங்கும் விழாக் கோலம் பூண்டிருந்ததை பதிவேட்டுச் செய்திகளில் இருந்து அறிகிறோம்.

1914ல் முதல் உலகப்போர் மூண்டது. போரில் ஈடுபட்டிருந்த இங்கிலாந்துக்கு போர் நிதியாக புதுக்கோட்டை அரசின் நிதியிலிருந்து ரூபாய் 15,000/- வழங்கப்பட்டது.

1915ம் ஆண்டு மன்னர் ஆஸ்திரேலியாவிற்குப் பயணமாக சென்றிருந்தபோது அங்கு திருமணம் செய்து கொண்டார். மன்னரின் திருமணம் புதுக்கோட்டையின் வரலாற்றில் ஒரு பெரும் புயலைக் கிளப்பியது. ஆஸ்திரேலியா-மெல்பர்ன் நகரில் வசித்து வந்த வழக்கறிஞர் உல்ப் பிங்க் (Wolf Fink) என்பவரது மகளான எஸ்மி மோலி பிங்க் (Esme Molly Fink) என்ற பெண்மணியை 1915ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் திருமணம் செய்து கொண்டார். இந்த திருமணம் ஆஸ்திரேலியாவின் தலைநகரான சிட்னி நகரில் நடைபெற்றது.

மன்னர்-மோலி திருமணம் ஆஸ்திரேலியாவிலும், பரபரப்பை ஏற்படுத்தியது. அந்நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் இதுபற்றி சுவையான செய்திகளை வெளியிட்டன. ஆனால் ஆஸ்த்திரேலிய அரசும்,

இங்கிலாந்து அரசும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாயின. நிற பேதங்கள் கடுமையாகக் கருதப்பட்ட காலம் அது. திருமணம் பற்றிய விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு ஆஸ்திரேலிய அரசை இங்கிலாந்து கேட்டுக் கொண்டது.

மன்னர், அமெரிக்காவில் தேன் நிலவை முடித்துக் கொண்டு, 22.11.1915ல் புதுக்கோட்டைக்கு வருகை தந்தார். மன்னருக்கும் அவரது துணைவியாருக்கும் மக்கள் அன்பான வரவேற்பு அளிக்க திட்டமிட்டிருந்தனர். நகரின் எல்லையான திருக்கோகர்ணம் கருப்பர் கோயிலுக்கு அருகில் மன்னரும், ராணியும் மக்களுடைய அன்பான வரவேற்பைப் பெற்றனர். 24.11.1915ல் புதுக்கோட்டை சமஸ்தான மக்கள் சார்பாக டவுன்ஹாலில் மன்னருக்கு வரவேற்பும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. நகரில் உள்ள மகளிர், ராணியார் உயர்நிலைப் பள்ளியில் கூடி, அங்கு, ராணி மோலிக்கு, தனியாக ஒரு வரவேற்பு அளித்தனர். 1916 ஏப்ரல் மாதம் வரை ராஜ தம்பதியர் புதுக்கோட்டையில் தங்கி இருந்தனர். அப்போது மோலி கருவுற்றிருந்தார். தனது கரு கலைக்கப்படும் ஆபத்து உள்ளது என்பதாக அவர் உணர்ந்தார் என்று சொல்லப்படுகிறது. (The Hindu dt.15.5.1988) ஆகவே புதுக்கோட்டையை விட்டு புறப்பட விரும்பினார். அதன்படி மன்னரும், ராணி மோலியும் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டு சென்றனர். இதன்பின் ராணி மோலி புதுக்கோட்டைக்கு வரவே இல்லை. 22.7.1916ல் (சிட்னியில்) இவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சிட்னி மார்த்தாண்டன் என்று பெயர் சூட்டப்பட்டது.

அந்நிய நாட்டு மாது மூலம் தொண்டைமான் மன்னருக்குப் பிறந்த குழந்தை சமஸ்தானத்தின் எதிர்கால மன்னராவதை சமஸ்தான மக்களுள் சிலர் விரும்பவில்லை. இது குறித்து மக்கள் கருத்து ஒன்று திரட்டப்பட்டது. இப்பணியை முன்னின்று செய்தவர் தீரர் சத்தியமூர்த்தி ஆவார்.

1920ம் ஆண்டு வாக்கில் பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் சுதந்திர உணர்வு மேலிட்டு, அன்னிய ஆதிக்கத்தை ஒழிக்க மக்கள் சக்தி ஒன்றுபட்டு நின்றது. புதுக்கோட்டை சமஸ்தானத்திலும், மக்கள் ஒன்று திரண்டு, மன்னருக்கு அந்நியநாட்டு மனைவி மூலம் பிறந்த, சிட்னி மார்த்தாண்டனுக்கு, அரசு, வாரிசு உரிமை அளிக்கக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். ஆங்கிலேய அரசும் இது குறித்து மன்னருக்கு சாதகமாக இல்லை. (இது குறித்து விரிவான விவரங்களை தீரர் சத்தியமூர்த்தி, மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டமும் புதுக்கோட்டையும், ஆகிய தலைப்புகளில் காண்க).

புதுக்கோட்டை மக்களின் எதிர்ப்பு,, ஆங்கிலேய அரசு வாரிசு உரிமை குறித்து தனக்கு சாதகமாக இல்லாத நிலை, ஆகியவற்றை

கருத்தில் கொண்டு தனது அரச பதவியை விடுத்து, மேல்நாடுகளிலேயே தங்கிவிட மன்னர் முடிவு செய்தார். அதன்படி நாட்டின் நிர்வாகத்தை கவனிக்க தனது சகோதரர் விஜய ரகுநாத துரைராஜாவுக்கு பூரண அதிகாரம் கொடுத்தார். இதன்பின் இவர் ''ரீஜண்ட்'' என்று அழைக்கப்பட்டார். புதிதாக திவான் ஒருவரும் நியமிக்கப்பட்டார். ஆங்கிலேய பேரரசின் ஒப்புதலோடும், ஆணையோடும், புதுக்கோட்டை அரசின் வைப்பு நிதியில் இருந்து 20 லட்சம் ரூபாயும், மற்றும் மன்னரின் திருமண நிதியிலிருந்து, 1,60,000ரூபாயும் பெற்றுக் கொண்டு மன்னர் புதுக்கோட்டையை விட்டு வெளியேறினார். இது அரச பதவியைத் துறக்க அவருக்கு அளிக்கப்பட்டத் தொகை என்று சொல்லலாம். மன்னர், பாரீஸ் நகரில் குடியேறினார். 28.5.1928ல் பாரீஸ் நகரில் மரணமடைந்தார். இவரது சடலம் லண்டன் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 6.6.1928 அன்று இந்து வைதீக முறைப்படி தகனம் செய்யப்பட்டது. சிட்னி மார்த்தாண்டன் ஈமக்கிரியைகளைச் செய்தார்.

மார்த்தாண்ட பைரவ தொண்டைமானின் மரணத்தைத் தொடர்ந்து வாரிசு உரிமை குறித்த கிளர்ச்சி மேலும் தீவிரமாகியது. சிட்னி மார்த்தாண்டனுக்கு, வாரிசு உரிமை அளிக்கக் கூடாது என்ற பொதுமக்கள் கருத்து எங்கும் பிரதிபலித்தது. இதுவரை வாளாவிருந்த ஆங்கிலேய அரசிற்கு சமஸ்தான வாரிசுரிமை குறித்து முடிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சிட்னி மார்த்தாண்டனுக்கு வாரிசு உரிமை அளிக்கக்கூடாது என்பதில் ஒன்றுபட்டிருந்த மக்கள், தொண்டைமான் பரம்பரையில், அடுத்து யாருக்கு மன்னர் பதவி அளிக்க வேண்டும் என்பதில் பிளவுபட்டிருந்தனர். ஒரு சாரார் மாத்தாண்ட பைரவத் தொண்டைமானின் மூத்த சகோதரரின் மைத்துனரும், சின்ன அரண்மனையைச் சேர்ந்தவருமான பாலசுப்ரமணிய ரகுநாதத் தொண்டைமானுக்கு ஆதரவாக இருந்தனர். (அவரும், தானே சமஸ்தான வாரிசு என்றும், மன்னரின் ஈமக்காரியங்களைத் தானே செய்ய வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டு பாண்டிச்சேரியில் மன்னருக்கு ஈமக்கியைகளைச் செய்தார்.) பாலசுப்பிரமணிய ரகுநாதத் தொண்டைமான், மன்னராக வருவதை ரீஜண்ட் விஜய ரகுநாத துரை ராஜா விரும்பவில்லை என்று தெரிகிறது. ஆனால் தீரர் சத்தியமூர்த்தி போன்ற மூத்த தலைவர்களின் ஆதரவும் இவருக்கு இருந்ததாகவும் தெரிகிறது. 1928 நவம்பர் 1ம் தேதி அன்று இந்திய அரசு புதுக்கோட்டையின் வாரிசு பிரச்சினை குறித்து ஒரு ஆணை பிறப்பித்து, இது குறித்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

புதுக்கோட்டை மன்னர் பதவிக்கு திருமிகு. ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களை தேர்ந்தெடுத்து ஆங்கிலேய அரசு அறிவித்தது. ராஜா ராஜகோபால தொண்டைமான் மன்னராக அறிவிக்கப்பட்டபோது அவருக்கு வயது 6. இவர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானின் இளைய சகோதரி மீனாம்பாள் அவர்களுடைய பேரர் ஆவார். 19.11.1928ல் புதிய மன்னரின் பட்டாபிஷேகம் நடைபெற்றது.

மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் இறந்த பிறகு அவரது ராணி மோலியும், மகன் மார்த்தாண்டனும், லண்டனில் வசித்து வந்தனர். ராணி மோலி மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்ததாக அப்போதைய பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் மகனுக்கு மன்னர் பதவி கிடைக்காதது அவருக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. தனக்கும், தனது பிள்ளைக்கும் உரிய நியாயம் வழங்க வேண்டும் என்று ஆங்கிலேய அரசை மோலி தொடர்ந்து வற்புறுத்தி வந்தார். ஆனால் அவரது வேண்டுகோள் ஆங்கிலேய அரசால் கவனிக்கப்படவில்லை. இவர் 1967ல் லண்டன் நகரில் காலமானார்.

சிட்னி மார்த்தாண்டனின் வாழ்வும் சுவையானதாக இருக்கவில்லை. இவர் ஒரு அமெரிக்க பெண்மணியைத் திருமணம் செய்து, பின்பு விவாகரத்து செய்து கொண்டதாகத் தெரிகிறது. இவருக்கும் குழந்தைகள் இல்லை. இவர் 1984ல் பிளாரன்ஸ் நகரில் காலமானார்.

இத்துடன் கதை முடிந்துவிடவில்லை! இன்னும் தொடர்கிறது! சிட்னி மார்த்தாண்டன் இறக்கும்போதுஅவரது பொறுப்பில் ஏராளமான சொத்துக்கள் இருந்தன. மாட மாளிகைகள், கலைப்பொருட்கள், பொன் ஆபரணங்கள், பணம், இன்னும் பல! இவற்றின் மதிப்பு பல லட்ச ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் சொத்துக்களுக்கெல்லாம் யார் வாரிசு என்ற கேள்வி எழுந்துள்ளது! சிட்னி மார்த்தாண்டன் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. இவ்வளவு மதிப்புள்ள சொத்துக்கள் எப்படி வந்தது எனப் பலர் வியப்படைகின்றனர். சிட்னி மார்த்தாண்டன் அமெரிக்க கோடீஸ்வரர் ஓனாசிசின் கூட்டாளி என சிலர் தெரிவிக்கின்றனர். குழப்பமான இந்த சூழ்நிலையில், மேற்படி சொத்துக்களை இங்கிலாந்து அரசு, கைப்பற்றி வைத்துள்ளது. இந்த சொத்துகளுக்கு யார்தான் வாரிசு என்று ஆய்வுகள் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழு செய்தி மலர் 4-டிசம்பர் 1989, இந்து நாளிதழ் 15.5.88)

## 18. ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் (1928 - 1948)

புதுக்கோட்டை தொண்டைமான் பரம்பரையின் 9-வது மன்னராகப் பதவி ஏற்றுக் கொண்ட ஸ்ரீபிரகதம்பாதாஸ் ராஜகோபாலத் தொண்டைமான்—இந்தப் பரம்பரையின் கடைசி மன்னரும் ஆவார்.

ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் மேல அரண்மனைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் 23.6.1922ல் பிறந்தார். 19.11.1928ல் புதுக்கோட்டையின் மன்னர் பதவியில் அமர்த்தப்பட்டார். அன்று நடைபெற்ற சிறப்பு தர்பாரில், இந்திய கவர்னர் ஜெனரலின் பிரதிநிதியாக லெப்டினன்ட் கர்னல் குரோஸ் ஒயிட், கலந்து கொண்டு புதிய மன்னரை அரசு சிம்மாசனத்தில் இருத்தினார்.

''இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து அன்று மாலை 4.30 மணிக்கு தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வமான திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் சன்னதியில் இந்து சமய, வைதீக முறைகளின்படி மன்னருக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் பிரதாம்பாள் கோயில் முன்கூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். வால்மீகிக்குப் பின் அயோத்தி இல்லையாகினும், இந்திய மக்கள் தங்களை ஆளும் மன்னர்களை ராமன் என்றே கருதி வந்துள்ளனர். அப்படிப்பட்ட ஸ்ரீராமனைக் காண, கண்டு தரிசிக்க, மக்கள் வெள்ளம்! நகரெங்கும் விழாக்கோலம்! ராஜ உடை தரித்து, பிரகதாம்பாள் சன்னதில், புலித்தோல் போர்த்திய ஒரு பீடத்தில் மன்னர் அமர்த்தப்பட்டார். வேத பாராயணங்கள் முழங்க தங்கத்தினால் ஆன பட்டம் (தகடு) ஒன்றினை சமஸ்தான ரீஜண்ட், மன்னரது நெற்றியில் கட்டினார். அந்தணர்களுக்கு பொருளும், பொன்னும் அன்பளிப்பாக மன்னரது கையால் அளிக்கப்பட்டன. பின்பு மன்னர் ஸ்ரீ பிரகதாம்பாள் சன்னதிக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். 100 புரோகிதர்கள் வேத மந்திரங்கள் ஓத அரசு தலைமைப் புரோகிதர் தொண்டைமான் பரம்பரையின் அரசு வாளை, மன்னரிடம் அளிக்க, அதைப் பெற்றுக் கொண்ட மன்னர் அரசு தலைமை புரோகிதரை வணங்கி, அவருக்கு முன் ஒரு பொன்னாடையை தரையில் விரித்தார். அதில் தலைமைப் புரோகிதர் ஒரு கைப்பிடி அரிசியைப் போட்டார். பின்பு அந்த அரிசி பிரகதாம்பாளின் பாதங்களில் வைக்கப்பட்டது. இந்த வைதீக நிகழ்ச்சிகளுக்குப் பின் மன்னர் முக்கிய வீதிகளின் வழியாக யானை மீது ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். முன்பு குறிப்பிட்ட அரிசி அடங்கிய பொன்னாடை மூட்டையும் அதே யானையில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பிரகதாம்பாள் அளித்த அரிசியையே தொண்டைமான் மன்னர் உட்கொண்டு அந்த அம்மனுக்கு பணிபுரிகின்றார் என்பதைக் குறிப்பதாக இது கொள்ளப்படுகிறது.'' பட்டாபிஷேக நிகழ்ச்சிகளை மேற்கண்டவாறு 20.4.1928 நாளிட்ட மெயில் நாளிதழ் பிரசுரித்து இருந்தது.

சமஸ்தான நிர்வாகத்தை, ரீஜண்ட் விஜயரகுநாத துரை ராஜா தொடர்ந்து கவனித்து வந்தார். 29.2.1929 முதல் ரீஜண்ட் முறை நீக்கப்பட்டு, மூவர் அடங்கிய நிர்வாகக் குழு ஒன்று ஆங்கிலேய-இந்திய அரசால் அமைக்கப்பட்டது. ஆங்கிலேய உயர் அலுவலர் ஒருவர் இந்த நிர்வாக குழுவின் தலைவர். சமஸ்தான திவான் மற்றும் தலைமை நீதிபதி ஆகிய இருவரும் ஏனைய இரு உறுப்பினர்களாகவும் இருந்தனர். 1931ல் சமஸ்தான நிர்வாகத்தை கவனிக்க, ஆட்சியாளர் ஒருவரை (Administrator) ஆங்கிலேய அரசு நியமித்தது. முதல் ஆட்சியாளராக ஹோல்ஸ் ஒர்த் என்பவர் பதவி ஏற்றுக் கொண்டார். இவரது காலத்தில்தான் புதுக்கோட்டையில் உள்ள பூங்காவும், மணிக்கூண்டும் அமைக்கப்பட்டன. ''ஹோல்ஸ் ஒர்த் பூங்கா'' என்று அப்போது பெயரிடப்பட்டிருந்த இந்தப் பூங்கா, தற்பொழுது ''காந்தி பூங்கா'' என்று அழைக்கப்படுகிறது. கடையக்குடியில் உள்ள அணையும் இவரது

காலத்தில் கட்டப்பட்டது. இதற்கும் இவரது பெயரால் ''ஹோல்ஸ் ஒர்த் அணைக்கட்டு'' என்று இன்றும் பெயர் வழங்குகிறது.

1931ல் புதுக்கோட்டை நகராட்சி வரிகளை உயர்த்தியது. இதைத் தொடர்ந்து, 15.7.1931 அன்று திடீரென்று நகரில் பெரும் கலகம் மூண்டது. சமஸ்தான நிர்வாகம் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது. அரசு அலுவலகங்களை தகர்ப்பது கலகக்காரர்களின் குறியாக இருந்தது. சிறைச்சாலை தாக்கப்பட்டு, அங்கிருந்த கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அங்கிருந்த பொருள்கள் சேதப்படுத்தப்பட்டன. சமஸ்தான கருவூலம் தகர்க்கப்பட்டது. அரசுக்கு சொந்தமான கார் ஒன்றும் எரிக்கப்பட்டது. சமஸ்தான திவான், பகதூர் ராகவையா வீடு தகர்க்கப்பட்டது. நகர காவல் ஆய்வாளர்களின் இல்லங்கள் சூறையாடப்பட்டன. இவ்வாறு நகரமே பெரும் பாதிப்புக்குள்ளாகியது. எங்கும் குழப்பமும், கொந்தளிப்பும் காணப்பட்டன. இதுபோன்ற ஒரு நிலைமையை அரசும், அரசு அலுவலர்களும், சற்றும் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், இந்த திடீர் கலவரத்தை அடக்குவதற்கு அரசிடம் போதிய படைபலம் இருந்ததாகவும் தெரியவில்லை.

கலகத்தை அடக்கி அமைதியை நிலைநாட்ட திருச்சியில் இருந்து ராணுவ உதவி கோரப்பட்டது. பஞ்சாப், ரெஜிமெண்ட் எனப்படும் ராணுவப்படை உடனடியாக நகருக்கு வந்து, மறுநாள் அமைதியை நிலைநாட்டியது.

சமஸ்தான காவல்துறை அவசர காலங்களில் செயல்பட முடியாது இருந்த பரிதாப நிலையை இது காட்டியது. ஆகவே காவல்துறையை திருத்தி அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஹ்யூம் என்பவர் காவல்துறை உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அதிகமான ஆயுதப்படை காவலர்கள் நியமிக்கப்பட்டனர். காவலர்களுக்கு, முறையான ஆயுதப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு காவல்துறை பலப்படுத்தப்பட்டது.

திருச்சியில் இருந்து புதுக்கோட்டை வழியாக மானாமதுரை வரை புதிய புகைவண்டித் தடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு புகைவண்டி போக்குவரத்து 4.7.1929ல் தொடங்கியது. 1928ல் புதுக்கோட்டை நகரில் மின்சார வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

மன்னரின் உபயோகத்திற்காக புதிதாக அரண்மனை ஒன்று கட்ட திட்டமிடப்பட்டு இப்பணி 1929ல் முடிவுற்றது. இந்த அரண்மனைக்கு மன்னர் 1930ம் ஆண்டு குடியேறினார். தற்போது இந்த அரண்மனையில்தான் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் செயல்படுகிறது.

இந்திய வைஸ்ராய் மார்க்கியூஸ் வெல்லிங்டனும், அவரது துணைவியாரும் 1933ம் ஆண்டு டிசம்பர் 13ம் நாள் புதுக்கோட்டைக்கு வருகை தந்தனர். இந்திய வைஸ்ராய் ஒருவர் புதுக்கோட்டைக்கு வருகை தருவது அதுவே முதல் முறை ஆனதால் வைஸ்ராய் தம்பதிகளுக்கு நகர மக்களின் சார்பில் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

3.1.1934ல் சர் அலெக்சாண்டர் டாட்டன்ஹாம் புதுக்கோட்டையின் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். டாட்டன்ஹாம் தென்னிந்தியாவின் மக்களையும், அவர்களது பழக்க வழக்கங்களையும் நன்கு அறிவார். சரளமாக மலையாளமும், தமிழும் பேசக்கூடியவர்.

1897ல் சென்னையில் பணியில் சேர்ந்து, 1898ல் திருச்சி துணை கலெக்டராகவும், 1899-1906 வரை மலபாரின் துணை ஆட்சியாளராகவும், 1911ல் மதுரை கலெக்டராகவும், 1912-17ல் ராமநாதபுரம் கலெக்டராகவும், 1918ல் செங்கல்பட்டு கலெக்டராகவும், 1918-21ல் சென்னை கலெக்டராகவும் இருந்து இருக்கிறார். 1934-44ல் புதுக்கோட்டையின் ஆட்சியாளராகவும், 1944-46ல் புதுக்கோட்டை திவானாகவும் பணியாற்றினார்.

டாட்டன்ஹாம், சமஸ்தான ஆட்சியாளராக நியமிக்கப்பட்டபோது மன்னருக்கு 12 வயதே நிரம்பியிருந்தது. பிளாக்பர்ன், முன்பு மன்னர் குடும்பத்துடன் கொண்டிருந்த பாசப் பிணைப்பு, இவரிடமும் காணப்பட்டது. ஆம்! மன்னரை தமது பிள்ளை போல் பாவித்து நடத்தி வந்திருக்கிறார் டாட்டன்ஹாம். புதுக்கோட்டை சமஸ்தான ஆட்சியாளராக இருந்து அதன் முன்னேற்றத்திற்கும், மக்களின் நல்வாழ்விற்கும் மிகுந்த தொண்டாற்றி புதுக்கோட்டையின் வரலாற்றில் அழியாத இடத்தைப் பெறும், நிர்வாகிகளான பிளாக்பர்ன், சேஷய்யா சாஸ்திரி, ஆகியோருடன் டாட்டன்ஹாம் பெயரும் நிலைத்து நிற்கிறது. இந்த முப்பெரும் நிர்வாகிகளே புதுக்கோட்டையின் புகழுக்கு முத்தாய்ப்பு வைத்தவர்கள் ஆவார்கள்.

டாட்டன்ஹாம் சமஸ்தான ஆட்சிபொறுப்பை ஏற்றுக் கொண்டபோது புதுக்கோட்டை கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தது. மக்கள் பெரும் தொல்லைக்கு ஆளாகி இருந்தனர். எங்கும் வேலை இல்லா திண்டாட்டம்! ஆயிரக்கணக்கான பேர் இலங்கைக்கு கூலிகளாக குடிபெயர்ந்தனர். இந்நிலையில், மக்கள் துயர்துடைக்க தீவிர நடவடிக்கைகளை டாட்டன்ஹாம் மேற்கொண்டார். காவிரித் தண்ணீரை புதுக்கோட்டைக்கு கொண்டுவர ஆங்கிலேய அரசுடன் வாதிட்டார். ஆனால் நிதிநிலைக் காரணமாக இம்முயற்சிகள் வெற்றி அடையவில்லை.

1935ம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் பயனால் 1936ம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளில் பொதுத்தேர்தலைச் சந்திக்க தேசியத் தலைவர்கள் தயாரானார்கள். பண்டித நேரு அவர்கள் தமது தமிழ்நாட்டு பயணத்தின்போது (16.10.36 அன்று) காரைக்குடியிலிருந்து, புதுக்கோட்டை வழியாக திருச்சி செல்ல திட்டமிட்டிருந்தார். ஆனால் அவர் புதுக்கோட்டை நகர வீதிகளின் வழியாக செல்லக் கூடாது என்றும், நகரில் எல்லையில் உள்ள குறுக்குச் சாலை வழியாக செல்ல வேண்டும் எனவும் சமஸ்தான நிர்வாகம் ஒரு ஆணை பிறப்பித்தது. இதுகுறித்து 16.10.1936 இந்து நாளிதழில் வெளியான செய்தியின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது. ''காரைக்குடியில்

இருந்து 16.10.36 அன்று காலை 6.30 மணிக்கு புறப்பட்ட, பண்டித நேரு அவர்கள் பள்ளத்தூர், கொத்தமங்கலம், திருமயம் வழியாக, புதுக்கோட்டையை அடைந்தார். அப்போது காலை 9 மணி. புதுக்கோட்டை நகர எல்லையில் மக்கள் அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அப்படி வரவேற்பு அளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. நேருவுடன் யாரும் பேசக்கூடாது எனவும், மாலை அணிவிக்கக்கூடாது எனவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், நகர எல்லையில் மக்கள் கூட்டம் நேருவைக் காண காத்திருந்தது. நேரு அவர்கள் அவ்விடத்தை அடைந்ததும் கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அப்போது அங்கு தயாராக நின்றிருந்த உயர் காவல்துறை அதிகாரிகள் நேரு அவர்களின் அருகில் சென்று, அவர், புதுக்கோட்டை நகர வீதிகள் வழியாகச் செல்லக்கூடாது என்றும் அருகில் உள்ள குறுக்குச்சாலை வழியாகச் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்தனர். (நேரு வந்து இறங்கிய இடம் தற்போது மாலையீடு என்று அழைக்கப்படும் இடமாகும். அங்கிருந்து நகருக்குச் செல்லும் சாலையில் செல்லாமல், பிச்சத்தான்பட்டி வழியாகச் செல்லும் சாலையில் செல்ல வேண்டும் என அவர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்லாம்.)

''மிக விரைவாக திருச்சி செல்ல வேண்டும் எனத் திட்மிட்டு இருந்த பண்டித நேரு, எதிர்பாராத இந்த நிகழ்ச்சியைக் கண்டதும், காரிலிருந்து இறங்கி அங்கிருந்த மக்களைப் பார்த்துக் கைகூப்பிக் கொண்டு, நடகக ஆரம்பித்தார். ஆனால் மக்கள் யாரும் அவரிடம் பேச அனுமதிக்கபடவில்லை. அவரும் யாருடனும் பேச அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையை எதிர்பார்க்காத காவல்துறை அதிகாரிகளுக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை. நேரு தனது சகாக்களுடன் சுமார் ஒரு மைல் தூரம் நடந்தே சென்றார். காவல் துறையினரும், அவர் பின்னால் தொடர்ந்து சென்றனர். பிறகு, அவர், காலத்தைக் கருதி தனது காரில் ஏறிக்கொண்டு திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார்!''

இந்த நிகழ்ச்சி பற்றி நேரு அவர்கள் 16.10.36 இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், இச் செய்திகளை உறுதிபடுத்தியுள்ளார். இப்படி ஒரு தேவையற்ற நடவடிக்கையை புதுக்கோட்டை அரசு செய்து இருக்கவில்லை என்றால் தாம் புதுக்கோட்டை நகர வீதியில் நடந்து சென்றிருக்க வாய்ப்பே இல்லை எனவும், சமஸ்தான மன்னர் இளம் வயதினராக இருப்பதாலும், இங்கு ஆங்கிலேய ஆட்சியாளரைக் கொண்ட ஆங்கிலேயரின் மறைமுக ஆட்சி நடைபெறுவதாலும் தம்மைக் கண்டு சமஸ்தான நிர்வாகம் பயந்துவிட்டது எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேருவின் இந்த வருகை குறித்து புதுக்கோட்டையில் பலவாறாக பல கதைகள் சொல்லப்படினும், பதிவேடுகளிலும் அப்போதைய பத்திரிகைகளிலும் மேற்கண்ட செய்திகளே காணப்படுகின்றன.

டாட்டன்ஹாம் நேருவின் வருகையைத் தடைசெய்து இப்படி ஒரு உத்தரவைப் பிறப்பிக்கவில்லை என்றால் இந்த நிகழ்ச்சியை தவிர்த்திருக்கலாம்!

இரண்டாவது உலகப்போர் மூண்டு இங்கிலாந்து அப்போரில் ஈடுபட்டபோது, புதுக்கோட்டை சமஸ்தான மக்களும் தங்களது ஆதரவை இங்கிலாந்துக்கு தெரிவித்து சுமார் 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாயை போர் நிதியாக அளித்தனர்.

**17.1.1944ல் மன்னர் தமது 22ம் வயதில் சமஸ்தானத்தின் முழு** ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இருப்பினும் நிர்வாகத்தைக் கவனிக்க மூவர் கொண்ட ஒரு நிர்வாகக் குழு (Executive Council) அமைக்கப்பட்டது. திவான், இக்குழுவின் தலைவர். மற்ற இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு கவுன்சிலர் என்று பெயர். இதன்படி, ஆட்சியாளர் பதவியில் இருந்த டாட்டன்ஹாம் திவான் என்ற பதவியில் அமர்த்தப்பட்டார்.

அலெக்சாண்டர் டாட்டன்ஹாம் புதுக்கோட்டையின் முன்னேற்றத் திற்கு பெரிதும் பாடுபட்டுள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காலத்தால் முற்பட்ட பழமைச் சின்னங்களை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மண்வளத்தைப் பாதுகாக்க புதிய முறைகள் கொண்டுவரப்பட்டன. புதிய வழிமுறைகளைக் கையாண்டு விவசாயத்தைப் பெருக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். விவசாயிகளுக்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டன. கல்வி இயக்கம் கிராமங்களிலும், பரவ ஆவன செய்தார்.

அப்போது தொடர்ச்சியாக புதுக்கோட்டையில் ஏற்பட்ட வறட்சியின் காரணமான பஞ்ச நிலையை திறமையாக சமாளித்தார். திறமை வாய்ந்த மாணவர்கள் உயர் கல்விக் கற்க தக்க உதவிகள் செய்தார். ஏழை எளிய மக்களிடமும், ஆதரவற்றவர்களிடமும், பெரிதும் அன்பு பாராட்டினார். நீர்ப்பாசனம், கூட்டுறவு, மருத்துவம் ஆகிய துறைகளில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு புதுக்கோட்டையை நவீன காலத்துக்கு ஆயத்தப்படுத்திய பெருமை டாட்டன்ஹாமைச் சாரும்.

1946ல் டாட்டன்ஹாம் சற்று நோய்வாய்ப்பட்டு ஓய்வு எடுத்துக் கொள்ள இங்கிலாந்து சென்றார். சிறிது காலம் அங்கு தங்கி இருந்தார். ஆனால் அவரது நாட்டமெல்லாம் புதுக்கோட்டையின்மீதே இருந்தது. ஆகவே தனது நோயையும் பொருட்படுத்தாது புதுக்கோட்டைக்குத் திரும்பினார். புதுக்கோட்டையைத் தனது தாய்நாட்டைவிட மேலாக நேசித்தார் என்று சொல்லவும் வேண்டுமோ! 13.12.1946ல் புதுக்கோட்டையிலேயே காலமானார். அன்று இந்த நகரமே சோகத்தில் மூழ்கியது. அவரது கல்லறை தற்போது தஞ்சாவூர் சாலையில் உள்ள புரோட்டஸ்டண்ட் தேவாலயத்தை ஒட்டியுள்ள ஈமக்காட்டில் உள்ளது. **''50 ஆண்டுகள் இந்தியாவில் பணியாற்றியவர் - அந்த மக்களை நேசித்து, அவர்களிடம் அன்பு கொண்டவர்'', - இது அவரது கல்லறையில் காணப்படும் வாசகங்கள்!**

1946ம் ஆண்டு தொடக்கத்தில் இருந்தே இந்தியா சுதந்திரம் அடைவது உறுதியாகிவிட்ட நிலையில் சமஸ்தானங்களின் எதிர்காலம் தெளிவு பெறாத நிலை இருந்து வந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்தாலும், சுதேச சமஸ்தானங்கள் தனித்து இயங்குவதா அல்லது இந்தியாவுடன் இணைவதா என்பது கேள்விக் குறியாகவே இருந்து வந்தது.

அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் இறந்தபிறகு, முதல் கவுன்சிலராக இருந்த கான் பகதூர் கலிபுல்லா சாகிப் திவானாக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தது. சுதேச மன்னர்கள் ஆளும் சமஸ்தான பகுதிகளும், மக்களாட்சிக்கு மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஆட்சியாளர்கள் பரிசீலிக்கத் தொடங்கினர். புதுக்கோட்டையை அப்போது இருந்த சென்னை மாநிலத்துடன் சேர்க்க வேண்டும் என்று மக்கள் தங்கள் விருப்பத்தினை தெரிவித்தனர். புதுக்கோட்டை சமஸ்தானம் மன்னர் ஆட்சியின் கீழ் தனித்தே இயங்க வேண்டுமெனவும், ஒரு கோரிக்கை எழுந்தது. இதுபற்றி பொதுமக்களின் கருத்தை ஒன்று திரட்டி புதுக்கோட்டை சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைப்பதற்கு ஆதரவானதொரு பலத்த இயக்கத்தை திரு.முத்துசாமி வல்லத்தரசு என்னும் வழக்கறிஞர் முன்னின்று நடத்தினார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு சமஸ்தான நிர்வாகத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்த நமது இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மன்னருக்கு, நிர்வாகத்தில் ஆலோசனைகள் கூற இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். முதன் முதலாக இப்பதவிக்கு வழக்கறிஞர் திரு.சண்முகம் செட்டியார் அவர்களும், திரு.பாலகிருஷ்ணன் அவர்களும் நியமிக்கப்பட்டனர். 1947ல் ராஜகோபாலத் தொண்டைமான் டெல்லி சென்றபோது அண்ணல் மகாத்மா காந்தியை சந்தித்து உரையாடினார். 1948 ஜனவரி 31 அன்று மகாத்மா காந்திஜீ சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அவரது ஈமக்கிரியை நாளில், புதுக்கோட்டை சமஸ்தான எல்லைக்குட்பட்ட கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சரிசமமாக அனுமதிக்கப்பட வேண்டும் என்று மன்னர் ஆணையிட்டார்.

1948 மார்ச் மாதத்தில் இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் அழைப்பிற்கு இணங்க சமஸ்தானத்தின் எதிர்காலம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ராஜகோபால தொண்டைமான் அவர்கள் டெல்லிக்குச் சென்றார்கள். ஆனால் அக்கூட்டத்தில், இந்திய அரசு, புதுக்கோட்டை சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்ற திட்டத்தை முன் வைத்தது. சமஸ்தான மக்களும், இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று விரும்புகிற நிலையையும் அதே நேரத்தில் இந்திய அரசும் அதே

எண்ணத்தை கொண்டிருப்பதையும் புரிந்துகொண்ட இளம் வயதினரான மன்னர் ராஜகோபால தொண்டைமான், தனது உறவினர்களுடனும், சமஸ்தான உயர் அதிகாரிகளுடனும், கலந்து ஆலோசிக்காமலேயே இந்தியாவின் உள்துறை அமைச்சரிடம், புதுக்கோட்டை சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைக்க சம்மதம் தெரிவித்து, அதற்குரிய ஆவணங்களிலும் கையெழுத்திட்டு புதுக்கோட்டை திரும்பினார். 1948ம் ஆண்டு மார்ச்ச மாதம் 3ம் நாள் புதுக்கோட்டை சமஸ்தானம் இந்தியாவுடன் இணைந்தது. ஆம்! ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் புதுக்கோட்டையை ஆண்டுவந்த தொண்டைமான் பரம்பரையின் ஆட்சியும் முடிவுற்றது!

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கடைசி மன்னர் ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் அவர்கள் ஒரு ராஜரிஷியாக மிக எளிமையாக நமது காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். புதுக்கோட்டை மக்கள் அவரிடத்தில் இன்றும் பேரன்பு கொண்டுள்ளனர்.

## 19. 1947ல் புதுக்கோட்டை சமஸ்தானம்

புதுக்கோட்டை சமஸ்தானம் 3.3.1948ல் இந்தியாவுடன் இணைந்தது. 1947ல் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் அரசியல் பொருளாதாரம் குறித்த சில புள்ளிவிவரங்கள் இங்கு விவரிக்கப் படுகின்றன.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் (ஆலங்குடி, திருமயம், குளத்தூர் வட்டம்) மக்கள் தொகை 1941-ம் ஆண்டு கணக்குப்படி 4,38,348. புதுக்கோட்டை நகரின் மக்கள் தொகை 34,188.

மாட்சிமை தங்கிய திருமிகு பிரகதாம்பாதாஸ் ராஜா ராஜகோபால தொண்டைமான் சமஸ்தானத்தை ஆண்டுவந்தார். இவர் தொண்டைமான் பரம்பரையின் ஒன்பதாவது மன்னர் ஆவார். ஆங்கிலேயரின் வழக்கப்படி மன்னருக்கு பதினோரு குண்டுகள் முழங்கி அரசு மரியாதை செலுத்தப்பட்டு வந்தது. சமஸ்தான நிர்வாகம் ஒரு நிர்வாக சபையின் பொறுப்பில் இருந்தது. சமஸ்தான திவானும், இரண்டு கவுன்சிலர்களும் இதன் உறுப்பினர்கள். மன்னர் நிர்வாக சபையின் தலைவர் ஆவார். இக்காலத்தில் பி.கலிபுல்லா சாஹெப் திவானாக விளங்கினார். அரசின் தலைமைச் செயலகம் 'தர்பார் அலுவலகம்' என்று அழைக்கப்பட்டது.

50 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபை ஒன்று இருந்தது. (பார்க்க: புதுக்கோட்டை சட்டசபை) உறுப்பினர்கள் ''கவுன்சிலர்'' என்று அழைக்கப்பட்டனர். சட்டங்கள் இயற்றும் அதிகாரம் சட்டசபைகு வழங்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ இன்றைய சட்டமன்றங்களின் பணிகளை இச்சபை செய்து வந்தது. சுமார் 300க்கும் மேற்பட்ட சட்ட வடிவமைப்புகள் அமுலில் இருந்தன.

சமஸ்தானத்தின் நிதிநிலைமை நிறைவாக இருந்தது. சுமார் 48 லட்சம் ரூபாய் உபரி நிதியாக இருந்தது.

புதுக்கோட்டை நகராட்சி 1912-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. சமஸ்தானத்தில் இருந்த ஒரே நகராட்சி இதுதான். நகர சபைக்கு அப்போது 18 உறுப்பினர்கள் இருந்தனர். ஒரு தொகுதி பெண்களுக்கும் ஒரு தொகுதி முஸ்லீம்களுக்கும் ஒதுக்கப்பட்ட தனித் தொகுதிகளாக இருந்தன. திரு.வி.சண்முகம் செட்டியார் நகர்மன்றத் தலைவராக இருந்தார். நகரில் 36 குளங்கள் இருந்தன. அவற்றில் 13 குடிதண்ணீருக்காக பாதுகாக்கப்பட்டு வந்தன. நகரின் வீதிகளுக்கு மின்சார விளக்குகள் போடப்பட்டிருந்தன.

சமஸ்தானத்தில் இருபத்து ஆறு கிராம பஞ்சாயத்து சபைகள் இருந்தன. பஞ்சாயத்துக்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப 7 லிருந்து 11 உறுப்பினர்கள், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். இவற்றை உள்ளடக்கிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களும் இருந்தன. இவை ஒன்வொன்றிற்கும் ஏழு உறுப்பினர்கள் இருந்தனர். ஐந்துபேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரண்டு பேர் நியமன உறுப்பினர்கள். ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் அரசால் நியமிக்கப்பட்டனர். குடிதண்ணீர், சாலைகள், தெருவிளக்கு, ஆரம்பக்கல்வி, நூல்நிலையங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு இந்த உள்ளாட்சிகளின் பொறுப்பில் இருந்தன. 'திவான் பேஷ்கார்' என்னும் அலுவலர் உள்ளாட்சிகளின் தலைமை நிர்வாக அலுவலராக இருந்தார்.

மக்களின் பிரதானத் தொழில் விவசாயம் ஆகும். நெல், வரகு, சோளம், கேழ்வரகு, கம்பு, கடலை, பயறு வகைகள், கரும்பு பலவகையான காய்கனிகள் ஆகியன விளைபொருட்களாகும். ஆலங்குடி வட்டத்தில் முந்திரி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. பசுமைப்புரட்சியை ஏற்படுத்த விவசாயிகளுக்கு பொருளாதார வசதிகள் செய்து தரப்பட்டன. பாசனக் கண்மாய்கள் சீரமைக்கப்பட்டன. புதிய விவசாய முறைகளை சொல்லித்தர பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். தரமான விதைகளையும் உரங்களையும் மானிய விலைக்கு அரசே விநியோகம் செய்தது. சமஸ்தான எல்லைக்குள் காடு வளம் குறைவாகவே இருந்தது.

திருவப்பூர், பரம்பூர், கறம்பக்குடி ராமச்சந்திரபுரம், அரிமளம் ஆகிய இடங்களில் நெசவுத்தொழில் செய்யப்பட்டு வந்தது. செல்லுகுடியில் கம்பள நெசவு நடைபெற்றது. பாய் முடைதல், மற்றும் பனை ஓலைப் பொருடகள் செய்தல் பேரையூர், மிரட்டுநிலை ஆகிய இடங்களில் நடைபெற்று வந்தது. வைத்தூரில் நடந்துவந்த வளையல் செய்யும் தொழில், ஜப்பானிய வளையல் இறக்குமதிக்கு பலியாகியது. திருக்கோகர்ணத்தில் தீப்பெட்டி தயாரிக்கபபட்டது. புதுக்கோட்டை நகரில் ஒட்டகம் சோப், ஜோதி சூரியன் சோப், அண்ணாசோப், விணாயகர் சோப், புதுக்கோட்டை தொழிற்கூட்டுறவு சங்க சோப் ஆகிய பெயர் கொண்ட சோப்புத் தொழிற்சாலைகள் பெருமளவில் சோப்பு

தயாரித்தன. ராயவரத்திலும், புதுக்கோட்டையிலும் கையினால் பேப்பர் செய்யும் தொழிற்சாலைகள் இருந்தன. நமணசமுத்திரத்தில் புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ் மில் இயங்கி வந்தது.

சமஸ்தானத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு கருங்கல், சோப்பு, காவிக்கற்கள், கடலை, ஆவாரம்பட்டை, மஞ்சள், பலாப்பழம் ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன. மக்களின் உபயோகத்திற்குத் தேவையான ஏனைய பொருட்கள் அண்டை மாவட்டங்களிலிருந்து தருவிக்கப்பட்டன. உப்பு, நெல், வைக்கோல், புகையிலை, மூங்கில், மரவகைகள், மீன், பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியன அவற்றுள் சிலவாகும். அத்தியாவசியப் பொருட்கள் கட்டுப்பாடு முறையில் (ரேஷன்) வழங்கப்பட்டு வந்தன. உணவுப் பொருட்கள் விநியோகம் சீராக அமைய பலவிதமான சட்டங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன. தானியங்கள், புளி, மிளகாய், புண்ணாக்கு, விறகு ஆகியன பிற இடங்களுக்கு அனுமதி பெற்றே எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நடைமுறை இருந்தது. சென்னை (ஆங்கிலேய) அரசாங்கம் சமஸ்தானத்திற்குத் தேவையான ஜீனி மற்றும் உணவுப் பொருட்களை அளித்து வந்தது.

கூட்டுறவு இயக்கங்களை சமஸ்தான நிர்வாகம் ஊக்குவித்தது. சமஸ்தானத்தில் 134 கூட்டுறவு சங்கங்கள் இயங்கிவந்தன. இவற்றுள் விவசாயக் கூட்டுறவு கடன் சங்கங்களும் அடங்கும். புதுக்கோட்டையில் மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கி, பிரகதாம்பாள் கூட்டுறவு வங்கி ஆகியன இயங்கி வந்தன.

சமஸ்தானத்தில் இருந்த விளை நிலங்கள் இனாம், அயன் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தன. இனாம் நிலங்கள் கோயில்கள், தர்ம ஸ்தாபனங்கள், அரசு சேவை (ஊழியம்) ஆகியவற்றிற்காக அளிக்கப் பட்டிருந்ததாகும். ராணுவ சேவைக்கு அளிக்கப்பட்டவை அமரம் என்றும், ஏனைய அரசு பணிகளுக்கு அளிக்கப்பட்டவை உம்பளம் என்றும் அழைக்கப்பட்டன. அயன் என்பது அரசுக்குச் சொந்தமான நிலங்களாகும். அயன் நிலங்களிலிருந்து கிடைக்கும் நிலவரியே அரசுக்கு முக்கிய வருமானமாகும். விளைபொருளில் ஒரு பங்கு அரசுக்கு வரியாகச் செலுத்தப்படுவந்த 'அமானி' முறையை திவான் சேஷய்யா சாஸ்திரி மாற்றியமைத்து, தீர்வையை பணமாக வசூலிக்கும் முறையை கொண்டுவந்தார். அப்போது ஒரு ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு தீர்வை 1.8.0 (ஒரு ரூபாய், எட்டு அணா) ஆகவும், நஞ்சை நிலத்திற்கு 4-13-8 (நான்கு ரூபாய், பதிமூன்று அணா, எட்டு பைசா) ஆகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1944ம் ஆண்டில் மீண்டும் நில அளவை செய்ததால் இது 1947ல் முறையே ஆறு அணாவிலிருந்து மூன்று ரூபய் வரையிலும் ஒரு ரூபாய் எட்டு அணாவிலிருந்து ஏழு ரூபாய் எட்டு அணா வரையிலும் தரத்திற்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்டிருந்தன. இனாம் நிலங்களிலிருந்து சுமார் 2 லட்சம் ரூபாயும், அயன் நிலங்களிலிருந்து

சுமார் 8 லட்சம் ரூபாயும் அரசுக்கு வருமானமாகக் கிட்டியது. மதுவிலக்கு அமுலில் இல்லை. கஞ்சா செடி வளர்க்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

நீதி நிர்வாகத்தில் ஆங்கிலேய ஆட்சிப் பகுதியில் நடைமுறையிலிருந்த சட்டங்களும் நடைமுறைகளும் வழக்கிலிருந்தன. உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்துடன் கூடிய தலைமை நீதிமன்றம் ஒன்று தலைநகரில் செயல்பட்டது. இதுவே சமஸ்தானத்தின் உரிமையியல், குற்றவியல் (சிவில், கிரிமினல்) மேல் முறையீட்டு உயர் நீதிமன்றமாக செயல்பட்டது. இந்த நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் இருந்தனர். ஆலங்குடி, அன்னவாசல், கறம்பக்குடி, கீழாநிலை, குளத்தூர், பெருங்களூர், பொன்னமராவதி, திருமயம், விராலிமலை, ஆகிய இடங்களில் சிறு வழக்கு உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்பட்டன. இவற்றிற்கு மேல்முறையீட்டு இரண்டாம் நிலை நீதிமன்றம் புதுக்கோட்டையில் செயல்பட்டது. ஒன்பது கிராம பஞ்சாயத்து நீதிமன்றங்களும் (உரிமையியல்) செயல்பட்டு வந்தன. குற்றவியல் (கிரிமினல்) வழக்குகளை விசாரிக்க 20 குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தன. இவற்றுள், மூன்று முதல்வகுப்பு, ஏழு இரண்டாம் வகுப்பு, பத்து மூன்றாம் வகுப்பு. நிர்வாகப் பொறுப்பிலிருந்த திவான் பேஷ்கார் தலைமைக் குற்றவியல் நீதிபதியாகவும் செயல்பட்டார். வட்டாட்சியர்கள் (தாசில்தார்) இரண்டாம் வகுப்பு நீதிபதிகளாகவும் இருந்தனர். தீர்ப்புகள் தமிழில் எழுதப்பட்டன.

சமஸ்தானத்தில் சுமார் 100 வழக்கறிஞர்கள் இருந்தனர். இவர்களைத் தவிர 'முக்தியார்' எனப்படும் 50 வழக்கறிஞர்கள் இருந்தனர். சமஸ்தான நீதி நிர்வாகத் துறையால் நடத்தப்படும் தேர்வில் சான்றிதழ் பெற்ற இவர்கள், மூன்றாம் வகுப்பு நீதிமன்றங்களில் மட்டும் வழக்குறைக்கும் தகுதிச் சான்று (சன்னது) அளிக்கப்பட்டிருந்தனர்.

காவல் துறையினரின் மொத்த எண்ணிக்கை சுமார் 500 பேர் மட்டுமே., கண்காணிப்பாளர் ஒருவர் காவல் துறைக்கு தலைவராக இருந்தார். திருச்சியிலிருந்த (ஆங்கிலேய) காவல்துறை தலைமை அலுவலர் சமஸ்தான காவல்துறை நிர்வாகத்திற்கு ஆலோசகராக விளங்கினார். அணிவகுப்பு மரியாதை காரணங்களுக்காக சிறியதொரு ராணுவப்படையும் இருந்தது. மத்திய சிறைசாலை ஒன்று புதுக்கோட்டையிலும், பிற இடங்களில் எட்டு கிளைச் சிறைச்சாலைகளும் இருந்தன. பத்திரப்பதிவு அலுவலகங்கள் பத்து இருந்தன.

நகரின் பொது மருத்துவமனை 'மன்னர் மருத்துவமனை' என்று அழைக்கப்பட்டது. (தற்போதைய மாவட்ட தலைமை அரசினர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மருத்துவமனை) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஒரு தனி மருத்துவமலன இருந்தது. (தற்போதைய ராணியார் அரசு மருத்துவமனை) சமஸ்தானத்தின் பிற இடங்களில் பத்து மருந்தகங்கள் இருந்தன. புதுக்கோட்டை நகரில் மூன்று தனியார் இலவச மருத்துவ மனைகளும் இருந்தன. புதுக்கோட்டை நகரில் ஒரு

ஆயுர்வேத மருந்தகமும் இருந்தது. (இந்த மருந்தகம் இன்றும் உள்ளது) காலரா, அம்மை போன்ற தொற்றுநோய்கள் பரவாமல் இருக்க அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வந்தது. புதுக்கோட்டை நகரில் கால்நடை மருத்துவமனை ஒன்று இருந்தது.' கிராமப்புறங்களுக்கு அவ்வப்போது சென்று கால்நடைகளுக்கு வைத்தியம் செய்ய மூன்று மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

280 ஆரம்பப் பள்ளிகளும் 22 உயர்நிலைப் பள்ளிகளும் இருந்தன. இவற்றில் சுமார் 20,000 மாணவர்கள் பயின்றனர். தற்போதைய பிரகதாம்பாள் மேல்நிலைப்பள்ளி, அப்பேது மன்னர் கல்லூரியுடன் இணைந்த உயர்நிலைப் பள்ளியாக இருந்தது. தமிழ் பயிற்று மொழியாக இருந்தது. சமஸ்தானத்தில் இருந்த ஒரே கல்லூரி புதுக்கோட்டை மன்னர் கல்லூரியாகும்.

வேதங்களை பயிற்றுவிக்க புதுக்கோட்டையில் வேதபாடசாலை ஒன்றும் இருந்தது. தமிழ் படிப்பை ஊக்குவிக்க செட்டிநாட்டுப் பகுதியில் பல கலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றுள் மேலைச்சிவபுரியில் இருந்த கலாசாலையும், (தற்போதைய செந்தமிழ் கல்லூரி) கொப்பனாப்பட்டியிலிருந்த கலைமகள் கல்லூரியும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் தமிழ் பாடம் பயில்வோருக்கு தமிழ்ச்செல்வி, தமிழ் கலாமணி போன்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சுமார் 50 நூல் நிலையங்கள், படிப்பகங்கள் இருந்தன. இவற்றுள் நான்கு பெண்களுக்கென்றே செயல்பட்டன (ஒன்று புதுக்கோட்டையிலும் மூன்று வட்டத் தலைமையகங்களிலும்) ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப் பட்டிருந்தது. ஆரம்பக்கல்விக்கு பள்ளிக் கட்டணம் கிடையாது. உயர்நிலைப் பள்ளிகளில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்களுக்கு மட்டும் கட்டணச் சலுகை வழங்கப்பட்டது.

சமஸ்தானத்தின் எல்லா முக்கிய ஊர்களுக்கும் நல்ல சாலை வசதி இருந்தது. ராமேஸ்வரம் வரை செல்ல புகைவண்டி புதுக்கோட்டை வழியாக சென்றது. அந்த புகைவண்டிக்கு 'Indo Ceylon Express' என்று பெயர்.. சென்னையிலிருந்து இலங்கை செல்பவர்களுக்கு இது பயன்பட்டது. 38 அஞ்சல் நிலையங்கள் இருந்தன.

1945-ம் ஆண்டுமுதல் தேவதாசி முறை (ஆலயங்களுக்கு பெண்களை அர்ப்பணித்தல்) முற்றிலுமாக தடை செய்யப்பட்டது. ஆதரவற்ற குழந்தைகளுக்காக புதுக்கோட்டை பிச்சத்தான் பட்டியில் விஜயரகுநாத சதனம் என்னும் விடுதி செயல்பட்டுவந்தது. இக்காலத்தில் சுமார் 7000 பேர் இலங்கைக்கு குடி பெயர்ந்து சென்றனர். ஸ்ரீபிரகதாம்பாள் சமஸ்தான அச்சகம் என்ற பெயரில் அரசு அச்சகம் புதுக்கோட்டையில் இயங்கிவந்தது. (இதுவே தற்போதைய அரசினர் கிளை அச்சகம்).

இவ்வாறாக ஒரு தனி மாநிலத்தின் அந்தஸ்துடன் விளங்கிய புதுக்கோட்டை சமஸ்தானம் எல்லா துறைகளிலும் சிறப்புபெற்று விளங்கியது.

# மூன்றாவது பாகம்

## 1. அம்மன் காசு

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அம்மன் காசு எனப்படும் சிறிய காசு செலாவணியில் இருந்தது. அம்மன் காசு இங்கு நடைபெற்ற தசரா பண்டிகையோடு தொடர்புடையதாகும். தசார பண்டிகையின்போது ஏழை பிராமணர்களுக்கு அளிக்கும் பொருட்டு இந்தக் காசு 1738ம் ஆண்டு வாக்கில் அச்சடிக்கப்பட்டது. பின்பு சமஸ்தானத்தின் நடைமுறைச் செலாவணிக்கு வந்தது.

அம்மன் காசின் ஒரு பக்கத்தில் தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வமான பிரகதாம்பாள் அம்மனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதால் இப்பெயர் ஏற்பட்டது. காசின் மறுபக்கத்தில் 'விஜய' என்று தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது. அம்மன் காசு புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 1948ம் ஆண்டு வரை செலாவணியில் இருந்து வந்தது. தொடக்கத்தில் இக்காசுகள் புதுக்கோட்டை யிலேயே கையினால் தயாரிக்கப்பட்டன. இது அழகற்றதாகவும், காசுகள் ஒரே அளவில் இல்லாமலும் இருந்தன. காலப்போக்கில் வட்டவடிவமான அச்சில் வார்க்கப்பட்டன? காசின் அளவு (ஆரம்). .45'' எடை சுமார் 1.35 கிராம், மதிப்பு 1/4 அணாவுக்கு 5 காசுகள் அல்லது ஒரு ரூபாய்க்கு 320 காசுகள்.

1730 முதல் 1769 வரை புதுக்கோட்டையை ஆண்ட ராஜா விஜய ரகுநாத ராயத் தொண்டைமான், நெரூர் சதாசிவ பிரமேந்தரின் ஆத்ம பக்தர். தனது ஆன்மிக குருவான பிரமேந்திரரின் கட்டளைப்படி, தொண்டைமான், கோபாலகிருஷ்ண சாஸ்திரி என்பவரைத் தனது அரசவைக் குருவாக ஏற்றுக் கொண்டார். கோபால கிருஷ்ண சாஸ்திரியின் விருப்பப்படி புதுக்கோட்டையில் தசரா பண்டிகை கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது. தசரா பண்டிகையின்போது ஏராளமான பிராமணர்களுக்கு நல்ல உணவும், அரிசியும், பணமும், அளிக்கப்பட்டு வந்தது. இந்தக் காலத்தில்தான் அம்மன் காசு அச்சடிக்கப்பட்டது.

18ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட தசரா பண்டிகை, இரண்டாவது உலகப் போர் ஆரம்பிக்கும் வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அதன் பிறகு சிக்கன நடவடிக்கையின் காரணமாக தசரா கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்டன.

தசரா பண்டிகை நடைபெறும் 10 நாட்களுக்கும் பிராமண மக்களுக்கு ஒவ்வொரு நாளும், ஒரு படி அரிசியும், நான்கு அம்மன் காசுகளும், ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டது. ஒரு மாத வயதுள்ள குழந்தைக்குகூட இதே அளவு வழங்கப்பட்டது. அரிசியும், அம்மன்

காசும், பழைய அரண்மனையின் நான்கு வாயில்களிலும், பத்து நாட்களுக்கும் வினியோகிக்கப்பட்டு வந்தது. மாலை 3 மணிக்கு ஆரம்பிக்கும் வினியோகம் 6 மணிக்கு முடிவடையும். சமஸ்தான அரசுப் பணிகளிலிருந்த பிராமணர்களுக்கு தசரா பண்டிகையின் முடிவில் அரிசியும், அம்மன் காசும் மொத்தமாக வழங்கப்பட்டு வந்தது. இந்த வினியோகம் முதன் முதலில் ஒரு சுமங்கலிக்கு அளிக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெறும்.

அம்மன் காசு பற்றி முதன்முதலாக 1869ம் ஆண்டில் புதுக்கோட்டை தர்பார் பதிவேடுகளில், குறிப்பு காணப்படுகிறது. அம்மன் காசு உள்ளூர் கைவினைஞர்களால் வெட்டி தயாரிக்கப்பட்டது எனவும், இதனுடைய மதிப்பு காலணாவிற்கு 5 பைசா எனவும், தேவைப்பட்டபோதெல்லாம் இந்தக் காசு தயார் செய்யப்பட்டதாகவும், இந்தக் குறிப்புத் தெரிவிக்கிறது.

புதுக்கோட்டை சமஸ்தான திவானாக இருந்த சேஷய்யா சாஸ்திரி, சமஸ்தானத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், குறைந்த மதிப்புள்ள பொருட்களை வாங்குவதற்கு அம்மன்காசு பெரிதும் உபயோகமாக இருக்கும் என்று கருதி, தாராளமாக இதை செலாவணிக்கு கொண்டு வரத் திட்டமிட்டார். ஆகவே மேற்படி காசை கல்கத்தாவில் உள்ள ஆங்கிலேய அரசின் நாணயச் சாலையில் அச்சிட்டுத் தரும்படி ஆங்கிலே அரசைக் கேட்டுக் கொண்டார். இந்திய நாணயச் சட்டம் 1870ன்படி கல்கத்தா நாணயச் சாலையில் 2 பைசா, 1 பைசா நாணயங்கள் மட்டுமே அச்சடிக்கப்படுவதாகவும், மேலும் அங்கு அச்சடிக்கப்படும் நாணயங்களின் ஒரு பக்கத்தில் விக்டோரியா ராணியின் உருவம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவித்து, அப்படி கல்கத்தா நாணயச்சாலையில் அம்மன் காசு அச்சடிக்கப்பட வேண்டுமானால் பிரகதாம்பாள் அம்மன் உருவத்திற்குப் பதில் விக்டோரியா ராணியின் உருவத்தை பொறித்துக் கொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆலோசனையை சேஷய்யா சாஸ்திரி ஏற்றுக் கொள்ளவில்லை. குறுகிய ஒரு சமஸ்தானத்தில் மட்டுமே இக்காசு புழக்கத்தில் இருப்பதால் இந்திய நாணயச் சட்டங்கள் அம்மன் காசுக்குப் பொருந்தாது என்று, ஆங்கிலேய அரசுடன் சேஷய்யா சாஸ்திரி வாதிட்டார். இதுகுறித்து கவர்னர் ஜெனரலின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. ஆனால் இந்த வேண்டுகோளை கவர்னர் ஜெனரல் நிராகரித்தார். (சென்னை அரசாங்கம் - எண் 1666, நாள் 28.3.1898, நிதித்துறை) ஆகவே அம்மன் காசு அச்சடிக்கும் பணியை லண்டனிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்திடம் சாஸ்திரி ஒப்படைத்தார். லண்டனில் அச்சடிக்கப்பட்ட காசுகள் வட்டமான, அச்சுகளில் வார்க்கப்பட்டு, அழகான நாணயங்களாக செலாவணிக்கு வந்தன. தனியார் நிறுவனத்தில் (ஆர்டர்) கொடுத்திருந்த எல்லா காசுகளும் 1906ம் ஆண்டு வந்து சேர்ந்தன. இங்கிலாந்தில் இருந்து மேற்படி காசு

வார்ப்பு அச்சுக்கள் இங்கு கொண்டு வரப்பட்டு அது போன்ற அம்மன் காசுகளை இங்கேயே அச்சடிக்கலாமா என்று ஆராயப்பட்டது. இதற்கிடையில் 1906ம் ஆண்டு, இந்திய நாணய சட்டப்படி சுதேச சமஸ்தானங்கள் தங்களுக்குத் தேவையான காசுகளை ஆங்கிலேய அரசின் நாணயச் சாலையில் அச்சடித்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி ஒரு காசின் மதிப்பு ஒரு அணாவில் பதினாறு பங்கு எனக் கொண்டு ($^1/_{16}$ அணா) 20,7800 காசுகள் அச்சடிக்கப்பட்டன. இதன் மதிப்பு 645 ரூபாய். 1919ல் கல்கத்தா நாணயச்சாலையில் இதே எண்ணிக்கை காசுகள் அச்சடிக்க ரூபாய் 3,569/- ஆனது. 1925ல், அதே எண்ணிக்கைக்கு செலவு ரூபாய் 3,421 ஆகவும் 1934-ல் 3,590 ரூபாய் ஆகவும் இருந்தது. 1942ல், காசின் மதிப்பைவிட அச்சடிப்புச் செலவு மிகவும் கூடுதலாக இருந்ததால், அப்போது ஆட்சியாளராக இருந்த டாட்டன்ஹாம் புதிதாக காசுகள் அச்சடிக்க வேண்டியதில்லை என முடிவு செய்தார். ஆகவே 1934ம் ஆண்டு கடைசியாக அம்மன் காசுகள் அச்சடிக்கப்பட்டன.

சேஷய்யா சாஸ்திரி அம்மன் காசை அதிகமான செலாவணிக்கு கொண்டுவர நினைத்ததுபோல், டாட்டன்ஹாம் இந்த காசுக்கு ஆங்கிலேய அரசின் அங்கீகாரம் பெறுவதில் மிகவும் அக்கறை காட்டியுள்ளார். அதன் பயனாக சமஸ்தானத்தில் இருந்த தபால் நிலையங்களில் அம்மன் காசுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தபால் துறையினர் அம்மன் காசுக்குப் பதில் (பிரிட்டிஷ்) பணத்தை சமஸ்தான கருவூலங்களில் பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டது. இப்படியாக பிரிட்டிஷ் பணம் போன்று, அம்மன் காசும் செலாவணியில் அங்கீகாரம் பெற்றது. (Legal Tender)

செம்பு உலோகத்திற்கு பதிலாக பித்தளை போன்ற உலோகத்தில் அச்சடிப்பதன் மூலம் காசின் அச்சடிப்பு செலவு குறையும் என்பதால், இதுபற்றி டாட்டன்ஹாம் பரிசீலனை செய்தார். ஆனால் ஆகம விதிகளின்படி செம்பு மட்டுமே (தங்கம், வெள்ளிக்கு அடுத்து) வைதீகச் சடங்குகளுக்கு உகந்தது எனவும், ஆகவே வேறு உலோகத்தில் அச்சடிக்கக் கூடாது எனவும், சமஸ்தான ஆகம வல்லுநர்கள் தெரிவித்தனர். ஆகவே இம்முயற்சியும் கைவிடப்பட்டது. ஆனால் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் தொடர்ந்து 1948 வரை செலாவணியில் இருந்தன.

மத சம்பிரதாய பழக்கங்களுக்காக அச்சடிக்கப்பட்ட அம்மன்காசு, புதுக்கோட்டை மக்களின் அன்றாட வாழ்க்கையோடு ஒன்றி இருந்தது என்று சொல்லலாம். இன்றும்கூட "ஒரு அம்மன் காசு கூட இல்லை", "ஒரு அம்மன் காசு கூட உனக்குத் தரமாட்டேன்" போன்ற வாசகங்கள் புதுக்கோட்டை மக்களிடம் நடைமுறையில் இருக்கின்றன.

(இந்நூல் ஆசிரியர் 29.4.1987ல் தமிழ்நாடு நாணயவியல் சங்கத்தில் வாசித்த கட்டுரையிலிருந்து.)

## 2. இலக்கியம்

சங்க கால புதுக்கோட்டை சங்கத் தமிழ் இலக்கியங்களுடன் தொடர்புடையதாகும். சங்க இலக்கியங்கள் பலவற்றில் புதுக்கோட்டை மாவட்ட ஊர்ப் பெயர்கள் பல குறிப்பிடப்பட்டு இருப்பதையும், இங்கு புலவர்கள் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதையும் ஏற்கனவே கண்டோம். சங்க காலத்திற்கு பின்பு அரசியல் மாற்றங்களினால் தமிழகத்தில் ஏற்பட்ட இலக்கிய வரலாற்றிற்கு புதுக்கோட்டையும் தனது பங்கை அளித்துள்ளது. கி.பி.17ம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட தொண்டைமான் பரம்பரையின் ஆட்சியில், தமிழ் மற்றும் தெலுங்கு மொழி இலக்கியங்கள் நன்கு போற்றப்பட்டன.

ஆரம்ப காலத்தில் சமஸ்தானத்தை ஆண்ட மன்னர்கள், பெரும்பாலும், தெலுங்கு மொழி இலக்கியங்களையே ஊக்குவித்து வந்தனர். மன்னர்கள் பலரும் பெரும் தெலுங்குமொழிப் புலவர்களாகவும் விளங்கினர். அரசியல் குழப்பங்கள் நிறைந்திருந்த அந்நாளில் தெலுங்கு மொழி இலக்கிய வளர்ச்சிக்கு தொண்டைமான் மன்னர்கள் ஆதரவாக இருந்ததன் பயனாக இங்கு பல இலக்கியங்கள் உருவாகின. ஆந்திர தேசத்தில் புகழுடன் விளங்கிய தெலுங்கு மொழிப் புலவர்கள் பலர் சமஸ்தான அரசவையில் இருந்தனர்.

ராய ரகுநாதத் தொண்டைமான் (1769-1789) புகழ் வாய்ந்த தெலுங்கு கவிஞராக விளங்கினார். இவர் தெலுங்கில் காஜ கவி என்று அழைக்கப்பட்டார். இவரது அரசவையில் தெலுங்கு மொழிப் புலவர்கள் பலர் இருந்தனர். இவர், பார்வதி பரிநயமு, கவிஜனோன்னினிவாணி ஆகிய இரண்டு காவியங்களை இயற்றி உள்ளார். பார்வதி பரிநயமு என்னும் காவியம் காளிதாசரின், குமார சம்பவம் காவியத்தின் அடிப்படையில் அமைந்த பிரபந்தமாகும். இன்றும், இது ஒரு நல்ல காவியமாக போற்றப்படுகிறது. மன்னரின் தெலுங்குமொழிப் புலமைக்கு கவிஜனோன்னினி ஒரு எடுத்துக்காட்டாகத் திகழுகிறது.

ராயரகுநாதத் தொண்டைமானின் அரசவைப் புலவராக விளங்கியவர் வெங்கண்ணா என்னும் வெங்கண்ணகவி. புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் ஆதரவுடன் இவர் இயற்றிய தெலுங்கு நூல்கள் இன்றும் ஆந்திர தேசத்தில் புகழுடன் விளங்குகின்றன. 1. ஆந்திர பாஷர்ணவம் - இது தற்போது தெலுங்கு மொழியில் உள்ள மிகப் பெரிய சொல் அகராதியாகும். ராயரகுநாதத் தொண்டைமானின் கொடையில் இது உருவானதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். தெலுங்கு மொழிப் புலவர்களுக்கும், அறிஞர்களுக்கும் இந்த அகராதி வழிகாட்டியாகத் திகழ்கிறது. 2. ரகுநாதிவமு - தமக்கு ஆதரவு அளித்த வள்ளல் ரகுநாதத் தொண்டைமான் பெயரில் பாடப்பட்ட காவியம் 3. பார்வதி கல்யாணமு - பார்வதி பரமசிவன் திருமணத்தை விவரிக்கும்

யட்சகானம். 4. மல்லபுராணம் - தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த தெலுங்கு தேச மல்யுத்த வீரர்கள் பற்றிய வரலாற்று நூலாகும். இந்த மல்யுத்த வீரர்கள் தமிழ்நாட்டில் மல்யுத்தக்கலையின் மறுமலர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளனர். தெலுங்கு மொழியில் மல்யுத்தம் பற்றிக் கூறும் நூல் இது ஒன்றே. கந்தர்வக்கோட்டையில் வாழ்ந்த பிரிது கப்பல் மல்லன் என்பவனது பெயரால் இது பாடப்பட்டுள்ளது. 5. பிரிகன் நாயிகா தண்டகாமு, - திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பெயரில் பாடப்பட்ட தண்டக காவியமாகும். 6. தொண்டைமான் வம்சாவளி - இது 373 வரிகள் கொண்ட காவியமாகும். தொண்டைமான்களின் தோற்றம் மற்றும் வம்சாவளி குறித்த வரலாற்று செய்திகளை இந்நூல் தெரிவிக்கிறது. தொண்டைமான்களின் வரலாறு குறித்துத் தெரிந்து கொள்ள அடிப்படை ஆதாரமாக இந்நூல் விளங்குகிறது. இதில் கூறப்பட்டுள்ள செய்திகளை இக்காலத்தைச் சேர்ந்த பிற பாடல், மற்றும் ஆங்கிலேயர்களின் குறிப்புகள், உறுதிப்படுத்துகின்றன.

வெங்கண்ணாவின் மகன் சாம்பசிவக்கவி தொண்டைமான் வம்சாவளி,, பாடலின் தொடர்ச்சியாக ''தொண்டைமான் வம்ச பிரதாப மாலிகா'' என்ற பெயரில் பாடியுள்ளார். ரகுநாதராயத் தொண்டைமான் (1825-1839) வரை உள்ள வரலாற்றை இது கூறுகிறது. பில்கனியம், சந்திரநானதண்டகாமு, ஆகியன இவர் இயற்றிய ஏனைய நூல்களாகும். இவர் ராமச்சந்திரத் தொண்டைமானின் அரசவையிலும் கவிஞராக இருந்திருக்கிறார். சிதம்பர வித்வத்கவி என்னும் கவிஞரும் சந்திரநானதண்டகாமு என்னும் காவியத்தை ராமச்சந்திர தொண்டைமானின் பேரில் பாடியுள்ளார். சேஷய்யா என்னும் புலவர், விஜயரகுநாதத் தொண்டைமான் (1730-1769) பெயரில் விஜயரகுநாத சதகமு என்ற நூலை இயற்றியுள்ளார். தொண்டைமான் மன்னர்களின் வரலாறு குறித்த செய்திகளுக்கு இது சான்றாக விளங்குகிறது. மன்னாரய்யா என்னும் புலவர் பானுகவியின் ராசமஞ்சரி காவியத்தை தெலுங்கில் மொழி பெயர்த்துத் தனது புரவலர் விஜயரகுநாதத் தொண்டைமான் (1787-1807) பெயரில் பாடியுள்ளார். தெலுங்கு அலங்கார இலக்கிய வரிசையில் இந்நூல் சிறப்பான ஒரு இடத்தைப் பெறுகிறது. நாவனப்ப கட்க சிரோன்மனி என்னும் புலவர் கட்க லட்சண சிரோன்மனி என்னும் நூலை இயற்றியுள்ளார். இது, பலவிதமான வாட்கள், அதன் தொழில் நுட்பம், உபயோகிக்கும் முறை ஆகியன குறித்துக் கூறும் நூலாகும். இப்புலவர் ராயரகுநாதத் தொண்டைமான் (1769-1789) விஜயரகுநாத தொண்டைமான் (1789-1807) ஆகியோரின் அரசவையில் இருந்தவர். இந்நூல் குறிப்பிடும் பிராங்கு எனப்படும் கத்தி சமீப காலம் வரை 'பராங்கு' என்ற பெயரில் புதுக்கோட்டையில் உபயோகத்தில் இருந்தது. சூரிக்கத்தி என தற்போது வழங்கப்படும் கத்தி சிரியாவில் இருந்து வந்ததாகும் என்பதும் தெரியவருகிறது.

தெலுங்கு மொழியோடு தமிழும் நன்கு போற்றப்பட்டு வந்தது. தமிழறிந்த புலவர்கள் பலர் தொண்டைமான்களின் அரசவைகளில் இருந்தனர். தொண்டைமான்களின் ஆதரவின் கீழ் உருவான தமிழ் பாடல்கள், நாட்டிய நாடகங்கள், கும்மி, அம்மானைப் பாடல்கள், மிகப் பலவாகும். அவற்றுள் ஒருசிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம். 1. சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத்தமிழ், 2. சிவந்தெழுந்த பல்லவராயன் உலா, 3. ராய தொண்டைமான் அனுக்கிரக மாலை, 4. ராயதொண்டைமான் இரட்டை மணிமாலை. மேற்கண்ட நான்கு பாடல் தொகுப்புகளும் தொண்டைமான்களின் வரலாறு குறித்த செய்திகளையும் சேதுபதி, மராட்டியர், ஆகியோருடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு, ஆகியன குறித்த செய்திகளையும் தெரிவிக்கின்றன. 5. அம்புநாட்டு வளந்தான். 6. வெங்கண்ண சேர்வை வளந்தான் - இவை தொண்டைமான் மன்னர்களின் போர்கள் குறித்த செய்திகளை தெரிவிக்கின்றன. 7. விராலிமலைக் குறவஞ்சி 8. விரலியின் காதல் 9. திருமலைராயன் கப்பல் 10. ஆண்டப்பு வேளான் குறவஞ்சி 11. உடையப்ப வேளான் குறவஞ்சி 12. திருமலைராயன் கலித்துறை 13. நல்லப் பெறியாள் கலியுகக் குழுவல் நாடகம் 14. நாவலங்க நல்லக்குட்டி குழவல் நாடகம் 15. திருக்களம்பூர் முத்து வைரவன் சேர்வை கும்மி (வீரபாண்டிய கட்டபொம்மனைப் பிடித்தத் தொண்டைமானின் படைத்தளபதி) 16. கபிலை நாடகம் - இது கேசவ பாரதி என்பவரால் எழுதப்பட்டது. சமீபகாலம் வரை திருக்கோகர்ணம் கோவிலில் நாடகமாக நடிக்கப்பட்டு வந்தது. 17. ஏழைப்பங்காளி, கருணைக்கடைக்கண், பிறவியில்லாத அருள், மனத்துயர் தீர்த்தருள், தருணமிதம்மா, பஞ்சரத்தினம் என்று அழைக்கப்பட்ட இந்த ஐந்து பாடல்களும், திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பெயரில் விஜயரகுநாதத் தொண்டைமான் (1730-1769) பாடியதாகும். இம்மன்னர் மேலும் பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். 18. ஆலூர் குழுவல் நாடகம் 19. இயன்மொழி வாழ்த்து 20. பிரகதாம்பாள் கும்மி 21. வாராப்பூர் வளர்ந்தான் 22. மழவராயனேந்தல் 23. அபிஷேக மாலை (இது ஒரு முஸ்லீம் புலவர் இயற்றியது) 24. குமரேசசதகம் - குமரமலை முருகன் புகழ் பாடும் பாடல் 25. ஆவுடையார் கோவில்புராணம் 26. மிழலைச் சதகம் 27. கானநாட்டுச் சதகம். இதேபோன்று இன்னும் பல பாடல்களும், நாட்டுப் பாடல்களும், நாடகங்களும், கும்மிப்பாட்டுகளும், இயற்றப்பட்டுள்ளன. கேரள நாட்டை ஆண்ட மன்னர் சுவாதித் திருநாள் (1813-1846) திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பெயரில் பல பாடல்களை பாடியுள்ளார். இப்பாடல்கள் இன்றும் திருக்கோகர்ணம் கோவிலில் பாடப்படுகின்றன. தொண்டைமானும் திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி பெயரில் பல பாடல்களை இயற்றி தமது புலமையை வெளிக்காட்டி இருக்கிறார்.

சமஸ்கிருத பண்டிதர்களும், இங்கு போற்றப்பட்டனர். திருக்கோகர்ணம், திருமயம், குடுமியான்மலை ஆகிய இடங்களில்

உள்ள கோவில் தல புராணங்கள் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டன. (அரபி, உருது, பாரசீகம், ஆகிய மொழிகளும் கற்பிக்கப்பட்டன. 1807ல் இருந்து 1875 வரை மராத்தி சமஸ்தான ஆட்சி மொழியாக இருந்தது.)

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செட்டிநாட்டைச் சேர்ந்த பல பெருந்தகையாளர்கள் புதுக்கோட்டை நவீன கால இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்திருக்கின்றனர். புதுக்கோட்டையிலிருந்து பல தமிழ் புத்தகங்களும், வார, மாத இதழ்களும் இவர்களது முயற்சியால் வெளிவந்தன.

(இந்நூல் ஆசிரியர், தென்னிந்திய வரலாற்று பேரவையின் 7வது கருத்தரங்கில் படித்த கட்டுரையிலிருந்து - சென்னை. ஜனவரி 1987)

## 3. சமணம்

சமண மதம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே புதுக்கோட்டையில் நன்கு வேரூன்றியிருந்தது. சித்தன்னவாசல், வெள்ளனூர், அம்மாசத்திரம், தேனிமலை, நார்த்தாமலை, செட்டிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள சமணச் சின்னங்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன. புதுக்கோட்டைப் பகுதியில் இருக்கின்ற இயற்கை குகை அமைப்புகளும், காடுகளும் சமண முனிவர்களின் தங்குமிடங்களாகப் பயன்பட்டு வந்தன. கி.பி.7-ம் நூற்றாண்டிற்குப் பின் பாண்டி நாட்டில் ஏற்பட்ட சைவசமய பக்தி இயக்கங்களின் காரணமாக புதுக்கோட்டைப் பகுதிக்கு சமண சமயத்தினர் பெருமளவில் குடிபெயர்ந்தனர். இங்கு அவர்களுக்கு சாதகமான சூழ்நிலைகள் அமைந்திருந்ததை இது காட்டுவதாக அமைகிறது.

சித்தன்னவாசல் அக்காலத்தில் சமணமத மையமாக விளங்கியது எனத் தெரியவருகிறது. ஏழடிப்பட்டம் இயற்கைக் குகையில் ஒரு படுக்கையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டு (கி.மு.2-ம் நூற்றாண்டு) எருமையூர் நாட்டில் பிறந்த கௌடிகன் என்னும் சமண முனிவருக்கு சிறுபாவில் (சித்துப்போசில் அல்லது சித்தன்னவாசல்) இளையர் என்பான் செய்வித்த அதிட்டானம் (படுக்கை) என அக்கல்வெட்டு கூறுகிறது. திட்டைச்சாணன், தொழுக்குன்றத்துக் கடவுளன் திருநீலன் ஆகிய பெயர்களும் இங்குள்ள மற்ற இரு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவைகளும் சமண முனிவர்களின் பெயர்களே எனத் தெரிகிறது.

சித்தன்னவாசல் குகைக்கோயிலில் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் சமண சமயக் கருத்துக்களை தெரிவிப்பதாக உள்ளன. குகைக்கோயில் முன் மண்டபத்தில் உள்ள சிற்பங்களும், கருவறையின் பின் சுவற்றில் உள்ள சிற்பங்களும் சமண தீர்த்தங்கரர்களின் சிற்பங்களாகும். ''தாமரைத் தடாகம்'' - ஓவியக் காட்சியும் சமண

புராணங்கள் கூறும் கருத்துக்களை வலியுறுத்துவதாக உள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

சித்தன்னவாசலைப் போன்று நார்த்தாமலையும் பல குன்றுகளுடன் கூடிய இயற்கைச் சூழலுடன் அமைந்த இடமாகும். இங்கும் நிறைய சமணச் சின்னங்கள் காணப்படுகின்றன. மேலமலையிலுள்ள புதினென்பூமி வின்னகரம் என்றும் விஷ்ணு கோயில் முன்பு 'சமணர் குடகு' என்னும் சமணக் கோயிலாக இருந்து கி.பி.12-ம் நூற்றாண்டில் வைணவக் கோயிலாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். நார்த்தாமலைக் குன்றுகளின் (ஆளுருட்டிமலை) தொடர்ச்சியான அம்மாசத்திரம் மலையில் உள்ள இயற்கை குகையின் தரையில் சித்தன்னவாசல் ஏழடிப்பட்டத்தில் உள்ளதுபோன்று நான்கு படுக்கைகள் காணப்படுகின்றன. உடைந்துபோன சமணதீர்த்தங்கரர் சிலை ஒன்றும் இங்கு காணப்படுகின்றது. இந்த குகையும் சமண முனிவர்களின் இருப்பிடமாக இருந்திருக்க வேண்டும். குகையின் வெளியே (மலையிலேயே வெட்டப்பட்ட) சமண தீர்த்தங்கரர் சிற்பங்கள் இரண்டு காணப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டொன்று இம்மலையை திருப்பள்ளிமலை என்று அழைக்கிறது. 'பள்ளி' என்பது சமணக் கோயிலைக் குறிக்கும். மேலும் தர்மதேவர், கனகச்சந்திரர் என இரண்டு சமண ஆச்சாரியார்களையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. பொன்மலை எனப்படும் பொம்மாடி மலையில் சமணப் பள்ளி ஒன்று இருந்ததாகவும் இது தென் திருப்பள்ளி மலை என்று அழைக்கப்பட்டதாகவும் இங்குள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. ஆகவே நார்த்தாமலையும் கி.பி.12-13-ம் நூற்றாண்டுவரை சமணர்களின் உறைவிடமாக இருந்திருக்க வேண்டுமென்பது விளங்குகிறது.

திருமயம் வட்டத்திலுள்ள தேனிமலை சமண முனிவர்களின் உறைவிடமாகத் திகழ்ந்திருக்கிறது. குன்றில் ஒரு இயற்கை குகையும் உள்ளது. இது சமண முனிவர்கள் தவம் செய்த இடமாக இருக்க வேண்டும். இவ்விடம் தற்போது ஆண்டார்மடம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு தவம் செய்துவந்த மலையத்துவஜன் என்னும் முனிவரை, கொடும்பாளுரை ஆண்ட இருக்கவேள் மன்னன் இங்கு வந்து வணங்கி கொடையளித்த செய்தி இங்குள்ள ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. (பு.க.எண்.9) ஆனால் மன்னன் இன்னாரென்று தெரியவில்லை. கல்வெட்டின் எழுத்தமைதியினைக் கொண்டு இது கி.பி.7-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். குன்றின் மேற்குப் பகுதியில் (பாறையிலேயே) சமணதீர்த்தங்கரரின் சிற்பம் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. 'வல்ல உதன சிறுவோட்டி' என்பவன் இத்திருமேனியை செய்வித்ததாக இதன்கீழ் உள்ள கல்வெட்டு

குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டின் காலமும் தெரியவில்லை தேனிமலை என்று வழங்கப்படும் இவ்வூர் இங்குள்ள கல்வெட்டில் தேனூர் மலை (தேனூருக்கு அருகில் உள்ள மலை) என்று குறிக்கப்படுகிறது. ஆனால் அருகில் தேனூர் என்ற ஊர் உள்ளது. இங்கு காணப்படும் சமண சின்னங்களைக் கொண்டு இவ்வூர்ப் பகுதியில் சமண மதம் தழைத்தோங்கி இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இது குறித்து மேலும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

குளத்தூர் வட்டத்தில் (குன்னாண்டார் கோயிலுக்கு அருகே) உள்ள செட்டிப்பட்டி ஒரு சிறந்த சமணமையமாக திகழ்ந்த இடமாகும். கீரனூர்-கிள்ளுக்கோட்டை பெருவழிச் சாலையிலிருந்து உள்ளே தள்ளி உள்ள இந்த குக்கிராமத்தில் 'சமணர் குண்டு' என்று அழைக்கப்படும் கோயிலின் இடிபாடுகள் ஒரு காலத்தில் மிகப் பெரிய சமணப் பள்ளியாக விளங்கிய இடமாகும். இவ்விடத்தை அடைய தற்போதுகூட மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. இந்த சமணப்பள்ளி அமைதியானதொரு சூழலில் இங்குள்ள வெண்ணாவிக் குளக்கரையில் அமைந்திருக்கிறது. இவ்வூர் மக்கள் இவ்விடத்தை ஓட்டைக் கோயில் என்று அழைக்கின்றனர். மேலும் இவ்விடத்தில் பேய் பிசாசுகள் உலவுவதாகவும், இவ்விடத்திலுள்ளப் பொருட்களைத் தொட்டால் தங்களுக்குத் தீங்கு வரும் என்றும் நம்புகின்றனர்.

இங்கு காணப்படும் கல்வெட்டுகளில் இவ்வூர் திருவெண்ணாயில் என்று அழைக்கப்படுகிறது. இதைக் கொண்டே இங்குள்ள குளம் வெண்ணாவிக்குளம் என்று வழங்கப்படுகிறது.

செட்டிப்பட்டியிலுள்ள சமணர் குண்டு எனப்படும் இடம், பல கோயில்களின் இடிபாட்டு மேடாகும். இங்கிருந்த சமணப்பள்ளி கி.பி.10-ம் நூற்றாண்டில் ராஜராஜசோழன் காலத்தில் சிறந்து விளங்கியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இக்கோயிலின் இடிபாடுகளிடையே கண்டெடுக்கப்பட்ட, சமண தீர்த்தங்கரர்கள், மற்றும் சமணம் தொடர்பான சிற்பங்கள் புதுக்கோட்டை அருங்காட்சியகத்திற்குக் கொண்டுவரப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

திருவெண்ணாயிலில் உள்ள சமணக் கோயில் ஐநூற்றுவர் பெரும்பள்ளி என்று அழைக்கப்பட்டதாக மற்றொரு கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கிறது. ஐநூற்றவர் என்போர் அக்காலத்தில் இப்பகுதியில் இருந்த வணிகர் குழுவினராவார். அவர்களது பெயரால் இந்த சமணப்பள்ளி கட்டப்பட்டிருக்க வேண்டும். திருவெண்ணாயில், திருவேலங்காடு செப்பேடுகளிலும் குறிப்பிடப்படுகிறது.

சிறப்பு வாய்ந்த இந்த சமணப்பள்ளியும், சமணர் குடியிருப்பாகத் திகழ்ந்து, இவ்வூரும், இவ்வூரின் அருகிலுள்ள வேறு சில இடங்களும் நமக்குத் தெரிவிக்கும் வரலாறு நமக்கு வியப்பூட்டுவதாக அமைகிறது.

குளத்தூர் வட்டத்தில் வெள்ளனூர், மோசகுடி அன்னவாசல் போன்ற இடங்களிலும் நிறைய சமணச் சின்னங்கள் காணப்படுகின்றன.

புதுக்கோட்டை - திருக்கோகர்ணத்திற்கு அருகிலுள்ள சடையப்பாறை என்னுமிடத்தில் ஒரு சமண தீர்த்தங்கரரின் சிற்பம் காணப்படுகிறது. இங்கிருந்த கல்லாற்றுப்பள்ளி என்னும் சமணமடத்தை ஒட்டியிருந்த பெருநற்கிள்ளி சோழ பெரும்பள்ளிக்கு நிலங்கள் மானியமளிக்கப்பட்ட செய்தியை இங்குள்ள சுந்தர பாண்டியன் காலத்துக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இம்மன்னன் யாரென்று தெரியவில்லை. (கி.பி.13-14ம் நூற்றாண்டு) 'சமணர் பாறை' என்று வழங்கப்பட்ட இவ்விடம் நாளடைவில் ''சடையப்பாறை'' எனத் திரிந்து வழங்குகிறது. சமீபத்தில் ஒரு எழுத்தாளர் இதை ''சடாயு பாறை'' எனக் குறிப்பிட்டு இங்குதான் ராமாயண சடாயு ராவணனுடன் சண்டையிட்டு உயிர்நீத்தான் என எழுதியுள்ளது ஒரு வேடிக்கையான செய்தியாகும்.

புதுக்கோட்டை நகரின் மையத்திலுள்ள மன்னர் கல்லூரி வளாகத்தில் சமணதீர்த்தங்கரர்களின் படிமங்கள் (Bronze) புதை பொருட்களாக கிடைத்துள்ளன. கலையழகு மிக்க இந்த படிமங்கள் தற்போது புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் காலம் சுமார் 10ம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. ஆகவே அக்காலத்தில் இந்த இடம் ஒரு சமணப் பள்ளியாக இருந்து பின்பு அழிந்திருக்க வேண்டுமெனக் கருத இடமுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்னும் பல இடங்களில் இதுபோன்ற சமணப்பள்ளிகள், இருந்ததற்கான கல்வெட்டுச் செய்திகள் கிடைக்கின்றன. மேலும் பல இடங்களில் சமண சிற்பங்கள் காணப்படுகின்றன. (இந்த சமண சிற்பங்களை பல இடங்களில் இந்து சமய தெய்வங்களுடன் சேர்த்து வைத்து வழிபடுகின்றனர்).

கி.பி.12-13ம் நூற்றாண்டிற்குப் பிறகு சைவ வைணவ பக்தி இயக்கங்களின் காரணமாக இப்பகுதியில் சமணம் முற்றிலுமாக வலுவிழந்திருக்க வேண்டும். ஏனெனில் இக்காலத்திற்குப் பின் சமணம் குறித்த செய்திகள் அதிகமாகக் கிடைக்கவில்லை. சமணம் ஒரு காலத்தில் இங்கு பரவலாகப் பின்பற்றப்பட்டு வந்தபோதிலும், இவர்களது குடியிருப்புகள் சில நூறு ஆண்டுகளுக்கு முன்கூட இங்கு அதிகம் இருந்திருக்கவில்லை. ஒருவேளை இவர்கள் சூழ்நிலைகளின் காரணமாக வேறு மதங்களைத் தழுவி இருக்கலாம். தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் சமண மதத்தைச் சார்ந்த குடும்பம் ஒன்றுகூட இல்லை! சமணம் பாமர மக்களிடையே வேரூன்றவில்லை என்பதையே இது காட்டுவதாக அமைகிறது.

# 4. புதுக்கோட்டை சட்டசபை

தொண்டைமான் பரம்பரையினர் ஆண்டு வந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில், மக்கள், மன்னரை, கடவுளுக்கு அடுத்தபடியாக வணக்கத்திற்குரியவராகக் கருதினர். கி.பி.19-ம் நூற்றாண்டில் பிளாக்பர்ன், சேஷய்யா சாஸ்திரி போன்ற நிர்வாகிகளின் சீர்திருத்தங்களினால் மக்களின் வாழ்க்கைத் தரம் ஓரளவிற்கு உயர்ந்திருந்தது. மன்னராட்சியில் மக்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அருகில் உள்ள ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டப் பகுதிகளில் சுதந்திரப் போராட்டங்கள் வலுவடைந்ததன் பயனாக, அங்கு, நிர்வாகத்தில் மக்களுக்குப் பங்கும், வேறுபல சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்பட்டன. மாறுபட்ட இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சமஸ்தான நிர்வாகமும், மக்களுக்கு நிர்வாகத்தில் பங்களிக்க ஆவன செய்தது. இதன் பயனாக 1902ம் ஆண்டு மக்கள் பிரதிநிதி சபை (Assembly of nominated Representatives) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஜனநாயகப் பாதையில் மக்களுக்கு அளிக்கப்பட்ட முதல் பெரும் சலுகையாகும் இது. (இதுபோன்ற சலுகைகள் ஆங்கிலேய ஆட்சிப் பகுதியில் 1861லேயே வழங்கப்பட்டிருந்தன.) இந்த சபையில் 30 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்கள் சமஸ்தான நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டனர். உறுப்பினர்களின் பதவி காலம் ஒரு ஆண்டு ஆகும். இச்சபை ஆண்டிற்கொருமுறை கூடியது. சமஸ்தானத்தின் வளர்ச்சிப் பணிகள் குறித்து நிர்வாகம் இக்கூட்டத்தில் அறிக்கை அளித்தது. உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க அனுமதிக்கப்பட்டனர். 1907ல் இச்சபை உறுப்பினர்கள் 9 பேர் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சபையின் பெயரும் "Representative Assembly" என்று மாற்றியமைக்கப்பட்டது. 1915ல் சபைக்கு 25 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வகை செய்யப்பட்டது.

பிரதிநிதி சபையின் ஆலோசனையின்படி 1904ல், சமஸ்தான நிர்வாகத்திற்கு உகந்த சட்டங்கள் இயற்ற சட்டக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1915 முதல் இந்தக் குழுவில் மக்கள் பிரதிநிதி சபை உறுப்பினர்களும் அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இக்குழு, பின்பு சட்டசபை ஆலோசனைக் குழு (Legislative Advisory Council) என்று அழைக்கப்பட்டது. இந்தச் சபைகள் ஆலோசனைக் குழுக்களாகவே செயல்பட்டு வந்தன. காலப் போக்கில் சமஸ்தான வரவு செலவு திட்டத்தை விவாதிக்கும் உரிமையும், பிரதிநிதி சபைக்கு அளிக்கப்பட்டது. ஆனால் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வாக்கெடுப்பு மூலம் பதிவு செய்து கொள்ள உரிமை இல்லை. இருப்பினும் இச்சபைகள் மக்களுக்கும், மன்னருக்கும், ஒரு இணைப்புப் பாலமாக விளங்கியது.

1920ம் ஆண்டில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட புதிய எழுச்சிகளைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு மேலும் பல ஜனநாயக உரிமைகளை வழங்க சமஸ்தான நிர்வாகம் ஏற்பாடு செய்தது. மேற்சொன்ன இரண்டு சபைகளையும் ஒன்றிணைத்து 1924ல் அதிக அதிகாரங்களுடன் கூடிய புதிய சட்டசபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. (Legislative Council) இதில் 70% பேர் பொது வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இதற்காக தனி வாக்காளர் பட்டியலும் தயாரிககப்பட்டது.

**வாக்காளரின் தகுதி:** 1. குறிப்பிட்ட தொகுதியில் 100 நாட்களுக்கு மேல் வசித்து வருபவராக இருப்பதோடு பத்து ரூபாய் வரி செலுத்தும் பட்டாதாரர். அல்லது சொந்த நிலத்திலிருந்து ரூ.350க்கு மேல் வருமானம் உள்ளவர்கள். 2. மூன்று ரூபாய் நகராட்சி வரி செலுத்துவோர். 3. பட்டதாரிகள் 4. 25 ரூபாய் ஒய்வு ஊதியம் பெறுபவர்கள், ஆகியோர் வாக்களிக்க தகுதியுடையவர்களாக இருந்தனர். பெண்களுக்கும் வாக்குரிமை உண்டு. வாக்காளர்களின் தகுதி மிகவும் கடுமையாக இருந்ததால் 1940ம் ஆண்டு $4^1/_2$ லட்சம் மக்கள் தொகைக் கொண்ட சமஸ்தானத்தில் 20 ஆயிரம் வாக்காளர்களே இருந்தனர்.

புதிய சட்டசபையில் 50 உறுப்பினர்கள இருந்தனர். இவர்களில் 35 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொது வாழ்க்கையில் உள்ளவர்களும், உயர் அலுவலில் உள்ளவர்களுமாக 15 நியமன உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். சட்டசபையின் பதவி காலம் 3 ஆண்டுகள். சபை நடவடிக்கைகள் தமிழில் நடைப்பெற்றன. 1927ம் ஆண்டு முதல் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் தனித் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. சமஸ்தான திவான் சட்டசபையின் தலைவர் ஆவார். இவரே, சபைக்கு, அரசின் சார்பில் பொறுப்பாக இருந்தார். துணைத்தலைவர் பதவி 1934 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. சட்ட சபைக்கு சட்டங்கள் இயற்றும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மசோதாக்கள் மன்னரின் இசைவு பெற்றபின் சட்டமாயின. சட்டமன்றத்தின் அனுமதியின்றி அவசர சட்டங்கள் இயற்ற மன்னருக்கு அதிகாரம் இருந்தது. மன்னரின் குடும்ப விஷயங்கள், ஆங்கிலேயருடன் மன்னருடைய உறவு, சட்டசபை குறித்த சட்டங்கள் ஆகியவைகளைக் குறித்து விவாதிக்க உறுப்பினர்களுக்கு அதிகாரம் இல்லை. சமஸ்தானத்தின் நிதி மற்றும் நிர்வாக, நடவடிக்கைகள் அனைத்தும் சட்ட சபையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. பொதுமக்களை பாதிக்கும் விஷயங்கள் குறித்து தீர்மானங்கள் கொண்டுவர உறுப்பினர்களுக்கு அதிகாரம் இருந்தது. ஒவ்வொரு சட்டசபைக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் போதும் தொண்டைமான் மன்னரின் மீதும், ஆங்கிலேய பேரரசர் மீதும், தங்களது விசுவாசத்தை வெளிப்படுத்தி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

சட்டசபை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 1948ம் ஆண்டு வரை 7 சட்ட சபைகள் அமைக்கப்பட்டன. இரண்டாவது உலகப்போர் காரணமாக ஏழாவது சட்டசபையின் பதவிக்காலம் ஏழு ஆண்டுகள் நீடிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் வேறு எந்த சமஸ்தான சட்டசபையிலும் 70% தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லை. இது புதுக்கோட்டை சட்டசபையின் சிறப்பு அம்சமாகும்.

புதுக்கோட்டை சட்டசபை, சமஸ்தானத்தின் அரசியல் **அமைதிக்கு ஒரு காரணமாக இருந்தது என்றால் அது மிகையாகாது.**

(இந்நூல் ஆசிரியர், தென்னிந்திய வரலாற்று பேரவையின் மூன்றாவது கருத்தரங்கில் படித்த கட்டுரையிலிருந்து. ஈரோடு. மே 1982.)

# 5. புதுக்கோட்டை தந்த சொல்வேந்தர் சத்தியமூர்த்தி

தீரர் சத்தியமூர்த்தி 19.8.1887-ல் திருமயத்தில் பிறந்தார். இவரது முன்னோரது பூர்வீகம் ஆவுடையார்கோயிலை அடுத்த செம்மணாம்பொட்டல் என்னும் கிராமமாகும். இவரது தந்தையார் சுந்தரசாஸ்திரி, தாயார் சுப்புலட்சுமி அம்மையார். சுந்தரசாஸ்திரி புதுக்கோட்டையில் வழக்கறிஞராக தொழில் செய்து வந்தார். சத்தியமூர்த்தியின் இளம் வயதிலேயே இவரது தந்தையார் காலமானார். தனது தாயாரின் பெருமுயற்சியால் கீரனூரிலும் புதுக்கோட்டையிலும் பள்ளிப்படிப்பை முடித்த பின்பு, புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பயின்றார். பின்பு சென்னை சட்டக்கல்லூரியில் பயின்று வழக்கறிஞரானார்.

தனது மாணவப் பருவத்திலேயே நமது நாட்டின் விடுதலை இயக்கங்களில் பங்குகொண்டார். தனது வழக்கறிஞர் தொழிலை கவனியாது தேசிய இயக்க நடவடிக்கைகளில் தனது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார். காங்கிரஸ் கட்சியிலிருந்த மூத்த தலைவர்கள் பலர், ஆங்கிலேய அரசுடன் வாதாடி படிப்படியாக சுதந்திரம் அடையத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதே மேல் எனக் கருதினர். இக்கருத்திற்கு எதிரான தலைவர்களின் அணியில் சத்தியமூர்த்தி இருந்தார்.

விழிப்படைந்த பாரத மக்களின் மீது ஆங்கிலேய அரசு அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டது. இதன் ஒரு பகுதிதான் ஜலியன்வாலாபாக் படுகொலைச் சம்பவங்கள். இதுபோன்ற சம்பவங்கள் ஆட்சியாளர்கள் மீது மக்கள் மனதில் பெரும் வெறுப்பை ஏற்படுத்தியது. இந்திய மக்களை அமைதிப்படுத்தும் முகத்தான் ஆங்கிலேய அரசு இந்திய மக்களுக்கு மேலும் பல அரசியல் சலுகைகளை வழங்கத் திட்டமிட்டது. இதற்காக இங்கிலாந்தில் அமைக்கப்பட்டிருந்த அந்நாட்டு

நாடாளுமன்றக் குழுவின் முன்பு தங்கள் கருத்துக்களை எடுத்துவைக்க இந்தியாவிலிருந்து பல தூதுக்குழுக்கள் சென்றன. காங்கிரஸ் மகாசபையின் சார்பில் பண்டித மதன்மோகன் மாளவியா தலைமையில் அனுப்பப்பட்ட தூதுக்குழுவிற்கு, செயலாளராகச் சத்தியமூர்த்தி இங்கிலாந்து சென்றார். ஆறு மாத காலம் அங்கு தங்கி இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் பல பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டு இந்திய மக்களின் சுதந்திர வேட்கைப்பற்றி எடுத்துரைத்தார். அந்நாட்டு அரசியல் அமைப்புகள் அனைத்தும் அவரைப் பேச அழைத்துப் பாராட்டின.

1920-ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து நம்நாடு திரும்பியதும் தனது வழக்கறிஞர் தொழிலை விடுத்து காங்கிரசின் முழுநேரத் தொண்டரானார். நாட்டின் பல பகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, மக்களிடம் மேலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். இந்நிலையில் மகாத்மா காந்திஜீயின் தலைமையில் நாட்டின் விடுதலை இயக்கம் தீவிரமடைந்திருந்தது. விடுதலைப் பெறுவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள் குறித்து காங்கிரஸ் தலைவர்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. பண்டிதநேரு, சித்தரஞ்சன்தாஸ் போன்ற தலைவர்கள், அரசாங்கத்தை சட்டசபை மூலம்தான் எதிர்க்க முடியும், ஆகவே காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்ட சடைக்குச் செல்லவேண்டும் என வற்புறுத்திவந்தனர். இதன் காரணமாக காங்கிரஸ் மகா சபைக்குள் (சட்ட சபை நுழைவை ஆதரித்து) சுயராஜ்யா கட்சி தோன்றியது. இக்கட்சியின் முக்கிய உறுப்பினராக சத்தியமூர்த்தி விளங்கினார். காலப்போக்கில் சட்டசபைக்கு தங்களது உறுப்பினர்களை அனுப்ப காங்கிரஸ் இணங்க வேண்டியதாயிற்று.

அப்போது, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் அடங்கிய பகுதி சென்னை ராஜதானி என்று அழைக்கப்பட்டது. இதற்கான சட்டசபை தேர்தலில் சத்தியமூர்த்தி சுயராஜ்யா கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1923-ம் ஆண்டில் சென்னை மாநில சட்ட சபை உறுப்பினர் ஆனார். இவரது சொல்லாற்றலையும், வாதத்திறமையையும் கண்டு ஆங்கிலேயர்களே பாராட்டியுள்ளனர். 1925-ம் ஆண்டு சத்தியமூர்த்தி மீண்டும் ஒருமுறை இங்கிலாந்து சென்று சுயராஜ்யா கட்சியின் கொள்கைளை விளக்கி வந்தார். 1926-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 1930-ம் ஆண்டுவரை சட்டசபை உறுப்பினராக இருந்தார்.

காந்திஜீயின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டு, 1930-ம் ஆண்டு, தடையை மீறி தேசியக் கொடியை ஏற்றியதற்காக ஆறுமாதம் சிறை தண்டனை அடைந்தார். பின்னர் 1931-32-ல் அந்நிய துணிகள் விற்கும் கடைகளின் முன்பு மறியல் செய்தமைக்காக கைது செய்யப்பட்டு எட்டு மாதம் சிறைத் தண்டனை அடைந்தார். அப்போது இவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி மகாத்மா காந்திஜீ கூறியும் கேளாது தனது தேசியப் பணியைத் தொடர்ந்தார்.

1934-ல் நடைபெற்ற டில்லி மத்திய சட்டசபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். மாநில சட்டசபையில் செயல்பட்டது போன்று மத்திய சட்டசபையிலும் இவரது பணி பாராட்டி வியக்கத்தக்கதாக இருந்தது. மேலும் மத்திய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராகவும் இருந்தார். சட்டசபையில் இவர் ஆற்றியுள்ள நூற்றுக்கணக்கான சொற்பொழிவுகள் படித்துப் பயன்பெறத் தக்கவையாகும். 1940-ம் ஆண்டுவரை மத்திய சட்டசபையின் உறுப்பினராக விளங்கினார்.

1936-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார். 1937-ம் ஆண்டில் நடைபெற்ற மாநில சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்கட்சி ஆட்சி அமைத்தது. சக்கரவர்த்தி ராஜாஜி முதலமைச்சரானார். காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கு சத்தியமூர்த்தியின் உழைப்பு மகத்தானதாக இருந்தது.

1939-40ம் ஆண்டில் சென்னை மேயராக தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்போது சென்னை நகரை அழகுபடுத்த முயற்சிகள் மேற்கொண்டார். சென்னை நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் நடவடிக்கையாக, பூண்டி நீர்த்தேக்கத் திட்டத்தைக் கொண்டுவந்தார். இவரது நினைவாக பூண்டி நீர்த்தேக்கத்திற்கு சத்தியமூர்த்தி சாகர் என்று பெயரிடப்பட்டுள்ளது.

சத்தியமூர்த்தி சீர்திருத்த மனம் படைத்தவர். 1937-ல் ராஜாஜி, தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசத்தை சட்டமாக்கினார். 1939-ல் சத்தியமூர்த்தி முன்னின்று, மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துச் சென்று வழிபாடு நடத்தினார்.

சத்தியமூர்த்தி ஒரு சிறந்த நாடக நடிகர். சென்னையில் அப்போது சிறப்புடன் இயங்கிவந்த சுகுண விலாச சபாவில், பம்மல் சம்மந்த முதலியாருடன் இணைந்து, தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத நாடகங்கள் பலவற்றில் நடித்துள்ளார். கர்நாடக இசைக்கும், பரதநாட்டியத்திற்கும் புத்துயிரூட்டுவதற்காக 1929-ம் ஆண்டு சங்கீத வித்வத் சபையை (தற்போதைய மியூசிக் அகாடமி) துவக்கப்பட காரணமாக இருந்தவர்களுள் சத்தியமூர்த்தி மிக முக்கியமானவர் ஆவார்.

தீரர் சத்தியமூர்த்தி அகில இந்திய அரசியலில் தீவிர பங்கு எடுத்துக் கொண்ட போதிலும் தமது சொந்த ஊரான புதுக்கோட்டையின் மீது அக்கரை காட்டத் தவரவில்லை. சமஸ்தான மக்களுக்கும் சுயராஜ்ய உரிமை வேண்டுமென்று அவர் வாதாடி வந்தார். 12.11.1920-ல் நடைபெற்ற புதுக்கோட்டை மகாஜன சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சமஸ்தான மக்களுக்கும் சுயராஜ்ய உரிமை வேண்டுமென்றும் மன்னரின் மகன் சிட்னிக்கு மன்னர் பதவி அளிக்கக் கூடாது என்றும் எடுத்துரைத்தார். இதனால் புதுக்கோட்டையில் நுழைய அவருக்கு தடைவிதிக்கப்பட்டது.

சத்தியமூர்த்தி, சந்தர்ப்பம் கிட்டும்போதெல்லாம் புதுக்கோட்டை மக்களை தட்டியெழுப்பிக் கொண்டிருந்தார். மக்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. புதுக்கோட்டையில் நுழைய விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டவுடன் 1926-ம் ஆண்டு சத்தியமூர்த்தி மீண்டும் புதுக்கோட்டைக்கு வருகை தந்தார். அவரைக் கண்ட மக்கள் அகமகிழ்ந்தனர். புதுக்கோட்டை சமஸ்தான வாரிசு உரிமை குறித்து மீண்டும், மீண்டும் சத்தியமூர்த்தி தனது கருத்துக்களை செய்தித்தாள்கள் மூலம் தெரிவித்து வந்தார். இதன்காரணமாக அவர் புதுக்கோட்டையில் நுழைய மீண்டும் தடைவிதிக்கப்பட்டது.

சமஸ்தான மக்களிடையே ஏற்பட்ட எழுச்சியின் பயனாக மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் அளிக்கும் வண்ணம் புதுக்கோட்டை சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. மேலும் தொண்டைமான் பரம்பரையைச் சேர்ந்த ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் மன்னராக நியமிக்கப்பட்டார். இவையெல்லாம் சத்தியமூர்த்தியின் முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி என்றே செல்லலாம்.

1940-ம் ஆண்டு நடைபெற்ற தனிநபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சத்தியமூர்த்தி கலந்துகொண்டு ஒன்பது மாதம் சிறை தண்டனை அடைந்தார். உடல்நலம் குன்றியிருந்த போதிலும் தொடர்ந்து நாட்டுப் பணியில் ஈடுபட்டார். 1942-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ம் நாள் காந்திஜீ ''வெள்ளையனே வெளியேறு'' என பிரகடனப் படுத்தினார். இதன் தொடர்பாக சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் வைக்கப்பட்டார். பின்பு மகாராஷ்டிர மாநிலம் அம்ரோட்டி சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது. மீண்டும் சென்னை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைக்காக சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தீவிரமான சிகிச்சைகள் பயனற்றுப்போயின. இந்த நாட்டின் சேவைக்காக தன்னை அற்பணித்துக்கொண்ட புதுக்கோட்டை தந்த அந்த தியாகச் சுடர் 28.3.1943 அன்று அணைந்தது. ஆம்! அந்த தீரர் ஒரு சிறைக் கைதியாகவே மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

தீரர் சத்தியமூர்த்தியின் நூற்றாண்டுவிழா 1987-ம் ஆண்டு புதுக்கோட்டையில் கொண்டாடப்பட்டது. அப்போதைய பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ்காந்தி அவர்கள் சத்தியமூர்த்தியின் திருவுருவச் சிலையினைத் திறந்துவைத்து அவருக்கு புகழஞ்சலி செலுத்தினார். 1989-ம் ஆண்டில் சத்தியமூர்த்தியின் பிறந்த ஊரான திருமயத்திலும் இவரது திருவுருவச்சிலை வைக்கப்பட்டது. திருமயத்தில் தமிழக அரசு கட்டியுள்ள நூலகக் கட்டிடத்திற்கும் இவரது பெயர் சூட்டப்பட்டது.

தீரர் சத்தியமூர்த்தியின் தியாகத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட மக்கள் தங்கள் அஞ்சலியை செலுத்துவதில் எப்போதும் பெருமையடைகின்றனர்!

# 6. புதுக்கோட்டை தந்த நன் முத்து டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி

''மங்கையராக பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'' கவிமணியின் வாக்கிற்கு ஏற்ப தமிழன்னையின் மாதவப் புதல்வியாகத் தோன்றிய டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி, புதுக்கோட்டையில் பிறந்தவர். மங்கையர் குல மாணிக்கமான டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய சமூகசேவகி ஆவார். நலிந்த ஆரதவற்ற பெண்களுக்காக தனது வாழ்வை அற்பணித்துக்கெண்டவர்.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி 1886ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் நாள் புதுக்கோட்டையில் பிறந்தார். இவரது தந்தையார் நாராயணசாமி அய்யர். இவர் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் முதல்வராக பணியாற்றினார். சாதி சம்பிரதாயங்கள் வலுவுடனிருந்த அக்காலத்தில், இசைக்கலையிலே புலமை வாய்ந்த சந்திரம்மா என்ற பெண்மணியை நாராயணசாமி அய்யர் கலப்புத் திருமணம் செய்துகொண்டார்.இவர்களது தவப்புதல்வியாக தோன்றியவரே டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, அம்மையாரின், உடன் பிறந்தோர் மூவர். சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞராகவும், சமூக தொண்டராகவும் திகழ்ந்த திரு.ராமையா இவரது தம்பி. இசைத் தமிழில் நல்ல புலமைவாய்ந்த சுந்தரம்பாள், சென்னை ராணி மேரிக் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்ற முதல் இந்தியபெண் என்ற பெருமையையும், சர்வதேச சங்கத்தில் அமைதிப்பணியாற்றிய முதலாவது இந்திய பெண் என்ற பெருமையையும் பெற்ற நல்லமுத்து, இவ்விருவரும் இவரது சகோதரியர். ''அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு'' என்று கருதிய அக்கால சமுதாயத்தில், எதிர்நீச்சல்போட்டு தனது பள்ளிப்படிப்பை, புதுக்கோட்டை பாலையா பள்ளியிலும், ராணியார் உயர் நிலைப்பள்ளியிலும் முடித்தார், முத்துலட்சுமி.

கல்லூரியில் சேர்ந்து படிக்க விருப்பம்கொண்டு புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் சேர 4.2.1904-ல் விண்ணப்பித்தார். அன்று சமஸ்தான ஆட்சியில் இருந்த அதிகாரிகளுள் சில பழமைவாதிகள், அவரை கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கு பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவரை இழித்து பேசினர். ஆனால் பெண்கள் கல்வியில் பெரும் ஆர்வமும், முற்போக்கு சிந்தனையும் கொண்ட அப்போதைய தொண்டைமான் மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் அதிகாரிகளின் மறுப்புகளை தூக்கியெறிந்துவிட்டு முத்துலெட்சுமி அவர்களுக்கு கல்லூரியில் சேர அனுமதி வழங்கினார். (புதுக்கோட்டை தர்பார் பதிவுகள்).

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் படிப்பை முடித்துக் கொண்டு சென்னை பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியைத் தொடர்ந்தார். இந்தியாவிலேயே மருத்துவக் கல்வியில் பட்டம் பெற்ற முதல்பெண்மணி என்ற சிறப்பையும் பெற்றார். டாக்டர் சுந்தரரெட்டி என்பவரை மணந்துகொண்டு சென்னையில், டாக்டர் தொழிலை சீரும் சிறப்புடன் தொடர்ந்தார். ஏழை, எளிய மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை செய்வதில் பெரிதும் ஆர்வம் காட்டினார். திறமையான மருத்துவர் என்று பெயர் பெற்ற போதும், இவரது மனம் சமூக சேவையில் அதிக நாட்டம் கொண்டது. கைம்பெண்கள், ஆதரவற்ற குழந்தைகள், ஆதரவற்றப் பெண்கள் ஆகியோர் படும் அல்லல் இவரது மனத்தை உறுத்தியது. ''வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்ற அருட்பாவின் கூற்று இவரது எண்ணத்திற்குத்தான் பொருத்தமாக அமைந்ததோ?.

பெண்களின் சிறுமையைப் போக்கவும் அவர்கள் மேன்மையடையவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட அவர், ஆதரவற்ற பெண்களுக்காக, சென்னையில் 1930-ல் ''அவ்வை இல்லம்'' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி, வாழ்க்கைப்பாதையில் வழிதவறி, களையிழந்த பெண்களுக்கு கலங்கரைவிளக்கமாக விளங்கினார். இன்று இந்த இல்லம் பல நூற்றுக்கணக்கான பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் ஒரு சரணாலயமாகத் திகழ்கிறது.

டாக்டர் முத்துலெட்சுமியின் மருத்துவ ஆற்றலைக்கண்ட அன்றைய இந்திய-ஆங்கிலேய - அரசு அவரை 1925-ல் குழந்தைகள் பெண்கள் மருத்துவ நோய் ஆராய்ச்சிக்காக லண்டனுக்கு அனுப்பி வைத்தது. அங்கிருந்து இவர் பாரீஸ் நகரம் சென்று அங்கு நடைபெற்ற மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டார். அம்மாநாட்டில் இவர் ஆற்றிய உரை மேல்நாட்டவர்களாலும் பாராட்டப்பட்டது.

கொடுமையான புற்றுநோயிலிருந்து மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற விழுமிய நோக்கத்துடன் 1936-ம் ஆண்டில் இதற்கென ஒரு பெரும் இயக்கத்தையே நடத்தினார். புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்க ஒரு தனி மருத்துவமனையை ஏற்படுத்த முயன்று இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் நிதி திரட்டினார். இவரது முயற்சியின் பயனாக சென்னை அடையாற்றில் இந்த புற்றுநோய் மருத்துவமனையை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவரது முயற்சிக்கு மக்களின் நல்லாதரவும் கிட்டியது. 1952-ல், முன்னாள் பாரதப்பிரதமர் பண்டித நேரு அவர்கள் இம்மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்கள். 1954-ல் இது செயல்படத் துவங்கியது. இன்று ஆசியாவிலேயே புற்று நோய் மருத்துவத்தில் புகழ்மிக்க ஒரு மருத்துவமனையாக இது திகழ்கிறது. அவ்வை இல்லமும், அடையார் புற்று நோய் மருத்துவமனையும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மனித இனத்திற்கு விட்டுச்சென்றுள்ள மிகப்பெரிய நினைவுச் சின்னங்களாகும்.

மகாத்மா காந்திஜீயின் தலைமையிலான இந்திய விடுதலை இயக்கத்திலும், உலகத்தில் எங்கெல்லாம் மகளிரின் உரிமைக்காக குரல் கொடுக்கப்பட்டதோ, அந்த இயக்கங்களிலும் முத்துலெட்சுமிரெட்டி ஆர்வம் கொண்டிருந்தார். பெண்கள் உரிமைக்காக போராடிய டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையாருக்கு இவர் உறுதுணையாக இருந்தார். சர்.டி.சதாசிவ அய்யர், சர்.சி.பி.ராமசாமி அய்யர், சர். சதாசிவ அய்யர், சர். முத்துசாமி அய்யர், சர்.எஸ். சீனிவாச அய்யங்கார் போன்றோரும் இவருடன் சேர்ந்து பெண்கள் உரிமைக்காக போராடினார்.

1929-ல் சென்னை இந்திய மாதர் சங்கம் பெண்களுக்கு சட்டசபையில் பிரிதிநிதித்துவம் அளிக்கவேண்டுமென போராடியது. இதன்பயனாக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, சென்னை சட்டசபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சட்டசபையின் துணைத்தலைவரா கவும், தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபையில் நுழைந்த முதல் இந்திய பெண்மணி இவரே! உலகிலேயே, ஒரு சட்டசபையின் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணியும் இவரே. இவர் சட்டசபை உறுப்பினராக இருந்தபோது சமுதாயத்தில் புரையோடிக்கிடந்த பல பழைய, கொடிய பழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பாடுபட்டார். இதற்காக அவர் சந்தித்த எதிர்ப்புகள் பல.

சமுதாயத்தில் ஒரு இனத்தைச் சேர்ந்த பெண்கள் கோவில்களில் "தேவதாசிகள்" என்ற பெயரில் இழிக்கப்படுவதை தடை செய்யும் சட்டத்தை இவர் சட்டமன்றத்தில் முகவுரைத்தார். சனாதானிகள் சண்டைக்கு கிளம்பினர். அக்காலத்தில் கோயிலில் பணிபுரியும் பெண்கள் மட்டுமே பரதநாட்டியம் ஆடிவந்தனர். இந்த சட்டம் நிறைவேறினால் பரதக் கலையின் எதிர்காலம் என்னவாகும் என்று நாட்டியக்கலைப் பிரியர்கள் எதிர்வாதம் செய்தனர். பெண்களை இழிவுபடுத்தும் இந்த முறையின் மூலம்தான் பரதநாட்டியத்தை வளர்க்க முடியமென்றால் அந்தக்கலை இந்த நாட்டிற்குத் தேவையே இல்லை என்று ஆணித்தரமாக சட்டசபையில் வாதிட்டார் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி. இறுதியாக அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் வெற்றியும் கண்டார். பெண்கள் பால்ய விவாகத்தைத் தடைசெய்ய கொண்டு வரப்பட்ட சாரதா சட்டத்தை இயற்றுவதில் இவர் பங்கு போற்றுதற்குரியது. மேலும் பெண்கள் விபச்சாரத்தடைச் சட்டத்தை நிறைவேற்றவும், பெண்கள் கோயில்களுக்கு அர்ப்பணிக்கப்படுவதை (பொட்டு கட்டுதல்) தடைசெய்யும் சட்டத்தை நிறைவேற்றவும் இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு சமுதாயம் என்றும் இவருக்கு கடமைப்பட்டுள்ளது.

1930-ல் மகாத்மா காந்தி அடிகள் ஒத்துழையாமை இயக்கப் போராட்டங்களின் போது கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தனது சட்டசபை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். சுதந்திர வேட்கைக்கொண்ட ஒரு இந்திய வீராங்கனையின் செயல் என நாம் இதைக் கருதினாலும், அவர்

சட்டசபையில் இருந்திருந்தால் இன்னும் பல, சமூக நலச்சட்டங்கள், இயற்றப்பட்டிருக்குமே என்ற ஏக்கம் ஏற்படுகிறது. 1933-ல் சிக்காகோவில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் இவர் கலந்து கொண்டார்.

இத்தனை சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டு தனது சிந்தனை செயல், மூச்சு, அனைத்தையும் பெண்கள் நலனுக்காக அர்ப்பணித்துக் கொண்ட அந்த அன்னை மூதாட்டி நம்மிடையே இல்லையாயினும் அவர் ஏற்றிவைத்த ஒளிவிளக்கு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. (இவர் 22.7.1968ல் தமது 82-வது வயதில் காலமானார்) அந்த ஒளியில் இன்று பெண்கள் சமுதாயம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

புதுக்கோட்டையில் பிறந்து இத்தனை சிறப்புக்களையும் பெற்ற இந்த முதல் மகளிர்குல மாணிக்கத்தின் புகழ் புதுக்கோட்டைக்கே உரியது அன்றோ! இவரது நினைவாக புதுக்கோட்டையிலுள்ள மாவட்ட அரசு மருத்துவமனைக்கு "டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை" என தமிழக அரசு பெயர் சூட்டியிருக்கிது. இந்திய அரசு இவருக்கு பத்மபூஷன் விருது வழங்கி கௌரவித்துள்ளது. இவரது நூற்றாண்டு விழாவினை புதுக்கோட்டையில் தமிழக அரசு 28.7.87 அன்று கொண்டாடியது.

(29-7-87 தினமலர் நாளிதழில் வெளியான இந்நூல் ஆசிரியரின் கட்டுரை).

## 7. இந்திய சுதந்திரப் போராட்டமும், புதுக்கோட்டையும்

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் தமிழ்நாட்டின் எல்லைக்குள் மன்னராட்சி நிலவிய புதுக்கோட்டை சமஸ்தானத்தைப் போன்று இந்தியா முழுவதும் 562 சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. இவற்றுள் சென்னை ராஜதானியின் ஆட்சிக்குட்பட்ட 5 சமஸ்தானங்களுள் புதுக்கோட்டையும் அடங்கும். சாந்தூர் பங்கனப்பள்ளி, திருவாங்கூர், கொச்சி ஆகியன இதில் அடங்கியிருந்த ஏனைய சமஸ்தானங்கள் ஆகும்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்டுவந்த தொண்டைமான் மன்னர்களின் வரலாறு அவர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இருந்த தொடர்பு ஆகியன குறித்து விரிவாகக் கண்டோம். தொண்டைமான் மன்னர்களுக்கு எல்லா அதிகாரங்களும் இருந்தபோதிலும் அவர்கள் ஆங்கிலேயர்களின் மேலாதிக்கத்திற்கு கட்டுப்பட்டே ஆட்சி செலுத்தவேண்டியிருந்தது. மன்னர்கள் மக்களின் நலனை நன்கு பேணி வந்ததால் மக்களுக்கும் மன்னர்களுக்கும் சுமுகமான உறவு, நிலவி வந்தது. 1920-ம் ஆண்டுக்குப்பின் சமஸ்தானத்தை ஒட்டியிருந்த ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் சுதந்திரப் போராட்டம்

தீவிரமாக்கப்பட்டிருந்தக் காலத்தில் புதுக்கோட்டை அமைதியாகவே இருந்தது. ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளில் நடைபெற்ற சுதந்திர போராட்டமானது ஆளுகின்றவர்களுக்கும் (அரசு) ஆளப்பட்டு வந்தவர்களுக்கும் (மக்கள்) இடையே நடைபெற்ற ஒரு போராட்டமே! இதே போன்று இந்த சமஸ்தானத்தில் நிலவிய மன்னர் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிகள் ஏதும் ஏற்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இந்திய அரசியலில் அப்போது ஏற்பட்ட எழுச்சிகளின் காரணமாக, இங்கும், ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான கருத்துகள் உருவாகத் தொடங்கின. இது குறிப்பிட்ட சில படித்தவர்கள் மத்தியில் மட்டும் காணப்பட்டது.

இத்தருணத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மன்னராக இருந்த மார்த்தாண்டபைரவத் தொண்டைமான் மேலைநாடுகளுக்கு சுற்றுப்பயணமாக அடிக்கடி சென்று கொண்டிருந்த காரணத்தினால், அரசு நிர்வாகத்தை ஒரு குழு கவனித்து வந்தது. மன்னர் இருந்து ஆட்சி செலுத்தவில்லையே என்ற மனக்குறை மக்களுக்கு இருந்தது. மேலும் மன்னருக்கு ஆஸ்திரேலிய பெண்மணி மூலம் பிறந்த சிட்னி மார்த்தாண்டனின் எதிர்காலம் குறித்தும் மக்கள் மனதில் பல கேள்விகள் எழுந்திருந்த நேரம் அது.

அக்காலத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அரசியல் கட்சிகள் எதுவும் இல்லை. சுதேச சமஸ்தானங்களில் காங்கிரஸ் கட்சியின் கிளைதேவை இல்லை என்பது காங்கிரஸ் கட்சியின் கொள்கை! - நகரில் இருந்த படித்தவர்களுள் சிலர் மகாஜன சபை (People's Conference) என்ற ஒரு இயக்கத்தை 1920-ம் ஆண்டு தொடங்கி, அண்ணல் காந்திஜீயின் தலைமையிலான இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசிவந்தனர். மன்னரிடத்திலும், மன்னர் ஆட்சி முறையிலும் சமஸ்தான மக்கள் மிகுந்த மரியாதைக் கொண்டிருந்த போதிலும் நிர்வாகத்திலும் தங்களுக்கும் பங்குவேண்டும் என்ற மனப்போக்கு அவர்களிடம் எழத்தொடங்கியது. இருப்பினும் இதனால் மக்களுக்கும், மன்னர்களுக்கும் இடையே இருந்த நல்லுறவு எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. இந்திய சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்துவந்த மகாஜன சபை இயக்கம்கூட தங்களது மாநாட்டுக்கூட்டங்களின் முதல் தீர்மானத்திலேயே மன்னர் மீது தங்களது விசுவாசத்தை வெளிப்படுத்தி தீர்மானங்கள் இயற்றியுள்ளனர். அந்த காலக்கட்டத்தில்தான புதுக்கோட்டை சமஸ்தானத்தின் வாரிசுரிமை குறித்த சர்ச்சை எழுந்தது. மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானுக்கு ஆஸ்திரேலியப் பெண்மணியின் வழியாகப் பிறந்த சிட்னி மார்த்தாண்டனுக்கு ஆங்கிலேய அரசு மன்னர் பதவியை அளித்துவிடுமோ என மக்கள் சந்தேகப்பட்டனர். ஆனால் வெளிப்படையாக இதைப் பற்றிப் பேச யாரும் துணியவில்லை. பூனைக்கு மணி கட்டுவது யார்?.

இந்திய அரசியலில் அப்போது புகழுடன் விளங்கிய தீரர் சத்தியமூர்த்தி புதுக்கோட்டையில் 12.11.1920-ல் நடைபெற்ற மாகாஜன

சபையின் இரண்டாவது மாநாட்டில் உரையாற்றினார். அப்போது அவர், அருகில் உள்ள ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் சுதந்திர போராட்டத்தைச் சுட்டிக் காட்டி அதற்கு புதுக்கோட்டை சமஸ்தான மக்களின் ஆதரவையும் வேண்டினார். மேலும் புதுக்கோட்டை சமஸ்தான மக்கள் சுயாட்சி உரிமைக்காக போராட வேண்டும் எனவும், புதுக்கேட்டை சமஸ்தானத்தின் பின்தங்கிய பொருளாதார நிலைக்கு சமஸ்தான நிர்வாகத்திலிருக்கும் ஆங்கிலேய ஆட்சியாளர்களேக் காரணம் எனவும் எடுத்துரைத்தார். மன்னர் நீண்ட நாள்களாக வெளிநாடுகளில் தங்கி இருப்பதையும், அந்நிய நாட்டு பெண்மணியை மணந்துகொண்டு அதன்மூலம் பிறந்த சிட்னி மார்த்தாண்டனுக்கு ஆட்சிப்பொறுப்பு அளிக்கப்படும் அபாயம் ஏற்பட்டு இருப்பதையும், இது இந்து தர்ம சாஸ்திரங்களுக்கு முரணானது என்பதையும் சுட்டிக்காட்டி, மக்கள் இதற்குத் தங்களது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டுமெனவும், அன்னிய மாதுக்கு பிறந்த சிட்னி மார்த்தாண்டனை மன்னராக ஏற்றுக்கொள்ளக் கூடாது எனவும் சமஸ்தான மக்களைக் கேட்டுக்கொண்டார்.

பூனைக்கு மணி கட்டப்பட்டு விட்டது! சத்தியமூர்த்தியின் ஆழமான அனல்பறக்கும் வாதங்கள் மக்கள் மனதில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது. இதனால் பெரும் போராட்டங்கள் வெடிக்கவில்லை யாயினும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வும், வாதப் பிரதிவாதங்களும் எழலாயின. மக்களின் இந்த மனப்போக்கு சமஸ்தான நிர்வாகத்துக்கு கவலை அளித்தது.

சமஸ்தான மக்களுக்கு நிர்வாகத்தின் பங்கு மற்றும் சுயாட்சி பற்றி தீரர் சத்தியமூர்த்தி எழுப்பிய வாதத்தைவிட வாரிசுரிமை குறித்து அவருடைய கருத்துக்களே நிர்வாகத்துக்கு பெரும் கவலையை எற்படுத்தியது. இதுபோன்றப் பேச்சினால் சலனமற்று இருக்கும் மக்களிடையே அமைதியின்மை எற்படும் எனக் கருதிய சமஸ்தான நிர்வாகம், இது போன்ற பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கருதி, சத்தியமூர்த்தி புதுக்கோட்டை சமஸ்தானத்துக்குள் நுழைய தடைவிதித்து 2.2.1921-ல் ஒரு உத்தரவு பிறப்பித்தது. மேலும் சத்தியமூர்த்தியின் உரைக்காக, மகாஜன சபையின் முக்கிய உறுப்பினர்கள் சமஸ்தான நிர்வாகத்திடம் மன்னிப்புக் கோரவேண்டியிருந்தது. சத்தியமூர்த்தி மீது பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு நியாயமற்றது என மக்கள் கருதினர். இந்த தடை உத்தரவை நீக்க வேண்டும் என நிர்வாகத்திடம் முறையிட்டுக்கொண்டனர். சத்தியமூர்த்தி தொடர்ந்து புதுக்கோட்டையில் இதுபோன்று பேச அனுமதிக்கப்பட்டால் இங்கு குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்படும் என அஞ்சிய நிர்வாகம் தடையுத்தரவை ரத்து செய்ய மறுத்துவிட்டது. (புதுக்கோட்டை தர்பார். உத்தரவு எண்.809/சி/1921/2.6.21).

தடையின் காரணமாக சத்தியமூர்த்தி புதுக்கோட்டைக்கு வர இயலவில்லையாயினும், செய்தித்தாள்கள் வாயிலாக சமஸ்தான

வாரிசுரிமை குறித்து மக்களின் சிந்தனையை தூண்டிவந்தார். இக்காலத்தில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. 1921-ல் மகாத்மாகாந்திஜீ தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அவர், புதுக்கோட்டை வழியாக 20.9.1921 அன்று காரைக்குடி செல்லவிருந்தார். புதுக்கோட்டை மக்கள் அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கத் திட்டமிட்டிருந்தனர். அப்போது சமஸ்தான நிர்வாகத்தின் ஆட்சியாளராக இருந்த சிட்னி பர்ன், மகாத்மா காந்திஜீ ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிரி எனவும் ஆகவே அவர் புதுக்கோட்டை வழியாக செல்லக்கூடாது எனத் தடைவிதித்து 18.11.1921-ல் உத்தரவிட்டார். திருச்சியில் தங்கியிருந்த மகாத்மா காந்திஜீக்கு இதுகுறித்து தெரிவிக்கப்பட்டபோது தம்முடைய பயணத்தடத்தை மாற்றிக் கொள்வதாக தெரிவித்து புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகத்திற்குக் கடிதம் எழுதினார். (இந்தக் கடிதம் தற்போது புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது) மகாத்மா காந்திஜீ புதுக்கோட்டை வழியாக செல்கிறார் என்பதை அறிந்து, அவரைக்காண மக்கள் திரளாக கூடியிருந்தனர். ஆனால், காந்திஜீ, மதுரை வழியாக 22.9.1921 அன்று காரைக்குடியை அடைந்தார். 20.9.1921 அன்று மகாத்மா காந்திஜீயின் வருகையை எதிர்பார்த்து ஏமாந்த சில மாணவர்களும், தொழிலாளர்களும், மகாத்மா காந்தி, திலகர், அலி சகோதரர்கள் ஆகியோரின் படத்தை எடுத்துக்கொண்டும், தேசபக்திப் பாடல்களைப் பாடிக்கெண்டும் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக சென்றனர். (புதுக்கோட்டை தர்பார் பதிவுகள்) புதுக்கோட்டை நகராட்சியின் சார்பாகவும் மகாத்மா காந்திஜீக்கு வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்து இருந்தனர். ஆனால் சமஸ்தான நிர்வாகம் தனது சிறப்பு, அதிகாரத்தின்கீழ் காந்திஜீக்கு வரவேற்பு கொடுக்கூடாது என தடைவிதித்தது. இருப்பினும் புதுக்கோட்டை, நகராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலரும் புதுக்கோட்டை சட்டசபை உறுப்பினர்கள் சிலரும், மகாஜனசபை பிதிநிதிகளும், சுந்தரேச அய்யர், விஸ்வநாத அய்யர், சுந்தரேச சாஸ்திரி, மற்றும் கே.பி.செட்டி, ஆகியோரின் தலைமையில் காரைக்குடிக்குச் சென்று புதுக்கோட்டை மக்களின் சார்பில் காந்திஜீக்கு வரவேற்பு இதழ் ஒன்றினை வாசித்தளித்தனர். இந்நிகழ்ச்சி குறித்து சமஸ்தான நிர்வாகத்துக்கு தெரியவந்த போது மேற்கண்டவர்களின் நகராட்சி உறுப்பினர், மற்றும் சட்டசபை உறுப்பினர் பதவிகள் பறிக்கப்பட்டன. அரசின் இந்த நடவடிக்கைகள், மக்கள் மனதில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியது. இருப்பினும், சமஸ்தான வாரிசுரிமைக் குறித்தும், சுயாட்சிப் பெறுவது குறித்தும் ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகள் சுதந்திரம் பெறவேண்டிய அவசியம் குறித்தும் தொடர்ந்து மகாஜனசபை, மக்களிடம் எடுத்துரைத்து வந்தது. 7.5.1921-ல் புதுக்கோட்டை டவுன்ஹாலில் நடைபெற்ற மகா ஜனசபைக் கூட்டத்தில் சுப்ரமணிய சிவா பேசினார். அவர் மன்னருடைய நடவடிக்கைகள் பற்றியும், வாரிசுரிமைப்பற்றியும் மிகக் கடுமையாக

விமர்சனம் செய்து பேசினார். இக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மக்களும், அரசு அலுவலர்களும், விளக்கம் அளிக்குமாறு கோரப்பட்டனர். (புதுக்கோட்டை தர்பார் பதிவுகள்) இதன் பிறகு மகாஜனசபையின் நடவடிக்கைகளில் ஈடுபட மக்கள் தயக்கம் காட்டினர்.

புதுக்கோட்டை சமஸ்தான மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுவதற்கு வாரிசுரிமைப் பிரச்சினையே முக்கிய காரணமாக இருந்தது. தங்களுக்கு சுயாட்சி வேண்டும் என்பதைவிட, தங்களது இனத்தைச் சார்ந்த மன்னரே ஆட்சி செய்ய வேண்டும் என்பதில் மக்கள் கவனமாக இருந்தனர். 1915-ம் ஆண்டில் மன்னரின் திருமணம் குறித்து மகிழ்ச்சியடைந்து, பெரும் வரவேற்பு அளித்த, இதே மக்கள், வாரிசு உரிமைப்பற்றி மன்னருக்கு எதிராக தங்கள் எதிர்ப்புகளைக் காட்டத் தவறவில்லை. ''தொண்டைமான் வாழ்க'' என்ற கோஷம் ''தொண்டைமான் வம்சாவளி வாழ்க'' என மாறியது.

ஜனமித்திரன், தேசஊழியன், என்ற இரண்டு பத்திரிகைகள் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்தன. இப்பத்திரிக்கைகள் புதுக்கோட்டை மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை எற்படுத்த பாடுபட்டன. சமஸ்தான வாரிசுரிமைப் பற்றிய கருத்துக்களை இந்த பத்திரிகைகள் தொடர்ந்து வெளியிட்டன. இதனால் இப்பத்திரிகைகளின் மீது சமஸ்தான நிர்வாகம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பாரிஸ் நகரில் இருந்த மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் தனக்குப் பிறகு தனது மகன் சிட்னி மார்த்தாண்டனுக்கு மன்னர் பதவியை அளிக்க வேண்டும் என ஆங்கிலேய அரசை கேட்டுக் கொண்டிருந்தார். புதுக்கோட்டை சமஸ்தான மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் மக்களிடையே இருந்த எதிர்ப்புகளை கண்ட மன்னர் பாரீஸ் நகரத்தில் நிரந்தரமாக வசிக்க ஏற்பாடு செய்து கொண்டார். சமஸ்தானத்தின் நிர்வாகம் தொண்டைமானின் சகோதரர் விஜயரகுநாத துரை ராஜாவின் தலைமையில் ஒரு ஆட்சிகுழுவினால் கவனிக்கப்பட்டு வந்தது.

புதுக்கோட்டை சமஸ்தான மக்களிடையே ஏற்பட்ட எழுச்சியையும் எண்ணக்கிடக்கைகளையும் சமஸ்தான நிர்வாகம் மதிக்கத் தவறவில்லை. அண்டையில் உள்ள ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளில் தேசிய இயக்கங்கள் மிகவும் தீவிரமடைந்து வருவதையும், அந்த இயக்கங்களுக்கு சமஸ்தான மக்கள் ஆதரவு அளித்து வருவதையும் கருத்தில் கொண்டு மக்களுக்குச் சில உரிமைகள் வழங்க சமஸ்தான அரசு திட்டமிட்டது. சத்தியமூர்த்திக்கு புதுக்கோட்டைக்குள் நுழைய விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு 25.12.1922-ல் நீக்கப்பட்டது. அரசியல் ரீதியாகவும் சில மாற்றங்களைச் செய்ய திட்டமிடப்பட்டது. மக்களுக்கு நிர்வாகத்தில் அதிக பங்கு அளிக்கும் முகத்தான், 1902-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மக்கள் பிரதிநிதி சபையையும் (Assembly

of Nominated Representatives) 1915-ல் ஏற்படுத்தப்பட்ட சட்டசபை ஆலோசனைக் குழுவையும் (Legislative Advisory Council) சீர்திருத்தி அமைக்க ஆவன செய்யப்பட்டது. அதன்படி 1924-ம் ஆண்டில் மேற்சொன்ன இரண்டு குழுக்களையும் இணைத்து, புதுக்கோட்டை சட்டசபை (Pudukottai legislative council) ஏற்படுத்தப்பட்டது. ஜனநாயகப் பாதையில் புதுக்கோட்டை மக்களுக்கு அப்போது அளிக்கப்பட்ட மிகப் பெரிய சலுகையாகும் இது. புதுக்கோட்டை சட்டசபை மூலம் மக்களுக்கு நிர்வாகத்தில் அதிக பங்கு ஏற்பட்டதைக் குறித்து மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் வாரிசுரிமை பற்றிய சர்ச்சை தீர்க்கப்படாமல் இருந்தது மக்கள் மனதில் பெரும் குறையாகவே இருந்து வந்தது. 2.12.1926-ல் நடைபெற்ற மகாஜனசபைக் கூட்டத்தில் பேசிய தீரர் சத்தியமூர்த்தி இது குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்தினார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் அடுத்த மன்னர் யார் என்பது குறித்து ஆங்கிலேய அரசு, ரகசியமாகவே வைத்திருந்தது. ஆகவே சிட்னி மார்த்தாண்டன் மன்னராக நியமிக்கப் படலாம் என மக்கள் எண்ணினர். எனவே, மீண்டும் இது குறித்து, ஒரு சிறிய கிளர்ச்சித் தோன்றியது. ஒரு அந்நிய நாட்டு மாதுக்குப் பிறந்த சிட்னி மார்த்தாண்டன் இந்து அல்லவென்றும், ஆகவே அவர் ஒரு இந்து சமஸ்தானத்தை ஆளக்கூடாது என்றும் சத்தியமூர்த்தி எச்சரிக்கை விடுத்தார். சத்தியமூர்த்தியின் இந்தப் பேச்சு 22.6.1927 நாளிட்ட இந்து நாளிதழில் பிரசுரமாகியது. இந்தப் பேச்சின் தமிழாக்கத்தை மதச ஊழியன் பத்திரிகை வெளியிட்டது. இந்தப் பேச்சை வெளியிட்டதற்காக இந்த செய்தித் தாளின் ஆசிரியர் ஏ.எஸ்.நாகரத்தினம் நாடு கடத்தப்பட்டார். சத்தியமூர்த்தி புதுக்கோட்டைக்குள் நுழைய மீண்டும் தடைவிதிக்கப்பட்டது.

21.9.1927 அன்று மகாத்மா காந்திஜீ புதுக்கோட்டைக்கு வருகை தந்தார். அவரது துணைவியாரும், ராஜாஜியும் உடன் வந்தனர். இம்முறை அவருடைய வருகைக்கு தடை ஏதும் விதிக்கப்படவில்லை. மகாத்மா காந்திஜீயை காண்பதற்கு ஏராளமான மக்கள் கூடி இருந்தனர். காந்திஜீக்கு மக்கள் சார்பில் வரவேற்பும் பண முடிப்பும் அளிக்கப்பட்டது. (தீரர் சத்தியமூர்த்தி புதுக்கோட்டைக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்ததால் அவர் வரவில்லை).

மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் 28.5.1928 அன்று பாரீஸ் நகரில் காலமானதைத் தொடர்ந்து வாரிசுரிமை குறித்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய கட்டாயம் ஆங்கிலேய அரசுக்கு ஏற்பட்டது. சிட்னி மார்த்தாண்டனுக்கு மன்னர் பதவி அளிக்கக்கூடாது என இந்து (The Hindu) சுதேசமித்திரன், சுயராஜ்யா போன்ற பத்திரிகைகள் பொதுமக்கள் கருத்தை பிரதிபலித்து எழுதின. சமஸ்தான மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஆங்கிலேய அரசு, சமஸ்தான மன்னராக ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களை மன்னராக

நியமித்தது. மக்களுடைய எண்ணம் நிறைவேறியது. தொண்டைமான் பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் மன்னராக்கப்பட்டதில் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சத்தியமூர்த்தி மீது பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க 19.10.1929 அன்று நீக்கப்பட்டது.

சட்டசபை அமைப்பின் மூலம் ஜனநாயக உரிமைகள் ஓரளவிற்கு அளிக்கப்பட்டதிலும், வாரிசுரிமை சர்ச்சை சுமூகமாக நிறைவேறியதிலும் மக்கள் திருப்தியடைந்தனர். அதன்பிறகு சமஸ்தான நிர்வாகத்தின் மீது மக்களுக்கு எவ்வித வெறுப்பும் இருக்கவில்லை. ஆனால் அருகில் இருந்த ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளில் நடைபெற்று வந்த சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளுக்கு படித்த மக்களுள் சிலர் தங்களது ஆதரவையும், அனுதாபத்தையும் தொடர்ந்து தெரிவித்து வந்தனர்.

ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் இளம் வயதினராக இருந்தபோது சமஸ்தான நிர்வாகத்தை அலெக்சாண்டர் டாட்டன்ஹாம் கவனித்து வந்தார். டாட்டன்ஹாம் இந்திய மக்களின்மீது உயரிய அன்புக் கொண்டிருந்தபோதும் தேசிய இயக்கங்களை அவர் விரும்பவில்லை. ஜனநாயகம் இந்தியாவிற்கு ஏற்றதல்ல என்பது அவரது கருத்தாக இருந்தது. ஆகவே தேசிய இயக்கங்களுக்கு புதுக்கோட்டையில் இருந்த ஆதரவை அவர் விரும்பவில்லை. 1936-ல் பண்டித நேரு புதுக்கோட்டை நகருக்குள் நுழைய விதிக்கப்பட்ட தடை இதன் ஒரு பகுதிதான். குறிப்பாக மாணவர் சமுதாயம் அவரைக் கண்டு மிகவும் பயந்தது. புதுக்கோட்டை கல்லூரியில் மாணவர்கள் பாரதியாரின் பாடல்களை மறைத்து வைத்துக்கொண்டுதான் படிக்க வேண்டியிருந்தது. ஆனால் குறிப்பிட்ட சிலரிடையே தேசிய இயக்கத்திற்கு இருந்த ஆதரவை யாரும் தடுக்க இயலவில்லை. இரண்டாவது உலகப்போர் மூண்டபோது புதுக்கோட்டை சமஸ்தான மக்களும், இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கிலேய அரசுக்கு தங்களது முழு ஒத்துழைப்பையும் அளித்தனர்.

பண்டித நேருவின் வருகை தொடர்பான நிகழ்ச்சிகளுக்குப் பின் சமஸ்தான நிர்வாகம் மகாஜன சபையின் மீது கடுமையான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. காலப்போக்கில், பாரதி வாலிபர் சங்கம், பாரத மாதா சங்கம், போன்ற அமைப்புகளும், இளைஞர்களிடையே தோன்றின. ஆனால் இந்த இயக்கங்களின் நடவடிக்கைகளை அரசு தீவிரமாகக் கண்காணித்து வந்தது. 1942-ல் ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கம் பிரகடனப்படுத்தப்பட்டபோது, புதுக்கோட்டை மன்னர் கல்லூரி மாணவர்கள், அந்த பிரகடனத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் 15.8.1942 அன்று கல்லூரியில் வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டனர். இதைத் தொடர்ந்து பல மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். (இந்த கிளர்ச்சி கூட மன்னராட்சிக்கு எதிரானதல்ல என்பது குறிப்பிடத்தக்கது.)

1924-ல் அமைக்கப்பட்ட புதுக்கோட்டை சட்டசபை படிப்படியாக, மக்களை ஜனநாயகப் பாதைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தது. ஆகவே மக்கள், புதிய அரசியல் மாற்றங்கள் எதையும் கேட்கவில்லை. 1946-ல் மட்டும் புதுக்கோட்டை சட்டசபையில் சுயாட்சித் தீர்மானம் ஒன்று, ஒரு உறுப்பினரால், தனி நபர் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டு, பின்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. சமஸ்தான நிர்வாகம் அமைதியாக இருந்ததையும் மக்கள் மன்னர் ஆட்சி முறையின் மீது கொண்டிருந்த பற்றையும் காட்டுவதாக இது அமைகிறது

1946-ம் ஆண்டு வாக்கில் தேசிய இயக்கங்களின் தாக்கம் புதுக்கோட்டையில் சற்று பரவலாக காணப்பட்டது. மகாஜனசபை என்ற மக்கள் அமைப்பு, தனது இயக்கத்தை புதுக்கோட்டை சமஸ்தான காங்கிரஸ் என்று பிரகடனப்படுத்திக் கொண்டு, கிராமங்களிலெல்லாம் கிளைகளைத் தொடங்க முற்பட்டது. இந்த இயக்கத்தினால் பெரிய எழுச்சிகள் ஏற்படவில்லையாயினும், அதன் நடவடிக்கைகளை சமஸ்தான நிர்வாகம் தீவிரமாகக் கண்காணித்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. (புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாக அறிக்கை 1945, 1946, 1947.)

இந்தியா 15.8.1947-ல் சுதந்திரம் அடைந்தவுடன் சுதேச சமஸ்தானங்களையும், ஒன்றிணைத்து ஏக இந்தியாவை உருவாக்க நமது இந்திய அரசு விரும்பியது. சுதேச சமஸ்தான மன்னர்களும், புதிய அரசும் இதுகுறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்தனர். புதுக்கோட்டை சமஸ்தானத்திலும், மக்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டன. சமஸ்தானம், மன்னரது ஆட்சியின் கீழ் தனித்தே இயங்க வேண்டும் என்று ஒரு பகுதியினர் விரும்பினர். ஆனால் புதுக்கோட்டையும் இந்தியாவுடன் இணைவதற்கே பேராதரவு இருந்தது. காங்கிரஸ் இயக்கத்தோடு தொடர்புகொண்ட தலைவர்கள் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்று இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தனர். இந்த இயக்கத்தில் புதுக்கோட்டை வழக்கறிஞர் முத்துசாமி வல்லத்தரசு தீவிர பங்கு கொண்டிருந்தார். இந்த நிலையில் ராஜா ராஜகோபால தொண்டைமான் சமஸ்தானத்தின் எதிர்காலம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த டெல்லி சென்றிருந்தார். அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களையும், தமது சமஸ்தான மக்களின் எண்ணங்களையும், ஆராய்ந்து பார்த்த ராஜா ராஜகோபாலத் தொண்டைமான், புதுக்கோட்டை சமஸ்தானம் இந்தியாவுடன் இணைய சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து 3.3.1948ல் புதுக்கோட்டை சமஸ்தானம் ஏக இந்தியாவுடன் இணைந்தது.

ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்திய பகுதிகளில் நடந்த சுதந்திரப் போராட்ட அலை 1920ம் ஆண்டுவாக்கிலேயே புதுக்கோட்டையில் உணரப்பட்டது. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானுக்குப் பிறகு வாரிசுரிமைக் குறித்த

சர்ச்சை எழுந்திருக்கவில்லையானால், தேசிய இயக்கத்தின் தாக்கம் நாம் மேலே கண்ட அளவிற்கு கூட இங்கு இருந்திருக்குமா என எண்ணத் தோன்றுகிறது! ஆகவேதான் வாரிசுரிமை என்ற ஆயுதத்தைக் கையிலேந்தி, சமஸ்தான மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த தேசிய தலைவர்கள் முயற்சி செய்தனர். ஆனால் வாரிசுரிமை மக்கள் எண்ணப்படி நிறைவேறியதற்கும், மக்களுக்கு சில ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட்டதற்கும், இந்த எழுச்சியே காரணமாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது! இந்த எழுச்சியை மக்களிடம் ஏற்படுத்தியது, மகாஜனசபை என்ற இயக்கம் ஆகும். இதில் சத்தியமூர்த்திக்குப் பெரும் பங்கு உண்டு. ஆகவே புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இந்திய தேசிய சுதந்திர இயக்கங்களினால் ஏற்பட்ட விளைவுகளும் அதன் தாக்கமும், தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற சுதந்திரப் போராட்ட வரலாற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகிறது.

(இந்நூல் ஆசிரியர், 24.5.1988 அன்று பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற, 'சத்தியமூர்த்தி நினைவு இந்திய சுதந்திரப் போராட்டம்' என்னும் கருத்தரங்கில் படித்த கட்டுரை).

## முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்கள்

## 8. புதுக்கோட்டை

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் தலைநகராக 1686-லிருந்து 1948 வரை விளங்கிய புதுக்கோட்டை, தற்போது மாவட்டத்தின் தலைநகராகும்.

நகருக்கு கிழக்கே உள்ள கலசக்காட்டிலும் (திருக்கட்டளை) மேற்கே உள்ள சடையப்பாறையிலும், பெருங்கற்கால புதைகுழிகள் காணப்படுகின்றன. இப்பகுதியின் காலத்தால் முற்பட்ட வரலாற்றை இது காட்டுகிறது.

கி.பி.8-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே புதுக்கோட்டை நகரப் பகுதிகளின் கோர்வையான ஆதாரபூர்வமான வரலாறு கிடைக்கிறது. திருக்கோகர்ணம் கோயிலில் பாண்டியன் மாறஞ்சடையனின் கல்வெட்டு காணப்படுகிறது. (கி.பி.765-815) இதுவே இங்கு கிடைக்கும் காலத்தால் முற்பட்ட கல்வெட்டாகும். அடுத்து விஜயாலய சோழன் காலத்துக் கல்வெட்டும் ராஜராஜன் காலத்துக் கல்வெட்டும் கிடைக்கின்றன. திருவேள்பூர் (திருவப்பூர்) தென்கவிர் நாட்டு திருவேள்பூர் என்ற பெயருடன் ஜெயசிங்க குலகால வளநாட்டில் அடங்கியப் பகுதியாக இருந்தது. ஆகவே அக்காலத்தில் திருக்கோகர்ணம், திருவப்பூர், கலசமங்கலம் ஆகிய இடங்களே அப்போதைய புதுக்கோட்டையுள் அடங்கி இருந்தன. இப்பகுதிகள் கி.பி. 14-ம் நூற்றாண்டுவரை பாண்டியர் மற்றும் சோழர்களின் ஆளுகையில்

இருந்தது. தற்போதைய புதுக்கோட்டை நகரின் கிழக்குப் பகுதி கலசமங்கலம் என அழைக்கப்பட்டது. (திருக்கட்டளை செல்லும் வழியிலுள்ள கலசக்காடு பகுதியே இது) கலசமங்கலத்தின் பெருவணிகர்களின் குடியிருப்பு, செனிகுலமாணிக்கபுரம் என்று அழைக்கப்பட்டது. (பு.க.என்.122) (தற்போதைய போஸ்நகர் பகுதி) ஆனால் இந்த நகரங்கள் எவ்வாறு அடியோடு அழிந்துபட்டன என்பது விளங்கவில்லை. பின்னர் வந்த பல்லவராயர்களின் ஆட்சியில் கலசமங்கலம் இப்பகுதிக்கு ஆட்சித் தலைமையிடமாக விளங்கியது. அப்போது பல்லவராயன் சீமை என்று அழைக்கப்பட்டு வந்தது. கி.பி.17-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இப்பகுதி முழுவதையும் தொண்டைமான் மன்னர்களுக்கு கிழவன் சேதுபதி மன்னர் அளித்தார்.

புதுக்கோட்டை நகர் தோன்றிய காலம் பற்றியெல்லாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். 1813-ல் புதுக்கோட்டை நகரில் மூன்று அரண்மனைகளும், ஆறு தார்சு கட்டிடங்களும், 300 ஓட்டு வீடுகளும், 700 கூறை வீடுகளும், திருவப்பூரில் 21 ஓட்டு வீடுகளும், 700 கூறை வீடுகளும், திருக்கோகர்ணத்தில் 300 கூறை வீடுகளும் இருந்ததாக புதுக்கோட்டை கணக்காய்வுக் குறிப்புத் தெரிவிக்கிறது. 1820-ம் ஆண்டிலேயே நேர் நேரான தெருக்களுடன் நகரமைப்பு இருந்ததை ஆங்கிலேயரின் குறிப்புகள் தெரிவிக்கின்றன. (Hamiltons East India, Gazetter) திவான் சேஷய்யா சாஸ்திரியின் காலத்தில் நகரின் கழிவுநீர் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டன.

கி.பி.17-18ம் நூற்றாண்டில் நகரின் வடக்குப் பகுதியில் இருந்த சிவஞானபுரம், சிவானந்தபுரம் ஆகிய பகுதிகளுள், பின்னதன் பெயர் மட்டும் இன்றளவும் விளங்குகிறது. புதிய அரண்மனைக் கட்டப்பட்ட பிறகு நகரிலிருந்த பழைய அரண்மனையில் தசரா விழா மட்டும் நடைபெற்று வந்தது. பழைய அரண்மனைக்கு மேற்கே (மேலராஜவீதி சாலைக்கு மேற்குப் பகுதியில்) மன்னர் குடும்பத்தின் உறவினர்கள் (சின்ன அரண்மனை மற்றும் கல்வாக்கோட்டை) சிறிய அரண்மனைகளில் வசித்து வந்தனர். இவை இப்போது அழிக்கப்பட்டு குடியிருப்புப் பகுதிகளாக மாற்றப்பட்டுவிட்டன. கீழராஜ வீதியிலும் வடக்கு ராஜ வீதியிலும் முக்கிய அரசு அலுவலர்கள் குடியிருந்தனர். (சேஷையா சாஸ்திரி கீழராஜ வீதியில் குடியிருந்த வீட்டில் தற்போது ஒரு பாத்திரக்கடை உள்ளது) வடக்குராஜ வீதி தட்சிணாமூர்த்தி வீதி என்று அழைக்கப்பட்டது. இங்கு அரச புரோகிதர்களின் குடும்பங்கள் குடியிருந்தன. சிறப்பு நிகழ்ச்சிகளின்போது அரிய நாச்சியம்மன் கோயிலுக்கு அருகில் தர்பார் நடத்தப்பட்டது. சமஸ்தான அரசு அலுவலர்களுள் மராட்டியர் நிறைய இருந்தனர்.

தற்போதைய மச்சுவாடிப் பகுதி முன்பு, ராமச்சந்திரபுரம், கணேஷ்நகர், கணபதிபுரம் என மூன்று பிரிவாக விளங்கியது.

மார்த்தாண்டபுரம், சாந்தநாதபுரம், லட்சுமிபுரம், ராஜகோபாலபுரம், அம்பாள்புரம் ஆகியன 19-ம் நூற்றாண்டில் புதிதாக ஏற்பட்ட குடியிருப்புப் பகுதிகள் ஆகும். திருக்கோகர்ணத்தில் கோகர்ணேசர் - பிரகதாம்பாள் குகைக் கோயிலும், அருங்காட்சியகமும் உள்ளன. திருக்கோகர்ணத்திற்கு அருகில் சடையப்பாறை சமணர்களின் இருப்பிடமாகவும் வழிபாட்டிடமாகவும் இருந்தது. திருவப்பூரில் பட்டு, பருத்தி நெசவு நடைபெற்று வந்தது. தற்போது இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகவும் குறைவு.

திருக்கோகர்ணத்திற்கு வடக்குப் பகுதி கோவில்பட்டி என அழைக்கப்படுகிறது. திருக்கோகர்ணம் கோயிலில் சேவை செய்துவந்த பணியாளர்களுக்காக இந்த குடியிருப்பை சேஷய்யா சாஸ்திரி ஏற்படுத்தினார். இங்குள்ள பட்டவன் கோயிலும், பட்டவள் கோயிலும் கிராமதேவதைகளாக வழிபடப்படுகின்றன. நாட்டுக்கதை வழக்குப்படி இவ்வூருக்குக் குடிபெயர்ந்தவர்கள், ஏற்கனவே எட்டரைக்கொம்பு என்ற ஊரில் இருந்தவர்கள் எனவும், தங்கள் இனப் பெண் ஒருத்தியை அவ்வூர் பாளையக்காரர் துன்புறுத்தியதின் காரணமாகத் தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அப்பெண் தற்கொலை செய்து கொண்டதாகவும், பின்னர் இங்கு குடிபெயர்ந்த அவர்கள் அவளது நினைவாக பட்டவள்கோயில் எடுப்பித்து வழிபட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. திருச்சியைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் தளபதி தினமும் குதிரையில் வந்து திருவப்பூரில் இருந்த தனது அன்புக்கிழத்தியை சந்தித்து வந்ததாகவும் இதை விரும்பாத (கோயில்பட்டி) மலைக் கருப்பர் சாமி அவ்னைக் கொன்றுவிட்டதாகவும், அவன் இறக்கும்போது அவனது வேண்டுகோளுக்கு இணங்க அவனுக்கு ஒரு கோயில் கட்டி, படடவன் கோயில் என (மலுக்கன் கோயில் எனவும்) வழிபடப்பட்டு வருவதாகவும் மற்றொரு நாட்டுக் கதை கூறுகிறது.

பழைய அரண்மனைக்குள் தட்சிணாமூர்த்திக் கோயில் உள்ளது. சதாசிவ பிரமேந்திரர் தொண்டைமான் மன்னர்க்கு மந்திரம் எழுதிக் கொடுத்த மணல் இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. பழைய அரண்மனையை ஒட்டியுள்ள சாந்தநாதசாமி கோயில் காலத்தால் மிகவும் பிற்பட்டதாகும். கி.பி.17-18ம் நூற்றாண்டுகளில் தசரா கொண்டாட்டங்கள் இங்கு பிரபலமடைய ஆரம்பித்த காலத்தில் இது கட்டப்பட்டிருக்கலாம். இது பிரகதாம்பாள் கோயிலுக்கு அடுத்தபடியாக சிறப்புமிக்க கோயில் ஆகும். கீழ 3-ம் வீதியிலுள்ள வரதராஜப் பெருமாள் கோயில், பல்லவன் குளம் வடக்குக் கரையிலுள்ள விட்டோபா கோயில், ஐயர்குளக் கரையிலுள்ள ஸ்ரீ வெங்கடேசா கோயில் ஆகியவை நகரில் உள்ள வைணவக் கோயில்களாகும். மேலும் அரியநாச்சியம்மன், மனோன்மணி அம்மன், காமாட்சி அம்மன்,

பொற்பனை முனீஸ்வரர், தடிகொண்ட அய்யனார், சிங்கமுத்து அய்யனார் ஆகிய கோயில்களும், மச்சுவாடி ஜீவா நகரில் திலகவதியார் ஆதீனகர்த்தா தவத்திரு சாயி மாதா சிவபிருந்தாதேவி ஏற்படுத்தியுள்ள ஷண்மதக் கோயிலும் உள்ளன.

நகரின் கிழக்கிலுள்ள புவனேஸ்வரி அம்மன்கோயிலுக்கு நிறைய பக்தர்கள் வருகின்றனர். இக்கோயில் சமீபகாலத்தில் ஏற்பட்டது. இக்கோயில் இங்கு ஏற்பட்டது குறித்து ஒரு கதை சொல்லப்படுகிறது. திருவாங்கூரில் நேர்மையான நீதிமான் ஒருவர் நீதிபதியாக இருந்தார். அவர் ஒருமுறை ஒரு கொலை வழக்கை விசாரித்துக் கொண்டிருககும்போது குற்றம் சாட்டப்பட்டிருப்பவர் கொலையாளி என பட்டவர்த்தனமாகத் தெரியவந்தும், சட்டப்படி அவருக்கு தண்டனை அளிக்க முடியவில்லையே என மனமுடைந்த அவர் தனது பதவியைத் துறந்து இவ்வுலக வாழ்வை வெறுத்து சந்நியாசம் பூண்டு அவதூதராக நாடெங்கும் சுற்றித் திரிந்தார். பின்னர் புதுக்கோட்டைக்கு வந்து தற்போது புவனேஸ்வரி கோயில் இருக்கும் இடத்திற்கு சற்று கீழக்கே தங்கியிருந்தார். அவரை இப்பகுதி மக்கள் 'ஜட்ஜ் சாமி' என அன்புடன் அழைத்தனர். சில ஆண்டுகளில் அவர் இறந்ததும் அவரது பக்தர்கள் அவருக்கு இங்கு ஒரு சமாதிக் கோயில் கட்டினர். அது 'அதிஷ்டானம்' என அழைக்கப்பட்டது. இது நடந்த ஆண்டு 1936 ஆகும்.

இதன் பின் பதினாறு ஆண்டுகள் கழித்து அவதூதரின் பக்தரான ஸ்ரீ சாந்தானந்தசாமி என்னும் ஞானியார் புதுக்கோட்டைக்கு வருகை தந்து இந்த இடத்திற்கு அருகே புவனேஸ்வரி அம்மனுக்கு ஒரு கோயில் எடுப்பித்தார். ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் இங்கு நடைபெறும் ஹோமம் (யாகம்) மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் பெருமளவில் அப்போது இங்கு கூடுகின்றனர்.

நகரில் தெற்கு 2-ம் வீதி, மேல 3-ம் வீதி, அடப்பன்வயல், கலீப் நகர், காமராஜபுரம், சீனிவாசாநகர், திருவப்பூர், புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் முஸ்லீம்களின் தொழுகைப் பள்ளிகள் உள்ளன. இவற்றுள் தெற்கு 2-ம் வீதியிலுள்ள பள்ளிவாசல் 250 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த பள்ளிவாசலுக்கு அருகில் ஹசரத் பர்ஹேஸ் அவ்லியா தர்கா உள்ளது. இங்கு அடக்கமாகியுள்ள அவ்லியா பல அற்புதங்கள் செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. தொண்டைமான் மன்னர்கள் இந்த தர்காவிற்கு கொடையளித்துள்ளனர். தர்காவின் கட்டிடம் பெரிய கும்பாசுடன் விளங்குகிறது. நைனாரிக்குளக் கரையில் சச்சாபீபி என்னும் பெண்பால் ஞானியின் தர்க்கா உள்ளது. தெற்கு 3-ம் வீதியில் படேஷா அவ்லியா தர்காவும், மச்சுவாடியில் முத்தால் ராவுத்தர் தர்காவும் உள்ளன. இந்த

தர்காக்களுக்கு இந்துக்களும் முஸ்லிம்களும் பாகுபாடின்றி வருகை தந்து வழிபடுகின்றனர்.

மார்த்தாண்டபுரத்தில் கத்தோலிக்க தேவாலயம் உள்ளது. இது Church of the Sacred Heart of the Jesus, and of the immaculate Heart of Mary, என அழைக்கப்படுகிறது. அழகுடன் மிளிரும் இந்த ஆலயம் 1911-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. தஞ்சாவூர் சாலையில் (புரொட்டஸ்டன்ட்) சீயோன் ஜூபிலி தேவாலயம் உள்ளது. இது 1905-ம் ஆண்டு கட்டப்பட்டது.

தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உள்ள புதிய அரன்மனை, முழுவதும் கருங்கல்லினால் கட்டப்பட்ட கட்டிடமாகும். மொகலாயர்களின் கட்டிடக்கலைப் பாணியில் கட்டப்பட்ட இந்த கம்பீரமான கட்டிடம் புதுக்கோட்டை கலைஞர்களின் கைவண்ணத்திற்குச் சான்றாக விளங்குகிறது. புதுக்கோட்டை பொது அலுவலகக் கட்டிடம் நகருக்கு மிடுக்கான தோற்றத்தை அளித்துக் கொண்டிருக்கிறது. இங்கு வருவாய்த்துறை அலுவலகங்களும், நீதிமன்றங்களும், அரசு அச்சகமும் உள்ளன. பொது அலுவலகக் கட்டிடத்தின் முன்பு ராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானின் சிலை வைக்கப்பட்டுள்ளது. மன்னர் கல்லூரி, அரசு மருத்துவமனை ஆகியன இதே பாணியில் கட்டப்பட்டுள்ள பிற கட்டிடங்களாகும்.

புதுக்கோட்டை மாவட்டமான பிறகு நகரில் அப்போது இருந்த பல பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு நவீனபாணிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

## 9. திருக்கோகர்ணம்

திருக்கோகர்ணம் புதுக்கோட்டை நகரத்தின் புறநகர் பகுதி ஆகும். புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோது அதன் கலை, கலாச்சார, மையமாகத் திகழ்ந்த இடம். இங்கு, கி.பி.8-ம் நூற்றாண்டைச் சேர்ந்த குகைக் கோயிலும், அருங்காட்சியகமும் காணத்தக்கன.

இங்குள்ள தாழ்வானதொரு குன்றைக் குடைந்து குகைக் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள மற்ற குகைக் கோயில்களைவிட இக்கோயில் எடுப்பித்துள்ள விதம் அதிகமான தொழில் நுணுக்கம் உள்ளதாகத் தெரிகிறது. குகைக் கோயில், ஒரு முன்மண்டபமும், அதற்கப்பால் ஒரு கருவறையும் கொண்டு விளங்குகிறது. முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் காணப்படுகின்றன. கருவறையில் உள்ள (லிங்கம்) மூலவர் கோகர்ணேசர் என்று அழைக்கப்படுகிறார். முன் மண்டபத்தின் வடக்குச் சுவற்றில் கங்காதரர் சிலையும் தெற்கு சுவற்றில்

கணேசரும் உள்ளன. குகைக் கோயிலுக்கு துவாரபாலகர் இல்லை. இந்த குகைக் கோயில், பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்தது என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால் மாவட்டத்திலுள்ள பிற குகைக்கோயில்களைப் போன்று இதுவும் கி.பி.8-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் காலக்கோயில் என தற்போது கருதப்படுகிறது. குகைக்கோயிலுக்கு முன்னால் உள்ள மகாமண்டபமும், மற்ற மண்டபங்களும் பின்னர் ஆண்ட சோழர், பாண்டியர் நாயக்கர்கள், தொண்டைமான் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

அம்மன் பிரகதாம்பாளின் சன்னதி காலத்தால் பிற்பட்டதாகும். இது கடந்த 200 ஆண்டுகளுக்கு முன்பே புதுப்பித்து கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இந்த சன்னதியின் சுவற்றில் கல்வெட்டுகள் ஏதும் இல்லை. பிரகதாம்பாள் தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வம். அம்மன் சன்னதிக்கு எதிரே உள்ள மண்டபமும், சாலையிலிருந்து கோயிலினுள் செல்லும் நீண்ட பிரகாரமும் மதுரை நாயக்கர் பாணியில் கட்டப்பட்டவையாகும். வெளிப்பிரகாரத்தின் தூண்களில், மன்மதன், ராவணன் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆனால் இவை அழகுமிக்கதாக இல்லை. முன் மண்டபத்தின் மேற்கூரையில் (Ceiling) ராமாயணக் காட்சிகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளன. இவை கி.பி.17-18ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். கோயிலினுள் மகிழவனேஸ்வரர், மங்களாம்பிகை, தட்சிணாமூர்த்தி ஆகிய தெய்வங்களின் சன்னதிகளும், ஸ்தலவிருட்சமாக மகிழமரமும், இம்மரத்தின் அடியில சதாசிவ பிரமேந்திரரின் திருஉருவமும் உள்ளன. கோயிலில் நவக்கிரகங்கள் இல்லை. சூரியன், சந்திரன் சிலைகள் மட்டும் உள்ளன. கோயிலின் மேற்குப் பகுதியில் (தாழ்வான குன்றின் மேல்பகுதி சமமாக ஆக்கப்பட்டு முதல்தளம்-மாடி-அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு தனிச் சிறப்பு. இங்கு சுப்பிரமணியர், துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, ஜுவரஹரேஸ்வரர் (ஜுரத்தைப் போக்குபவர் - இவருக்கு மூன்று கால்கள், மூன்று கைகள், மூன்று முகம்), பிரம்மா, பைரவர் ஆகிய தெய்வங்களின் சன்னதிகள் உள்ளன.

தசரா பண்டிகையும், சித்திரைத் திருவிழாவும், ஆடிப்பூரத் திருவிழாவும் இக்கோயிலின் சிறப்பான திருவிழாக்கள் ஆகும்.

**புராண வரலாறு:** இந்திரானால் சாபம் பெற்ற காமதேனுப் பசு கபில முனிவரின் உபதேசத்தால் தனது இரண்டு காதுகளிலும் கங்கை நீரை நிரப்பிக் கொண்டு வந்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்துவந்ததால் இத்தலத்திற்கு கோகர்ணம் (கோ-பசு, கர்ணம்-காது) என்று பெயர் ஏற்பட்டது. ஆதி காலத்தில் இத்தலம் கபில வனம் என்றும், மகிழமரத்தை விருட்சமாகக் கொண்டுள்ளதால் வகுளாரண்ய க்ஷேத்திரம் (மகிழவனம்) என்றும் வழங்கப்பட்டது. கல்வெட்டுகளில்

தென்கவிர்நாட்டு திருவேள்பூர் திருக்கோகர்ணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் மேற்கு கடற்கரையில் திருக்கோகர்ணம் எனப் பெயருள்ள மற்றொரு ஸ்தலம் உள்ளது. அத்தலத்தை திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர். கலாசாரத் தொடர்புகளினால், இப்பெயர் பரிமாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

காமதேனுப்பசு இந்திரனின் சபைக்கு காலதாமதமாக வந்ததால் கோபமடைந்த இந்திரன், பூலோகத்தில் காட்டுப்பசுவாக பிறக்கும்படி சபித்தான். அதன்படி காமதேனுப்பசு பூலோகத்தில் கபில முனிவர் தங்கியிருந்த கபிலவனத்தை அடைந்தது. முனிவரின் உபதேசப்படி சாப விமோசனம் பெற, தினந்தோறும் கங்கை நீரைக் காதுகளில் நிரப்பிக் கொண்டுவந்து, மகிழவனேஸ்வரருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு வந்தது. பசு காதுகளில் கொண்டுவந்த கங்கைநீரை சேமித்துவைக்க தனது கொம்புகளால் மலையில் கீறி (சுனைபோன்று) சேமித்து வைத்த இடம் இங்குள்ள (மலைச்சுனை) கங்காதீர்த்தமாக சொல்லப்படுகிறது. பசு இத்தலத்தில் ஒரு கன்றையும் ஈன்றதாகப் புராணம் தெரிவிக்கிறது.

காமதேனுப்பசு இவ்வாறு வழிபட்டுக் கொண்டுவரும் நாளில் பசுவின் பக்தியை சோதிக்க விரும்பிய சிவபெருமான், புலியின் உருவத்தில், பசு வரும் வழியில் காத்திருந்தார். காமதேனு வழக்கம்போல் காதில் நீரை நிரப்பிக் கொண்டு அவ்வழியே வரும்போது புலி பசுவைக் கொல்ல முயன்றது. அப்போது, பசு, புலியினிடத்தில், தான் சிவபெருமானுக்குச் செய்யும் வழிபாட்டை முடித்துவிட்டு, தனக்காக காத்திருக்கும் கன்றுக்குப் பால் கொடுத்துவிட்டு திரும்பிவருவதாகவும், அதன்பின் தன்னைக் கொல்லும்படியும் சத்தியம் செய்துவிட்டுச் சென்று, பிறகு தன் கடமைகளை நிறைவேற்றிவிட்டு முன்னே கூறியபடி புலியின் இருப்பிடத்திற்கு திரும்பிவந்தது. பசுவின் கடமை உணர்வையும், தாயன்பையும் கண்டுவியந்த புலி வடிவத்தில் இருந்த சிவபெருமான் காளை வாகனத்தில் இருந்து காமதேனுப் பசுவுக்கு காட்சிக் கொடுத்து முக்தியையும் தந்து மறைந்தருளினார். சிவபெருமான் புலி உருவத்துடன் தோன்றி, பசுவுக்குக் காட்சி கொடுத்த இடமே திருவேங்கைவாசல் என வழங்கப்படுகிறது.

சிவபெருமான் புலியாக தோன்றி காட்சியளித்த நிகழ்ச்சி நாட்டுப்படால் வடிவத்தில் அக்காலத்தில் இங்கு நடைபெறும் திருவிழாக்களில் நாடகமாக நடிக்கப்பட்டு வந்தது. தற்போது இல்லை.

இக்கோயிலில் 11 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பாண்டியன் மாறன் சடையன் காலத்து (கி.பி.781-782) கல்வெட்டு காலத்தால் முந்தியதாகும். இக்கோயிலில் நந்தா விளக்கு எரிக்க கொடையளிக்கப்பட்ட செய்தி இக்கல்வெட்டில் காணப்படுகிறது.

இன்றும் கோயில் நந்தாவிளக்கு எரிவது குறிப்பிடத் தக்கது. ராஜராஜ சோழன் காலத்து கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது. ஹோய்சள மன்னன் வீரநரசிங்கதேவர் இக்கோவிலுக்கு நந்தாவிளக்கெரிக்க கொடையளித்த செய்தியினை மூன்றாம் ராஜராஜன் காலத்துக் கல்வெட்டு ஒன்று (கி.பி.1236) கூறுகிறது. விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயர் தனது தென்னாட்டு விஜயத்தின்போது திருக்கோகர்ணம் கோயிலில் வழிபட்டு பலவிதமான ஆபரணங்களை கொடையளித்த செய்தியும் தெரியவருகிறது.

இக் கோயில் இம்மாவட்ட மக்களின் சமூதாய வாழ்வில் மெத்தவும் தொடர்புடையதாகும். ஏராளமான ஆண்களின் பெயர் கோகர்ணேசன் என்றும், பெண்களின் பெயர் பிரகதாம்பாள் என்றும் சூட்டப்படுவதும் வழக்கமாக உள்ளது. மேலும் அக்காலத்தில் இசை, நாடகம், நாட்டியம், ஓவியக்கலை ஆகியவற்றிற்கு மையமாக விளங்கியது இக்கோயில். இங்கு நடைபெற்ற தசரா போன்ற திருவிழாக்கள் மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தன.

பிரகதாம்பாள் கோயிலுக்கு அருகில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் உள்ளது. இது ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் காலத்தில் கட்டப்பட்டது. பெரிய குளத்தின் தென்கரையில் விநாயகரின் பதினாறு வடிவங்களுடன் ஒரு கோயில் உள்ளது.

திருக்கோகர்ணத்தை ஒட்டியுள்ள திருவப்பூரில் ராஜ ராஜேஸ்வரம் என்னும் கோயில் ஒன்று பாழடைந்து போன நிலையில் காணப்படுகிறது. இது இரண்டாம் ராஜராஜசோழன் காலத்தில் (1146-63) கட்டப்பட்டதாக இருக்கலாம். ஏனெனில் இங்கு காணப்படும் கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழனின் 24-ம் ஆட்சியாண்டைக் குறிப்பிடுகிறது. கலையமைப்பிலும் இது பிற்கால படைப்பாகவேத் தெரிகிறது. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய அனைத்தும் ஏக காலத்தில் கட்டப்பட்டதாகும்.

திருவப்பூரில் உள்ள கல்யாணப் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் பிற்கால பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். வேணுகோபாலசாமி கோயில் நவீன காலத்தைச் சேர்ந்ததாகும்.

திருவப்பூரில் உள்ள மாரியம்மன் கோயில், புதுக்கோட்டை நகர மக்களுக்கு முக்கியமானதொரு வழிபாட்டு கோயிலாகும்.

# 10. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகம்

புதுக்கோட்டை - திருக்கோகர்ணத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் 1910-ம் ஆண்டில் புதுக்கோட்டையை ஆண்ட தொண்டைமான் மன்னர்களால் தொடங்கப்பட்டது. தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய அருங்காட்சியகம் இதுவாகும். இந்த அருங்காட்சியகத்தில் மண்ணூல், விலங்கு உயிரியல், தாவரவியல், மானிடவியல், கலைகள், தொல்பொருளியல் ஆகியனபற்றிய காட்சிப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

'பத்தாயிரம் முறை சொல்லிக் கேட்பதைவிட ஒருமுறை பார்த்துத் தெரிந்து கொள்வது மேல்' என்பது சீனதேசத்து பழமொழி. பலவகையான பொருட்களைப் பார்த்து நம்மைபற்றி நாமே தெரிந்து கொள்ளும் இடம் அருங்காட்சியகம். கற்றோருக்கும் கல்லாதவருக்கும் காட்சிக் கல்விக்கூடமாக அருங்காட்சியகம் விளங்குகிறது.

நமது வாழ்வும் வளமும் கற்காலம் முதற்கொண்டு விண்வெளிப் பயண காலம் வரை பூமியுடன் தொடர்பு கொண்டதுதான். நமக்குத் தேவையான மூலப்பொருட்கள், கனிமங்களும், கற்களும் ஆகும். தங்கம், அலுமினியம், ஈயம், இரும்பு, நிக்கல், குரோமியம் ஆகியவற்றின் தாதுப் பொருட்களும், பலவிதமான பாறைகளும், பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து, கல்லாக மாறிய பாசில்களும் (மரம் & பிராணிகள்) (Fossil) மண்ணியல் காட்சிக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

முதுகெலும்பில்லா பிராணிகளான கடற்பஞ்சு, கடற்பவழங்கள், சங்கு வகைகள் முத்துச்சிப்பிகள் ஆகியனவும், தேள் வகைகள், கடல் நண்டு வகைகள், பட்டுப்பூச்சி இனங்கள் மற்றும் அவற்றின் வாழ்க்கை சுழற்சி, பலவகையான வண்டினங்கள், வண்ணத்துப் பூச்சிகள் ஆகியனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்கு காட்சியிலுள்ள சிப்பியுள் முத்து, வலம்புரிச் சங்கு ஆகியன காணத்தக்கவையாகும்.

பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம் - சுமார் 200 வகையான பறவைகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும், பறவைகளின் முட்டைகளும், அவற்றின் கூடுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தேங்காய் அளவுள்ள நெருப்புக்கோழி முட்டை, வெள்ளை மயில், வெள்ளை காக்கை, கட்டைவிரலளவே உள்ள கொட்டைப்பாக்குச் சிட்டு, நீண்ட கழுத்தை உடைய பூநாரை, 62 அடி நீளமுள்ள ஒரு திமிங்கிலத்தின் தாடை எலும்பு ஆகியன வியப்பூட்டும். பலவிதமான மீன்வகைகள், பாம்புகள், பிராணிகள் ஆகியனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இன்னும் இதுபோல் ஏராளம்.

ஓவியக்கூடத்தில் தஞ்சாவூர், ஜெய்ப்பூர், தக்காணம், மற்றும் நவீனபாணி ஓவியங்களும் புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்டுவந்த

மன்னர்களின் புகைப்படங்கள், புதுக்கோட்டை சமஸ்தான ஆட்சியாளர்களின் படங்கள் ஆகியனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 1851-ல் ராஜா ரவிவர்மா வரைந்துள்ள *''ராமச்சந்திர தொண்டைமானின் தர்பார்''* காட்சி ஓவியம் புதுக்கோட்டைக் கூடத்தில் காட்சியளிக்கிறது. விளையாடுவதற்கான சீட்டுக்களில் (Playing Cards) வரையப்பட்டுள்ள தஞ்சாவூர் பாணி ஓவியங்களும், விஸ்வாமித்திரர்-மேனகை ஓவியமும் நமது காட்சிக்கு நல்ல விருந்தாகும்.

திருவப்பூரில் தயாரிக்கப்பட்ட பருத்தி, பட்டு துணிவகைகளும் நெசவாளர்கள் பயன்படுத்திய அச்சுக்களும், புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள செல்லுகுடியில் தயாரிக்கப்பட்ட கம்பளி ஆடைகளும், வைத்தூரில் தயாரிக்கப்பட்ட பலவகையான வளையல்களும், பொன்னமராவதி பகுதியில் தயாரிக்கப்பட்ட பித்தளை, மணிவெங்கலப் பாத்திரங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த தொழில்களெல்லாம் தற்போது இவ்விடங்களில் அருகிவிட்டன. ஆனால் இங்குள்ள காட்சிப் பொருட்கள் இவ்விடங்களின் பழமையை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. தேக்குமரம், சந்தனமரம், தந்தம் ஆகியனவற்றினால் செய்யப்பட்ட பொம்மைகளும், கைவினைப் பொருட்களும், விளையாட்டுப் பொருட்களும், பனை ஓலையினால் செய்யப்பட்டப் பொருட்களும் கலை கைத்தொழில் பகுதியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தேர்களிலிருந்து எடுக்கப்பட்ட, 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட மரப் பொம்மைகள் பலவும் மரச்சிற்பங்கள் பகுதியில் காட்சியளிக்கின்றன. ஒரே மரத்துண்டில் இணைப்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ள சங்கிலி காணத்தக்கதாகும்.

வீணை, தம்புரா போன்ற கம்பி வாத்தியக் கருவிகளும், நாதஸ்வரம் ஒத்து, புல்லாங்குழல், மகுடி, கொம்பு, முகவீணை போன்ற துளைவாத்தியக் கருவிகளும், தவில், உடுக்கை, தம்பட்டம், கஞ்சிரா போன்ற தோல்வாத்தியக் கருவிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மனிதனின் முன் கை எலும்பில் செய்யப்பட்ட புல்லாங்குழல் காணவேண்டியதாகும். கஞ்சிரா என்னும் வாத்தியக் கருவி புதுக்கோட்டை சங்கீத வித்வான் மாமுண்டியாபிள்ளையால் சங்கீத உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

புதுக்கோட்டைப் பகுதியில் சமீபகாலம் வரை உபயோகத்தில் இருந்த ஈட்டி, வில், அம்பு, வளரி, போர் வாட்கள், பட்டாக்கத்திகள் சங்கிலிப் போர் உடைகள், பீரங்கிகள் அவற்றில் உபயோகப் படுத்தப்பட்ட குண்டுகள் ஆகியனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. வளரித்தடி என்னும் வளரி பழங்கால ஆயுதங்களில் ஒன்றாகும். இவ்வாயுதம் தாங்கிய படை எரிபடை என சோழர் காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. முதல், இரண்டாவது உலகப்போர்களில் உபயோகிக்கப்பட்ட இரும்புக் குல்லாய்கள், துப்பாக்கிகள் ஆகியனவும் காட்சிக்கு உள்ளன.

தோன்றுதொட்டு பல இனத்தவரும் ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்வதில் விருப்பம் கொண்டவர்களாக இருந்தனர். பல இன மக்கள் உபயோகித்துவந்த நகைகளின் மாதிரிகளை இங்கு காணலாம். திருமணச் சின்னமாக இந்துப் பெண்கள் அணியும் பலவகையான தாலிகள் காணத்தக்கதாகும்.

சித்தன்னவாசல், புல்வயல், தாயினிப்பட்டி, கலசக்காடு, போன்ற இடங்களில் உள்ள புதைகுழிகளில் அகழ்வாய்வில் கிடைத்த பெருங்கற்கால மட்பாண்டங்கள், முதுமக்கள்தாழிகள், இரும்பு ஆயுதங்கள், ஆபரண மணிவகைகள் ஆகியனவும் இங்கு காட்சிக்கு உள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முன் உபயோகத்தில் இருந்த இப்புதை குழிப்பாண்டங்கள் செய்யப்பட்டுள்ள பாங்கு இப்பகுதி மக்களின் தொழில் திறமைக்கு சான்றாக அமைகின்றன.

ராஜா விஜயரகுநாத தொண்டைமான் மன்னர் (1789-1807) அளித்த இனாம் நிலங்கள், நன்கொடைக் கட்டளை ஆகியனற்றைக் குறிப்பிடும் 13 செப்பேடுகளும், கி.பி. 1813-ல் பனைஓலையில் எழுதப்பட்ட பதுக்கோட்டை சமஸ்தானம் கணக்காய்வுக் குறிப்பும், கி.பி.10-ம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுப் பலகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கற்சிலைகள் காட்சிக்கூடத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டச் சிற்பங்களைக் காணலாம். ஆடை அணிகலன்கள் அதிகமின்றி, மனித உடற்கூறு அமைப்புடன் ஒத்த வடிவமுடைய சிற்பங்களை புதுக்கோட்டையில் நிறைய காணலாம். ஏழு கன்னிமார் சிற்பங்கள், கொடும்பாளூர் சிற்பங்கள், புதுக்கோட்டைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சமண தீர்த்தங்கரர்களின் சிற்பங்களும், அமராவதி சிற்பங்கள் சிலவும், இன்னும் பலதரப்பட்ட சிற்பங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழகக் கலைக்கு உயர்வூட்டும் உலோகச் சிலைகள் பல **(Bronzes)** இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பண்டைய தமிழகத்தின் நாகரிகத்தை விளக்கும் நல்ல சான்றுகள் இவை. இவற்றின் கலையழகிற்காக இவை இன்றும் உலகம் முழுவதும் போற்றப்படுகின்றன. (மெழுகினால் சிலை செய்து, அதன்மீது களிமண் பூசி காயவைத்து, பின்பு தீயிலிடும்போது, மெழுகு உருகிவிடும். ஆனால் சிலையின் அச்சு களிமண்பூச்சின் உட்புறம் படிந்திருக்கும். இந்தக் களிமண் அச்சில் உலோகத்தைக் காய்ச்சி ஊற்றி, சூடு ஆறியதும் களிமண் அச்சு உடைக்கப்பட்டு உலோக சிலை எடுக்கப்பட்டு, பின்பு நுணுக்கமான வேலைகள் செய்யப்படும்) அழகுமிளிரும் பல சிலைகளை இங்கு காணலாம். நடராசரின் பலவிதமான தோற்றங்கள், சிவபெருமானின் மாறுபட்ட தோற்றங்கள், பார்வதி தேவியின் வடிவங்கள், திருமால் (விஷ்ணு), நிலமகள், திருமகள், கிராம தேவதைகள் போன்ற சிலைகள் பலவற்றை இங்கு காணலாம்.

தமிழகத்தை ஆண்ட சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்களின் நாணயங்களும், (தங்கம், வெள்ளி, செம்பு) நமது நாட்டில் ஆதிக்கம் செலுத்திய போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சு, ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியார் ஆகியோரின் நாணயங்களும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ரோம பொன் நாணயமும் (புதுக்கோட்டையில் கிடைத்தது) அடங்கும்.

ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வண்ணம் அறிய புத்தகங்களைக்கொண்ட நூலகம் ஒன்றும் உள்ளது.

சுருங்கச் சொல்லின் புதுக்கோட்டை மாவட்டத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, இயற்கைவளம் ஆகியனபற்றி அருங்காட்சியகத்தில் நிறைய தெரிந்துகொள்ள முடியும்.

## 11. திருக்கட்டளை

திருக்கட்டளை புதுக்கோட்டை நகரிலிருந்து கிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. திருக்கட்டளை என்பது திருக்கற்றளி (கற்கோவில்) என்பதன் மருவாகும். முற்கால சோழர்கால கல்வெட்டில் இவ்வூர் கார்குறிச்சி திருக்கற்றளி என்றும், இறைவனின் பெயர் கார்குறிச்சி கற்றளிப் பெருமானடிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 15-ம் நூற்றாண்டுக் கல்வெட்டு திருக்கட்டளை ஈஸ்வரமுடையார் என்று குறிப்பிடுகிறது. பிற்காலத்தில் சுந்தரேஸ்வரர் என்று அழைக்கப்பட்டது. முற்காலசோழர் கால கோயிற்கலைப் பாணியில் நிறைவுடன் அமைந்த கோயில் புதுக்கோட்டையில் இது ஒன்றே. கோயில் கிழக்குமுகமாக அமைந்துள்ளது.

சுந்தரேஸ்வரர் கோயில், ஆதித்த சோழன் காலத்தில் (கி.பி.871-907) கட்டப்பட்டதாகும். கோயில், கருவறையையும், அதனையொட்டிய அர்த்த மண்டபத்தையும் கொண்டது. இசைச்சுற்றி பரிவார தேவதைகளுக்கான ஏழுகோயில்களும் உள்ளன. இவையே இக்கோயிலின் காலத்தால் முற்பட்ட அமைப்பாகும். அர்த்தமண்டபத்திற்கு முன்னால் உள்ள முகமண்டபமும், கோயிலுக்கு வடக்குப் பக்கமுள்ள அம்மன் சன்னதியும் காலத்தால் பிற்பட்டவையாகும். ஏனெனில் கட்டிடக்கலை அமைப்பில் இவை முன்னதிலிருந்து மாறுபடுகின்றன. கருவறைச் சுவற்றில் உள்ள காலத்தால் பிற்பட்ட கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தைச் சேர்ந்ததாக (கி.பி.1070-1118) உள்ளதாலும், ஆனால் முகமண்டபத்தில் உள்ள காலத்தால் முற்பட்ட கல்வெட்டோ, மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தைச் சேர்ந்ததாக (கி.பி.1178-1216) உள்ளதாலும் நாம் மேற்கண்ட முடிவுக்கு வரமுடிகிறது.

கோயில் விமானம் இரண்டு அடுக்கினைக் கொண்டது. விமானம் சதுரவடிவாக உள்ளது. விமானத்தின் மாடங்களில் தட்சிணாமூர்த்தி, பிட்சாடணமூர்த்தி, வராகன், விஷ்ணு, பிரம்மா ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பொதுவாக சிவன்கோயில்களில் கருவறையின் தெற்கு மாடத்தில் தட்சிணாமூர்த்தியின் சிற்பமே இருக்கும். ஆனால் இக்கோயிலில் தெற்கு மாடத்தில் உள்ள சிற்பம் வில்லையும் அம்பையும் பிடித்திருப்பதைக் கொண்டு, இது திரிபுராந்தகமூர்த்தி என்று தெரியவருகிறது. இது மற்ற கோயில்களில் காணமுடியாததொரு சிறப்பாகும். மேற்கு மாடத்தில் லிங்கோத்பவமூர்த்தியும், வடக்கு மாடத்தில் பிரம்மாவின் சிற்பமும் உள்ளன. அர்த்தமண்டபத்தின் வெளிவாயிலில் இரண்டு துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. இவற்றிற்கு இரண்டு கைகள் மட்டும் உள்ளன.

கோயிலைச்சுற்றியும், சூரியன், சப்தகன்னியர், கணேசர், சுப்ரமணியர், ஜேஷ்டாதேவி (மூதேவி) சந்திரன், சண்டிகேஸ்வரர் ஆகிய பரிவார தேவதைகளுக்கு சிறிய கோயில்கள் (Sub-Shrines) உள்ளன. இவற்றுள் சூரியனின் சிற்பம் கவனிக்கத்தக்கது. தாமரை மொட்டுக்களை (வழக்கமாக உள்ளது போல்) இரண்டு கைகளிலும் பிடித்திருப்பதற்குப் பதிலாக இடதுகை இடுப்பில் பொருந்தியிருக்க வலதுகை, அபய முத்திரைக்காட்டிக் கொண்டிருக்கிறது. இது ஒரு சிறப்பு அம்சமாகும். மேலும் பரிவார தேவதைகள் எட்டுக்குப் பதிலாக ஏழுக்கு மட்டும் கோயிலமைப்பது முற்கால சோழர் கலைப்பாணியாகும் என்பதையும் இங்கு தெரிந்து கொள்கிறோம்.

இக்கோயிலில் 12 கல்வெட்டுகள் உள்ளன. இவை சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்களின் காலத்தைச் சேர்ந்தவை. விஜயநகரக்காலக் கல்வெட்டுகளிலிருந்து இப்பகுதி வைத்தூர் பல்லவராயர்களின் ஆளுகையில் இருந்ததைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இவ்வூர் சோழர் காலத்தில் முக்கியமானதொரு படைப்பற்று (Military Station) என கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருக்கட்டளை, புதுக்கோட்டைப் பகுதியில் காலத்தால் முற்பட்ட வரலாற்றுப் பெருமை உடைய ஊர்களுள் ஒன்றாகும். சுந்தரேஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் வழியில் தற்போது கலசக்காடு என்று அழைக்கப்படும் பகுதியில், பெருங்கற்கால புதைகுழிகள் நிறைய காணப்படுகின்றன. இங்கு அகழ்வாய்வு செய்யப்பட்டு கிடைக்கப்பெற்ற இரும்பு ஆயுதங்கள், மணிகள், மட்பாண்டங்கள் ஆகியன புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கலசக்காடு பகுதியின் வடக்குப் பகுதி (தற்போதைய போஸ்நகர்) தற்போது காடாக காட்சியளிக்கிறது. ஆனால் ஒரு காலத்தில் இது கோட்டைக் கொத்தளங்களுடன் விளங்கியிருக்க வேண்டுமென்பது

தெரியவருகிறது. இந்த காட்டிற்குள், குடியிருப்புகள், மற்றும் கோயில்களின் இடிபாடுகளை இன்றும் காணலாம். இடிபாடுகளிடையே காணப்படும் கல்வெட்டுகளில் (கி.பி. 13-ம் நூற்றாண்டு) இவ்வூர் செனிகுலமாணிக்கபுரம் என குறிக்கப்படுகிறது. இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொண்டு நடைபெறுகின்றன.

## 12. பொற்பனைக்கோட்டை

பொற்பனைக்கோட்டை புதுக்கோட்டைக்கு கிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒரு காலத்தில் மிகப்பெரிய கோட்டைகளுடன் விளங்கிய இவ்வூர் இன்று வெறும் மண்மேடாகக் காட்சியளிக்கிறது. இங்குள்ள காட்டிலிருந்த பனைமரம் ஒன்று பொன் பனம்பழம் கொடுத்தால் பொற்பனைக் கோட்டை எனப் பெயர் பெற்றதாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. கி.பி. 13-14ம் நூற்றாண்டுவாக்கில் இப்பகுதியை ஆண்ட பாணர்கள் (வாணாதரையர்கள்) இங்கு இந்த கோட்டையைக் கட்டியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இக்கோட்டை பாணர்களின் அரசச் சின்னமான பருந்து வடிவில் அமைந்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. கோட்டையின் இடிபாடுகளிடையே காணப்படும் செங்கற்கள் 1'X 1' X 4'' அளவில் இன்றும் உறுதியுடன் இருப்பதைக் காணலாம். சுமார் 40 ஏக்கர் பரப்பில் கோட்டை அமைந்திருந்திருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது. இடிபாடுகளுக்கிடையே காணப்படும் ஒரு பள்ளம் சுரங்கப்பள்ளம் என்று அழைக்கப்படுகிறது. இதிலிருந்து தொடங்கும் சுரங்கப்பாதை தஞ்சாவூர் வல்லத்திற்கு செல்வதாக ஒரு கதை வழங்குகிறது. கோட்டை மேட்டுப் பகுதியில் பல கட்டிடங்கள் இருந்து அழிந்துபட்டதற்கான அடையாளங்களும் தென்படுகின்றன. இந்தக் கோட்டையின் வரலாறு குறித்தத் தெளிவான செய்திகளை அறிந்துகொள்ள இயலவில்லை.

கோட்டையை கருப்பர், முனீஸ்வரர் ஆகிய காவல் தெய்வங்கள் காத்துவந்தன. கோட்டையின் மேற்குப் பகுதியில் உள்ள முனீஸ்வரர் தற்போதும் புதுக்கோட்டை மக்களிடையே பிரசித்திப்பெற்ற தெய்வமாகும். இதன் ஒட்டம் புதுக்கோட்டை நகர முக்கிய வீதிகளிலும் இருப்பதாக நம்பப்படுகிறது. கிழக்குப் பகுதியிலும் ஒரு முனீஸ்வரர்கோயில் உள்ளது. பொற்பனை முனீஸ்வரின் பெயரால் புதுக்கோட்டையிலும், திருவரங்குளத்திலும் கோயில்கள் உள்ளன. மாவட்டத்தின் பல பகுதியிலுள்ள மக்களும் தங்களது வேண்டுதல் நிமித்தம் இக்கோவிலுக்கு உற்றார் உறவினர்களுடன் வந்து பூசைநடத்தி வழிபடுகின்றனர்.

## 13. திருவரங்குளம்

திருவரங்குளம் புதுக்கோட்டை-ஆலங்குடி சாலையில் புதுக்கோட்டையிலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. மாவட்டத்தில் பழமை பொருந்திய கோயில்களில் ஒன்றான அரங்குளநாதர், (ஹரதீர்த்தேஸ்வரர்) கோயில் இங்குள்ளது. அரங்குளநாதர் சுயம்பானவர்.

அரங்குளநாதர் - பிரதாம்பாள் (பெரியநாயகி) கோயில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோயில்களுள் உயர்ந்த கோபுரத்தைக் கொண்ட கோயிலாகும். கோயில் கருவறை பிற்கால சோழர் காலத்தில் கட்டப்பட்டதாகும். கருவறைச் சுவற்றின் தெற்கு மாடத்தில் தட்சிணாமூர்த்தியும் (ஆனால் இது திருக்கட்டளைக் கோயிலில் இருப்பது போன்று கையில் வில் பிடித்திருப்பதாக தெரிவதால் திரிபுராந்தக மூர்த்தி எனக்கொள்ளலாம்) மேற்கு மாடத்தில் லிங்கோத்பவமூர்த்தியும், வடக்கு மாடத்தில் பிரம்மாவும் காட்சியளிக்கின்றனர். கருவறை, அர்த்தமண்டபம் மகாமண்டபம் அனைத்தும் சமகாலத்தவையாகும். கருவறைச் சுவற்றிலுள்ள காலத்தால் முற்பட்ட கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழனின் 40-வது ஆட்சியாண்டைக் குறிக்கிறது. (கி.பி. 1218-19) கருவறைக்கு முன் உள்ள மண்டபங்களை ஒட்டி நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் தெற்கு சுவற்றில் 63 நாயன்மார்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கால் மண்டபத்தில் கணேசர், லட்சுமி, சுப்பிரமணியர், பைரவர், சூரியன் ஆகிய தெய்வங்களின் சன்னதிகள் உள்ளன. இந்த மண்டபத்தை ஒட்டியிருக்கும் இரண்டாவது கோபுரம் கங்கையரையர்களால் கட்டப்பட்டதாகும். இந்த கோபுரத்தையும் ராஜ கோபுரத்தையும் நீண்டதொரு மண்டபம் இணைக்கிறது. இம்மண்டபத்தின் தூண்களில் கோயிலுக்கு கொடையளித்த, வல்லநாட்ட செட்டியார்கள். மற்றும் சிற்றரசர்கள் சிற்பங்கள் காணப்படுகின்றன. இம்மண்டபம் நட்சத்திர மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது. கோயிலுக்கு கொடையளித்தவர்களுள் சேமப்பிள்ளையார் என்பவர் அடிக்கடி குறிப்பிடப்படுகிறார். இவர் நந்தா விளக்கெறிக்கவும், தினசரி வழிபாட்டுக்கு நிவந்தங்களும் அளித்த செய்திகள் தெரியவருகின்றன. இந்த மண்டபத்திற்கு வடக்கே உள்ள மண்டபம் சபாமண்டபம் அல்லது நாட்டிய மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. அம்மன் சன்னதி, தனியே உள்ளது. அம்மன்கோயில் சுவற்றில் காணப்படும் காலத்தால் முற்பட்ட கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழனின் 39-வது ஆட்சியாண்டை (கி.பி. 1217-18) குறிக்கிறது. இந்த (அம்மன்) கோயிலை பிரான்மலையை ஆண்ட (நிசதராஜா) சிற்றரசனின் மனைவியும் பொன்னமராவதியை ஆண்ட சிற்றரசனின் மகளுமான கன்னுடையபெருமாள் கட்டியதாக அறிகிறோம். ராஜகோபுரம் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இந்த சுவற்றில் உள்ள

தெலுங்கு கல்வெட்டொன்று ராஜா ராமச்சந்திர தொண்டைமான் காலத்தில் இக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்வித்ததைத் தெரிவிக்கிறது.

கோயிலில் 65 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மூன்றாம் குலோத்துங்க சோழன், சேமப்பிள்ளையார், இரண்டாவது பாண்டிய வம்ச மன்னர்கள், விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள், விஜயாலயத் தேவர், அறந்தாங்கி தொண்டைமான் மன்னர்கள், வைத்தூர்-பெருங்களூர் பல்லவராயர்கள், புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் ஆகியோரது காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளாகும் இவை. இந்த கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலங்கள், ஆபரணங்கள் குறித்தச் செய்திகளும் இங்கு கொண்டாடப்பட்ட திருவிழாக்கள், பற்றிய செய்திகளும் இக்கல்வெட்டுகளின் மூலம் தெரியவருகின்றன. இந்த கோயிலில் இவ்வூர் சபை கூடியதாக 13-ம் நூற்றாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது. ஊர்ச்சபையும், ஊர் பஞ்சாயத்தும் இக்கோயிலில் கூடி பல வழக்குகளை விசாரித்து முடிவுசெய்த செய்திகளை சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

நூற்றுக்கால் மண்டபத்தின் தெற்கு பகுதியில் ஒரு கற்பலகையில் காணப்படும் குதிரைவீரன் உருவம் இப்பகுதியை ஆண்ட நாயக்க சிற்றரசன் ஒருவனின் உருவமாக இருக்கலாம்.

கோயில் தோன்றிய வரலாறு குறித்து கீழ்க்கண்ட கர்ணபரம்பரைக் கதை ஒன்று சொல்லப்படுகிறது. இப்பகுதி காட்டில் தவம் செய்துகொண்டிருந்த முனிவர் ஒருவர், அதே காட்டில் வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த ஒரு வேடுவச்சியை, அவளது கணவனான வேடுவனிடம் கொண்டு சென்று ஒப்படைத்தார். இதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு வேடன் முனிவருக்கு தினசரி கிழங்குகளையும், பழங்களையும் கொண்டுவந்து கொடுத்து வந்தான். முனிவரும், அவன் திரும்பி செல்லும் வழியில் ஒரு பனைமரத்தை தோற்றுவித்து வேடனுக்கு தினசரி பொன்னால் ஆன பனம்பழம் ஒன்று கிடைக்கச்செய்தார். பொற்பனம் பழத்தின் மதிப்பை அறியாத வேடன் மேற்படி பழங்களை அவ்வூர் வளநாட்டு செட்டியார் ஒருவரிடம் கொடுத்துவிட்டு தனக்குத் தேவையான உணவுப் பொருட்களை பெற்றுவந்தான். இப்படியாக 4420 பொற்பனைப் பழங்களைப் பெற்ற வளநாட்டு செட்டியார் பெரும் பணக்காரராகிவிட்டார். பொற்பனைப்பழத்தின் மதிப்பைத் தெரிந்துகொண்ட வேடன், செட்டியாரிடம் அதிகமானப் பொருட்களைக் கேட்க அது அவனுக்கு மறுக்கப்படுகிறது. வேடன் மன்னனிடம் முறையிடுகிறான். மேற்படி பழங்கள் முழுவதும் பொன்னால் ஆனது என்பதை அறிந்த மன்னன், காட்டில் தவம் செய்துகொண்டிருந்த முனிவரையும், அவரால் உருவாக்கப்பட்ட பொற்பனையையும் கண்டுபிடிக்குமாறு உத்தரவிட்டான். ஆனால் முனிவரும் பொற்பனையும் காட்டில் காணப்படவில்லை. அவ்விடங்களில் லிங்கம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வழியாக தினசரி பால் கொண்டுசென்ற

ஒருவன் லிங்கம் இருந்த இடங்களில் அவனையறியாமல் தடுக்கிவிழுந்து அதனால் லிங்கம் பாலாபிஷேகம் பெற்றுவந்தது. ஒருநாள் அந்த பால்வியாபாரி தான் தடுக்கி விழுந்த இடங்களை - அதன் காரணம் தெரிந்து கொள்ள-தோண்டிப் பார்த்தபோது புதைந்திருந்த லிங்கத்தின் மீது காயம்பட்டு அதிலிருந்த ரத்தம் வருவதைக் கண்டு திடுக்கிட்டான், இச்செய்தி மன்னனுக்கு தெரிந்த உடன், அவ்விடத்தை இறைவனின் இருப்பிடமாகக் கருதி இவ்விடத்தில் சிவபிரானுக்கு ஒரு கோயில் கட்ட தீர்மானித்தான். ஆனால் வேடுவனிடமிருந்து பொற்பனைப் பழங்களைப்பெற்ற செட்டியார் தனது செலவிலேயே மேற்படி கோயிலை கட்டிமுடித்தார். மேலும் கோயில்கட்ட செலவானதுபோக மீதமிருந்த 3000 பொற்பனைப் பழங்களை கோயில் வளாகத்தில் அறை ஒன்றில் பூட்டிவைத்தார். (இன்றும் இவை இக்கோயில் வளாகத்திலோ அல்லது அருகிலுள்ள காடுகளிலோ புதைந்திருப்பதாக நாட்டு வழக்கில் சொல்லப்படுகிறது.)

இக்கோயில் வழிபாட்டு முறைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வித பாகுபாடுமின்றி ஈடுபடுகின்றனர். இதுகுறித்து ஒரு கதை சொல்லப்படுகிறது. கோயில் தேர், ஊர்வலம் வரும்போது இடையில் நின்றுவிட, முயன்று இழுக்கும்போது அச்சு முறிந்து விடுவது வழக்கமாக இருந்து வந்தது. ஒரு நாள் இறைவன் இவ்வூர் பக்தன் ஒருவன் கனவில் தோன்றி வெள்ளையானை மீது சவாரி செய்துவரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவன் வந்து தேருக்கு பூசை செய்து வடம் பிடித்தால் தான் தேர் அசையும் என்று தெரிவிக்க அவ்வாறே செய்யப்பட்டது. அதுமுதல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோயில் வழிபாடு மற்றும் தேர்வடம் பிடிக்கும் உரிமைகள் கொடுக்கப்பட்டு இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. (எல்லா இன மக்களும் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்த பிற்காலத்தில் ஏற்பட்ட நடைமுறைக்குரிய கதையாக இது இருக்கலாம்)

கோயிலின் வரலாறு பற்றி மேலும் பல கர்ணபரம்பரைக் கதைகளும் வழங்குகின்றன.

இக்கோயிலிருந்த நடராசர் படிமம் ஒன்று தற்போது டெல்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதே போன்ற மற்றொரு நடராசர் புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ளது.

அக்காலத்தில் இவ்வூரில் இரும்பு உருக்கப்பட்டதாக கல்வெட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இதைக் கொண்டு போர் ஆயுதங்கள் இங்கு நிறைய தயாரிக்கப்பட்டிருக்கலாம். இவ்வூருக்கு அருகிலுள்ள திருக்கட்டளை படைப்பற்றாக இருந்ததை முன்பே கண்டோம். இவ்வூரைச் சேர்ந்த தேவன் திருவரங்குளமுடையார் என்பவன் ''போர்வஞ்சி'' என்ற ஒரு நூலைப்பாடி பல கொடைகள் பெற்றதாக ஒரு கல்வெட்டுச் செய்தி கூறுகிறது.

## 14. பெருங்களூர்

பெருங்களூர் புதுக்கோட்டை தஞ்சாவூர் சாலையில், புதுக்கோட்டையிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூருக்குப் பக்கத்தில் அக்னிஆறு அல்லது பெருங்களூர் ஆறு ஓடுகிறது. முற்காலத்தில் இங்கு இரும்பு உருக்கும் தொழிற்சாலைகள் இருந்ததாகத் தெரியவருகிறது. கோனாட்டில் இருந்த காரான வேளார் குடியிருப்புகளில் இவ்வூரும் ஒன்று.

இவ்வூரில் ஒரு அய்யனார்கோயில் உள்ளது. அய்யனார் மலையமருங்கர் என்று அழைக்கப்படுகிறார். இவர் மலையாள நாட்டிலிருந்து வந்து இங்கு குடிக்கொண்டதாக கர்ணபரம்பறை கதை விளங்குகிறது. இக்கோயிலின் பூசாரி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். இவர் இந்த கோயிலில் உள்ள இறைவனுக்கு பூசைக்கரியங்கள் செய்ய அவரிடமிருந்த அனைத்து உயர் பிரிவு மக்களும் பிரசாதம் பெறுகின்றனர். (பெருங்களூரைச் சுற்றியுள்ள வேறு சில அய்யனார் கோயில்களிலும் இதுபோன்ற பழக்கம் உள்ளது).

கல்வெட்டுகளில் இவ்வூர் பெருங்கோழியூர் என்று அழைக்கப்படுகிறது. (கோழியூர் என்பது உறையூரின் மற்றொரு பெயராகும்) இங்குள்ள குலோத்துங்க சோழீச்சுரம் - சிவன் கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டப்பட்டதாகும். ஒரு காலத்தில் மல்லிகைப்பூ அதிகம் விளைந்து வந்ததால் மல்லிகைவனம் என்று அழைக்கப்பட்டது. பெருங்கற்கால ஈமக்காடுகள் பல காணப்படுகின்றன.

பிரபல தமிழ் எழுத்தாளர் அகிலன் பெருங்களூரில் பிறந்தவர். இவர் தனது பாவை விளக்கு நாவலில் புதுக்கோட்டையை கண்ணபுரம் என்றும் பெருங்களூரை புதுப்பட்டி என்றும் குறிப்பிடுகிறார்.

## 15. காளியாப்பட்டி

கீரனூர்-கிள்ளுக்கோட்டை பேருந்துத் தடத்தில் ஒரு சிற்றூர். தமிழக கோயில் கலை வரலாற்றில் சிறப்பான இடத்தை வகிக்கும் சிறியதொரு கட்டுமானக் கோயில் இங்கு உள்ளது. இவ்வூர் மக்கள் இந்த கோயிலை 'ஒட்டைக்கோயில்' என்று அழைக்கின்றனர். தமிழக, திராவிடவியல் கோயில் கட்டுமானப் பரிணாமப் பாணியில் இதுபோன்ற கோயில்கள் இரண்டாவது வகையாகும். கிருத்துவ சகாப்தத்தின் தொடக்கத்திலிருந்து எடுப்பிக்கப்பட்டுவந்த குகைக் கோயில்களுக்கு அடுத்து (இது முதல் வகை) இது போன்ற சிறிய ஓரடுக்கு விமான கோயில்களே கட்டப்பட்டன.

கிழக்கு முகம் பார்த்திருக்கும் காளியாப்பட்டி சிவன்கோயில் இப்பகுதியில் கட்டப்பட்ட, கட்டுமான கோயில் கலைக்கு

எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. 8' X 8' அளவுள்ள கருவறையும் அதற்கு மேல் சிறியதொரு விமானக்கூடும் அமையப்பெற்றது. கருவறைச் சுவற்றில் மாடங்கள் இல்லை. கோயில் சிறியதாக இருந்தாலும் தமிழக - திராவிடவியல் கோயில் அமைப்பிற்குத் தேவையான எல்லா அம்சங்களும் பொருந்தியிருப்பதைக் காணலாம்.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டில் பரகேசரிவர்மன் என்று குறிப்பிட்டுள்ளதால் இது விஜயாலய சோழனைக் குறிப்பதாகும் எனவும், ஆகவே கோயிலின் காலம் கி.பி. 868 எனவும் அறிஞர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் 40 ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்டிருந்தார். ஆனால் சமீபகால ஆய்வுகளின்படி, புதுக்கோட்டைப் பகுதி இக்காலத்தில் பாண்டியர் ஆட்சிக்குட்பட்டிருந்ததால், இக்கோயில் பாண்டியரின் காலக் கலைப் படைப்பாக இருக்கவேண்டும் என திரு. கே.வி. சௌந்தரராஜன் குறிப்பிடுகிறார். இக்கருத்து ஏற்புடையதாகும் என்றே தோன்றுகிறது. புதுக்கோட்டை மாவட்ட கோயில் கலைப்பாணிக்கு இக்கோயில் முன்னோடியாகத் திகழ்கிறது. (எறத்தாழ இதே அமைப்புடைய கோயில்கள் ஏனாதி, திருப்பூர் ஆகிய இடங்களிலும் உள்ளன.)

## 16. கொடும்பாளூர்

கொடும்பாளூர், புதுக்கோட்டையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் குடுமியான்மலை-மணப்பாறை சாலையில் உள்ளது. கொடும்பாளூர் சங்க காலத்திலிருந்தே புகழ்பெற்றதொரு நகரமாகும். சோழர்களின் தலைநகரமான உறையூருக்கும், பாண்டியரின் தலைநகரமான மதுரைக்கும் இடையே இருந்த பெருவழியில் கொடும்பாளூர், எழில்மிகு தோற்றத்துடன் விளங்கியது. கோவலனும், கண்ணகியும் பூம்புகாரிலிருந்து மதுரைக்கு இவ்வழியே சென்றதாக அறிகிறோம். கொடும்பாளூர் இப்பகுதியை ஆண்ட வேளிர்களின் தலைநகரமாக விளங்கியது.

சோழராட்சிக் காலத்தில் இருக்கவேளூர் என்று வழங்கப்பட்ட இக்கிராமத்தை, ராணி மங்கம்மாள், அவரது தளவாய் லட்சுமி நரசிம்மையா என்பவருக்கு மானியமாக வழங்கியிருந்ததால், 17-18-ம் நூற்றாண்டுகளில் இவ்வூர் 'மங்கம்மாள் சத்திரம்' என்றும் அழைக்கப்பட்டது. கொடும்பாளூருக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூர் கொடும்பாளூர் சத்திரம் என்று இன்றும் வழங்கப்படுகிறது. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன் வழங்கிவந்த-கொடும்பாளூர் என்ற பெயரே இன்றும் நிலைத்து நின்று இந்த சிற்றூருக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறது.

தமிழகத்தை ஆண்ட மன்னர் பலரின் ஆட்சியுரிமையை குறித்து நடைபெற்ற போர்கள் பல கொடும்பாளூரில் நடைபெற்றுள்ளன. பூதிவிக்ரமகேசரி என்பான் வேளிர்களுள் பேரும் புகழும்

மிக்கவனாவான். இவன் இரண்டாம் சுந்தரசோழபராந்தகனுக்கும், இரண்டாம் ஆதித்த சோழனுக்கும் சம காலத்தவன் ஆவான். தற்போது கொடும்பாளூர் மூவர்கோயிலும், முசுகுந்தேஸ்வரர் கோயிலும் வேளிரின் பெருமைக்கு கட்டியங்கூறிக்கொண்டிருக்கின்றன.

**மூவர்கோயில்:** மூவர்கோயிலின் (நடுக்கோயிலில்) உள்ள கிரந்த எழுத்துக் கல்வெட்டொன்று (பு.க.14) கொடும்பாளூர் வேளிரது ஒன்பது தலைமுறை குறித்த வம்சாவளிச் செய்திகளைத் தருகிறது. இந்த கல்வெட்டு கி.பி. 10-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். (இக்கல்வெட்டு தொடக்கத்திலும், இறுதியிலும் சிதைந்திருப்பதால் சில செய்திகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை). கல்வெட்டு இறுதியாக பூதி விக்ரம கேசரி என்பவனைக் குறிப்பிடுகிறது. இவனே மூவர்கோயிலைக் கட்டியவன். அவனுக்கு கற்றளை பிராட்டியார், வரகுணா என இரண்டு மனைவியர் இருந்ததையும் பராந்தக வர்மன், ஆதித்த வர்மன் என இரண்டு மகன்கள் இருந்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கொடும்பாளூரில் மூவர்கோயிலைக் கட்டிய பூதி விக்ரம கேசரி, தனது பெயரிலும் தனது மனைவியர் வரகுணவாட்டி, கற்றளை பிராட்டியார் ஆகியோரின் பெயராலும் மூன்று கோயில்களைக் கட்டினான் என இங்குள்ளக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. எனவேதான் இக்கோயில் மூவர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. காளமுக சைவப் பிரிவினரின் தலைவனான மல்லிகார்ஜுனனுக்கு ஒரு பெரிய மடம் கட்டிக்கொடுத்து, அங்கு ஐம்பது காளமுகர்களுக்கு உணவளிக்க பல கிராமங்களை மானியமாக, விக்ரமகேசரி அளித்ததாகவும் மேலும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. (காளமுகர்கள் சைவ சமயத்தின் ஒரு பிரிவினராவர். இவர்கள் நெற்றியில் கருப்பு வண்ணத்தைப் பூசிக்கொள்ளுவார்கள். இவர்கள் நரனுக்கும் (மனிதர்களுக்கும்) ராட்சசர்களுக்கும் பிறந்தவர்கள் என சொல்லிக் கொண்டார்கள். தண்ணீர் குடிக்க மனித மண்டைஓட்டை பயன்படுத்தினார்கள். சுடுகாட்டிலிருந்து எடுக்கப்பட்ட சாம்பலையே உடம்பு முழுவதும் பூசிக்கொண்டார்கள். கையில் எப்போதும் ஒரு தடிக்கம்பையும் மண்டை ஓட்டையும் வைத்திருப்பார்கள். சிவபெருமானுக்கு கள் வைத்து படையல் செய்தார்கள். இவர்கள் நீண்ட சடைமுடியை வைத்துக்கொண்டனர். மேல் கையில் உத்திராட்ச மாலைகள் அணிந்திருந்தார்கள். சைவ, சமயத்தின் காளமுகப் பிரிவினர் கர்நாடகப் பகுதியில் அதிகமாக வாழ்ந்துவந்தனர். கொடும்பாளூர் வேளிர்கள் கொங்குநாட்டில் கொண்டிருந்த அரசியல் தொடர்பின் காரணமாக, காளமுக சைவ மதப்பிரிவினர் கொடும்பாளூருக்கும் வந்து தங்கலாயினர்).

தென்னிந்திய கோயில் கட்டிடக்கலை வளர்ச்சி வரலாற்றில் மூவர் கோயிலின் அமைப்பும், அக்கோயிலிலுள்ள சிற்பங்களும் சிறப்பானதொரு இடத்தைப் பெறுகின்றன. பூதி விக்ரம கேசரி கட்டிய

மூன்று கோயில்களில் (தெற்கு வடக்கு வரிசையில் ஒரே மாதிரியான மூன்று கோயில்கள்) வடக்குப் பக்கமிருந்த கோயில் இடிந்து அழிந்துபட (அஸ்திவாரம் தவிர) மீதமுள்ள இரண்டு மட்டும், தமிழகத்தின் கோயில் கட்டிடக்கலை வரலாற்றிற்கு பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோயிலும் கருவறையையும், (கர்ப்பகிருகம்) முன்னால் ஒரு அர்த்த மண்டபத்தையும் கொண்டது.

கருவறை 21' X 21' அளவு சதுரமாக உள்ளது. விமானம் 32' உயரம் உடையது. கோயில்கள் மேற்குநோக்கி உள்ளன. மூன்று கோயில்களுக்கும் பொதுவாக ஒரு மகாமண்டபம் இருந்திருக்கிறது. தற்போது அது அழிந்துபட்டுவிட்டது. (அஸ்திவாரம் மட்டும் உள்ளது) இதற்கு முன்னால் ஒரு நந்தி மண்டபமும், அதற்கு முன்னால் ஒரு பலிபீடமும் காணப்படுகின்றன. மூன்று கோயில்களைச் சுற்றியும் பரிவார தேவதைகளுக்காக 15 சிறிய கோயில்கள் கட்டப்பட்டிருந்தன. இவையும் அழிந்து விட்டன. சுற்றிலும் திருமதில் இருந்து அழிந்துபட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

விமானத்தின் உள்பகுதியிலிருந்து நோக்கும்போது கற்கள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கப்பட்டிருக்கும் பாங்கு வியப்பை அளிக்கிறது. சுண்ணாம்பு, சாந்து ஏதும் இன்றி ஒன்றன்மீது ஒன்றாக கற்கள் அடுக்கப்பட்டுள்ள பாரத்தைக் கொண்டு (Counterweight) விமானத்தின் உள்பகுதி கூம்பு போன்று கூடாக உருவாகி உள்ளது. ஆனால், வெளியிலிருந்து பார்க்கும்போது முழுவதும் இறுக்கமாக (Solid) கட்டப்பட்டது போன்று தோற்றமளிக்கும். விமானத்தின் உச்சி ஒரு திருமந்திரக்கல்லினால் மூடப்பட்டிருக்கிறது. கோயில் ஒரு தாமரை மலர் போன்ற பீடத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. அடிப்குதியைச் சுற்றியுள்ள யாளிகளின் சிற்பங்களும் நான்கு மூலைகளிலும் உள்ள மகரங்களின் திறந்த வாயிலிருந்து வெளிப்படும் சிறிய மனித உருவங்களும் காணத்தக்கவையாகும். கருவறைச் சுவற்றின் மூன்று பகுதியிலும் மாடங்கள் உள்ளன. மாடங்களுக்கு மேல் உள்ள பூதகணங்கள், மகர தோரணங்கள், கூடுகள் ஆகியனவும் வெகுநுல்லியமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

தற்போது நல்ல நிலையிலுள்ள இரண்டு கோயில்களின் விமானங்களும் மூன்றடுக்கு உடையவை. திராவிட கட்டிடக்கலையின் இலக்கண வழுவமைதியினை இவற்றில் காணமுடியும். மேலே செல்லச் செல்ல விமானத்தின் பருமானம் குறைந்துகொண்டே செல்வதைக் காணலாம். தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள மிக உயரமான கோயில் விமானங்களின் கட்டுமான அமைப்புப் பணிக்கு கொடும்பாளூர் மூவர் கோவில் விமானம் முன்னோடியாகத் திகழ்கிறது. கருவறையில் (ஒரு கோயிலில் மட்டும்) லிங்கம் உள்ளது. மற்றதிலிருந்தது அழிந்துபட்டிருக்க வேண்டும்.

கருவறையின் மாடங்களிலும், விமானத்திலும் காணப்படும் சிற்பங்கள் தமிழக சிற்பக்கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத்

திகழ்கின்றன. இச்சிற்பங்களின் அங்க அமைப்பு, அளவு, பரிமாணங்கள் மனித உடற்கூறோடு ஒத்திருப்பது சிறப்பாகும். சிவபெருமானின் பல தரப்பட்ட கோலங்கள் புராணக் கதைகளுக்கு ஏற்ப இங்கு சிற்பங்களாக காட்சியளிக்கின்றன. உமையொருபாகனாக நிற்கும் அர்த்தநாரி, வீணையைக் கையிலேந்தி இசைக்கலையின் வித்தகனாக காட்சியளிக்கும் வீணாதரதட்சிணாமூர்த்தி, தனது பக்தன் மார்க்கண்டேயனைக் காப்பதற்கு காலனைக் காலால் உதைத்துக் களிநடனம் புரியும் காலாரி மூர்த்தி, பிரும்மாவின் தலையைக்கொய்தப் பாவத்தைப்போக்க ஆடையற்ற நிலையில் கையிலே கபாலமேந்தி பிச்சை கேட்கும் பிட்சாடனமூர்த்தி, தருகாவனத்தில் யானை அரக்கனைக்கொன்று அந்த யானையின் தோலை போர்த்திக்கெண்டு உக்கிர நடனமாடும் கஜசமஹாரமூர்த்தி, முப்புரம் எரித்து கொடுகொட்டி நடனமாடும் திரிபுராந்தகர், தேவி பார்வதியை தழுவி இன்புற்றிருக்கும் ஆலிங்கனமூர்த்தி, பார்வதி தேவியின் பாசத்தை பங்கிட்டுக்கொள்ளவந்த கங்காதேவியுடன் காட்சியளிக்கும் கங்காதரர் போன்ற சிவபெருமானின் தோற்றங்கள் நம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகின்றன. இவற்றுள், காலாரி மூர்த்தியின் சிற்பம் மிகவும் நம்மைக் கவர்ந்திழுக்கிறது. ஆடை ஆபரணங்கள் அதிகமின்றி அழகு பூண்டு விளங்கும் இச்சிற்பங்களுக்கு இணை, இவையே!

மூவர் கோயிலுக்கு சற்று கிழக்கே ஐந்தலை என்ற ஐந்து கோயில்கள் இருந்து அழிந்துபட்டுள்ளன. அவற்றின் அடித்தளம் மட்டுமே தற்போது காணப்படுகிறது. இந்த அமைப்பைக்கொண்டு இது மற்ற கோயில்களை விட காலத்தால் முற்பட்டது எனக் கருதப்படுகிறது. கோயிலைச் சுற்றி நடைபெற்ற அகழ்வாய்வுகளில் கிடைத்த சிற்பங்கள் அனைத்தும் இங்கு ஒரு அருங்காட்சியகமாக அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள, ஆடியுடன் கூடிய ஆரணங்கு (மோகினி) காணத்தக்கது. மேலும் பல அறிய அழகிய சிற்பங்களையும் இங்கு காணலாம்.

முசுகுந்தேஸ்வரர் கோயில்:- மூவர்கோயிலுக்கு வடக்கே சற்று தொலைவில் முசுகுந்தேஸ்வரர் கோயில் என்னும் அழகியதொரு கோயிலைக் காணலாம்.

திருமுதுகுன்றம் உடையார் என்னும் முசுகுந்தேஸ்வரர் கோயில் முற்கால சோழர்கால படைப்பாகும். (இறைவனுக்கு திருமுதுகுன்றம் உடையார் என்று பெயர்] இக்கோயிலை மகிமாலய இருக்கவேள் என்னும் பராந்தக வீர சோழன் குஞ்சரமல்லன் என்பவன் கட்டியதாகவும், அதன் பராமரிப்பிற்கு ஒல்லையூர் கூற்றத்தில் நிலங்கள் நிவந்தமளித்துள்ள செய்தியும் இக்கோயிலிலுள்ள கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. மகிமாலய இருக்கவேள் முதலாம் பராந்தக சோழன் மற்றும் ராஜகேசரி கண்டராதத்ய சோழன் ஆகியோரின் சமகாலத்தவனாவான். பராந்தக சோழனின் 14-வது ஆட்சியாண்டில்-கி.பி.921-ல்-இக்கோயில் கட்டப்பட்டது.

கோயிலின் கருவறையும், முன்மண்டபமும் காலத்தால் முற்பட்டவையாகும். முன் மண்டபத்தை அடுத்துள்ள மகா மண்டபமும்

அதைத் தொடர்ந்துள்ள மண்டபமும்; அருகில் காணப்படும் அம்மன் கோயிலும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையாகும். இக்கோயிலின் ஒரு பகுதியும், சிற்பங்களும் காலப்போக்கில்அழிந்துபட, மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் - கி.பி.1183-84-ல் பழுது பார்க்கப்பட்டு, தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, ,பிரம்மா, துவாரபாலகர் ஆகிய சிற்பங்கள் புதிதாக வைக்கப்பட்டதாக இங்குள்ள ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. (பு.க. 144) ஆனால் இச்சிற்பங்கள் ஒன்றுகூட இன்று காணப்படவில்லை.

கருவறையின் வெளிச்சுவற்றில் காணப்படும் கலசம், பத்மம், பலகை, பூதகணங்கள், யாளிவரி, மகரம் ஆகியன கலையழகுமிக்கன. கோயில் விமான கட்டுமான அமைப்பில், திருக்கட்டளைக் கற்றளியின் சாயலைக் காணலாம்.

கோயிலைச் சுற்றி ஒரு திருமதில் இருந்ததற்கான அடையாளம் உள்ளது. பரிவார தேவதைகளுக்கான கோயில்கள் நான்கு மட்டும் காணப்படுகிறது. இவற்றுள் ஒன்றில் சுப்ரமணியர் சிற்பமும், மற்றொன்றில் பைரவர் சிற்பமும் காணப்படுகின்றன. பரிவார தேவதைக்கான கோயில்கள் ஏழில் மூன்று அழிந்துபட்டிருக்க வேண்டும்.

சாலையிலிருந்து இக்கோயிலுக்குச் செல்லும் பாதையில் ஒரு மேடையின்மீது பெரிய நந்தி ஒன்று காணப்படுகிறது. இது இக்கோயிலின் முன்பு இருந்ததாக இருக்கலாம். இதன் நீளம் 9 அடியாகும். கலையம்சத்திலும் தோற்றத்திலும் இந்த நந்தி ($1^{0}$ அடி நீளமுள்ள) தஞ்சாவூர் பெரிய கோவில் நந்தியை ஒத்திருப்பதைக் காணலாம். புதுக்கோட்டை தர்பார் இந்த நந்தியை புதுக்கோட்டை அருங்காட்சியகத்திற்கு எடுத்துவர முயற்சி செய்து முடியாத காரணத்தால் தற்போது இருக்கும் இடத்திலேயே மேடை கட்டப்பட்டு வைக்கப்பட்டதாக அறிகிறோம். (இப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கேயே விடப்பட்டிருக்கலாம்).

## 17. குடுமியான்மலை

குடுமியான்மலை புதுக்கோட்டையிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள கோயில் மூலவரின் பெயரான சிகாநாதசாமி என்பதைக் கொண்டு இவ்வூர் குடுமியான்மலை என்று அழைக்கப்படுகிறது. (சிகா= குடுமி - அதாவது குடுமியுள்ள இறைவன்) இங்குள்ள இறைவனுக்கு குடுமி வந்தது பற்றி இக்கோயில் ஸ்தலபுராணம் கூறும் கதை சுவையானதாகும். முன்னொரு காலத்தில் இக்கோயில் அர்ச்சகர் ஒருவர் பூஜைக்கு வைத்திருந்த பூவை எடுத்து அங்குவந்த தனது ஆசை நாயகிக்கு கொடுத்துவிட்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் மன்னர் கோயிலுக்கு வந்துவிட, மன்னரைக் கண்டதும் செய்வதறியாது தவித்த அர்ச்சகர் தனது ஆசைநாயகியின் தலையிலிருந்த பூவை எடுத்து பூஜைக்குப் பயன்படுத்தி, அதைப் பிரசாதமாக மன்னருக்கு அளிக்க, அதில் தலைமுடி ஒட்டியிருந்ததைக் கண்ட மன்னர், அதன் காரணத்தை

அர்ச்சகரிடம் வினவினார். அர்ச்சகர் சமயோசிதமாக, கோயிலில் குடிகொண்டிருக்கும் மூலவருக்கு (லிங்கம்) குடுமியுள்ளது என்று சொல்லிவிட்டார். வியப்பு மேலிட்ட மன்னர் (இறைவனின்) குடுமியைக் காட்டும்படி கேட்க, தனது பக்தனான அர்ச்சகரைக் காப்பாற்ற இறைவனும் லிங்கத்தில் குடுமியுடன் காட்சியளித்தார். ஆகவேதான் மூலவருக்கு சிகாநாதசாமி என்று பெயர் வந்ததாக இக்கதையின் மூலம் அறிகிறோம். (இக்கோயிலில் குடிகொண்டுள்ள இறைவனுக்கு - லிங்கத்திற்கு - குடுமியிருப்பதைக் குறிக்கும் வண்ணம் லிங்கத்தின் உச்சியில் - குடுமி - (முடிச்சு போன்ற பகுதி) இருப்பதை இன்றும் பக்தர்களுக்கு காட்டப்படுகிறது).

கி.பி.10ம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் இவ்வூர் திருநலக்குன்றம் என்றும், 14ம் நூற்றாண்டு கல்வெட்டில் சிகாநல்லூர் என்றும், கடவுளின் பெயர் குடுமியார் என்றும், 17-18ம் நூற்றாண்டு கல்வெட்டில் குடுமியான்மலை என்றும் குறிக்கப்படுகிறது. திருநலக்குன்றம் என்றால் புனிதமான - மங்களமான - மலை என்றும் பொருள். 'நல' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு 'நள' என சம்ஸ்கிருத வடிவம் கொடுக்கப்பட்டு, இக்கோயிலை, புராண கதாநாயகன் நளனுடன் தொடர்புபடுத்திக் கூறும் ஒரு கர்ண பரம்பறை கதையும் உண்டு. 14ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள், கோயில் மூலவரை "தென்கோநாட்டு சிகாநல்லூர் குடுமியார்" எனக் குறிப்பிடுகின்றன. சில கல்வெட்டுக்களில் குடுமிநாதர் என்றும் குறிக்கப்படுகிறது. ஆனால் சிகாநல்லூர் என்பது "சிகரநல்லூர்" என்றே இருந்திருக்கவேண்டும். (சிகரம்=சிகரமுயர்ந்த மலை) நெடிதுயர்ந்த குன்று-மலை-ஒன்று இங்குள்ளதை நாம் இன்றும் காண்கிறோம். ஆகவே குடுமியார் என்பதற்கு சிகரமுயர்ந்த நெடிய மலையில் குடிகொண்டிருக்கும்-இறைவன்-குடுமியார் (சிவபெருமான்) எனப் பொருள் கொள்ளலாம். 'குடுமி என்றால் தலைமுடிக் கற்றை என்று மட்டும் பொருளல்ல. மலையுச்சி, உயர்ந்தவர் என்றெல்லாம் பொருள்படும் (ஒப்பு நோக்குக: பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, கண்ணப்ப நாயனார் காளஹஸ்தியில் வழிபட்ட இறைவனின் பெயர் குடுமித்தேவர்).

குடுமியார் என்னும் தமிழ்ச்சொல் காலப்போக்கில் சிகாநாதசாமி என சம்ஸ்கிருதச சொல்லாக மருவிவிட்டது. அதற்கேற்ப கி.பி.17-18ம் நூற்றாண்டில் மேலே சொன்ன புராணக் கதையும் எழுந்திருக்கவேண்டும். தற்போது இவ்வூர் பெயர் குடுமியான்மலை என்றே நின்று நிலவ இறைவன் பெயர் மட்டும் 'சிகாநாதா' என வழங்கப்படுகிறது. (இதே போன்றே மயிலாடுதுறை, மாயூரம் எனவும், குரங்காடுதுறை, கபிஸ்தலம் எனவும், திருமறைக்காடு வேதராண்யம் எனவும், சிற்றம்பலம் சிதம்பரம் எனவும் சமஸ்கிருத வடிவம் பெற்று மருவி வழங்குதல் காண்க).

அக்காலத்தில், திருநலக்குன்றம் என்னும் இவ்வூர் குன்றைச் சுற்றிலும் வீடுகள் அமைந்திருந்தன. குன்றின்மீது ஏறிச் செல்லும்போது ஒரு இயற்கைக் குகையினைக் காண்கிறோம். இது கற்கால மனிதர்களின் இருப்பிடமாக இருந்திருக்கலாம். குன்றின் உச்சியில் குன்றுதோராடும்

குமரன்கோயில் உள்ளது. குன்றின் கிழக்குச் சரிவில் சிகாநாதசாமி கோயில் உள்ளது.

புதுக்கோட்டைப் பகுதியின் வரலாற்று நிகழ்ச்சிகள் குறித்த பல அறிய செய்திகளை குடுமியான்மலையிலுள்ள கலவெட்டுகளின மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இங்குள்ள மேலக்கோயில் என்னும் குகைக்கோயிலும், அதன் அருகிலுள்ள கர்நாடக சங்கீதம் பற்றிய கல்வெட்டும் பல்லவ மகேந்திரவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்தது எனக் கூறப்பட்டு வந்தது. ஆனால் சமீபகால ஆய்வுகளின்படி இவை மகேந்திரவர்ம பல்லவனுடன் தொடர்புடையவை அல்ல என்று தெரிய வந்துள்ளது. சிகாநாதசாமியின் கருவறை (தற்போது நாம் காண்பது) கி.பி.12ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம். அதன்பின் இப்பகுதியை ஆண்டுவந்த பல்லவராயர்கள் இக்கோயிலின் பராமரிப்பிற்கு கொடைகள் அளித்த செய்தியை இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. பல்லவராயர்களைத் தொடர்ந்து தொண்டைமான்களின் ஆட்சியில் இக்கோயில் சிறப்புடன் விளங்கியது. காலத்தால் முற்பட்ட தொண்டைமான் மன்னர்கள் இந்தக் கோயிலிலேயே முடிசூட்டிக் கொண்டார்கள். ரகுநாதராயத் தொண்டைமான் (1686-1730) குகைக் கோயிலின் முன் உள்ள மண்டபத்தைக் கட்டியிருக்கிறார். 1730ல் ராஜா விஜயரகுநாத ராயத் தொண்டைமான் இக்கோயிலிலேயே முடிசூட்டிக் கொண்டார். அம்மன் கோயிலிலுள்ள 1872ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று ராமச்சந்திரத் தொண்டைமான் காலத்தில் இக்கோயிலின் திருக்குடமுழுக்குத் திருவிழா நடைபெற்ற செய்தியைத் தெரிவிக்கிறது.

குன்றின் கிழக்குச் சரிவில் மேலக்கோயில் என்னும் குகைக்கோயில் குடைவிக்கப்பட்டுள்ளது. குன்றில் குடையப்பட்ட கருவறையும் அதற்கு முன்பு உள்ள தாழ்வாரப் பகுதியும் மலையிலேயே குடையப்பட்டவையாகும். இதைத் தொடர்ந்துள்ள மண்டபம் 18-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். குகையின் வாயிலில் இரண்டு துவாரபாலகர்கள் (வாயிற்காப்போர்) சிற்பங்கள் உள்ளன. கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் இந்தச் சிற்பங்கள் கலையழகு மிக்கவை. கருவறையில் லிங்கம் ஒன்று காணப்படுகிறது. குகையின் தென்பகுதியில் மலையிலேயே செதுக்கப்பட்டுள்ள வலம்புரி விநாயகர் சிற்பம் ஒன்று உள்ளது.

குகைக்கோயிலின் தென்பகுதியில் (குன்றின் கிழக்குச் சரிவில்) 13'x14' அளவில் கர்நாடக சங்கீத விதிகள் குறித்த புகழ் வாய்ந்த கல்வெட்டு உள்ளது. இதுபோன்ற கல்வெட்டு இந்தியாவில் இது ஒன்றேயாகும். மேலும் கி.பி.4ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரதரின் நாட்டிய சாத்திரம் என்னும் நூலுக்கும், சாரங்கதேவரின் சங்கீதரத்னகாரா என்னும் நூலுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட சங்கீதம் பற்றிய குறிப்பு இதுவேயாகும். ருத்ராச்சார்யா என்பவரது சீடனாக விளங்கிய மன்னன் ஒருவனால் இக்கல்வெட்டு எடுக்கப்பட்டது என இக்கல்வெட்டே தெரிவிக்கிறது. ஆனால் இவர்கள் யாரென்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இருப்பினும்

எழுத்தமைதியைக் கொண்டு இது மகேந்திரவர்ம பல்லவனது காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என டாக்டர் சி.மீனாட்சி போன்ற ஆய்வாளர்கள் கருதினர். (Administration and Social life under the Pallavas) ஆனால் இக்கருத்து சரியானதல்ல என்று தற்போது நிறுவப்பட்டுள்ளது.

'சித்தம் நமஹ சிவாய' என்று தொடங்கும் சங்கீதம் பற்றிய இந்தக் கல்வெட்டு ஏழு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சங்கீர்த்தன ஜதி என்னும் ராகம் பற்றிய விதிகளை இக்கல்வெட்டு விளக்குகிறது. இறுதியில் ருத்ராச்சார்யாரின் சீடனான பரம மகேஸ்வரன் என்னும் மன்னன் இந்த ராகங்களை பாடி வைத்தானென்றும், கண்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டிற்குப் பக்கத்திலேயே 'பரிவாதினி' என்று ஒரு கல்வெட்டு வாசகம் உள்ளது. இது ஒரு யாழ் வகையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. கல்வெட்டில் காணப்படும் ராகங்கள் 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவாரப் பண்களிலும் காணப்படுகிறது. தற்காலத்தில் வழங்கிவரும் ராகங்களிலும் இதன் கூறுகளைக் காணமுடிகிறது. முதல் பகுதியில் (மத்யம) சொல்லப்படும் ராகம் ஹரிகாம்போஜிக்கும், இரண்டாவது (சட்ஜக்ரம) கரஹரப்பிரியாவுக்கும், மூன்றாவது (ஷடப) நடனமாக்ரிய ராகத்திற்கும், நான்காவது (சதாரி) பந்துவாரளி ராகத்திற்கும், ஐந்தாவது (பஞ்சமம்) அஹிரி ராகத்திற்கும், ஆறாவது சங்கராபரண ராகத்திற்கும், ஏழாவது மெச்சகல்யாணி ராகத்திற்கும் உரிய விதிகளைத் தெரிவிக்கின்றன. இதில் சொல்லப்பட்டிருக்கும் ராகங்கள் 'பரிவாதினி' என்னும் யாழில் வாசிக்க ஏற்றதாகும் எனவும் கருதப்படுகிறது. ஆகவேதான் 'பரிவாதினி' என்னும் பெயர் இந்தக் கல்வெட்டிற்கு அருகில் காணப்படுவதாகவும் கருதப்படுகிறது. மேலும் 'பரிவாதினி' என்னும் வாசகம் திருமயம், திருக்கோகர்ணம், மலையக்கோயில் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. திருமயம் விஷ்ணு குகைக்கோயிலின் பின்புறத்தில் உள்ள சிற்பத் தொகுதியிலும், கிள்ளுக்கோட்டை மகிஷாசுரமர்த்தினி கோயிலிலும் காணப்படும் யாழ் வகை பரிவாதினியாக இருக்கலாம். ''சுருதியும், சுவரங்களும் இணைந்த புதிய ராகங்கள் பிற்காலத்தில் அமைக்கப்பட்டதற்கும், 'யாழ்' மறைந்து 'வீணை' கண்டுபிடிக்கப்பட்டு, புதிய ராகங்கள் அதில் வாசிக்கலானதும், இந்தக் கல்வெட்டு, சங்கீத உலகிற்கு அளித்த பரிசுகளாகும்.'' (டாக்டர் வி.பிரேமலதா - குடுமியான்மலை, சங்கீதக் கல்வெட்டு - கல்வெட்டுக் கருத்தரங்கு, சென்னை 1966).

குகைக்கோயிலுக்கு மேலே உள்ள பாறையின் உச்சிப் பகுதியில் கிழக்கு நோக்கி அறுபத்துமூன்று நாயன்மார்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதாகும்.

*சிகாநாதர்* - அகிலாண்டேஸ்வரி கோயில், சமஸ்தான காலத்தில் சீரும், சிறப்புடன் விளங்கியது. கிழக்கு நோக்கியிருக்கும் கோயிலில் கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் இருமருங்கிலும் ஆயிரங்கால் மண்டபத்தைக் காணலாம். இம்மண்டபத்தின் முகப்புத்

தூண்களில் அனுமன், வாலி, சுக்ரீவன், போன்ற சிற்பங்கள் உள்ளன. இதன் இருமருங்கிலும் பெரிய மண்டபங்கள் உள்ளன. இதையடுத்த ஆனைவெட்டு மண்டபத்தில் நுழைந்ததும் தமிழகத்து சிற்பக்கூடம் ஒன்றினுள் நுழைந்துவிட்ட உணர்வு நமக்கு ஏற்படும். இம்மண்டபத்தின் தூண்களில் கலையழகு மிக்கப் பல சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் காலத்தால் பிற்பட்டபவை என்றாலும் (கி.பி.16-17ம் நூற்றாண்டு) இக்காலச் சிற்பக் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவையாகும். தன்னை அழிக்க முடியாத வரம் பெற்ற ஹிரண்யகசிபு, ஆணவம் தலைக்கேறி, சொல்லடா ஹரி என்ற கடவுள் எங்கே, என்று பிரகலாதனை துன்புறுத்த, நாராயணன் தூணிலும் உள்ளான் துரும்பிலும் உள்ளான் என பிரகலாதன் விடை பகர, அருகிலிருந்த தூணை எட்டி உதைத்தான் ஹிரண்யகசிபு. தூண் இரண்டாகப் பிளந்தது. அதிலிருந்து சிங்க முகமும் மனித உடலும் கொண்ட பயங்கர உருவம் தோன்றியது. ஹிரண்யனைப் பற்றிப் பிடித்து தனது கால்களுக்குக் குறுக்கே கிடத்தி, அவனது உடலை இரு கூறாக பிளந்து, அவனது குடலை மாலையாக அணிந்து கொண்டது. ஆணவம் வீழ்ந்தது! இதுவே நரசிம்ம அவதாரம். இக்கதையைச் சித்தரிக்கும் உயிரோட்டமுள்ள நரசிம்ம அவதாரக் காட்சியினை-நரசிம்மரின் சிற்பத்தை - ஒரு தூணில் காண்கிறோம். காதலுக்கு கரும்பைத் தூதுவிட்டு விளையாடும் மன்மதன், அதற்கு மறுமொழியாக தனது வேல் விழியினை பாய்ச்சிடும் ரதி - இங்குள்ள ரதி மன்மதன் சிலைகள் நம்மைக் கனவுலகிற்கு அழைத்துச் செல்லுகின்றன. உலகத்து அழகையெல்லாம் தன்வயப்படுத்திக் கொண்டு காட்சியளிக்கும் மோகினி (மோகினி உருவில் விஷ்ணு) வினை தீர்க்கும் விநாயகர், பக்தர்களைக் காக்க பன்னிரு கைகளும் ஆறுமுகங்களும் கொண்ட சண்முகர், அண்டத்தையும் ஆட்டிப்படைக்கும் பலம் பெற்ற பத்துத் தலையுடன் கூடிய ராவணன், கருடன் மீதமர்ந்து பயணம் செய்யும் விஷ்ணு பெருமான், தீய சக்திகளை தூளாக்குவேன் என உணர்த்திக் கொண்டிருக்கும் அகோர வீரபத்திரர் - இன்னும் இதுபோன்ற பல சிற்பங்கள் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. குதிரைப்படை வீரர்களும், காலாட்படை வீரர்களும் உபயோகித்த ஆயுதங்களையும் குதிரைப்படை தாக்குதல்களைக் காலாட்படையினர் எப்படி எதிர்கொண்டார்கள் என்பதையும் இங்குள்ளச் சிற்பங்களில் காணலாம்.

இந்த மண்டபத்திலிருந்து கோயிலினுள் செல்லும் வாயில் பகுதிக்கு கங்கையரையன் குறடு (கங்கையரைய குறுநில மன்னர்களால் எடுக்கப்பட்டது) என்று பெயர். இதையடுத்து பாண்டியர் கால கலைப்பாணியில் எடுப்பிக்கப்பட்ட மண்டபம் உள்ளது. அடுத்துள்ளது மகா மண்டபம். கோயிலின் கருவறையும்-விமானமும்-முகமண்டபமும் முற்கால சோழர் காலத்தில் கட்டப்பட்டு, பின்பு பாண்டியர் காலத்திலும் விஜயநகர மன்னர்களின் காலத்திலும் புதுப்பிக்கப்பட்டு, தனது பழமையை இழந்துவிட்டது. குகைக்கோயிலில் காணப்படும் 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் கல்வெட்டு திருமூலத்தானம், திருமேற்றளி என இரண்டு கோயில்களைக் குறிப்பிடுகின்றது.

திருமூலத்தானம் என்பது இந்தச் சிவன் கோயிலையே குறிப்பதாக இருக்கவேண்டும். ஆகவே இக்கோயில் 8ம் நூற்றாண்டில் எடுப்பிக்கப் பட்டு பிற்காலத்தில் பலமுறை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிய வருகிறது. தற்போது நாம் காண்பது பிற்காலப் பாண்டியர் காலத்து கட்டுமானமாகும். கி.பி.1215லிருந்து 1265 வரை பழைய மண்டபங்கள் புதுப்பிக்கப்பட்டன. புதிய மண்டபங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. கோனாட்டில் இருந்த, நாடு, நகரம், படைப்பற்று தனி நபர்கள் அனைவரும் இதற்காகக் கொடையளித்துள்ளனர். விமானம் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. கருவறையைச் சுற்றியுள்ள மண்டபங்களில் சப்த கன்னியர், லிங்கோத்பவர், ஜேஷ்டாதேவி, சுப்ரமணியர் போன்ற சிற்பங்கள் பலவற்றைக் காணலாம். நாயக்கர் மண்டபத்தில் காணப்படும் வியாகரபாதர் (மனித உருவம் புலியின் கால்கள்) பதஞ்சலி (மனித உடலும் கால்கள் பாம்பு போன்றும்) சிற்பங்கள் காணத்தக்கவையாகும்.

அம்மன், அகிலாண்டேஸ்வரி ஆகும். அம்மன்கோயில் பிற்கால பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். கருவறைக்கு முன்னால் உள்ள மண்டபத்தின் தரையில் 12'x18' அளவுள்ள (அறுபட்டை வடிவாக அமைந்த) கருங்கல் பலகை ஒன்று உள்ளது. இக் கற்பலகையில் அமர்ந்தே இப்பகுதியை ஆண்டுவந்த பல்லவராயர்களும் அவர்களைத் தொடர்ந்து வந்த புதுகோட்டை தொண்டைமான் மன்னர்களும் முடிசூட்டிக் கொண்டனர்.[9] உமையாள்நாச்சி என்னும் தேவதாசி, குகைக்கோயிலுக்கு அருகிலுள்ள அம்மன் கோயிலைக் கட்டுவித்து அங்கு மலையமங்கை அல்லது சௌந்திரநாயகி அம்மனை பிரதிஷ்டை செய்தாள். இப்பெண்மணி குடுமியான்மலைக் கோயிலுக்கு மேலும் பல கொடைகள் அளித்துள்ளாள்.

குடுமியான்மலை, குகைக்கோயிலும், அதன் அருகிலுள்ள சங்கீத கல்வெட்டும் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்தவை எனக் கூறப்பட்டு வந்தது. ஆனால் வரலாற்றுச் சான்றுகளின்படி இது சரியல்ல என்று தற்போதைய ஆய்வுகள் (கீழ்க்கண்டச் சான்றுகளின் அடிப்படையில்) தெரிவிக்கின்றன.

1. பல்லவ மகேந்திரனின் ஆட்சிப் பகுதி காவிரிக்குத் தெற்கே பரவி இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

2. குடுமியான்மலைக் கோயிலில் இப்பகுதியை ஆண்ட மன்னர் பரம்பரையினரின் 120க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் ஒன்றுகூட பல்லவர் பரம்பரையைச் சேர்ந்தது அல்ல. திருமேற்றளி, மேலக்கோயில் என்னும் குடவரைக்கோயிலில் காணப்படும் காலத்தால் முந்தியக் கல்வெட்டு பாண்டிய மன்னர் பரம்பரையைச் சேர்ந்ததாகும். (பு.க.எண்238, 240) இவை, முறையே மாறவர்மன் ராஜசிம்மன் என்னும் முதலாம் சடையன் மாறன் (கி.பி.730-65) காலத்தையும், இரண்டாவது ஜடிலபராந்தக வரகுணன் மாறன் சடையன் (கி.பி.765-815) காலத்தையும் சேர்ந்ததாகும்.

3. குகையின் தூண்களும் மகேந்திரவர்மன் கால தூண்களின் அமைப்பிலிருந்து வேறுபடுகின்றன.

4. நரசிம்மவர்ம பல்லவன் (630-68) மற்றும் இரண்டாம் நரசிம்மவர்மன் ராஜசிம்மன் (680-720) ஆகியோரது காலத்து குகைக் கோயில்களில் காணப்படுவதுபோல கருவறையின் பின் சுவற்றில் சோமாஸ்கந்தர் சிற்பத்தொகுதி இல்லை.

5. குகையினுள் உள்ள லிங்கம், பல்லவ ராஜசிம்மன் காலத்து லிங்க அமைப்பிலிருந்து வேறுபடுகிறது. குகையில் காணப்படும், கி.பி.8ம் நூற்றாண்டு கல்வெட்டைக் கொண்டு மேற்றளி என்னும் மேலைக்கோயில் (குகை) இக்காலத்தில் எடுப்பிக்கப்பட்டதாகக் கொள்ள வேண்டியுள்ளது.

6. குகைக் கோயிலின் காலம் கி.பி.8ம் நூற்றாண்டு என வரையறுக்கும்போது, அருகிலுள்ள சங்கீத கல்வெட்டின் காலமும் இதே காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியுள்ளது. கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு மகேந்திரவர்ம பல்லவன் காலத்தது எனச் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இங்கு காணப்படும் கிரந்த எழுத்துக்களைப் போன்ற எழுத்துக்கள் முற்கால பாண்டியர் காலத்தைச் சேர்ந்த வேள்விக்குடி மற்றும் சென்னை அருங்காட்சியக செப்பேடுகளிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

7. 'குணசேனா' என்கிற புனைப் பெயரைக் கொண்டும் இக்கல்வெட்டு மகேந்திரவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என அறிஞர் சிலர் கூறுகின்றனர். குணசேனா என்பது 'குணபாரா' என்னும் மகேந்திரவர்ம பல்லவனின் புனைப் பெயரின் திரிபே என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் குணசேனா என்னும் பெயர் குடுமியான்மலைக் கல்வெட்டில் காணப்படவில்லை. திருமயம் மற்றும் மலையடிப்பட்டி கல்வெட்டுகளிலேயே காணப்படு கிறது.

8. சங்கீதக் கல்வெட்டின் இறுதியில் காணப்படும் பரம மகேஸ்வரா என்னும் சொல் மகேந்திரவர்மனை குறிப்பதாகச் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் மகேந்திரவர்ம பல்லவனுக்கு இருந்த அனேக புனைப் பெயர்களில் மகேஸ்வரன் என்னும் பெயர் இல்லை. மேலும் மகேஸ்வரர் என்று தங்களை அழைத்துக் கொண்ட காளமுக, பசுபத சைவர்களை, மகேந்திரவர்மன் தனது மத்தவிலாச பிரஹசனம் என்னும் நூலில் கேலி செய்கிறான். ஆகவே கேலிக்குரிய பெயராக அவன் கருதியதையே அவன் தனது புனைப் பெயராகக் கொண்டிருக்க வாய்ப்பில்லை.

கொடும்பாளூர் ஒரு காலத்தில் கோனாட்டு (நிலப்பரப்பின்) தலைநகராக விளங்கியது (கோனாட்டு கொடி நகரம்) கொடும்பாளூரில் காளமுக சைவப்பிரிவினர் வாழ்ந்து வந்த செய்தியையும், அவர்களுக்குக் கொடும்பாளூர் வேளிர் மன்னன் மடங்கள் கட்டி நிவந்தங்கள் அளித்த செய்தியையும் முன்பே கண்டோம். குடுமியான்மலையும் இக்காலத்தில் கொடும்பாளூரின் ஆட்சிக்குட்பட்டதாக இருந்தது. கொடும்பாளூர் வேளிர் மன்னன் ஒருவன் தன்னை 'மகேஸ்வரன்' என்று அழைத்துக் கொண்டிருப்பானோ எனக் கொள்ளலாம்.

ஆகவே, குடுமியான்மலை குக்கைகோயிலும், அதன் அருகிலுள்ள சங்கீதக் கல்வெட்டும் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்தது அல்ல என்னும் முடிவுக்கு நாம் இட்டுச் செல்லப்படுகிறோம். ஆனால் இன்னும் சில வரலாற்று நூல் ஆசிரியர்கள் பழைய கருத்தையே எழுதி வருகின்றனர்.

இங்கு மொத்தம் 120 கல்வெட்டுகள் உள்ளன. இவை இப்பகுதியின் அரசியல் பொருளாதார வரலாற்றினையும், இக்கோயிலுக்கு கொடையளிக்கப்பட்ட விபரங்களையும் தெரிவிக்கின்றன. இக்கோயிலுக்கு உரிய நிலங்கள் கோனாட்டில் பல இடங்களில் இருந்தன. பிற்கால பாண்டியர் காலத்தில் இப்பகுதியை கங்கையரையர், வாணாதரையர், ஆகியோர் ஆண்டு வந்தனர். விஜயநகர மன்னர்கள் வீரகம்பண்ண உடையார், கோப திம்மா ஆகியோரது பெயர்கள் இக்கால கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. மதுரை நாயக்கர்கள் காலத்தில் இப்பகுதி மருங்காபுரி சிற்றரசர்களின் கீழ் இருந்தது. பின்பு வைத்தூர் பல்லவராயர்கள் இப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர். சிவந்தெழுந்த பல்லவராயர் இக்கோயிலுக்கு சில மண்டபங்களைக் கட்டியுள்ளார். மேலும் நந்தவனம், தோட்டங்கள், தேர் ஆகியனவற்றின் பராமரிப்பிற்கும் கொடையளித்துள்ளார். ரகுநாதராயத் தொண்டைமான் குகைக்கோயிலுக்கு முன்னால் ஒரு மண்டபத்தைக்கட்ட, உயரமான இந்த மண்டபத்திற்கு விஜயரகுநாதராய தொண்டைமான் (1730-69) படிக்கட்டுக்கள் அமைத்தார். இக்கோயிலுக்கான கொடைகள் பற்றிய செய்திகள் இனனும் ஏராளமாக உள்ளன.

பழமை பொருந்தியுள்ள இவ்வூரில் புதுமையும் பொதிந்து கிடக்கிறது. இங்கு 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் அறிஞர் அண்ணா விவசாய ஆராய்ச்சிப் பண்ணை அமைந்துள்ளது. விவசாயம் மற்றும் தோட்டக்கலையில் அருமையான பல புதிய கண்டுபிடிப்புக்கள் இங்கு உருவாகி வருகின்றன.

## 18. குன்னாண்டார் கோயில்

குன்னாண்டார் கோயில் புதுக்கோட்டையிலிருந்து சுமார் 25 கி.மீ தொலைவில் உள்ளது. புதுக்கோட்டையிலிருந்து புத்தாம்பூர் வழியாகவும், கீரனூரிலிருந்து கிள்ளுக்கோட்டை வழியாகவும் இவ்வூருக்குப் பேருந்தில் செல்லலாம்

குன்னாண்டார் கோயில் (குன்று ஆண்டார் கோயில்) இங்குள்ள கல்வெட்டுகளில் திருக்குன்றக்குடி என்று குறிக்கப்படுகிறது. இங்குள்ள தாழ்வானதொரு குன்றின் கிழக்குப் பகுதியில் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்த (கி.பி.710-775) குகைக்கோயில் உள்ளது. இக்காலத்தில் பல்லவரின் கீழ் சிற்றரசர்களாக ஆண்டுவந்த முத்தரையர்களின் படைப்பாகும் இது. அமைப்பில் இது திருக்கோகர்ணம் குகைக்கோயிலை ஒத்துள்ளது. குகைக்கோயில் கருவறையையும் அதற்கு முன்னால் ஒரு சிறிய மண்டபத்தையும் கொண்டது. குன்றின் உச்சியில் சுப்ரமணியருக்கு ஒரு கோயில் உள்ளது. இது காலத்தால் பிற்பட்டதாகும்.

(குன்றுதோராடும் குமரன் கோயில் அமைந்த காரணத்தால் பிற்காலத்தில் இக்கோயில் குன்றாண்டார் கோயில் என அழைக்கப்பட்டு காலப்போக்கில் குன்னாண்டார் கோயில் என்று வழங்கப்பட்டு வருவதாகக் கொள்ளலாம்)

குகைக் கோயில் கருவறையின் வெளிப்பக்கம் உள்ள சிறிய மண்டபத்தின் தெற்குச் சுவற்றில் வலம்புரி கணேசரும் வடக்குப் பக்கத்தில் சோமாஸ்கந்தரும் பாறையிலேயே வடிக்கப்பட்டுள்ளன. **முற்கால பல்லவர்களின் குகைக்கோயில்களில் சோமாஸ்கந்தர் கருவறையின் பின் சுவற்றில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு** கருவறைக்கு வெளியே உள்ளது. ஆகம விதிகளின்படி சோமாஸ்கந்தர் உருவ அமைப்பில் சிவனும் பார்வதியும் அமர்ந்திருக்க, இருவருக்கும் இடையில் ஸ்கந்தர் (முருகன்) குழந்தை வடிவில் நின்று கொண்டிருப்பதாக இருக்கும். ஆனால் இங்கு, சிவனும் பார்வதியும் அமர்ந்திருக்க பார்வதியின் இடது பக்கத்தில் ஒரு பெண் உருவம் மட்டும் உள்ளது. இதை முருகன் என்று சொல்லமுடியாது. மேலும் இப்பெண் உருவம் வலது கையில் ஒரு தட்டை ஏந்தியுள்ளது. ஆகவே இவ்வுருவம் ஒரு பணிப்பெண் போன்று உள்ளது. ஆகவே சோமஸ்கந்தர் என்று இதை அழைப்பதைவிட சிவனும் பார்வதியும் அமர்ந்த கோலத்தில் உள்ள உமாமகேஸ்வரர் என அழைப்பது பொருத்தமாக இருக்கும். (J.Raja Mohamad, The Hindu 20.5.70)

குகைக்கோயிலுக்கு முன்னால் உள்ள மண்டபங்கள் முத்தரையர்களால் கட்டப்பட்டுள்ள விபரம் இங்குள்ள கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகிறது. போத்தரையன் மண்டபம், நாட்டிய மண்டபம் என்னும் இம்மண்டபங்களில் இக்கோயிலுக்கு கொடையளித்த சிற்றரசர் பலரின் சிற்பங்கள் உள்ளன. குகைக்கோயிலுக்கு அருகில் நூற்றுக்கால் மண்டபம் ஒன்று உள்ளது. இது விஜயநகர காலக் கலைப்பணியாகும். மண்டபத்தின் முகப்பு, நான்கு சக்கரங்களுடன் கூடிய தேர்வடிவத்தில் இரண்டு குதிரைகள் இழுப்பதுபோன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள காலத்தால் முற்பட்ட கல்வெட்டு இரண்டாம் நந்திவர்மன் மற்றும் தந்திவர்மன் காலத்தைச் சேர்ந்தவையாகும். சாளுக்கிய சோழர், பிற்கால பாண்டியர், விஜயநகர மன்னர் ஆகியோரின் கல்வெட்டுகள் பலவும் காணப்படுகின்றன. இப்பகுதியை ஆண்டுவந்த பல்லவராயர்கள் இக்கோவிலுக்கு கொடைகள் பல அளித்துள்ளனர். காலத்தால் பிற்பட்டக் கல்வெட்டொன்று, திருச்சிராப்பள்ளிக்கும், தஞ்சாவூருக்கு இவ்வழியாக சென்ற வணிகப் பொருட்கள் மீது $^{1}/_{16}$ பணம் சுங்கம் (கோயில் பராமரிப்பிற்கு) வசூலிக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது.

அம்மன் சன்னதி காலத்தால் பிற்பட்டதாகும். அம்மனை தரிசிக்கவரும் பக்தர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற காணிக்கையாக மஞ்சளை அளிக்கின்றனர். இங்குள்ள கல்தொட்டி ஒன்றில் பக்தர்கள் மஞ்சளைக் காணிக்கையாக செலுத்துகின்றனர். காணிக்கையாக செலுத்தப்படும் மஞ்சளை இவ்வூர் மக்கள் யாரும் எடுத்துச் செல்வதில்லை.

# 19. மலையடிப்பட்டி

மலையடிப்பட்டி, புதுக்கோட்டையிலிருந்து சுமார் 33 கி.மீ தூரத்தில், கீரனூர் - கிள்ளுக்கோட்டை பேருந்துத் தடத்தில் உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் திருவாலத்தூர் மலை என்று அழைக்கப்படுகிறது. இங்கு சிவ பெருமானுக்கும், விஷ்ணு பெருமானுக்கும், தனித்தனியே இரண்டு குகைக் கோயில்கள் உள்ளன. இரண்டும் அருகருகே ஒரே குன்றில் எடுப்பிக்கப்பட்டுள்ளன. அனந்தசயன மூர்த்தியாக காட்சியளிக்கும் விஷ்ணு பெருமான் கோயில் திருப்பதிக்குச் சமமாக மதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

சிவன்கோயில், திருமால் கோயிலைவிட சற்று காலத்தால் முற்பட்டதாகும். இக்கோயிலில் உள்ள நந்திவர்ம பல்லவன் காலத்து கி.பி.(775-826) கல்வெட்டொன்று, இம்மன்னனின் 16-வது ஆட்சியாண்டில் அதாவது சுமார் கி.பி.730-ல் குவாவன் சாத்தன் என்னும் விடேல்-விடுகு முத்தரையன், இங்குள்ள (திருவாலத்தூர்) மலையைக் குடைந்து சிவனுக்கு கோயிலெடுத்து (லிங்கத்தை வைத்து) அதற்கு வாகீஸ்வரர் என்று பெயரிட்டான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது. (வாகீஸ்வரர் என்பது அப்பரது பெயராகும்) கருவறையை அடுத்து உள்ளது அர்த்தமண்டபமாகும். இம்மண்டபத்தின் சுவற்றில் ஏழு தாய்மார்கள், கணேசர், வீரபத்திரர், சிவன், விஷ்ணு ஆகிய சிற்பங்கள் மலையிலேயே வெட்டுவிக்கப்பட்டுள்ளன. காளி, மகிஷாசுரமர்த்தனியாக செதுக்கப்பட்டுள்ள சிற்பத்தொகுதி மிகவும் சிறப்புடையதாகும். எருமையின் முகமும், மனித உடலும் கொண்ட மகிஷ அசுரனுடன், அன்னை பராசக்தி சிங்கத்தின்மீது அமர்ந்து சமர்புரிந்து அந்த அரக்கனை அடித்துவீழ்த்தும் காட்சி இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. மகாபலிபுரத்திலுள்ள மகிஷாசுரமர்த்தனி சிற்பத் தொகுதியைவிட இது கலையழகு மிக்கது. ஆனால் இத்தொகுதியில் பல சிற்பங்கள் பழுது பட்டுள்ளன. பல்லவர்கால பாணியை ஒட்டி வாயிற்காப்போர் என்னும் துவாரபாலகருக்கு இரண்டு கைகள் மட்டும் உள்ளன. குகையை ஒட்டிமுன்னால் உள்ள மண்டபம் விஜயநகர காலக் கலைப்பணியாகும்.

திருமாலின் குகைக்கோயில், கருவறையையும், முன்னால் ஒரு மண்டபத்தையும் கொண்டது. தூண்கள், சிவன்கோயில் தூண்களைவிட அழகாக உள்ளன. தூணின் அடிப்பக்கம் சிங்கம் நிமிர்ந்து உட்கார்ந்திருப்பது போன்றும் அதற்கு மேல் தூண் உயர்ந்திருப்பதையும் காண்கிறோம். (இது பல்லவ மாமல்லன் காலத்துக் கலைப்பாணியை ஒத்தது) மண்படத்தின் சுவற்றில் நரசிம்மர், வராகமூர்த்தி, தேவியருடன் திருமால் ஆகிய சிற்பங்கள் சுவற்றிலேயே செதுக்கப்பட்டுள்ளன. கருவறையில் திருமால் அனந்தசயன மூர்த்தியாக காட்சியளிக்கிறார். நாகராஜன் ஆதிசேஷனின் ஐந்து தலைகளும் குடைபோன்று விரிந்து திருமாலின் தலைக்கு நிழலளித்துக் கொண்டிருக்கின்றன. திருமாலின் நாபியிலிருந்து பிரம்மா தோன்றி காட்சியளிக்கிறார். கருவறையின்

பின்சுவற்றில் அரக்கர்களும், தேவர்களும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். அனந்த சயனமூர்த்தியின் கலை அமைப்பு சிறப்புடையதாகும். அம்மன் சன்னதி காலத்தால் பிற்பட்டதாகும். இதை, தெம்மாவூர் அரையன் மங்கன் தென்கொண்டான் கட்டுவித்தாக இங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது. கி.பி.16-ம் நூற்றாண்டில் இப்பகுதி தஞ்சாவூர் நாயக்கர்களின் ஆட்சிக்குட் பட்டிருந்தபோது, அச்சுதப்ப நாயக்கர் இக்கோயிலுக்குக் கொடையளித்தச் செய்தியை மற்றொருக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இக்குகைக்கோயிலில் காணப்படும் ஓவியங்கள் காலத்தால் பிற்பட்டதாகும். (கி.பி.17-18-ம் நூற்றாண்டு) இவற்றில்; ஆந்திரமாநிலம் லீபாக்ஷியில் உள்ள ஓவியங்களின் சாயலைக் காணமுடிகிறது.

இங்குள்ள இரண்டு குகைக்கோயில்களிலும், குகைக்கோயில் கட்டுமான வளர்ச்சி வரலாற்றை தெரிந்து கொள்ள முடிகிறது. இப்பகுதியை ஆண்டுவந்த மன்னர்கள் தமிழகக் கோயில் கட்டிடக்கலையின் சோதனைக்களமாக இந்தப் பகுதியைப் பயன்படுத்தி இருக்கின்றனர் என்று சொல்லலாம். ஏனெனில் இந்த குகைக் கோயில்களுக்கு மிக அருகில்தான் காலத்தால் முற்பட்ட சிறிய கற்கோவில்கள் காளியாப்பட்டி, விசலூர் போன்ற இடங்களில் நின்று கோயில் கட்டிடக் கலையின் பரிணாம வளர்ச்சியை நமக்குத் தெரிவித்து கொண்டிருக்கின்றன.

## 20. நார்த்தாமலை

நார்த்தாமலை புதுக்கோட்டை - திருச்சி பேருந்துத் தடத்தில் புதுக்கோட்டையிலிருந்து 19 கி.மீ தொலைவில் உள்ளது. மேலமலை, கோட்டைமலை, கடம்பர் மலை, பறையர் மலை, உவக்கன் மலை, ஆளுருட்டி மலை, பொம்மாடி மலை, மண்மலை, பொன்மலை போன்ற ஒன்பது சிறிய மலைகள் (குன்றுகள்) இங்கு உள்ளன. ராம-ராவண, இலங்கைப் போரில் மாண்டுபோன வீரர்களை உயிர்ப்பிக்க வைக்க வடக்கிலிருந்து சஞ்சீவி மலையை அனுமன் தூக்கி வந்தபொழுது அதிலிருந்து சிதறிய துகள்கள் இங்கு விழுந்து இக்குன்றுகள் உண்டாயின என்று ஒரு கர்ணபரம்பரைக் கதைக் கூறுகிறது. ஆகையால் இம்மலைகளில் பல அருமையான மூலிகைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நாரதர் இங்கு தங்கி இருந்ததால் நாரதர் மலை என்று பெயர் வழங்கியதாக பெருங்களூர் ஸ்தல புராணம் கூறுகிறது.

நார்த்தாமலை கி.பி.7-ம் நூற்றாண்டிலிருந்து 9-ம் நூற்றாண்டு வரை பாண்டியர் மற்றும் பல்லவர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. இவர்களது மேலாண்மைக்குட்பட்டு முத்தரையர் என்னும் சிற்றரசர்கள் இப்பகுதியை ஆண்டு வந்தனர். நார்த்தாமலை மேலமலையிலுள்ள பழியிலி ஈச்சுரம் குகைக்கோயில் மூன்றாம் நந்திவர்ம பல்லவ மன்னன் ஆட்சிக்காலத்தில் (கி.பி.826-849) விடேல்விடுகு முத்தரையனின் மகன் சாத்தன் பழியிலி என்னும் முத்தரைய குல குறுநில மன்னனால் கட்டப்பட்டது. திருபதுங்கவர்மனின் 9-ம் ஆட்சியாண்டு (கி.பி.847-875) கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளது. இப்பகுதியில் பின்பு

பாண்டியர்களும், சோழர்களும் தங்களது ஆதிகத்தை நிலைநிறுத்திக் கொள்ள போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். கி.பி.9-ம் நூற்றாண்டின் இறுதியில் விஜயாலய சோழன் தஞ்சாவூரில் சோழர்களின் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்தியபோது இப்பகுதியும் அவனது ஆட்சிக்குட் பட்டிருக்க வேண்டும். இங்குள்ள ராஜராஜ சோழன் காலத்துக் கல்வெட்டில் இவ்வூர் தெலுங்கு குலகாலபுரம் என்றும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டில் குலோத்துங்க சோழபட்டணம் என்றும் அழைக்கப்படுகிறது.

கி.பி.14-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், மதுரையில் சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டபோது இப்பகுதியும் அவர்களது ஆட்சிக்குட்பட்டிருந்தது. (மாலிக்காபூர் நார்த்தாமலை வழியாக மதுரைக்குச் சென்றதாகச் சொல்லப்படுவது குறித்த கருத்தாய்வுகளை முன்பே கண்டோம்) மதுரையில் முஸ்லிம்களின் ஆட்சி முடிவுற்றதிலிருந்து இப்பகுதி விஜயநகரப் பேரரசின் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவந்தது. பின்பு மதுரை நாயக்கர்களும் அதன்பின் பல்லவராயர்களும், ஆண்டுவந்தனர். தொண்டைமான் மன்னர்கள் பல்லவராயர்களிடமிருந்து நார்த்தாமலையை தங்கள் வசமாக்கிக் கொண்டனர். சிறு குன்றுகள் நிறைந்த இடமாக உள்ளதால் இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் இப்பகுதியின் பாதுகாப்பிற்கான ராணுவ தளங்களை இங்கு வைத்திருந்தனர். குன்றுகளின் மேல் காவல் அரண்கள் இருந்ததற்கான அடையாளங்களை இன்றும் காணலாம்.

நார்த்தாமலையில், அக்காலத்தில் பெரும் வணிகர் பலர் வசித்து வந்தனர். இவர்கள் ஒரு குழுவாக இணைந்து செயல்பட்டுவந்தனர். இக்குழுவிற்கு 'நகரம்' என்று பெயர். கி.பி.9-10 நூற்றாண்டுகளிலிருந்து இந்த வணிகக் குழுவினர் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த வணிகக் குழுக்கள் கோயில்கள் குளங்கள், வாய்க்கால்கள், ஆகியவற்றின் பராமரிப்பிற்கான மானியங்களைப் பெற்று அவற்றை நிர்வகித்து வந்ததோடு, உள்ளூரில் வரிவசூலித்தல் போன்ற ஊராட்சிப் பணிகளையும் செய்துவந்தன. புதுக்கோட்டைப் பகுதியிலிருந்த 'ஐநூற்றுவர்' என்னும் பெருவணிகக் குழுவில் 10 நகரங்கள் அடங்கியிருந்தன. அவற்றுள் நார்த்தாமலையும் ஒன்றாகும். ஆகவே இவ்வூர் நகரத்தார்மலை அல்லது நகரத்துமலை என்று அழைக்கப்பட்டு பின்னர் நார்த்தாமலை என்று மருவியதாகவும் கூறுவர். இங்குள்ள மேலமலையிலுள்ள விஷ்ணு குகைக்கோயில் 'பதினென்பூமி வின்னகரம்' என்று அழைக்கப்படுகிறது. (வின்னகரம் = விஷ்ணு கோயில்)

நார்த்தாமலை மேல மலையில், பழியிலி ஈச்சுரம், சமணர்குடகு (தற்போது விஷ்ணு கோயில்) ஆகிய குகைக்கோயில்களும், விஜயாலய சோழீச்சுரம் என்னும் கட்டுமான கோயிலும் உள்ளன.

**விஜயாலய சோழீச்சுரம்**

விஜயாலய சோழீச்சுரம் கோயில் தமிழக கோயில் கட்டிடக்கலை வரலாற்றில் ஏற்றமிக்கதொரு இடத்தைப் பெறுகிறது. இதுபோன்ற

கலைப்பாணியில் அமைந்த கோயில் தமழிகத்தில் இது ஒன்றே! கோயில் கட்டிடவகை நகரா, திராவிட, வேசரா என மூன்று வகைப்படும். தமிழகத்திலுள்ள கோயில்கள் அனைத்தும் திராவிட கலைப்பாணியில் அமைந்தவை என்று சொல்லப்படும்.

வேசரா கலைப்பாணியில் விமானத்தின் சிகரம் வட்டமாக இருக்கும். இக்கலைப்பாணியை மகாபலிபுரம் ரதங்களிலும் இவற்றின் அருகிலுள்ள வலயன்கட்டி ரதத்திலும் ஓரளவு காணலாம். ஆனால் இக்கலைப்பாணி விஜயாலய சோழீச்சுரம் கோயிலில் முழுமை அடைந்திருப்பதைக் காணமுடிகிறது. கோயிலைச் சுற்றி பரிவார தேவதைகளுக்கு ஆறு சிறு (ஏகதள) கோயில்கள் உள்ளன. ஏழாவது கோயிலின் அடித்தளம் மட்டும் காணப்படுகிறது. ஆரம்பத்தில் எட்டு கோயில்கள் இருந்திருக்க வேண்டும். கோயிலைச் சுற்றி சுற்றுமதில் ஒன்றும் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன.

மேற்கு நோக்கியுள்ள விஜயாலய சோழீச்சுரம் 1240 சதுர அடிபரப்பில் முழுதும் கற்களினால் அமைந்தக் கட்டுமானமாகும். உண்ணாழிகை (கருவறை) வட்டமாக அமைந்துள்ளது. இது, இந்து சாத்திர நூல்களில் கூறப்படும் பிரணவ அல்லது ஓங்கார அமைப்பை ஒத்ததாக உள்ளது. இதுபோன்ற அமைப்பு தனிச்சிறப்பானது. கருவறையைச் சுற்றிவர பிறைவடிவிலான சிறு சுற்று வழி (பிரகாரம்) உள்ளது. அதையடுத்து நான்கு பக்கங்களிலும் (சதுரமான) சுவர் உள்ளது. கருவறையில் லிங்கம் உள்ளது. கருவறையின் வெளிச்சுவற்றில் மாடங்கள் இல்லை. (பொதுவாக 10-ம் நூற்றாண்டு கோயில்களில் இதுபோன்ற மாடங்கள் வைத்து அவற்றில் சிற்பங்கள் அமைப்பது வழக்கமாக இருந்தது).

கருவறைக்கு முன்னால் அர்த்தமண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபத்தை ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இந்த மண்டபத்து வாயிலில் வாயில்காப்போர் சிற்பங்கள் இரண்டு உள்ளன. இச்சிற்பங்கள் பல்லவர்கால கோயில்களில் உள்ளவை போன்று கலையழகு மிக்கவை.

இக்கோயில் விமானம் கல்லிலே கண்டதொரு எழிற்கோலமாகும். இது நான்கு அடுக்குகளைக் கொண்டது. உட்புறம் கூடாக உள்ளது. விமானத்தின் சிகரம் வட்டவடிவமானது. விமானத்தின் மாடங்களில் வீணாதார தட்சிணாமூர்த்தி, உமாமகேஸ்வரர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. கோயிலைச் சுற்றியுள்ள சிற்றாலயங்கள் தற்போது தொல்பொருள் துறையினரால் பழுதுபார்க்கப்பட்டு சீரமைக்கப் பட்டுள்ளன.

அர்த்தமண்டபத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றது. வடக்குச் சுவற்றின் பைரவர் ஓவியம் மிகவும் அழிந்துபட்டிருப்பினும் எஞ்சியுள்ளது கி.பி.16-17ம் நூற்றாண்டின் ஓவியக்கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

கோயிலின் துவாரபாலகர் சிற்பத்தின் பீடத்தில் ஒரு கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டு,

"ஸ்வஸ்தி ஸ்ரீ சாத்தம் பூதியான
இளங்கோவதி அரையன் எடுப்பித்த கற்றளி
மழை இடித்தழிய மல்லன் விதுமன்
ஆயின தென்னவன் தமிழதிரையன் புதுக்கு"

என உள்ளது. இக்கல்வெட்டைக் கொண்டு இக்கோயில் சாத்தம்பூதி என்ற இளங்கோவதி முத்தரையன் என்னும் சிற்றரசனால் எடுக்கப்பட்டது என்றும், பின்பு மழையினால் இக்கோயில் அழிந்துபோக மல்லன் **விதுமன் என்னும் தென்னவன் தமிழதிரையன் என்னும் முத்தரைய சிற்றரசன்** புதுப்பித்தான் என்பதும், புதுப்பிக்கப்பட்டபோதும் இது கற்றளி (கற்கோயில்) என்றே அழைக்கப்பட்டது என்றும் தெரிந்து கொள்கிறோம். கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முத்தரைய சிற்றிரசர்களின் பெயர்களைக் கொண்டு கல்வெட்டின் காலத்தை கணிக்க முடிகிறது. இளங்கோவதி அரையன், என்பான் விடேல் விடுகு முத்தரையன் எனக் கொள்ளலாம்! (கி.பி.820-850) கோயிலைப் புதுப்பித்த மல்லன் விதுமன், பழியிலி ஈச்சுரம் குகைக் கோயிலில் உள்ள கி.பி.886-ம் ஆண்டு கல்வெட்டில் குறிப்பிடப்படும் மல்லன் அனந்தன் என்னும் மீனவன் தமிழதிரையனும் உறவுமுறை உள்ளவர்களாக இருக்கலாம். ஆகவே இக்கோயில் கி.பி.850-க்கு முன்பே (விஜயலாலய சோழன் காலத்திற்கு முன்பே) கட்டப்பட்டதாகும்.

ஆனால் இக்கோயில் "விஜயாலய சோழீச்சுரம்" என்று தற்போது அழைக்கப்படுகிறது. இக்கோயிலுக்கு எதிரே, சமணர்குடகு என்னும் திருமால் கோயிலுக்கு வடகிழக்கில் உள்ள பாறையில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து (கி.பி.1228) கல்வெட்டு ஒன்று உள்ளது. (பு.க.282) இவ்வூர் நகரத்தார் (வணிகர் குழுவினர்) "உடையார் விஜயாலய சோழீச்சுரம் உடைய நாயனார்" கோயிலில் வைகாசித்திருவிழா கொண்டாடுவதற்குக் கொடையளித்த செய்தி இதில் கூறப்படுகிறது. நார்த்தாமலை மேலமலையில் உள்ள குகைக்கோயில் இரண்டினுள் ஒன்று வைணவக் கோயிலாகவும் மற்றது பழியிலிஈச்சுரம் என்றும் பெயருடனும் விளங்குகிறது. இவை தவிர அங்கு சிவபெருமானுக்கு கோயில்கள் ஏதும் இல்லையாதலால், விஜயாலய சோழீச்சுரம் என்னும் பெயர் இக்கோயிலையே சுட்டுவதாகவும் பாண்டியர் காலக் கல்வெட்டு 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனினும் வழிவழியாக, விஜயாலய சோழீச்சுரம் என்று அழைக்கப்பட்டு பின்பு அப்பெயரே நிலைத்துவிட்டதாகக் கருதலாம். (J. Raja Mohamad, The Hindu 8.11.70)

**பழியிலி ஈச்சுரம்**

விஜயாலய சோழீச்சுரம் கோயிலுக்கு முன்புள்ள பாறையில் குடையப்பட்டுள்ள சிறிய குகைக்கோயிலாகும் இது. இது சிவனுக்குரியது. ஒரே ஒரு சிறிய அறை மட்டும் உள்ளது. இந்த கோயிலுக்குரிய லிங்கமும், அழகிய தோற்றம் கொண்ட துவாரபாலகர் சிற்பங்களும், புதையுண்டு போக அவை கண்டுபிடிக்கப்பட்டு தற்போது குகையின் முன்புள்ள மேடையில் வைக்கப்பட்டுள்ளன. இம் மண்டப

மேடையிலுள்ள கல்வெட்டு புதுக்கோட்டைப் பகுதியின் வரலாற்றிற்கு முக்கியமான செய்தியை அளிக்கிறது. இம்மண்டபத்தின் விளிம்பில் காணப்படும் கல்வெட்டு (எண்.19) பல்லவ மன்னன் நிருபதுங்கவருமன் காலத்ததாகும். (கி.பி.855-896). இக்காலத்தில், நார்த்தாமலைப் பகுதியை ஆண்டுவந்த விடேல்விடுகு முத்தரையன் மகன் சாத்தம்பழியிலி இக்கோயிலை குடைவித்தான். அவனது பெயரால் இது பழியிலி ஈச்சுரம் எனப் பெயர் பெற்றது. சாத்தம்பழியிலியின் மகன் இக்குகைக்கு முன்பு முகமண்டபம், நந்திமண்படம், பலிபீடம் ஆகியவற்றைக் கட்டினான். அவனது மகளும், தமிழதிரையன் மல்லன் அனந்தனனின் மனைவியுமான பழியிலி சிறிய நங்கை இக்கோயிலின் பராமரிப்பிற்கு கொடையளித்தாள் எனவும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. (மேலமலைக்கு கீழ்ப்பகுதியிலுள்ள அருமைக் குளததை வெட்டியவனும், விஜயாலய சோழீச்சுரம் கோயிலைப் புதுப்பித்து கட்டியவனுமான மல்லன் விதுமன், இக்கல்வெட்டு குறிப்பிடும் மல்லன் அனந்தனின் சகோதரனாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது) இக்கல்வெட்டு, பல்லவர்களின் கீழ் சிற்றரசராக இருந்த முத்தரையரின் வரலாற்றைப் படிக்கப் பெரிதும் துணை செய்வதாக உள்ளது.

**சமணர் குடகு**

பழியிலி ஈச்சுரம் குகைக்கு சற்று வடக்குப் பக்கத்தில் அதே குன்றில் மற்றுமொரு குகைக்கோயில் உள்ளது. இது "சமணர் குடகு" என்று அழைக்கப்படுகிறது.

இது முற்காலத்தில் சமணக் குகைக்கோயிலாக இருந்திருக்கலாம். தற்போது இது ஒரு வைணவக் கோயில். குகையின் அர்த்தமண்டபத்தின் சுவற்றில் திருமாலின் உருவங்கள் பன்னிரண்டு வடிக்கப்பட்டுள்ளன. அனைத்தும் ஒரேமாதிரியாக காட்சியளிக்கின்றன. கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், திரிவிக்கிரமன், வாமணன், அச்சுதன், ஸ்ரீதரன், பத்மநாபன், வாசுதேவன், மதுசூதனன் என திருமாலின் பன்னிரண்டு பெயர்களைச் சிறப்பிக்க இச்சிலைகள் வடிக்கப்பட்டிருக்கலாம்.

குகையின் முன்பு, பிற்காலத்தில் கட்டப்பட்ட ஒரு மண்டபம் இருந்து அழிந்துபட்டிருக்க வேண்டும். தற்போது இந்த மண்டபத்தின் மேடை மட்டும் உள்ளது. இந்த மேடையில் மூன்று பக்கங்களிலும் யானைகள், பலவிதமான யாளிகள், காமதேனு போன்ற வியப்புமிகு சிற்பங்கள் எழில் தோற்றத்துடன் காட்சியளிக்கின்றன. இவற்றுள் "ஸ்பிங்கஸ்" எனப்படும் சிற்பம் குறிப்பிடத் தகுந்தது. மனித முகமும், சிங்கத்தின் உடலும்கொண்ட இவ்வுருவம் எகிப்து பாணி சிற்பமாகும். வணிக நிமித்தம் மேலைநாடுகளுக்குச் சென்றுவந்த நமது முன்னோர் அங்கிருந்த கலைப்பாணிகளையும் இங்கு கொண்டு வந்து சேர்த்தனர் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

ஆரம்ப காலத்தில் சமணக் குகையாக இருந்த இக்குகை, முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (1228) வைணவக் குகையாக மாற்றப்பட்டிருக்க வேண்டும் என இங்குள்ள கல்வெட்டின் மூலம்

தெரியவருகிறது. (பு.க.281) வைணவக் கோயிலாக மாற்றிய பின்பு மேற்சொன்ன விஷ்ணு சிற்பங்கள் பன்னிரண்டும் வடிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த குகை பதினென்பூமி வின்னகரம் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது.

**தர்கா**

மேல மலையிலுள்ள கோயில்களுக்குச் சற்று தெற்கே, மலையில் கீழ்நோக்கி குடைவிக்கப்பட்டுள்ள ஒரு குகையில், முகமது மஸ்தான் என்னும் ஒரு முஸ்லீம் பெரியவரின் அடக்கத்தலம் (தர்கா) உள்ளது. மலைக்குன்றில் கீழ்நோக்கி குடைந்து குகை எடுக்கப்பட்டிருப்பது தனிச் சிறப்பாகும். இவர் சித்த வைத்தியத்தில் சிறந்து விளங்கி இப்பகுதி மக்களிடம் புகழ்பெற்று விளங்கினார் என்று சொல்லபடுகிறது. மாரியம்மன் கோயில் திருவிழாவின் 10-ம் நாள் இரவு இந்த தர்காவின் சந்தனக்கூடு விழா நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான முஸ்லீம்-இந்து மக்கள் மதபேதமின்றி அன்று தர்காவில் கூடி வழிபடுகின்றனர்.

நார்த்தாமலையிலுள்ள மாரியம்மன் கோயில் மாவட்டத்திலுள்ள முக்கியமான வழிபாட்டுத் தலமாகும். மார்ச்-ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் திருவிழாவிற்கு ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

மேலமலைக்கு செல்லும் வழியிலுள்ள தலையருவி சிங்கம் சுனையின் கீழே ஜுரஹரேஸ்வரர் என்னும் லிங்கம் ஒன்று உள்ளது. 1857-ல் ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் சுனையின் நீரை இறைக்கச்செய்து இந்த லிங்கத்திற்கு வழிபாடு நடத்தியதாக சுனைக்கு அருகிலுள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கோட்டை மலையில், கோட்டை இருந்து அழிந்துபட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன.

**கடம்பர் கோயில்**

கடம்பர் மலை அடிவாரத்தில் திருக்கடம்பர் உடைய நாயனார் கோயில் உள்ளது. கருவறையையும், அர்த்தமண்டபத்தையும் கொண்ட இக்கோயில், அமைப்பில் கண்ணனூர் பாலசுப்ரமணியர் கோயிலை ஒத்திருக்கிறது. இக்கோயிலில் நிறைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது ராஜராஜன் காலத்தைச் சேர்ந்ததாகும். மூன்றாம் குலோத்துங்கச்சோழன், மாறவர்மன் சுந்தரபாண்டியன், இரண்டாம் ராஜேந்திர சோழன், மூன்றாம் ராஜேந்திர சோழன் ஆகியோரது காலத்தில் இக்கோயிலுக்கு புதிய கட்டுமானங்கள் சேர்க்கப்பட்டதையும், புதுப்பிக்கப்பட்டதையும் குறித்த செய்திகள் தெரியவருகின்றன. நார்த்தாமலையின் வரலாறு குறித்து தெரிந்துகொள்ள இங்குள்ள கல்வெட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன. ராஜராஜசோழன் காலத்து கல்வெட்டு மற்றும், மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து கல்வெட்டுகள் பத்தும் காணப்படுகின்றன. நகரத்தார் எனப்படும் வணிகப்பெருமக்கள் இக்கோயிலுக்கு அளித்த கொடைகள், பற்றிய செய்திகள் நிறைய தெரியவருகின்றன.

திருக்கடம்பர் கோயிலுக்கு அருகில் நகரீச்சுரம் எனப்படும் மற்றொரு சிவன்கோயில் உள்ளது. இது மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (கி.பி.1228-ல்) கட்டப்பட்டதாகும்.

கடம்பர் மலையிலும் கோட்டை இருந்து அழிந்துபட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. கன்னிமுரா சுனை, பொழுதுபடா சுனை என இரண்டு சுனைகளும் இங்கு உள்ளன.

பறையரைய பயன்பட்ட மலை பறையர் மலையாகும். கோயில் வாத்தியங்கள் வாசிப்போர் (உவக்கர்) தங்கியிருந்த இடம் உவக்கன் மலையாகும்.

அக்காலத்தில் கொடுங்குற்றம் செய்தோர், இங்குள்ள உயரமான ஒரு மலையிலிருந்து (ஆளுருட்டி மலை) கீழே உருட்டிவிடப்பட்டு கொல்லப்பட்டதன் காரணமாக ஆளுருட்டி மலை என்று பெயர் பெற்றதாக தெரியவருகிறது.

## 21. பனங்குடி

புதுக்கோட்டை - அன்னவாசல் சாலையில் சித்தன்னவாசலுக்கு எதிர்புறத்தில் பனங்குடி உள்ளது. இங்குள்ள மலையடிப்பாறைகளுக்கு அருகில் அகஸ்தீஸ்வரம் என்னும் சிவன் கோயில் உள்ளது. காளியாப்பட்டி, திருப்பூர், ஏனாதி ஆகிய இடங்களில் உள்ள கோயிலைப் போன்று இக்கோயிலும் ஒரடுக்கு விமானம் கொண்டதாகும். மேற்சொன்ன மூன்று கோயில்களிலும் முன்மண்டபம் இல்லை. ஆனால் இக்கோயிலில் உள்ளது. இக்கோயில் மற்ற மூன்று கோயில்களைவிட சற்று காலத்தால் பிந்தியதாக இருக்கலாம். கோயில் விமானம் நேர்த்தியாகவும், கலையழகுடனும் தோற்றமளிக்கிறது. விமானத்தின் மாடங்களில் இந்திரன், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

கோயிலுக்கு வெளியே ஜேஷ்டாதேவி, கணபதி, நந்தி ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. ஜேஷ்டாதேவி சோழர்காலக் கோயில்களில் பரிவார தேவதையாக வழிபடப்பட்டு வந்ததால் இதற்கும் இங்கு ஒரு சிறிய கோயில் இருந்திருக்கலாம்.

மூன்றாவது குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் (கி.பி.1178) மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றன. மற்றொரு கல்வெட்டு கோப்பரகேசரி வர்மனின் 14-ம் ஆண்டைக் குறிக்கிறது. இதுவே இக்கோயிலில் உள்ள காலத்தால் முற்பட்ட கல்வெட்டு ஆகும். ஆனால் மன்னன் இன்னாரென அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை. இப்பெயரைக் கொண்டு இக்கோயிலின் காலம் 9-ம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. இக்கோயிலின் காலம் குறித்து அறிஞர்களிடையே பல கருத்து வேறுபாடுகளும் உள்ளன.

# 22. திருவேங்கைவாசல்

திருவேங்கைவாசல் புதுக்கோட்டை - திருச்சி சாலையில், புதுக்கோட்டையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

திருவேங்கைவாசல் சோழர்களின் வரலாற்றில் மிகவும் சிறப்புப் பெற்ற ஊராகும். புதுக்கோட்டையிலுள்ள பழங்கால புண்ணியத் தலங்களில் இதுவும் ஒன்று. ஊர்ப்பெயர், வேங்கையின் வாயில் என்று அழைக்கப்படுவது புராணத்துடன் தொடர்பு கொண்டதாகும். திருக்கோகர்ணத்தில் வழிபட்டு வந்த காமதேனு பசுவிற்கு காட்சி கொடுத்து முக்தியளித்த இடம் (பார்க்க- திருக்கோகர்ணம்)

இங்குள்ள வியாகபுரீஸ்வரர் கோயில் சோழர் காலத்தில் கட்டப்பட்டு பின்பு பாண்டியர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கோயில் கி.பி.13-14ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். மூலக்கோயிலின் கருவறைச் சுவற்றின் மாடங்களில், வடக்குப் பக்கத்தில் சிற்பம் ஏதும் இல்லை. மேற்கே விஷ்ணுவும், தெற்கே ஞான தட்சிணாமூர்த்தியும் காணப்படுகின்றன. தட்சிணாமூர்த்தியின் சிற்பம் சிற்பவியலில் தனித்தன்மையுடன் விளங்குகிறது. கருவறைக்கு முன்பு அர்த்த மண்டபமும், மகாமண்டபமும் உள்ளன. அம்மனுக்கு தனிக் கோயில் உள்ளது. அம்மனின் பெயர் அருள்மிகு பிரகதாம்பாள். இதில் பிற்கால சோழர் கால் கட்டிடக்கலை கலைப்பாணியினைக் காணமுடிகிறது. மண்டபங்களின் பிரகாரங்களில் சுப்பிரமணியர், யோக தட்சிணாமூர்த்தி, வினாயகர், பைரவர், சூரியன் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

கோயிலின் தெற்கு வாயிலுக்கு அருகில் தொண்டைமான் மன்னர் ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் காலத்தில் கட்டப்பட்ட ஒரு அம்மன் சன்னதியும் உள்ளது.

இக்கோயிலில், பதினைந்து கல்வெட்டுகள் உள்ளன. (ஆறு சோழர் காலம், ஏழு பாண்டியர் காலம், விஜயநகர காலத்தது ஒன்றும், பல்லவராயர் காலத்தது ஒன்றும்) காலத்தால் முந்திய கல்வெட்டு ராஜராஜசோழன் காலத்தைச் சேர்ந்தது (கி.பி.1011) இக்கல்வெட்டு இங்குள்ள இறைவனை திருமேற்றளி பெருமான் எனக் குறிப்பிடுகிறது. ராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு (கி.பி.1039) இறைவனை சூடாமணி விடங்கன் எனக் குறிப்பிடுகிறது. அம்மன் சன்னதியையும் இக்கல்வெட்டு குறிப்பதால், அம்மன் சன்னதி இக் காலத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாம் ராஜாதி ராஜன் காலத்துக்கு கல்வெட்டொன்று (கி.பி.1175) குலோத்துங்க சோழ கிடாரத்தரையன் என்பவனால் வைக்கப்பட்ட லிங்கம் சதிரவிடங்கன் எனக் குறிப்பிடப்படுகிறது. இவன் இக்காலத்தில் இப்பகுதியை ஆண்ட முத்தரைய மன்னனாக இருக்கலாம். மூன்றாவது ராஜராஜ சோழனின் காலத்து கல்வெட்டொன்று கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவனுக்கும், அம்மனுக்கும் திருவிழாக்கள் நடத்த கொடையளிக்கப்

பட்ட செய்தியை தெரிவிக்கிறது. 'சாந்திக் கூத்து' என்னும் கூத்து இக்கோயில் விழாக்களில் நடைபெற்றது குறித்து இக்கோயிலிலுள்ள நான்கு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இந்த கூத்தில் நடித்தவர்கள் சாந்திக்கூத்தியர் என அழைக்கப்பட்டனர். இவ்வூரின் ஊராட்சி அமைப்பு முறை குறித்தும ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. புதுக்கோட்டை பகுதியின் வரலாறு, கலை, கலாச்சாரம் குறித்த பல செய்திகளை இங்குள்ள கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

சோழர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் இப்பகுதியில் அதிக வருமானத்துடன் விளங்கிய கோயில் மற்றும் ஊர்ச்சபைக் கொண்டதாக இவ்வூர் விளங்கியது. இன்று ஒரு சிற்றூர்!

## 23. விராலிமலை

**வேலா! விராலி வாழ்வே! சமூக**
**வேதாள பூத பதிசேயே!**
**வீரா! கடோர சூராரியே! செ**
**வேளே! சுரேசர் பெருமானே!**

***-அருணகிரியார்***

விராலிமலை புதுக்கோட்டையிலிருந்து 40 கி.மீ. தூரத்திலும் திருச்சியிலிருந்து 30 கி.மீ தூரத்திலும், திருச்சி-மதுரை சாலையில் உள்ளது. இங்குள்ள சுப்ரமணியர் கோயில் தென்னிந்திய பக்தர்களின் கவனத்தைக் கவர்ந்ததாகும். அருணகிரிநாதர் அஷ்டமாசித்தி பெற்ற இடம். சதாசிவ பிரமேந்திரர் வழிபட்ட தலம். ''விரலியர் மலை' (விரலி-நடனக்கலைஞர்) என்பதே விராலிமலை என மருவியதாகச் சொல்லப்படுகிறது. விரலூர்-மலை என்பதே விராலிமலை என மருவி வழங்குவதாக சிலர் கூறுகின்றனர். விராலூர், விராலிமலைக்கு அருகிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர், ஆகவே இவ்வூருக்கு அருகிலிருந்த மலை, விராலூர்மலை என அழைக்கப்பட்டு பின்பு விராலிமலை என மருவியதாகவும், (தேனூர் மலை என்பது தேனி மலை என வழங்குவது போல) சொல்லப்படுகிறது. முனிவர்கள் இம்மலையில், குராமரங்கள் (விராலி) உருவில், மரங்களோடு விராவியிருந்து முருகப்பெருமானை வழிபட்டதால் இம்மலைக்கு விரலிமலை என்ற பெயர் உண்டாகி, விராவிமலை என மருவி, பின் விராலிமலை ஆயிற்று என ஒரு புராணக் கதைத் தெரிவிக்கிறது. ஆனால் இப்பகுதியில் 'விராலிச்செடி' என்னும் செடிவகை அதிகமாக இருந்ததாலும் பின்பு இந்த 'விராலியே' இத்தல விருட்சமாக கொள்ளப்பட்டதாலும் இதிலிருந்தே 'விராலிமலை' என்ற பெயர் வந்தது எனக் கொள்வது பொருத்தம். (விராலி என்பது ஒருவகை மூலிகைச் செடியாகும்.)

வயலூரைச் சேர்ந்த ஞான வரோதயர் என்பவர் முருகப் பெருமானின் ஆணையின்படி, விராலிமலைக்கருகிலுள்ள பேராம்பூரை ஆண்ட அழகிய மணவாளரின் உதவியுடன் இங்குள்ள கோயிலைக் கட்டியதாக கர்ணபரம்பரைக் கதை ஒன்று கூறுகிறது. பின்பு மருங்காபுரி,

குமாரவாடி ஜமீன்தார்கள் இக்கோயிலுக்கு பல மண்டபங்களைக் கட்டியுள்ளனர். இந்த ஜமீன்தார்களின் சிற்பங்கள், கோயில் மண்டபத் தூண்களில் காட்சியளிக்கின்றன.

திருமறைக்காட்டில் தங்கியிருந்த திருநாவுக்கரசரை, சிவபிரான், திருவாய்மூருக்கு வருக என அழைத்ததுபோல, வயலூரில் தங்கியிருந்த அருணகிரிநாதரின் கனவில் தோன்றிய முருகப்பெருமான் ''எம்மைப் புகழ்ந்துபாட யாமுரையும் விராலிமலைக்கு வருக' எனக்கூற அருணகிரிநாதரும் விராலிமலைக்குச் சென்று பெருமானை வழிபட்டு அற்புதமான 16 திருப்புகழ் பாடல்களை விராலிமலை முருகன் மீது பாடியுள்ளார்.

விராலிமலை மான்மியம், பல சுவையான செய்திகளைத் தெரிவிக்கிறது. சரவணப் பொய்கையில் (மலையடிவாரத்தில் தெற்குப் பகுதியில் உள்ளது) குழந்தையாக வந்த முருகனுக்கு, முனிவர்களின் மனைவியரில், வசிட்டரின் மனைவி, அருந்ததி, பாலூட்ட மறுத்துவிட்டாள். வசிட்டர் அவளை சபித்தார். இதைக்கண்டு வருந்திய முருகப்பெருமான் வசிட்டரை சபித்தார். பின்பு வசிட்டரும், அருந்ததியும் விராலிமலை முருகனை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றனர். சூரபன்மாதிரை பெற்றெடுத்த பாவம் நீங்கும் பொருட்டு காசியப முனிவரும், தன் தந்தையாகிய நான்முகனைத் தண்டித்ததற்காக சிவநிந்தனை செய்த பாவம் போக்க, நாரத முனிவரும் இத்தலத்தில் முருகனை வழிபட்டு உய்வடைந்தனர். இச்செய்திகளை உறுதிப்படுத்தும் வண்ணம் இக்கோயிலில் காசியபர், நாரதர், வசிட்டர், அருந்ததி ஆகிய சிற்பங்கள் உள்ளன. மலைக்குச் செல்லும் வழியில் சந்தனக் கோட்டம் என்னும் மண்டபத்தில் காட்சியளிக்கும் ஆறுமுகப் பெருமான் அன்பர்களுக்கு நினைத்ததை அளிப்பவன். மேலும் இடும்பன் சன்னதியும், பாறையில் குடைந்தமைக்கப்பட்ட மீனாட்சி சுந்தரேசர் சன்னதியும் உள்ளன. ஒரே பிரகாரத்துடன் அமைந்த மலைமேல் உள்ள கோயிலுக்கு கிழக்குச் சரிவிலிருந்து ஏறிச் செல்வதற்கு 207 படிகள் உள்ளன. கோயிலின் பிரகாரத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர், அருணகிரிநாதர், சண்டிகேஸ்வரர், பைரவர் சன்னதிகள் அமைந்துள்ளன.

கருவறையினுள்ளே விராலிமலை வள்ளலாக ஆறுமுகப் பெருமான் பன்னிரு கரங்களுடன் மயில்மீது அமர்ந்து காட்சியருளுகிறார். இருமருங்கிலும் வள்ளியும், தேவானையும் உள்ளனர்.

சித்ரா பௌர்ணமி, சங்காபிஷேகம், வைகாசி விசாக விழா, ஆடிக்கார்த்திகை, கந்தசஷ்டி, தைப்பூசம், மாசிக் கார்த்திகை மகாபிஷேகம், பங்குனி உத்திரம் ஆகிய விழாக்கள் நிகழ்கின்றன.

இங்குள்ள முருகப் பெருமானுக்கு உச்சிகால வழிபாட்டின்போது, 'சுருட்டு' வைத்து நைவேத்தியம் செய்வது சிறப்புடைய செய்தியாகும். இது குறித்து கர்ணபரம்பரைக் கதை ஒன்று சுவையானதொரு செய்தியைத் தெரிவிக்கிறது. குமாரவாடி ஜமீன்தாரின் அமைச்சராக இருந்த

கருப்பமுத்துப் பிள்ளை என்பவர் விராலிமலை முருகனை வழிபட வரும்போது, நள்ளிரவில் திடீரென்று பெய்த மழை வெள்ளத்தில் சிக்கிக் கொண்டு, எங்கும் செல்ல முடியாமல், காட்டுப் பகுதியில் தவித்துக் கொண்டிருந்தபோது, அவர் முன் தோன்றிய முருகப்பெருமான், அவருக்கு என்ன வேண்டுமென வினவ, ''உணவில்லாவிட்டாலும் எனக்கு சுருட்டு வேண்டுமென'' அந்த பக்தர் வேண்டியதற்கிணங்க அவருக்கு முருகனின் அருளால் சுருட்டு கிடைத்தது. இதைக் கண்டு நெகிழ்ந்துபோன அந்த அமைச்சர், தினமும் முருகப்பெருமானுக்கு சுருட்டு வைத்து நைவேத்தியம் செய்ய ஏற்பாடு செய்தார். பலகாலமாக இது வழக்கத்திலிருந்தது. விராலிமலை புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் ஆளுகையின் கீழ் வந்தபோது, இது முருகப்பெருமானை இழிவுபடுத்துவதாக உள்ளதாகக் கருதிய தொண்டைமான் மன்னர் (இன்னாரெனத் தெரியவில்லை) சுருட்டு படைப்பதை நிறுத்த உத்தரவிட்டார். முருகப் பெருமான் தொண்டைமானின் கனவில் தோன்றி தன்னால் சுருட்டு புகைக்காமல் இருக்க முடியாது என வேண்டிக் கொண்டதற்கிணங்க மீண்டும் சுருட்டு படைப்பது தொடர்ந்து நடைபெற்று வருவதாக அக்கதைத் தெரிவிக்கிறது.

விஜயரகுநாதராயத் தொண்டைமானின் அமைச்சராக இருந்த சுப்ரமணிய முதலியார் என்பவர் விராலிமலைக் குறவஞ்சி என்னும் நாடகத்தை, இங்கு நடைபெறும் திருவிழாக்களில் நடத்த ஏற்பாடு செய்திருந்தார். சமீபகாலம் வரை விராலிமலைக் குறவஞ்சி நாடகம் இங்கு நடைபெற்றிருக்கிறது. கொடும்பாளூரில் உள்ள கோயில்களின் இடிபாடுகளிலிருந்து எடுக்கப்பட்ட தூண்கள் பல இக்கோயிலின் மண்டபங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

## 24. ஆவூர்

ஆவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார் போன்ற சங்க காலப் புலவர்கள் வாழ்ந்த இடம் ஆவூர். குளத்தூர் வட்டத்திலுள்ள ஆவூர் புதுக்கோட்டையிலிருந்து 42 கி.மீ. தூரத்திலும், திருச்சியிலிருந்து 15 கி.மீ. தூரத்திலும் உள்ளது. ஐரோப்பிய கிருத்துவ சமய இயக்கங்கள் தொடக்க காலத்தில் (கி.பி.17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) தமிழ்நாட்டில் செயல்பட்ட இடங்களுள் ஆவூரும் ஒன்று.

15-17-ம் நூற்றாண்டுகளில் ஆவூர் பகுதி பேராம்பூர்-கத்தலூர் பாளையக்காரர்கள் ஆளுகையில் இருந்தது. மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வந்த மதுரை மிஷன் எனப்படும், கிருத்துவ பாதிரியார்களின் அமைப்பு இக்காலத்தில் தனது செயல் திட்டங்களை திருச்சிக்கும் விஸ்தரித்தது. அப்போது திருச்சி, மதுரை, நாயக்கராட்சிக்குட்பட்டிருந்தது. ஆனால் முஸ்லீம்களின் படையெடுப்புகளினால் திருச்சியில் அரசியல் குழப்பங்கள் நிறைந்திருந்தன. ஆகவே திருச்சி நகரம் கிருததுவ சமய நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இல்லாததால், அருகிலிருந்த ஆவூர்,

மதுரை மிஷனரி நடவடிக்கைகளின் மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அப்போது இந்த மைய பொறுப்பாளராக இருந்த பாதிரியார் இமானுவேல் மார்ட்டினுக்கு, பேராம்பூர்-கத்தலூர் பாளையக்காரர்கள் ஆதரவு அளித்து 1686-ல் தேவையான இடங்களையும் அளித்தனர். பின்பு ஆவூர், குளத்தூர் தொண்டைமான்களின் ஆளுகையிலிருந்தது. குளத்தூர் தொண்டைமான்களின் பாளையம் புதுக்கோட்டையுடன் சேர்ந்தபோது புதுக்கோட்டைத் தொண்டைமான்களின் ஆளுகையின்கீழ் வந்தது.

1688-ல் ஆவூர் மிஷனரி மையத் தலைவராக இருந்த வெனான்சியஸ் புச்சட் பாதிரியார் இதை ஒரு சிறந்த செயல்பாட்டு மையமாக்கும் பொருட்டு புதிய தேவாலயம் ஒன்றையும் குடியிருப்பு கட்டிடங்கள் பலவற்றையும் கட்டினார். இதற்குத் தொண்டைமான் மன்னர்களின் ஆதரவும் கிட்டியது. 1711-ல் ரகுநாதராயத் தொண்டைமான் ஆவூருக்குச் சென்று அங்கு வருகை தந்திருந்த சந்தோம் பேராயரைச் சந்தித்து, மிஷனரிக்குத் தேவையான உதவிகள் செய்வதாக உறுதியளித்தார். 1716-ம் ஆண்டுவாக்கில், இப்பகுதியில் நடைபெற்ற சில அரசியல் போராட்டங்களின் விளைவால் இங்கிருந்த தேவாலயம் மராத்தியர்களால் சேதப்படுத்தப்பட்டது. பின்னர் இங்கு புதியதொரு தேவாலயம் கட்டப்பட்டது. இது சிலுவை வடிவத்தில் 240' நீளம் 38' அகலமும், 28 அடி உயரமும் கொண்ட அக்கால நாயக்கர் கட்டிடக்கலைப் பாணியில் 1747-ல் கட்டி முடிக்கப்பட்டது. இதுவே இன்று நாம் ஆவூரில் காணும் தேவாலயமாகும்.

1732-ம் ஆண்டில் வீரமாமுனிவர் என்னும் பெஸ்கி பாதிரியார் ஆவூர் தேவாலயத்தின் பங்கு தந்தையாக பணியாற்றி இருக்கிறார். அப்போது இப்பகுதியின் மீது படையெடுத்திருந்த சந்தாசாகிப் இவருக்கு தகுந்த மரியாதைகள் செலுத்தியதாக மிஷன் பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

ஆவூரில் தங்கியிருந்த கிருத்துவ பாதிரியார்கள், இப்பகுதியில் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தொகுத்து எழுதி வைத்துள்ளனர். அந்த குறிப்புகள் மதுரை மிஷனரி பதிவுகளின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றன. இப்பதிவுகள் தற்போது கொடைக்கானலில் உள்ள (செண்பகனூர்) கல்லூரி ஆவணக்காப்பகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர்களின் வரலாறு மற்றும் அக்கால தமிழகத்தின் அரசியல் நிலை குறித்த பல செய்திகளை இப்பதிவுகள் தெரிவிக்கின்றன.

தற்போது இங்குள்ள தேவாலயம் இப்பகுதியில் வாழும் கிருத்துவ மக்களின் முக்கிய வழிபாட்டுத் தலமாகத் திகழ்கிறது. இங்கு நடைபெறும் ஈஸ்டர் திருவிழாவிற்கு நிறைய பக்தர்கள் வருகின்றனர். தேவாலயத்திலுள்ள கன்னிமேரியை இப்பகுதி மக்கள் 'பெரிய நாயகி' என அன்புடன் அழைக்கின்றனர். மதப் பாகுபாடின்றி பிற மதத்தினரும் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர்.

## 25. சித்தன்னவாசல்

புதுக்கோட்டையிலிருந்து விராலிமலை செல்லும் வழித் தடத்தில் 15 கிலோ மீட்டர் தூரம் சென்றதும் உயரமான ஒரு குன்று நம் கவனத்தை கவருகிறது. இதுதான் சித்தன்னவாசல். இங்கு காணப்படும் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்லறைகள், முதுமக்கள் தாழிகள், கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் பிராமிக் கல்வெட்டு, உலகப் புகழ்வாய்ந்த ஓவியங்களுடன் விளங்கும் குகைக்கோயில் ஆகியன இந்த சிறிய கிராமத்தின் தொன்மைச் சிறப்பை நமக்கு விளக்குகின்றன. இவ்வூர் அண்ணல் வாயிலுக்கு (அன்னவாசல்) அடுத்த சிற்றூராக இருப்பதாலும், இங்கு, சித்தர்கள் வாழ்ந்து வந்ததாலும் சித்தர் அன்னல்வாயில் என்று வழங்கப்பட்டு பின்னர் சித்தன்னவாயில், சித்தன்னவாசல் என மருவி வழங்குவதாகக் கொள்ளலாம். இங்குள்ள பிராமிக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் சிறுபாவில் என்பது சித்துப்போசில் என்பதன் திரிபு என்றும் இது சித்தன்னவாசலின் அக்காலப் பெயர் எனவும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். 2000 ஆண்டுகளுக்கு முன்பே சித்தன்னவாசல் சமண மத மையமாகத் திழ்ந்ததை இங்குள்ள கல்வெட்டுகளும், இவ்வூரைச் சுற்றியுள்ள பழமையான சமணச் சின்னங்களும் புலப்படுத்துகின்றன. அக்காலத்தில் காஞ்சி மாநகர் புத்தமத மையமாக விளங்கியதுபோல் சித்தன்னவாசல் சமண மத மையமாகத் திகழ்ந்ததாக அறிகிறோம்.

பேருந்துத் தடத்திலிருந்து குகைக்கோயிலுக்குச் செல்லும் பிரிவுச் சாலையின் கிழக்குப் பகுதியில், அக்காலத்தில், இறந்தவர்களைப் புதைப்பதற்குப் பயன்படுத்திய கல்லறைகளும், முதுமக்கள் தாழிகளும் காணப்படுகின்றன. இவைகள் பெருங்கற்காலத்தைச் சேர்ந்தவை. கருங்கல் பலகையினால் ஆன நீள் சதுரக் கல்லறைகள், பல, தரையில் புதைந்திருப்பதையும், அவற்றைச் சுற்றி செம்புறைக் கற்கள் வட்டமாக அமைந்திருப்பதையும் காண்கிறோம். இன்னும் சில கல்வட்டங்களுள் முதுமக்கள் தாழிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவை இவ்விடத்தின் காலத்தால் முற்பட்ட வரலாற்றை நமக்குத் தெரிவிக்கின்றன.

குன்றின் நடுவில் கிழக்கு முகத்தில் அமைந்திருக்கும் இயற்கையான குகையின் பெயர்தான் ஏழடிப்பட்டம். ஆரவார உலகை வெறுத்து அமைதியை நாடிய சமண முனிவர்கள் தங்கியிருந்த இடம். இந்த குகைக்குச் செல்ல மேற்குப் பகுதியிலிருந்து குன்றின்மீது ஏறி குகையின் வாயிலில் உள்ள ஏழு படிக்கட்டுகளைக் கடந்து குகையினுள் நுழைகிறோம். எனவே தான் இவ்விடம் ஏழடிப்பட்டம் எனப் பலராலும் அழைக்கப்படுகிறது. ஆனால் உலக வாழ்வை விடுத்து ஏழுவிதமான ஆன்மீக உறுதிகளை மேற்கொண்டு, உண்ணாநோன்பு இருந்து, உயிர்நீக்க விழைந்த சமண முனிவர்கள் தங்கியிருந்ததால் ஏழடிப்பட்டம் எனப் பெயர் பெற்றது எனக் கொள்ளுதல் பொருந்தும். எனினும் இப்பெயர் மிகவும் பிற்காலத்திலேயே வழக்கிற்கு வந்ததாகத் தெரிகிறது.

குகையில் நுழைந்ததும் ஒரு ஏர்கண்டிஷண்ட் தியேட்டருக்குள் நுழைந்ததுபோன்ற உணர்வு!, அவ்வளவு குளிர்ச்சி! குகையின் தரையில் 17 படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை வழவழப்பாகவும் ஆக்கப்பட்டுள்ளன. படுக்கையின் ஒரு பகுதி தலையணையாக பயன்படுத்தும் வண்ணம் உயர்ந்துள்ளது. இந்த படுக்கை ஒன்றின் விளிம்பில்தான் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த, தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு சமண முனிவரைப் பற்றிய செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. இது இந்தக் குகையின் தொன்மையைக் காட்டுகிறது. கி.பி.10-ம் நூற்றாண்டுவரை சமண முனிவர்கள் இந்த குகையில் தங்கியிருந்திருக்க வேண்டுமென்பதற்கு இங்குள்ள இன்னும் சில கல்வெட்டுகள் சான்றளிக்கின்றன.

குன்றின் மேற்கு முகப்பில் எளிதாகச் சென்றடையக்கூடிய பகுதியில் அறிவர் கோயில் என்னும் சமண குகைக்கோயில் அமைந்துள்ளது. கருங்கல் மலையைக் குடைந்து, இந்த குகைக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த குகைக்கோயிலில்தான் நமது சிந்தையைக் கவரும் ஓவியங்கள் உள்ளன. மரம் போன்ற அழியும் பொருட்களில் கோயில் கட்டுவதை விடுத்து இதுபோன்ற குகைக்கோயில் எடுக்கும் பழக்கத்தை கி.பி.ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் தமிழகத்தில் அறிமுகம் செய்தான். அந்த குகைகளில் ஓவியம் தீட்டி வைக்கும் பழக்கமும் ஏற்பட்டது. கி.பி.7-ம் நூற்றாண்டில் காவிரிக்கு வடக்கே பல்லவர்கள் ஆட்சியும், தெற்கே பாண்டிய மன்னர்களின் ஆட்சியும் நிலவியது. பல்லவர் கலைப் பாணி பாண்டிய நாட்டிலும் பரவத் தொடங்கியது. இக்காலத்தில் சித்தன்னவாசல் பாண்டியராட்சிக்கு உட்பட்டிருந்தப் பகுதியாகும். மகேந்திரவர்ம பல்லவன், மண்டகப்பட்டு, வல்லம், திருச்சி ஆகிய இடங்களில் குகைக்கோயில்கள் எடுப்பித்தப் பாணியைப் பின்பற்றி சித்தன்னவாசலிலும் பாண்டிய மன்னர்களால் குகைக்கோயில் குடைவிக்கப்பட்டிருக்க வேண்டும். சித்தன்னவாசல் குகைக்கோயிலும், ஓவியங்களும் மகேந்திரவர்ம பல்லவனின் கலைப்பாணியை ஒத்திருப்பதால் இது பல்லவர் கலைப் படைப்பு எனவும், மகேந்திரவர்மன், அப்பரின் முயற்சியால் சைவனாக மாறுவதற்கு முன்பு, சமண மதத்தைப் பின்பற்றியிருந்தபோது இந்த (சமண) குகையை எடுப்பித்திருக்கலாம் என்றும் கருதப்பட்டு வந்தது. ஆனால் குகைக்கோயிலின் வெளிப்பக்கம் தென்புறச் சுவற்றில் உள்ள கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே இது பாண்டிய மன்னர்களது கலைப்படைப்பு என்பது தெரியவந்தது. கி.பி.9-ம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட, ஸ்ரீமார ஸ்ரீ வல்லப பாண்டியன் காலத்தில் (815-62) மதுரை ஆசிரியன் இளங்கௌதமன் என்னும் சமண முனிவர் குகைக்கோயில் முன் மண்டபத்தைப் புதுப்பித்து தற்போது நாம் காணும் ஓவியங்களையும் வரைந்து வைத்ததாக இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**"திருத்திய பெரும்புகழ் தேவதரிசனத்து**
**அருந்தவ முனிவனைப் பொருட்செல்வன்**

**அறன்கிளர் நிலைமை இளம்கௌதமன் எனும்**
**வளங்கெழு திருநகர் மதிரை ஆசிரியன்**
**அவனிபசேகர *சீர்கெழு* செங்கோல் *சீரீவல்லபன்*''**

இந்தக் கல்வெட்டுச் செய்தியைக் கொண்டும், காவிரிக்குத் தெற்கே மகேந்திர வர்ம பல்லவனின் ஆட்சி ஏற்பட்டிருக்கவில்லை என்பதைக் கொண்டும் சித்தன்னவாசல் ஓவியம் பல்லவ மகேந்திரவர்மன் காலத்தது அல்ல என்பது தெரியவருகிறது.

குகைக்கோயில், 160 சதுர அடி, அளவுள்ள ஒரு முக மண்டபத்தையும் அதையடுத்த 100 சதுர அடி அளவுள்ள சிறிய ஒரு கருவறையும் கொண்டது. முன் மண்டபத்தின் முகப்பில் இரண்டு தூண்கள் உள்ளன. மண்டபத்தின் வடக்குச் சுவர் மாடத்தில் ஒரு சமண ஆசிரியரின் (திருவாசிரியன்) சிற்பமும், தெற்கு மாடத்தில் ஐந்து தலை பாம்பு குடைவிரித்திருக்க வீற்றிருக்கும் 23-வது சமண தீர்த்தங்கரர் பார்சுவநாதர் சிற்பமும் உள்ளன. கருவறையின் பின் சுவற்றிலும் மூன்று சிற்பங்கள் உள்ளன. இடது பக்கமும் நடுவிலும் உள்ள சிற்பங்கள் முக்குடையின் கீழ் உள்ளதால் தீர்த்தங்கரர்கள் என்றும், வலது பக்கம் உள்ளது ஒரு குடையின் கீழ் உள்ளதால் இது ஒரு சக்கரவர்த்தியின் சிற்பம் என்றும் சொல்லலாம். குகையின் முகப்பிலுள்ள சிறிய மண்டபம், அலக்சாண்டர் டாட்டன்ஹாம் சமஸ்தான ஆட்சியாளராக இருந்தபோது, குடுமியான்மலை, பனங்குடி ஆகிய இடங்களிலிருந்துக் கொண்டு வரப்பட்ட கற்களைக் கொண்டு, கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது.

சிற்பங்களைவிட இங்குள்ள ஓவியங்களே நம் மனதைக் கவர்ந்திழுக்கின்றன. குகைக்கோயிலின் தரை நீங்கலாக மற்ற பகுதிகள் அனைத்திலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. அழிந்தவை போக எஞ்சியுள்ள ஓவியங்களை, தூண்களிலும் முன் மண்டபத்தின் விதானத்திலும், கருவறையின் விதானத்திலும் காணலாம். இந்த ஓவியங்கள் Fresco-Secco என்னும் முறையில் தீட்டப்பட்டுள்ளன. கருங்கல் பரப்பை பொளிந்து, சமப்படுத்தி, சுண்ணாம்பு சாந்து பூசி, அதன்மீது வெண்சுண்ணாம்பு பூச்சிட்டு வழுவழுப்பாகத் தேய்த்து அப்பரப்பில் ரேகைகளும், வண்ணங்களும் தீட்டப்பட்டுள்ளன. மேற்கத்திய நாடுகளிலெல்லாம் சமீப காலத்தில் தோன்றிய இவ்வகைப் பாணி ஓவியக்கலை வெகுகாலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் வழக்கத்திலிருந்தது. இதற்கு சங்க இலக்கியங்கள் பல சான்று பகர்கின்றன. மனித உணர்வுகளையும், அங்க அசைவுகளையும் ஓவியங்களில் வெளிக்கொணரும் பாங்கு, ஓவியர்கள் கையாண்ட உத்திகள், சங்ககால அரண்மனை சித்திரக் கூடங்களின் சிறப்பு ஆகியன பற்றியெல்லாம் பரிபாடல், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆகிய சங்க நூல்கள் நிறைய செய்திகளைத் தெரிவிக்கின்றன. ஓவியச் செந்நூல் என்றொரு நூல் இருந்ததை மணிமேகலைக் குறிப்பிடுகிறது. சங்ககால ஓவியங்களை காணும் வாய்ப்பினை நாம் பெறவில்லை யாயினும் சங்க

இலக்கியங்கள் கூறும் இலக்கணத்தோடு தமிழக சித்திரக்காரர்கள் சித்தன்னவாசல் ஓவியங்களைத் தீட்டி நமது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக்கியிருக்கின்றனர்.

கருவறையின் (உள் மண்டபம்) விதானத்தில் ஓவியம் வரையப்பட்ட பட்டுத்துகில் ஒன்று விரித்துள்ளது போன்ற காட்சியினைக் காண்கிறோம். இதில் பல வட்டங்களும், சதுரங்களும் இணைப்பின்றி ஒரு தொகுதியாக விளங்குகின்றன. சதுரங்களில் தாமரைப் பூக்கோலமும், வட்டங்கள் ஸ்வஸ்திக் வடிவத்தில் நான்கு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் மேல் இரண்டு பிரிவில் இரண்டு மனித உருவங்களும் கீழ் இரண்டு பிரிவில் இரண்டு சிங்கங்களும் மிகத் துல்லியமாக வரையப்பட்டுள்ளன.

முன் மண்டபத்தின் விதானத்தை அண்ணாந்து பார்த்தால் அங்கு சித்தரிக்கப்பட்டுள்ள தாமரைத் தடாகம் நம் சிந்தையைக் கவருகிறது. சித்தன்னவாசல் ஓவிய வேலைப்பாட்டின் உயிர்நாடியே இந்த தாமரைத் தடாகம்தான். மணிமேகலைக் கூறும், வித்தகரியற்றிய கண்கவர் ஓவியங்கள் இவைதானோ என எண்ணத் தோன்றுகிறது. பசுமையான, இலைகளுடன், தாமரையும், அல்லியும் இந்த தடாகத்தில் பூத்துக் குலுங்குகின்றன. பலவிதமான மீன்கள் அங்குமிங்கும் ஓடி விளையாடுகின்றன. யானைகள் நீரைக் கலக்கி களித்திருக்கின்றன. சுற்றுச் சூழலை மறந்து அசைபோட்டு இருமாந்திருக்கும் எருமை மாடுகளின் தோற்றம் இயல்பாக உள்ளது. துள்ளிக்குதிக்கும் மீன்கள் மீனலோசனி மீனாட்சியின் கண்களோடு போட்டியிடுகின்றன. அன்னம், சிறகி, வாத்து போன்ற பறவைகள் தங்கள் பெடைகளுடனும், குஞ்சுகளுடனும் குலாவிக் கொண்டிருக்கின்றன. மருட்சியுடன் விழித்துக் கொண்டு ''யார் எனது குஞ்சுகளை மிரட்டுவது'' என்று கேட்கும் பாவனையில் தனது குஞ்சுகளுக்கு அடைக்கலமளிக்கப் பறந்தோடிச் செல்லும் ஒரு சிறகியின் ஓவியத் தோற்றம் தாயன்பு எவ்வுயிர்க்கும் பொதுவானது என்பதை உணர்த்துகிறது. தாமரையும் அல்லியும் கூட மொட்டாகவும், இதழ் விரித்தும் இயற்கையின் விதியை நம் கண்முன் கொண்டு வருகின்றன. பவ்யர்கள் என்னும் கந்தர்வ புருஷர்கள் நீராடி வழிபாட்டிற்கு பூக்களை பறித்துக் கொண்டிருக்கின்றனர். இப்படியாக தடாகம் முழுவதும் எங்கு நோக்கினும் உயிரோட்டம் நிறைந்த கண்கொள்ளாக் காட்சி! இங்கு காணப்படும் அனைத்துமே சுறுசுறுப்புடன் இயங்குவதுபோல நமக்குத் தோற்றமளிக்கின்றன. மனதிற்கினிய இந்த ஓவியங்களை எப்படித்தான் வரைந்திருப்பார்களோ என்று எண்ணும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது.

சமண புராணங்கள் கூறும் சுவர்க்கங்களுள் ஒன்றாகிய கடிக பூமியிலுள்ள சமவசரண மண்டபத்திற்குச் செல்லும் வழியில் உள்ள

தாமரைத் தடாகத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது இந்தக் காட்சி, எனக் கூறப்படுகிறது.

தூண்களின் முகப்பில் நாட்டியக் கணிகையர் இருவர் நடனமாடும் எழில்மிகு தோற்றம் தீட்டப்பட்டுள்ளன. இவை மிகவும் அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இருப்பினும் இந்த கன்னியரின் ஓவியங்கள் காட்டும் அபிநயமும், முத்திரைகளும், நாட்டிய சக்கரவர்த்தி நடராசரின் தாண்டவத்தை நினைவுபடுத்துகின்றன. நாட்டியக் **கச்சையணிந்து, பலவித அணிகலன்களையும் அணிந்துள்ள பாங்கு** வியக்கத்தக்கது. பொன்னிறமான மேனியழகு, புன்முறுவல், நெஞ்சத்தை ஊடுருவிப்பார்க்கும் நீண்ட நயனங்கள், குறுகிய இடை, பாம்புபோல் நெளியும் கரங்கள், அங்க அசைவுகள், கண்களின் ஒளி இவையாவும் ஒன்றுசேர்ந்து உயிரோட்டம் ததும்பும் இவ்விரு கன்னியரும் தேவலோகத்திலிருந்து இறங்கிவந்து இன்னிசைக்கேற்ப நடனமாடுவது போல் உள்ளது. இன்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் வழக்கிலிருந்த நாட்டிய பாவனைகளையும், நாட்டியக்கலை விதிகளையும் தெரிந்துகொள்ள இந்த ஓவியங்கள் நல்ல சான்று பகர்கின்றன. அஜந்தா ஓவியங்களில்கூட இதுபோன்று நாட்டிய சாத்திர விதிகள் அதிகமாக பின்பற்றப்படவிலலை. ஆகவே சித்தன்னவாசல் நடன கன்னியரின் ஓவியங்கள் இந்திய நாட்டியக்கலைக்கே சிறப்பு செய்கின்றன.

தென்புறத்தூணின் வடக்கு முகத்தில் மணிமுடியுடனும், கம்பீரத் தோற்றததுடனும் காணப்படும் ஓவியம் இந்த கோவிலுக்கு திருப்பணி செய்வித்த ஸ்ரீமார ஸ்ரீ வல்லப பாண்டியன் என்றும் அவனுக்குப் பின்னால் மிடுக்கான தோற்றத்துடன் உள்ள ஓவியம் அவனது தேவி என்றும் கருதப்படுகிறது.

இதுவரை சொன்ன ஓவியங்களைத் தவிர, தூண்களுக்கு மேலே உள்ள விட்டத்திலும் அதிலிருந்து நீண்டிருக்கும் கொடுங்கையிலும் தாமரை மலர்களும் அன்னப்பறவைகளும் வரையப்பட்டுள்ளன.

உயிரோட்டம், இயற்கையின் இலக்கணம், அங்க அளவுப் பொருத்தம், லாவண்யம், ஆகிய பண்புகளைனத்தும் அமைந்தவையே உயர் கலை ஆகுமென்றால் இக்குணங்கள் அனைத்தும் பொருந்தப் பல உயிரினங்களையும், மலர்களையும் உயிரோட்டத்துடன் இங்கு படைத்திருக்கும் சித்திரக்காரர்கள், மணிமேகலை கூறும் 'வரந்தர வெழுதிய வோவிய மாக்களே' ஆவார்கள்.

சித்தன்னவாசல் ஓவியங்களை வரைய உபயோகப்படுத்தப் பட்டுள்ள வண்ணங்கள் யாவும் இயற்கை கனிப்பொருள்களே ஆகும். கருப்புக்கு கரிப்பொடியும் சிவப்பு, மஞ்சள் நிறங்களுக்கு இவ்வண்ண காவிக்கற்களும், நீல நிறத்திற்கு நீலக்கல்லும், பிறவண்ணங்களுக்கு இந்த வண்ணங்களின் கலப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அஜந்தா ஓவியங்களிலும், பல்லவர் ஓவியங்களிலும் காணப்படும் அழகையும், அமைதியையும் பண்பட்ட கலைத்திறனையும் சித்தன்னவாசல் ஓவியங்களில் காணமுடிகிறது. இந்திய ஓவியக்கலைப் பாரம்பரியத்தில் தமிழகத்தின் பங்கை சித்தன்னவாசல் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

காலத்தின் கருணையின்மையால் பெரும்பாலான ஓவியங்கள் சிதைந்து அழிந்துவிட்டபோதிலும், இன்று நாம் காணும் எஞ்சியுள்ள **ஓவியங்கள் அக்கால தமிழகத்தின் ஓவியக்கலை, நாட்டியக்கலை** ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள காலத்தால் மூற்பட்ட சான்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. உங்களது சிந்தைக்கு விருந்தளிக்க சித்தன்னவாசல் ஓவியக்கூடம் அன்புடன் உங்களை அழைக்கிறது.

(இந்நூல் ஆசிரியர் 29.12.88 அன்று திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஆற்றிய உரை.)

## 26. விசலூர்

விசலூர், கீரனூர் - கிள்ளுக்கோட்டை சாலையில் (மலையடிப்பட்டிக்கு அருகில்) கீரனூரிலிருந்து 12 கி.மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள மார்க்க சகாயேஸ்வரர் - சிவன்-கோயில் பழமையானதாகும். இந்தக் கோயில், காளியாப்பட்டி, திருப்பூர் ஆகிய இடங்களிலுள்ள சிறிய ஓரடுக்கு கோயில்களின் அமைப்பை ஒத்தது. கருவறையும் அர்த்தமண்டபமும் கி.பி.9-ம் நூற்றாண்டை சேர்ந்ததாகும். முன் மண்டபம் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாகும். அடித்தளத்திலிருந்து விமான உச்சிவரை நல்ல வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது இக்கோயில்.

காலத்தால் முற்பட்ட கோயில்களைப் புதுப்பிக்கும்போது பழமையான சிற்ப வேலைப்பாடுகளையும், கல்வெட்டுகளையும் பாதுகாப்பதில் நாம் கவனம் கொள்வதில்லை என்பதற்கு இக்கோயில் சிறந்த எடுத்துக்காட்டாகும். பிற்காலத்தில் இக்கோயிலை புதுப்பித்தபோது கோயிலின் (வெளிப்பக்கம்) அடித்தளத்திலிருந்து உச்சிவரை சுண்ணாம்புக் காரையினால் பூசப்பட்டு பழமையான வேலைப்பாடுகள் முழுமையாக மூடி மறைக்கப்பட்டுள்ளன. பழைய கல்வெட்டுகள் இனம் கண்டு கொள்ள முடியாத அளவிற்கு தொடர்பற்றுக் காணப்படுகின்றன. குலோத்துங்க சோழன், சடையவர்மன், வீரபாண்டியன், போன்ற மன்னர்களின் பெயர்களை மட்டுமே குறிப்பிடும் கல்வெட்டுகளைக் கொண்டு அம் மன்னர்களை இன்னாரென அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

இவ்வூரில் பட்டவர்கோயில் என்றொரு கோயில் உள்ளது. இங்கு வழங்கும் கர்ணபரம்பரைக் கதையின்படி, ஒருவரை ஒருவர் விரும்பிய

ஒரு ஆணையும் பெண்ணையும் பிரித்துவிட திட்டமிட்ட அவ்வூர் மக்களில் சிலர் அந்த ஆடவனைப் பிடித்துக் கொன்றுவிட்டனர். இதை அறிந்த அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டாள். அவர்களது காதல் இப்பகுதியின் நாட்டு வழக்கில் அழியாப்புகழ் பெற்றது. அவர்களை நினைவுகூறும் வண்ணம் அவர்களுக்கு ஒரு கோயில் கட்டி அதில் வழிபாடு நடத்தும் பழக்கம் ஏற்பட்டது.

## 27. கண்ணனூர்

கண்ணனூர், புதுக்கோட்டையிலிருந்து 22 கி.மீ. தொலைவில் (ராங்கியத்திற்கு அருகில்) உள்ளது. இவ்வூரிலுள்ள பாலசுப்ரமணியர் கோயிலும், திருமால் கோயிலும் அழகிய கலை வேலைப்பாடுகள் கொண்டதாகும்.

பாலசுப்ரமணியர் கோயில் கருவறையும் அர்த்தமண்டபமும் கி.பி.9-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்காலப் படைப்பாகும். கோயிலின் மூலவர் பாலசுப்ரமணியர் ஆவார். இக்கோயில் அமைப்பு, திருக்கட்டளைக் கோயில் அமைப்பை ஒத்திருக்கிறது. கருவறையின் சுவற்றில் காணப்படும் அரைத்தூண்கள், கொடிக்கருக்கு, பூதகணங்கள், கொடுங்கை ஆகியன அழகுடன் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையின் வெளிப்பக்கத்திலுள்ள மாடத்தில் தட்சிணாமூர்த்தி சிற்பம் மட்டும் உள்ளது. இக்கோயில் விமானம் சுற்றளவில் பெரியதாக அமைந்த ஓரடுக்கு கொண்டதாகும். விமானத்தின் மேல் நான்கு முகடுகளிலும் (பாலசுபமணியரின் வாகனமான) யானை அமர்ந்த நிலையில் காணப்படுகிறது.

பொதுவாக சேவல் கொடியும், மயில்வாகனமும் சுப்ரமணியருக்கு உரியது எனக் கொள்ளப்படுகிறது. ஆனால் சங்க இலக்கியங்களும், ஒரு சில புராணங்களும், ஆகமங்களும் பாலசுப்ரமணியரின் வாகனம் யானை என்று கூறுகின்றன. சுப்ரமணியருக்கு யானை வாகனமாக வரிக்கப்படுவது அரிதானதாகும். இதை இங்கு காண்கிறோம். ஆகவே, கோயில்கலை வரலாறில் இக்கோயில் தனியொரு இடத்தைப் பெறுகிறது.தற்போது மூலவராக உள்ள பாலசுப்ரமணியர் சிற்பம் பிற்காலத்தில் வைக்கப்பட்டதாகும். கோயில் எடுப்பிக்கப்பட்டபோது இருந்த பாலசுப்ரமணியர் சிற்பம் தற்போது முன் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பாலசுப்ரமணியர் கோயிலுக்கு சற்றுத் தொலைவில் கரியமாணிக்கப் பெருமாள் என்னும் திருமால் கோயில் உள்ளது. இக்கோயில், கல்வெட்டுகளில் இது விருதுபயங்கர விண்னகர எம்பெருமானார் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் அழகிய சிற்பங்கள் பலவற்றைக் காணலாம். மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டுகள் ஒன்பது இக்கோயிலில் உள்ளன.

# 28. பேரையூர்

பேரையூர், புதுக்கோட்டை பொன்னமராவதி வழித்தடத்தில் புதுக்கோட்டையிலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. (பேருந்துத் தடத்திலிருந்து இரண்டு கி.மீ. வடக்கே செல்லவேண்டும்) இங்குள்ள நாகநாதசாமி கோயில் இம்மாவட்டத்தில் முக்கியமானதொரு வழிபாட்டிடமாகும். தற்போது உள்ள மூலக்கோயில் கி.பி.12-13-ம் நூற்றாண்டில் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டதாகும். கருவறையின் வெளிச்சுவற்றிலுள்ள மாடங்களில் தெற்கே தட்சிணா மூர்த்தியும், மேற்கே லிங்கோத்பவரும் வடக்கே பிரம்மாவும் அலங்கரிக்கின்றனர். கோயில் விமானம் பிற்காலத்தில் செங்கல்லினால் கட்டி புதுப்பிக்கப்பட்டுள்ளது. கருவறையின் முன்பு உள்ள அர்த்தமண்டபத்தில் சுரங்கப்பாதை ஒன்று உள்ளதாக சொல்லப் படுகிறது. ஆனால் இது எங்கே செல்கிறது என்பது தெரியவில்லை. (இது, போர்க் காலங்களில் கோயில் சிலைகளையும் சொத்துக்களையும் மறைத்துவைக்க தரைமட்டத்திற்கு கீழ்க் கட்டப்பட்ட சிறிய அறையாக இருக்கலாம்).

கோயில் வளாகத்தில் காலத்தால் முற்பட்டது மேலக்கோபுரமாகும். இதன் கட்டுமான அமைப்பைக் கொண்டு இது கி.பி.11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம். மேலும் இங்கு ராஜேந்திர சோழன் காலத்து (கி.பி.1012-44) கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது. ஆகவே இங்குள்ள (மூல) கோயிலும் இக்காலத்திலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் 12-13ம் நூற்றாண்டில் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். கிழக்கு கோபுரம் காலத்தால் பிற்பட்டதாகும். இது பிற்காலப் பாண்டியர்காலக் கட்டுமானமாகும். கோயிலில் உள்ள பிற மண்டபங்களும் காலத்தால் பிற்பட்டவையாகும்.

அம்மன் சன்னதியின் அமைப்பைக் கொண்டு இது விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் (15-16-ம் நூற்றாண்டு) கட்டப்பட்டதெனத் தெரியவருகிறது. அம்மனின் பெயர் ஸ்ரீ பிரகதாம்பாள்.

கோயிலில் சோழர், பாண்டியர் விஜயநகர மன்னர்கள், அறந்தாங்கி தொண்டைமான் மன்னர்கள், பல்லவராயர் ஆகியோரது கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. காலத்தால் முற்பட்ட கல்வெட்டு ராஜேந்திர சோழன் காலத்தைச் சேர்ந்ததாகும். பல்லவராயர் இப்பகுதியை ஆண்டுவந்தபோது இவ்வூர் "பேரையூர் நாடு" என சிறப்புடன் விளங்கியது. பல்லவராயருள் புகழ்மிக்க சிவந்தெழுந்த பல்லவராயர் இக்கோயில் இறைவனிடம் மிகுந்த பக்திகொண்டவராக இருந்தார்.

பிள்ளைபேறு இல்லாதவர்கள், இக்கோயில் வழிபட்டால் பிள்ளை பேறு கிட்டும் எனச் சொல்லப்படுகிறது. ஆகவே பிள்ளைப்பேறு

இல்லாதவர்கள் இக்கோயிலில் சிறப்பு வழிபாடுகள் நடத்தி, ஐந்து தலையுடன் கூடிய நாகச்சிற்பங்களை, (கல், வெள்ளி, தங்கத்தில்) காணிக்கையாக வைத்துச் செல்லுகின்றனர். பக்தர்கள் இப்படி வைத்துள்ள நூற்றுக்கணக்கான நாக சிற்பங்களை இங்கு காணலாம்.

கோயிலில் ஒரு சுனை உள்ளது. இந்த சுனையில் பங்குனி மாதத்தில் குறிப்பிட்ட நாளில் தண்ணீர் மட்டம் ஒரு சூலக் குறியிட்ட இடத்திற்கு வரும்போது, கடவுள் வழிபாட்டின்போது இசைக்கப்படும் இசைக்கருவிகளின் ஒலி கேட்பதாகச் சொல்லப்படுகிறது. பூமிக்குக் கீழ் ஆதிசேஷன் நடத்தும் வழிபாட்டு நிகழ்ச்சியின் ஒலியாகும் இது என கோயிலில் வழங்கப்படும் கர்ணபரம்பரைக் கதைத் தெரிவிக்கிறது.

கோயிலின் அமைப்பைப் பொதுவாகக் காணும்போது இது பலமுறை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. 1885-ல் தொண்டைமான் மன்னர் ராமச்சந்திரத் தொண்டைமான் காலத்தில் கோயில் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்குத் திருவிழா நடைபெற்றதாக கல்வெட்டுச் செய்தியொன்று தெரிவிக்கிறது. 1989-ம் ஆண்டில் திரு அய்யாக்கண்ணு என்னும் செல்வந்தர் இக்கோயிலுக்கு குடமுழுக்குத் திருவிழா நடத்தியுள்ளார்.

## 29. திருக்களம்பூர்

திருக்களம்பூர், புதுக்கோட்டை-பொன்னமராவதி வழித்தடத்தில் புதுக்கோட்டையிலிருந்து 35 கி.மீ, தொலைவில் உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் திருக்குறும்பூர் எனக் குறிப்பிடப்படுகிறது.

ஒரு காலத்தில் பாண்டிய மன்னனொருவன் இவ்வூர் வழியாக குதிரையில் வரும்போது குதிரையின் குளம்பு, பூமியில் பதிந்திருந்த ஒரு பொருளின்மீது பட்டு குதிரை தடுக்கி விழுந்துவிட்டது. குதிரையின் குளம்புபட்ட இடத்திலிருந்து ரத்தம் வரவே, அவ்விடத்தில் பார்த்தபோது, அங்கு ஒரு லிங்கம் இருப்பது தெரியவந்தது. மக்கள் அந்த லிங்கம் தோன்றிய இடத்தில் கோவில்கட்டி வழிபடத் தொடங்கினர். ஆகவே இவ்வூர் திருக்குளம்பூர் எனப் பெயர் பெற்றது. இவ்வாறு கர்ணபரம்பரைக் கதை ஒன்று கூறுகிறது.

திருக்களம்பூர் கோயிலில் குடிகொண்டிருக்கும் சிவபெருமான் வைத்தீஸ்வரர் என்றும் கதலிவனேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். இக்கோயிலில் சுற்றுப் பிரகாரத்தில் ஒரு வகை கதலிவாழை நிறைய உள்ளது. இதில் காய்க்கும் பழங்களை யாரும் உண்பதில்லை. இந்த வாழைக் கன்றுகளை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று வைத்தாலும் வளருவதில்லை என்று சொல்லப்டுகிறது.

தற்போது இங்குள்ள கோயில் கி.பி.12-13ம் நூற்றாண்டு கட்டுமானமாகத் தெரிகிறது. ஆனால் கி.பி.10-11ம் நூற்றாண்டில் வழக்கத்திலிருந்த ஜேஷ்டாதேவி வழிபாடு இக்கோயிலில் நடைபெற்றதற்கான சான்றுகள் தென்படுவதால், இதே காலத்தில் சிவபெருமானுக்கு கோயிலும் கட்டப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில்

இக்கோயில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். கோயிலில் பல அழகிய சிற்பங்களைக் காணலாம். கருவறையின் வெளியே உள்ள மேற்கு மாடத்தில் உள்ள லிங்கோத்பவர் சிற்பம் குறிப்பிடத்தக்கது.

கோயிலில் 12 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது சடையவர்மன் முதலாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்ததாகும். (கி.பி.1199) சடையவர்மன் இரண்டாம் வீரபாண்டியன் காலத்து கல்வெட்டு ஒன்றில் மறைமான் விக்ரம பாண்டியநல்லூர் எனக் குறிப்பிடப்படுகிறது. இது திருக்களம்பூரின் மற்றொரு பெயராக இருக்கலாம். கி.பி.1502-ம் ஆண்டைச் சேர்ந்த விஜயநகர இம்மாடி நரசிம்மனது கல்வெட்டொன்று இவ்வூரில் செக்குகளுக்கு வரி (செக்கிரை) நீக்கி அதற்குப் பதிலாக இக்கோயிலுக்கு விளக்கெரிக்க எண்ணெய் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

கதலிவனேஸ்வரர் கோயிலுக்குச் சற்று கிழக்கே பழமையான மற்றொரு சிவன்கோயில் உள்ளது. இக்கோயில், இங்குள்ள கல்வெட்டில், குலசேகர ஈச்வரமுடையார் என்று அழைக்கப்படுகிறது. ஆகவே இக்கோயில் குலசேகரபாண்டியனின் நினைவாக எடுக்கப்பட்டதாகக் கொள்ளலாம். ஆனால் இம்மன்னன் இன்னாரென்று கண்டுகொள்ள முடியவில்லை.

திருக்களம்பூரில் மதுரை நாயக்க மன்னர்கள் ஒரு கோட்டை கட்டியிருந்ததாகவும் அது 1602-ம் ஆண்டுவாக்கில் அழிந்து விட்டதாகவும் 1813-ம் ஆண்டு புதுக்கோட்டை கணக்காய்வுக் குறிப்பு தெரிவிக்கிறது.

## 30. திருமயம்

திருமயம் புதுக்கோட்டையிலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது. திருமெய்யம் என்னும் சொல்லே திருமயம் என மருவி வழங்கப்படுகிறது. திருமெய்யம் என்றால் உண்மையின் இருப்பிடம் எனப் பொருள்படும். (சமஸ்கிருதத்தில் - சத்தியக்ஷேத்திரம்) இங்கு சிவபெருமானுக்கும், விஷ்ணு பெருமானுக்கும் அருகருகே கோயில்கள் உள்ளன. இரண்டும் குகைக்கோயில்கள். சிவபெருமான் சத்தியகிரீஸ்வரர் எனவும், விஷ்ணு பெருமான் சத்தியமூர்த்தி எனவும் அழைக்கப் படுகிறார். இது, திருமங்கை ஆழ்வார் பாடல் பெற்றத் தலம். இங்குள்ள சிவன், விஷ்ணு குகைக்கோயில்களும், கோட்டையும் காணத்தக்கவையாகும்.

விஷ்ணு குகைக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு, முத்தரைய மன்னன் சாத்தன் மாறனின் பெயரைக் குறிப்பிடுவதிலிருந்து கி.பி.8-9ம் நூற்றாண்டுகளில் இப்பகுதியை முத்தரையர் ஆண்டு வந்திருக்க வேண்டும் எனத் தெரியவருகிறது. பின்பு சோழர்களின் ஆட்சிக்குட் பட்டிருந்தது. 13-ம் நூற்றாண்டில் இப்பகுதி முழுவதும் பாண்டியரின் ஆளுகையில் இருந்தது. மாறவர்மன் இரண்டாம் சுந்தர பாண்டியன், சடையவர்மன் மூன்றாம் வீரபாண்டியன், சடையவர்மன் பராக்கிரம

பாண்டியன் ஆகியோரது ஆட்சிக்கால கல்வெட்டுகளும் இங்கு காணப்படுகின்றன. 14-ம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. 15-ம் நூற்றாண்டில் சூரைக்குடி சிற்றரசர்களான பராக்கிரம பாண்டிய விஜயாலயத்தேவர், சுந்தரபாண்டிய விஜயாலயத்தேவர் ஆகியோரது ஆளுகையில் இருந்தது. 16-17ம் நூற்றாண்டுகளில் இப்பகுதி ராமநாதபுரம் சேதுபதிகளின் ஆளுகையின் வட எல்லையாக இருந்தது. சேதுபதி மன்னர்களின் மேலாண்மைக்குட்பட்டு இப்பகுதியை பல்லவராயர் ஆண்டு வந்தனர். கி.பி.1636-ம் ஆண்டு விஜயரகுநாத சேதுபதி என்னும் கிழவன் சேதுபதிக்கும், புதுக்கோட்டை தொண்டைமான் பரம்பரையினருக்கும் ஏற்பட்ட மண உறவின் காரணமாக திருமயம் பகுதி பல்லவராயர் கையிலிருந்து தொண்டைமான் மன்னர்களின் ஆளுகைக்கு வந்தது.

### சத்தியகிரீஸ்வரம்

சத்தியகிரீஸ்வரம் என்னும் சிவன்கோயில் குன்றின் தெற்குச் சரிவில் உள்ள குகைக்கோயில்களுள் ஒன்றாகும். குகைக்கோயிலின் அளவு 25'x12', கிழக்கு நோக்கியுள்ளது. மூலவர், லிங்கமாக காட்சியளிக்கிறார். குகைக்கோயிலின் வாயிலில் உள்ள துவாரபாலகர் சிற்பங்கள் அழகு மிக்கவை. மண்டபத்தின் சுவர்களிலும் மேல் விதானத்திலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆனால் தற்போது முழுமையாக அழிந்துவிட்டன.

வாயிலிலிருந்து, கோயிலினுள் நுழைந்ததும், முதல் மண்டபத்தை ஒட்டி, பானு உமாபதீஸ்வரர், ராஜராஜேஸ்வரி அம்மன், பைரவர் நவக்கிரஹங்கள் ஆகிய தெய்வங்களுக்கான சன்னதிகள் உள்ளன. இவை காலத்தால் பிற்பட்டவை. இவையனைத்தும் கீழைக்கோயில் என்று அழைக்கப்படுகிறது. இந்த கோயில்களுக்கு சற்று உயரே வேணுவனேஸ்வரி அம்மன் சன்னதி உள்ளது. (வேணுவனேஸ்வரி என்பது மூங்கில்காட்டு அரசி எனப் பொருள்படும். ஒரு காலத்தில் இப்பகுதியில் மூங்கில் காடு அதிகம் இருந்ததால், இந்த இயற்கை சூழலை ஒட்டி, அம்மனுக்கு இப் பெயர் வந்திருக்கலாம்.) இது பிற்கால பாண்டியர் ஆட்சிக்காலத்தில் (கி.பி.12-13-ம் நூற்றாண்டில்) கட்டப்பட்டு பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இக்கோயிலில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. குகைக்கோயில் மண்டபத்தின் வடக்கு சுவற்றில் உள்ள ஒரு கல்வெட்டில் 'பரிவாதினி' என்று கிரந்த எழுத்தில் காணப்படுகிறது. பரிவாதினி என்பது ஒரு யாழ்வகை என முன்பே குறிப்பிட்டுள்ளோம். இதற்குப் பக்கத்திலேயே, கர்நாடக சங்கீதம் பற்றிய கல்வெட்டு ஒன்று இருந்து, பிற்காலத்தில், 13-ம் நூற்றாண்டில், இக்கல்வெட்டின் மேலேயே, வேறொரு கல்வெட்டு பொறிக்கப்பட்டதால் இந்த சங்கீதக் கல்வெட்டு சிதைந்துவிட்டது. ஹோய்சள நாட்டுத் தளபதி அப்பன்ன தண்டநாயகா, இவ்வூர் சிவன்-விஷ்ணு கோயில் நிர்வாகக் குழுவினருக்கிடையே இருந்த வழக்கை தீர்த்துவைத்து சமரசம் செய்து வைத்த செய்தியை இந்த புதிய கல்வெட்டுத் தெரிவிக்கிறது. ஆனால் இந்த (புதிய) கல்வெட்டினூடே

ஒரு சில இடங்களில் தென்படும் சட்ஜ, காந்தார போன்ற சொற்களைக் கொண்டு, இவ்விடத்தில் முன்பு சங்கீதம் பற்றிய கல்வெட்டு இருந்ததைத் தெரிந்து கொள்கிறோம். 'பரிவாதினி' என்ற வாசக கல்வெட்டு மற்றும் சங்கீதக் கல்வெட்டு ஆகியவற்றைக் கொண்டு இதுவும் (குடுமியான்மலை போன்று) மகேந்திரவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்தது எனக் கருதப்பட்டு வந்தது. ஆனால் இதுவும் மாவட்டத்திலுள்ள பிற குகைக்கோயில்களைப் போன்று கி.பி.8-9-ம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட பாண்டியர் காலத்து குகைக்கோயிலாகும்.

**சத்தியமூர்த்தி - வைணவக் கோயில்**

திருமயத்தில் குடிகொண்டிருக்கும் சத்தியமூர்த்தி, வைணவ சமயப் பிரிவினரின் முக்கியமானதொரு கோயிலாகும். இக்கோயிலே ஆதிரங்கம் என வழங்கப்பட்டது. ஸ்ரீரங்கம் வைணவக்கோயிலைவிட காலத்தால் முந்தியது. தென்பாண்டி மண்டலத்து 18 பதிகளுள் ஒன்று.

நுழைவு வாயிலில் உள்ள கோபுரம் பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். வாயிலைத் தொடர்ந்து உள்ள மண்டபம் மிகவும் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். இந்த மண்டபத்தை ஒட்டி, சக்கரத்தாழ்வார், ஆண்டாள், கிருஷ்ணன், லட்சுமி நரசிம்மர் ஆகிய தெய்வங்களின் சன்னதிகள் உள்ளன. இரண்டாவது மண்டபத்திற்கு அருகில் அம்மன்-உஜ்ஜீவனத் தாயார் - சன்னதி உள்ளது. மூலக்கோயிலான குகைக்கோயிலுக்கு முன் உள்ள மண்டபம் சுந்தரபாண்டியன் குறடு என வழங்கப்படுகிறது.

குகைக்கோயிலினுள் விஷ்ணுபெருமான் அனந்தசயன மூர்த்தியாக காட்சியளிக்கிறார். மாவட்டத்திலுள்ள குகைக்கோயில்களுள் இதுவே அளவில் பெரியது. அனந்த சயனமூர்த்தி மலையோடு சேர்ந்து பாறையிலேயே வடிக்கப்பட்டிருக்கிறார். ஆதிசேஷன் என்னும் ஐந்து தலை அரவத்தின்மீது சயனித்திருக்கிறார். அனந்தசயன மூர்த்திக்குப் பின்னால் உள்ள சுவற்றில் ஒரு கதையே (கல்லில்) உருவாக்கப்பட்டுள்ளது. சுவற்றில் பல சிற்பங்களைக் காணுகிறோம். இடமிருந்து வலமாக, கருடன், சித்திரகுப்தன், மார்க்கண்டேயன், பிரம்மா (விஷ்ணுவின் நாபியிலிருந்து), தேவர்கள், ரிஷிகள், கின்னரர்கள் உருவங்களும், வலதுகோடியில் மது, கைத்தபு எனப்படும் இரண்டு . அசுரர்கள் கொடூரமான பார்வையுடனும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். விஷ்ணுவின் காலடியில் (நிலமகள்) பூதேவி திருஉருவம் வடிக்கப்பட்டுள்ளது. பெருமானின் மார்பில் தஞ்சம் கொண்டுள்ள திருமகளை (ஸ்ரீதேவி) அவரது இடதுகை அணைக்க, வலதுகை ஆதிசேஷனைத் தட்டிக் கொடுக்கும் பாவனையில் உள்ளது.

இவையெல்லாம் வெறும் சிற்பங்கள் மட்டுமன்று! இதில் உயிரோட்டமுள்ள ஒரு கதையை சித்தரித்திருக்கிறான் சிற்பி! தேவியர் அருகிலிருக்க, ஏகாந்தமாக பள்ளிகொண்டிருக்கிறார் விஷ்ணுபெருமான். அமரர் கூட்டம் இசைபாடி இன்புற்றிருக்கிறது. இந்த நேரத்தில், மது, கைத்தபு ஆகிய இரு அரக்கர்களும் திடீரெனப் பாய்ந்து திருமகளையும் நிலமகளையும் தூக்கிச் செல்ல முற்படுகின்றனர். விஷ்ணு பெருமானோ

ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார். ஆதிசேஷன் விழித்திருந்து அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் ஆதிசேஷன், பெருமானின் ஆணைக்குக் காத்திராமல் விஷ ஜ்வாலையை கக்கி, அசுரர்களை சுட்டெரிக்க முற்பட, அவர்கள் தலைதெறிக்க ஓடுகின்றனர். அச்சம்கொண்ட திருமகள், பெருமானின் மார்பிலும் நிலமகள் காலடியிலும் தஞ்சமடைகின்றனர். விழித்துக் கொண்ட பெருமான் நிலைமையைப் புரிந்து கொள்ளுகிறார். ஆதிசேஷனோ, பெருமானின் ஆணையின்றி செயல்பட்டுவிட்டோமே என எண்ணி வருந்தி அஞ்சும்போது, பெருமான் ஆதிசேஷனைத் தட்டிக் கொடுத்து அவரது செயலுக்கு ஏற்பளித்து பாராட்டுகிறார். இப்படியாக மேடையில் நடத்தப்படும் ஒரு நாடகக் காட்சியினை உயிரோட்டத்துடன் இங்கு கல்லிலேயே வடித்திருக்க காண்கிறோம். இதுபோன்ற அமைப்பு வேறு எங்கும் இல்லை.

விஷ்ணு கோயிலில் 13 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தியது இரண்டாம் நந்திவர்ம பல்லவன் மற்றும் தந்திவர்ம பல்லவன் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆகவே இக்கல்வெட்டு கி.பி.8-ம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 9-ம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கொள்ளலாம். சாத்தன் மாறன் என்னும் விடேல்விடுகு விழுப்பேரரையன் என்னும் முத்தரைய சிற்றரசனின் தாயார் பெரும்பிடுகுப் பெருந்தேவி, இக்கோயிலை புதுப்பித்து கொடையளித்த செய்திகளை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. பெரும்பிடுகுப் பெருந்தேவி, பெரும்பிடுகு முத்தரையரின் மனைவி ஆவாள். ஆகவே குடைவரை இக்காலத்திற்கு முன்பே இருந்திருக்க வேண்டும். மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1245). சடையவர்மன் மூன்றாவது வீரபாண்டியன் (கி.பி.1340) சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் மூன்றும், விஜயநகர மன்னன் விருபாட்சன் காலத்து கல்வெட்டுகள் இரண்டும், கிருஷ்ணதேவராயர் காலத்துக் கல்வெட்டு ஒன்றும், ராமநாதபுரம் சேதுபதிகள் காலத்து கல்வெட்டுகள் இரண்டும் காணப்படுகின்றன.

இது, திருமங்கை ஆழ்வாரின் பாடல் பெற்றதலம். (பெரிய திருமொழி) மார்கழி மாதத்தில் நடைபெறும் ஏகாதசி அன்று (சொர்க்கவாசல் திறப்பு) ஏராளமான பக்தர்கள் கூடுகின்றனர். 1924ல் திவான்பகதூர் டி.என்.முத்தையா செட்டியார் கோயிலுக்கு குடமுழுக்கு திருவிழா நடத்தியுள்ளார். தற்போது சிவன் மற்றும் விஷ்ணு கோயில் இரண்டும் இந்திய தொல்பொருள் துறையின் பராமரிப்பில் உள்ளன.

### திருமயம் கோட்டை

வரலாற்றுச் சிறப்புமிக்க திருமயம் கோட்டை தொண்டைமான் மன்னர்களின் அரசியலுடன் மெத்தவும் தொடர்புடையதாகும். இக்கோட்டை வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரையால் கட்டப்பட்டது என்றும், ''இங்கிருந்துதான் அவன் வெள்ளையரை எதிர்த்து வீரமுழக்கமிட்டான்'' என்றும், இப்பகுதியில் பல நாட்டுக் கதைகள் விளங்குகின்றன. இக்காரணம் பற்றியே இக்கோட்டைக்கு

ஊமையன் கோட்டை என்ற பெயரும் வழங்கிவருகிறது. பள்ளிப் பாடப்புத்தகங்கள்கூட இக்கோட்டையை ஊமையன் கோட்டை என்றே குறிக்கின்றன. ஆனால் இக்கூற்று வரலாற்று உண்மைக்கு முற்றிலும் மாறானது.

**கோட்டையின் அமைப்பு**

இலக்கியங்களும் கட்டிடக்கலை நூல்களும் கூறும் இலக்கணத்துடன் அமைந்தது இக்கோட்டை. கோட்டையைச் சுற்றி ஏழு சுற்றுமதில்கள் இருந்தன. கோட்டை வட்டவடிவமானதாகும். இவ்விதக் கோட்டையை 'பத்மகக்கோட்டை' என 'மானசாரம்' என்னும் நூல் கூறுகிறது. வெளிச்சுவற்றை சுற்றி முதலைகளும், நச்சுப்பாம்புகளும் நிறைந்த அகன்ற ஆழமான அகழி இருந்தது. அகழியின் இடிபாடுகள் கோட்டையைச் சுற்றி இன்றும் பல இடங்களில் நல்லநிலையில் இருப்பதைக் காணலாம். கோட்டையைச் சுற்றியிருந்த சுவர்கள் இடிந்தபின் இக்கற்களைக் கொண்டு அவ்விடங்களில் வீடுகளைக் கட்டியுள்ளதால் சுவர்களின் இடிபாடுகளைக்கூடக் காணமுடியவில்லை; கோட்டைக்கு வடக்கு, தெற்கு, தென்கிழக்கு, ஆகிய மூன்று திசைகளிலும் நுழைவு வாயில்கள் உள்ளன. இவ்வாயில்கள் கோட்டைக் காவல் தெய்வங்களால் காக்கப்பட்டு வந்தன. வடக்கு வாயிலை பைரவரும், தென்கிழக்கு வாயிலை கருப்பரும், தெற்கு வாயிலை அனுமான், சக்தி, கணபதி, ஆகிய தெய்வங்களும் காத்துவந்தன. இக்கோயில்களில் இன்றும் வழிபாடு நடைபெறுகிறது. தற்போது குன்றின்மேல் காணப்படும் உள்கோட்டை நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த உள்கோட்டை ஒரு குன்றின்மேல் இயற்கை அரண்களுடன் அமைந்திருக்கிறது, அதைச் சுற்றி மதில்கள் எழுப்பப்பட்டுள்ளது. உள்கோட்டைக்குச் செல்ல மேற்குப் புறம் ஒரு வாயில் உள்ளது. கிழக்கு வாயில் தற்பொழுது அடைக்கப்பட்டுள்ளது. உள்கோட்டையின் கருங்கல் மதிலைச் சுற்றி மேல் பகுதியில் கட்டப்பட்டுள்ள செங்கற்களால் ஆன கைப்பிடிச் சுவற்றில், ஆயுதங்களை வைத்துக் கொள்வதற்கும் ஆட்கள் மறைந்து கொள்ளவும் இடைவெளிகள் காணப்படுகின்றன. உள்கோட்டைக்குச் செல்லும் பாதி வழியில், வலது பக்கத்தில் பாறையிலேயே குடையப்பட்ட அறை ஒன்று (குகை) காணப்படுகின்றது. இது ஆயுதக் கிடங்காக இருந்திருக்க வேண்டும். அவ்வறைக்கு எதிர்ப்புறம் மேற்குநோக்கி குகைக்கோயில் ஒன்று உள்ளது. இதனுள் லிங்கம் ஒன்றைக் காணலாம். இந்த குகைக்கோயிலுக்கு செல்லத் தற்போது இரும்புப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது. கோட்டையின் மேல் 20 அடி உயரமுள்ள ஒரு மேடையில் பீரங்கி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பக்கத்தில் ஆழமான சுனை ஒன்றும் உள்ளது. கோட்டையின் மொத்த சுற்றளவு 40 ஏக்கராவாகும். கோட்டையின் மேல் தற்போது கட்டிடங்கள் எதுவும் காணப்படவில்லை. ஆனால் அங்கிருந்த கட்டிடங்கள் அழிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கோட்டையின் மேலிருந்து நோக்கின் பல மைல்களுக்கு அப்பால் வரும் எதிரிப் படைகளைக் கூட அடையாளம் கண்டுகொள்ள முடியும். இங்கு

கண்டெடுக்கப்பட்ட பீரங்கிகள், பீரங்கிக் குண்டுகள், சங்கிலிப்போர் உடைகள், உடை வாட்கள், பூட்டுகள் ஆகியன தற்போது புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கோட்டை அமைந்துள்ள குன்றின் தென் சரிவிலேயே வைணவக் குகைக்கோயிலும் அதனருகே சிவன்கோயிலும் அமைந்திருக்கின்றன. கீழே விஷ்ணு பள்ளிகொண்டிருப்பதைக் குறிக்கக் கோட்டையின் மேல் 10'x4'x2' அளவுள்ள மேடையொன்று கட்டப்பட்டுள்ளது.

1731-ல் மதுரையை ஆண்ட நாயக்கர்களிலேயே நடந்த அரசுரிமைப் போரில், அரசாண்டு கொண்டிருந்த அரசி மீனாட்சியை தஞ்சை மன்னரும், அரசுரிமைக்கு போட்டியிட்ட பங்காரு திருமலையை தொண்டைமான் மன்னரும் ஆதரித்தனர். இதன் காரணமாக, தஞ்சைத் தளபதி ஆனந்தராவ், புதுக்கோட்டைமீது படையெடுத்து அப்பகுதி முழுவதையும் தன்வசப்படுத்திக் கொண்டான். தொண்டைமான் மன்னர் விஜயரகுநாதராயத் தொண்டைமான் திருமயம் கோட்டைக்குச் சென்று ஒளிந்து கொண்டார். 15 மாதங்கள் முற்றுகையிட்டும் இக்கோட்டையைக் கைப்பற்ற முடியாமல் திரும்பினான் ஆனந்தராவ். இக்காலக் கட்டத்தில் தொண்டைமான் மன்னரின் ஆட்சி நிலைபெற திருமயம் கோட்டை முக்கிய காரணமாக இருந்தது. 1875-ம் ஆண்டிலிருந்து இக்கோட்டை கொடுங்குற்றம் புரிந்தோரை அடைக்கும் சிறைச்சாலையாகப் பயன் பட்டது.

நாட்டு வழக்கில், இக்கோட்டையை ஊமையன் கோட்டை என்றழைக்க மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, ஊமைத்துரை இக் கோட்டையைக் கட்டினான் என்பது! இரண்டாவதாக 1799-ல் நடந்த முதல் பாளையக்காரப் போருக்குப் பிறகு கட்டபொம்மனும், ஊமைத்துரையும் இக்கோட்டையில் வந்து தங்கி ஒளிந்து கொண்டிருந்தனர் என்பது. மூன்றாவது, பாளையங்கோட்டை சிறையிலிருந்து தப்பிய ஊமைத்துரை, மருது சகோதரர்களின் உதவியால் இங்கு மறைந்து வாழ்ந்து ஆங்கிலேயரை எதிர்த்து வந்தார் என்பது. இந்தக் கோட்டையும், கோட்டைக்குத் தொடர்புள்ள எல்லா வரலாறுச் சான்று நூல்களையும் குறிப்புகளையும் ஆராயந்தால் இவை வரலாற்று ஆதாரமற்ற செய்திகள் என்பது விளங்கும்.

பின், திருமயம் கோட்டையை கட்டியது யார்? திருமயம் கோட்டை இராமநாதபுரம் சேதுபதி மன்னர் கிழவன் சேதுபதியின் காலத்தில் 1676-ல் கட்டப்பட்டது என்ற செய்தியினை 1813-ம் ஆண்டு எடுக்கப்பட்ட புதுக்கோட்டை கணக்காய்வுக் குறிப்புக் **(Statistical Account of Pudukkottai)** கூறுகிறது. அப்போது இது மறவன்கோட்டை என அழைக்கப்பட்டது. புதுக்கோட்டை, மதுரை, ராமநாதபுரம் ஆகிய பகுதிகளின் வரலாற்று ஆவணங்கள் கூறும் செய்திகளையும், அயல்நாட்டார் இங்கு விட்டுச் சென்றுள்ள வரலாற்றுக் குறிப்புகளையும் தொடர்புபடுத்தி நோக்கும்போது, இக்கோட்டை 1676-ம் ஆண்டு வாக்கில் கட்டப்பட்டது என்னும் கருத்து ஏற்புடையதாகிறது. கோட்டையைக் கட்டிய சேதுபதி மன்னர் கோட்டைத் திறப்பு

விழாவின்போது 2 மனித உயிர்களைப் பலியிட்டதாக செப்பேட்டுச் செய்தியொன்று தெரிவிக்கிறது. கிழவன் சேதுபதிக்குப் பின் சேதுபதி தாண்டத்தேவன் என்பான் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், கிழவன் சேதுபதியின் மகன் பவானி சங்கருக்கும், தாண்டத் தேவனுக்கும் அரசுரிமைக் குறித்துப் போர் மூண்டது. இவ்வரசுரிமைப் போரில் புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர் ரகுநாதராயத் தொண்டைமானின் உதவியால் வெற்றிபெற்றத் தாண்டத் தேவன், திருமயம் கோட்டையைத் தொண்டைமான் மன்னருக்குச் சன்மானமாக வழங்கினான். 1723-ம் ஆண்டு முதல் இக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் பொறுப்பிற்கு வந்தது. ஆகவே, இக்கோட்டையைக் கட்டியது ஊமைத்துரை அல்ல என்பது விளங்கும்.

இரண்டாவதாக, முதல் பாளையக்காரப் போரில் தோல்வியுற்ற கட்டபொம்மனும் ஊமைத்துரையும் இந்த கோட்டைக்கு வந்து தங்கி ஒளிந்து கொண்டிருந்தனர் என்றும் அதனால் இக்கோட்டை ஊமையன் கோட்டை என்று அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இது தொடர்பான நிகழ்ச்சிகளை காண்போம்.

1799-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடந்த முதல் பாளையக்காரப் போரில், பானர்மேனால் தோற்கடிக்கப்பட்ட கட்டபொம்மன், தனது தம்பி ஊமைத்துரை மற்றுமவர் உறவினர் சிலரோடும் புதுக்கோட்டைப் பகுதிக்குத் தப்பி ஓடி வந்தார். கட்டபொம்மனைக் கண்டுபிடித்துக் கொடுக்குமாறு கலெக்டர் லூசிங்டன் 8.9.1799 அன்று ராஜா விஜயரகுநாதத் தொண்டைமானுக்குச் செய்தி அனுப்பினார். அதன்படி கட்டபொம்மன் ஊமைத்துரை மற்றும் 5 பேர் திருக்களம்பூருக்கு அருகிலுள்ள காளியாப்பூர் என்னும் இடத்தில் சர்தார் முத்துவைரவ அம்பலக்காரன் என்பவனால் கண்டுபிடிக்கப்பட்டு, காவலில் வைக்கப்பட்டு, பின்னர், கலெக்டர் லூசிங்டனின் வேண்டுகோளின்படி கட்டபொம்மனும், மற்றோரும் 10.10.1799 அன்று ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டனர். 17.10.1799ல் கட்டபொம்மன் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார். ஊமைத்துரையும் மற்றோரும் பாளையங் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். கட்டபொம்மனும் ஊமைத்துரையும் திருமயம் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த தாகவும், அதனால் ஊமையன்கோட்டை என்று அழைக்கப்படுவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. இவர்கள் திருமயம் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தனரா அல்லது புதுக்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தனரா என்பது குறித்து ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. ஆகவே இதையும் அறுதியான சான்றுகளுடன் கூற இயலவில்லை. திருக்களம்பூரிலேயே சிறை வைக்கப்பட்டிருந்த தாதகவும் நாட்டு வழக்கொன்று உள்ளது. இருப்பினும் இக்கோட்டையில் அவர்கள் சில நாள் தங்கியிருந்த காரணத்தினாலேயே இதை அவர்களுடன் தொடர்புபடுத்த முடியுமா?

மூன்றாவதாக, ஊமைத்துரை பாளையங்கோட்டைச் சிறையில் இருந்து தப்பிய பின் மருது சகோதரர்களின் உதவியால் இக்கோட்டையில் மறைந்து வாழ்ந்து ஆங்கிலேயரை எதிர்க்கப் பாளையக்காரர்களைத் திரட்டிக்கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது. இது நடந்திருக்க முடியாதென அறுதியிட்டுக் கூறலாம். ஏனெனில், அக்காலத்தில், திருமயம் கோட்டையை ஆயுதக் கிடங்காக பயன்படுத்திக்கொள்ள, ஆங்கிலேயருக்கு தொண்டைமான் மன்னர் அனுமதி வழங்கி இருந்தார் என ஆங்கிலேயரின் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

ஊமைத்துரையும் மற்றோரும் 2.2.1801-ல் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பிச்சென்று இடிந்து தரைமட்டமாய்ப்போன பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை ஒருமாத காலத்தில் கட்டி முடித்து, ஏனைய புரட்சிப் பாளையக்காரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்க்கும் பணியில் ஈடுபட்டனர். ஆகவே ஊமைத்துரை இக்காலத்தில் திருமயம் வந்திருக்க வாய்ப்பில்லை. 22.5.1801-ல் லெப்டினன்ட் கர்னல் அக்னுயு பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டுத் தகர்த்தான். தோல்வியுற்ற ஊமைத்துரை மருது சகோதரர்களிடம் அடைக்கலம் புகுந்தார். மருது சகோதரர்களின் உதவியால் அவர் சில காலம் தேவகோட்டை அருகிலுள்ள சங்கரபதிக்கோட்டையில் தங்கியிருந்தார். திருமயம் கோட்டையில் அல்ல. ஊமைத்துரையைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி லெப்டினன்ட் கர்னல் அக்னுயு மருது சகோதரர்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் இது பயனின்றி போகவே 31.7.1801-ல் காளையார்கோவில் முற்றுகையிடப்பட்டது. இதுவே இரண்டாம் பாளையக்காரப் போராகும். இக்காலத்தில் திருமயம் கோட்டை ஆங்கிலேயர்களின் ஆயுதக்கிடங்காக இருந்தது என ஆங்கிலத் தளபதி வில்லியம் ப்ளாக்பர்ன், கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ் ஆகியோரின் குறிப்புகள் கூறுகின்றன. ஆகவே ஊமைத்துரை தனது பாதுகாப்பிற்கு எதிரியின் ஆயுதக் கிடங்கிற்குள் நுழைந்து இருக்க முடியாது. 1801-ம் ஆண்டு அக்டோபர் முதல்நாள் தோற்கடிக்கப்பட்ட மருது சகோதரர்கள், அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரையும், ஏனைய புரட்சிப் பாளையக்காரர்களும் பாளையங்கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்.

ஆகவே தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளை ஆராயும்போது ஊமைத்துரை, திருமயம் கோட்டைக்கு வரவே இல்லை என்பது விளங்கும். இக்கோட்டையை ஊமையன் கோட்டை என்றழைப்பது நாட்டு வழக்கே தவிர இதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதுமில்லை என அறுதியிட்டுக்கூறலாம்.

தற்போது இக்கோட்டை இந்திய தொல்பொருள் துறையினரால் புராதனச் சின்னமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

(இந்நூல் ஆசிரியர், 2.9.1970 'தினமலர்' நாளிதழ், 1.7.1974 'தமிழரசு' ஆகியவற்றில் எழுதிய கட்டுரையிலிருந்தும், 25-05-1972-ல் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து பேசிய உரையிலிருந்தும்)

# 31. காட்டுபாவா பள்ளிவாசல்

காட்டுபாவா பள்ளிவாசல் திருமயத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் திருப்பத்தூர் சாலையில் உள்ளது. இங்குள்ள தர்காவில் அடக்கமாகியிருக்கும் பாவா பக்ருதீன் அவ்லியா ''காட்டுபாவா'' என அழைக்கப்பட்டதால் இவ்வூருக்கு காட்டுபாவா பள்ளிவாசல் எனப் பெயர் ஏற்பட்டது. இங்குள்ள காட்டுபாவா தர்காவிற்கு முஸ்லீம்களும் இந்துக்களும் பெருமளவில் வந்து வழிபடுகின்றனர்.

''காட்டுபாவா காரணீகம்'' என்னும் பாடலில் காட்டுபாவா பற்றிய வரலாறு காணப்படுகிறது. 17-ம் நூற்றாண்டில், அரேபிய நாட்டைச் சேர்ந்த சையது பக்ருதீன் அவ்லியா என்னும் முஸ்லீம் மகான் திருமயத்திற்கு அருகில் உள்ள காட்டில் தங்கியிருந்தார். இவர் நாகூரில் அடக்கமாகி இருக்கும் ஷாகுல் ஹமீது அவ்லியா அவர்களுக்கு பேரர் உறவுமுறை உள்ளவர். அப்போது, ஒரு நாள், புதுக்கோட்டையில் நடைபெற்ற தசரா திருவிழாவைப் பார்த்துவிட்டுத் தங்கள் ஊருக்கு அக்காட்டுவழியாகச் சென்றுகொண்டிருந்த ஆறு பிராமணப் பெண்களும் இரண்டு குழந்தைகளும், இந்த மகானின் பாதுகாப்பை வேண்டினர். அவரும் அப்பெண்களுக்கு துணையாகச் சென்றுகொண்டிருந்தார். வழியில் அவர்களைப் பதினான்கு கள்வர்கள் வழி மறித்தனர். மகான் அவர்களுடன் சண்டையிட்டு ஏழு பேர்களைக் கொன்றுவிட்டார். மீதமிருந்த ஏழு பேர்களும் தப்பிச்சென்று அருகிலிருந்த புதர்களில் பதுங்கிக்கொண்டனர். அவர்களுள் ஒருவன் இந்த மகானின் மீது அம்பெய்தினான். கோபமுற்ற அவர், அந்த ஏழு பேர்களின் கண்களையும் குருடாக்கிவிட்டார். தங்கள் தவறை உணர்ந்த அந்த கள்வர்கள், தங்களை மன்னித்து கண்பார்வை அளிக்கும்படி வேண்டினர். ஒருவருக்கு மட்டும் பார்வையை அளித்து அவருடன் வந்த ஆறு பெண்களையும், குழந்தைகளையும் பத்திரமாக அவர்களது ஊரில் சேர்த்துவிட்டு வந்தபின் மற்றவர்களுக்கு கண்பார்வையை கொடுப்பதாக கூறினார். அவரது கட்டளைப்படி அப் பெண்களை அவர்களது சொந்த ஊரில் சேர்ப்பித்துவிட்டு வந்த உடன் மீதமிருந்தவர்களுக்கும் கண்பார்வையைக் கொடுத்துவிட்டு அந்த மகான் இறந்துவிட்டார். இந்நிகழ்ச்சி நடந்த இடம் வெட்டுபாறை என்று அழைக்கப்படுகிறது. இவ்விடம் தர்காவிற்கு அருகில் உள்ளது. தர்காவிற்கு அருகிலுள்ள குளம் பாப்பாத்தி ஊரணி என்று அழைக்கப்படுகிறது. காட்டு பாவாவினால் காப்பாற்றப்பட்ட பிராமணப் பெண்களின் நினைவாக இவ்வாறு பெயரிடப்பட்டிருக்கலாம்.

காட்டுபாவா கள்ளர்களால் தாக்கப்பட்டு இறந்ததால், கள்ளர் இனத்தின் சார்பில் இந்த மகானுக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு இப்பகுதி கள்ளர் குலப் பெருமக்கள் இந்த தர்காவின் சந்தனக்கூடு விழாவில் பெரும்பங்கு வகிக்கின்றனர். காட்டுபாவா தர்காவின் நிர்மாணப் பணிகளுக்கு ஆற்காடு நவாப் முகமதலியும் அவரது பரம்பரையினரும் நிறைய கொடையளித்துள்ளனர். புதுக்கோட்டை

தொண்டையமான் மன்னர்கள், ராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் ஆகியோரும் இந்த தர்காவிற்கு நிறைய கொடையளித்துள்ளனர். 1696-ல் கிழவன் சேதுபதியின் காலத்தில் தர்காவிற்கு கொடையளிக்கப்பட்ட செய்தி இங்குள்ள ஒரு கல்வெட்டினால் அறியப்படுகிறது.

இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக நமது மாவட்டத்தில் திகழும் இடங்களில் முக்கியமானது காட்டுபாவா பள்ளிவாசல் ஆகும்.

## 32. பொன்னமராவதி

பொன்னமராவதி புதுக்கோட்டையிலிருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் உள்ளது. கார்காத்த வெள்ளாளர்கள் ஆரம்பகாலத்தில் குடியேறிய இடங்களுள் இதுவும் ஒன்றாகும். மதுரை நாயக்கர்களின் ஆட்சிக் காலத்தில் பொன்னன், அமரன் என இருவர் பொன்னமராவதியை தோற்றுவித்தார்கள் என பழைய ஓலைச்சுவடி ஒன்று தெரிவிக்கிறது. ஆனால் இதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பொன்னமராவதி என்ற பெயர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. வேள்பாரி ஆண்ட பரம்பு நாட்டின் ஒரு பகுதியாக பொன்னமராவதியும், பிரான்மலையும் திகழ்ந்தன.

பொன்னமராவதி பாண்டிய நாட்டின் வடக்கு எல்லையில் அமைந்திருந்ததால் பல அரசியல் நிகழ்ச்சிகள் இங்கு நடந்துள்ளன. இங்கிருந்து, திருப்பத்தூர், கீழாநிலை, அறந்தாங்கி, மணமேல்குடி ஆகிய இடங்களுக்கு பெருவழித் தடங்கள் இருந்தன. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் இப்பகுதி சோழர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. முதலாம் குலோத்துங்கசோழன் காலத்தில் இப்பகுதி பாண்டியரிடமிருந்து சோழர்களால் கைப்பற்றப்பட்டது. இரண்டாம் குலோத்துங்கன் மற்றும் மூன்றாம் ராஜராஜன் காலத்திலிருந்து இப்பகுதியை சோழர்களின் மேலாண்மைக்குட்பட்டு நிஷத ராஜாக்கள் என்னும் சிற்றரசர்கள் ஆட்சி செய்துவந்துள்ளனர் எனக் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இங்குள்ள பழைய சிவன்கோயில், ராஜேந்திர சோழ கேரளன் நிஷத ராஜா என்பான் (கி.பி.1145க்கும் 1165க்கும் இடையில்) முதலாம் குலோத்துங்க சோழன் நினைவாகக் கட்டியதாக இக்கோயில் கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகிறது. கி.பி. 15ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இப்பகுதியை நிஷத ராஜாக்கள் ஆண்டு வந்துள்ளனர். பின்னர் வாணாதரையர்களின் ஆளுகைக்குட்பட்டது. மூன்றாம் ராஜராஜசோழன் காலத்து (கி.பி.1216-57) கல்வெட்டொன்று, வீரமாகாடன பொன்பரப்பினான் என்னும் வாணாதரைய சிற்றரசனைக் குறிப்பிடுகிறது.

கி.பி.12ம் நூற்றாண்டில் இரண்டாவது பாண்டியப் பேரரசில் பொன்னராவதி, ஒரு மண்டலத்தின் தலைமையிடமாக விளங்கியது. இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சம், கி.பி.13ம் நூற்றாண்டில் பொன்னமரவாதியில் மூன்று அடுக்குகளைக்கொண்ட அரண்மனை

இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இரண்டாம் ராஜராஜசோழனின் ஆட்சிக்காலத்தில் பாண்டியர்களுக்குள் (மதுரையில்) அரசுரிமைக் குறித்து உள்நாட்டுப் போர் மூண்டது. அரசுரிமைக்குப் போட்டியிட்ட இருவருள், பராக்கிரமபாண்டியன், இலங்கை மன்னனின் உதவியைப் பெற்றான். மற்றவனான குலசேகரன், சோழ மன்னரின் ஆதரவைப் பெற்றான். இதற்கிடையில் பராக்கிரமப் பாண்டியன இறந்துவிடவே, அவனது மகன் வீரபாண்டியன் இலங்கையுடன் ஏற்பட்ட தொடர்பைத் தொடர்ந்தான். இலங்கைத் தளபதிகளான, லங்கபுரனும், ஜகத்விஜயனும் வீரபாண்டியனுக்கு ஆதரவாக தமிழகத்தில் பல போர்கள் புரிந்திருக்கின்றனர். அப்போது இங்கு நடைபெற்ற ஒரு போரில் பொன்னமராவதியிலிருந்த அரண்மனை தீக்கிரையாக்கப்பட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. 13ம் நூற்றாண்டில் இப்பகுதி பாண்டியரின் ஆளுகைகக்குட்பட்டிருக்க வேண்டுமெனத் தெரியவருகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1 (1216) காலத்து திருக்காளக்குடி கல்வெட்டொன்று பாண்டிய மன்னர் இங்கிருந்த அரண்மனையின் பள்ளியறைக் கூடத்தில். மழவராயன் என்னும் அரியாசனத்தை வைத்திருந்ததாகத் தெரிவிக்கிறது.

கி.பி. 14-15-ம் நூற்றாண்டுகளில் வாணாதரையர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதி 16-ம் நூற்றாண்டில் அறந்தாங்கித் தொண்டைமான்களின் ஆட்சியிலிருந்தது. 17-ம் நூற்றாண்டில் கரிசல்பட்டி-வாராப்பூர் பொம்மநாயக்கர்களின் ஆளுகையிலிருந்தது. பின்னர் சேதுபதிகளின் ஆட்சிக்குட்பட்டது. கிழவன் சேதுபதியின் காலத்தில் புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கு திருமயம் பகுதிகள் வழங்கப்பட்டபோது பொன்னமராவதியும் தொண்டைமானின் ஆளுகைக்கு வந்தது.

ராஜேந்திர சோழச்சுரம் நல்ல வேலைப்பாடுடன் அமைந்த ஒரு கோயிலாகும். கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், அனைத்தும் ஒரே கலையமைப்பில் உள்ளன. கருவறையில் தெற்கு மாடத்தில் ஞான தட்சிணாமூர்த்தியும், வடக்கே பிரும்மாவும் காட்சியளிக்கின்றனர். கோயிலில் 17 கல்வெட்டுகள் உள்ளன. இரண்டாம் ராஜராஜசோழன் காலத்திலிருந்து நாளிட்ட ஐந்து கல்வெட்டுகளும், பாண்டியர்களது கல்வெட்டுகள் பத்தும், வாணாதரையரின் கல்வெட்டுகள் இரண்டும் காணப்படுகின்றன.

மற்றொரு கோயிலான அழகிய பெருமாள் (சுந்தரராஜா) கோயிலில் 8 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்ததாகும். கி.பி. 1435-ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று இப்பகுதியில் 1436, 1450, 1451 ஆகிய ஆண்டுகளில் எற்பட்ட கடுமையான பஞ்சம் குறித்த செய்திகளைத் தருகின்றன.

இங்கு ஒரு கோட்டை இருந்து அழிந்ததற்கான அடையாளங் களும் தென்படுகின்றன.

# 33. கீழாநிலை

கீழாநிலை புதுக்கோட்டையிலிருந்து 33 கி.மீ. தொலைவில் உள்ளது. ''கீழாநிலை'' என்றால் கிழக்குவாசல் எனப் பொருள்படும். இதன் அருகில் மேற்கே உள்ள ஊர், மேலநிலை என்று அழைக்கப் படுகிறது. இவற்றிற்கு இடையில் உள்ள ஊர், புதுநிலை ஆகும். கி.பி.12-ம் நூற்றாண்டிலேயே இவ்வூர் தமிழக அரசியல் வரலாற்றுடன் தொடர்புடையதாகும். இவ்வூரைப் பற்றிய குறிப்புகள் இலங்கையின் காவியமான மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகிறது.

மகாவம்ச குறிப்புப்படி அக்காலத்தில் பொன்னமராவதியிலிருந்து கீழாநிலை வழியாக மணமேல்குடிக்கு (கி.பி.10-11ம் நூற்றாண்டி விருந்து) பெருவழித்தடம் இருந்தது. இலங்கை நாட்டு படைவீரர்கள் தென்னிந்திய படையெடுப்பின்போது இவ்வழியாகவே சென்றதாக மகாவம்சம் தெரிவிக்கிறது. 12-13ம் நூற்றாண்டுகளில் கீழாநிலையிலிருந்து அறந்தாங்கிக்கும் திருப்பத்தூருக்கும், பொன்னமராவதிக்கும் இருந்த வழித்தடங்களே இன்றும் உபயோகத்தில் இருப்பதாகும். 12-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பராக்கிரம பாண்டியனுக்கு ஆதரவாக இருந்த இலங்கைத் தளபதி லங்கபுரன், அரசுரிமைக்குப் போட்டியிட்ட குலசேகர பாண்டியனைத் தோற்கடித்து, (போரில் பராக்கிரம பாண்டியன் கொலையுண்டதால்) பாரக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியனை மதுரையின் ஆட்சிப்பீடத்தில் அமர்த்தினான். இப்போர்கள் தொடர்பாக கீழாநிலையிலும் பெரும் சண்டை நடந்ததாகவும் அதில் நிறைய வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் மகாவம்சம் கூறுகிறது. பிற்காலத்தில் தஞ்சாவூர் நாயக்கர்களின் முக்கிய அரணாக விளங்கியது கீழாநிலை. தஞ்சாவூரின் கடைசி நாயக்க மன்னன் விஜயராகவா இந்த கோட்டையைக் கட்டியதாக தெரியவருகிறது.

1813-ம் ஆண்டில் தொகுக்கப்பட்ட புதுக்கோட்டை கணக்காய்வுக்குறிப்பு கீழாநிலைக்கோட்டை 1683-ம் ஆண்டுவாக்கில் ராமநாதபுரம் சேதுபதி மன்னர் கிழவன் சேதுபதி கட்டியதாகத் தெரிவிக்கிறது. இக்காலத்தில் கீழாநிலைக் கோட்டை ராமநாதபுரம் சேதுபதிகள் வசம் இருந்தது உண்மை எனினும், அதற்கு முன்பே அங்கு கோட்டை இருந்திருக்க வேண்டுமென்பதும், அக்கோட்டையை சேதுபதி புதுப்பித்திருக்கலாம் என்பதும் தெரிய வருகிறது.

கீழாநிலைக்கோட்டை ராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய அரசுகளின் பொறுப்பில் மாறிமாறி இருந்த வந்துள்ளது. சேதுபதி மன்னர்களுக்கு இடையே 1723-ல் நடைபெற்ற அரசுரிமைப்போரில் தொண்டைமான், தண்டத்தேவன் என்பானை ஆதரித்தார். அவன் வெற்றி பெற்றால் கீழாநிலையைத் தொண்டைமானுக்கு அளிப்பதாகவும் உறுதியளித்திருந்தான். ஆனால் அது கைக்கூடவில்லை. பின்னர் தஞ்சாவூர் மாராட்டிய மன்னர் துக்கோஜி (1729-39) கீழாநிலையை தொண்டைமானுக்கு விற்றார். பின்னர் இது மீண்டும் தஞ்சாவூர் மன்னர்களின் கைக்கே சென்றுவிட்டது. 1749-ல் கீழாநிலைப் பகுதியில்

போரில் ஈடுபட்டிருந்த தஞ்சாவூர் தளபதி மனோஜி தன் விருப்பப்படி இந்தக் கோட்டையை தொண்டைமானுக்கு அளித்துவிட்டான். ஆனால் தஞ்சாவூர் மன்னர் இந்த ஏற்பாட்டை அங்கீகரிக்க மறுத்துவிட்டார். ஆகவே மீண்டும் 1756-ல் தஞ்சாவூர் பொறுப்பிற்குச் சென்றது. 1781-ல் ஹைதர் அலியின் படை இக்கோட்டையைப் பிடித்துக்கொண்டது. ஆனால் ஹைதரின் படையைத் தோற்கடித்து தொண்டைமான் இக்கோட்டையை மீட்டார். பின்பு தஞ்சாவூரின் பகுதி முழுவதும் ஆங்கிலேயரின் ஆளுகையின் கீழ்வந்தபோது கீழாநிலைக்கோட்டை தொண்டைமானுக்கு அளிக்கப்பட்டது.

கீழாநிலைக்கோட்டை சுமார் 40 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்ததாக பதிவேட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. கோட்டை முழுவதும் செம்புறைக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. தற்போது இங்கு கோட்டை ஏதும் இல்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்பட்ட கோட்டைச் சுவர்களின் இடிபாடுகள் கூட இன்று சுவடு தெரியாமல் மறைந்துவிட்டன. கோட்டை இருந்த எல்லைக்குள் அனுமார் கோயில் ஒன்றும், அரியநாயகி கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோட்டையிலிருந்து ராமநாதபுரத்திற்கு சுரங்கப்பாதை செல்வதாக இப்பகுதி மக்களிடையே ஒரு கதை விளங்குகிறது.

## 34. பொன்பேத்தி

அறந்தாங்கி வட்டம் பொன்பேத்தி கிராமமும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் சோழர்களின் ஆட்சியில் புத்தமத மையமாகத் திகழ்ந்த இடங்களாகும்.

பொன்பேத்தியை கி.பி. 11-ம் நூற்றாண்டில் ஆண்ட புத்தமித்திரன் என்னும் மன்னன், சோழப் பேரரசன் வீரராஜேந்திரன் (கி.பி.1062-1070) வேண்டுகோளின்படி வீரசோழியம் என்ற இலக்கண நூலை எழுதினான்.

வீரசோழியம் சிறந்த தமிழ் இலக்கண நூலாகும். இதற்கு பெருந்தேவனார் உரை எழுதியள்ளார். நூலின் பாசுரத்தில் வீரராஜேந்திரனின் மெய்கீர்த்திகளும், அவனது வெற்றிகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. புத்தமித்திரன் பொன்பற்றியின் (பொன்பேத்தி) மன்னன் எனவும் கண்டுள்ளது. வீரசோழியம் முழுவதும் கட்டளைக் கலித்துறையில் அமைந்தது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து பிரிவுகளைக் கொண்டது. தமிழ் இலக்கண விதிகளுக்கு இந்நூல் மிகவும் முக்கியமானதாகத் திகழ்கிறது.

பொன்பேத்திக்கு அருகில் கரூர் என்ற கிராமம் உள்ளது. இங்கு புத்தர் சிலை ஒன்று காணப்படுகிறது. சிற்ப வேலைப்பாட்டு அமைதியைக் கொண்டு இது சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும் என அறிஞர்கள் கருதுகின்றனர். கரூரைச் சுற்றியுள்ள வேறு சில கிராமங்களிலும் இதுபோன்ற சிற்பங்கள் காணப்படுவதைக் கொண்டு இப்பகுதி முழுவதும் சோழர் ஆட்சியில் புத்தமதம் பரவி இருந்திருக்க வேண்டுமென்பது தெரியவருகிறது.

# 35. ஆவுடையார் கோவில்

ஆவுடையார்கோவில் அறந்தாங்கியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் 'ஆவுடையார்' என்று அழைக்கப்படுகிறார். இதைக்கொண்டே இவ்வூரும் ஆவுடையார்கோவில் என்று வழங்கப்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் இவ்வூரை திருப்பெருந்துரை என்று குறிப்பிடுகின்றன.

மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த இரண்டாம் வரகுண பாண்டிய மன்னனின் (862-880) அமைச்சராக இருந்த மாணிக்கவாசகர், மன்னனுக்கு குதிரை வாங்குவதற்கு கொண்டுவந்த பணத்தைக் கொண்டு இங்கு சிவபிரானுக்கு கோயில்கட்டி ஆவுடையார் என்று பெயரிட்டார் என கோயில் புராண நூல்கள் கூறுகின்றன. மன்னனின் கோபத்திற்கு ஆளான மாணிக்கவாசகரைக் காப்பாற்ற இறைவன் நரிகளைப் பரிகளாக மாற்றியதையும் இதுதொடர்பான புராணக் கதைகளையும் திருவிளையாடற்புராணம் கூறுகிறது.

ஆவுடையார் கோவில், ஆத்மநாதசாமி கோயில் மற்ற கோயில்களில் காணப்படாத பல சிறப்பு அம்சங்களைப் பெற்றிருக்கிறது. தமிழகத்திலுள்ள கோயில்கள் பொதுவாக கிழக்குமுகம் நோக்கியே இருக்கும். சில மேற்கு முகமாகவும், வேறுசில வடக்கு முகமாகவும் அமைந்துள்ளன. ஆனால் ஆவுடையார்கோயில் தெற்கு முகமாக அமைந்துள்ளது (குளித்தலை கோயில் மற்றொன்று). தமிழகத்திலுள்ள கோயில்களிலெல்லாம் உருவ வழிபாடுதான்! ஆனால் இந்த கோயிலில் மட்டும்தான் அருவ வழிபாடு நடைபெற்று வருகிறது!!. மூலஸ்தானத்தில் (லிங்கம் போன்ற) சிலைகள் ஏதும் இல்லை. எங்கும் நிறைந்த இறைவன் அருவமாகவே வழிபடப்படுகிறார்.!!!

இக்கோயிலின் மண்டபங்களில் காணப்படும், தாழ்வாரம் காணத்தக்கதாகும். ஒரு வீட்டிற்கு தாழ்வாரம் அமைக்கும்போது பனங்கை, (அல்லது மரத்தில்) பக்கவாட்டு கைகள், அமைத்து அவற்றை இரும்பு கம்பிகளால் இணைத்து அதன்மீது குறுக்குக் சட்டங்கள் அடித்து, அதன்மீது ஓடு வேய்வது வழக்கம். இதேபோல் இந்த கோயில் மண்டப தாழ்வாரங்களை கல்லிலே இழைத்துக் கட்டி கல்லை கவிபாட வைத்திருக்கிறார்கள். தாழ்வாரத்தைச் சுற்றியுள்ள விளிம்புகளில் உள்ள கல் பலகைகளில் உள்பாகத்தை தேக்கு மரச்சட்ட கை போல் இழைத்து அதிலே குறுக்காக, நான்கு பட்டை, ஆறு பட்டை, உருண்டை கம்பிகளும் இணைத்து சேர்த்து அதிலே குமிழ் உள்ள ஆணிகள் அறைந்திருப்பதுபோல் - எல்லாமே கல்லில் செய்து - அதன்மேல் மெல்லிய ஓடு வேய்ந்திருப்பதுபோலவும் செய்திருப்பது சிற்பக்கலையை இன்னதென்று அறியார்க்கும் வியப்பளிக்கும் ஒன்றாகும். ஒரு கல்லும்

மற்றொரு கல்லும் எந்த இடத்தில் எப்படி சேர்க்கப்பட்டுள்ளன என்பதை கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு பல கற்களை இணைத்து தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன இந்த தாழ்வாரம் எனப்படும் கொடுங்கை கூரை. இந்த கொடுங்கையில் உள்ள ஒரு கல் $13^{1}/_{2}$ அடி நீளமும் 5 அடி அகலமும் $2^{1}/_{2}$ அடி கனமும் உள்ளதாகும். இந்த $2^{1}/_{2}$ அடி. தாழ்வாரத்தின் விளிம்பிற்கு வரும்போது 1 அங்குல கனமுள்ள மேலோடு அளவிற்கு சன்னமாக செதுக்கி அமைக்கப்பட்டுள்ளது நம்மை வியப்பிலாழ்த்துகிறது! இதனால்தானோ என்னவோ, சிற்ப வேலை செய்யும் சிற்பிகள் ஆவுடையார் கோயில் கொடுங்கை நீங்கலாக என ஒப்பந்தம் செய்து கொள்கிறார்களோ என எண்ணத்தோன்றுகிறது.

இந்த கோவிலில் மற்ற கோயில்களில் இருப்பதுபோல் கொடிமரம் இல்லை! நந்தி இல்லை! மூலவருக்கு உருவமும் இல்லை! அம்மன் சன்னதியிலும் உருவம் இல்லை! இங்கு வருகின்ற பக்தர்களுக்கு மற்ற கோயில்களில் உள்ளதுபோல் தீப ஆராதனையினை தொட்டு வணங்க அனுமதிப்பதும் இல்லை. மாணிக்கவாசகர் சோதியிலே கலந்துள்ளார் என்பதாலே தீபம் தருவதில்லை. கருவறைக்கு முன்னால் படையல் என்கிற பெரிய திட்டுக்கல் இருக்கிறது. இந்த கல்லில்தான் ஆறுகால பூசைக்கும் உரிய அமுதினை வடித்துக்கொட்டி வைக்கிறார்கள். அதாவது அமுதின் ஆவி மட்டுமே ஆண்டவனுக்கு காணிக்கையாக்கப்படுகிறது எனப் பொருள்படும். இக்கோயிலில் படையல் அமுது படைப்பது, பச்சைஅரிசியில் இல்லாமல் புழுங்கல் அரிசில்தான் செய்யப்படுகிறது. அத்தோடு பாகற்காயும். கீரையும் சேர்த்து படைக்கப்படுவதும் இங்கு மட்டும்தான்.

மூலவரின் கோயில் விமானம் பொன்னோடு வேயபபட்டது. தலவிருட்சம் குருந்த மரம் ஆகும். முகப்பில் உள்ள ராஜகோபுரம் 96 அடி உயரம் உடையது. வாயில் முகப்பிலிருந்து மொத்தம் ஆறு மண்டபகங்களை கொண்டது இக்கோயில். இங்குள்ள சிற்பங்கள் நம்மை மிகவும் கவர்ந்திழுக்கின்றன!. நகம், தலைமுடிகூட சன்னமாக நீவிவிடப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் வடிக்கப்பட்ட இந்த சிற்பங்களில் காணப்படும் ஆபரணங்கள், ஆடைகள், பெண்களின் அலங்கார வகைகள், காலணிகள் ஆகியவையெல்லாம், இன்று நம்மிடையே வழக்கிலிருப்பதைப் பார்க்கும்போது நமது நாட்டுக்கலைஞர்களின் காலத்தைக் கடந்த கற்பனை ஓட்டத்தை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை! முன் மண்டபத்தில் ஒரே கல்லில் செய்யப்பட்ட 12 அடி உயரமுள்ள அகோர வீரபத்திரர், ரணவீரபத்திரர் ஆகிய சிற்பங்கள் இக்கோயில் சிற்ப வேலைத் திறனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. கலையழகுமிக்க குதிரை வீரர்கள் சிலைகளும் (சாலையைநோக்கி) ஆயிரங்கால் மண்டபத்தில் வரிசையாக அமைந்துள்ள உக்கிரநரசிம்மர். பத்ரகாளி, ஊர்த்தவதாண்டவர், பிட்சாடனர், ரிஷபாந்தகர்,

சங்கரநாராயணர் போன்ற சிற்பங்களும் நமது நாட்டு சிற்பக்கலைக்கு இலக்கணமாக விளங்கக் காண்கிறோம்.

சிவபெருமான் நரியைப் பரியாக்கியது, இந்த கோயிலுடன் தொடர்புடைய கதையாதலின், ராவுத்தர் மண்டபம் என்னும் மண்டபத்தில் சிவபெருமான் குதிரை மீது அமர்ந்து வருவதுபோன்ற சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அடுத்த உள் மண்டபங்களில் உள்ள சிற்பங்கள் நமக்கு மிகவும் வியப்பூட்டுவதாக அமைந்துள்ளன. இங்கு அமைச்சராக இருந்த மாணிக்கவாசகரையும், ஆண்டியாக மாறிய மாணிக்கவாசகரையும் உருவ பேதமின்றி வடித்திருக்கிறான் சிற்பி. ஓலையினால் செய்த கூடையினை இடுப்பில் இடுக்கிக்கொண்டு, குறிசொல்ல வரும் வேடுவச்சி - மலைக்குறத்தியின் சிலை-தமிழகத்து சிற்பக்கலைக்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்த சிலையை எப்படித்தான் செய்திருப்பானோ அந்த சிற்பி! அத்தனை அழகு! நேரில் கண்டுதான் ரசிக்கவேண்டும். இதுபோன்று கலைவளம் மிக்க சிற்பங்கள் இன்னும் ஏராளம்!!.

கோயில் மண்படச்சுவர்களில் பல இடங்களில் மாணிக்கவாசகரின் வரலாறு மற்றும் சிவபுராணக் காட்சிகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளன இந்த ஓவியங்கள் கி.பி.17-18-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. மாணிக்கவாசகருக்கென்று தனி சன்னதி உள்ளது. எல்லா கோவில்களிலும் உற்சவ மூர்த்தி இறைவனாக இருக்க இந்த கோயிலில் மாணிக்கவாசகர் உற்சவ மூர்த்தியாக இருக்கிறார்.

கோயில் மண்டபங்கள் ஆனந்த சபை, தேவ சபை, கனகசபை, சிற்சபை, நடனசபை, பஞ்சாட்சரம் என்று அழைக்கப்படுகின்றன. கோயிலின் கருவறைப் பகுதியை மட்டும் மாணிக்கவாசகர் கட்டியதாகவும் அதைத்தொடர்ந்து பிற்காலத்தில் ஆண்ட பாண்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள் புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள், பாலையவனம் ஜமீன்தார்கள், ராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் ஆகியோரால் அவ்வப்போது கட்டப்பட்ட ஆறு மண்டபங்களும் இணைந்து பெரிய கோயிலாக காட்சியளிக்கிறது. கோயிலைக் கட்டிய மன்னர்களின் சிலைகள் பலவும் மண்டபங்களில் வடிக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் இக்கோயிலுக்கு கொடையாக பல கிராமங்களை அளித்துள்ளனர். இக்கோயிலில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. காலத்தால் முந்திய கல்வெட்டு சடையவர்மன் வீரபாண்டியன் காலத்தைச் சேர்ந்ததாகும். சக ஆண்டு 1521 கி.பி. 1891-ம் ஆண்டு இக்கோயில் குடமுழுக்குத் திருவிழா நடைபெற்றுள்ளதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன. இதைத்தொடர்ந்து 1990-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் குடமுழுக்குத் திருவிழா நடைபெற்றது. இக்கோயில் தற்போது திருவாடுதுரை ஆதீன நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

# 36. நாட்டுப் பாடல்கள், கலைகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கரக ஆட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், மாடு ஆட்டம், புலிவேசம், சிலாக்குத்தி ஆட்டம் (நேர்த்திக்கடனுக்கு), பொய்க்கால் குதிரை ஆட்டம், தப்புக்கொட்டல், நையாண்டிமேளம் வாசித்தல் போன்ற ஆட்டங்களும், சிலம்பாட்டம், சுருள்கத்தி வீசுதல் (வீர விளையாட்டாகக் கொள்ளலாம்) ஆகிய விளையாட்டுகளும், குளவை போடுதல், நடவுப்பாட்டு, ஏற்றப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, தாலாட்டு (இது ராராட்டு என்றும், ரோராட்டு என்றும் கிராமிய வழக்கில் உச்சரிக்கப்படுகிறது) நலுங்குப்பாட்டு, ஒப்பாரிப்பாடல், கும்மி ஆகிய பாடல் வகைகளும், வழக்கில் உள்ளன. கரக ஆட்டம் தொடங்கி, நையாண்டி மேளம் போன்ற கிராமியக் கலைகளைப் பெரும்பாலும் தொழில் கலைஞர்கள் தனியாகப் பிரித்து எடுத்துக் கொண்டுவிட்டனர். ஆனால் இன்னும் கிராமிய மண்வாசனையை அப்படியே சுமந்து பாடி வருகிற பாடல்கள் ஏராளமாக நமக்குக் கிடைக்கின்றன. தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் நூல் வடிவில் வந்துவிட்ட போதிலும் புதுக்கோட்டை மாவட்டத்தின் கிராமியப் பாடல்கள் நூல் வடிவம் பெறவில்லை.

பெரும்பாலும் புதுக்கோட்டை கிராமியப் பாடல்களின் வடிவமைப்பும், செய்தி வெளிப்பாடும் அந்தந்த கிராமங்களில் கோயில் கொண்டுள்ள தெய்வங்களை துதித்துப் பாடுவதாகவும், அத்தெய்வங்களின் அருள்மிகு கடாட்சங்களை புகழ்ந்து பாடுவதாகவும், கணவன்-மனைவி வாழ்க்கையையும் காதல்-பிணக்கு ஆகிய செய்திகளையும் நிரவி பாடுகின்ற பாடல்களாகவும் உள்ளன. அத்தகைய பாடல்களில் ஒன்றுதான் கீழ்வரும் மீனவர் பாடலாகும்.

ஏலே தண்டம்மா ஏலே தண்டு...
ஏலே தண்டம்மா ஏலே தண்டு...
மலைக்கு மலை மண்ணெடுத்து
மகா பூஜைதான் செய்யயிலே
பூஜை முகத்திற்குப் போனேனென்று சொல்லிடவே
போன இடந்தெரிய பொற்கொடியே வாராயோ
தேடி அலைஞ்சேனடி தேவி முகம் காணாமல்
நானும் உனைத்தேடி நாளாகிப் போனதையோ!

மற்றொரு பாடல்:

"ராசா வருவாரென்று ரோசாப்பூ வாங்கி வச்சே(ன்)
ராசா வரவுமில்லே ரோசாப் பூ வாடலாச்சே
மந்திரி வருவாரென்று மல்லியப்பூ வாங்கி வச்சே(ன்)
மந்திரி வரவுமில்லே மல்லியப்பூ வாடலாச்சே
காட்டுக்கொடி பிடுங்கி கடுகனவே ஓடி வந்தே(ன்)
ஓடிவந்தார் ஆவுடையார் ஒளிந்திருந்தார் குருந்தடியில்..."

நாட்டுப்பாடல்களில் தத்துவமும் உலக அனுபவமும் பளிச்சிட்டு வெளிக்கிளம்புவதை கீழ்வரும் பாடல் காட்டுகிறது. பாமர மக்கள் பாடும் பாடல்களில் தத்துவமும் ஒழுக்க நெறிகளிலும் பொதிந்து கிடப்பது வியப்புக்குரியது. கீழ்வரும் பாடல் மொளக்கொட்டுக் கும்மிப்பாடல் என்றும், சில இடங்களில் மொளப்பாரிப் (முளைப்பாரி) பாடல் என்றும் வழங்கி வருகிறது. உழவுத் தொழிலையே தங்களுடைய வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ள மக்கள், அவர்கள் போற்றும் தொழிலை உயர்த்தவும், போடுகின்ற விதை சரியாக முளைக்குமா அல்லது முளைக்காதா என்று பரிசோதித்துப் பார்ப்பதற்காகவும் முளைவிட்டுக் கிளம்பிய பயிர்களை வீதி வழியாக எடுத்துச் செல்லும்போது மொளப்பாரிப்பாடல் பாடப்பட்டு வருகிறது.

கும்மியடி பெ(ங்)ண்காள் கும்மியடி...
கூடியே மானிடா கும்மியடி...
அம்மலர் செந்தமிழ் நாவலர் பாதத்தை
என்னிக்கும்மி அடிங்கேடி...
சின்ன வயசிலே கல்விகற்று சீறி ஒருவரெ பேசாதே
கல்விப்பொருளை சதம் மென்டெண்ணியே
கண்டறிவாய் நல்ல மானிடனே
உம்மையும் கற்பையும் கத்ததுதர்ர
உத்தம மாதரை நீக்கிப்பிட்டு
முள்ளாகி புண்ணாகி நோயைத் தருகிற
மொய் குழலை நாடாதே மானிடனே...

இதோ ஒரு தாலாட்டுப் பாடல்:

''எ(ங்)ன் கண்ணே கந்தைய்யா கண்ணய்யா
ஏ...அலாயா அலெய் மவளாம்
ஏ... கன்னித்தாயே முத்தாம்
ஏ... ஆராராரோ ஆராராரோ
என் கண்ணே ராராரோ ராராரோ ராரிரரோ
மருதைக்கு நேர் கிழக்கே
என்... கண்ணே மாட்டையும் பொட்டலிலே
தருசா கிடக்குமின்னு
என் கண்ணே தனிச்சம்பா போட்டாலும்
என் கட்டு களங்காணோம்
என் கண்ணே பரிதளுக்கு நெல் காணும்
சந்திரரே சூரியரே...
சாரதி பகவானே... இந்திரரே...

ஒப்பாரிப் பாடல்கள் பெரும்பாலும் பெண்கள் பாடக்கூடியதாக இருக்கிறது. ஆனாலும் ஆண்களும் கூலிக்காகவும் சாவு வீட்டில் ஒப்பாரிப் பாடல்களை பாடுவதும் இப்பகுதியில் வழக்கத்தில் உள்ளது. ஒப்பாரிப் பாடல்கள், மக்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து பாடுவதாக அமைந்துள்ளது. மாமியாரை மருமகள் புகழ்ந்து பாடுவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

எனக்கு எலுமிச்சம் பூமேனி
என்னை தேடிய சீதை யத்தே
இருக்கையிலே உங்களுக்கு
வந்த சீக்கு
எட்டுப்பவுன் கொடுத்து
எட்டு லட்சம் பொன் கொடுத்து
இப்ப வரவழச் சோ(ம்)
எலங்கை வயித்தியரும்
என்னத் தேடிய சீதையத்தே
எழுத்து கொறச்சலின்னா
எதிர்தின்னே காலியாச்சு
எனக்கு நாரத்தம் பூமேனி
உனக்கு நடக்கயிலே வந்த சீக்கு
நாலு பவுன் கொடுத்து
நாலு லட்சம் பொன் கொடுத்து
நாட்டு வயித்தியரே நாடி வரவழச்சோ(ம்)
நாட்டு வயித்தியரும் நாலு குறச்சலின்னா
நடுத்திண்ணே காலியாச்சே...

உடுக்கடிப் பாடல்கள் சாமி அழைப்பதற்கும், குறி சொல்வதற்கும் சில பகுதிகளில் பேயோட்டுவதற்கும் பயன்படுத்து கின்றனர். தற்பொழுதும் கோயில்களில் சாமி அழைப்பதற்கு உடுக்கடித்துப் பாடுகின்றார்கள். உடுக்கடித்து குறிசொல்லும் (சோதிடம்) பழக்கமும் இன்றளவும் தொடர்ந்து வருகிறது. இக்காட்சிகளை பேருந்து நிலையங்களிலும் மருத்துவமனை வாயிலிலும் காணலாம். உடுக்கு எனும் இசைக்கருவி சிவபெருமான் கையிலும் மாரியம்மன் கையிலும் காணப்படுகிறது.

நமது மக்களிடையே இருந்த கலைகள் காலப்போக்கில் தொழில்சார் கலைகளாய் உருப்பெற்றன. விழாக் காலங்களில் நிகழ்த்தப்பட்ட கரகாட்டம், காவடியாட்டம் போன்றவற்றிலும் இதற்குண்டான இசையிலும், பிற்காலத்தில் குறிப்பிட்ட சிலர் மட்டும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று அதையே தொழிலாகக் கொண்டனர். மக்கள் தங்கள் வேலையில் ஈடுபடும்போது களைப்பு தெரியாமலிருக்க பாடிய நடவுப்பாட்டு, ஏற்றப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, குளவைப் பாட்டு போன்றவை இன்றளவும் மக்களிடையே வழக்கில் உள்ளன. இவற்றின் இடத்தை தற்பொழுது திரையிசைப் பாடல்கள் பிடித்து வருகின்றன அல்லது கிராம மக்களின் இப்பாடல்கள் பல இசைக் கருவிகளின் துணையுடன் புதுப்பொலிவோடு திரைப்படக்காரர்களால் மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. தாலாட்டு, ஒப்பாரி போன்றவையும் அருகி வருகின்றன.

பல மாவட்டங்களின் நாட்டுப் பாடல்கள் நூல் வடிவம் பெற்றுள்ளன. நமது மாவட்ட நாட்டுப் பாடல்களையும் கிராமியக் கலைகளையும் நூல் வடிவில் பதிவு செய்து அவற்றை மக்களுக்கு

மீண்டும் நினைவூட்டுதல் அவசியமாகும். (நன்றி: பேராசிரியர் திரு.செண்பெருமாள்)

பன்னெடுங்காலமாக புதுக்கோட்டை இயல், இசை, நாடகக் கலைகளுக்கு ஊக்கமளித்து வந்துள்ளது. குடுமியான்மலை சங்கீதக் கல்வெட்டும், சித்தன்னவாசல் ஓவியங்களும் இப்பகுதியின் காலத்தால் முற்பட்ட கலைச்சிறப்பிற்குச் சான்றாகத் திகழ்கின்றன. தொண்டைமான் மன்னர்களின் அரசவைகளில் திறமை வாய்ந்த பல்கலைக் கலைஞர்கள் பலர் போற்றப்பட்டு வந்தனர். தொண்டைமான் மன்னர்களுள் சிலர் இசை மேதைகளாகவும், கவிஞர்களாகவும் திகழ்ந்தனர். ராஜா ரகுநாதத் தொண்டைமான் பகதூர் (1825-1839) ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் (1839-1886) ஆகியோரது காலத்தில் முத்தமிழ்க் கலைகளும், கலைஞர்களும் சிறப்பு பெற்றிருந்தது குறித்து ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசைக் கலையிலும் நாட்டியக் கலையிலும் புகழ்பெற்ற கலைஞர்கள் பலர் இங்கு வாழ்ந்துவந்தனர். வீணை, தம்புரா, தவில், நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகளும் இங்கு பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. கர்நாடக சங்கீத மேதையாக விளங்கியவர் திருக்கோகர்ணம் மாமுண்டியாபிள்ளை. கஞ்சிரா என்னும் தாள இசைக்கருவியைக் கண்டுபிடித்து இன்னிசைக் கச்சேரியில் அதை பக்கவாத்தியமாக உபயோகிக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர் இவரே. மிருதங்கம் தட்சிணாமூர்த்தி பிள்ளை (1876-1936) இவரது ஆத்மசீடர் ஆவார். நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகள் இவரது வளர்ப்பு மகன். புதுக்கோட்டை நகரம் அடப்பன் வயலில் மாமுண்டியாபிள்ளை மற்றும் தட்சிணா மூர்த்திபிள்ளை ஆகியோரின் சமாதிகள் உள்ளன. இவர்களது நினைவாக ஆண்டுவிழாக்கள் நடைபெறுகின்றன. இலுப்பூர் பொன்னுசாமிபிள்ளை சிறந்த வயலின் கலைஞராகத் திகழ்ந்தவர். இவர் பல தில்லானாக்களை உருவாக்கியிருக்கிறார். டோலக், சுரபத் போன்ற இந்துஸ்தானி இசைக் கருவிகளில் தேர்ச்சிபெற்ற இசைக் கலைஞர்கள் பலர் சமஸ்தான அரசவையில் இருந்தனர்.

புதுக்கோட்டையில் நாட்டியக்கலை நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருந்தது. திருக்கோகர்ணத்தில் நாட்டியக் கலையில் சிறந்த ஆசிரியர்கள் (நட்டுவனார்) பலர் இருந்தனர். நூற்றெட்டுத் தாள வகையிலும் லயவிந்யாசங்களிலும் சிறந்து விளங்கிய சிவராம நட்டுவனார் இவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் ஆவார்.

திருக்கோகர்ணம் சுப்பையா பாகவதர், வைத்தியநாத பாகவதர், ஹரிகதாபுகழ் கனகாம்புஜம் அம்மாள், வாய்ப்பாட்டு டி.என்.மாணிக்கம் அம்மாள் ஆகியோர் தமிழகமெங்கும் புகழுடன் விளங்கினர். வயலின் உலகநாதபிள்ளை, மிருதங்கம் ரெங்கநாயகி அம்மாள், தவில் செல்லையா ஆகியோர் சமீபகாலத்தில் புகழுடன் விளங்குபவர்கள் ஆவார்கள்.

தமிழ்த் திரைப்பட உலகில் புதுக்கோட்டையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும். திரைப்படத்துறையில் புதுக்கோட்டையைச் சேர்ந்த பலர் புகழுடன் விளங்கினர். அவர்களுள் ஊமைப்படப் (பேச்சில்லாத திரைப்படம்) புகழ் பி.கே.ராஜா சாண்டோ, மற்றும் உலகநாதன் சின்னப்பா என்ற பி.யு.சின்னப்பா ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். ராஜா சாண்டோ குத்துச்சண்டை நடிகராக திரைப்படத்துறைக்கு அறிமுகமாகிப் பின்னர் சிறந்த இயக்குநராக பெயர் பெற்றவர். சின்னப்பா, அக்காலத்தில், நாடறிந்த நல்ல நடிகர். சிலம்பம், குத்துச்சண்டை, வாட்போர் ஆகிய கலைகளில் தேர்ச்சிபெற்றவர். நடிப்போடு உச்சஸ்தாயியில் பாடும் வல்லமை வாய்ந்த நடிகர். மனோன்மணி, கண்ணகி போன்ற திரைப்படங்கள் இவருக்கு புகழ் சேர்த்தவையாகும். சமீபகாலத்தில் தமிழ் திரைப்பட இயக்குநராக விளங்கிய ப.நீலகண்டன் குறிப்பிடத்தக்க மற்றொருவர். நமது காலத்தில் தமிழ் திரைப்பட உலகில் புகழுடன் விளங்கும் ஜெமினிகணேசன் ஏ.வி.எம்.ராஜன் ஆகியோரும் புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள்.

மேலேகண்ட கலைஞர்களோடு இன்னும் பலரும் சேர்ந்து புதுக்கோட்டையின் கலை வரலாற்றிற்கு புகழ் சேர்த்துள்ளனர்.

## 37. புதுக்கோட்டை கல்வெட்டுகள்

புதுக்கோட்டை சமஸ்தான எல்லைக்குள் இருந்த கோயில்களில் இருந்து சுமார் 1,200 கல்வெட்டுக்கள் 1907ல் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 1,130 கல்வெட்டுக்கள் படிக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன. (Inscriptions of Pudukkottai State)

தமிழகத்தில் அதிகமாகக் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களுள் புதுக்கோட்டையும் ஒன்றாகும். இங்கு கிடைத்துள்ள கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டு இப்பகுதியின் அரசியல், சமுதாய, பொருளாதார வரலாறு குறித்து தெரிந்து கொள்ள முடிகிறது.

மன்னர்களும் அவர்களது குடும்பத்தினரும், தளபதிகளும் ஆட்சித் தலைவர்களும் கோயில்களுக்கு அளித்த கொடைகள் குறித்தே பெரும்பாலான கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. புதுக்கோட்டை பகுதியின் கோர்வையான அரசியல் வரலாற்றைப் படித்தறியவும் இக்கல்வெட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன.

காலத்தால் முற்பட்ட கல்வெட்டு சித்தன்னவாசலில் காணப்படும் தமிழ் பிராமிக் கல்வெட்டாகும். எழுத்தமைதியைக் கொண்டு அடுத்துவரும் கல்வெட்டு குடுமியான்மலையிலுள்ள சங்கீதம் பற்றிய கல்வெட்டாகும். பல்லவ மன்னர்களது ஆட்சிக்காலக் கல்வெட்டுகள் ஐந்து மட்டும் உள்ளன. (பு.க.எண்.15-19, -இனி 'எண்' என்று மட்டும் குறிக்கப்படும்). இவற்றுள் காலத்தால் முந்தியது ராசாளிப்பட்டியிலும், குன்னாண்டார் கோயிலிலும் காணப்படும் இரண்டாம் நந்தியின் காலக் (கி.பி.733-788) கல்வெட்டாகும்.

சோழ மன்னர்கள் காலத்தை உள்ளடக்கிய கல்வெட்டுகள் சுமார் 216 உள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை குளத்தூர் வட்டத்திலுள்ள கோயில்களிலேயே காணப்படுகின்றன. இப்பகுதி சோழநாட்டின் தென் எல்லையை ஒட்டியிருந்ததே இதற்குக் காரணமாகும். ராஜகேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்களை மட்டும் தாங்கி சுமார் 58 கல்வெட்டுகள் உள்ளன. (எண்.20-77) (விஜயாலயச் சோழனால் நிர்மாணிக்கப்பட்ட சோழப் பேரரசின் மன்னர்கள் ராஜகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களை ஒருவர் மாற்றி ஒருவர் சூட்டிக் கொண்டனர் என்பது நாம் அறிந்ததே.) இவற்றுள் 18 கல்வெட்டுகளில் ராஜகேசரி என்றும், மீதமுள்ளவற்றில் பரகேசரி என்றும் காணப்படுகிறது. எழுத்தமைதியைக் கொண்டு, இவை, 10ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவையாகவும், முதலாம் பராந்தகச் சோழனுக்கு முற்பட்ட மன்னர்களான விஜயாலயன் மற்றும் ஆதித்த சோழன் காலத்தைச் சேர்ந்தவையாகவும் இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பாண்டிய மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகள் சுமார் 420 காணப்படுகின்றன. இவற்றுள் 10ம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட கல்வெட்டுகள் நான்கு மட்டுமே. கோச்சடையன் ரணதீரன் (கி.பி.710-740) காலத்துக் கல்வெட்டு ஒன்றும், மாறஞ்சடையன் (கி.பி.765-815) காலத்துக் கல்வெட்டுகள் மூன்றும் அவை. சுந்தரபாண்டியன் காலத்து (கி.பி.1216-1239) கல்வெட்டுகளே அதிகம் காணப்படுகின்றன.

ஹோய்சள மன்னர்களின் கல்வெட்டுகள் மூன்று மட்டும் காணப்படுகின்றன. கி.பி.13ம் நூற்றாண்டில் கண்ணனூரை (சமயபுரம்) தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த இம்மன்னர்களது கல்வெட்டு திருமயம், திருக்கோகர்ணம், செம்பாட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.(எண்.340, 183).

ராங்கியம் மற்றும் மேலப்பனையூரில் காணப்படும் முகமதுபின் துக்ளக் கால கல்வெட்டுகளை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுகள் சுமார் 86 பதிவு செய்யப்பட்டுள்ளன. விஜயநகரப் பேரரசு தமிழகம் முழுவதும் பரவியிருந்தபோதிலும், அவர்களது மத்திய ஆட்சி பலம் பொருந்தியதாக இருக்கவில்லை என்பதை இப்பகுதியை ஆண்டுவந்த அறையர்கள் தன்னிச்சையாக ஆண்டு வந்ததைக் கூறும் கல்வெட்டுச் செய்திகள் உறுதி செய்கின்றன. பாண்டியப்-பேரரசு சிதைவுற்ற நிலையில் விஜயநகர மன்னர்களும், அவர்களது தளபதிகளும், ஆட்சியாளர்களும் பாண்டியரின் பெயர்களையும் பட்டங்களையும் சூட்டிக் கொண்டனர் என்ற செய்திகள் புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சதாசிவராயர், சடையவர்மன் சுந்தரபாண்டியன் என தன்னை அழைத்துக் கொண்டதையும் இம்மாடி அக்கலத்தேவர் என்னும் விஜயநகரத் தளபதி, சோழ மகாராசர் என்று தன்னை அழைத்துக் கொண்டதையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன (எண்.754) மக்கள்

தங்களை பேதமின்றி ஏற்றுக் கொள்ள அவர்கள் கையாண்ட உத்தியாக இது இருக்கலாம்.

மேற்சொன்ன கல்வெட்டுகள் தவிர மன்னர்கள் இன்னாரென்று தெரிந்து கொள்ள முடியாத கல்வெட்டுகளும், காலத்தை சரியாக கணிக்க முடியாத கல்வெட்டுகளும் நிறையக் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் பாண்டிய மன்னர்களைக் குறிப்பிடுகின்றன. தொண்டைமான் மன்னர்களது, கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் 50க்கும் மேற்பட்ட புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல கல்வெட்டுகளை கண்டறியவும் ஆய்வாளர்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

புதுக்கோட்டைக் கல்வெட்டுக்களில் காணப்படும் ஒருசில செய்திகளை மட்டும் இங்கு காண்போம்.

கோயில்களின் அன்றாட வழிபாட்டுச் செலவுக்கும், நந்தா விளக்குகள் எரிப்பதற்கும், சந்நியாசிகளுக்கு உணவளிக்கவும், திருவிழாக்கள் நடத்தத் தேவையான செலவினங்களுக்கும் பொற்காசுகள், நிலங்கள், ஆடுமாடுகள், ஆகியன கோயில்களுக்கு கொடையளிக்கப்பட்ட செய்திகளையே பெரும்பாலான கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. குளங்கள், ஏரிகள், கண்மாய்கள், ஊரணி ஆகியனவற்றைப் பராமரிக்க அளிக்கப்பட்ட கொடைகள் குறித்த செய்திகளும் நிறைய உண்டு. நீர்நிலைகளின் பராமரிப்பும் ஒரு அறச்செயலாகக் கருதப்பட்டதாக அறிகிறோம். (எண். 28, 59, 60, 61, 71 மற்றும் பல) கோயில் வருமானத்தில் உபரி நிதி ஆடுமாடு வளர்ப்பவர்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டு, வட்டிக்கு பதிலாக நந்தா விளக்கு எரிக்க நெய் பெற்றுக் கொள்ளப்பட்டது. (எண் 48, 49, 50, 55) கொடும்பாளூர் வேளிர் இளவரசி ஒருத்தி குடுமியான்மலைக் கோயிலில் தினசரி பாலாபிஷேகம் செய்ய 31 பசுக்களை தானமாக அளித்துள்ளாள். (எண்.22) கோயில் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் வாத்தியக்கருவி வாசிப்போர், நந்தவனம் காப்போர், கோயிலுக்கு மட்பாண்டங்களை அளிப்போர், கோயில் சலவைத் தொழிலாளி, கோயில் பராமரிப்பு ஆகிய செலவினங்களுக்கு உரிய செலவு விகிதங்கள் பல கல்வெட்டுகளில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

கோயில் வழிபாட்டுக்கு தினசரி செய்யவேண்டிய செலவின் அளவு குறித்த செய்திகள் சுவையானவை. (எண்.99) ஒரு சந்தியின் (ஒரு வேளை பூஜைக்கு) அமுது படிக்கு நான்கு நாழி அரிசியும், $2^1/_2$ செவிடு நெய்யும், கறியமுதிற்கு ஒரு உரி நெல்லும், தயிரமுதுக்கு ஒரு உரி நெல்லும், நந்தா விளக்கெரிக்க ஒரு உழக்கு நெய்யும் செலவு செய்யப்பட வேண்டுமென இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. (இவ்வாறாக ஒரு நாளைக்கு மூன்று சந்தி) இது அக்கால குக்கிராமக் கோயில்களின் வருமானம்கூட மிகவும் அதிகமாக இருந்ததைக் காட்டுகிறது.

சுங்கம் தவிர்த்த சோழன் என்னும் குலோத்துங்க சோழனின் உச்ச ஆட்சியாண்டு 50 என்று மட்டும் கொள்ளப்பட்டு வந்தது. ஆனால்

அவனது உச்ச ஆட்சியாண்டு 52 ஆண்டுகளாகும் என்ற புதிய செய்தியினை புதுக்கோட்டைக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. (எண்.127) குடுமியான்மலையில் கி.பி.1105-06ல் திரமம் என்னும் ரோம பொன் நாணயங்கள் (Roman Drachma) பெருமளவில் செலாவணியில் இருந்ததும், மொத்த வியாபாரம் செய்ய அரசின் உரிமம் (License) தேவை என்பதும் கல்வெட்டு எண்.125ன் மூலம் தெரிய வருகிறது. இதுபோன்ற உரிமம் அரசின் சார்பில் ஊர்ச்சபையினால் வழங்கப்பட்டது. வியாபாரத்தில் தரகு பெறுவதற்கும் அரசின் உரிமம் தேவை. தரகு பெற அனுமதியளிக்கப்பட்ட இருவர் உரிமத் தொகைக்குப் பதிலாக குடுமியான்மலைக் கோயிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு 30,000 பாக்கும் 750 வெற்றிலைக் கட்டுகளும் (கட்டு என்பது நாம் கவுளி என்று சொல்லும் அளவாக இருக்கலாம்) அளிக்கவேண்டுமென அரசின் ஆணை இருந்ததாக இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அரசு ஆணை 'பெருமான் திருமுகப்படி' எனவும் நில அளவை (Settlement) 'நாடு கூறு செய்தல்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. (எண் 126). அரசு தலைமைச் செயலாளரின் பெயர் 'திருமந்திர ஓலை' என்பதாக ஒரு கல்வெட்டால் அறிகிறோம்.

பாண்டியர் ஆட்சியில் இப்பகுதியில் வரிச்சுமை மிகவும் அதிகமாக இருந்ததாக இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மக்களைத் துன்புறுத்தி வரிகள் வசூல் செய்யப்பட்டதாக இடையாத்தூர் கல்வெட்டு தெரிவிக்கின்றது. (எண்.309). தங்களது வரிபாக்கியைச் செலுத்த இவ்வூர் மக்கள் தங்களுக்குச் சொந்தமான மதுராந்தகபுரம் கிராமத்தை (நிலங்களை) விற்றதாக இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. கோயில்கள்கூட தங்கள் வரிபாக்கியைச் செலுத்த நிலங்களை விற்றுள்ளன. (எண்.310). இவையெல்லாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1216-39) காலத்து நிகழ்வுகளாகும். வரி கொடுக்க இயலாதவர்களிடமிருந்து வீட்டு உபயோக பண்டம் பாத்திரங்கள்கூட வரி வசூலிப்போரால் கைப்பற்றப்பட்டுள்ளன. வரிச்சுமை பற்றிய செய்திகள் மேலும் பல கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. (எண்.399, 376, 285, 415) கோயிலின் அறங்காவலர் குழு 'தானத்தார்' எனப்பட்டது. (ஒப்பு நோக்குக - தற்போது, தக்கார்) நார்த்தாமலையிலுள்ள பதினென்பூமி வின்னகரம் கோயிலைப் புதுப்பிக்க அக்கிராமத்தில் திருமண வரி வசூலிக்கப்பட்டது. பெண் வீட்டிற்கு வரி 200 காசு, மாப்பிள்ளை வீட்டிற்கு வரி 100 காசு. வயதுவாரியாகக்கூட வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. வயதுவந்தோர் ஒரு பணமும், இளைஞர்கள் $^1/_4$ பணமும் குடுமியான்மலைக் கோயில் பராமரிப்பிற்கு செலுத்த வேண்டியிருந்தது. (எண்.284). விளையும் பயிர்களுக்கு ஏற்ப நிலவரி வசூலிக்கப்பட்டச் செய்தி தெரிய வருகிறது. கி.பி.1250-70ல் நெல் விளையும், ஒரு மா நிலத்திற்கு, 6 கலம் நெல்லும் $^1/_{16}$ பணமும் வரியாகும். (1 மா= 256 குழி, 1 குழி= 16 அடி நீளம்). இது முழுவரியாகும். வரகு, தினை இவற்றிற்கு (புன்செய் தானியங்கள்) இதில் பாதியும், கத்தரிக்காய் (வழுதலை) பூசணி, எள் ஆகியவற்றிற்கு 1 பணமும், மஞ்சள், இஞ்சி, வெற்றிலை, கரும்பு, கடுகு, பாக்கு,

தேங்காய், ஆகியன விளையும் நிலங்களுக்கு முழுவரியும் செலுத்த வேண்டியிருந்தது (எண்.345). கேழ்ப்பை (எண்.674), சாமை (எண்.454), பச்சைப்பயறு, கொள்ளு (எண்.274, 412) ஆகிய தானியங்களும் மா, பலா, வாழை ஆகியவையும் குறிப்பிடப் பட்டுள்ளன. பருத்தி (எண்.454) அரிதாகவே குறிப்பிடப்படுகிறது. உளுந்து, துவரை எந்தக் கல்வெட்டிலும் குறிப்பிடப்படவில்லை. வரிவிதிப்பு முறைகளைத் தெரிந்து கொள்வதோடு அக்காலத்தின் விளைபொருள்களையும் இதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. வரிகள் பற்றிய செய்தி மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

முனசந்தையிலுள்ள மாறவர்மன் முதலாம் குலசேகரப் பாண்டியனின் கல்வெட்டு (எண்.413) மன்னனின் ஆட்சியாண்டிற்கு இணையான கலியுக ஆண்டு மாதம் கிழமை ஆகியவற்றைத் தெரிவிக்கிறது. இந்த விவரம் தெரிவிக்கும் புதுக்கோட்டைக் கல்வெட்டு இது ஒன்றேயாகும்.

கி.பி.1299ம் ஆண்டைச் சேர்ந்த குடுமியான்மலைக் கல்வெட்டு அக்கால குற்றவியல் விசாரணை நடைமுறைகளைத் தெரிவிக்கிறது. கோயில் கருவூலத்திலிருந்து பொன்னும், மணியும் திருடு போய்விட்டது. ஊர்ச்சபை கூடி, தனி மகாஜனத்துப் பட்டர் எனபபடும் கற்றறிந்தோர் குழு முன்பு கோயில் பணியாளர்களை விசாரித்தது. சிலர், தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டனர். பின்னர் அவர்கள் சாமந்தன் (அரசப் பிரதிநிதி) முன்பு கொண்டு செல்லப்பட்டனர். குற்றத்தை உறுதி செய்து கொள்ள பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தொடச் செய்தனர். பின்னர் குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் சிறையில் அடைக்கப்பட்டதோடு அவர்களது சொத்துக்களும் (கோயிலுக்கு) பறிமுதல் செய்யப்பட்டன (எண்.601). திருட்டுக் குற்றத்திற்கு ஒரு கையை வெட்டுதல் (எண்.867), கொதிக்கும் நெய்யில் கைவிடச் செய்தல் (எண்.929), ஆகியன வேறு சில தண்டனைகள் ஆகும். உரிமையியல் வழக்குகள் ஊர்ச்சபையினரால் சுமுகமாக முடித்து வைக்கப்பட்டது குறித்து பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

முகத்தல் அளவை

| | | |
|---|---|---|
| 4 செவிடு | - | ஒரு ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | - | ஒரு உழக்கு |
| 2 உழக்கு | - | ஒரு உரி |
| 2 உரி | - | ஒரு நாழி |
| 8 நாழி | - | ஒரு குருணி |
| 2 குருணி | - | ஒரு பதக்கு |
| 2 பதக்கு | - | ஒரு துணி |
| 1 கோட்டை | - | 21 மரக்கால் |

(ஒரு ஆழாக்கு என்பது $^{1}/_{8}$ லிட்டருக்குச் சமம்)

படி என்னும் அளவை சமீப காலத்தில் ஏற்பட்டதாகும். கோவில்கால், சூலக்கால், கடமைக்கால், நாட்டுக்கால், வயலோக நாட்டு கடமைக்கால், உய்யகொண்டான் குறிச்சியில் அளக்கும் கால், ஊரளக்கும் கால், கேரளாந்தகன் உழக்கு, கேரளாந்தகன் நாழி, போன்ற அளவைகளும் வழக்கிலிருந்தன. உயர் அலுவலர்கள் மற்றும் பெருந்தனக்காரர்களின் பெயராலும் அளவைகள் இருந்தன (பொன்மாளிகைப் பிள்ளை மரக்கால்) அளவைகள் செய்யப்பட்ட உலோகத்தின் பெயராலும் அவைகள் இருந்தன. பொன்னாழி, செப்பு நாழி.

**நீட்டல் அளவை**

ஊருக்கு ஊர் மாறுபட்ட அளவைகள் இருந்தன. அவற்றுள் சில: முத்தியூர் நிலம் அளக்கும் அளவைக்கோல், திருமெய்யம்கோல், ஆதனூர்காடு அளந்தகோல், செம்பாட்டூர்க்கடமை அளக்கும்கோல்.

அளவுகோலின் நீளம், இடத்திற்கு இடம் காலத்திற்கு ஏற்ப மாறுபட்டிருந்தது.

| காலம்-கி.பி. | | இடம் | அளவுகோலின் நீளம் |
|---|---|---|---|
| 1216 | - | குன்னாண்டார் கோயில் | 16 அடி |
| 1227 | - | பேரையூர் | 18 அடி |
| 1254 | - | ஒலியமங்கலம் | 16 அடி |
| 1262 | - | மைலாப்பட்டி | 18 அடி |
| 1271 | - | குடுமியான்மலை | 16 அடி |
| 1290 | - | பேரையூர் | 22 அடி |
| 1311 | - | மரவாமதுரை | 16 அடி |
| 1313 | - | பெருமாநாடு | 18 அடி |
| 1340 | - | திருமயம் | 12 அடி |
| 1322 | - | பின்னங்குடி | 16 அடி |
| 1369 | - | மேலூர் | 12 அடி |
| 1841 | - | மிரட்டுநிலை | 24 அடி |

நில அளவை மா, காணி, முந்திரிகை, வேலி என வழங்கப்பட்டது. ஒரு காணியில் 1/1024 பகுதிகூட துல்லியமாக அளக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நாணயங்கள்**

நாணயங்களின் பெயர்கள் கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றன. கழஞ்சுப் பொன் (எண்.198), திரமம் (எண்.125, 260), அச்சு (எண்.427), பழங்காசு (எண்.318-19), புதுக்காசு (எண்.529), தராசிப் பணம் (எண்.423), வராஹப் பணம் (எண்.406), பஞ்சசாலக்காசு, வீரபாண்டியன் காசு, குளிகைப் பணம் (எண்.699), செண்பகக் குளிகைப் பணம் (எண்.384), ஆடுரான் பணம் (எண்.462), சிற்றரசிப் பணம், சக்கரப்பணம் (எண்.801), மதிரை சக்கரப் பொன், (எண்.835) கானிப் பொன், திருக்கோகர்ணம் மின்னல் பணம் (873) ஆகியன. இவை

அனைத்தும் பொன்னால் செய்யப்பட்டவை. இவற்றின் எடை இடத்திற்கு இடம் காலத்திற்கு ஏற்ப மாறுபட்டது.

பெரும்பாலும் நாணயங்கள் ''கழஞ்சு''என்ற எடையளவில் வழங்கப்பட்டது. ஒரு கழஞ்சு என்பது 58 நெல்மணிகளின் எடைக்குச் சமம்.

கிராம நிர்வாக சபை'ஊர்', நாடு,' 'பெருங்குறி' என் அழைக்கப்பட்டன. ஊர் என்பது குறிப்பிட்ட ஒரு கிராமத்தின் ஊராட்சி மன்றமாகும். நாடு என்பது ஊர்ச்சபைகள் பலவற்றின் குழுமமாகும். (எடுத்துக்காட்டாக:- வடசிறுவாயில் நாடு என்பது கீரனூர், உப்பிலிக்குடி, சிறுபாலூர், கைக்குடியூர், ஆனையூர், சிறுகளத்தூர், இரஞ்சாலூர், குமாரமங்கலம் ஆகிய ஊர்ச்சபைகளின் குழுமம் என அறிகிறோம்-எண்.198) பெருங்குறி என்பது ஒரே கிராமத்தில் இருக்கும் சதுர்வேதி மங்கலம், ஊர் போன்ற சபைகளின் இணைந்த அமைப்பாகும். (சதுர்வேதி மங்கலம் என்பது பிராமணர்கள் வசித்த தனிக் குடியிருப்புப் பகுதியாகும். இவர்களுக்கென தனி சபையும், நடைமுறைகளும் வழக்கிலிருந்தன).

கிராம நிர்வாக சபைகளுக்கு நிறைய அதிகாரங்கள் இருந்தன. கிராமத்தின் பொது நிர்வாகம் முழுவதும் ஊர்ச்சபையின் பொறுப்பில் இருந்தது. ஊரின் பொது நிலங்கள் (புறம்போக்கு) கிராம சபையின் கட்டுப்பாட்டில் இருந்தன. இவற்றை விற்கவும், கொடையாக அளிக்கவும், ஊர்ச்சபைக்கு அதிகாரம் இருந்தது (எண்.694). இந்நிலங்களின் விளை பொருள்களுக்கு அனுபவ உரிமை வழங்குவதும் ஊர்ச்சபையே ஆகும் (எண்.687). ஊர்ச்சபைகள் தங்கள் பெயராலேயே கொடையளிக்கவும், நிலங்களுக்கு வரிகளை ரத்து செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தன (எண்.85, 186). அரசுக்கு மக்கள் செலுத்த வேண்டிய வரிகளை ஊர்ச்சபையே வசூலித்து அரசு கருவூலத்தில் செலுத்தி வந்தது. நிலத்தின் தரத்திற்கேற்ப தீர்வையை ஊர்ச்சபையே நிர்ணயித்தது. கிராமத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதும், பாடிக்காவல் (ஊர்க்காவல்) முறையை நடைமுறைப்படுத்துவதும், நீதி பரிபாலனம் செய்வதும் ஊர்ச்சபையின் கடமையாகும். (எண்.439, 440, 454, 669, 601, 799, 815) கிராமத்தின் வளர்ச்சிக்கு சிறந்த சேவை செய்தோருக்கு, விருதுகள், பட்டங்கள் வழங்கவும் ஊர்ச்சபை அதிகாரம் பெற்றிருந்தது (எண்.455). கோயில்களின் நிர்வாகத்தைக் கவனிக்க தானத்தார் எனப்படும் தனிக்குழு இருந்தபோதிலும் இக்குழுவின் பணி ஊர்ச் சபையால் கண்காணிக்கப்பட்டு வந்தது. தவறு செய்யும் தானத்தாரை ஊர்ச்சபை தண்டிக்கவும் செய்தது (எண்.485). ஊர்ச் சபைகள் பலவாறாக தன்னாட்சி உரிமைகளைப் பெற்றிருந்தபோதிலும், அவை அரசின் மேற்பார்வைக்குட்பட்டு இயங்கிவந்தன. ஊர்ச்சபையின் கணக்குகள் அரசின் உயர் அலுவலர்களால் தணிக்கை செய்யப்பட்டன. ஊர்ச்சபைகள் பொதுவாக கோயில்களிலும், குளக்கரைகளிலும் நந்தவனங்களிலும் கூடின. சில இடங்களில் ஊர்ச்சபைக் கூட ஊர் மன்றமும் இருந்தது. (எண்.441). ஊர்ச் சபைகளின்

உறுப்பினர்களுக்கான தகுதிகளின் அடிப்படையில் அவர்கள் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. ஆனால் தேர்தல் முறைகளைக் குறிப்பிடும் கல்வெட்டு இங்கு ஏதும் கிடைக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ச்சபை உறுப்பினர்கள் பல வாரியங்களாகப் பிரிந்து செயல்பட்ட செய்திகள் தெரிய வருகின்றன. சபை உறுப்பினர்கள் நான்கு வேதங்களில் சிறந்தவர்களாக இருந்தனர் என அறிகிறோம் (எண்.28, 90).

ஊர்ச்சபையோடு நகரம் எனப்படும் சபைகளும் செயல்பட்டன. நகரம் என்பது வணிகர்களின் குழுவாகும். புதுக்கோட்டையில் பெரும் வணிக மையங்களாகத் திகழ்ந்த கீழ்க்கண்ட இடங்களில் இந்தக் குழுக்கள் (நகரம்) செயல்பட்டு வந்தது குறித்த செய்திகள் தெரிய வருகின்றன. தெலுங்கு குலகாலபுரம் என்னும் நார்த்தாமலை (எண்.91, 112, 113, 114, 125, 158, 170, 200, 279, 235), கொடும்பாளூர் (எண்.80) விருதுராஜ பயங்கரபுரம் என்னும் பெருங்குடி (எண்.184) சுந்தரசோழபுரம் என்னும் சுந்தரம் (எண்.189, 422) சுந்தரபாண்டியபுரம் என்னும் பில்லமங்கலம் (எண்.390) அருள்மொழி தேவபுரம் என்னும் திருவரங்குளம் (எண்.487) குலசேகரபுரம் - செனிகுல மாணிக்கபுரம் - புதுகோட்டை நகரின் கிழக்குப் பகுதி (எண்.49), செழிய நாராயணபுரம் என்னும் அழகாபுரி ஆகியனவாகும். ஊர்ச்சபைகளைப் போன்று நகரமும் கோயில்களை நிர்வகித்தல் போன்ற பணிகளைச் செய்துவந்தன எனக் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி எடுக்கப்பட வேண்டிய நாடு தழுவிய முடிவுகள் அப்பகுதியின் ஊர், நாடு, நகரம், பெருங்குறி, படைப்பற்று ஆகிய அனைத்தும் இணைந்து கூடிய கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. (எண்.285 - குடுமியான்மலைக் கோயிலை செப்பனிடுதல்).

நகரம் என்னும் வணிகக் குழுவினர் போன்று மணிக்கிராமம், நானாதிசை திசையாயிரத்து ஐநூற்றவர் போன்ற வணிகக் குழுமங்களும் (Merchant guilds or corporations) இங்குச் செயல்பட்டன. இவை பெரு வணிகர்களின் பெருங்குழுவாம். இவ்வணிகர்கள் உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஆவார்கள். இக்குழுக்களும் தங்களது பெயராலேயே பல அறச் செயல்களைச் செய்து வந்தனர். முனசந்தை ஏரிப் பராமரிப்பிற்கு திசையாயிரத்து ஐநூற்றவர் வளஞ்சியர் கொடையளித்துள்ளனர் (எண்.61). இதுபோன்ற வணிகக் குழுக்களுக்கு கி.பி.15ம் நூற்றாண்டிற்குப் பிறகு விஜயநகர மன்னர்களின் ஆதரவு இல்லாததாலும், போர்த்துகீசியர் மற்றும் டச்சுக்காரர் வருகையாலும் இவைகள் மறைந்து போயின.

கி.பி.15ம் நூற்றாண்டுக்குப் பின் ஊர்ச்சபைகள் பற்றிய செய்திகள் இப்பகுதி கல்வெட்டுகளில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புக்கள் சிதைவுண்டதை இது காட்டுவதாக அமைகிறது. வலுவான மத்திய அரசு என ஒன்று இல்லாததும், பாடிக்காவல் முறை, பாளையக்கார முறை ஆகியவற்றின் முக்கியத்துவம்

ஆகியனவும் தொன்றுதொட்டு நிலவிய உள்ளாட்சி அமைப்புகள் வலுவிழக்கக் காரணமாயின. 15-16ம் நூற்றாண்டுகளில் அறையர்கள் பாடிக்காவல் தலைவர்களாக விளங்கினர். குறிப்பிட்ட ஒரு ஊரை எதிரிகளின் தாக்குதலிலிருந்த பாதுகாப்பது இவர்களது பணியாக இருந்தது. இவர்கள் தங்களுக்குத் தானே பல அரசு மரியாதைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள் (எண்.719) கிராமத்தில் இவர்களுக்குப் பல சலுகைகள் இருந்தன. இவர்களுக்காக மக்கள் அளித்த வரி, அரசு சுவந்திரம் எனப்பட்டது. குறிப்பிட்ட கிராமத்தின் வரிவசூலை அம்பலக்காரர், மணியக்காரர் போன்ற செல்வாக்குப் படைத்தவர்கள் கவனித்து வந்தனர். இதுபோன்ற குழப்பமான அரசியல் சூழ்நிலைகளினால் மக்களாட்சி முறையில் அமைந்திருந்து உள்ளாட்சி அமைப்புக்கள் காலப்போக்கில் மறைந்து போயின.

புதுக்கோட்டை கல்வெட்டுகள் இப்பகுதியின் அரசியல் அமைப்பு, சமுதாய பழக்க வழக்கங்கள் பொருளாதாரம் ஆகியன குறித்து மேலும் பல அரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. இவற்றின் விரிவான ஆய்வு, தமிழக வரலாற்றிற்கு மேலும் பல புதிய செய்திகளை அளிக்கவல்லதாகும். புதுக்கோட்டை கல்வெட்டுக்கள் தமிழகத்தின் வரலாற்றுக் கருவூலம் என்று சொன்னால் அது மிகையாகாது.

## 38. புதுக்கோட்டை மாவட்ட ஊர்ப் பெயர்கள்

ஒரு இடத்தை அடையாளம் தெரிந்து கொள்ளவும் அதைக் கொண்டு பிறரிடம் தொடர்பு கொள்ளவும் குறிப்பிட்ட நில அமைவிடத்திற்கு ஒரு குறிப்பிட்ட பெயரிட்டு அழைக்கப்படுவது தொன்றுதொட்ட வழக்கம்.

ஒரு இடத்தின் பெயர் அவ்விடத்தின் பண்புகளை வெளிப்படுத்துவதாகவும், அவ்விடத்தின் இயறகை அமைப்பு, உயிரினங்கள், வரலாற்று நிகழ்வுகள், வரலாற்று நாயகர்கள், அங்கு வாழும் மக்கள், குடி கொண்டுள்ள இறைவனின் பெயர் ஆகியவனவற்றுடன் தொடர்புடையதாகவும் இருக்கும்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வழங்கிய, பல இடங்களின் பெயர்கள் காலப்போக்கில் மாறுபட்டு உச்சரிக்கப்பட்டு வந்திருப்பதையும் மனிதன் தனது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஊர்ப்பெயர்களை மாற்றி இருப்பதையும், தனது செயல்களுக்கு வடிவம் கொடுக்கும் நினைவுச் சின்னமாக ஆக்கிக் கொண்டிருப்பதையும் ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

நமது காலத்தில் புதுக்கோட்டை 'புதுகை' என்றும, கீரனூர் 'கீரை' என்றும் அறந்தாங்கி 'அறந்தை' என்றும் எழுதப்படுவது, காலப்போக்கில் ஊர்ப்பெயர்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு எடுத்துக்காட்டு. சுமார் 75 ஆண்டுகளாக மேற்கண்ட இடப்பெயர்களில் மாற்றம் இருந்து வருவதை ஆவணங்கள் காட்டுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல ஊர்ப் பெயர்கள் சங்க காலத்திலிருந்து (2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்து) மாற்றமின்றி வழங்கி வந்திருப்பதும், சில ஊர்ப்பெயர்கள் மாற்றமடைந்து இருப்பதையும் காணலாம்.

கோனாடு காடுகள் நிறைந்த பகுதி. மக்களின் தேவைக்கேற்ப காடுகள் திருத்தப்பட்டு நாடாக்கப்பட்டன. இதனால் அங்கிருந்த மரங்களை முன்வைத்து, பல ஊர்ப்பெயர்கள் தோன்றின. இப்படி உருவான ஊர்கள் மாங்காடு, வடகாடு, கோட்டைக்காடு, வடக்கன் காடு, ஆலங்காடு.

ஒரு ஊரில் எழுந்தருளியுள்ள கடவுளுக்குக்கூட அங்கிருந்து மரங்களின் பெயரைக் கொண்டு பெயரிடப் பட்டுள்ளது குளவாய்ப்பட்டி கோயிலில் உள்ள சிவ பெருமானுக்கு 'அதவீஸ்வரர்' என்று பெயர் (அத்திக் காட்டுக்கு அரசன்) வைத்தூர் கோயில் சிவபெருமான் தாளவனேஸ்வரர் (பனங்காட்டு ஈஸ்வரன்). திருமயம் சத்தியமூர்த்தி கோயில் அம்மனுக்கு 'வேணுவனேஸ்வரி' என்று பெயர். (மூங்கில் காட்டு அரசி)

மாவட்டம் இரண்டு கோட்டங்களாகவும், ஏழு வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது 13 ஊராட்சி ஒன்றியங்களும் 775 வருவாய் கிராமங்களும் (Revenue Villages) 506 ஊராட்சிகளும் 3197 குக்கிராமங்களும் உள்ளன.

புதுக்கோட்டை என்ற பெயர் அக்காலத்தில் அரிதாகவே உடயோகப்படுத்தப்பட்டது. 19-ம் நூற்றாண்டின் இறுதிவரை தொண்டைமான் நாடு என்றே பதிவேடுகளில் குறிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்களின் பதிவேடுகளில் Pudukkottai என்பது Poodookota. Pudukkotta, Puduccotta என்று பலவாறாக எழுதப்பட்டுள்ளது.

கோட்டை என்ற சொல்லுடன் 62 ஊர்ப் பெயர்கள் உள்ளன. (புதுக்கோட்டை, வல்லத்திராகோட்டை, மாங்கோட்டை, கந்தர்வக் கோட்டை)

'பட்டி' என்ற சொல்லுடன் முடியும் ஊர்ப் பெயர்கள் 1176 பட்டி என்றால் சிற்றூர் (Hamlet) ஆடு மாடுகள் வளர்த்தலை அடிப்படையாகக் கொண்டு இப்பெயர் வந்ததாக சொல்லலாம். (கூத்தன்பட்டி, மீனம்பட்டி, வளவன்பட்டி, சுந்தம்பட்டி, காயம்பட்டி)

'பட்டு' என்று முடியும் ஊர்கள் 6. பட்டு சிற்றூர் (கோனாப்பட்டு, வார்ப்பட்டு)

குடி என முடியும் ஊர்கள் 132. குடி ஊர். (ஆலங்குடி, ஓணாங்குடி, நெடுங்குடி, கறம்பக்குடி)

குறிச்சி என்று முடியும் ஊர்பெயர்கள் 21. குறிச்சி என்பது குறிஞ்சி என்பதன் திரிபாகும். மலையும், மலையைச் சார்ந்த ஊர்களும் குறிஞ்சியாகும். (கத்தக்குறிச்சி, நல்லக்குறிச்சி, கீழக்குறிச்சி.)

பட்டினம், பட்டணம் என்று முடியும் ஊர்கள் 17. பொதுவாக கடற்கரையைச் சார்ந்த ஊர்கள் பட்டணம் என்று பெயர்பெறும். (கோட்டைப்பட்டணம், ஜகதா பட்டணம், கோபாலபட்டணம்)

ஊர் என்று முடியும் ஊர்கள் 188. (ஆலூர், பரம்பூர், செம்பாட்டூர்.)

வாசல் என்று முடியும் ஊர்கள் 11. வாசல் என்பது முகப்பு, வழிவாயில் என்று பொருள்படும். (சித்தன்னவாசல், அன்னவாசல், வாகவாசல்)

வயல் என்று முடியும் ஊர்கள் 210. வயல் என்பது கழநி ஆகும். மருதநிலம் சார்ந்த ஊர்கள். நஞ்சை சாகுபடி அதிகம் உள்ள பகுதி இவை. (புல்வயல், புதுவயல், விருதுவயல், வெட்டிவயல், ராவுத்தன்வயல்)

விடுதி என வரும் ஊர்கள் 49. கறம்பக்குடி ஒன்றியத்தில் மட்டும் 25 ஊர்கள் உள்ளன. பொதுக் காரியங்களுக்காக விடப்பட்ட காலியிடங்களில் உருவான ஊர்கள் விடுதி என வழங்கப்பட்டது. இவ்வூர்கள் தொண்டமான் மன்னர்களின் வரலாற்று நிகழ்ச்சியோடு மெத்தவும் தொடர்புடையவை. (வெள்ளாளவிடுதி, வெட்டன்விடுதி, பட்டம்மாவிடுதி)

குளம் என்று முடியும் ஊர்கள் 16. குளம், தடாகம், ஏரி. (திருவரங்குளம், கரடியான்குளம், தினைக்குளம்.)

கோயில் என்று வரும் ஊர்கள் 25. (குன்னாண்டார் கோயில், ஆவுடையார் கோயில்)

மலை என்ற பெயரில் உள்ள ஊர்கள் 4. (குடுமியான்மலை, விராலிமலை, நார்த்தாமலை)

மங்கலம் என முடியும் ஊர்ப்பெயர்கள் 32. இவை அக்கால சதுர்வேதிமங்கலம், என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். (சத்தியமங்கலம், கீரமங்கலம்)

புரம் என்று முடியும் ஊர்ப்பெயர்கள் 93. புரம்=நகரம் (ரகுநாதபுரம், ராயபுரம், ராராபுரம், சுப்பிரமணியபுரம், ராஜேந்திரபுரம்)

புதுக்கோட்டை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கல்வெட்டுகளில் காணப்படும் சில ஊர்ப்பெயர்களும் அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் இங்கு குறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்களிலிருந்து திரிந்து தற்போது வழங்கும் ஊர்ப்பெயர்களில் பெரும்பாலானவை கடந்த 100 அல்லது 200 ஆண்டுகளுக்குள் நடைமுறைக்கு வந்தவை என்பதை கல்வெட்டுகளின் ஆய்வு தெரியப்படுத்துகிறது.

| தற்போதைய பெயர் | கல்வெட்டில் காணப்படும் பழைய பெயர் | கல்வெட்டின் காலம் ஆண்டு/ நூற்றாண்டு | புதுக்கோட்டை கல்வெட்டு எண் |
|---|---|---|---|
| குன்னாண்டார் கோயில் | திருக்குன்றக்குடி | 9ம் நூற்றாண்டு | 8 |
| | குன்னைநாயகனூர் | 19ம் ,, | |
| தேனிமலை | தேனூர்மலை | 9ம் ,, | 9 |
| மலையடிப்பட்டி | திருவாலத்தூர்மலை | 9ம் ,, | 18 |
| நெரிஞ்சிக்குடி | நெரிஞ்சிக்குடி | 11ம் ,, | 20 |
| கீழத்தானியம் | கீழ்தனியம் | 990 | 23 |
| வெள்ளனூர் | வெள்ளைநல்லூர் | 992 | 25 |
| குடுமியான்மலை | திருநலக்குன்றம் | 10ம் ,, | 29 |
| | சிகாநல்லூர் | 14ம் ,, | 600 |
| | குடுமியான்மலை | 1740 | 926 |
| நீர்ப்பழனி | நீர்ப்பழனி | 957 | 30 |
| கொடும்பாளூர் | கொடும்பாளூர் | 890 | 33 |
| திருக்கோகர்ணம் | ஸ்ரீகோகர்ணம் | 11ம் ,, | 36 |
| முனசந்தை | முனியந்தை | 870 | 61 |
| சித்தூர் | சிற்றையூர் | 990 | 83 |
| மேலத்தானியம் | ஆமாநல்லூர் (எ) ஆன்குடி | 1002 | 84 |
| | மேற்றணயம் | 1245 | 199 |
| திருவேங்கைவாசல் | திருவங்கைவாசல் | 1011 | 88 |
| திருவிளாங்குடி | திருவிறையான்குடி | 1012 | 89 |
| நார்த்தாமலை | தெலுங்கு-குலகாலபுரம். | 1102 | 91 |
| | குலோத்துங்க-சோழபட்டணம். | 1214 | 170 |
| | நகரத்தார்மலை | 19ம் ,, | 992 |
| வாராப்பூர் | கோயில்நல்லூர் | 1026 | 97 |
| | வாராப்பூர் | 14ம் ,, | 437 |
| பரம்பூர் | பரம்பையூர் | 1029 | 99 |
| பேரையூர் | பெரையூர் | 1028 | 103 |
| தென்னங்குடி | தெஞ்சுகங்குடி | 1030 | 107 |
| | தெங்கங்குடி | 1600 | 469 |
| | தென்னன்குடி | 1580 | 751 |
| பூவாளைக்குடி | பூவாளைக்குடி | 1057 | 111 |
| கலசக்காடு | செளிகுல-மாணிக்கபுரம். | 1100 | 122 |
| இரும்பாளி | இரும்பாழி | 1130 | 123 |
| இடையாத்தூர் | இடையாதனூர் | 1122 | 127 |
| | திருமலைக்காடு | 1269 | 380 |
| பொன்னமராவதி | பொன்நமராபதி | 1150 | 131 |
| பின்னங்குடி | புன்தாங்குடி | 1175 | 141 |

| | | | |
|---|---|---|---|
| | புன்னங்குடி | 1232 | 291 |
| கீரனூர் | கீரனூர் | 1185 | 145 |
| சாத்தனூர் | சாத்தனூர் | 1188 | 146 |
| திருமனஞ்சேரி | திருமனஞ்செரி | 1198 | 152 |
| திருவப்பூர் | திருவெள்பூர் | 990 | 27 |
| காரையூர் | காரையூர் | 1203 | 157 |
| குளத்தூர் | கூழைகுளத்தூர் | 1208 | 162 |
| சேந்தமங்கலம் | செந்தமங்கலம் | 1214 | 171 |
| வயலோகம் | வயலகம் | 1222 | 178 |
| சுந்தரம் | சுந்தரசோழபுரம் | 1250 | 189 |
| புல்வயல் | புல்வயல் | 1250 | 192 |
| தெம்மாவூர் | தென்வாவும்-தொவூர் | 1250 | 197 |
| கோட்டையூர் | கொட்டையூர் | 1194 | 220 |
| செம்பாட்டூர் | செம்பாட்டூர் | 1210 | 224 |
| வீரைக்குடி | விரைக்குடி | 1210 | 230 |
| கண்ணனூர் | திருநாவலூர் | 1220 | 250 |
| | கண்ணனூர் | 1225 | 273 |
| நெய்வாசல் | நெல்வாயில் | 1220 | 251 |
| பழங்கரை | திருப்பழங்கரை | 1230 | 1287 |
| மீனவேலி | மேநெல்வேலி | 1232 | 295 |
| பெருந்துறை | பெருந்துறை | 1250 | 333 |
| திருமயம் | திருமெய்யம் | 1252 | 340 |
| செவலூர் | செவ்வலூர் | 1255 | 342 |
| ஓவியமங்கலம் | ஒல்லையூர் மங்கலம் | 1256 | 345 |
| விராச்சிலை | விரையாச்சிலை | 1256 | 346 |
| பெருமாநாடு | பெருவாயில்-நாட்டு-மயிலாப்பூர் | 1253 | 350 |
| ஆதனூர் | ஆதனூர் | 1265 | 351 |
| திருக்களம்பூர் | விக்ரமபாண்டிய-நல்லூர். | 1258 | 361 |
| ஊனையூர் | உகிரையூர் | 1266 | 362 |
| | பெருங்கேழியூர் | 1123 | 228 |
| பெருங்களூர் | பெருங்களூர் | 1265 | 370 |
| இரும்பநாடு | ஸ்ரீபராந்தகநல்லூர் | 1268 | 376 |
| பல்லவமங்கலம் | சுந்தரபாண்டியபுரம் | 1285 | 397 |
| வாளவர்- | மாளவமாணிக்கம் | 1285 | 418 |
| மாணிக்கம் | வாளவர்-மாணிக்கம். | 14ம் .. | 452 |
| மரவாமதுரை | மங்கலநல்லூர் (எ) சோழ-சிகாமணி சதுர்-வேதிமங்கலம். | 1311 | 420 |
| திருவிடையாப்-பட்டி | பெருந்திருவாட்டி-நல்லூர். | 1323 | 443 |

| | | | | |
|---|---|---|---|---|
| தாஞ்சூர் | சேந்தவன்மங்கலம் | 1366 | | 456, 457 |
| அம்புக்கோயில் | அழிம்பில் | 1370 | | 458 |
| வைத்துக்கோவில் | வைத்தூர் | 14ம் | .. | 476 |
| நெடுங்குடி | மேலநிலை | 14ம் | .. | 482 |
| ராங்கியம் | ராஜசிங்கமங்கலம் | 14ம் | .. | 491 |
| ஆரியூர் | ஆரியூர் | 14ம் | .. | 505 |
| சேரனூர் | சிகரைநல்லூர் | 14ம் | .. | 499 |
| திருவரங்குளம் | திருவரன்குளம் | 14ம் | .. | 554 |
| பெருஞ்சுனை | பெருஞ்சுனையூர் | 14ம் | .. | 560 |
| விசலூர் | விசலூர் | 14ம் | .. | 598 |
| மழையூர் | மழையூர் | 14ம் | .. | 610 |
| தேக்காட்டூர் | தெற்காட்டூர் | 14ம் | .. | 637 |
| துர்வாசபுரம் | துறுமாலூர் | 15ம் | .. | 638 |
| ஆலங்குடி | ஆலங்குடி | 15ம் | .. | 642 |
| பொம்மாடிமலை | திருப்பள்ளி-மலைப்பள்ளி | 15ம் | .. | 658 |
| சிறுசுனை | சிறுசுனையூர் | 15ம் | .. | 665 |
| பனையூர் | பனையூர் | 1332 | | 670 |
| கிளிக்குடி | திருநாராயண சதுர்வேதி-மங்கலம் | 1420 | | 700 |
| கீழக்குறிச்சி | கீழைக்குறிச்சி | 1450 | | 725 |
| மணியம்பலம் | மணியம்பலம் | 1510 | | 730 |
| அன்னவாசல் | அன்னவாசல் | 1520 | | 740 |
| அறந்தாங்கி | அறந்தாங்கி | 1530 | | 750 |
| காரமங்கலம் | சேந்தவன்மங்கலம் | 1498 | | 822 |
| மேலப்பனையூர் | பனையூர்-குளமங்கலம் | 1496 | | 828 |
| மிரட்டுநிலை | மிரட்டுநிலை | 1840 | | 886 |
| தெம்மாவூர் | தென்மாவூர் | 1840 | | 943 |
| விராலிமலை | விராலிமலை | 19ம் | .. | 956 |
| லெக்கம்பட்டி | லெட்சுமணபாண்டி-புரப்பட்டி | 19ம் | .. | 978 |

மேற்கண்டபடி கல்வெட்டுகளில் காணப்படும் ஊர்ப்பெயர்கள் மற்றும் தற்போது வழக்கத்திலிருக்கும் ஊர் பெயர்களின் தோற்றம் குறித்த சொல்லாய்வு பல சுவையான செய்திகளை தெரிவிக்கிறது. ஒவ்வொரு ஊர்ப் பெயருக்கும் பின்னால் அவ்விடத்தின் வரலாறு, இயற்கைவளம் ஆகியன மறைந்திருப்பதைக் காணலாம்.

ஒரு குறிப்பிட்ட நில அமைவிடத்தில் அதிகமாகக் காணப்படும் மரம் செடி கொடி ஆகியவற்றின் பெயரைக் கொண்டு, அவற்றின் பெயராலேயோ அல்லது அந்த அடிப்படையிலான பெயர் திரிந்து மாறுதல் அடைந்தோ, அந்த பகுதியிலுள்ள ஊர்ப் பெயர்கள் வழங்கப்படுவதுண்டு; புதுக்கோட்டை மாவட்டம் அக்காலத்தில் காடுகள்

நிறைந்தப் பகுதி, காடுகள் திருத்தப்பட்டு நாடானபோது அப்பகுதியில் நிறைந்து காணப்பட்ட மரம் செடி கொடிகளின் பெயரால் ஊர்ப்பெயர்கள் வழங்கப்பட்டு வந்திருப்பதை இன்றளவும் காணலாம். இந்த அடிப்படையில் வழக்கத்திற்கு வந்த சில ஊர்ப் பெயர்களும் அவற்றிற்குத் தொடர்பான தாவரங்களின் பெயர்களும் இங்கு தரப்பட்டுள்ளன.

| ஊர்ப்பெயர் | தொடர்புடைய மரம்/செடி/கொடி பெயர் | |
|---|---|---|
| அறந்தாங்கி | அதாங்கி (கம்பிமரம்) | Gardenia - resinifera |
| இரும்பாளி | இரும்புளி | Polyalthia Cerasoides |
| ஓணான்குடி | ஓணான்கொடி | Ipomoea - staphylina |
| இலுப்பூர் (இலுப்பையூர்) | இலுப்பை | Moduca Longifolia |
| கட்டுமாவடி | காட்டுமாவு | Spondias Pinnata |
| கொக்குமுட்டை | கொக்கிமுள்ளு | Scutia myrtinia |
| கொத்தமங்கலம் | கொத்தமரம் | Hymanodityon onexense |
| கொன்னையூர் | கொன்னை | Cassia Fistula |
| ஆட்டான்குடி | ஆட்டான்கொடி | Secamone emitica |
| மோசகுடி | மொச்சக்கொடி | Maerua oblongifolia |
| விராலிமலை | விராலி | Dodonaea angustifolia |
| காரையூர் | காரை | Randia candoanna |
| முள்ளுக்குண்டு | முள்ளுக்கடம்பு | Mahonia Leschenautic |
| பூவன்பட்டி | பூவம் | Schleichera oleosa |
| செங்கீரை | செங்காரை | Canthium Purlvifloram |
| வேலாவயல் | வேலா | Acacsia leucophloea |
| உசிலம்பட்டி | உசிலை | Albizia amara |
| கிளாங்காடு | கிளாங்காய் | Carista carandas |
| கூகைப்புலிக்குடி | கூரைப்புல் | Cymbopogon martinii. |
| குரைக்காடு | குரைக்கொடி | Segeretia parviflora |
| கடுக்காய்காடு | கடுக்காய் | Terminalia chebula |
| கன்னியான் கொல்லை | கன்னி | Salvadora persica |
| பேயாடிப்பட்டி | பேய்மிரட்டி | Anisomeles indica |
| மஞ்சள்கரை | மஞ்சள்துத்தி | Hibiscus vitifolius. |
| முருங்கைகொல்லை | முருங்கை | Moringa Sp |
| பிலாவிடுதி | பலா | Artocarpus - heterophyllus. |
| குருந்தடிமனை, குருந்தம்பட்டி | குருந்து | Murraya Paniculata |
| வள்ளிக்காடு | வள்ளிக்கீரை | Allmenia nodiflora |
| குரன்விடுதி | குரைக்கொடி | Seganelia Paviflora |

| | | |
|---|---|---|
| ஆலங்காடு | ஆலமரம் | Ficus benghalensis |
| கல்லாக்கோட்டை | கல்கோட்டை | Gardenia latifloiria |
| புளிச்சங்காடு | புளிச்சை | Hibiscus cannabinus |
| மல்லிகை நத்தம் | மல்லிகை | Jasminum |
| மணியம்பள்ளம் | மாணியம் பூண்டு | Gynura aurantica |
| தினைக்குளம் | தினை | Setaria italica |
| கத்திரிக்காடு | கத்திரி | Solanum me'ongena |
| புங்கங்காட்டுப் பட்டி | புங்கம் | Pongamia pinnata |
| செத்தட்டிப்பண்ணை | செந்தட்டி | Tragia involucrata |
| முல்லையூர் | முல்லை | Jasminum auriculatum |
| நாவலிங்கக்காடு. பெருநாவலூர் | நாவல் | Syzygium cumini |
| சீத்தப்பட்டி | சீத்தா | Annona squamosa |
| எருக்கலக்கோட்டை | எருக்கு | Calotropis gigantea |
| அத்தாணி | அத்தடலி | Filicium decipiens |
| ஆடலை | ஆடாலி | Ethretlia pubiscens |
| பூவத்தகுடி | பூவத்தி | Schleichera oleosa |
| கம்மங்காடு | கம்பு | Pennisettum americanum |
| மேற்பனைக்காடு பனைவயல் பனையப்பட்டி | பனை | Barrosus flabellifer |
| கரக்காய்ப்பட்டி | கரக்காய் | Lagenaria Sciceraria |
| முள்ளிப்பட்டி | முள்ளிச்செடி | Acanthospermum hispedium |
| நெரிஞ்சிக்குடி | நெரிஞ்சி | Tribulus terrestris |
| ஈச்சம்பட்டி, ஈச்சங்குடி | ஈச்சமரம் | Phoenix Sylvestis |
| வாகவாசல் | வாகை | Albizia lebbeck |
| புளிவயல் | புளி | Tamiarindus Indica |
| கடம்பவயல் | கடம்பன் | Wendlandia thiyrsoidea |
| பின்னங்குடி | பின்னை | Calophyllum inophyllum |
| கொள்ளுத்திடல் | கொள்ளு | Macrotye, oma uniflorum |
| அடம்பூர் | அடம்பை | Barringtonia acutangula |
| எட்டிச்சேரி | எட்டி | Strychnos nuxvomica |

மேற்கண்ட மரங்கள் செடி கொடிகள் இன்றும் இப்பகுதிகளில் காணப்படுகின்றன.

**நன்றி:** புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழு செய்திமலர். 7 & 8 நவம்பர் 1989, பிப்ரவரி 1990 **ஆசிரியர்: ஜெ. ராஜாமுகமது**

# மேற்கோள் நூல் பட்டியல்


இராசமாணிக்கனார். மா. - கல்வெட்டுகளில் அரசியல் சமயம் சமுதாயம்-1977

இராமச்சந்திரன்.சி.இ. - சங்க கால வரலாறு-1977

காசிநாதன்.நடன. - முத்தரையர்-1976

கமால்.டாக்டர்.எஸ்.எம். - மாவீரர் மருதுபாண்டியர்-1988

காமேஸ்வர அய்யர்.எஸ். - ஸ்ரீ ராஜகோபால விஜயம்-1939

கணபதி.அ. - தமிழக வரலாறு(1565-1985)-1986

சிரஞ்சீவி & க.இலக்குமி நாராயணன் - புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு 1981

சேதுப்பிள்ளை.ரா.பி. - தமிழகம் ஊரும் பேரும்-1946

சுந்தர்ராசன்.ச. - 100 ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி மாவட்டம்-1986

தொண்டை நாடன்.ஜி.எம். - மூவரசர் குல விளக்கம்-1921

நாகசாமி.இரா. - கல்லும் சொல்லும்-1977

Art and Culture of Tamil Nadu-1980.

கல்வெட்டுக் கருத்தரங்கு-1966.

பாஷ்யம் ராகவாச்சாரியார் - திருமயம் க்ஷேத்திர மகத்துவம்-1922

மாவட்ட ஆட்சித்தலைவர் புதுக்கோட்டை - மலரும் மாவட்டம், புதுக்கோட்டை-1974

ராமன்.கே.வி. - பாண்டியர் வரலாறு-1977

ராசு.செ. - தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50 (தமிழ்ப் பல்கலைக் கழகம்-1983)

ராஜசேகர தங்கமணி.மா. - முதலாம் இராசேந்திர சோழன்-1973

பாண்டியர் வரலாறு முதல்பாகம்-1978

ராஜாமுகமது.ஜெ. - Handy Guide to Government Museum, Pudukkottai.

புதுக்கோட்டை தந்த சொல்வேந்தர் சத்தியமூர்த்தி-1988

வெங்கடரமண்ய்யா, கே.எம். - தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு-1984.

Balasubramaniyan, S.R. - Early Chola Temples AD.907-983 - 1971.
Middle Chola Temples (A.D.985-1070) 1975
Later Chola Temples (AD-1070-180) - '979
A Note on the Fresco Paintings at Sittannavasal (Journal of Oriental Research-1935)

Caldwell.R. - A History of Tinnelveli-1982

Chandrasekaran.A. - Studies in Pudukkottai History (Unpublished Ph.D.Thesis, University of Madras)

Chandrasekar.M.S. - Guide to the Principal exhibits in the Government Museum, Pudukkottai-1966.

Gopalan. R. - The History of the Pallavas of Kanchi-1927

Gopalakrishna Gandhi(Editor) - Pudukkottai District Gazetteer-1983

Hemingway.F.R. - Gazetteer of Tiruchinapoly District-1907

Hill.S.C. - Yusuf Khan-The Rabel Commander-1987

Kameswara Aiyar,B.V. - Sir A.Sheshaia Sastri, K.C.S.I., an Indian Statesman (1902)

Kanakasabai.V. - The Tamils Eighteen Hundred Years Ago (1966)

Krishnasamy Iyengar.S.K. - South India and her Mohamedan Invaders-1921

Mahajan.V.D. - The Sultanate of Delhi -1978.
Ancient India-1968.

Mahalingam.T.V. - Administration and Social life under Vijayanagar-1940.

Mathew.K.M. - The Flora of the Tamil Nadu Carnatic in 4 vols-1983.

Minakshi.C. - Administration and Social Life under the Pallavas -1938.

Mohamed Hussain Nainar.S. (Editor) - Sources of the Histoory of the Nawabs of the Carnatic.
Part-I-1934.
Part-II-1939
Part-III-1940

Narasimhaiah.B. - Neolithic and Megalithic Cultures in Tamil Nadu -1980.

Nilakanta Sastri.K.A. - The Pandyan Kingdom-1972
History of South India-1955
Colas-1935

Paramasivam.S. - The Mural Paintings in the cave Temple at Sittannavasal-An investigation in to the Method-Technical Studies, Harvard University-1939.

Pattabi Sittaramayya.B. - The History of the Congress (1935)

Pudukkottai Darbar - Chronological list of Inscriptions of the Pudukkottai State-1929.
Inscriptions of Pudukkottai State-Text
Inscriptions of Pudukkottai State Translated in to English -pt.I-1941.Pt.II.1944.
Pudukkottai Darbar Records

Radhakrishna Iyer - A General History of Pudukkottai State 1966

Raghupathy.M. - Guide to the important Monuments in and around Pudukkottai-1983

Rajaiyan.K. - History of Madurai (1736-1801) 1974.

Raju Kalidass - History and Culture of the Tamils-1978

Ramachandran.T.N. - Cave Temple and Paintings of Sittannavasal Lalit Kala No.9-1961

Ramasamy.N.S. - Political History of Carnatic under the Nawabs-1984.

Archaeological Guide to Pudukkottai.

Rungasamy Naidoo.T. - Translations, Copies and extracts of several letters in which the services of His Excellency, the Maha Raja of Pudukkottai are particularly acknowledged and approved by the Governors and other Public Officers of the Honorable East India Company and the Novob of the Carnatic-1874.

Saroja Sundara Rajan Satyamurti-A political Biography-1983.

Sathianathaiar.R. - History of India Vol.I & II-1975

Sethuraman.N. - Imperial Pandyas.

Soundara Rajan.K.V. - Studies in Indian Temple Architecture-1975.

Art of South India-Tamil Nadu and Kerala-1976.

Srinivasan.K.R. - Temples of South India-1971.

Megalithic burials and urn fields of South India, in the light of Tamil Literature and Tradition-Ancient India Vol.2 1946.

| | | |
|---|---|---|
| | | Pudukkottai Archaeology-A Panorama-1986. |
| Srinivasan.P.R. | - | Bronzes of South India-1963. |
| Sundararajan.P.G. | - | The life of S.Satyamurti -1988 |
| Thiagaraja.N. | - | A Manual of Pudukkottai State-1921 |
| Thinakaran.A.J. | - | The Second Pandyan Empire (AD.1190-1312)-1987. |
| Venkatarama Iyer.K.R. | - | Sittannavasal and Kudumianmalai Monuments (Published in Transaction of the Archaeological Society of South India 1956-57). |
| | | A Manual of Pudukkottai State Vol.I (1938) |
| | | A Manual of Pudukkottai State Vol.II Part-1 (1940) |
| | | A Manual of Pudukkottai State Vo.IIPt.II (1944) |
| | | A Guide to the Pudukkottai State (1945) |
| Venkataramanayya.N. | - | Origin of the South Indian Temples-1985. |

# பொருளடக்க அகரவரிசை

அகிலன் - 201
அம்புக்கோயில் - 11
அம்புலியாறு - 3
அம்மாச்சத்திரம் - 4, 164
அம்மன்காசு - 87, 157-159
அம்மன்குறிச்சி - 73
அமரம் - 140, 154
அமானி முறை - 116-117, 135, 154
அலக்சாண்டர் டாட்டன்ஹாம் - 148-150
அன்பில் - 57
அன்னவாசல் - 6
அன்வாருதீன் - 70, 79, 81
அரியலூர் - 86, 91, 93, 97
அருங்காட்சியகம் - 194 - 195
அருணகிரிநாதர் - 224
அறந்தாங்கி தொண்டைமான் மன்னர்கள் - 60, 73 - 74
ஆதித்த சோழன் 1, 21, 195
ஆவுடை ரகுநாதத் தொண்டைமான் - 58
ஆவுடையார்கோவில் - 250 -252
ஆலூர் - 11, 226 - 227
ஆலூர் கிழார் - 11
ஆலூர் மூலங்கிழார் - 11
ஆனந்தராவ் - 7, 65, 66, 78
ஆளுருட்டி மலை - 164, 222
இடங்கழி நாயனார் - 28
இலங்கபுரன் - 247
இலங்கை மகாவம்சம் - 247
இரும்பு காலம் - 7
உடையார்பாளையம் - 86, 91, 93, 97
உம்தத்துல் உம்ரா - 89
ஊமத்துரை - 106, 111, 240, 243
எறிச்சி - 11
ஏழடிப்பட்டம் - 9, 163, 228
ஏனாதி - 202, 222
எஸ்மி மோலி - 142, 143, 145
ஒலியமங்கலம் - 11
ஒல்லையூர் தந்த பூதபாண்டியன் - 11
ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் - 11
ஐந்தலை - 205
கங்கையரையர் - 67, 210
கஞ்சிரா - 256
கருக்காக்குறிச்சி - 13
கல்லாற்றுப்பள்ளி - 166
கலசக்காடு - 6, 196
கலசமங்கலம் - 24, 67, 185
கலீபுல்லாசாகிப் - 151, 152
களப்பிரர் - 14, 15
கண்டிராஜாக்கள் - 121
கன்னனூர் - 234
காட்டுபாவா பள்ளிவாசல் - 245, 246
காளமுகர் - 31, 203
காளியாப்பட்டி - 201-202, 216
காவேரி - 124
கானநாடு 10
கிருஷ்ணதேவராயர் - 51, 191
கிள்ளுக்கோட்டை - 209
கிளைவ் - 104, 105, 106
கிழவன் சேதுபதி - 63
கீழத்தானயம் 23
கீழாநிலை - 64, 80, 83, 113, 248-49
குருவிக்கொண்டான்பட்டி - 5
குடுமியான்மலை - 4, 18, 22, 23, 50, 207-213
குமரமலை - 4
குளத்தூர் தொண்டைமான் மன்னர்கள் - 74-75
குளவாய்ப்பட்டி - 266
குன்னாண்டார் கோவில் - 16, 213, 214

கொடும்பாளூர் - 23, 202-206
கோரையாறு - 3
கோனாடு - 10, 30, 31

சங்க காலம் 10 - 14
சட்டசபை - 167-169
சடையப்பாறை - 166, 186
சத்தியமூர்த்தி - 169-172
சதாசிவபிரமேந்திரர் - 87, 186
சந்தாசாகிப் - 65, 69, 77, 78, 81, 227
சமணம் - 163-166
சிட்னி மார்த்தாண்டன் - 143-144, 177, 178
சித்தன்னவாசல் - 4, 6, 163, 228-233
சின்னப்பா, பி.யு. - 257
சிவகங்கை - 71
சீனிவாசன் கே.ஆர்.46
குரைக்குடித் தேவர்கள் - 45, 50, 52
செட்டிப்பட்டி - 165
செனிகுல மாணிக்கபுரம் - 185, 197, 264
சேதுபதி மன்னர்கள் - 70, 71, 83
சேஷய்யா சாஸ்திரி - 2, 134, 140

தசரா - 87, 157
தட்சிணாமூர்த்திப்பிள்ளை - 256
தாயினிப்பட்டி - 6, 8
திருக்கட்டளை - 22, 195, 197
திருக்காளக்குடி - 43
திருக்களம்பூர் - 236-237
திருக்கோகர்ணம் - 4, 136, 146, 188-191
திருப்பூர் - 202, 222
திருமயம் - 112, 137
திருமயம் கோட்டை - 241-244
திருவப்பூர் - 184, 190
திருவேங்கைவாசல் - 23, 25, 50, 190, 223, 224
தேனிமலை - 164

தொண்டைமான் வம்சாவளி - 58, 161

நரசிங்க காவேரி - 3
நாராயணசாமி அய்யர் - 173
நார்த்தாமலை - 8, 16, 42, 43, 164, 216-222
நானாதேசியர் - 21, 264
நாயக்கர் - மதுரை - 62, 70
நாயக்கர் - தஞ்சாவூர் - 62, 71
நெடுங்குடி - 4

ப்ரேக்கன், ஜி.டி.எச். - 141
ப்ளாக்பர்ன் - 115-122
பங்கன்ப்பள்ளி - 176
படைப்பற்று - 196
பல்லவர் - 16-17
பல்லவன்படி - 69
பல்லவராயர் - 63, 67-69, 235
பன்றிநாடு - 10
பாடிக்காவல் - 50, 263, 264
பாம்பாறு - 3
பாலையனவம் - 73
பாளையக்காரர் - 69, 99-101
பானர்மேன் - 105, 243
பிராமிக்கல்வெட்டு - 9, 229, 25
பிரான்மலை - 120
புக்கர் - 49
புத்தர் - 249
புதுக்கோட்டை - 64-67
புதுக்குளம் - 2, 135
புல்வயல் - 6, 7
பூதி விக்ரம கேசரி - 23, 28, 203

பெருங்களூர் - 201
பெருங்களூர் ஆறு - 3
பெருங்கோழியூர் - 201, 240
பெரும்பிடுகு பெருந்தேவி - 19, 240
பேராம்பூர் - 50, 52, 71, 227
பேரையூர் 4, 153, 235-236
பொன்னமராவதி - 33, 45, 246-247
பொற்பனைக்கோட்டை - 197

மணிக்கிராமம் - 32, 264
மலம்பட்டி - 4
மலையடிப்பட்டி - 4, 215-216
மருது சகோதரர்கள் - 102, 110, 111, 112
மாடலன் மதுரைக் குமரனார் - 11
மாமுண்டியாபிள்ளை - 193, 256
மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் -(1886-1928) - 137-145
மாலையீடு - 114, 149
முகமதுஅலி - 79, 81, 83, 84-90
முக்தியார் - 155
முத்துசாமி வல்லத்தரசு - 151, 183
முத்துலட்சுமி ரெட்டி - 173-176
முதுமக்கள் தாழி - 7, 8
முனசந்தை - 21
மூவர்கோயில் - 203, 205
மொட்டமலை - 6

யூசுப்கான் - 84, 86

ரகுநாதராயத் தொண்டைமான் (1686-1730) - 62-64
ராதாகிருஷ்ண அய்யர் - 110
ராசாளிப்பட்டி - 16
ராஜா ரகுநாதத் தொண்டைமான் (1825-1839) - 123-124
ராணி மங்கம்மாள் - 63, 202
ராமச்சந்திர தொண்டைமான் (1839-1886) - 125-134
ராமேஸ்வரம் - 75
ராயரகுநாதத் தொண்டைமான் (1769-1789) 88-95
ராஜகோபாலத் தொண்டைமான் (1928-1948) - 45-52
ராஜா சாண்டோ - 257
ராஜாமுகமது.ஜெ. - 53, 214, 219
ராஜராஜசோழன் 1, 24-25
ராஜா விஜயரகுநாதராயத் தொண்டைமான் (1807-1828) - 115-122

ராஜேந்திரசோழன்-1 - 24-25
ருஸ்தம்கான் - 63

லூசிங்டன் - 104, 108, 123, 143
லீமோரிஸ் - 130-131

வளஞ்சியர் - 264
வளரி (வளைதடி) - 100
விக்ரம ராஜசிங்கா - 121
விசலூர் - 216, 233-234
விராலிமலை - 4, 224
விராலிமலைக் குறவஞ்சி - 226
விஜயரகுநாதத் தொண்டைமான் (1789-1807) - 96-98
விஜயரகுநாத துரை ராஜா - 140, 141, 144
விஜயரகுநாதராயத் தொண்டைமான் (1730-1760) - 76-89
விஜயநகர ஆட்சி - 49-52
விஜயாலயன் - 21
வீரபாண்டிய கட்டபொம்மன் - 102-111, 240, 243
வீரமாமுனிவர் - 227
வெங்கண்ணா - 160
வெள்ளாறு - 3
வேளிர் - 23, 26-32

ஜலாலுதீன் அசன்ஷா - 46, 48
ஜவஹர்லால் நேரு - 148, 149, 174
ஜனமித்திரன் - 180
ஜாக்சன் - 102, 103, 104
ஜார்ஜ் பிகாட் - 84

ஹெரான், கர்னல் - 83, 84
ஹைதர் அலி - 85, 87, 90, 91, 92
ஹைதராபாத் நிஜாம் - 70, 76, 78-79
ஹோய்சளர் - 34, 38
ஹோல்ஸ் ஒர்த் - 146

# நல்வாழ்த்துக்கள்

அருள்மிகு பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளி,
புதுக்கோட்டை.

ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்தா உயர்நிலைப்பள்ளி,
(குருகுல விடுதி வசதியுடன்)
திருப்புனவாசல்.

காவேரி ஸ்டரக்சரல்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ்
தெத்துவாசல்பட்டி அஞ்சல்,
கந்தர்வக்கோட்டை வட்டம்.

ராதா எடிபில் ஆயில் எக்ஸ்ட்ராக்சன்ஸ்,
தெத்துவாசல்பட்டி - அஞ்சல்,
கந்தர்வக்கோட்டை வட்டம்.

கடலை மற்றும் ஆயில்மில் சங்கம்,
ஆலங்குடி.

எஸ். அண்ணாதுரை,பி.எஸ்.சி.,
டீலர், பாரத் பெட்ரோலியம் லிட்,
கோட்டைப்பட்டணம்.

ஸ்ரீ லெட்சுமி விலாஸ் ரைஸ் மில்,
பயமறியானேந்தல்.

ஏ. மச்ச தம்பி,
மணமேல்குடி,
கோட்டைப்பட்டணம் (அஞ்சல்)

ஸ்ரீ ஜெகதீஸ்வரா ஹார்டுவேர்ஸ் மார்ட்,
சேதுரோடு,
மணமேல்குடி - 614 60

வசந்தபவன்,
புதுக்கோட்டை.

மீனாட்சி பெட்ரோலியம் புராடக்ட்ஸ்
புதுக்கோட்டை.

அஞ்சுகாவின்
பாம்பே பர்னிச்சர் மார்ட்,
புதுக்கோட்டை.

பாலு செட்டியார் சூப்பர் அரிசி மண்டி,
புதுக்கோட்டை.


எ. கண்ணன்,
நெல் அரிசி மண்டி,
புதுக்கோட்டை.

மெ. ராமச்சந்திரன் செட்டியார்,
ஆலங்குடி.


கலைமகள் ஜவுளி ஸ்டோர்
பொன் புதுப்பட்டி 622408.

பெருநாவலூர் டிம்பர் ஸ்டோர்,
பொன்னமராவதி.


கிருஷ்ணா கூல்டிரிங்ஸ்,
பொன்புதுப்பட்டி 622408.



புதுக்கோட்டை மாவட்டம்
திருச்சிராப்பள்ளி
மலையடிப்பட்டி
கிள்ளுக்கோட்டை
கந்தர்வகோட்டை
ஆவூர்
பேராம்பூர்
குன்னாண்டார்கோவில்
விராலிமலை
கந்தர்வகோட்டை
தஞ்சாவூர்
கீரனூர்
கொடும்பாளூர்
குளத்தூர்
அன்னவாசல்
சித்தன்னவாசல்
புதுக்கோட்டை
குடுமியான்மலை
கறம்பக்குடி
திருக்கோகர்ணம்
புதுக்கோட்டை
ஆலங்குடி
மருங்காபுரி
திருவரங்குளம்
ஆலங்குடி
பேரையூர்
பொன்னமராவதி
திருமயம்
திருமயம்
அறந்தாங்கி
திருக்களம்பூர்
அறந்தாங்கி
கீழாநிலைக்கோட்டை
பசும்பொன் தேவர் திருமகன்
ஆவுடையார்கோவில்
மணமேல்குடி
ஆவுடையார்கோவில்
கோட்டைப்பட்டினம்
பாக்ஜலசந்தி
மீமிசல்
ராமநாதபுரம்




புதுக்கோட்டை சமஸ்தானம்
திருச்சிராப்பள்ளி
குளத்தூர்
ஆலங்குடி
திருமயம்
தஞ்சாவூர்




பழைய அரண்மனை (மேற்கு வாயில் 1972-ல்)



மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (புதிய அரண்மனை)



விக்டோரியா ஜூபிலி ஆர்ச்




பொது அலுவலக கட்டிடங்கள்



புதுக்கோட்டை நகர பெரிய பள்ளிவாசல்



புதுக்கோட்டை கத்தோலிக்க தேவாலயம்




புதுக்கோட்டை அருங்காட்சியகம்




பெருங்கற்கால புதைகுழி–தாயினிப்பட்டி





அம்மன் காசு






ரோம பொன் நாணயம் - கருக்காக்குறிச்சி




சிவன்கோயில் - காளியாப்பட்டி




சுந்தரேஸ்வரர் கோயில் - திருக்கட்டளை



துவாரபாலகர் - விஜயாலய சோழீச்சுரம்



விஜயாலய சோழீச்சுரம் - நார்த்தாமலை



முசுகுந்தேஸ்வரர் கோயில் - கொடும்பாளூர்



ஸ்பிங்க்ஸ் - எகிப்துபாணி சிற்பம் - சமணர் குடகு, நார்த்தாமலை



நடனக்கன்னி - சித்தன்னவாசல் ஓவியம்




தாமரைத்தடாகத்தில் - சித்தன்னவாசல் ஓவியம்




கிராதமூர்த்தி - மூவர்கோயில், கொடும்பாளூர்




கங்காதரர் - திருக்கோகர்ணம் குகைக்கோயில்



நாகநாதசுவாமி கோயில் - பேரையூர்




ரதமண்டபம் - குன்னாண்டார் கோயில்



ரதி - சிகாநாதசாமி கோயில், குடுமியான்மலை



நரசிம்ம அவதாரம் - சிகாநாதசாமி கோயில், குடுமியான்மலை




ஆவுடையார் கோயில் சிற்பம்




மாணிக்கவாசகர் - ஆவுடையார் கோயில்




மதுரையில் சமணர்களை கழுவேற்றுதல், ஆவுடையார் கோயில் ஓவியம்



பாலகிருஷ்ணா -
மலையடிப்பட்டி,
விஷ்ணு குகைக்கோயில்
ஓவியம்




திருமயம் கோட்டை



சுப்ரமணியர் கோயில் - விராலிமலை



ஞான தட்சிணாமூர்த்தி - திருவேங்கைவாசல்



சமணதீர்த்தங்கரர் - அன்னவாசல்



ராஜா விஜயரகுநாதத்
தொண்டைமான் (1789-1807)



ராய்ரகுநாதத் தொண்டைமான்
(1769-1789)



ராஜா விஜயரகுநாதராயத்
தொண்டைமான் (1807-1825)



ராஜா ரகுநாதத் தொண்டைமான்
பகதூர் (1825-1839)



ராமச்சந்திர தொண்டைமான்
(1839-1886)



ராஜா மார்த்தாண்ட பைரவத்
தொண்டைமான் (1886-1928)




ராணி எஸ்மிமோலிபிங்க் (ராஜா
மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான்
மனைவி)




ராஜா ராஜகோபாலத்
தொண்டைமான் (1928-1948)



கலீபுல்லா சாகிப்




அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம்




சேஷய்யா சாஸ்திரி



தீரர் சத்தியமூர்த்தி



பி.யு.சின்னப்பா




டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி



வயலின் இலுப்பூர் பொன்னுசாமி பிள்ளை



சிவராம நட்டுவனார்



மிருதங்கம் தட்சிணாமூர்த்தி பிள்ளை



உமா (படிமம்) புதுக்கோட்டை
அருங்காட்சியகம்.



காட்டுபாவா பள்ளிவாசல் - தர்கா

